

10ஆம் உலகத் தமிழாசிரியர் மாநாடு

10th World Tamil Teachers' Conference

ஆய்வடங்கல்

PROCEEDINGS OF THE CONFERENCE

3-6-2013 முதல் 5-6-2013 வரை

கோலாலம்பூர், மலேசியா



பத்தாவது உலகத் தமிழாசிரியர் மாநாடு

3 - 5 ஜூன் 2013

பேர்ல் இண்டர்நேஷனல் விடுதி

10th WORLD TAMIL TEACHERS' CONFERENCE

3-5 June 2013

Pearl International Hotel, Kuala Lumpur

ஆய்வடங்கல்

PROCEEDINGS OF THE CONFERENCE

பதிப்பாசிரியர்கள்

முனைவர் ச.சாமிக்கண்ணு ஜெபமணி
பேராசிரியர் முனைவர் கி.கருணாகரன்
திரு. ம.மன்னர் மன்னன்
திரு. சோ. சுப்பிரமணி

EDITORS

Dr. S. Samikkanu Jabamoney
Prof. Dr. K.Karunakaran
Mr. M. Mannar Mannan
Mr. S. Supramani

Proceedings of the
10th world Tamil teachers' conference

Chief Editor :
Dr. S. Samikkanu Jabamoney

Editors :
Prof. Dr. K. Karunakaran
Mr. M. Mannar Mannan
Mr. S. Supramani

Publisher :

Uma Publications
No 85, Jalan Perhentian,
Sentul,
51100 Kuala Lumpur,
Malaysia.
Tel: 03-40411617/ 03-40415757
Fax: 03-40440441
Email: umapublications@gmail.com

© 10th World Tamil Teacher's Conference, 2013.

All rights reserved. No part of this journal may be reproduced in any form or by any means without publishers' permission.

Printed in Malaysia.
Printer: Crinographics Sdn. Bhd.

10-ஆம் உலகத் தமிழாசிரியர் மாநாடு

10th WORLD TAMIL TEACHERS' CONFERENCE ORGANIZING COMMITTEE

PATRON

Honourable Malaysian Prime Minister
Dato Seri Muhammad Najib Bin Tun Abdul Razak

ADVISORS

Dato A. Sothinathan
Madam Lok Yim Pheng
Mr. Pasupathi Sithambaram

Chairman

Mr. M. Mannar Mannan

Deputy Chairmen

Mr. S. Arunagirinathan
Mr. P. Dharmalingam

Asst. Chairmen

Mr. Ramanathan Nagarathinam
Dr. Samikkanu Jabamoney

Asst. Chairmen

Mr. S. Paskaran
Mr. P. Doraisamy

Secretary

Mr. S. Suwedan

Asst. Secretary I

Mr. Subramaniam Kanan

Asst. Secretary II

Mr. Kumaran Ramayah

Treasurer

Madam M. Vasantha

Asst. Treasurer

Mr. V. Satharaguru

Committee Members

Mr. P. Tamilselvan
Madam S. Vanaja
Mr. M. Rengasamy
Mr. A. Thangaperumal
Mr. S. Supramani
Mr. R. Uthamaseelan
Mr.G. Manokaran
Mr. V. Balachandran
Mr. Puveneswaran Karuppiah
Mr. M. Indran

அணிந்துரை

உயர்தனிச் செம்மொழியான தமிழ்மொழி உலகின் பல்வேறு நாடுகளில் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகங்களில் தாய்மொழியாகவும், முதன் மொழியாகவும் இரண்டாம் மொழியாகவும் அந்நிய மொழியாகவும் பயிற்றுமொழியாகவும் கற்கப்பட்டும் - கற்பிக்கப்பட்டும் பயன்படுத்தப்பட்டும் வருகிறது. கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் நேரடியாக ஈடுபடுபவர்கள் தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்களாவர். இவர்தம் கற்பிக்கும் பணி இயங்குதன்மை கொண்டதாகவும் மொழி கற்கும் மாணவர்களுக்குத் தேவையான திறன்களையும் பயனையும் அளிப்பதாக அமைவது இன்றியமையாததாகும்.

உலகெங்கும் பல்வேறு மொழிகள் கற்றல்- கற்பித்தல் செயற்பாட்டில் இடம் பெற்றும் அவை சார்ந்து நிற்கும் சமுதாயங்களுக்குத் தேவையான மொழி அறிவைக் கொடுத்தும் வருகின்றன. அவ்வப்போது- ஆங்காங்கே கற்றல்- கற்பித்தல் செயற்பாட்டில் தேவைக்கேற்பவும் பல்வேறு திறன்களின் வளர்ச்சிக்கேற்பவும் பல்வேறு மொழி வளர்ச்சிப் பணிகள் ஒருபுறமும் கற்றல் - கற்பித்தல் தொடர்பான ஆய்வுகள் இன்னொரு புறமும் மேற்கொள்ளப்பட்டு, அவ்வகை முயற்சிகளால் பெறப்படும் புதுப்புது முறைகளையும் கண்டுபிடிப்புகளையும் கற்றல் - கற்பித்தல் பணிகளில் ஈடுபடுத்திவருவதைக் கண்கூடாக நம்மால் காண முடிகிறது. எனவே, புது அணுகுமுறைகள்- தொழில் நுட்பப் பயன்பாடு போன்றவற்றையெல்லாம் இப்பணி சிறக்க உறுதுணையாகக் கொள்ளப்பட வேண்டும்.

இன்றைய நிலையில் கல்விக் கூடங்களில் மொழி கற்றல்- கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுத்தப்படும் அணுகுமுறைகளிலும் பயன்படுத்தும் நூல்கள், துணை நூல்கள், பயிற்சி ஏடுகள் போன்றவற்றிலும் மேற்கொள்ளப்படும் கலைத்திட்டம, தேர்வு முறை, மதிப்பீட்டு முறை போன்றவற்றிலும் உரிய மாற்றங்கள் செய்யப்பட்டும் ஆற்றல் மிக்க முறையில் அமைக்கப்பட்டும் வருகின்றன. எனவே, கற்பிக்கும் பணியிலும் தொடர்பான ஆய்வு - மதிப்பீடு - திறன் வளர்த்தல் - கற்றலுக்கான நூல் உருவாக்கம் போன்றவற்றிலும் நேரடியாக ஈடுபடும் கல்வியாளர்கள் - ஆசிரியர்கள் - கல்வி ஆய்வாளர்கள் வரையறை செய்யப்பட்ட கால இடைவெளியில் ஒன்றுகூடி அவர்தம் முயற்சிகளை- பெற்ற அனுபவங்களை - எதிர்கொள்ளும் பிரச்சனைகளை/ சவால்களைப் பகிர்ந்து கொள்வது அலசி ஆராய்வது காலத்தின் கட்டாயமாகிறது ; தேவையுமாகிறது.

இதை முன்னிறுத்தியே தமிழாசிரியர் மாநாடு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை உலகந்தழுவிய நிலையில் தொடர்ந்து நடத்தப்பட்டும் அம்மாநாடுகளில் படைக்கப்படுகின்ற ஆய்வுக்கட்டுரைகள் - மையக் கருத்துரைகள் போன்றவை நூல் வடிவில் வெளியிடப்பட்டும் வருகிறது. இப்பணியில் மலேசியா, சிங்கப்பூர், இந்தியா, மொரிசியஸ், தென் ஆப்பிரிக்கா

போன்ற நாடுகள் ஆர்வம் காட்டியும் ஆக்கப்பூர்வமான செயற்பாட்டினை மேற்கொண்டும் வருவது வரவேற்பிற்குரியது; போற்றுதற்குரியது.

ஏழாவது மாநாடு மலேசியாவில் 2006-இல் நடத்தப்பட்டது. அம்மாநாட்டில் படைக்கப்பட்ட 57 கட்டுரைகள் 'மாநாட்டு ஆய்வடங்கல்' எனும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து 10-ஆம் உலகத்தமிழாசிரியர் மாநாட்டினை 2013-இல் மலேசியாவில் நடத்துவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இம்மாநாட்டில் 'உலகத்தர கற்றல் - கற்பித்தலை நோக்கித் தமிழாசிரியர்கள்' எனும் கருப்பொருளை மையமாகக் கொண்டு ஆய்வுக்கட்டுரைகளாக ஐம்பத்திரண்டும் மையக்கருத்துரைகளாக நான்கும் படைக்கப்பட்டுள்ளன. இக்கட்டுரைகளும் கருத்துரைகளும் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் பல்வேறு உட்பிரிவுகளில் அமைந்திருக்கக் காண்கிறோம். குறிப்பாக, கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள், கற்றல் - கற்பித்தலுக்கான தொழில்நுட்ப முறைகள், இன்றைய நிலையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள புதிய அணுகுமுறைகள், தமிழை முதன் மொழியாகவும் இரண்டாம் மொழியாகவும் பல்வேறு பிரிவினர்க்குக் கற்பித்தல், பயனாக்க மொழியியல் பிரிவுகளான உளமொழியியல், கணினி மொழியியல் , மொழி பெயர்ப்பியல், அமைப்பு மொழியியல், சமுதாய மொழியியல் போன்றவற்றின் துணை கொண்டு கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகளை மேம்படுத்துதல், கற்றல் கற்பித்தலில் பண்பாட்டு விழுமியங்கள், கருத்தாடல் உத்திகள், உயர்மட்டச் சிந்தனைகள் போன்றவை இடம்பெற்றிருப்பதையும் காணமுடிகிறது.

இதுபோன்ற மாநாடு பன்னாட்டுத் தமிழாசிரியர்களுக்கிடையே அணுக்கத்தொடர்பும் நிபுணத்துவ ஒத்துழைப்பும் ஏற்பட வழிவகுக்கும் என்பதோடு பன்மொழிச்சூழலில் இடம்பெற்றுள்ள மொழிகள் 'கொண்டு - கொடுத்து' வளரவும் துணைசெய்யும் என்பதை நன்கு உணர்ந்துகொள்ள முடிகிறது.

படைக்கப்பட்டுள்ள கட்டுரைகளில் அறுபது விழுகாட்டிற்கும் மேலானவை பலதரப்பட்ட ஆய்வு அணுகுமுறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளதையும் சமுதாயத்தின் பல்வேறு நிலைகளில் (சிறார், இளையோர், கிராமப்புற மாணவர்கள் போன்றோர்) இடம்பெறும் சமுதாயப் பிரிவினர் பயன்பெறும் வகையில் அமைக்கப்பெற்றுள்ளதையும் பெருமிதத்தோடு குறிப்பிட வேண்டும்.

இக்கட்டுரைகள் எடுத்துக்காட்டுவனவற்றுள் குறிப்பிடத்தக்கவை : கற்பித்தல் பணிகளில் ஆசிரியர் கொண்டுள்ள ஆழ்ந்த ஈடுபாடு, செயற்திறன், காலத்தின் தேவைக்கேற்ப மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள் குறித்த சிந்தனை, எதையும் ஆய்வு நோக்கிலும் பயன்பாட்டு நோக்கிலும் சமுதாய நோக்கிலும் அணுகுகிற மனப்பான்மை, மனப்பக்குவம் போன்றவை எனில் அது மிகையன்று. எனவே, இன்றைய காலச்சூழலில் கற்றோர் கற்பிப்போர் இடையே கருத்தாடல் சிந்தனையைத் தூண்டும் வண்ணம் அமைய வேண்டும் என்பது வலியுறுத்தப்படுவதால், இவற்றிற்கெல்லாம் முன்னுரிமை வழங்கி, கற்றல் -

கற்பித்தல் செயற்பாடு அமைவதற்கு ஆசிரியப் பெருமக்கள் ஒன்று கூடி சில முடிவுகளை மேற்கொள்ள இத்தகைய மாநாடு பெருந்துணையாக அமையும் என எதிர்பார்க்கலாம்.

பத்தாவது உலகத் தமிழாசிரியர் மாநாடு சிறப்புற நடைபெறுவதற்குப் பொருளுதவி வழங்கிய பல நல்லுள்ளங்களை இவ்வேளையில் நினைவுகூர்ந்து நன்றி நவில்வது மிகப் பொருத்தமாகும். அவ்வகையில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க பெருந்தொகையை வழங்கி இம்மாநாட்டுப் பணிகளுக்கு அடித்தளம் அமைத்த மாண்புமிகு மலேசியப் பிரதமர் டத்தோ சிறி முகமது நஜிப் துன் அப்துல் ரசாக், அவர்களுக்கு முதற்கண் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். அதைத்தொடர்ந்து இயற்கை வளம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர் மாண்புமிகு டத்தோஶ்ரீ கோ.பழநிவேல் அவர்களுக்கும், சுகாதார அமைச்சர் மாண்புமிகு டத்தோஶ்ரீ டாக்டர் ச.சுப்பிரமணியம் அவர்களுக்கும், இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை துணையமைச்சர் மாண்புமிகு டத்தோ மு.சரவணன் அவர்களுக்கும், கல்வித்துறை துணையமைச்சர் மாண்புமிகு திரு.பி.கமலநாதன் அவர்களுக்கும், இந்தியா மற்றும் தெற்காசிய நாடுகளுக்கான உள்கட்டமைப்புச் சிறப்புத்தூதர் மதிப்புமிகு டத்தோஶ்ரீ உத்தாமா டாக்டர் ச.சாமிவேலு அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

இம்மாநாடு செம்மையுற நடைபெற மதியுரைஞர்களாக விளங்கிய பெருந்தகைகள் மதிப்புமிகு டத்தோ ஆ.சோதிநாதன், மதிப்புமிகு திருமதி லோக் இம் பெங், மதிப்புமிகு திரு பசுபதி சிதம்பரம் ஆகியோருக்கு இம்மாநாட்டு ஏற்பாட்டுக் குழுவின் சார்பில் உளமார்ந்த நன்றியைப் புலப்படுத்திக்கொள்கிறோம்.

இந்த ஆய்வடங்கல் வடிவம் பெற அயராது தமது உழைப்பை வழங்கிய கிரினோ கிராபிக்ஸ் சென். பெர்ஹாட்டைச் சேர்ந்த மதன் ஜெயராம் அவர்களுக்கும் இவ்வேளையில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

திணைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்

கொள்வர் பயன்தெரி வார் (குறள் 104)

நன்றி

முனைவர் சா. சாமிக்கண்ணு ஜெபமணி

தலைவர், ஆய்வடங்கல் துணைக்குழு.

உள்ளடக்கம்

எண்	கட்டுரைத் தலைப்பு - கட்டுரையாளர் பெயர்	பக்கம்
1	மொழி கற்பித்தல் - **செ.சண்முகம்**	1
2	கருத்தாடல் திறன் வளர்த்தலும் தமிழ்மொழிப் பயன்பாடும் - **கி. கருணாகரன்**	16
3	கணினித் தமிழும் தமிழ்மொழிக் கல்வியும் - **ந. தெய்வசுந்தரம்**	29
4	அயல்நாடுகளில் தமிழ்மொழி பயிற்றலின் அடிப்படைகளும் நெறிமுறைகளும் - **த. வேணுகோபால்**	40
5	Kalvi : An Adaptive Tamil mLearning System - **Keshava Rangarajan, Jayaradha Natarajan & Arivoli Tirouvingadame**	48
6	தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பித்தல் உளமொழியியலின் பங்களிப்பு - **கவிதா நகுலன்**	54
7	தகவல் தொழில் நுட்பமும் கற்றல் கற்பித்தலும் - **எஸ். குமரன்**	60
8	தமிழ்மொழி கருத்தாடல் : ஐந்தாம் படிவ மாணவர்களின் கட்டுரைகளில் சொற்பிணைப்புப் பகுப்பாய்வு - **குமரன் இராமையா**	67
9	மொழி அனுபவ அணுகுமுறைவழி (Language Experience Approach) பேச்சுத் தமிழையும் எழுத்துத் தமிழையும் ஒருங்கே கற்பித்தல் - **க. ஷண்முகம்**	75
10	மாணவர்களிடையே பண்பாட்டு விழுமியங்களைப் பேணுவதில் மலேசியத் தமிழ்மொழிப் பாடங்களின் பங்கு - **சாமிக்கண்ணு ஜெபமணி**	80
11	தமிழை இரண்டாம் மொழியாகப் பயில்வோர்க்கான கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் - **சிவமூர்த்தி இ சி**	86
12	இலக்கியக் கூறுகளின் வழி உயர்நிலைச் சிந்தனையைப் போதித்தல்: புறநானூறு ஒரு கண்ணோட்டம் - **செல்வ சுப்ரமணியம் த/பெ ராமையா**	94
13	கையடக்கக் கணினி வழியாக நுட்பக் கல்வி கற்பித்தல் - **செல்வ. முரளி & எஸ்.மணியம்**	99
14	இடைநிலைப்பள்ளி தமிழ்ப் பாடநூல்களில் கட்டுரை வடிவங்கள் - **தனலட்சுமி த/பெ பெருமாள்**	104
15	தமிழ் மொழி கற்றல் கற்பித்தல் மதிப்பீட்டில் புதிய அணுகுமுறை - **வே. தெ கூஷிணாமூர்த்தி**	109
16	தமிழ் கற்றல்-கற்பித்தலில் கூட்டுக்கலந்தாய்வு முறை (Discussion Method) - **பரமசிவம் முத்துசாமி**	119

17	கிராமப்புற மாணவர்களின் தமிழில் படித்தல் இடர்பாடுகளைக் கண்டறிதல் மற்றும் குறைநீக்கி, மேம்படுத்தும் நுட்பங்களை உருவாக்குதல் - ஓர் ஆய்வு - **பா. பத்மா**	123
18	பண்பாட்டு விழுமியங்களைப் பேணுவதில் மலேசிய இடைநிலைப்பள்ளிகளில் தமிழ்க்கல்வியின் பங்கும் பணியும் - **பார்வதி நல்லியண்ணன்**	128
19	தமிழ்மொழி - தொடக்கக்கல்வி - கற்றல் - கற்பித்தல் ஓர் ஆய்வு - **பி. ஆர் இலட்சுமி**	136
20	தமிழ் கற்பித்தல் நிகழ்வில் 'துணையெழுத்துப் பயன்பாடுகள்' - **ஆ. பூமிச்செல்வம்**	140
21	தமிழ்நாடு, மலேசியா இடைநிலைப்பள்ளித் தமிழ்ப் பாடநூலில் அறிவியல் - ஒப்பாய்வு - **த. பொன்னி**	144
22	இடைநிலைப்பள்ளி படிவம் நான்கு தமிழ்மொழிப் பாடநூலில் காணப்படும் நன்னெறிக்கூறுகள் - **பொன்னியம்மா மு. முனியாண்டி**	154
23	தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பித்தல் : கோட்பாடுகளும் சிக்கல்களைக் களையும் செயல்முறைகளும் - **மணிமாறன் கோவிந்தசாமி**	162
24	மொழி வளர்க்கும் முகநூல் பக்கங்கள் - **மலர்விழி சின்னையா**	169
25	திரையிசைப் பாடல்கள் வழி குற்றியலுகரம் கற்பித்தல் - **மனோன்மணி தேவி அண்ணாமலை**	177
26	தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் இணைய மென்பொருளும் சமூக ஊடகங்களும் - **லூயிஸ் ஐசக் குமார் & பாலின் தெபோராள்**	185
27	முகநூல் வழி கற்றல் கற்பித்தல் - **சி. விக்கினேசு**	189
28	நாடக வழி தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பித்தல் - **குமாரி சரஸ்வதி குதிரக்கள் குஞ்சுக்கண்ணன்**	196
29	தமிழ் கற்றல் - கற்பித்தலில் புதிய அணுகுமுறைகள் - எதிர்பார்ப்புகளும் பிரச்சினைகளும். (யாழ்ப்பாணப் பாடசாலைகளை மையமாகக்கொண்ட ஆய்வு) - **அனுஷ்யா சத்தியசீலன்**	201
30	மொழி & பண்பாட்டு விழுமியங்களைக் கற்பிப்பதில் குறும்படங்கள் - **ம. ஞானசேகரன் & பொன் சசிகுமார்**	210
31	பரஸ்பரக்கற்பித்தல் முறையைப் பயன்படுத்திக் கருத்தறிதல் திறனை வளர்த்தல் - **அலமாள் தங்கநாதன் & பாமா கோவிந்தசாமி**	219
32	எண்ணியதை எண்ணியாங்கு எழுதத்தூண்டும் எழுச்சிப் படிநிலைகள் - **துறைமுத்து சுப்ரமண்யம்**	225

33	தமிழ்மொழிக் கற்பித்தலில் சிந்தனை வழமைகளின் (Thinking Routines) ஒருங்கிணைப்பு - **ஃப்ரான்சிஸ்கா சுபாஷ்**	231
34	விளையாட்டின் வழிக் கற்றல்: மகிழ்ச்சியும் பயனும் தரும் பேசுதலும் எழுதுதலும் - **கௌரி சோழராஜன்**	236
35	மாணவர்கள் கட்டுரையில் ஏன் இனிய தொடர்களைப் பொருத்தமான வகையில் பயன்படுத்துவதில்லை? ஒரு செயலாய்வு - **க. முருகன் & கோ. கிருஷ்ணமூர்த்தி**	245
36	ஈடுபாடுமிக்க கற்றலுக்கு - ஆர்வமூட்டும் கற்பித்தல் முறைகள் (Pedagogies for Engaged Learning) - **பிரேமா ராமலிங்கம் & ராமசாமி கண்ணப்பன்**	254
37	அகன்ற படிப்பு : மாணவர் பின்புலப் பதிவும் ஆசிரியரின் புத்துணர்ச்சியூட்டும் முன்மாதிரிப் படைப்பும் - **காளியம்மாள் & சகுந்தலா**	265
38	சிங்கப்பூர்த் தமிழாசிரியர்களின் கற்பித்தல் முறைமைகளிலும் பணிசார் நம்பிக்கைகளிலும் நிலைமாற்றத்தை (Transformation) ஏற்படுத்தும் பணிமேம்பாட்டுச் செயற்பாடுகள் - **சுப்பிரமணியம் நடேசன் & தமிழரசி சுப்பிரமணியம்**	272
39	எழுத்துப் படிவத்தில் ஒன்றிருக்க வாசிக்கும்பொழுது வேறாக வாசிக்கும் குறைபாட்டினைக் களையும் வழி முறைகள் - **இரா. சிவநேசன்**	291
40	தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் இருவழித் தொடர்புத்தளத்தின் பங்கு - **சி. சுப்புலெட்சுமி & சாந்தி காளிமுத்து**	295
41	புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ்க் கல்வி - **சொக்கன்**	302
42	கற்றல் கற்பித்தலுக்கான புதிய அனுகுமுறைகள் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் புத்தாக்கச் சிந்தனைகள் - **வீரமுத்துகணேசன் / தாசையா விக்டர் ஜான்**	306
43	மொழித்திறன் மேம்பாட்டில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் பயன்பாடு - **விஜயராணி கோவிந்தசாமி & சிலம்பாயி முத்துசாமி**	311
44	பல்லூடகத் தகவல் தொடர்பு தொழில்நுட்பப் பயன்பாட்டின் வாயிலாக நான்காம் ஆண்டு மாணவர்களிடையே பழமொழி பயன்பாட்டினை மேம்படுத்துதல் - ஓர் ஆய்வு - **சிவகுமாரி த/பெ சாமியப்பன்**	319
45	பண்பாட்டு விழுமியங்களைப் பேணுவதில் தமிழ்க்கல்வியின் பங்கும் பணியும் - **சுப்பிரமணியம் இராசரத்தினம்**	327
46	Romanization of Tamil - a South African perspective - **Govindasamy Kandasamy Moudley**	331
47	மின்மனன அட்டை (மென்பொருள்) செயலிகளால் சொல்வளத்தைக் கூட்டுதல் - **செந்தில்**	337

48	கற்றல் கற்பித்தலில் நாடகத்தின் பங்கு - **முரசு நெடுமாறன்**	347
49	மாணவர்களின் பார்வையில் மொழியாசிரியரின் தன்மைகள் - **முனியாண்டி வரதன்**	355
50	கவிதை கற்றல் கற்பித்தலில் பண்பாட்டுக் கூறுகள் - **கோவி. மணிமாறன்**	367
51	தமிழ்மொழியில் காணப்படும் புணரியல் இயல்புகள்/ அமைப்புகள் எண்ணிக்கை எத்தனை? - **மோகனதாஸ் ராமசாமி**	372
52	தமிழ் மொழி கற்பித்தலில் ஊடகங்களின் பங்கு - **போ. சத்தியமூர்த்தி**	383
53	மேனிலைச் சிந்தனைத் திறன்களைப் பயன்படுத்தி உரையாடல் திறன்களை வளர்த்தல் - **சுப. நல்லுராஜ் & பி. பானுமதி**	388
54	தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும் சூழலில் பேச்சுத்தமிழ் இலக்கண நுணுக்கங்கள் கற்பித்தல் - ஒரு புதிய அணுகுமுறை - **இரா. வேல்முருகன்**	394
55	கற்றல் கற்பித்தலில் புதிய அணுகுமுறைகளில் தகவல் தொழில்நுட்பப் பயன்பாடு - **செள. பா. சாலாவாணிஸ்ரீ**	399

மொழி கற்பித்தல்

பேரா. செ. சண்முகம், கோயம்புத்தூர்
(selshun@rediffmail.com)

மொழி வழிச்செயல்கள்

மொழியைக் கற்றல், பயன்படுத்துதல், விளக்குதல் என மொழி சார்ந்த செயற்பாடுகள் மூன்று வகைப்படும். மொழியறிவையும், மொழியைப் பயன்படுத்தும் திறனையும் பெறுவதற்காக, மொழி கற்கப்படுகிறது. பேச்சு வழியிலும், எழுத்து வழியிலும், கருத்தைப் பரிமாறவும், சமுதாயத்தோடு தொடர்புற்று வாழவும், இலக்கியம் அறிவியல் போன்ற துறை சார்ந்த படைப்புகளை உருவாக்கவும், மொழி பயன்படுத்தப்படுகிறது. மொழிக்கான இலக்கணம் படைத்தல், மொழிக் கோட்பாடுகளை உருவாக்குதல், மொழிக்கும் பிற துறைகளுக்கும் இடையிலான உறவை வெளியிடுதல், மொழியின் வரலாற்றை வெளியிடுதல் ஆகிய செயல்களில் மொழி விளக்கப் பொருளாக அமைகிறது. இங்கு, மொழியைக் கற்றல், கற்பித்தல் என்ற செயற்பாடுகள், மைய விளக்கப் பொருட்களாக அமைகின்றன.

மொழி கற்பித்தல்

யார், யாருக்கு, எதை, எப்படி, எதன் உதவியால், எதற்கு, எங்கு, எப்போது கற்பிக்கிறார்கள் எனப் பல வினாக்களை எழுப்பி, அவைகளுக்கான விடைகளைப் பெறும்போது, மொழி கற்பித்தலைக் குறித்த முழுமையான தெளிவு பிறக்கும். இத்தகைய தெளிவைக் கொடுப்பதே பயனாக்க மொழியியலின் ஒரு பிரிவான மொழிக் கல்வியியல் என்ற துறையின் குறிக்கோளாக அமைகிறது. இங்கு, மொழிகற்பித்தலில் அடங்கும் கூறுகள் விளக்கப்படுகின்றன. மொழி கற்பித்தல் போக்குகளை வெளியிடும் வகையில், இந்த பொழிவு அமைகிறது.

கற்பவை

மொழி கற்பிக்கும் சூழலில், மாணவர் கற்கும் பொருளாகவும், ஆசிரியர் கற்பிக்கும் பொருளாகவும் அமைவது, மொழியே என்றாலும், **மொழி அறிவு, மொழி உணர்வு, மொழி செயல்பாடு** என்பன குறிப்பான பொருட்களாக அமைகின்றன. இவைகளில் மொழியறிவும் மொழி செயல்பாட்டுக்குப் பயன்படும் மொழித் திறன்களும் முக்கியமானவை. இந்திய மொழிக்கல்விச் சூழல்களில், முதல்மொழியையும் இரண்டாம் மொழியையும் கற்பிக்கும்போது, கூடவே இலக்கியமும் கற்பிக்கப்படுவதைக் காணமுடியும். மொழி கற்பிக்கும் சூழலில், மாணவருக்குக் கற்பிக்கப்படும் அறிவு மொழியறிவு, மொழி பயன்பாட்டறிவு என இரு வகைப்படும்

மொழியிலுள்ள கூறுகள், அவைகளின் வகைகள், அக்கூறுகளைக் கொண்டு உருவாகும் மொழியமைப்புகள், அவைகளின் வகைகள், அந்த அமைப்புகளை உருவாக்கும்

வழிமுறைகள், அவ்வழிமுறைகளை வெளியிடும் விதிகள், கட்டுப்பாடுகள், மொழிக்கூறுகளின் பொருண்மை, உறவு வகைகள், மொழி வழக்குகள், எழுத்து மொழி, பேச்சுமொழி என்ற வகைகள், அவைகளுக்கிடையிலான வேறுபாடுகள் ஆகியனவற்றைக் குறித்த அறிவே **மொழியறிவு** ஆகும். மொழிக்கூறுகளைக் குறித்த அறிவில், கூறுகளின் வகைப்பாடு, நிலைப்பாடு, மாறுபாடு ஆகியன அடங்குகின்றன. மொழியறிவை 'இலக்கண அறிவு' எனக் கொள்வதால், அது மொழிக்கூறுகளின் இலக்கணத்தன்மையை நிலை நாட்ட உதவும் அறிவு எனக் கருதப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஒலியறிவு என்பதில் ஒலிவகைகளான உயிர், மெய் என்பவை, அவை வருமிடங்கள் (மொழிமுதலில், இடையில், கடையில்: எதன் முன்னர், பின்னர் என்பன) வராத இடங்கள் (மெய் ஒலி தமிழில் மொழிமுதலில் வராமை), ஒலிகளின் சேர்க்கை (**ர்க்க்** என்ற ஒலித்தொடர், மொழி இடையில் வருதல் [**பார்க்க**]; **ற்க்க்** எனும் ஒலித்தொடர், மொழியில் எங்கும் வராமை), ஒலிகள் இணையும் போது ஏற்படும் மாற்றங்கள் (**ண்** என்ற மெல்லினம் **ட்** என்ற வல்லினமாக ஒரு வல்லினத்தின் முன் வரும்போது மாறுதல்: [**மண் + குடம் → மட்குடம்**] ஆகியன அடங்குகின்றன.

மொழியைக் குறித்த அறிவு இருந்தாலும், அதை மொழி பயன்படுத்தும் சூழலில், தக்கவாறு பயன்படுத்தி, கருத்துப் பரிமாற்றம் சிறப்புற நிகழ வழிவகுக்கும் சில கூறுகளைக் குறித்த அறிவு, **மொழிப்பயன்பாட்டறிவு** எனப்படும். சூழலில் மொழியைப் பயன்படுத்த உதவும் அறிவு என்பதால், கருத்துப்பரிமாற்ற அறிவு, தொடர்களின் சூழ் நிலைப் "பொருத்தமுடைமை"யை நிலை நாட்டுவதற்கு உதவுகிறது. இதில் குறிப்பாக இலக்கண அறிவு, உரையறிவு, சமுதாய மொழியறிவு, உத்தி அறிவு, சமுதாய நியதி அறிவு என்பன அடங்குகின்றன.

இலக்கணச்செம்மையான கூறுகளைப் படைக்கவும் புரிந்துகொள்ளவும் உதவும் அறிவு **இலக்கண அறிவு** ஆகும், கருத்துப்பரிமாற்ற சூழலில் பயன்படுத்துகின்ற தொடர்களின் இலக்கணச் செம்மைத்தன்மையை நிலை நாட்ட, இலக்கண அறிவு உதவுகிறது. தொடர்களை இணக்கமான முறையில் இணைத்து, பெரும் உரைகளைப் படைக்கவும், படைத்த உரைகளைப் புரிந்துகொள்ளவும் உதவும் அறிவு **உரையறிவு** ஆகும். கருத்தாடலின்போது பயன்படுத்தும் தொடர்களைத் தொடர்ச்சியான முறையிலும், அமைப்போட்டமும் கருத்தோட்டமும் சிறப்புற அமையும் வகையிலும் பயன்படுத்தி, உரையைப் பொழியவும், உரையாடவும் உரையறிவு உதவுகிறது. பேசும்போதும், எழுதும்போதும் கடைபிடிக்கவேண்டிய நியதிகள், வெளியிட வேண்டியவை, வெளியிட வேண்டாதவை, பேச்சு செயல்கள், மதிப்பு வழங்கும் முறை, பிறரை அழைக்கும் முறை போன்ற சமுதாயம் சார்ந்த கருத்துக்களைக் குறித்த அறிவு **சமுதாய மொழியறிவு** ஆகும். பரிமாற்ற சூழலில், மாந்தர், இடம், குறிக்கோள் போன்றவைகளுக்கு ஏற்ப தொடர்களைத் தேர்ந்தெடுத்து பயன்படுத்த இந்த அறிவு உதவுகிறது. சுழலில் சிறப்பாக கருத்தைப் பரிமாற கடைபிடிக்க வேண்டிய உத்திகளைக் குறித்த அறிவு **உத்தியறிவு** எனப்படும். இதில் கிரைசு என்ற அறிஞர் விளக்கிய ஒத்துழைப்பு நியதி, தர நியதி, அளவை நியதி ஆகியனவும் அடங்குகின்றன. தொய்வில்லாத கருத்துபரிமாற்றம் நிகழ உத்தியறிவு வழிவகுக்கிறது.

மொழியைக் கற்பிக்கும்போது, மொழி பயில்வோரிடம் மொழியறிவு வளர்க்கப்படுவதோடு, கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல். கருத்தைப் பரிமாறுதல் ஆகிய மொழித்திறன்களும் வளர்க்கப்படுகின்றன.

மாணவர்

மொழிகற்பித்தல் நிலையில், கற்பித்தலுக்கு உள்ளாகுபவர்கள் மாணவர்கள். இவர்களே மொழியைக் கற்பவர்கள், மொழியறிவையும் மொழித்திறனையும் பெறுபவர்கள். இவர்கள், முதல்மொழியைக் கற்பவராகவோ, இரண்டாம் மொழியைக் கற்பவராகவோ இருக்கலாம். வயதில் இளையவராகவோ, முதியவராகவோ இருக்கலாம். பேச்சுமொழியைக் கற்பவராகவோ, எழுத்து மொழியைக் கற்பவராகவோ இருக்கலாம். அன்னிய நாட்டு மொழியையோ, தம் நாட்டிலேயே, தாய்மொழியல்லாத, மாநில பெரும்பான்மை மொழியைக் கற்பவராகவோ இருக்கலாம். சிறுபான்மை மொழி பேசுபவராகவோ, பழங்குடி மொழி பேசுபவராகவோ இருக்கலாம்.

மொழி பயில்வோரின் பண்பின் அடிப்படையில், பயில் கூறுகளும் பயில் முறைகளும் வேறுபடுகின்றன. எடுத்துக்காட்டாக, எளிதில் மொழியைக் கற்கும் திறன் இருப்பதால், இளைய வயதினருக்கு, மொழிக் கூறுகளை, **போலச்செய்தல்** வழியில் கற்பிக்கலாம் எனவும், சுலபமாக மொழியைக் கற்கும் திறன் இல்லாதிருப்பதால், வயதுவந்தவர்களுக்கு **(விதி) விளக்கல்** முறையில் கற்பிக்கலாம் எனவும், "பயில் கால வரையறைக் கருதுகோள்" என்ற கருதுகோள் அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, ஒலி உச்சரிப்பைக் இளையோருக்கு கற்பிக்கும்போது அவர்களைத் திரும்பத்திரும்ப ஒலியை உச்சரிக்கவைத்தும், முதியவர்களுக்கு கற்பிக்கும்போது, ஒலி உச்சரிக்கும் முறை, ஒலி உறுப்புகள் இயங்கும் விதம் போன்றவற்றை விளக்கியும் கற்பிக்கலாம்.

மாணவர் செயல்கள்

உள்ளீடுகளைப் பெற்று, சில செயல்களைச் செய்து, வெளியீடுகளைக் கணிப்பான் தருவதைப் போன்று, மாணவர்களும் உள்ளீட்டைப் பெற்று, மொழி இயல்பைக் கணித்து, மொழியைப் பயன்படுத்தி,மொழியைத் தன்வயப்படுத்துகின்றனர் எனக்கருதப்படுகிறது.

உள்ளீடு பெறுதல்

மொழியைப் பயில்கின்ற குழந்தைகளின் காதுகளில் விழும் மொழிக் கூறுகள் **உள்ளீடுகளாகும்**. இவை மாந்தராலும், ஊடகங்கள் வாயிலாகவும் வழங்கப்படுகின்றன. இவை, இயல்பானவையாகவோ, எளிமைப் படுத்தப்பட்டவையாகவோ அமையலாம். பெற்றோர், உற்றார் உறவினர்கள், சக நண்பர்கள் வாயிலாக வரும் மொழிக்கூறுகள் இயல்பானவை. இவைகளை இலக்கணச் செம்மைத்தன்மை கொண்டவை எனக் கருதமுடியாது. இவை எளிமைப்படுத்தப்பட்டவை அல்ல. குழந்தைகள் தாம் பேசுவதை எளிதில் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக தாய்மார்கள் தம் பேச்சை எளிமைப்படுத்தி குழந்தைகளிடம் பேசுவதுண்டு (பாச்சி, அம்புலி, மம்மம், பீப்பீ, பூப்பூ). இத்தகைய பேச்சுக்களை "motherese" என ஆங்கிலத்தில் அழைப்பர். குழந்தைகள் எளிதில் மொழியைப் பயிலவும், சமுதாய வயமாகவும் இவை உதவுகின்றன. இவை, எளிமைப்படுத்தப்பட்ட

இயல்பு உள்ளீடுகள். ஊடகங்கள் வாயிலாக வெளிப்படும் பேச்சுக்கள், குழந்தைகள் நிகழ்ச்சிகள் ஆகியன ஊடக உள்ளீடுகள். உள்ளீடுகளைப் பெறுதல் மொழி பயிவதற்கான முதற் செயலாகும்.

மொழி இயல்பு காணல்

உள்ளீடுகளாகப் பெற்ற மொழிக்கூறுகள் எதோ ஒரு வகையில் குழந்தைகளால் ஆய்வு செய்யப்படுகின்றன. எத்தகைய ஆய்வு நிகழ்கிறது என்பது வெளிப்படையாகத் தெரியவில்லை. ஆனால், அதை விளக்குவதற்குப் பல பயில்தல் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, ஸ்கின்னரின் செய்கைக் கோட்பாடு (உடலியல்), சாம்ஸ்கியின் பிறவிப் பொது இலக்கணக்கோட்பாடு (உளவியல்), கிராசனின் அமைப்பு காணல் கோட்பாடு (கருத்தியல்) என்பன முக்கியமானவை.

ஸ்கின்னரின் விளக்கம்

காதில் விழும் உள்ளீடுகளை, (STIMULUS) போலச்செய்தல் வழியில், (IMITATION) திரும்பத்திரும்ப உச்சரித்து, மொழிக்கூறுகளைப் படைத்து (RESPONSE), பயன்படுத்தும் பழக்க வழக்கத்தை (BEHAVIOUR) ஏற்படுத்துவதே மொழி பயிலல் (ACQUISITION) என **ஸ்கின்னரின் செய்கைக் கோட்பாடு** விளக்குகிறது. மொழிக்கூறுகளைப் பயன்படுத்தும் பழக்கவழக்கத்தை ஏற்படுத்திக்கொள்வதே மொழிகற்றல் எனக் கருதப்படுகிறது.

சாம்ஸ்கியின் விளக்கம்

குழந்தைகளிடம், பிறவியிலேயே (INNATE) மொழியைப் பயில்வதற்கான ஒரு அமைப்பு (LANGUAGE ACQUISITION DEVICE) உள்ளது எனவும், அது பிறவிப் பொது இலக்கணம் (UNVERSAL GRAMMAR) எனவும், அதில் உலக மொழிகளுக்கெல்லாம் பொதுவான விதிகளும் நியதிகளும் (PRINCIPLES) உள்ளன எனவும், குழந்தைகள் பெறும் உள்ளீடுகளைக் (LANGUAGE EVIDENCE) கொண்டு அந்தந்த குறிப்பான மொழிக்குரிய சிறப்பு மதிப்புக்களை (PARAMETRIC VALUE) வழங்கி, சிறப்பு மொழி இலக்கணத்தை குழந்தைகள் ஏற்படுத்திக் கொள்கிறார்கள் எனவும் சாம்ஸ்கியின் கோட்பாடு விளக்குகிறது. எடுத்துக்காட்டாக, உலக மொழிகளில் இருக்கும் தொடர்கள் எல்லாவற்றிலும் தலைமைக் கூறுகளும் (HEAD), சார்புக்கூறுகளும் (COMPLEMENTS) காணப்படுகின்றன. குழந்தகளின் மூளையில் இருக்கும் பொது இலக்கணத்திலும் இந்த நியதி இருக்கும். குழந்தைகள் பெறும் உள்ளீடுகளைக் கொண்டு, மொழித்தொடரின் தலைமைக் கூறுகள் எங்கு தோன்றுகின்றன என்பதைக் குழந்தைகள் கணிக்கின்றன. அவை தொடரின் முதலிலோ, இறுதியிலோ, நடுவிலோ தோன்றுவதைக் கணித்து, அவை, முதல், இடை, கடை என்ற இடங்களில் தோன்றுகின்றன என்னும் மதிப்பை வழங்கி (HEAD LAST, HEAD FIRST, HEAD MIDDLE) சிறப்பு இலக்கணத்தை வகுக்கின்றன. மனதில் இருக்கும் பொது இலக்கண விதிகளுக்கு, உரிய, வேறுபட்ட மதிப்பு வழங்கி, சிறப்பு இலக்கணத்தை படைப்பதே மொழி பயில்தல் என **சாம்ஸ்கியின் மனவியல் கோட்பாடு** விளக்குகிறது.

கிராசனின் விளக்கம்

கிராசனின் கோட்பாடு மொழி பயில்தல் குறித்த சில கருது கோள்களை வெளியிடுகிறது. அவை பயில்தல், பயில் வரிசைப்பாடு, பயில் மேற்பார்வை, உள்ளீடு, இடையீடு என்பவைகளோடு தொடர்புடையவை.

மொழியைப் பயிலும்போது' மொழிக்கூறுகளின் பொருண்மையின் மேல், பயில்வோரின் **கவனம்** இருந்தால், அங்கு மொழி தன்வயப்படுத்தல் (AQUISITION) நிகழும் எனவும், மொழிக்கூறுகளின் அமைப்பின் மேல் கவனம் இருந்தால், அங்கு கற்றல் (LEARNING) நிகழும் எனவும் கருதப்படுகிறது. பயில்தல் நிகழ்கையில், கூறுகள் ஒரு **வரிசைப்பாட்டில்** கற்கப்படுகின்றன. எளிமையான கூறுகள் முதலிலும், கடினமான கூறுகள் பின்னரும் கற்கப்படுகின்றன.

பயில்தல் நிகழ்கையில், மொழி விதிகள் உணரப்பட்டு, பயில்வோர் படைக்கும் கூறுகளோடு பொருத்திப் பார்க்கப்பட்டு, படைத்தவை சரியானவையா, தவறானவையா என **மேற்பார்வை** செய்யப்படுகிறது. இவ்வாறு மேற்பார்வை செய்யும் திறமையின் அடிப்படையில், மாணவர்களை குறைவாக, அதிகப்படியாக, வேண்டிய அளவுக்கு மேற்பார்வை செய்பவர்கள் என மூன்று வகையாகப் பிரிக்கலாம். குறைவாக மேற்பார்வை இடுபவர்கள் வேகமாகவும், அதிகமாக மேற்பார்வை இடுபவர்கள் காலந்தாழ்த்தியும் மொழியைக் கற்றுக்கொள்வர்.

பயில்தல் நிகழ்தலுக்கு **உள்ளீடு** தேவை. படிப்படியாக பயில்தல் நிகழவும், அறிந்ததை வைத்து அறியாதவற்றைக் கற்கவும் உள்ளீடு வழிவகுக்கிறது. பயில்வோரின் ஏக்கம், தாழ்வு மனப்பான்மை, பயில் ஊக்கமின்மை ஆகியவை பயில்தல் நிகழ்வதற்கும், உள்ளீடுகளைச் சரிவர பகுத்தறிந்து, அமைப்பு காணலுக்கும் தடையாக அமைகின்றன. இந்த **இடையீடுகள்** நீக்கப்பட்டால், பயில்தல் சிறப்புற நிகழும்.

பயில்தல் நிகழும்போது அமைப்பின்மேலும் பொருண்மையின் மேலும் கவனம் இருக்கும் எனவும், ஒரு குறிப்பிட்ட வரிசைப்பாட்டில் கூறுகள் கற்கப்படுகின்றன எனவும், விதியையும் கூறுகளையும் பொருத்தி மேற்பார்வையிடும் வகையில் பயில்தல் நிகழ்கிறது எனவும், உள்ளீடுகளை ஆராய்ந்து மொழி கற்கப்படுகிறது எனவும், மனம் சார்ந்த தடைகள் நீக்கப்பட்டால் பயில்தல் சிறப்புற நிகழும் எனவும் கிராசனின் பயில் கோட்பாடு விளக்குகிறது.

மொழியைப் பயன்படுத்தல்

மாணவர்கள் உள்ளீடுகளைப் பெற்று, மொழியைத் தன்வயப்படுத்தும்போது, மொழியைப் பயன்படுத்த விழைகின்றனர். அந்த நிலையில், முதலில் தவறாகவும், அடுத்து தவறுகளைத்திருத்தியும், கடைசியில் சரியாகவும் மொழிக்கூறுகளைப் பயன்படுத்துவர். தவறாக மொழியைப் பயன்படுத்துவதற்கு அவர்களது தாய் மொழியின் தாக்கம், தாய்மொழிக்கும் பயில் மொழிக்கும் இடையிலான வேறுபாடு, பயில் மொழிக் கூறுகளின் கடினத்தன்மை, பயிலும் கூறுகளின் அளவு போதாமை, பயில்தலில் குறைபாடு, பயிலும்போது சரியான மனப்பாங்கின்மை, பயம், ஈடுபாடின்மை, பல காலக் கட்டங்களில்

பயில்தல் ஆகியவை காரணமாக அமையலாம். பயில் இடற்பாடுகளைக் காண்பதற்கும் பிழைகளைக் காண்பதற்கும் மொழி உறழ்வு ஆய்வு, பிழை ஆய்வு, மாணவர் உரையாய்வு, மொழித்தேர்ச்சி ஆய்வு ஆகியன மேற்கொள்ளப் படுகின்றன. மொழியைப் பயிலும் நிலையில், ஒரு வகையான, இடை நிலை வளர் மொழி மாணவரிடம் வளர்கிறது எனவும், அதில் மொழி விதிகளும் கூறுகளும் முழுமையாக இருப்பதில்லை எனவும், அதிகமாக மொழியைப் பயிலும் காரணமாக, இந்த இடை நிலை மொழி சீர்மையாக்கப்பட்டு, சரியான மொழி அறிவு மாணவரிடம் வருகிறது எனவும் பிட் கார்டர் விளக்குவார்.

மொழிபயன்படுத்தல் வளரும் நிலைகள்

ஆங்கில மொழி பயில் சூழல் ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு, பிழைகளை வெளியிடும் நிலை , தடுமாறும் மொழி வளர் நிலை (I GO TO NEW YORK YESTERDAY), தானே தவறைத்திருத்தி சீர்மையாக்கும் நிலை (LOBSTER IS SERVING → LOBSTER IS BEING SERVED), நிரந்தர நிலை என்ற நிலைகள் மொழிபயிலும்போது எழுகின்றன எனவும், மொழிக்கூறுகள் ஒரு வரிசைப்பாட்டில் கற்கப்படுகின்றன எனவும் (WORD ORDER → BE VERB FORM CONTRACTION → ING FORM OF VERB → IRREGULAR PAST → POSSESSVE → ..... → PAST PARTICIPLE ஒரு இலக்கணக் கூறைக் கற்கும்போதும், பல நிலைகளில் வளர்ச்சி வருவதையும், (WANT COOKIE NO → THERE NO COOKIES → NO ONE DID'NT COME) விளக்கியுள்ளனர்.

பிழை வருவதற்கான காரணங்களாக, கூறு குறைத்தல் (HE HIT CAR), கூறுகளை இருமுறைப்பயன்படுத்தல் (HE DID'NT WENT), சீர்மையாக்கல் (WOMENS), விதி பொதுமையாக்கல் (TEACHED), ஒரே கூறைப்பயன்படுத்தல் SHE/HER = HER HER MY SISTER) கூறு வரிசையைப் புறக்கணித்தல் (WHAT YOU ARE DOING), விதி கட்டுப்பாட்டைப் புறக்கணித்தல் (HE DESCRIBED ME THE BOOK) ஆகியனவற்றை விளக்கியுள்ளனர்.

பயில் நடை

மாணவர்களை, பகுத்துணர்பவர்கள், தொகுத்துணர்பவர்கள், காட்சி வழி உணர்பவர்கள், கேட்டல் வழியில் உணர்பவர்கள் என பிரிக்கலாம். மாணவர்களின் இந்த பண்புகளுக்கேற்ப அவர்களின் பயில் நடையும் மாறுபடும். மொழியம்சங்களை எதிர் நிலையில் நிறுத்துதல், மொழி விதிகளை உணர்தல் என்ற செயல்களை, பகுத்துணரும் திறன் கொண்ட மாணவர்களும், பொதுமைப்படுத்துதல், ஊகித்தல், முழுமையாகப் பார்த்தல், பிறவழிகளில் கூறல் போன்ற செயல்களை, தொகுத்துணரும் திறன் கொண்ட மாணவர்களும், காட்சிப்படுத்தல், பட்டியலிடுதல், ஒருங்கிணைத்தல், எழுதுதல் போன்ற செயல்களை காட்சி வழியில் உணரும் திறன் கொண்ட மாணவர்களும், கேட்டு உணர்தல், ஒலி, ஒளி நாடாக்களில் பதித்தல், உரக்க வாசித்தல், பேசுதல் பொன்ற செயல்களை, கேட்டல் வழியில்

உணரும் திறன் கொண்ட மாணவர்களும் செய்து மொழியைப்பயிலும் நடையில் வேறுபாட்டை வெளிப்படுத்துவர்.

ஆசிரியர்

திட்டமிட்ட வகையில், மொழியைக் கற்கும் சூழலிலும், கற்பிக்கும் சூழலிலும், ஆசிரியர் மிக முக்கியமான இடத்தைப் பெறுவதுண்டு. பழய கற்பித்தல் முறைகளில், ஆசிரியரே மையமாக இருந்ததால், கற்பித்தல், பயிற்சியளித்தல், சோதித்தல் ஆகிய செயல்பாடுகள் ஆசிரியரைச் சார்ந்ததாகவும், தற்சார்புடையதாவும் இருந்தன. இன்று, மாணவரை மையப்படுத்திய கல்வி முறையினால், கற்பித்தல் தொடர்பான செயற்பாடுகளில், ஆசிரியரின் பங்கு குறைந்து வருவதையும், கற்பித்தல் சார்பான செயல்கள் பொதுச்சார்புடையதாகவும் மாறி வருவதைக் காணலாம்.

ஆசிரியர் செயல்

தாய் மொழியின் எழுத்துவடிவ மொழியையும், இரண்டாம் மொழியின் பேச்சு, எழுத்து வடிவங்களையும் கற்பிக்கும் ஆசிரியர்கள் பல வகைச் செயல்களில் ஈடுபடுகின்றனர். கல்விக்கூடங்களிலும், வகுப்பறைகளிலும் மொழியைக் கற்பிப்பதால், வகுப்பைச் சிறப்பாக நடத்துதல் என்பதோடு, மாணவர்களின் மொழி வளர்ச்சி, தேர்ச்சிப் பணிகளுக்கு அதிக முக்கியத்துவத்தை, ஆசிரியர் வழங்குகின்றனர். பழைய கற்பித்தல் சூழல்களில், பொதுவாக, மொழிக்கல்வியில் ஆசிரியர் மையப்பொருளாக இருந்த நிலை மாறி இன்று, மாணவர்கள் மையப் பொருளாக மாறும் நிலை ஏற்பட்டுள்ளது. பொதுவாக, மாணவரை ஊக்குவித்தல், கற்பித்தல், சோதித்தல், மாணவரின் பயில் இடற்பாடு காணல் ஆகியன ஆசிரியரின் முக்கிய செயல்களாகும்.

மாணவரை ஊக்குவித்தல்

பயில் ஊக்கம் அல்லது மொழியை திறம்பட, வேகமாக கற்கவேண்டும் என்ற முனைப்பு மாணவர்களிடம் இருக்கவேண்டும் பயில் ஊக்கத்தை சில மாணவர்கள் இயல்பாகவே பெற்றிருக்கக் கூடும். இதை அகவய ஊக்கம் எனலாம். மொழியைக் கற்பதனால் வரும் நன்மைகளை உணர்ந்து இயல்பாகவே சில மாணவர்கள் இதைப் பெற்றிருப்பர். சிலமாணவர்களிடம், பரிசுப்பொருள்களை வழங்கல் போன்ற புறவகைச் செயல்கள் வாயிலாக பயில் ஊக்கத்தை ஏற்படுத்த முடியும். இவ்வாறு, உருவாக்கப்படும் பயில் ஊக்கம் புறவய ஊக்கம் எனப்படும். மொழியைக் கற்பிக்கும் ஆசிரியரின் முக்கிய செயல் மாணவர்களின் மொழி பயிலும் ஈடுபாட்டை அதிகப்படுத்துதலாகும்.

மொழியை கற்பித்தல்

அடுத்து வரும் முக்கிய ஆசிரியர் செயல், மொழியை கற்பித்தலாகும். மாணவரிடம் மொழி உணர்வையும், மொழி அறிவையும், மொழி பயன்படுத்தும் திறனையும் வளர்க்கும் செயல் மொழிகற்பித்தல். இதில் பயில்வதற்கான பாடங்களை அல்லது பயில் கூறுகளை வழங்குதல், பின்னர் உரிய பயிற்சி கொடுத்தல், பின்னர் மொழிக்கூறுகளைப் பயன்படுத்த வைத்தல் ஆகிய செயல்கள் முக்கியமானவை. கற்பித்தலில் பல இடற்பாடுகள்

எழுந்தாலும், அவைகளை ஆசிரியர் நீக்கி, மொழியைக் கற்பிக்கும்போது, மாணவர்கள், தகுந்த தேர்ச்சியை அடைவர்.

பயில் பொருள் வழங்குதல்

மாணவரின் மொழி வளர்ச்சிக்கு ஏதுவான மொழிக்கூறுகளையும், அமைப்புக்களையும், அவைகளைப் படைக்கும் முறைகளையும் அறிமுகப்படுத்துவது பயில் பொருள் வழங்கலாகும். ஆசிரியரின் பெரும்பாலான நேரம், பயில் கருத்துக்களை வழங்குவதில் செலவிடப்படுகிறது. பயில் கருத்துக்கள் தொடர் முறையிலோ, சுழல் முறையிலோ வழங்கப்படுகின்றன. பயில்வதற்கான கருத்துக்களை வழங்கும்போது வரையறுத்தல், விளக்குதல், வகைப்படுத்துதல், காட்சிப் படுத்துதல் போன்ற செயல்களை ஆசிரியர் பின்பற்றுவார். பயில்கருத்து வழங்குவதற்கு பாட நூல்களும், பயிற்று இலக்கணங்களும் உதவுகின்றன..

பயில்கருத்து வழங்கல் குறித்த பல சிந்தனைகள் உருவாகியுள்ளன. அச்சிந்தனைகளில் கற்பித்தல் அணுகுமுறை, வழிமுறை, செயல்முறை ஆகியவை முக்கியமானவை.

கற்பித்தல் அணுகுமுறை

மொழியையும் மொழி பயில்தலையும் குறித்த கருதுகோள்கள் அணுகுமுறைகளாகின்றன. அணுகு முறைகளில் அறிவியல், கோட்பாட்டியல், கலையியல் என 3 அணுகுமுறைகள் உள்ளன. அணுகுமுறைகள் மொழியையும் மொழி கற்பித்தலையும் உற்று நோக்குகின்ற விதத்தைச் சார்ந்தவை என்பதால், கற்பிக்கும் வழிமுறைகளை வகுக்க அவை உதவுகின்றன. அறிவியல் அணுகுமுறை மொழி கற்றல் சார்ந்த சோதனைகளின் வாயிலாக நிலை நாட்டப்படுகிறது. மொழிகற்றல் தொடர்பான சோதனைகளில் கிடைத்த முடிவுகளை மொழி கற்பிக்கும் வழிமுறைகளில் பயன்படுத்த அது உதவுகிறது. இந்த அணுகுமுறையில் 3 வகைகள் உள்ளன. மொழி கற்பதைக் குறித்த சிந்தனை அல்லது கோட்பாடுகளின் வாயிலாக கோட்பாட்டியல் அணுகுமுறை நிலை நாட்டப்படுகிறது. சிறந்த ஆசிரியர்கள் கைக்கொள்ளும் உத்திகளை உற்று நோக்குவதன் மூலம் கலையியல் அணுகுமுறை நிலை நாட்டப்படுகிறது.

கற்பித்தல் வழிமுறைகள்

மொழியைக் கற்பிக்கத் தேவையான வழிகளைப் பின்பற்றுவதை கற்பித்தல் வழிமுறை எனலாம். இதை, மொழி கற்பிப்பதற்கான திட்ட வரைவை நிறைவேற்றும் செயல் எனலாம். பொதுவாக, இதையே, கற்பிக்கும் முறை எனக்கருதுகின்றனர். பண்டைக்காலந்தொட்டே சிறந்த கற்பித்தல் முறைகளைத் தேடி ஆசிரியர்களும் கல்வியியலாரும் அலைந்தனர். இதனால் பலவகையான கற்பித்தல் வழிமுறைகள் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டன.

நேரடிப் பயிற்றல் முறை, இலக்கணப் பயிற்றல் முறை, கேட்டுப்பேசும் பயிற்றல் முறை, கருத்துப் பரிமாற்ற பயிற்றல் முறை எனப் பல கற்பித்தல் முறைகள் மொழியைக் கற்பிக்க பயன்படுத்தப் படுகின்றன.

மொழி வழங்கும் இயல்பான சூழலில் வாழ்ந்துகொண்டு, ஆசிரியர், பயில் கூறுகள் ஆகியனவற்றின் உதவியில்லாமல் பேச்சு மொழியைக் கற்கவும், பேசுதல், கேட்டல் என்ற திறன்களை வளர்க்கவும் பயில் மொழி கலாச்சாரத்தோடு மாணவர்கள் ஒன்றவும் பயன்படுத்துகின்ற கற்பித்தல் முறை **நேரடி பயிற்று முறை** ஆகும். இதற்கு எதிராக பிற, முதல் மொழிச்சூழல்களில் குறிப்பாக, வகுப்பறையில், ஆசிரியர், பயில் பொருள், பயிற்றுக்கருவி ஆகியனவற்றின் உதவியோடு மொழியைக் கற்பிக்கும் முறையை மறைமுக கற்பித்தல் முறை எனலாம்.

திட்டமிட்டு, பயிற்சி வழியில், எழுத்துமொழியையும், எழுத்து மொழியின் இலக்கணக் கூறுகளையும், விதிகளையும், பொதுவாக, இலக்கண அறிவையும், வாசித்தல், எழுதுதல் என்ற திறன்களையும் வளர்க்கவும், மொழியில் எழுதப்பட்ட இலக்கியங்களைப் படிக்கவும், மொழி பெயர்க்கவும், திறனாய்வு செய்யவும், அவைகளுக்கு உரை எழுதவும், மொழிக்கான புதிய இலக்கணங்களைப் படைக்கவும் பொது மொழிக் கோட்பாடுகளை உருவாக்கவும் தேவையான இலக்கணத்தைக் கற்பிக்கும் முறையை **இலக்கணக் கற்பித்தல் முறை** எனலாம். இது, பண்டை இலக்கண மரபைப் பின்பற்றி, பயிற்சிகளை வகுத்து, மொழியைக் கற்பிக்கும் முறையாகும். இதில் விதி தரும் முறை (INDUCTIVE), விதி உணரும் முறை (DEDUCTIVE) என இரு வகைகளில் இலக்கணம் கற்பிக்கப்படுகிறது. மொழிக்கூறுகளை இலக்கணப் பிழையின்றி எழுதுவது இலக்கண கற்பித்தல் முறையில், முக்கியமாக கருதப்படுவதால், இம்முறை, இலக்கணச் செம்மைத்தன்மைக்கு முன்னுரிமை வழங்குகிறது.

திட்டமிட்டவாறும், பயிற்சி வழியிலும், பயில் உதவிக் கருவிகளான ரேடியோ, டேப் ரிக்கார்டர் போன்ற வற்றின் உதவியோடு, பேச்சு மொழியின் ஒலி, சொல், இலக்கண அமைப்பைக் குறித்த அறிவைப் பெறவும், கேட்கும், பேசும் திறனைப் பெறவும் பயன்படுத்தப்படும் ஒரு கற்பித்தல் முறையே **கேட்டுப் பேசல் முறையாகும்**. இது செய்கை விளக்கத்தைத் தழுவியும், அமைப்பியல் அணுகுமுறையைத் தழுவியும், அமைப்புப் பயிற்சியைக் கைக்கொண்டும் உருவாக்கப்பட்ட மொழி கற்பித்தல் முறையாகும். குறுகிய காலத்தில் மொழியைக் கற்று, பிற நாடுகளுக்குச் சென்று, பணி மேற்கொள்வதற்குத் தேவையான மொழியறிவையும் பேசும் திறனையும், போர் வீரர்களிடம் வளர்ப்பதற்காக உருவாக்கப்பட்ட கற்பித்தல் முறை இது.

திட்டமிட்ட வகையில், பயிற்சி வழியில், மொழியைப் பயன்படுத்துவதற்கான கருத்துப் பரிமாற்ற மொழி அமைப்புகள், கருத்துக்கள், சூழல் சார்ந்த, பேச்சு வடிவ, எழுத்து வடிவப் பரிமாற்ற செயல்கள் ஆகியவற்றைக் குறித்த அறிவைப் பெறவும், பரிமாற்ற செயல்களில் பயிற்சிபெறவும் ஈடுபடவும் உகந்த வகையில் மொழியைக் கற்பிக்கும் முறையை **கருத்துப்பரிமாற்ற கற்பித்தல் முறை** எனலாம். இந்த கற்பித்தல் முறையில் மொழிக்கூறுகளின் இலக்கணச் செம்மைத்தன்மைக்கு முக்கியத்துவம் வழங்கப்படாமல் மொழிக்கூறுகளின் சூழல் பொருத்தமுடைமையை கட்டிக் காப்பதற்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

இவை தவிர, பல விதமான பயிற்று முறைகள், மாணவரின் ஒருங்கிணைந்த மன வளர்ச்சியையும், மொழி வளர்ச்சியையும் மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டன. அவைகளைக் குறித்த கருத்துக்கள் பின்வருமாறு:

1. தீவிரமாக கேட்டல்- பேசலை கற்பிக்க ரசையா வெளியிட்ட (1983), **டார்ட் மௌத் தீவிர முறை**,;
2. புரிதலை மேம்படுததும் வகையில் மொழியைக் கற்பிக்க பெஸ்தெளஸ்கி வெளியிட்ட (1981) **புரிதல் முறை**;
3. மணவர்கள் மொழியைத் தன்வயப்படுத்தும் வகையில், கற்றல், வரிசையாக கற்றல், இலக்கண அறிவைத் தவறு கணிக்க பயன்படுத்தி கற்றலை மேற்பார்வையிடல், எளிமையான உள்ளீடு பெறல், எதிர் மனப்பாங்கு ஒழித்தல் ஆகிய செயல்களை மாணவரிடம் ஊக்குவிக்கும் வகையில் கிராசன் 1982 வெளியிட்ட **மேற்பார்வை வழி கற்பித்தல்முறை**;
4. பணிப்பு செயல் வழியில் மொழிக்கூறுகளை பயன்படுத்தும் வகையில் மொழியைக் கற்பிக்க ஆஷர் வெளியிட்ட (19840) **உடல் துலங்கல் முறை**,
5. எதிர் மனப்பாங்கைத் தவிர்த்து கருத்தைப் புரியவும் பரிமாறவும் வகை செய்யும் வழியில் டெர்ரல் வழங்கிய **இயற்கை பயிற்று முறை**,;
6. ஆசிரியர், பேசாமல், சில கருவிகளைக்கொண்டு பணித்தல் முறையில் மொழியைக் கற்பிக்க கட்டெங்கோ (1983) வெளியிட்ட **நிசப்த முறை**,
7. குடியேறும் நிலையில் சமுதாயத்தோடு இணைய வேண்டும் என்ற மன உணர்வோடு மொழியைக் கற்க வழிவகுக்கும் வகையில் ஷூமேன் (1978) வெளியிட்ட **பண்பாட்டு பயிற்றுமுறை**,
8. கருத்துப்பரிமாற்ற செயல்களை மையமாக்கி மொழியை பரிமாற்றத்திற்கு உதவும் வகையில் வில்கின்ச் வெளியிட்ட **செயற்பாட்டு கற்பித்தல் முறை**,
9. கருத்துப்பரிமாற்ற அறிவையும் செயலையும் மையப்படுத்திய கற்பித்தலுக்கு வழிவகுக்கும் வகையில் ஜானசன் & மர்ரோ வெளியிட்ட **பரிமாற்ற கற்பித்தல் முறை** ஆகிய பல கற்பித்தல் முறைகள் உள்ளன.

பயில்கூறுகளைக் கற்பிப்பதற்கென அணுகுமுறைகளும், வழிமுறைகளும் இருப்பதைப் போன்று சில செயல் முறைகளும் பயன்படுத்தப்படுகின்றன. மொழியைக் கற்பிக்க, ஆசிரியரும் பிறரும் கடைபிடிக்கும் உத்திகளை, கற்பித்தல் வழிமுறைகள் எனலாம். இவை, அறிவு, உணர்வு, சமுதாயம் சார்ந்தவை என மூவகைப்படுகின்றன. மொழி அறிவை வளர்க்க உதவுவதோடு, மொழியைக் கற்பிக்கவும், கற்பித்ததை மாணவர் மனதில் நிலை நிறுத்தவும், கற்றதை மாணவர் நினைவில் தர வைக்கவும் அறிவுசார்ந்த உத்திகள் உதவுகின்றன. மாணவரின் உணர்வைத்தூண்டவும், மாணவரை ஊக்கப்படுத்தவும் ஈடுபடுத்தவும் உணர்வு சார்ந்த உத்திகள், உதவுகின்றன.

மொழி துலங்கும் சமுதாயத்தில் கடைபிடிக்கப்படும் பண்பாட்டு நியதிகளை, பயில்வோரிடம் வழங்க சமுதாய உத்திகள் உதவுகின்றன. மதிப்பு வழங்குதல், பேச்சு செயல் நிகழ்த்தல்

ஆகியவற்றைச் சார்ந்த நியதிகள் சமுதாயத்திற்கு சமுதாயம் மாறுபடும். இந்த நியதிகளைக் கற்பித்தல், பயில்மொழி சமுதாயத்தோடு மாணவர்கள் ஒன்றிவிட வழிவகுக்கும்.

கற்பித்தல்

மொழி கற்பித்தலில் மொழி உணர்வை ஏற்படுத்தலும், மொழியறிவை வளர்த்தலும், மொழித்திறன்களை வளர்த்தலும் அடங்குகின்றன. மொழியறிவை வளர்த்தல் என்பதில் மொழிக் கூறுகளான ஒலி, எழுத்து, சொல், தொடர், உரை, இலக்கணம், பொருள் ஆகியன வற்றைக் குறித்த விளக்கத்தையும் பயிற்சியையும் கொடுப்பதன் மூலம் மொழியறிவு வளர்க்கப்படுகிறது. கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல், கருத்தைப்பரிமாறுதல் ஆகிய செயல்களைச் சார்ந்த பயிற்சி வழங்குவதன் மூலமும், அச்செயல்களில் ஈடுபடுத்துவதன்மூலமும் மொழித்திறன்கள் வளர்க்கப்படுகின்றன. மொழிக்கூறுகளைக் கற்பிக்கையில் எதைக் கற்பிப்பது, எப்படிக் கற்பிப்பது, எனக் கேள்வி எழுப்பி கற்பிக்கவேண்டும்.

எதைக்கற்பிப்பது என்பதைக் காண மொழிக் கூறுகளின் சிறப்பியல்புகளைக் காண வேண்டும். எடுத்துக்காட்டாக, சொல்லைக் கற்பிக்கும்போது, அதன் வடிவங்களையும் ஒலி வடிவம், எழுத்து வடிவம், உருபன் வடிவம் (திரிபு வடிவம், ஆக்க வடிவம், தொகை வடிவம்), இலக்கண வடிவம் (பெயர், வினை,), பொருள், பயன்பாடு, வழக்கு(வட்டாரம், சமுதாயம், துறை) ஆகியவற்றைக் கற்பிக்கவேண்டும். எப்படிக் கற்பிப்பது என்பதில் தடைகளைக்காணுதல், உணர்வெழுப்புதல், வேறுபாடு காணல், விளக்குதல், பயன்படுத்த வைத்தல், பயிற்சி அளித்தல், உத்தி உணர்த்தல், பிழை திருத்தல்,ஆகிய வழிகளைப் பயன்படுத்தி கற்பிக்கவேண்டும். எடுத்துக்காட்டாக, சொற்களைக் கற்பிக்கும்போது, தானாக கற்கும்படியோ, திட்டமிட்ட வகையிலோ, தனியாகவோ, அமைப்புச் சூழலில் நிறுத்தியோ(சொல்லிணைவுகளைக் காட்டி) கற்பிக்கலாம். சூழல் நோக்கி பொருள் உணர்தல், மொழி பெயர்த்தல், வேறுபடுத்தி உணர்தல், போன்ற பயிற்சிகளை அளித்து கற்பிக்கலாம்.

பயிற்சியளித்தல்

கற்கக் கொடுத்தவைகளை மனதில் நிறுத்தும் வண்ணம், பழக்கப்படுத்தும் வகையில், திரும்பத்திரும்ப பயன்படுத்த வைக்கும் முயற்சியே பயிற்சியளித்தலாகும். இதில் அறிவு, திறன் சார்ந்த பயிற்சிகள் முக்கியமானவை.. இனங்காணல், புரிதல், படைத்தல் அல்லது உருவாக்குதல் சார்ந்த பொதுவான பயிற்சிகள் முக்கியமானவை. மொழியைக்குறித்த உணர்வையும் அறிவையும் திறனையும் எழுப்ப உதவுவதோடு குறுகிய, நீண்ட கால நினைவில் கற்றவற்றை நிறுத்த, பயிற்சியளித்தல் உதவுகிறது. இனங்காணல், நிரப்புதல், பொருத்தல், மாற்றல், தேர்வு செய்தல், விடைதருதல், ஒற்றுமை-வேற்றுமை காணல் போன்ற பலவகையான பயிற்சிகள் மாணவருக்கு வழங்கப்படுகின்றன. இதில் மொழிக்கூறு சார்ந்தவை (ஒலி, எழுத்து, சொல், தொடர், கட்டுரை, இலக்கணம், அமைப்பு, பொருள் சார்ந்த பயிற்சிகள்), ஊடகம் சார்ந்தவை (பேசுதல் எழுதுதல், கேட்டல், வாசித்தல், வாய்மொழி, எழுத்துமொழி, கணினி வழி பயிற்சிகள்) துலங்கல் சார்ந்தவை (கட்டுப்படுத்தப்பட்ட, கட்டுப்படுத்தப்படாத, திறந்த, மூடிய பயிற்சிகள்), கூறு சார்ந்தவை

(பொருத்துதல், பிரச்சினை தீர்த்தல், வெளிப்படை, குறிப்பு பயிற்சிகள்), இலக்கு சார்ந்தவை (அறிவு, உணர்வு, செயற்பாடு சார்ந்த பயிற்சிகள்) ஆகியன அடங்கும்

சில எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:

பயிற்சி	**கொடுக்கும் கூறுகள்**
உயிரொலி இனங்காணல்	நூல், தையல் பாட்டு விடை
ஒலியை மாற்றுதல்	மண் குடம்
சரியான ஒலி இருக்கும் கூறைத் தேர்வு செய்	கன்டான், கண்டான்

பயில் இடையூறு காணல்

மொழியைக் கற்பிக்கின்ற நிலையிலும், கற்கின்ற நிலையிலும், பல இடற்பாடுகளை மாணவர்கள் எதிர்கொள்கின்றனர். மொழியைக் கற்கும்போது, மொழி அறிவு, மொழிபயில் முறை, பயில் அமைப்புகள், வரிசைப்பாட்டில் பயில்தல், பயில்வேகம், பயில் வெற்றி ஆகியன முக்கியமானவை. இவைகளை அடைவதில் மாணவர்கள், பல இடற்பாடுகளுக்கு உள்ளாகின்றனர். குறிப்பாக, தாய் மொழியின் தாக்கத்தாலும், தாய் மொழியைக் கற்கும்போது பெற்ற அனுபவத்தைப் பயில் மொழியைக் கற்கும்போது மாணவர்கள் பயன்படுத்துவதாலும், பயில் மொழியின் கடினத்தன்மையினாலும், தாய் மொழிக்கும் பயில் மொழிக்கும் இடையிலான வேறுபாட்டினாலும், பயில்தலில் ஏற்படும் குறைபாட்டினாலும், பயிலும் நிலையில் பெறுகின்ற பயில் கூறுகளின் அளவின் குறைபாட்டினாலும், மனப்பாங்கு, ஈடுபாடின்மை போன்ற பல காரணங்களாலும் பயில் இடையூறுகள் எழுகின்றன. இவைகளைக் குறித்த உணர்வு ஆசிரியருக்கு வேண்டும் எனக்கருதி, பல ஆய்வுகள் நிகழ்ந்ததன் விளைவாக, மொழி உறழ்வு ஆய்வு, (CONTRASTIVE ANALYSIS) மாணவர் பிழை ஆய்வு (ERROR ANALYSIS), மாணவர் உரையாய்வு (DISCOURSE ANALYSIS), மாணவர் தேர்ச்சி ஆய்வு (PROFICIENCY ANALYSIS) என பல ஆய்வுகள் எழுந்தன. இவைகளில் மாணவரின் தாய்மொழியையும் பயில்மொழியையும் ஒப்பிடுவதை **உறழ்வாய்வும்**, மாணவர் படைக்கும் தவறான மொழியை சாதாரண மொழியோடு ஒப்பிடுவதை **பிழை ஆய்வும்**, பயில்வோர் பல நிலைகளில் படைக்கும் உரைகளை ஒப்பிடுவதை **உரை ஆய்வும்**, மாணவரின் முதல் நிலை மொழியறிவையும் பயிற்றுவித்தலுக்குப் பின் மாணவர் பெற்ற மொழியறிவையும் ஒப்பிடுவதை **தேர்ச்சி ஆய்வும்** குறிக்கோளாகக் கொண்டு அமைகின்றன. இந்த நான்கு வகை ஆய்வுகளைத் தவிர மாணவர்களின் பயில் இடை மொழியைக் (INTER LANGUAGE) குறித்த ஆய்வுகளும் எழுந்தன.

தாய்மொழி சார்ந்த இடற்பாடு காணல்

தாய்மொழி பயில்மொழி இரண்டுக்கும் இடையிலான வேறுபாடுகள், பயிதலுக்கு இடையூறாக அமையும் என உறழ்வு ஆய்வு விளக்கியது. இரு மொழிக்கூறுகளையும் அமைப்புகளையும் இலக்கணங்களையும் ஒப்பிடும்போது **கூறு இணைவு** (ஆங்கிலம். WATCH, CLOCK → ஜெர்மன். UHR), **கூறு விரிவு** (ஆங்க். YOU → ஜெர். DU, SIE, IHR), **கூறு இடைவெளி** ஆகியன இருப்பதைக்காணமுடியும். இரு மொழிகளும் வேறுபட்டால் வரும் இடையூறு **நேர்முக இடையூறு** எனவும், ஒரு மொழியில் இருக்கும் கூறு மற்றொரு மொழியில் இல்லாதிருந்தால் வரும் இடையிட்டை **மறைமுக இடையீடு** எனவும், உறழ்வு ஆய்வு விளக்குகிறது. மொழி வேறுபாட்டால் பயில் மாற்றங்கள் எழுகின்றன எனவும், பயில்தலுக்கு தாய் மொழி உதவும் வகையில் இருந்தால் அதை **சாதக மாற்றம்** எனவும், தாய் மொழி உதவா வகையில் இருந்தல் அதை **பாதக மாற்றம்** எனவும் எந்த விதமான சாதக பாதக மாற்றத்தையும் தாய்மொழி தரவில்லை என்றால் அதை **பாழ் மாற்றம்** எனவும் உறழ்வு ஆய்வு விளக்குகிறது.

பயன்படுத்தல் சார்ந்த இடற்பாடு காணல்

மொழியைச் சில வகைகளில் பயன்படுத்துவதன் மூலமும் பயில்தலில் இடற்பாடுகள் ஏற்படலாம். இத்தகைய இடையூறுகளைக்காணும் வண்ணம் உருவான மற்றொருவகை ஆய்வு, பிழை ஆய்வாகும். தாய்மொழியின் குறிக்கீட்டால் பிழை ஏற்படுகிறது என்ற கருத்தைப் புறக்கணித்து, மாணவர்கள், பொதுவான பயில் உத்திகளைக் கடைப்பிடிப்பதால்தான் பிழைகள் உருவாகின்றன என பிழை ஆய்வு வலியுறுத்துகிறது. பயில்வோர் வெளியிடுகின்ற செம்மையற்ற மொழிக்கூறுகளையும் மொழியையும் செம்மையான மொழியோடு ஒப்புமைப்படுத்தி, மாணவரின் பிழைகளைக் கண்டுபிடித்து, விளக்க பிழை ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. மாணவரின் பயில் உத்திகளையும், பயில் இடற்பாட்டையும், குறிப்பாக, மாணவரின் பிழைகளையும் காண பிழை ஆய்வு உதவுகிறது.

மாணவரின் மொழியறிவின் குறைபாட்டாலும், மொழிபயன்படுத்தும் திறன்களின் குறைபாட்டாலும் பிழைகள் உருவாகின்றன. தாய்மொழித் தாக்கத்தாலும், ஒப்புமையாக்கத்தாலும், தவறாக விதியைப் பயன்படுத்துவதாலும், மொழி பயில் நிலையில் உருவாகும் வளர் மொழியின் இடையீட்டினாலும் பிழைகள் உருவாகின்றன. பிழையும் தவறும் வேறுபட்டவை. தவறைச் செய்பவர்கள், அதைத் தானாக திருத்திக்கொள்வர். ஆனால் பிழையைச் செய்தவர்கள், அவ்வாறு தானாக திருத்த இயலாது. காரணம், பிழைகளைக் குறித்த உணர்வு அவர்களிடம் முதலில் இருப்பதில்லை.

பிழைகளில் பல வகைகள் உள்ளன. கருத்துப் பரிமாற்றத்திற்கு தடையாக அமையும் பிழைகளைப் பெரும் பிழைகள் எனவும், தடையாக அமையாத பிழைகளை சிறு பிழைகள் எனவும் கருதலாம். மொழிக் கூறுகளை (ஒலிகள், எழுத்துக்கள், சொற்கள், தொடர்கள், இலக்கணக்கூறுகள் போன்றவை) நீக்குதல் (* மரமை), புதிதாக சேர்த்தல் (புலியார்), தவறாக தேர்வு செய்தல் (கொட மாட்டார்), வரிசைப்படுத்தல் (படிக்க எதையும் தெரியாது), பெயர்த்தல் போன்ற செயல்களால் பிழைகள் ஏற்படுகின்றன. மொழி இடைப் பெயற்சியும், மொழியகப் பெயற்சியும், பிழை. உருவாகக் காரணமாகின்றன. இவைகளை உணர்ந்து,

மாணவர்களின் பல விதமான பிழைகளைத் திருத்திக்கொள்ளும் வழிமுறைகளை ஆசிரியர் வழங்க வேண்டும். பிழைகளை உணர்ந்து, பிழையான கூறுகளுக்கு இணையான சரியான கூறுகளைக் கொடுத்து, அவைகளை ஒப்புமைப்படுத்தி விளக்கி மாணவர் பிழைகளைத் திருத்த ஆசிரியர் முற்படவேண்டும்.

சோதித்தல்

மொழியைக் கற்பித்த பின்னர், ஆசிரியர் நடத்துகின்ற முக்கியமான வகுப்பறைச் செயல், மாணவர்களை சோதிப்பதாகும். மாணவரின் தேர்ச்சியையும், பயில் திட்டத்தையும், பாடத்திட்டத்தையும், பாட நூலையும், பயிற்றுமுறையையும் மதிப்பிடுவதற்காகவும், அவைகளின் குறை நிறைகளைக் காண்பதற்காகவும், அவைகளை மேம்படுத்துவதற்காகவும், மாற்றியமைப்பதற்காகவும் சோதித்தல் கடைபிடிக்கப்படுகிறது. பொதுவாக மாணவரையும், பயில் திட்டத்தையும் மதிப்பிட சோதித்தல் உதவுகிறது. மாணவரின் அறிவையும் திறனையும் கணிப்பதற்காகவும், தேர்ச்சியை அளவிடுவதற்ககாகவும் சோதிப்புச் செயல் நிகழ்த்தப்படுகிறது. மணவரைத் தரம் பிரிக்க, மாணவரின் தகுதி காண, தேர்ச்சி காண, சாதனை காண எனப் பல இலக்குகளை முன்னிறுத்தி சோதித்தல் நிகழ்த்தப்படுகிறது.

வினவுதல், விடை பெறுதல், விடை திருத்தல், மதிப்பிடல் என்ற செயல்கள் சோதிப்பில் அடங்குகின்றன. ஆசிரியர் வினாக்களும் மாணவர் விடைகளும் சோதிப்பில் முக்கியமானவை. வினாக்களை உருவாக்கும்போது அவைகளைத் தரப்படுத்தி, அவகளின் நம்பகத்தன்மை, தகுதித்தன்மை ஆகியனவற்றை நிலை நாட்ட பல வழிகள் உள்ளன. வினாக்களும் விடைகளும் அவைகளுக்கே உரிய வடிவத்தைப் பெற்றவை. செய்கை உளவியல் விளக்கத்தின்படி, வினாக்கள் தூண்டலாகவும், விடைகள் துலங்கலாகவும் கருதப்படுகின்றன. சோதிப்பு முறைகளில் பல வகைகள் உள்ளன. வாய்மொழியை சோதித்தல், எழுத்து மொழியை சோதித்தல் என மொழியடிப்படையிலும், கேட்டலையும், பேசுதலையும், வாசித்தலையும், எழுதுதலையும், கருத்துப்பரிமாற்றத்தையும் சோதித்தல் என திறன் அடிப்படையிலும் சோதித்தல் வகைப்படுத்தப்படும். விடை தரும் வகையில், நிரப்பல், பொருத்துதல், தேர்வு செய்தல், குறு விடை தருதல், பெரும் விடை தருதல், மாற்றுதல், பெயர்த்தல், திருத்துதல் எனப் பல வகையாக சோதித்தல் முறை வகைப்படுத்தப்படும்.

விடைகளைத்திருத்தி மதிப்பிடும்போது, கருத்து, முறை, செய்தி, முயற்சி, பொருத்தம், வடிவம், வேகம் ஆகியவைகளைக் கருத்திற்கொண்டு, விடைகள் மதிப்பிடப்படும். ஒரே மதிப்பிடுபவரின் பல நிலை மதிப்பீடுகளும், பல மதிப்பிடுபவர்களின் மதிப்பீட்டு ஒற்றுமையும் மதிப்பிடுவதற்காக பயன்படுத்தப்படும்.

முடிவுரை

மொழியைக் கற்றலும் கற்பித்தலும் காலங்காலமாக நடந்துவரும் செயல்கள். இதில் மாணவரும் மாணவரின் பயில்தல் செயலும், ஆசிரியரும், ஆசிரியரின் பயிற்றல் செயலும் முக்கியமானவை. இவைகளைக் குறித்த பல ஆய்வுகள், அணுகுமுறைகள், வழிமுறைகள், செயல்முறைகள் ஆராய்ச்சியின் வாயிலாக வெளிவந்துள்ளன. மாணவர் செயல்களாக, உள்ளீடு பெறுதல், மொழியின் இயல்பைக் கணித்தல், மொழி பயன்படுத்தல் ஆகியன

விளக்கப்படுகின்றன. ஆசிரியர் செயல்களாக, ஊக்குவித்தல், கற்பித்தல், சோதித்தல் ஆகியன விளக்கப்படுகின்றன. எத்தகைய விளக்கங்கள் வந்தாலும், மிகக் குறுகிய காலத்தில் குழந்தைகள் மொழி பயில்வதைப் பார்க்கும் போது, மொழி பயில்தல் நிகழும் விதம், இன்றும் புதிராகவே உள்ளது. ஆகவே, பலவகையான ஆய்வுகளுக்கு இன்னும் வழி உள்ளது.

பயிற்று உத்தி கையாளல்

பயிற்சியளித்தல்

பயன்படுத்த வைத்தல்

ஒலி கற்பித்தல்

எழுத்தைக் கற்பித்தல்

சொல் கற்பித்தல்

இலக்கணம் கற்பித்தல்

கேட்கும் திறன் வளர்த்தல்

பேசும் திறன் வளர்த்தல்

வாசிக்கும் திறன் வளர்த்தல்

எழுதும் திறன் வளர்த்தல்

கருத்துப்பரிமாற்ற முறையை கற்பித்தல்

கருத்துப் பரிமாற்றத்தில் ஈடுபட வைத்தல்

இடற்பாடுகாணல்

சோதித்தல்

வினவுதல்

விடை பெறுதல்

திருத்துதல்

கருத்தாடல் திறன் வளர்த்தலும் தமிழ்மொழிப் பயன்பாடும்

முனைவர் கி. கருணாகரன்
மொழி மொழியியல் புலம், மலாயாப் பல்கலைக்கழகம்
கோலாலம்பூர் (மலேசியா)

முன்னுரை

மொழி ஓர் அடையாளச் சின்னம். அதனைத் தாய்மொழியாகக் கொண்ட சமுதாயத்தின் – இனத்தின் உணர்வோடும் உள்ளத்தோடும் கலந்தது, பண்பாட்டை வெளிப்படுத்துவது, கருத்துப் பரிமாற்றத்திற்கு – கருத்தாடலுக்கு மிகவும் இன்றியமையாதது. அதோடு, சிந்தனையைத் தூண்டுவது- படைப்பாற்றல் மிக்கது.

மொழி என்பது ஒரு சமுதாயப் பொருள் (Social substance) என்று விளக்கப்படுகிறது (Trudgill, 1972). இதற்கென. சமுதாயம் ஒரு வடிவத்தையும் பயன்பாட்டையும் வழங்கியுள்ளது. மொழிகளுள் எத்தனையோ வகைகள்- அமைப்புகள் உள்ளன. இவற்றுள் ஒற்றுமை கொண்ட மொழிகள் சில- வேறுபாடுகள் காட்டும் மொழிகள் சில; மேலும் சில மொழிகள் செம்மொழிகள், சில மொழிகள் மிகப் பழமையானவை; இன்னும் சில வரலாறு பெற்றவை- வரலாறு படைத்தவை. என்றாலும் பலவேறு அறிவியல் மற்றும் அறிவுத்துறைசார் கருத்துகளை முறையாகவும் நிறைவாகவும் எடுத்துச் சொல்வதற்கு ஏற்ப – சொல்லப்பட்டவற்றைச் சரியாகப் புரிந்துகொள்வதற்கு ஏற்ப இம்மொழிகளிலும் தேவைக்கு ஏற்ப – பயன்பாட்டிற்கு ஏற்ப ஆக்கப்பணிகள் (productive- constructive- needed activities) மேற்கொள்ளப்பட வேண்டிய சூழல் உருவாகி வருவதோடு, அது போன்ற நடவடிக்கைகளும் செயற்பாடும் கட்டாயமானவையாக இன்று அமைந்து வருகின்றன. இதற்குப் பயனாக்க மொழியியலின் (applied linguistics) சில அணுகுமுறைகள் துணைசெய்யும்; இக்காலத் தொழில்நுட்ப அணுகுமுறைகளும் உத்திகளும் துணை நிற்கும் என நம்பப்படுகிறது.

கருத்துப் பரிமாற்றம்- கருத்தாடல்

மனிதக் குலம் தோன்றிய காலத்திலிருந்தே கருத்தாடல் – கருத்துப் பரிமாற்றம் தொடங்கியிருக்கும். ஒலியாக-பொருண்மை கொண்ட கூறுகளான சொல்லாக, சொல்லமைப்பாக, தொடராக, உரையாடலாக (பேச்சுமொழி வடிவமாக) வடிவமைக்கப்பட்டிருக்கும். அதுவும் சைகைமொழி – உடல்மொழி இவற்றோடு இணைந்தும் வெளிப்பட்டிருக்கும். காண்போர்- கேட்போர் புரிந்துகொள்ளும் வண்ணம் சிறுகச் சிறுக வடிவம் பெற்றிருக்கும் – வெளிப்பட்டிருக்கும். அவ்வாறு வடிவம் கண்ட அமைப்புகள் பின்னர் எழுத்து வடிவில் அமையத் தொடங்கியிருக்கும். மண்ணில் – ஓலையில் – கல்லில் –

செப்பேடுகளில் வடிவமைக்கப்பட்ட மொழி காலப் போக்கில் நிலைபேற்றுத் தன்மை (Standardization) பெற்றதாக அமைப்பியல் விதிகளுக்கு உட்பட்டதாக நிலைநிறுத்தப்பட்டிருக்கும். வடிவமைப்பு – ஏற்பு – மறுப்பு – சீர்திருத்தம் – நிலைபேற்றுத்தன்மை வழங்கல் என்ற நிலையில் பொது ஏற்பினைப் பெற்று, ஓரளவுக்காவது முறைசார் களங்களில் (Formal Domains) பயன்படுத்தப்பட்டிருக்கும். காலம் செல்லச் செல்ல மொழி வழக்குகள்- மொழிக்கூறுகள் போன்றவை முறைசார் களங்களிலும் முறைசாராக் களங்களிலும் (Informal Domains) மெல்ல மெல்ல ஈடுபடுத்தப்பட்டிருக்கும்.

இவ்வகை வழக்குகள் காலப்போக்கில் சிறுகச் சிறுகப் பயன்பாட்டில் நிலைபேறு பெற்றிருக்கும். அதுமட்டுமல்லாமல் மனித இனம் தத்தம் மொழியைத் தங்களுக்குள்ளும் பிற இன – குழுக்களோடும் கலந்து பேச உரையாடத் தொடங்கியிருக்கும். இவ்வாறு மொழி அன்றாடப் பயன்பாட்டிலும் குழுவின் தனிப் பயன்பாட்டிற்கும் குழுக்களுக்குள்ளான தொடர்பிற்கும் (Inter and Intra Group Interaction) பயன்படுத்தப்பட்டிருக்கும். இப்படி மொழியின் பயம்பாடு ஒருபுறமும் கருத்துப் பரிமாற்றம் – கருத்தாடல் அமைப்புமுறை இன்னொரு புறமும் என்றில்லாமல் இரண்டும் ஒருங்கிணையத் தொடங்கியிருக்கும்.

இவ்வாய்வுரையின் நோக்கங்கள்

நோக்கங்கள் பின்வருமாறு அமைகின்றன:

1. கருத்தாடல் – கருத்துப் பரிமாற்றம் எனும் செயற்பாடு இன்றைய நிலையில் எவ்வாறு அமைந்து வருகிறது என்பதை விளக்குதல்
2. கருத்துப் பரிமாற்ற – கருத்தாடல் திறன் வளர்த்தலில் குறிப்பாக மொழி கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் ஆற்றல் மிக்க வகையிலும் நிறைவாகவும் அமைய இன்றைய நிலையில் " கருத்தாடல் அணுகுமுறையின்" (CALT) பங்கும் பணியும் அமைந்து வருவதைத் தமிழ் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் அடிப்படையில் விளக்குதல்
3. மேற்குறிப்பிட்ட பங்கு-பணி ஆற்றல் மிக்க வகையிலும் பயனுடையதாகவும் அமைய விளக்க மொழியியல்-சமுதாய மொழியியல்- பயனாக்க மொழியியல் மற்றும் பிற துறைசார் கொள்கைகள் – நெறிமுறைகள் போன்றவை எவ்வாறெல்லாம் துணைபுரிகின்றன என்பதை எடுத்துக் காட்டுதல்

பயன்படுத்தப்பட்டுள்ள ஆய்வு விளக்கக் கோட்பாடுகள்

(i) கருத்தாடல் கொள்கைகள்
(ii) மொழியமைப்பு – மொழிப்பயன்பாடு குறித்த கோட்பாடுகள் – கொள்கைகள் உத்திகள்
(iii) கற்றல்-கற்பித்தல் கோட்பாடுகள்



<u>கருத்துப் பரிமாற்றம் – கருத்தாடல் : செயற்பாடு குறித்த விளக்கம்</u>



கருத்தாடல் : அமைப்பும் இயக்கமும்







பல்வேறு உரைசெயல்கள் (Speech Acts of different Types)



செயற்பாடு / பங்கேற்பு/ மொழி வழக்கு சார்ந்த இணைப்பு / தொடர்பு

i)	அனுப்பும் முறை	⟷	பெறும் முறை
ii)	முறை சார்	⟷	முறைசாரா
iii)	பேசுவோர்	⟷	கேட்போர்
iv)	படித்தல்	⟷	கேட்டல்
v)	எழுதுவோர்	⟷	படிப்போர்
vi)	தனியாள்	⟷	குழு
vii)	குழு 1	⟷	குழு 2
viii)	கற்போர்	⟷	கற்பிப்போர்

ix) உரையாடுவோர் - கலந்துரையாடுவோர்

கருத்தாடலுக்கான மொழி வழி

i) கருத்து வெளிப்படுத்தும் ஆற்றல் பெறுதல் (Achievement of Linguistic Competence)

ii) வெளிப்படுத்தும் / கருத்தைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் பெறுதல் (Successful Linguistic Performance)

iii) மொழியமைப்பில் : ஒலி முதல் உரைக்கோவை வரை

- ஆற்றல் பெறுதல் : இது போன்ற பல்வேறு அமைப்புகளை – இடம், பொருள், ஏவல் …. பல்வேறு சூழல்களுக்கு ஏற்ப…. பிற சமுதாயப் பண்பாட்டு…….
- மொழியமைப்புகளைத் தேர்ந்தெடுத்துப் பொருத்தமாக – முறையாக- நிறைவாகப் பயன்படுத்தும் ஆற்றல் பெறுதல்

iv) மொழியில் (உரைக்கோவையில்)

- அமைப்பிணக்கமும் (Cohesiveness) கருத்திணக்கமும் (Coherency) ஏற்படுமாறு செய்தல். அதாவது, மொழியும் கருத்தும் ஒருங்கிணைதல்- இரண்டறக் கலத்தல்

மொழித்திறன்களின் தேவை

i) அடிப்படை மொழித்திறன்கள் (கேட்க, பேச, வாசிக்க, எழுத) (basic language skills)

ii) கருத்தாடல் திறன்கள் (communicative skills) : பல்வேறு சூழல்களில் போன்று

இதில் மொழி வகைகளின்/ வழக்குகளின்/ அமைப்புகளின்/கூறுகளின் பொருத்தம்- ஏற்புடைமை- பண்புநிலை – அளவு- ஆற்றல் போன்றவற்றை முன்னிறுத்தி வகைப்படுத்துதல், தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துதல், வரையறை செய்தல் போன்றவை அடங்கும்.

மொழியில் இடம்பெறும் அமைப்புகளுக்கு / கூறுகளுக்கு

வடிவம் (form) உண்டு – பொருண்மை (meaning) உண்டு – பங்கு/பணி உண்டு (function). எடுத்துக்காட்டாக:

1. சொற்பொருண்மை உண்டு (Lexical meaning)
   படி – read , step, study etc
2. இலக்கணப் பொருண்மை உண்டு (Grammatical meaning)
   படி – படிக்க – படித்த – படித்தால் – படித்ததும்- படித்தவர்- படிக்காவிட்டால்- படித்தபொழுது- படித்தவுடனே-படிப்பு - படிக்காத போன்றவை
3. சூழற்பொருண்மை உண்டு (Contextual meaning)
   வா (come), போ (go) – இவற்றின் பயன்பாடு
   சூழல்: விடைபெறுதல் / விடை தருதல்
   நாங்கள் போய் வருகிறோம் / நாங்கள் வரட்டுமா/ நாங்கள் வருகிறோம் meaning we take leave of you. அதே போன்று நீங்கள் போய் வாருங்கள்/ நீங்கள் வாருங்கள் நல்லது போய் வாருங்கள் etc. (bye! all the best see you later.) இத்தகைய சூழலில் *போ* (தனித்து இடம் பெறுவது) என்ற வினையின் பயன்பாடு பண்பாட்டுச் சூழலில் தவிர்க்கப்படுகிறது.
4. சமுதாய - பண்பாட்டுப் பொருண்மை உண்டு (Socio cultural meaning)
   தங்கை உண்டாகியிருக்கிறாள் / தங்கை முழுகாமல் இருக்கிறாள்/ தங்கை மாசமாக இருக்கிறாள் (meaning younger sister is pregnant) இதில் கருவுற்றிருப்பது மேற்கண்டவாறு வெளிப்படுத்தப்படுகிறது.

மொழித் திறன்கள் + கருத்தாடல் திறன்கள்

❖ [எழுத
படிக்க/வாசிக்க
கேட்க / அறிந்து கொள்ள
பேச] ⟶ இவை அனைத்தும் மொழி சார் அடிப்படைத் திறன்களே

இவற்றோடு கருத்தாடல் திறன்கள் கீழ்க்கண்டவாறு அமைய வேண்டும்.

[மொழித்திறன்கள் அடிப்படை] + பயன்பாட்டு [களம் / சூழல்]



முறைசார்

முறைசாரா

1. சமுதாயச் சூழல் (பண்பாடு, உறவு, தொடர்பு போன்றவை)
2. விளித்தல், அழைத்தல்,வேண்டல், விதித்தல் போன்றவை
3. கனிவு, பணிவு, மதிப்பு, மதித்தல் போன்றவை
4. பல்வேறு சமுதாயப் பண்பாட்டுச் சூழல்களில் மொழிப் பயன்பாடு
5. இவற்றின் தேவை தன்மை போன்றவை

உரையாடல் அமைப்பு – செயற்பாடு : விளக்கம்

பங்கேற்பு :

பேசுபவர் 1 (கேட்பவர் 1)	⟷	பேசுபவர் 2 (கேட்பவர் 2)

[சூழல் தேர்வு – முறை தேர்வு – பங்கேற்போர். அவரிடையே காணப்படும் தொடர்பு-மையப் பொருண்மை தேர்வு – நடைபெறும் நேரம் , இடம் போன்றவை]

i) அறிமுகம் ⟶ நேரடித் தொடர்பு வழி
உரையாடல் : தொடக்கம் (சில தொடக்கிகளின் பயன்பாடு – use of initiators)

ii) பொருண்மை வெளிப்பாடு
பங்கேற்போர் (உறவு, தொடர்பு, தகுதி நிலை போன்றவை)

iii) பங்கேற்றல் : மாறி மாறி : கருத்து – மொழியாக்கம் – வெளிப்பாடு
உரைசெயல்களின் அமைப்பு (Introducing Speech Acts)

iv) உரையாடலைக் கொண்டு செல்லல் / தொடர்தல் (Continuation of Conversation)
இதில் பங்கேற்போர் ஒருவர் தம் உரையை முடிக்க மற்றொருவர் தொடர ... இவ்வாறு பங்கேற்பில் தக்க இடமளித்தல் / வாய்ப்பளித்தல் போன்று.

v) மொழிப்பயன்பாட்டில் : இடையீடு, தங்குதடை, தடுமாற்றம் ஏற்படுதல்
இதைச் சரிசெய்தல், வழி காணுதல்

vi) உரையாடல் மொழியமைப்பில் இணைப்புகள் பயன்படுத்துதல்
இந்த முறையால் வாக்கியங்கள் இணைக்கப்படுவதோடு தொடர்ச்சி சரியாக அமையவும் வழி ஏற்படும். இதன் மூலம் கருத்தாக்கத்திற்கும் மொழி வெளிப்பாட்டிற்கும் இயைபு ஏற்படும்.

vii) இணைப்புகளால் உரைசெயல்களின் வெளிப்பாட்டில் இயைபு ஏற்படுத்துதல்.
இதன் மூலம் புரிதிறனை அல்லது அறிதிறனை அதிகரிக்கச் செய்தல்.

viii) உரையாடலின் தொடர்ச்சியால் சிலவற்றைத் தீர்மானித்தல், ஏற்றுக்கொள்ளுதல், வரையறை செய்தல், தீர்வு காணல் போன்றவை ஏற்பட வாய்ப்புண்டு.

ix) உரையாடலை நிறைவு செய்தல் .
சில சொற்கள், தொடர்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி உரையாடலை நிறைவு செய்தல். இவற்றை உரையாடல் முடிப்பான்கள் (closures) என்று அழைப்பார்கள். இவற்றை விடைபெறுதல், பிறகு சந்தித்தல் போன்றவற்றின் வாயிலாகவும் விளக்கலாம். எடுத்துக்காட்டு : 'சரி - பார்ப்போம், மீண்டும் சந்திப்போம், நல்லது பிறகு முடிவு செய்வோம், சரி எல்லாம் நல்லபடி முடிந்தது, மகிழ்ச்சி' போன்றவை.

இத்தகைய பகுப்பாய்வு உரையாடலில் அல்லது உரைக்கோவையில் காணப்படும் சொற்பயன்பாடு (Lexical Choice), உரையாடலில் பயன்படுத்தப்படும் தொடக்கிகள், தொடரன்கள், இணைப்பான்கள், முடிப்பான்கள் போன்றவற்றை முறைப்படுத்தி விளக்க உதவும்.

இன்றைய சூழலில் மொழி கற்றல் – கற்பித்தல் செயற்பாடும் நடவடிக்கைகளும்

மொழி கற்றல்- கற்பித்தல் இன்று நேற்று தோன்றியது அல்ல. காலங்காலமாகத் தொடர்ந்து வாழ்ந்தும் வளர்ந்தும் வரும் ஒழுங்கமைவுக்குட்பட்ட முறையான செயற்பாடாகக் கருதப்படுகிறது. ஒரு மொழியைத் தாய்மொழியாக - முதன்மொழியாக - பிற மொழியாக – அந்நிய மொழியாக-தேசியமொழியாக- பரந்துப்பட்டக் கருத்துப் பரிமாற்றத்திற்கான மொழியாகப் பல்வேறு நெறிமுறைகளைப் பயன்படுத்திக் கற்றல் – கற்பித்தல் செயற்பாட்டினை மேற்கொண்டு வந்துள்ளதை வரலாறு நமக்குச் சுட்டிக் காட்டுகிறது. சமுதாயத்தின் மேம்பாடு கருதி மொழிக் கல்வியும் மொழி வழிக் கல்வியும் மேற்கொள்ளப்பட்டு வருவதைப் பல்வேறு நாடுகளின் மொழிப் பயன்பாடும் மொழித் திட்டமிடுதலும் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள் சீராகவும் முறையாகவும் அமைய வேண்டும் என்றை எதிர்பார்ப்பின் அடிப்படையில் இன்றைய நிலையில் கற்றல் கோட்பாடுகளோடு (Learning Theories) மொழிக் கற்றல்- கற்பித்தல் தொடர்பான அணுகுமுறைகள், மொழியமைப்பு - மொழிப் பயன்பாடு தொடர்பான அணுகுமுறைகளோடு ஒருங்கிணைக்கப்பட்ட நிலையில் அமைந்து வரக் காண்கிறோம்.

இந்நிலையில் கற்றல்-கற்பித்தல் வழிகள் பயனுள்ள வகையில் அமைய வேண்டும் என்பதற்காகப் பின்பற்று வரும் நெறிமுறைகளில் அவ்வப்போது - ஆங்காங்கே மாற்றங்களும் மறு சீராய்வுகளும் மேற்கொண்டுவரப்பட்டாலும், அவை இன்னும் சிறப்பாக அமைய வேண்டும் என்ற நோக்கில் பல்வேறு இடங்களில் ஆய்வுகளும் புது முயற்சிகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டே வருகின்றன என்று குறிப்பிட முடியும்.

1965இல் தொடங்கி இன்றுவரை தொடர்ந்து ஏறத்தாழ 47 ஆண்டுகள் மொழி கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்ட ஆசிரியன் - ஆய்வாளன் என்ற நிலையிலும் சில நாடுகளில் - பல்கலைக்கழகங்களில் - நிறுவனங்களில் - ஆய்வுத் திட்டப் பணிகளில் எளியேனாகிய நான் பெற்ற பட்டறிவும் எதிர்கொண்ட சிக்கல்கள் அவற்றிற்காக மேற்கொண்ட தீர்வுகள் போன்றவையே இது போன்றதொரு கருத்துரையை அமைக்கக் காரணமாக அமைந்தன என்பதை இங்கே பணிவோடு குறிப்பிட விரும்புகிறேன்.





கருத்தாடல் அணுகுமுறையில்

பயனாக்க மொழியியல் பிரிவுகள்

- அகராதியியல்
- மொழிவளர்ச்சி –மொழித்திட்டமிடுதல்
- கணினி மொழியியல்
- நடையியல்
- சமுதாய மொழியியல்
- உளமொழியியல்
- ஒப்புமொழியியல்
- மொழிபெயர்ப்பியல் போன்றவை







இடம்பெறுபவை:

[அறிவு – திறன் – விழுமியங்கள் – எண்ணங்கள் – சிந்தனைகள்]





❖ இதுபோன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு ⟶ தீர்வு காணுதல், அதற்கான வழிவகைகளைக் கண்டறிதல்



மேற்கோள் மற்றும் துணைநூல்கள்

Alisjabhana, S. T. (1976). Language Planning for Modernization(The case of Indonesia and Malaysia), The Hague :Mouton

Amin, K. et.al (2007). ' On Communicative and Linguistic Competence', International Journal of Communication, Bahri Publications : New Delhi.

Asmah Haji Omar.(1987). Malay:Its Sociocultural Context, DBP: Kuala Lumpur.

Bachman, L.(1990). Fundamental Considerations in Language Testing, OUP:Oxford.

Canale, M. and Swain, M.(1980). 'Theoretical Bases of Communicative Approaches to Second Language Teaching and Testing', Applied Linguistic Journal 1.1-17.

Chomsky, Noam. (1965). Aspects of the Theory of Syntax, CUP: MIT USA

Ferguson,C.A. etal.(1968). Language Problems of Developing Nations, CAL: Washington, D.C.

Karunakaran,K. (1978). ' Language Planning in Multi Lingual Context', Indian Linguistics, Vol. 39.1:22-34

Karunakaran, K. & Supramani, S. (2009). Discourse its Form and Function (in Tamil), KKP: Coimbatore, India

Labov,W. (1966).Social Stratification of English in the NewYork City,CAL:Washington D. C.

Richards,J.C. (2011). Competence and Performance in Language Teaching, CUP:Oxford

Shanmugom, C. (2006). Karuttaadal Anukumurai in Tamil, Manivasakar Nuulakam, Chennai.

Trudgill, P. (1972). Socio Linguistics : An Introduction, Penguin: Harmondsworth (UK).

கணினித் தமிழும் தமிழ்மொழிக் கல்வியும்

பேராசிரியர் ந. தெய்வசுந்தரம்
மேனாள் தமிழ்மொழித்துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை, தமிழ்நாடு

மொழித் தொழில்நுட்பம் (Language Technology)

சமூக வாழ்க்கையில் நாம் நமது உணர்வுகளையும் கருத்துகளையும் தேவைகளையும் பிறர்க்குப் புலப்படுத்துவது மிகத்தேவையான ஒன்றாகும். இந்தப் புலப்படுத்தச் செயல்பாட்டின் (Communication) ஊடே நாம் வாழும் இயற்கையையும் சமூகத்தையும் புரிந்துகொண்டு, நமக்குத் தேவையான வகையில் மாற்றி, பயன்படுத்திக் கொள்கிறோம். செயல் முனைப்புள்ள இக்கருத்துப் புலப்படுத்தச் செயல்பாடே கருத்தாடல் (Discourse) என்றழைக்கப்படுகிறது.

நாம் மேற்கொள்கிற கருத்தாடலில் மிகப் பெரிய பங்கு ஆற்றுவது நமது இயற்கை மொழியே ஆகும். இயற்கை மொழியோடு (Verbal) நமது உடல் அசைவுகள், முகத்தோற்றங்கள், சைகைகள், குறியீடுகள், படங்கள் போன்ற மொழிசாராக் கூறுகளும் (non-verbal) நமது கருத்தாடலில் பங்கேற்கின்றன.

பேச்சு மொழியாக இருந்த பலமொழிகள் தமது வரலாற்றில் எழுத்து மொழிகளாகவும் வளர்ந்தன. மனிதன் தனது கருத்துகளைக் காலம், இடம் கடந்து நீடிப்பதற்காக எழுத்துகள் மூலம் பதிவு செய்யத் தொடங்கியதையொட்டி எழுத்து வழக்குகள் தோன்றி வளர்ந்தன. கல்வெட்டுகள், ஓலைச் சுவடிகள், இன்றைய அச்சுப்படைப்புகள் அனைத்துமே நமது கருத்துகளைப் பதிவுசெய்து, காலம், இடம் கடந்து பிறருக்குத் தெரிவிப்பதற்காக நாம் உருவாக்கிய மொழித்தொழில் நுட்பங்களே (Passive Language Technology) ஆகும்.

தொழில்நுட்பமும்அறிவியலும் (Technology and Science)

தொழில்நுட்பக் கருவிகள் என்பவை நமது இயற்கைத் திறன்களின் செயல்பாடுகளை மேன்மேலும் விரிவாக்கும் கருவிகளே ஆகும் (enhancement of human abilities) . நமது கண்பார்வைத் திறனை விரிவாக்கும் கருவிகளே நுண்நோக்கி (Microscope) , தொலைநோக்கி (Telescope) ஆகியவை ஆகும். நமது வாய் மூலம் உருவாக்கும் ஒலிகளை வலுப்படுத்தவும் நெடுந்தூரம் எடுத்துச் செல்லவும் பயன்படும் கருவிகளே ஒலிபெருக்கி, தொலைபேசி,

அலைபேசி ஆகியவை ஆகும். வேகமாகவும் விரைவாகவும் இடம் விட்டு இடம் பெயர நமக்குப் பயன்படும் பொறிகளேமிதி வண்டி, பேருந்து, தொடர்வண்டி ஆகியவை ஆகும். பறவை போன்று வானத்தில் பறந்து செல்ல நாம் உருவாக்கிய பொறியே விமானமாகும்.

மேற்கூறிய தொழில்நுட்பம் வளர்வதற்கு அடிப்படை, இயற்கையின் பண்புகளை அறிந்து கூறும் அறிவியலே ஆகும். அறிவியல் அறிந்து கூறுகிற உண்மைகளின் அடிப்படையில் தொழில் நுட்பம் நமக்கு பலவகைக் கருவிகளையும் பொறிகளையும் உருவாக்கித் தருகிறது.

இயற்கையின் பண்புகளை அறிந்து கூறும் இயற்பியல், வேதியியல், உயிரியல் போன்ற அறிவியல் துறைகள் போன்றதே நமது இயற்கை மொழித் திறனைப் பற்றிக் கூறும் மொழியியல் துறையாகும் (Linguistics) .அதுபோன்று , நமது இயற்கை மொழித்திறனை மேலும் விரிவாக்க அல்லது வளர்த்தெடுக்க நாம் உருவாக்கிய மொழித்தொழில்நுட்பமே முன்னர் குறிப்பிட்ட எழுத்துமொழி, கல்வெட்டு, ஓலைச்சுவடி, அச்சுஆகியவைஆகும்.

செயல் முனைப்புள்ள பொறிகள் (Active Technology oriented Machines)

இன்றைய அறிவியல் , தொழில்நுட்பம் ஒரு அடுத்தகட்ட, உயர் வளர்ச்சியை எட்டியுள்ளது. நாம் உருவாக்குகிற கருவிகளும் பொறிகளும் நமது கட்டளைகளை ஏதோ ஒருவகையில் புரிந்து கொண்டு, நமது இடுகிற கட்டளைகளைச் செயல்படுத்துகின்றன. ஒரு குறிப்பிட்ட இயற்பியல் தூண்டுதலுக்கு ஒரு குறிப்பிட்ட செயலைப் பொறிகள் மேற்கொள்கின்றன அல்லது தருகின்றன (Stimulus - Response) . நமது புவியில் இருந்து கொண்டே செவ்வாய்க் கிரகத்திற்கு ஆய்வுக் கருவிகளை அனுப்பி, நாம் செய்ய விரும்புகிற பணிகளை அவற்றிற்குப் புலப்படுத்தி, அவற்றைச் செயல்பட வைக்கிறோம். புரிந்து கொள்ளும் திறனற்ற பொறிகள் (Passive Technology Machines) என்ற நிலைமாறி, இன்று புரிந்து கொண்டு செயல்படும் பொறிகள் (Active Technology Machines) - ரோபோட்கள் – என்ற வளர்ச்சி நிலையை நமது தொழில்நுட்பம் பெற்றுள்ளது.

புரிந்து கொண்டு செயல்படும் பொறிகள் என்று கூறும்போது , எவ்வாறு புரிந்து கொள்கின்றன என்ற வினா நம்முன் நிற்கிறது. ஒலி, ஒளி, மின்னோட்டம், மின்தடை போன்ற இயற்பியல் (Physical) கூறுகளைக் புலப்படுத்தக் கூறுகளாகக் கொண்டு, பலகருவிகள், பொறிகள் செயல் படுகின்றன. ஆனால் இன்றைய அறிவியல், தொழில்நுட்ப

வளர்ச்சி அடுத்தகட்ட நிலையை எட்டியுள்ளது. இயற்பியல் கூறுகளோடு, நாம் பயன்படுத்தும் இயற்கை மொழிகளையும் (Natural languages) நம்மைப் போன்றே புரிந்துகொண்டு செயல்படும் பொறிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

கணினியில் மொழித்தொழில்நுட்பம் (Llanguage Technology in Computer)

இந்த உயர்ந்த கட்டவளர்ச்சிக்கு அடிப்படையானது தான் கணினியியல் துறையாகும். கணினி என்பது நமது கட்டளைகளை மொழிகள் வாயிலாகப் புரிந்து கொண்டு செயல்படும் ஒரு பொறியாகும். இன்று இந்த மொழிகள் கணினிக்கென்று உருவாக்கப்படுகிற செயற்கை மொழிகளாக (சி, சி+, ஜாவா போன்ற மொழிகளாக) அமைந்துள்ளன. இருப்பினும் இந்தச் செயற்கை மொழிகள் வாயிலாக நாம் இடுகிற கட்டளைகளைக் கணினிப்பொறி புரிந்துகொண்டு, நாம் இடுகிற பணிகளை நிறைவேற்றுகின்றன. எனவே இது கணினிக்கென்று உருவாக்கப்பட்டுள்ள செயற்கை மொழித்தொழில் நுட்பமாகும்.

அடுத்த கட்ட வளர்ச்சியாக , நமது இயற்கை மொழிகளின் வாயிலாகவே நமது கட்டளைகளைக் கணினி புரிந்துகொண்டு செயல்படுவதற்குத் தேவையான அறிவியலும், தொழில்நுட்பமும் இன்று வளர்ந்து வருகின்றன. கணினியியல் நோக்கில் நமது இயற்கை மொழிகளை ஆராயும் அறிவியலே கணினி மொழியியலாகும் (Computational Linguistics) . அதன் அடிப்படையில் உருவாக்கப்படுகிற தொழில்நுட்பமே கணினிக்கேற்ற மொழித்தொழில்நுட்பமாகும் (Active Language Technology) .

புதிய வகை மொழித்தொழில்நுட்பம்

நாம் முன்னர் குறிப்பிட்ட கல்வெட்டு, ஓலைச்சுவடி, அச்சு போன்றவையும் மொழித்தொழில் நுட்பங்களே என்றாலும் அவற்றிற்கும் கணினிவழி மொழித்தொழில்நுட்பத்திற்கும் அடிப்படை வேறுபாடு உள்ளது. முந்தைய மொழித்தொழில்நுட்பங்கள் எல்லாம் நமது மொழி வழிக் கருத்துகளைப் பதிந்துவைக்கும் தொழில்நுட்பமாகவே (Passive Language Technology) அமைகின்றன. பதிந்து வைக்கிற கருத்து களைப்புரிந்து கொண்டு செயல்படும் மொழித்தொழில் நுட்பம் அல்ல அவை. ஆனால் கணினி வழிமொழித் தொழில்நுட்பத்தின் அடிப்படையே நாம்மொழி வழி தெரிவிக்கிற கருத்துகளைப் புரிந்துகொண்டு, செயல்படும் செயல்முனைப்புள்ள மொழித்தொழில்நுட்பமாகும் (Active Language Technology) .

நாம் நமது இயற்கை மொழிவாயிலாக முன் வைக்கப்படுகிற கருத்துகளைப் புரிந்து கொண்டு செயல்படுவது போல, கணினியும் புரிந்து கொண்டு செயல்பட வேண்டும். பேச்சு வழியாகவோ எழுத்து வழியாகவோ நாம் கருத்துகளை முன்வைக்கும்போது, கணினியானது மொழித்தொடர்களை ஆய்ந்து, கருத்துகளைப் பிரித்தெடுக்கும் திறனைப் (Natural Language Processing - NLP) பெறவேண்டும். நம்மைப் போன்றே மொழி வழிச்செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

கணினித்தமிழ் வளர்ச்சியில் இரண்டு கட்டங்கள்

மேற்கூறிய கருத்துகளின் அடிப்படையில் நோக்கினால், கணினித் தமிழ் என்பது தமிழ்மொழியைக் கணினி போன்ற மின்னணு சாதனங்கள் கற்றுக்கொண்டு, அதனடிப் படையில் நாம் தமிழில் இடுகிற கட்டளைகளைப் புரிந்துகொண்டு செயல்படுவதே ஆகும்.

கணினித் தமிழின் முதல் கட்டம், தமிழ்மொழியைக் கல்வெட்டு, ஓலைச் சுவடி, அச்சு ஆகியவற்றில் பதிவது போல, கணினியில் பதிவு செய்வதாகும். தமிழ் எழுத்துருக்களை உருவாக்குவது. விசைப்பலகைகளை உருவாக்குவது, இணையதளம், மின்னஞ்சல், வலைப்பூக்கள், விக்கிபீடியா போன்றவற்றில் தமிழை இடம்பெறச் செய்வது போன்ற செயல்களை மேற்கொள்வதாகும். இவற்றில் தற்போது நாம் குறிப்பிட்ட அளவு வெற்றியடைந்துள்ளோம். இந்த வெற்றியில் ஒருங்குறி (Unicode) வருகை, விசைப்பலகை தரப்படுத்தம் ஆகியவை நமக்கு பெரிதும் உதவியுள்ளன.

கணினித் தமிழின் அடுத்த உயர்ந்த கட்டம், கணினிக்குத் தமிழ்மொழியைக் கற்றுக்கொடுத்து, நமது பல்வேறு மொழித் தொழில்நுட்பத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதாகும். சொல்திருத்தி, இலக்கணத்திருத்தி , எழுத்து - பேச்சுமாற்றி (Text to Speech - TTS), பேச்சு - எழுத்துமாற்றி (Automatic Speech Recognizer - ASR), ஒளி வழி எழுத்தறிவான் (Optical Character Recognizer - OCR), இயந்திர மொழிபெயர்ப்பு (Automatic Machine Translation - MT) போன்ற மொழித்தொழில்நுட்பங்கள் தமிழில் பெருக வேண்டும்.

கணினிக்குத் தமிழ் கற்பித்தல் (Teaching Tamil to Computer)

இதற்கு முதல் அடிப்படை, தமிழ்மொழி அறிவைக் கணினிக்குக் கொடுப்பதேயாகும். மனித மூளை இயற்கை மொழியைக் கற்றுக்கொண்டு, பயன்படுத்துவதற்கும், கணினி கற்றுக்கொண்டு, பயன்படுத்துவதற்கும் வேறுபாடுகள் உண்டு. மனிதமூளை ஒரு உயிரி-வேதியியல் உறுப்பாகும் (bio - chemical organ) . கணினி அப்படிப்பட்ட தல்ல. அது

மின்னணுவியல் அடிப்படையில் அமைந்துள்ள ஒரு பொறியேயாகும் (Electronic Chip) . எனவே ஒரு இயற்கை மொழியை மனிதமூளைக்குக் கற்றுக்கொடுப்பதற்காக உருவாக்கப்படுகிற இலக்கணம், அகராதி போன்றவற்றை அப்படியே கணினிக்குக் கொடுத்து, அதைக் கற்றுக்கொள்ளச் செய்யமுடியாது.

கணினியின் திறனுக்கேற்றவாறு மொழியைக் கற்றுக்கொடுப்பதில் இரண்டு கருத்துகளைக் கவனத்தில் கொள்ளவேண்டும். ஒன்று, தமிழ்மொழி இலக்கணத்தைக் கணினிக்கேற்ற கணித வாய்பாடுகளாக (mathematical formulae) மாற்றிக் கொடுப்பதாகும். சுழியம், ஒன்று என்ற இரண்டு எண்களின் அடிப்படையில் தான் கணினி எந்தவொரு அறிவையும் பெற்றுக் கொள்கிறது. இந்த இரண்டு எண்களைப் பலவகைகளில் கையாளுவதன் மூலமே கணினி தனக்கு இடப்படுகிற எந்தவொரு கட்டளையையும் செயல்படுத்துகிறது. மொழி அறிவும் எண்களின் அடிப்படையில் அமைகிற கணினி வாய்பாடுகளாக அமையும் போதுதான், கணினியால் அதைக்கையாள முடியும். எனவே மனித மூளைக்காக உருவாக்கப்பட்டுள்ள தொல்காப்பியம், நன்னூல் போன்ற இலக்கண நூல்களைக் கணினிக் கேற்ற கணித வழி இலக்கணமாக (Computational Tamil Grammar) மாற்றிக், கணினிக்கு அளிக்க வேண்டும்.

மற்றொன்று, நாம் நமது மொழியைக் கையாளும் போது, உலகத்தைப் பற்றிய நமது பின்புற அறிவு (Pragmatic Knowledge) மிகவும் உதவுகிறது. அதன் பயனாக, சொல்லிலோ அல்லது தொடரிலோ பொருள்மயக்கம் (Word Sense Ambiguity) ஏற்பட்டால், பேசப்படுகிற பொருள், பேசும் சூழல் போன்றவை நமக்கு உதவிசெய்து, பொருள் மயக்கத்தைத் தவிர்க்கின்றன (Disambiguation) .கணினிக்கு இதுபோன்ற பின் புலஅறிவு இன்று அமையவில்லை. எனவே, அதனால் நம்மைப் போன்று பொருள் மயக்கத்தைத் தவிர்க்க முடியாது. இச்சூழலில் பொருள் மயக்கத்தைத் தவிர்ப்பதற்குக் கணினிக்குப் பலவகைகளில் நாம் உதவ வேண்டும்.

மேற் கூறிய இரண்டையும் கையாளுவதற்கான உத்திகளைத் தருவ தேகணினி மொழியியல் என்ற ஒரு அறிவியல் துறையாகும். இந்த அறிவியல் துறையின் அடிப்படையில் தமிழ்மொழி அறிவு (இலக்கணம், சொற்களஞ்சிய அறிவு போன்றவை) கணினிக் கேற்ற தமிழ்மொழி அறிவாக மாற்றியமைக்கப் பட வேண்டும். இதுவே கணினித்தமிழ் இலக்கணமாகும்.

கணினி வழித் தமிழ்ஆய்வு (Computational Tamil Research)

பேச்சொலி, எழுத்து, சொல், தொடர், பனுவல், பொருண்மை என்று பலநிலைகளில் தமிழ்மொழி அமைப்பு கணினிமொழியியல் நோக்கில் ஆராயப்பட வேண்டும். அப்போது தான் தமிழ்மொழியைக் கணினிக்குக் கற்றுக் கொடுக்கமுடியும். இவ்வாறுகற்றுக் கொடுக்கும் போதுதான், அதனடிப்படையில் நமக்குத் தேவையான தமிழ்மொழித் தொழில்நுட்பங்களை (Tamil Language Technology) நம்மால் உருவாக்க முடியும். தமிழ் மென்பொருள்கள் உருவாகும்.

மேற்கூறிய கணினித் தமிழ் இலக்கண உருவாக்கப் பணிகளில் முதலாவது, தரவுமொழியியல் (Corpus Linguistics) அடிப்படையிலான தமிழ் ஆய்வாகும். சங்கத் தமிழிலிருந்து இன்றைய தமிழ்வரை , தமிழின் இலக்கணத்தையும் சொற்களஞ்சியத்தையும் பெறுவதற்குத் தமிழ்த்தரவகம் (Tamil Corpus) உருவாக்கப்பட வேண்டும்.

உருவாக்கப்பட்ட தமிழ்த்தரவகத்தின் அடிப்படையில் தமிழ்மொழியின் அமைப்பு (இலக்கணம்) எழுத்து, சொல், தொடர் போன்ற அனைத்து நிலைகளிலும் ஆராயப்பட வேண்டும். உருபன்பகுப்பாய்வி (Morphological Parser), தொடரன்பகுப்பாய்வி (Syntactic Parser) போன்ற பல ஆய்வுக் கருவிகள் தமிழுக்கு உருவாக்கப்பட வேண்டும்.

கணினி மொழியியல் அடிப்படையில் இன்றைய எழுத்துத்தமிழை எழுத்து, சொல்நிலைகளில் ஆராயும் உருபன்பகுப் பாய்வியை இக்கட்டுரை ஆசிரியர் தனது ஆய்வுக் குழுவினருடன் இணைந்து உருவாக்கியுள்ளார். அதன் பயனாக இன்று சில மொழி பதிப்புக் கருவிகளை உருவாக்க முடிந்துள்ளது. குறிப்பாக, சொற்பிழை திருத்தி, சந்திப்பிழை திருத்தி , அயல் மொழிச் சொல் தவிர்ப்பு போன்ற சில தமிழ்மொழிக் கான மென்பொருள் கருவிகளை உருவாக்க முடிந்துள்ளது.

தமிழ் உருபன்பகுப் பாய்வியைத் தொடர்ந்து, தமிழ்த் தொடரன் பகுப்பாய்வி உருவாக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த முயற்சி வெற்றியடையும் போது, தமிழ்த்தொடரியல் அடிப்படையில் தொடர் இலக்கணப் பிழைகளைத் திருத்தும் மொழிக் கருவியும் உருவாக்க முடியும்.

தமிழ்ச்சொற்களஞ்சிய அறிவையும் கணினி மொழியியல் அடிப்படையில் கணினிக்கு அளிக்கப்பட வேண்டும்.

அத்தோடு, தமிழ்மொழியின் ஒலியியல் அடிப்படைகளைப் பற்றிய ஆராய்ச்சி மிக முக்கியமானதாகும். தமிழ் எழுத்துகளைப் பேச்சொலிகளாக மாற்றி வாசித்துக்காட்டும் திறனையும், அதுபோன்று நமது பேச்சைக் கணினி கேட்டு , அதை எழுத்தில் எழுதிக்காட்டும் திறனையும் கணினிக்கு அளிப்பதற்கு இந்த ஆய்வு தேவையாகும்.

மேற்கூறிய அடிப்படை தமிழ்மொழி ஆராய்ச்சிப் பணிகள் வெற்றிகரமாக முடிவடைவதையொட்டியே, தமிழ்மொழிக்கான கணினிமொழித் தொழில்நுட்பம் வளர்ச்சியடைய முடியும்.

கணினி வழி தமிழ்க்கல்வி (Computer Assisted Tamil Language Teaching)

கணினியில் மொழித்தொழில்நுட்பம் பெற்றுள்ள வளர்ச்சியின் பயனாக இன்று மாணவர்களுக்குத் தமிழ்மொழி கற்பித்தலில் கணினிக்குக் குறிப்பிடத்தக்க பங்கு உள்ளது. தமிழ் இலக்கணத்தையும் சொற்களஞ்சியத்தையும் மாணவர்களுக்குக் கற்றுக்கொடுப்பதில் ஆசிரியருக்குத் துணையாகக் கணினிசெயல் படமுடியும். மொழி கற்றலில் இடம்பெறும் பல்வேறு செயல்பாடுகளில் கணினியானது மாணவர்களோடு ஊடாட்டம் (Interaction) புரிந்து, அவர்களுக்கு உதவமுடியும்.

இரண்டு வகைகளில் கணினியைப் பயன்படுத்தலாம். ஒன்று, தமிழ் இலக்கணத்தை நேரடியாகக்கற்றுக் கொடுக்கவும் பயன்படுத்தலாம். மற்றொன்று, அவ்வாறு ஆசிரியர் மாணவருக்குக் கற்றுக்கொடுத்த பிறகு, மாணவரின் மொழிப்பயன்படுத்தத்தை வளர்ப்பதற்காகவும் பயன்படுத்தலாம்.

இக்கட்டுரை ஆசிரியர் மேற்கூறிய இரண்டு பயன்பாடுகளுக்கும் சில மென்பொருள்களை உருவாக்கியுள்ளார். மென்தமிழ் ஆய்வுத்துணைவன் (Mentamizh Research Companion) என்ற தமிழ் மென்பொருள் மாணவருக்குத் தமிழின் எழுத்து, அசை, சொல், சந்தி ஆகியவை பற்றிய இலக்கணத்தையும் தமிழ்ப் பனுவல்களில் சொற்கள் பயன்படும் முறைபற்றியும் கற்றுக்கொடுக்கும் ஒரு மென்பொருள் ஆகும். தமிழ்மொழி ஆய்வாளர்களுக்கும் பலவகைகளில் பயன்படும் மென்பொருளாகும் இது.

அதன் அடிப்படையில் மாணவர்கள் தங்களது எழுதும் திறனை வளர்த்துக் கொள்ளக் கணினி வாயிலாக உரைகளைத் தயாரிக்கும் போது, அவர்களுக்கு உதவும் சொற்பிழை திருத்தி, சந்திப்பிழைதிருத்தி, அயற்மொழிச்சொல்சுட்டி, அகராதிகள் போன்ற பல

கருவிகளை உள்ளடக்கிய மென்தமிழ் என்ற ஒருதமிழ்ச்சொல்லாளரையும் (Tamil Wordprocessor) உருவாக்கியுள்ளார்.

இக்கட்டுரையில்மென்தமிழ்ச் சொல்லாளரைப் பயன்படுத்தி, எவ்வாறெல்லாம் மாணவர்கள் தங்கள் எழுதும் திறனை வளர்த்துக் கொள்ளலாம் என்பது பற்றி விளக்கம் அளிக்கப்படுகிறது.

1) தமிழில் மாணவர்களுக்கு ஒலி ஒற்றுமையுடைய ல,ள,ழ எழுத்துகள், ன ந, ன, ண எழுத்துகள், ர, ற எழுத்துகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதில் குழப்பங்கள் ஏற்படலாம். அப்போது அவர்களுக்கு உதவி செய்ய மயங்கொலிச்சொல் அகராதி ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. மணம், மணம் என்ற இரண்டு சொற்களுமே தமிழ்ச்சொற்கள் தான். ஆனால் பொருள் வேறுபாடு உடைய இருவேறு சொற்கள்அவை. அதை எடுத்துக் காட்டும் வகையில் அகராதி அமைந்துள்ளது.

2) அடுத்து, சில சொற்களில் சரியான எழுத்துகளுக்குப் பதிலாக தவறான எழுத்துகளை மாணவர்கள் பயன்படுத்தலாம். அப்போது அதுதவறு என்பதை எடுத்துக் கூறி, அச்சொல்லைத் திருத்த மென்தமிழ் உதவும். எடுத்துக்காட்டாக, தமிள் , ஆங்கிளம், மளாயா என்று தவறாக எழுதப்பட்டிருந்தால், மென் தமிழ் அவற்றைத் தமிழ், ஆங்கிலம், மலாயா என்று திருத்தி அளிக்கும்.

3) மேலே குறிப்பிட்டுள்ள சொற்கள் வேர்ச்சொற்கள். அவற்றில் விகுதிகள் இல்லை. ஆனால் விகுதி ஏற்ற சொற்களில் தவறுகள் இருந்தாலும் அவற்றையும் மென்தமிழ் திருத்தி உதவும். தமிளுக்கு, ஆங்கிளத்தில் தாண், மலாயாவிளிருந்து என்று விகுதி ஏற்ற சொற்களில் எழுத்துப்பிழைகள் காணப்பட்டாலும், அவற்றையும் மென்தமிழ் திருத்தித்தரும்.

4) தமிழில் சொற்களுக்குள் உயிர் எழுத்தை அடுத்து உயிர் எழுத்து வரக்கூடாது. அவ்வாறு வரும்போது, அவற்றிற்கிடையில் உடம்படுமெய் தோன்றும். இதற்கு அடிப்படை தமிழ் அசையின் அமைப்பு விதிகளேயாகும். இதில் மாணவர்கள் தவறு செய்திருந்தால், மென்தமிழ் தவறுகளைத் திருத்தித்தரும். தெருஆ, இலைஆ என்று சொற்கள் தவறாகக் காணப்பட்டால், மென்தமிழ் அவற்றைத் தெருவா , இலையா என்று திருத்தித்தரும்.

இடையில் அத்துச்சாரியை தோன்றும். அதுபோன்று நெடில் தொடர் குற்றியலுகரச் சொற்கள் வேற்றுமை விகுதிகள் ஏற்கும்போது இறுதி குற்றியலுகரம் பயின்று வருகிற வல்லின எழுத்து இரட்டிக்கும். இந்த விதிகளில் மாணவர்கள் தவறு செய்திருந்தால், மென்தமிழ் அவற்றைத் திருத்தித்தரும். மரமை , தரமோடு , வளமில் என்பதை மரத்தை , தரத்தோடு, வளத்தில் என்றும் நாடை, காடில், ஆடோடு என்பதை நாட்டை, காட்டில், ஆட்டோடு என்று மென்தமிழ் திருத்தித்தரும்.

6) தமிழ்ச்சொற்களில் அடிச்சொல்லோடு விகுதிகள் இணையும் போது, அகச்சந்தி என்றழைக்கப்படும் புணர்ச்சி விதிகள் சரியாகக் கையாளப்பட வேண்டும். இல்லையென்றால் பொருளே மாறிவிடும். எடுத்துக்காட்டாக, கடை+கள் என்பதை கடைகள் (இங்கு கள் என்பது பன்மை விகுதி) என்று எழுதினால் ஒரு பொருள். கடைக்கள் (இங்கு கள் என்பது ஒரு வேர்ச்சொல்) என்று எழுதினால் மற்றொரு பொருள். எனவே அகச்சந்திகளில் மாணவர்கள் தவறு செய்யக் கூடாது. அவ்வாறு தவறுகள் செய்யப்பட்டிருந்தால், மென்தமிழ் அவற்றைத் திருத்தித்தரும். பசுகள், பலாகள், தெருகள் என்று தவறாக எழுதப்பட்டிருந்தால் அவற்றைப் பசுக்கள், பலாக்கள், தெருக்கள் என்று திருத்தித்தரும். இரண்டு சொற்கள் இணைந்து வரும் தொகைகளில் நிகழும் சந்திப்பிழைகளைத் தற்போது மென்தமிழ் மென்பொருளால் திருத்த இயலாது. அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

7) தமிழில் ஒரு சொல்லுக்கும் (நிலைமொழி) அதற்கு அடுத்த சொல்லுக்கும் (வருமொழி) இடையில் எழுத்துகள் தோன்று வதும், திரிதலும், மறைதலும் உண்டு. இதுவே புறச் சந்திகள் என்று அழைக்கப்படுகின்றன. புறச் சந்தியில் மாணவர்கள் தவறு செய்தால், மென்தமிழ் பிழைகளைத் திருத்துவதில் மாணவர்களுக்கு உதவும். படித்துபார்த்தான், படிக்கபார்த்தான், அவனைபார், அவனுக்குகொடு , மிகபெரிய போன்ற தவறான தொடர்களைப் படித்துப் பார்த்தான், படிக்கப்பார்த்தான், அவனைப்பார், அவனுக்குக்கொடு, மிகப்பெரிய என்று மென்தமிழ் திருத்திக் கொடுக்கும். தவறாக ஒற்றுகளை மாணவர்கள் இட்டிருந்தாலும் மென்தமிழ் அவற்றைத் திருத்தித் தரும். படித்தப்பையன், வந்துப் பார்த்தான் என்று தவறாக மாணவர்கள் எழுதியிருந்தால் மென்தமிழ் அவற்றைப் படித்தபையன், வந்து பார்த்தான் என்று திருத்தித்தரும்.

8) மாணவர்கள் தமிழில் எழுதும்போது, பிறமொழிச் சொற்களைக் கலந்து எழுதியிருந்தால் அவற்றையும் திருத்தித்தரும் வசதி மென்தமிழில் இடம் பெற்றுள்ளது. வேர்ச் சொற்கள் மட்டுமல்லாமல் விகுதிகள் ஏற்ற சொற்களாக இருந்தாலும் மென்தமிழ் அவற்றைத் திருத்தித்தரும்.

அயல் மொழிச் சொல் கலந்த உரை :

நான் பஸ்ஸில் ஸ்கூலுக்குச் சென்றேன். அங்கு டீச்சரைப் பார்த்தேன். பின்பு கேண்டீனில் டிபன் சாப்பிட்டேன். அங்கிருந்து ட்ரெயினில் யுனிவர்சிட்டிக்குப் போனேன். அங்கு புரபெசரைப் பார்த்தேன்.

மென்தமிழ் திருத்திய உரை:

நான் பேருந்தில் பள்ளிக்குச் சென்றேன். அங்கு ஆசிரியரைப் பார்த்தேன். பின்பு உண்பகத்தில் சிற்றுண்டி உண்டேன். அங்கிருந்து தொடர்வண்டியில் பல்கலைக்கழகத்துக்குப் போனேன். அங்கு பேராசிரியரைப் பார்த்தேன்.

9) மேலும் எண்களைத் தமிழ் எழுத்தில் எழுதிக்காட்டும் கருவியும்

மென்தமிழில் இடம்பெற்றுள்ளது.

98789 456346

தொண்ணூற்றெட்டாயிரத்து எழுநூற்று எண்பத்தொன்பது

நான்கு இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து முந்நூற்று நாற்பத்தாறு

10) உரையில் உள்ள சொற்களை அகர வரிசைப்படுத்தவும், னகர வரிசைப்படுத்தவும் மென்தமிழில் வசதிகள் உண்டு. மேலும் சொல்லடைவும் தயாரிக்கலாம்.

11) தமிழ் – ஆங்கில அகராதி, ஆங்கிலம் – தமிழ் அகராதி ,அயல் மொழிச் சொல் அகராதி என்று பல வகை அகராதிகளும் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

முடிவுரை

இன்றைய கணினி உலகில் தமிழ்மொழியை மாணவர்கள் கற்கும் போது, அவர்களுக்கு உதவியாகப் பயன்படும் வகையில் மென்தமிழ் மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. இன்றைய எழுத்துத் தமிழின் இலக்கணத்தைக் கணினிக்கு மென்பொருள்வாயிலாக மென்தமிழ் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் மாணவர்கள் பிழைகள் ஏதும் செய்திருந்தால், கணினியானது செயல் முனைப்புடன் அவற்றைத் திருத்தித்தரும். அவர்கள் நல்ல தமிழில் எழுதப்பயிற்சி அளிக்க மென்தமிழ் போன்ற தமிழ் மென்பொருள்கள் பயன்படும்.

தமிழ் இலக்கண அறிவை முழுமையாகக் கணினிக்குக் கொடுப்பதில் மேலும் பல ஆராய்ச்சிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதனடிப்படையில்தான் மென்தமிழ் மென்பொருளின் செயல்பாடும் வளர்ச்சியடையும்.

அயல்நாடுகளில் தமிழ்மொழி பயிற்றலின் அடிப்படைகளும் நெறிமுறைகளும்

த.வேணுகோபால்
தலைவர், தமிழ்த்துறை
பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு
கல்வி அமைச்சு

முன்னுரை:

கருத்துப் பரிமாற்றமே மொழியின் அடிப்படைப் பயனாகும். மனத்துள் எழும் உணர்வுகளையும் சிந்தனைகளையும் கருத்துகளையும் பிறருக்கு உணர்த்தவே மொழி பயன்படுகிறது. மொழிக் கல்வியின் முக்கிய நோக்கமும் அதுவே ஆகும். கல்வி கற்றல் என்பது நூலறிவையும் அனுபவ அறிவையும் மொழிவழியே பெற்றுக்கொள்ளும் செயற்பாடாகும். அது தாய்மொழியில் இயங்குவதே இயல்பாகும். 'ஒருவனுக்கு அவனுடைய தாய்மொழியின் வாயிலாகக் கல்வி கற்பிப்பதே மிகச் சரியான முறையாகும். தாய்மொழியை நன்கு கற்று அதில் முழுமையான தேர்ச்சி பெறுவதே குழந்தையின் முதல் ஈடுபாடாக இருக்க வேண்டும். தமிழ்மொழியைப் பொறுத்தமட்டில் தாயகமான தமிழ்நாட்டில் மாணவர்கள் கல்வியறிவைத் தங்கள் தாய்மொழியிலேயே பெற்றுக்கொள்ள வழியுள்ளது. அதற்கு ஏற்ற சூழலும் தகுந்தவாறு அமைந்துள்ளது. ஆனால், தமிழ்நாடு அல்லாத பிற நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் பலரும் தங்கள் தாய்மொழியில் கல்வியறிவு பெறுவதில்லை. தமிழர்கள் உலகமெங்கும் பரவியிருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் வாழும் நாட்டின் வாய்ப்பு வசதிகளுக்கு ஏற்பப் பிறிதொரு மொழியில் கல்வியறிவு பெறுகிறார்கள். தமிழைப் பள்ளிகளில் படிக்கும் வாய்ப்பே இல்லாதவர்களாய்ப் பலர் உள்ளனர். சிங்கப்பூரில் அதிகாரத்துவ மொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்றென்பது அனைவரும் அறிந்ததே. எனினும்,தமிழ்வழிக் கல்விக்குச் சிங்கப்பூரில் வாய்ப்பில்லை. பல இனத்தவர் வாழும் சிங்கப்பூரில் கல்வி கற்றலுக்கு முதல் மொழியாய், முதன்மை மொழியாய் விளங்குவது ஆங்கிலமே. மாணவர்கள் தம் தாய்மொழியை ஒரு பாடமாகப் பயிலும் வாய்ப்பு மட்டுமே இங்குள்ளது. பிற பாடங்கள் அனைத்தும் ஆங்கிலத்திலேயே கற்பிக்கப்படுகின்றன.

சிங்கப்பூரில் தமிழரும் தமிழரல்லாத பிற தென்னிந்தியர்கள் பலரும்பள்ளிகளில் தமிழைத் தாய்மொழிப் பாடமாகப் பயில்கின்றனர். தமிழ்மொழியை முதன்மொழி நிலையிலோ, இரண்டாம் மொழி நிலையிலோ பயில்கின்ற இந்த மாணவர்களுக்குத் தமிழ் நாட்டில் வழங்கிவரும் மொழிக் கலைத்திட்டங்கள் அதிகம் பயன்படா. அயல்நாடுகளில் வாழும் தமிழ் மாணவர்களின் மொழியாற்றலுக்கு ஏற்பவும் அவர்களது மொழித் தேவைகளுக்கு ஏற்பவும் பொருத்தமான மொழிக் கலைத்திட்டமும் பாடத்திட்டமும் உருவாக்கப்படல் வேண்டும். இவ்வுண்மையை உணர்ந்து பல நாடுகளில் தமிழ்மொழிக் கலைத்திட்டங்கள் உருவாக்கும் முயற்சியில் கல்வியாளர்கள் ஈடுபட்டிருப்பது மகிழ்வூட்டும் செய்தியாகும். அயல்நாடுகளில் வசிக்கும் மாணவர்களுக்கெனத் தமிழ்மொழிக் கலைத்திட்டங்கள் உருவாக்குவோர் சில முக்கியக் கூறுகளை மனங்கொள வேண்டுவது இன்றியமையாதது. குடிபெயர்ந்து வாழும் நாடுகளில் தமிழர்கள் அல்லது தமிழ்

பயில்வோர்தமிழ்மொழி பற்றிக் கொண்டுள்ள மனப்போக்கு,பொருளாதார மதிப்பு, வீட்டுமொழித் தாக்கம், சமூகத்தின் ஆதரவு, பள்ளிகளில் பயிலக்கூடிய வாய்ப்புகள், மொழியாசிரியர்களின் தரம், மொழிப் பயிற்றுவளங்களின் வசதி முதலான பல கூறுகளை கல்வியாளர்கள் ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். இவற்றைக் குறித்துத் தெளிவான சிந்தனை இருந்தாலன்றித் தரமான மொழிக் கலைத்திட்டத்தை எளிதில் உருவாக்கிட இயலாது.

எந்நாட்டிலிருந்தாலும் எத்தகைய சூழலில் தமிழ்மொழியைப் பயிற்றுவித்தாலும்,தமிழ்மொழிக் கலைத்திட்ட உருவாக்கத்தின்போதும் பயிற்றுகருவிகளின் தயாரிப்பின்போதும் கல்வியாளர்கள் சில அடிப்படைகளையும் நெறிமுறைகளையும் பின்பற்ற வேண்டும். மொழிக் கல்விக்கென உள்ள இவ்வியல்புகளையும் முறைமைகளையும் வழியொற்றியமையாக் கலைத்திட்டமும் பாடத்திட்டமும் முழுமையான பலன்களை ஈட்டுவதில்லை என்பது அனுபவ உண்மையாகும்.

மொழித்திறன்களை வளர்ப்பதே மொழிக்கல்வியின் அடிப்படை

மொழிக் கல்வி என்பது திறன் சார்ந்தது; உள்ளடக்கம் சார்ந்ததன்று. மொழிக் கல்வியின் மூலம் அடிப்படை மொழித்திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய திறன்களில் மாணவர்களுக்குத் தொடக்கநிலையிலேயே நல்ல அடித்தளத்தை உருவாக்கித் தருதல் அவசியமாகும். இந்த நான்கு திறன்களுள்ளும் வாய்மொழித் திறன்களான கேட்டலுக்கும் பேசுதலுக்கும் தொடக்கநிலைகளில் கூடுதல் முக்கியத்துவம் தேவைப்படும். அயல்நாடுகளில் வாழும் பிள்ளைகள் பலரும் வீட்டுப்பின்னணியில் தமிழ் பேசும் வாய்ப்பற்றவர்களாய் இருப்பர். சுற்றுச்சூழலிலும் அதற்கு வாய்ப்பிருப்பதில்லை. இத்தகையோருக்குத் தமிழ் வகுப்பறையே தமிழ் அறிமுகமாகும் இடமாய் அமையலாம். அது மட்டுமே தமிழ் பேசிப் பழகும் இடமாயும் அமையலாம். இதனை மனத்திற்கொண்டு ஆசிரியர்கள் மாணவர்களின் மொழி குறித்த அச்சத்தைப் போக்கி, உற்சாகத்தைப் பெருக்கி வாய்மொழித் திறன்களைப் படிப்படியாக வளர்க்க முற்பட வேண்டும். இந்நிலையில் மாணவர்களுக்கு மொழி எள்ளளவும் சுமை மிக்கதாய்த் தெரியக்கூடாது. ஆர்வ மிகுதியில் ஆசிரியர்கள் மேற்கொள்ளும் சில முயற்சிகள் எதிர்மறையான விளைவுகளைத் தந்துவிடலாம். முதற்கோணல் முற்றும் கோணல் என்பது போல அது மொழிமீது மாணவர்களுக்கு வாழ்நாள் முழுதும் கசப்புணர்வு ஏற்படக் காரணமாகிவிடும். அதனாலன்றோ, நம் முன்னோரும் சான்றோரும் கதைகளின் வழியாகவும் பாடல்களின் வழியாகவும் பிள்ளைகளுக்கு மொழியை அறிமுகப்படுத்தியுள்ளனர். 'குழந்தைகளுக்குக் கதை கேட்பது மிகுந்த உற்சாகத்தைத் தரவல்லது. கதை கேட்பதைப் போலவே, கேட்ட கதையைச் சொல்வதிலும் அவர்களுக்கு ஆர்வம் உண்டு. சிறுவர் பாடல்களையும் கதைகளையும் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தும் முயற்சியில் கிடைக்கும் வெற்றியே மொழிக் கல்விக்கு நல்ல தொடக்கமாய் அமையும் என்பது கல்வி நிபுணர்கள் ஒப்புகின்ற கருத்தாகும்.

தமிழின் தன்மையறிந்து கற்பித்தல்

தமிழ் இரட்டை வழக்கு மொழி. பேச்சுத்தமிழ், எழுத்துத்தமிழ் ஆகிய இரு வழக்குகளிடையே உள்ள வேறுபாடுகளை இயல்பான முறையில் மாணவர்களுக்கு உணர்த்த வேண்டும். வாய்மொழித்திறன்களைப் பயிற்றுவிக்கும்போது ஆசிரியர்கள் இயல்பான பேச்சுத்தமிழ் வடிவத்தை மாணவர்கள் கேட்கவும் பேசவும் செய்ய வேண்டும். அன்றாட வாழ்வில் தமிழ் வழங்கப்படுகின்ற நிலையில் பயிற்சி பெறுவது மாணவர்களுக்குத் தன்னம்பிக்கை ஊட்டுவதாயும் மொழியின் இயல்பு நிலையைக் காட்டுவதாயும் அமையும். அயல்நாடுகளில் தமிழ் மொழி பயிற்றுவோர் மாணவர்களின் மொழித்தரத்திற்கு ஏற்ப இதில் தனிக்கவனம் செலுத்துதல் இன்றியமையாத் தேவையாகும். பேச்சுத்தமிழில் அதிகப் புழக்கத்திலுள்ள சொற்களையும் தொடர்களையும் வலியுறுத்திக் கற்பிப்பதும் மாணவர்களின் தன்னம்பிக்கையை அதிகரிக்க உதவும்.

வாய்மொழித்திறன்களிலும் படித்தல் திறனிலும் நல்ல அடித்தளத்தை உருவாக்கல்

வாய்மொழித் திறன்களில் மாணவர்களுக்குத் தக்க பயிற்சிகள் வழங்கிய பிறகு, பொருத்தமான தருணத்தில் படித்தல் திறன் வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும். மாணவர்களை ஈர்க்கும் கதைகளை வண்ணப்படங்களின் துணைகொண்டு அவர்களுக்கு உரக்க வாசித்துக் காட்டிப் படித்தலில் ஆர்வத்தைத் தூண்ட வேண்டும். 'வாய்மொழிப் பயிற்சிக்கு அனுகூலமாயிருக்கும் கதைகள்,படங்கள்,உரையாடல்கள், பாடங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்திச் சொற்கள் சொற்றொடர்கள் ஆகியவற்றின் கருத்தை மாணவர்களுக்கு நன்கு விளக்க வேண்டும். இவ்வாறு தரும் பயிற்சிகளினால் குழந்தைகளின் மனம் பக்குவப்பட்டு அவர்களிடம் கருத்துணரும் ஆற்றல் சிறிது சிறிதாக வளரத் தொடங்கும். அவர்களுக்கு ஆர்வம் எழும் காலந்தான் குழந்தைகளுக்குப் படிப்பைத் தொடங்குவதற்கு ஏற்ற காலமாகும். படித்தலில் மாணவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்திவிட்டால் பிறகு மொழி சார்ந்த திறன்கள் படிப்படியாக அவர்களிடம் வளரக் காணலாம். அயல்நாடுகளில் கல்வியாளர்கள் எதிர்நோக்கும் மிகப் பெரிய சவால், தமிழ் மாணவர்களிடம் தமிழில் படிக்கும் ஆர்வத்தை ஊக்குவித்தலாகும். மாணவர்கள் முதன்மொழியில் படிப்பதில் காட்டும் ஆர்வத்தைத் தமிழ் நூல்கள் படிப்பதில் காட்டுவதில்லை. ஆசிரியர்கள் வகுப்பறைச் சூழலிலும் வகுப்பறைக்கு அப்பாலும் படித்தல் ஆர்வத்தைத் தூண்டும் மொழி நடவடிக்கைகளைத் திட்டமிட்டு நடத்த வேண்டும். போட்டிகள் மூலமாகவும் பகிர்வரங்கங்கள் மூலமாகவும் மாணவர்களின் படிக்கும் ஆர்வத்தை ஊக்குவிக்கவும் பாராட்டவும் ஆசிரியர்கள் முனைய வேண்டும்.

மொழி பயிற்றல் வாய்மொழித்திறன்களில் தொடங்கிப் படித்தலில் தொடர்ந்து, பிறகே எழுதுதல் திறனுக்கு முன்னேற வேண்டும். இதுவே மொழி கற்றலின் இயல்பான முறையாகும். மொழியில் அடிப்படையான சொல் வளத்தைக் கேட்டல், பேசுதல், படித்தல் ஆகிய திறன்கள்வழிப் பெற்ற மாணவருக்கு எழுதுதல் பயிற்சி தரும்போது ஏனைய மூன்று திறன்களின் வலியுறுத்தலைக் குறைத்துவிடலாம் எனச் சிலர் எண்ணுகின்றனர். எழுத்துத் திறனில் மட்டும் பயிற்சி மேல் பயிற்சி தந்து மொழியை மாணவனிடம் சேர்த்துவிடலாம் என்னும் மனப்போக்கு மிகத் தவறானது.

மாணவர்கள் பலரும் மொழியை வெறுப்பதற்கு இந்த அணுகுமுறையே முக்கியக் காரணமாகும். கேட்டல், பேசுதல், படித்தல் திறன்களின் அடைவுநிலைகளே எழுத்துத்திறனாக வெளிப்படும் என்னும் யதார்த்தத்தை உணர்ந்து ஆசிரியர்கள் செயற்பட வேண்டும்.

அன்றாட வாழ்வில் பயன்படும் கருத்துப்பரிமாற்றத்திறன்கள்

கொள்திறன் எனப்படும் கேட்டல், படித்தல் திறன்களின் வாயிலாகப் பெற்ற அறிவை மாணவர்கள் ஆக்கத்திறன்என்னும் பேசுதல், எழுதுதல் திறன்கள் வாயிலாக வெளிப்படுத்துவர். மாறிவரும் இன்றைய கல்விச் சூழலில், பேசுதல், எழுதுதல் ஆகிய ஆக்கத்திறன்களின் எதிர்பார்ப்புகள் விரிவடைகின்றன. பேசுதல் திறன் என்பது வேறு;பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றத்திறன் என்பது வேறு; எழுதுதல் திறன் வேறு; எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றத்திறன் என்பது வேறு; இந்த அடிப்படையில் கல்வியாளர் பேசுதல், எழுதுதல் ஆகிய திறன்களைப் பயன்பாட்டுநிலையில் விரிவுபடுத்திக் காண விழைகின்றனர். நடைமுறை வாழ்க்கையில் தன்னம்பிக்கையுடன், தடுமாற்றமின்றிச் சரளமாகக் கருத்துப்பரிமாறிக் கொள்ளும் மொழித்திறன் வாய்ந்தமாணவர்களை உருவாக்குவதே தாய்மொழிக் கல்வித்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். அண்மைக்காலம் வரை நடப்பில் இருந்த பாடத்திட்டங்களில் பேசுதல், எழுதுதல் ஆகிய திறன்கள் பொதுமையான நிலையிலேயே குறிக்கப்பட்டிருந்தன. மாணவர்கள் தனிநிலையில் ஒன்றைக் குறித்துப் பேசவும், கருத்துகளை எழுதி வெளிப்படுத்தவும்பயிற்சி பெற்றனர். ஆனால்,நடைமுறை வாழ்வில் பொதுவான செய்திகள் குறித்து மற்றவரோடு பேச்சுவழியேயும், எழுத்துவழியேயும் தாய்மொழியில் கருத்துப்பரிமாறிக் கொள்ளும் திறன்கள் மாணவர்கள் பலருக்கும், குறிப்பாகத் தமிழ் பயிலும் மாணவர்களுக்குப் பெருஞ்சவாலாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. 'ஒரு மொழியில் குறிப்பிட்ட அளவு திறமை பெறுவதற்கு, அந்த மொழியை நடைமுறைக்கேற்ற நோக்கங்களுடன் பயன்படுத்தும் வாய்ப்புகளை மாணவர்கள் பெற வேண்டும் என்பதையும் ஆய்வுகள் காட்டுகின்றன. தாம் பள்ளியில் கற்கும் மொழி அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படுகிறது என்பதை மாணவர்கள் உணர்ந்தால், அவர்கள் வகுப்பில் அந்த மொழியைக் கற்பதில் அதிகக் கவனம் செலுத்துவார்கள். மொழி கற்றலும் கற்பித்தலும் வாழ்க்கைச் சூழலில்அதைப் பயன்படுத்துவதற்கே ஆகும். ஆகவே, பேசுதலோடு பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றத்திறனிலும், எழுதுதலோடு எழுத்துக் கருத்துப்பரிமாற்றத்திறனிலும் மாணவர்களுக்குத் தக்க பயிற்சியளிக்கும் வகையில் கலைத்திட்டங்களும் பாடத்திட்டங்களும் திருத்தியமைக்கப் பட்டுள்ளன. வகுப்பறைச் சூழலில் ஆசிரியர்கள் கருத்துப்பரிமாற்றத்திறன் வளர்ச்சியில் கூடுதல் முக்கியத்துவம் செலுத்துமாறு பணிக்கப்பட்டிருக்கின்றனர். அதற்கு ஆதரவாகப் பல மொழி சார்ந்த நடவடிக்கைகளும், தொழில்நுட்பம் சார்ந்த வளங்களும் தமிழ்மொழியில் உருவாகி வருவது தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் புதிய பரிமாணங்களாக அமைந்துள்ளன.

பண்பாட்டைப் போதிக்கும் மொழிக்கல்வி

மொழிக்கல்வி பண்பாடு சார்ந்தது; மனநலன் வளர்ச்சி சார்ந்தது. பிற பாடங்களைக் காட்டிலும் தாய்மொழிக் கல்வியின் வாயிலாகவே மாணவர்களுக்கு மரபு, பண்பாட்டு உணர்வினை எளிதில் ஊட்ட முடியும். ஓர் இனத்தவரின் செம்மாந்த வாழ்க்கைமுறையினையும் பண்பாட்டு மூலங்களையும் மரபுவழிப் பண்புகளையும் விளக்குவது அம்மொழியில் காணக்கிடக்கும் இலக்கியங்களே. தமிழ்மொழி தொன்மைமிகு மொழி மட்டுமன்று; உலகத்திற்கே பண்பட்ட வாழ்க்கைநெறிகளை எடுத்துரைக்கும் பண்பாட்டுச் சிறப்பும் இலக்கியச் செழுமையும் பெற்றுள்ள மொழியும் ஆகும்.

பண்பாட்டை வலியுறுத்தத் தவறுவதால் விளையும் தீமை

தமிழ்மொழியைப் பயிற்றுவதோடு நம் பண்பாட்டு முறைமைகளையும் மரபுவழிப் பழக்கவழக்கங்களையும் மாணவர்களுக்குவலியுறுத்துவது மிகவும் இன்றியமையாதது. மாணவர்கள் எந்த அளவுக்குத் தம் பண்பாட்டைப் பற்றியும் மரபுவழிப் பழக்கவழக்கங்களைப்பற்றியும் ஆழமாக அறிந்துகொள்கின்றனரோ அந்த அளவுக்குத் தம் இனத்தின் அடையாளத்தை உணரவும் கட்டிக்காக்கவும் முற்படுவர். மொழிக்கல்வியின்வழி இதனை நிறைவாகப் பெறத் தவறுகின்ற மாணவர்கள் தம் மொழி பற்றியும் பண்பாடு பற்றியும் குறையறிவு உடையவர்களாகவே இருப்பர். இந்த உண்மையைத் தமிழ்மொழியாசிரியர்கள் யாவரும் மனங்கொள்ளுதல் அவசியம். குறிப்பாக, புலம்பெயர்ந்து வாழும் தமிழ் பேசும் மக்கள் பலவிதக் கலாச்சாரத் தாக்கங்களுக்கு எளிதில் ஆட்படுவர். தம் மொழியிலும் பண்பாட்டிலும் ஆழமான ஊன்றுதல் இல்லாத இளையர்கள் பலரும் மேலைநாட்டுக் கலாச்சாரத்தில் மூழ்கித் திசைமாறிப் போகும் போக்கு இன்றைய தமிழ்ச்சமூகம் எதிர்நோக்கும் மிகப் பெரிய சவால் ஆகும். பலரும் தம் தாய்மொழியை மறந்து இனத்தைவிட்டு அந்நியப்பட்டுப் போவதற்கு இளவயதில் அவர்களுக்கு முறையாக ஊட்டப்படாத பண்பாடு சார்ந்த கல்வியே முக்கியக் காரணமாகும்.

வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஒழுக்கக்கல்வி

பண்பாட்டோடு நெருங்கிய தொடர்புடையது நல்லொழுக்கமாகும். உலக மொழிகளுள் வாழ்க்கைக்குப் பயன்படும் நல்லொழுக்கங்களையும் விழுமியங்களையும் எடுத்துரைக்கும் நீதிநூல்கள் நிரம்பப்பெற்றுள்ள மொழி தமிழ் ஆகும். நீதிப் போதனைகளின் களஞ்சியமாக விளங்கும் திருக்குறளைப் பெற்றிட்ட பெருமையுடையதும் தமிழே ஆகும். நற்சிந்தனைகளை விதைப்பதே நிறைவான கல்வி என்று சான்றோர் மொழிவர். ஆனால்,இந்த இலக்கை அடியொற்றி எத்தனை பள்ளிகள் செயற்படுகின்றன?இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் ஒழுக்கத்தைப்பற்றி நம் மாணவர் சமுதாயம் கொண்டுள்ள மனப்பாங்கு கவலை தருவதாகவே உள்ளது. இதனால் ஏற்படக்கூடிய பெரும்பாதிப்பைத் தொலைநோக்கோடு எண்ணிப்பார்த்துச் சிங்கப்பூர்க் கல்வித்துறை இன்று ஒழுக்கம் சார்ந்த கல்வியையே பெரிதும் வலியுறுத்துகிறது. நல்லொழுக்கச் சிந்தனைகளையும் விழுமியங்களையும் மாணவர்கள் மனத்தில் இளவயது முதல் பதியச்செய்வதும்

தாய்மொழிக் கல்வியின் முக்கிய நோக்கங்களுள் ஒன்றெனக் கருதி நாம் கடப்பாட்டுடன் செயற்பட வேண்டும். பிற பாடங்களைக் காட்டிலும் தாய்மொழிவழியே நல்லொழுக்கச் சிந்தனைகளை மாணவர்கள் மனத்தில் எளிதில் விதைத்துவிடலாம். தொடக்கநிலையில் கதைகள், பாடல்கள் வாயிலாக நன்னெறிப் பண்புகளை மாணவர்களுக்கு ஊட்டும் பொறுப்பு ஆசிரியர்களைச் சார்ந்தது. தமிழ்மொழியில் மழலையர் வகுப்புமுதல் வழங்கிவரும் நல்லொழுக்கச் சிந்தனைக்கதைகள் இன்றளவும் கலைத்திட்டங்களில் இடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. 'ஆமையும் முயலும்' என்னும் கதையில் எத்தனையோ விலங்குகளுள் ஆமையும் முயலும் கதைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பின்னணியில் 'ஆமையும் முயன்றால் வென்றிடலாம்' என்னும் விழுமியம் சார்ந்த காரணமுண்டு. 'காகமும் நரியும்' என்னும் பழங்கதையில் வடையைத் திருடிய காகம் நரியிடம் ஏமாறிப்போனதும் விழுமியத்தின் அடிப்படையில் அமைந்த நீதிக்கதையே.இவ்வாறு, இளம் வயதிலேயே விதைக்கப்படும் நற்சிந்தனைகள் வாழ்நாள் முழுதும் மாணவர்களுக்குநன்னடத்தையை வலியுறுத்தி வழிகாட்டும்.

உற்சாகமூட்டும் தமிழ்ப் பாடங்கள்

தாய்மொழிக் கல்வி நடவடிக்கை சார்ந்ததாக இருத்தல் வேண்டும். எல்லாப் பாடங்களிலும் நடவடிக்கை சார்ந்த அணுகுமுறையே துடிப்பான கற்றலுக்கு வழிவகுக்கும். இவற்றுள்ளும், தாய்மொழிப் பாடம் அதிகளவு நடவடிக்கை சார்ந்ததாக அமைதல் வேண்டும். ஏனெனில், நடவடிக்கைகளின் வாயிலாகத்தான் திறன் வளர்ச்சிக்குத் தகுந்த பயிற்சி வழங்கிட முடியும். மாணவர்களின் திறம் அறிந்து ஆசிரியர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கை சார்ந்த கற்பித்தல் அணுகுமுறைகளே உற்சாகமிக்க வகுப்பறைச் சூழலை உருவாக்கும்; மாணவர்களின் கற்றல் ஆர்வத்தை அதிகரிக்கும். இத்தகைய நடவடிக்கை சார்ந்த கற்பித்தல் அணுகுமுறைகளின் மூலம் பெறுகின்ற அனுபவக் கல்வியே நீடித்த பயன் தரவல்லது. இந்த அடிப்படையை உணராத சிலர்,பாடம் முழுதும் மாணவர்களை இருக்கையிலேயே 'சிறை வைக்கும்' போக்குடையவர்களாய் இருக்கின்றனர். குறிப்பாக, அயல்நாடுகளில் தமிழ்மொழிப் பாடத்தின்போதுதான் தமிழ் பயிலும் மாணவர்கள் ஒருவரையொருவர் சந்தித்துத் தமிழில் உரையாடிக்கொள்ளும் வாய்ப்புள்ளது. அத்தகைய உரையாடல்களை ஆக்கபூர்வமான முறையில்வழிநடத்தி மாணவர்களிடையே கருத்துப்பரிமாற்றத்தை ஊக்குவிக்கும் மொழி நடவடிக்கைகளாக மாற்றியமைக்கலாம். மேலும், தமிழ்ப் பாடம் வகுப்பறையின் நான்கு சுவருக்குள் மட்டுமே இயங்க வேண்டும் என்றில்லை. வாய்ப்புக் கிடைக்குமானால் வகுப்பறைக்கு வெளியிலும், கற்றல் பயணங்களின் வாயிலாகவும் மொழிப்பாடம் நிகழ்த்தி மாணவர்களுக்கு உற்சாகமூட்டலாம். இருபத்தோராம் நூற்றாண்டில் முக்கியமானவையாகக் கருதப்படும் படைப்பாக்கத்திறனும், கூடிச் செயலாற்றும் சமூகத் திறனும்,ஆளுமைத்திறனும் வெளியுலக அனுபவத்தை மாணவர்களைப் பெறச்செய்வதன் மூலம் எளிதில் கைவரப்பெறும். அவ்வாறின்றி, வகுப்பறையில் பாடநூல்களை மட்டும் வைத்துக்கொண்டு எவ்வளவு முயன்றாலும் அத்திறன்களை மாணவர்களிடம் சேர்க்க வழியில்லை.

மாணவர்களை ஈர்க்கும் தொழில்நுட்பம்

இக்கால மாணவர்கள் தொழில்நுட்பத்திறம் வாய்ந்தவர்களாக இருக்கின்றனர். மற்றப் பாடங்களில் உள்ளதுபோல் தமிழ்ப் பாடங்களிலும் தகவல் தொழில்நுட்பப் பயன்பாடு இருக்க வேண்டும் என்று பெரிதும் எதிர்பார்க்கின்றனர். ஆசிரியர் தம் பயிற்றுமுறையில் தேவையான இடங்களில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திப் பாடம் நடத்தும்போது இயல்பாகவே மாணவர்களின் உற்சாகநிலையும் ஈடுபாடும் அதிகரிப்பதைக் காணலாம். எனவே,இயல்பான வகுப்பறை சார்ந்த பாடத்தைத் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பாடமாக நடத்துவதற்குப் பாட அறிவு, கற்பித்தல் முறை, மதிப்பீட்டு நடவடிக்கை எனப் பலவற்றுள் தக்கவாறு மாற்றங்களைச் செய்துகொள்ளும் திறம் படைத்தவராகத் தமிழாசிரியர்கள் தங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும்.மாணவர்களின் கற்றல் தேவைகளைத் தனிநிலையிலும், குழுநிலையிலும், வகுப்புவாரியாகவும் பகுத்துக்கொண்டு மொழி நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிந்திருக்க வேண்டும். தகவல் தொழில்நுட்பக் கூறுகள் இடம்பெற்றுள்ள பாடமெனில் அது தரமான பாடமாகவே அமைந்துவிடும் என்னும் எண்ணப்போக்கும் மிகத் தவறாகும்.சில வேளைகளில் தொழில்நுட்பப் பயன்பாடு ஏதுமின்றி வகுப்பறைச் சூழலில் ஆசிரியர்கள் ஈடுபாட்டோடுநடத்தும் பாடமும் நிறைவான பலனை அளிக்கக்கூடும். கற்றலையும் புரிந்துணர்வையும் வளர்க்க ஏற்புடைய வகையில் தொழில்நுட்பத்தைக் காரண காரியம் கருதி மட்டுமே ஆசிரியர் பயன்படுத்த முனைய வேண்டும். தேவையில்லா இடங்களில் தொழில்நுட்பப் பயன்பாடு எதிர்மறையான விளைவுகளைத் தருமென்பதும் உண்மையே.

இல்லம், பள்ளி, சமூகம் என்னும் முத்தரப்பின் கூட்டுமுயற்சி

இன்றைய சூழலில், கற்றல் என்பது பள்ளிகளை மட்டும் சார்ந்தில்லை; இல்லங்களுக்கும் சமூகத்துக்கும் அதில் நிறையப் பங்குண்டு. மாணவர்கள் வகுப்பறைகளில் கற்றுக்கொள்வதைக் காட்டிலும் பல மடங்கு கற்றலை வகுப்பறைக்கு வெளியே அனுபவக் கல்வியாகப் பெற்றுக்கொள்கின்றனர். தமிழ் மொழி பயிற்றுமுறை பயனாக்கமுறையில் மேம்பட வேண்டுமானால், இல்லம், பள்ளி, சமூகம் ஆகிய மூன்று தரப்புகளின் கூட்டுமுயற்சி மிக அவசியமாகும். அதற்குத் தொழில்நுட்பமும் நமக்குப் பெரிதும் துணைபுரிகிறது. கணினி, இணையம் ஆகியவற்றின் துணைகொண்டு மொழி சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதாலும் தரமான வீட்டுப்பாடங்களைத்தருவதாலும் மாணவர்களின் மொழி ஈடுபாட்டை ஆசிரியர் எளிதில் வளர்க்கலாம். வீட்டில் பிள்ளைகள் இயன்றவரை தமிழில் உரையாடப் பெற்றோர்கள் ஊக்குவிக்க வேண்டும். அதற்கு, பெற்றோர்களே முன்னுதாரணமாக விளங்கவும் வேண்டும். ஊடகங்களில் தமிழ் நிகழ்ச்சிகளைப் பார்ப்பதை வழக்கமாக்கிக்கொள்ள வேண்டும். இன்று தமிழ் மொழியை ஊடகங்களே வாழ வைத்துக்கொண்டிருக்கின்றன என்றால் அது மிகையில்லை. சிங்கப்பூரிலும் சரி,இந்தியா, இலங்கை தவிர்த்த பிற நாடுகளிலும் சரி, தமிழ்ச் சமூகம் மிகச் சிறிதே. எனவே,சமூகநிலையில் தமிழ் பேசும் மக்கள் ஒன்றுகூடித் தமிழ்மொழி வளர்ச்சிக்கு ஒன்றிணைந்து பாடுபட வேண்டும். சிங்கப்பூரில் கடந்த ஐந்து ஆண்டுகளில் இளையரிடையே தாய்மொழி

குறித்தும் தமிழ்மொழி குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்தப்பயன்மிகு முயற்சிகளில் அரசாங்கமும் தமிழ்மொழி அமைப்புகளும் ஒன்றிணைந்து செயலாற்றி வருகின்றன. அந்த முயற்சிகளின் பயனாக இன்று தமிழ் மாணவர்கள் மொழிமீதும் பண்பாட்டின்மீதும் அதிக ஈடுபாடு காட்டுகின்றனர். பிற இனத்தவருக்கும் நம் பண்பாட்டின் சிறப்பியல்புகளை எடுத்துரைக்கின்றனர்.

அயல்நாடுகளில் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு எல்லாருக்கும் இத்தகைய வாய்ப்பு வசதிகள் அரசாங்கத்திடமிருந்து கிடைக்குமென்பது உறுதியில்லை. தமிழ்மொழி தொடர்ந்து ஒரு வாழும் மொழியாக விளங்க வேண்டுமெனில்,எந்நாட்டிலிருந்தாலும். அந்நாட்டில் இருக்கும் தமிழ்ச்சமூகமே அப்பொறுப்பை ஏற்றுச் செயற்பட வேண்டும். இல்லம், பள்ளி, சமூகம் ஆகியவற்றின் கூட்டுமுயற்சியே நம் இளையரிடையே தமிழுணர்வை ஊட்டி, மொழியை ஈடுபாட்டுடன் பயில்வதற்கு வழிகாட்டி உதவும்.

முடிவுரை:

அயல்நாடுகளில் தமிழை தொடர்ந்து ஒரு வாழும் மொழியாக நிலைக்கச் செய்யப் பெருமுயற்சி தேவைப்படுகிறது. பிற மொழிகளின் தாக்கம் நம் இளம் தலைமுறையினரைத் தமிழிடமிருந்து தூரப் பிரித்துச்செல்லும் அபாயம் நம்மை என்றும் சூழ்ந்திருக்கும். ஒரு மொழியின் வாழ்வு அதன் பயன்பாட்டில் உள்ளது. பேசப்படாத எந்த மொழிக்கும் நீடித்த வாழ்வு என்பது இல்லை. இந்தச் சவாலை எதிர்கொள்ளச் சிறந்த வழி தமிழ்மொழி பயிற்றுமுறையில் நாம் பின்பற்றும் அடிப்படைகளும் நெறிமுறைகளும்தான். மாணவர்களின் மொழித்திறன் வளர்ச்சியில் நாம் பேணும் முறைமைகள் அவர்களுக்கு மொழியாற்றலைப் பெருக்கித் தமிழ் பேசும் தன்னம்பிக்கையைக் கூட்டும்; வாழ்வியலுக்கு ஊன்றுகோலாய் அமையும் பண்பாட்டுக் கூறுகளின் வலியுறுத்தல் இளையர்களுக்குத் தம் அடையாளத்தை எடுத்துரைத்துத் தனித்தன்மையைக் கட்டிக்காக்க உதவும்; மொழிக்கல்வியின் வாயிலாகப் பெறும் நல்லொழுக்கச் சிந்தனைகள் நல்ல பண்புநலன்களைச் சேர்த்து நாட்டுருவாக்கத்திற்குப் பயன்தரும் வகையில் நற்குடிமக்களை உருவாக்க உதவும்; உற்சாகமூட்டும் கற்பித்தல் முறைகளைக் கொண்ட தமிழ் வகுப்பறைகள் ஆர்வத்தோடு தமிழ் பயிலும் உந்துதலை மாணவர்களுக்கு ஏற்படுத்தும். இத்தகைய அடிப்படைகளையும் நெறிமுறைகளையும் வழியொற்றித் தமிழ்க் கலைத்திட்டங்களின் உருவாக்கமும் பயிற்றுமுறைகளும் மேற்கொள்ளப்பட்டால் இனி வரும் காலங்களில் தமிழ் தொடர்ந்து ஒரு வாழும் மொழியாகச் செழித்தோங்கும்.

Kalvi: An Adaptive Tamil mLearning System

Keshava Rangarajan, Chief Architect, Landmark (Halliburton) Corporation
Jayaradha Natarajan, Software consultant at TIBCO
Arivoli Tirouvingadame, Principal Member of Technical Staff, Oracle America, Inc.

Abstract: Learning Management Systems (LMS) in Tamil are at an early stage today. They typically model users as a homogenous group with content representing a static structural organization of the course material determined by the educator. In most cases, LMS users who are the primary consumers, represent heterogeneous groups with diverse learning characteristics, needs and goals. This lack of sophistication in LMS is particularly noticeable when they are used to deliver course content that are typically taught in languages other than Tamil. The *adaptation* of e/m-education systems to an individual or to a group based on their characteristics, expectations, knowledge, background and preferences of the students is understood as critical but is under served today. Emphasis is moving slowly towards learner-oriented platforms and putting the learner's expectations, motivations, habits, learning styles, needs, etc. as the focus of interest. This paper delves into an LMS for Tamil language education. It also explores the mobility aspect of the LMS systems, which makes the e-learning systems available via mobile devices like iPad, iPhone, Android based devices, etc., thus making the LMS much more accessible and in line with current computing trends.

Keywords: Tamil, learning management systems, LMS, Data mining, Machine learning, Analytics, e-learning, m-learning, adaptive learning, mobile devices

Introduction

This paper proposes *Kalvi*, an adaptive Tamil mLearning System, which is based on the Sakai project. Sakai is a community of academic institutions, commercial organizations and individuals who work together to develop a common Collaboration and Learning Environment (CLE). The Sakai CLE is used for teaching, research and collaboration. It is a free, community source, educational software platform distributed under the Educational Community License. Sakai is a Java-based, service-oriented application suite that is designed to be scalable, reliable, interoperable and extensible.

Anatomy of an academic course

Before we begin, let's first take a closer look at the structure of a typical educational course. A course typically consists of an ordered sequence of learning modules. Each of these learning modules consists of a sequence of topics/lessons that introduce and illustrate concepts. The lessons could include quizzes at various points that test the learner's grasp of concepts and reinforces previously learned concepts. Such a course can be viewed as a directed, typically acyclic *graph* where modules and concepts (and potentially quizzes) form the *nodes*. These nodes are connected by *links* that represent the learner's transitions from topic to topic. Educators and students progress via links across the vertices (modules and concepts) from start to end during the life cycle of a course.

Non-adaptive and adaptive courses

In a *non-adaptive* course, the connecting links/arcs are static, pre-determined globally and follow a pre-determined path. In an *adaptive* course, firstly, the links are initially configured

based on the information (descriptive attributes) available about the learner. Additionally, there are many possible link flow paths. These paths are conditional i.e. based on an ongoing evaluation/scoring of the learner's progress through the topics over a given period. Additional nodes/topics may be brought in dynamically based on a dynamic evaluation of the learner's level of knowledge as she/he progresses through the course. The topics introduced are driven by analytical insight gained from community use.

Existing problems

To summarize, existing problems in Tamil LMSs are as follows:

1. There are very few modern Learning Management Systems for education via Tamil language especially ones that deliver content typically taught in other languages (like English)
2. Even if they do exist, these LMS systems deliver content in a static fashion; they do not take into account the user's preferences, level of skill, learning goals and other factors explicitly into account and use this as the basis for learning content delivery and learn from user activity

Data mining, Machine learning and Analytics in LMS

Data mining, Machine learning and Analytics forms the core of LMS systems.

- **Data mining and Machine learning:** Learning management systems and Learning Content management systems deal with volumes of data. Users consuming the course material leave a trail of data while performing their activities. These data can and needs to be mined to extract insight into learning patterns, learner groupings, Topic classifications (eg: easy, difficult, etc.). Machine learning techniques like Dynamic Regression, Support Vector Machines (SVM), Neural Net engines, etc. can be employed to mine the data to extract insight
- **Analytics:** Analytics plays a big role in LMSs. The broad promise of analytics is that new insights can be gained from in-depth analysis of the data trails left by individuals in their interactions with others, with information, with technology, and with organizations. At a high level, the following are the types of analytics of interest here:
    - **Learning Analytics:** Wikipedia defines Learning Analytics as the measurement, collection, analysis and reporting of data about learners and their contexts, for purposes of understanding and optimizing learning and the environments in which it occurs. Learning analytics are largely concerned with improving learner success.
    - **Academic Analytics:** Wikipedia describes Academic analytics as the term for Business Intelligence used in an academic setting. Academic analytics is the improvement of organizational processes, workflows, resource allocation, and institutional measurement through the use of learner, academic, and institutional data. Academic analytics, akin to business analytics, are concerned with improving organizational effectiveness.

Adaptive e-learning systems

Now let's take a look at adaptive e-learning systems. An e-learning system should be designed to match students' needs and desires as closely as possible, and adapt during course progression. It is considered to be adaptive if it is capable of:

1. Modeling users, monitoring the activities of its users;
2. Interpreting these on the basis of domain-specific models;
3. Inferring user requirements and preferences out of the interpreted activities, appropriately representing these in associated models; and
4. Acting upon the available knowledge on its users and the subject matter at hand, to dynamically facilitate the learning process.

Thus, adaptive e-learning system can be described as a personalized system, which is able to:

1. Perform content discovery and assembly,
2. Provide an adaptive course delivery, an adaptive interaction, and adaptive collaboration support

Architecture of KALVI system

The Kalvi system proposed in the paper is built on Sakai LMS platform.

At a high level, the Kalvi system has two parts to it:

1. Kalvi server
2. Kalvi client

Kalvi server

The Kalvi server is the backend module. It supports all the full-fledged features of a typical LMS. There is a central repository of the offered Course list. Educators can build and publish new courses via the publishing site. The students can search the course list and select their courses of interest and take them via the community site. The server has the Adaptive Learning system as well, which is responsible for making the LMS adaptive. All data is persisted in a central backend database.

Here is the architecture diagram of Kalvi:



Kalvi client

Kalvi supports both web based and mobile clients. Students can take a course via mobile devices like iPad, iPhone, Android based devices, etc. The mobile client downloads the course from the server and saves it locally. Along with the course, the client piece of the Adaptive learning system pertinent to the course is also downloaded to the mobile device. The student then takes the course in the mobile device. While taking a course from the mobile device, it is not required to stay connected to the server. That is, courses can be taken from the mobile devices both in *online* and *offline* modes. All the data obtained by monitoring and recording student activities during the course life cycle are persisted in a local database in the mobile device. When they are connected, the Kalvi server and client can sync up periodically.

Here is proposed sample screen shot of a typical Tamil course taken from iPad:



Here is proposed sample screen shot of a typical Tamil course taken from iPhone:



Concluding thoughts and future work

The key barrier here is not the veracity of the concept or the implementation of the LMS but it is their incorporation into the current educational processes and culture which is a rather static. This is more so in Tamil LMSs and Tamil educational systems today. This requires evangelization as well as a high level of engagement from all participants in the education process to effect a change. But this is the clear trend forward. Irrespective of the subjects and courses offered, the demography served, and the medium of languages delivered to, the learning methodologies and techniques are the same as they broadly rely on data mining, machine learning and analytics to deliver adaptive learner-centric content in mobile form factors for the current and next generation of learners. The promising aspect of this paper is that the proposed adaptive LMS system could be applied ubiquitously.

Acknowledgement

The proposed Kalvi LMS is based on the Sakai project. A free trial hosted instance of the Sakai CLE from Longsight (https://trysakai.longsight.com/portal) was used during this research. The authors would like to acknowledge the contributions of all the people involved in Sakai project and Longsight, and their numerous colleagues.

References

- U.S. Department of Education - "Enhancing Teaching and Learning Through Educational Data Mining and Learning Analytics", an Issue brief. http://www.ed.gov/edblogs/technology/files/2012/03/edm-la-brief.pdf
- George Siemens & Dragan Gasevic, Caroline Haythornthwaite & Shane Dawson, Simon Buckingham Shum & Rebecca Ferguson, Erik Duval & Katrien Verbert, Ryan S. J. d. Baker - Society for Learning and Analytics Research - "Open Learning Analytics: an integrated & modularized platform", July 28, 2011 http://solaresearch.org/OpenLearningAnalytics.pdf
- http://www.sakaiproject.org/
- http://en.wikipedia.org/wiki/Sakai_Project
- http://en.wikipedia.org/wiki/Machine_learning
- http://www.longsight.com/
- https://trysakai.longsight.com/portal
- https://moodle.org/
- www.apple.com/ipad
- www.apple.com/iphone

தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பித்தலில் உளமொழியியலின் பங்களிப்பு

கவிதா நகுலன்

உளமொழியியல் என்பது மொழி உற்பத்தி, மொழித்தேட்டம், மொழியைப் புரிந்து கொள்ளல் ஆகிய விடயங்களினூடு தொடர்புடைய உளச் செயன்முறைகளைப்பற்றி ஆராய்வதாகும். பொதுவாக மொழித்தேட்டம் என்பது பெற்றோர் அல்லது பராமரிப்பாளர்களிடமிருந்து முதன் முதலில் குழந்தைகளால் பெறப்படுவதாகும். இயல்பாக வீட்டுச் சூழலில் இடம்பெறும் இந்த மொழித்தேட்டம் பின்னர் படிப்படியாக முன்பள்ளிக்கல்வி, பாடசாலைக்கல்வி போன்றவற்றினூடாக மொழி கற்றலை நோக்கி முன்னேறுகிறது. பேச்சுமொழி, எழுத்துமொழி வேறுபாட்டையும் பிள்ளைகள் விளங்கிக் கொள்கிறார்கள். உயர்நிலைத் தேடலுக்கேற்ப இலக்கண விதிகளும், இலக்கியச் செழுமையும் பின்னரே அறிந்து கொள்ளப்படுகின்றன.

மொழியைப் புரிந்து கொள்ளல் என்பது பிறப்புக்கு முந்திய கரு நிலையிலேயே இடம்பெறத் தொடங்குகிறது. அந்த வகையில் மொழித்தேட்டத்திற்கு முன்னரே மொழியைப் புரிந்துகொள்ளல் தொடங்கி விடுகிறதெனலாம். புத்தாக்க முயற்சியாயினும், கருத்துப்பரிமாற்ற வெற்றியாயினும் புரிந்து கொள்ளல் இன்றிச் சாத்தியமில்லை.

மொழி உற்பத்தியானது மொழித் தேட்டத்தினூடு கூடவே வளர்ந்து செல்கிறது. உரிய வயதுகளில் சரியான மொழியாற்றலைப் பிள்ளைகள் கொண்டுள்ளார்களா என்பதைத் தெரிந்து கொள்வதற்கு மொழிவிருத்திப் படிநிலைகள் அல்லது விருத்திநிலை மைல்கற்கள் என்பது உள மொழியியலாளரால் வெளியிடப்பட்டுள்ளது. இதற்கேற்ப பிள்ளைகளுடைய மொழியாற்றல் தொடர்பான அடைவு மட்டங்களைக் கணிக்க முடியும்.

மொழி கற்றல் தொடர்பான கொள்கைகள், மொழி கற்பித்தல் தொடர்பான கொள்கைகளும் உளமொழியியலில் உள்ளடங்குகின்றன. இவை மட்டுமின்றிப் பேச்சினை உள்வாங்குதல், மனித தொடர்பாடல் நடத்தைக்கான உயிரியல் அடிப்படை, சொற்கள், வாக்கியங்களைச் செயன்முறைப்படுத்தல், வாசித்தல் மாதிரிகள்,இரு மொழியமும் இரண்டாம் மொழித் தேட்டமும் போன்ற பல் விடயங்கள் உளமொழியியலின் பரப்புக்குள் உள்ளடங்குகின்றன.

இத்தகைய உளமொழியியலினுள் உள்ளடங்குகின்ற விடயங்களைத், தமிழ்மொழி கற்பித்தலுக்கு நாம் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதனைத் தெரிந்து கொள்ளுதல், தமிழ்மொழி கற்பித்தலை மேலும் மெருகூட்டும் எனலாம்.

பிரயோக மொழியியலின் ஒரு பகுதியாக மொழி கற்பித்தல் இடம்பெறுகிறது. இக்கட்டுரை தமிழ்மொழியைத் தாய்மொழியாகவோ, இரண்டாம் மொழியாகவோ கற்பித்தலுக்கு உளமொழியியல் அறிவை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதனைப் பற்றியதாக அமைந்துள்ளது.

தாய்மொழியாகத் தமிழைக் கற்பித்தல் :

தாய்மொழியானது ஒவ்வொருவரினாலும் இயல்பாகத் தேடிப் பெறப்படுகிறது. நொம் சொம்ஸ்கி என்ற மொழியியல் அறிஞரின் கருத்தின்படி, ஒவ்வொரு பிள்ளையும் பிறக்கும்போதே மொழியைத் தேடிப் பெறுவதற்கான ஆற்றலைக் கொண்டுள்ளது. இதனை அவர் "மொழித் தேட்ட சாதனம்" (LAD) என்கிறார். வில்ஹெல்ம் வொன் ஹும்போல்ற் என்ற அறிஞரும், "ஒவ்வொரு பேசுவோரினதும் மூளை அல்லது மனதில் புத்தாக்கப் பண்புள்ள மொழியியல் திறமையானது உள்ளுறைந்து காணப்படுகிறது" என்கிறார்.

தாய்மொழியாகத் தமிழைக் கற்பிப்பதற்கு இந்த மொழித்தேட்டம் பற்றிய அறிவு உதவுகிறது. அதாவது பேசுதல், கேட்டல் போன்ற மொழித்திறன்களே இங்கு மிகப் பொருத்தமாக அமைவதால், ஒன்று பிள்ளைகள் மொழியாற்றலைப் பெறுவதற்குச் சாதகமான சூழலை ஆசிரியர் தாமாக உருவாக்கலாம். உதாரணமாக குறிப்பிட்ட நேரத்தை வழங்கி, அந்நேரத்தினுள் பிள்ளைக்குத் தெரிந்த ஒரு விடயம் பற்றிய சொற்களைக் கூறுமாறு கேட்டு அதில், குறித்த எண்ணிக்கைக்கேற்ப சொற்களைத் தெரிந்து வைத்திருப்போருக்குப் பாராட்டு அல்லது பரிசும் பாராட்டும் வழங்கலாம்.

இன்னொரு விடயம் வீட்டுச் சூழலில் மொழித் தேட்டத்துக்கு உகந்த சூழலை உருவாக்கும்படி பெற்றோர்களிடம் வலியுறுத்தலாம்.

லென்பேர்க், பெரி போன்ற அறிஞர்கள் குறிப்பிட்ட வயது மட்டங்களில் பிள்ளைகளால் உற்பத்தி செய்து கொள்ளக்கூடியதும், பிள்ளைகளால் புரிந்து கொள்ளக்கூடியதுமான மொழிக் கூறுகளைப் பட்டியலிட்டுள்ளார்கள். அந்த வகையில் பிள்ளைகள் தமது வயதுக்கேற்ற மொழி அடைவு மட்டத்தைக் கொண்டுள்ளார்களா என்பதை ஆசிரியர் மதிப்பிடத் தெரிந்து கொள்வது அவசியமாகும். இவ்வாறு மதிப்பிடுவதற்கு ஆசிரியர்கள் மொழிவிருத்திப் படிநிலைகள் அல்லது மைல்கற்களை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.

இரண்டாம் மொழியாகத் தமிழக் கற்பித்தல்

இரண்டாம் மொழியாகத் தமிழைக் கற்பிப்பதற்கும் மொழித் தேட்டம் பற்றிய அறிவு உதவுகிறது. அதாவது இரண்டாம் மொழி தொடர்பான சொற்களைப் பெற்றோர் பயன்படுத்துவது இதற்கு உதவும் ஒரு வழியாகும். இதன் மூலம் இரண்டாம் மொழியிலுள்ள ஒலியன்கள் சிலவற்றை உச்சரிப்பதற்கும் பிள்ளை கற்றுக்கொள்ள முடியும்.

மேலும் இரண்டாம் மொழியை முறையாகக் கற்பிக்க முனையும் ஆசிரியர்களும், தமிழைக் கற்பிக்கும்போது தமிழ்ச்சொற்களை அறியச் செய்வது பயனுள்ளதாகும். அதாவது படங்களின் கீழே தாய்மொழிச் சொற்களை எழுதுவது போலவே தமிழ்மொழிச் சொற்களை எழுதுவதும், வகுப்பில் தமிழ்மொழிச் சொற்களைப் பயன்படுத்துவதும் இதற்குப் பெரிதும் உதவுகிறது.

பொதுவாக மொழித்தேட்ட சாதனமும் (LAD) மொழித்தேட்டத்துக்கான சமூக ஆதரவு முறை (LASS)யும் மொழித்தேட்டத்துக்குத் தேவை என்ற வகையில் ஆசிரியர்கள் இதனை

உணர்ந்து சமூக ஆதரவு வழங்குவதற்கான சந்தர்ப்பங்களைப் பிள்ளைகளுக்கு அளிப்பது மிகுந்த பயன்தரும்.

மொழியியலாளரின் கருத்தின்படி பிள்ளைகள் தமது தாய்மொழிக் கற்றலின்போது சில மட்டங்களில் எய்துகின்ற வெற்றிகள் இலகுவான இரண்டாம் மொழிக் கற்றலுக்கு வாயிற் அமைகின்றன. இரண்டாம் மொழிக் கற்பித்தற் கொள்கைகள் மற்றும் இரண்டாம் மொழித் தேட்டக் கொள்கைகள் என்பவற்றினூடாக, தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பித்தலில் உளமொழியியல் எவ்வளவு தூரம் உதவுகிறது என்பதை நோக்குவோம்.

இலக்கண மொழிபெயர்ப்பு முறையின்படி மாணவர்களது தாய்மொழி ஊடாக இரண்டாம் மொழியைக் கற்பிப்பதனைக் கூறலாம். இங்கு இரண்டாம் மொழி தொடர்பான வாசிப்பு மற்றும் மொழிபெயர்ப்பு என்பன அதிகம் இடம்பெறும் எனினும், இதில் உரையாடலில் பங்கேற்றல் பண்பு குறைவாக உள்ளது. ஓரளவுக்கு மாணவர்கள் இரண்டாம்மொழி இலக்கணத்தோடு பரிச்சயமாக விளைவர் எனினும் அது முழுமையாக இடம்பெறும் என்று கூறவியலாது.

நேர்முறையின்படி தாய்மொழிப்பயன்பாடு பெரிதும் தவிர்க்கப்பட்டு நேரடியாக இரண்டாம் மொழிக் கூறுகளைப் பயன்படுத்தியே இரண்டாம் மொழிக் கற்றல் ஊக்குவிக்கப்படுகின்றது.

ஆனால் பொதுவாக இரண்டு முறைகளிலும் இருந்து நேர்மறையான விடயங்களைப் பயன்படுத்தி மொழியைக் கற்பிப்பதே அதிகளவு இடம்பெறுகிறதெனலாம்.

கேள்மொழிமுறை

கேள்மொழி முறையின் மூலம் இரண்டாம் மொழியைக் கற்பிக்க முற்படும்போது பின்வரும் விதமாக அது அமையம். இரண்டாம் மொழியில் வடிவமைக்கப்படுகின்ற ஓர் உரையாடல் இங்கு அவசியம். ஆசிரியர் இதனை முதலில் நிகழ்த்துவார். பின்பு இது பற்றிய வினாக்கள் கேட்கப்பட்டு இரண்டாம் மொழி மூலமாகவே விடையளிக்கப்பட வேண்டும். இலக்கணம் பற்றிய சிறு அறிமுகம் ஒன்றும் நிகழும் எனினும் பிள்ளைகள் தாமாகவே இரண்டாம் மொழியில் பதிலளிக்கக் கூடிய ஆற்றல் எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்பாட்டு முறைகள் என்ற வகையில் நோக்கும்போது வாய்மொழி மூலமான முறை அல்லது சூழலை அடிப்படையாகக் கொண்ட மொழி கற்பித்தலை இது குறிக்கிறது. இதில் அதிகளவு இரண்டாம் மொழிச் சொற்தொகுதியைத் தெரிந்திருத்தலும் இரண்டாம் மொழியிலுள்ள வாக்கியங்களைத் தெரிந்திருத்தலும் முதன்மை பெறுகின்றன.

ஊடாட்ட முறைகள் என்று நோக்கும்போது வரிசை அல்லது தொடர்முறையைப் பார்த்தால், இரண்டாம் மொழியிலுள்ள வேர்ச்சொற்கள், இலக்கணம், வினைச்சொல் வடிவங்களைப் பயன்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இரண்டாம் மொழி பேசுவோரைப் போலச் செய்தல், கேட்டல், இரண்டாம் மொழி பேசுவோருடன் கலந்துரையாடல் போன்றனவும் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன.

தொடர்பாடல் மூலம் மொழி கற்பித்தலும் ஊடாட்ட முறைகளில் ஒன்றாகும். இதில் இரண்டாம் மொழி மூலமான ஊடாட்டம் அதாவது தொடர்பாடலுக்கு அதிமுக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இன்னும் ஒரு வகையில் கூறுவதானால் இரண்டாம் மொழி தொடர்பான சில

வேலைத் திட்டங்களை வகுத்துக் கொண்டு அவற்றினடிப்படையில் இரண்டாம் மொழியைக் கற்பித்தல் என்பதற்கு ஆதாரமாக இத்தொடர்பாடல் அணுகுமுறை அமைந்தது.

முழுமையான உடல்சார் துலங்கல்முறையில் மொழியைப் போதிப்பவர் இலக்கு மொழியில் கட்டளைகளை வழங்கும்போது மாணவர்கள் தமது முழுமையான உடல்சார் துலங்கல்களை வெளிப்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிள்ளைகளது மொழி பற்றி ஆராய்ச்சி செய்வோரின் கருத்தின்படி இரண்டாம் மொழி கற்போருக்கான உள்ளீடுகள் முக்கியமானவை. இதன்படி உள்ளீடுகளின் அளவு அதிகமாக இடம்பெறும்போது இரண்டாம் மொழி கற்றலின் வேக நிலை துரிதப்படுத்தப்படுகிறது. இந்த வகையில் ஒரு நல்ல இரண்டாம் மொழி கற்போன், அம்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டோருடன் பேசுதல் மூலமும் அப்பேச்சுக்கு அவர்கள் வழங்கும் பின்னூட்டல் மூலம் உள்ளீடுகளை வருவித்து கொள்கிறான் எனலாம்.

மேலும் மொழியியலாளரின் கருத்துப்படி மொழித்தேட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும், மொழி கற்போர் தமது மொழியறிவின் ஒரு முறையைச் செயற்படுத்த முனைகின்றனர். இரண்டாம் மொழி கற்போரும் இலக்கு மொழி தொடர்பான இவ்வாறான முறைகளைக் கொண்டுள்ளனர். இம் முறைகள் இடைநிலை மொழி இலக்கணம் எனப்படுகின்றன. எனவே இரண்டாம் மொழியாகத் தமிழைக் கற்பிக்கும்போது இவ் இடைநிலை மொழி இலக்கணம் பற்றிக் கருத்திற் கொள்ள வேண்டும்.

உள மொழியியலாளரது அணுகுமுறையின்படி இரண்டாம் மொழியானது கற்போரால் செயன்முறைப்படுத்தப்படுகிறது. அதாவது மொழி ஒன்றைக் கற்பதும் மொழி ஒன்றைப் புரிந்து கொள்வதும் ஒன்றிலிருந்து இன்னொன்று அதிகம் வேறுபட்டதல்ல. இவை இரண்டிலுமே கேட்டல் மூலமான தூண்டலானது பகுத்துக் குறிக்கப்படுகிறது. பின் அத்தகைய பகுத்துக் குறிக்கப்பட்ட தொடரானது பொருளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அலகு ஒன்றுடன் இணைக்கப்படுகிறது.

போட்டிக் கொள்கையின்படி, வாக்கியத்துக்கு அர்த்தங் காணுஞ் செயலானது சில வாக்கிய உறுப்புக்களானவை குறிப்பிட்ட பொருளனியல் பங்கைக் கொண்டவை என்பதோடு தொடர்புடையது. மேலும் தாய்மொழியில் பெறப்படுகின்ற சில குறிப்புக்களின் பலம் காரணமாக அவை இரண்டாம் மொழி கற்றலின் ஆரம்ப நிலைகள் வரை கருத்திற் கொள்ளப்படுகின்றன.

அந்த வகையில் உளமொழியியல் செயன்முறைப்படுத்தலானது அறிதிறனை விட செய்திறனை மையப்படுத்துகிறது. இங்கு விதிகளை விடவும் கற்றல் உபாயங்கள் மையப்படுத்தப்படுகின்றன.

நடத்தையியல் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது பின்வரும் விடயங்கள் கவனிக்கத்தக்கனவாக உள்ளன:

- வாய்மொழி மூலமான தூண்டல்கள் போதுமான அளவு கிடைக்கும்போதே வாய்மொழி மூலமான துலங்கல்கள் அதிகளவு இடம்பெற வாய்ப்பு உண்டாகிறது. அதாவது போதிய மொழித்தூண்டல்கள் ஆசிரியரால் வழங்கப்படுமிடத்து மொழித்துலங்கல்களும் சரிவர இடம்பெற வாய்ப்பு ஏற்படுத்தப்படுகிறது. எழுத்து மூலமாகவோ வாய்மொழி மூலமாகவோ இத்தூண்டல்கள் ஏற்படுத்தப்படலாம்.

- சரியான மொழியியல் நடத்தைகளுக்கு வெகுமதி அளிப்பதன் மூலம் அவற்றை ஊக்கப்படுத்தலாம். அதேவேளை தவறான மொழியியல் நடத்தைகள் ஏற்படுத்தும் எதிர்மறையான விளைவுகளைத் தெரியப்படுத்துதலும் அவற்றிலிருந்து மீள உதவுதலும் அவசியம்.

  அந்த வகையில் இரண்டாம் மொழியாகத் தமிழைக் கற்பிக்கும்போது தமிழ்மொழியிலான பேச்சுநிலை, எழுத்துநிலைத் தூண்டல்களை வழங்குதல், மொழி கற்பித்தலுக்குச் சாதகமான சூழல் ஒன்றை உருவாக்க உதவும் எனலாம்.

  அதேவேளை சரியான மொழியியல் நடத்தைகள் வெளிப்படுத்தப்படுமிடத்து அவற்றை ஊக்குவிப்பதும் தவறான மொழியியல் நடத்தைகள் இனம் காணப்படின் அவற்றைச் சரி செய்ய உதவுவதும் மிக முக்கியமான விடயங்களாகக் கணிக்கப்பட வேண்டியவையே.

- மொழி விருத்திப் படிநிலைகள் அல்லது மொழிவிருத்தியின் மைல்கற்கள் பற்றி ஆசிரியர் அறிந்து கொள்வதன் மூலமும் இரண்டாம் மொழியாகத் தமிழைக கற்பிக்கும்போது உரிய மொழியாற்றலை வெளிப்படுத்தக்கூடிய உடல், உள முதிர்ச்சி மாணவர்களிடையே காணப்படுகின்றதா என்பதை ஆசிரியர் அறிந்து கொண்டு அதற்கேற்றாற் போல கற்பித்தலை வடிவமைக்கலாம்.

ஆய்வு முடிவு:

மொழி கற்றல், கற்பித்தற் கொள்கைகளின் அடிப்படையிலும், உள மொழியியலின் வெவ்வேறு விடய அறிவைக் கொண்டிருத்தல் என்ற நிலையிலும் தொகுத்துப் பார்க்கும்போது இரண்டாம் மொழியாகத் தமிழைக் கற்பிக்க முற்படும் போது கற்பித்தலுக்கான முறையைத் தீர்மானிக்கும் முன்பு கற்போர் யாவர் என்பதை மனதிற் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

- கற்போரின் வயது கவனிக்கப்படல் வேண்டும்.

- இலக்கண விதிகள் எளிமைப்படுத்தப்பட்டு அல்லது சிக்கலான விதிகள் உடைக்கப்பட்டுக் கற்பிக்கப்பட வேண்டும்.

- கற்போர் சிறுவர்களாக இருந்தால் பாடல், ஆடல், அபிநயப்பாடல், சிறிய நாடகங்கள் என்பன மூலம் மொழியறிவைக் கற்பிக்கலாம்.

- சிறிய இலக்கண விதிகளைக்கூட அவ்விதிகளில் வரும் சிறிய கூறுகளைக் கொண்ட பாத்திரங்களை மாணவர்களிடையே உருவாக்கி அவற்றினூடாக விளங்கப்படுத்துதல் நன்மை பயக்கும்.

- இயல்பான, மொழி கற்றலுக்கான சூழலை உருவாக்குவது மொழி கற்பித்தலை மிகவும் இலகுபடுத்தும்.

- தமிழ்மொழியிலான கதை கூறல், தமிழ்மொழிப் படைப்புக்களை அதிகம் வாசித்தல் என்பனவும் இரண்டாம் மொழியாகத் தமிழைக் கற்பிக்கும்போது ஆர்வத்தை ஏற்படுத்தும்.

இலக்கண மொழி பெயர்ப்பு முறை, கேள்மொழி முறை, நேர்முறை, தொடர்பாடல் மூலமான மொழி கற்பித்தல் அணுகுமுறை ஆகியவற்றில் பொருத்தமான கூறுகளைத் தெரிவு செய்து இணைத்துப் பயன்படுத்துதல் அதிக பலன் தரும்.

ஆகவே உளமொழியியல் அறிவானது தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பிப்பதற்குக் காத்திரமான பங்களிப்பை வழங்கவல்லது என்பதை ஆசிரியர்கள் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

தகவல் தொழில் நுட்பமும் கற்றல் கற்பித்தலும்

பேராசிரியர் முனைவர் எஸ். குமரன்
இந்திய ஆய்வியல் துறை, மலாயாப் பல்கலைக்கழகம்

முன்னுரை

அறிவியல் சிறப்பாக வளராத காலச் சூழலில் கல்வித்துறையில் கலையியல் மற்றும் மொழிப் பாடங்கள் சிறப்பிடம் பெற்று வந்தன. காலப்போக்கில் புது அறிவுத் துறைகளின் வளர்ச்சியும் தேவையும் பெருகிய நிலையில் இது போன்ற கலையியல் அறிவுத்துறைகளுக்கும் மொழிப்பாடத்துக்கும் கொடுக்கப்பட்டு வந்த உரிமையும் கால அளவும் குறைந்தது. இதனால் கற்றலிலும் கற்பித்தலிலும் ஈடுபாடு குறையத் தொடங்கியது. மேலும், அறிவியல் தொழில் நுட்ப மேம்பாட்டினால் மக்கள் இயந்திரமயமான வாழ்க்கையினை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படத் தொடங்கியது. இதனால் சமுதாயப் பிரிவினரின் இயல்பான சமுதாயப் பங்கு மாறத் தொடங்கியது.

கடந்த நூற்றாண்டின் இறுதியிலிருந்தே தகவல் தொழில் நுட்பங்களைத் தமிழில் தமிழர்கள் துய்ப்பதற்கான முயற்சிகள் பல மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. ஆயினும், கணினி வாங்கும் வசதி தமிழர்களிடையே குறைவாக இருந்ததாலும், இணையத்தைப் பயன்படுத்துவதற்கு அடிப்படைத் தேவையான தகவல் தொடர்பு இணைப்பிற்கான கட்டணங்கள் கூடுதலாக இருந்ததாலும், தமிழாசிரியர்களுக்குக் கணினியை நுகருவதற்கும், அதனைத் தமிழ் கற்பித்தலுக்குப் பயன்படுத்துவதற்கும் முறையான பயிற்சி தரப்படாததாலும், தமிழ் கற்பித்தலுக்குத் தினம் வளர்ந்து வரும் தகவல் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவது பரவலாகக் காணப்படவில்லை. இக்குறைபாட்டினைக் களைவதற்குத் தமிழாசிரியர்களுக்குக் கணினி மற்றும் இணையத்தில் தமிழ் கற்பிப்பதற்கான செயலிகள் (applications) மற்றும் தகவல் தொழில் நுட்பங்கள் என்னென்ன உள்ளன என்பதைத் தெரியப்படுத்தவும் தெளிவுபடுத்தப்படவும் வேண்டும்.

அறிவியல் முதன்மை பெறத் தொடங்கிய பின்னர் சமுதாய மொழியியல் மனப்பாங்குகளிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் தோன்றலாயின. இந்நிலை கல்வித் துறையிலும் வெகுவாகப் பிரதிபலிக்கத் தொடக்கியது. எனவே, இன்றைய நிலையில் தமிழ்மொழிக் கல்வியினைத் தரப்படுத்துவதும் இயங்கு தன்மை கொண்டதாக (dynamic) ஆக்குவதும் இன்றியமையாததாகிறது. மொழிப்பாடம் கற்பித்தலில் குறிப்பிடத்தக்க அளவில் ஆய்வுகளும் சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு, வளர்ச்சிக்கான முயற்சிகள் பல இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கற்பித்தலுக்கான செயலிகளும் தகவல் தொழில் நுட்பங்களும்

தகவல் தொழில் நுட்ப முன்னேற்றங்களைக் கொண்டு தமிழ் கற்பிப்பது எப்படி எனத் தெரிந்து கொள்ளுமுன், எந்தெந்தச் செயலிகள், தகவல் தொழில் நுட்பச் சாதனங்கள் கற்பிப்பதற்கு ஏதுவானதெனத் தெரிந்து கொள்வது அவசியம். அதன் பின்னர் அவற்றைத் தமிழ் வழி கற்பிப்பதற்கு எவ்வாறு பயன்படுத்துவதென அறிந்து கொள்வோம்.

கற்பிப்பதற்கு ஏதுவான செயலிகளும் சாதனங்களும்

1. மின்னஞ்சல் குழுக்கள் (email groups)
2. கரும்பலகை, வெண்பலகைகளுக்குப் பதில், கணினிவழிப் பாடம் நடத்த உதவும் செயலிகள் (Microsoft Power Point Presentations like software)
3. Webinar எனப்படும் இணையம் வழி நேர்முக வகுப்பறைகள்
4. கற்பிக்க வேண்டிய பாடங்கள் கொண்ட பல்லூடக வட்டுகள் (குறுந்தட்டுகள்) Multi Media CD/DVD
5. மின் வினாக் கோவைகள் (Internet based online tests) மாதிரித் தேர்வெழுதவைத்துப் புள்ளிகள் வழங்கக் கூடிய செயலிகள்
6. விக்கிபீடியா மின் கலைக்களஞ்சியம் (Wikipedia)
7. POD Cast எனும் தேவைப்படும் பொழுது IPOD, IPAD, TABLET, NOTE போன்ற கருவிகளில் பதிவிறக்கிக் கேட்கத் தகுந்த ஒலிக் கோவைகள்
8. கல்வி பயிற்றும் இணையத் தளங்கள்

1. மின்னஞ்சல் குழுக்கள் (email groups)

இவை இணையம் தொடங்கிய காலந்தொட்டே இருந்து வருபவை. *யாகூ* (Yahoo), *கூகள்* (Google) தேடுதளங்கள் மின் அஞ்சல் குழுச் சேவைகளைப் பேணி வருகின்றன.

http://groups.yahoo.com.group\tamil araichchi அல்லது http://groups.google.com.au/inti/eg/googlegroups/ என்ற இணைய முகவரிக்குச் சென்று பதிவு செய்து கொண்டு நீங்களே ஒரு புதிய மின்னஞ்சல் குழுவை உருவாக்கலாம்.

திருக்குறளைக் கற்பிப்பதற்காகத் தமிழாசிரியர் ஒரு புதிய மின்னஞ்சல் குழுவை உருவாக்கலாம். அதற்குத் திருக்குறள் – கற்றல் எனத் தமிழிலோ Learn Thirukkural என ஆங்கிலத்திலோ பெயரிட்டுக் கொள்ளலாம். இந்தப் புதிய மின்னஞ்சல் குழுவிற்காக ஒரு புது மின்னஞ்சல் முகவரியைத்தர வேண்டும்.

உதாரணமாக, learn-thirukkural@googlegroups.com என்ற மின்னஞ்சல் முகவரியைத் தந்து, பின்னர் உங்களது மாணவர்களையும் உங்களையும் இந்தப் புதிய மின்னஞ்சல் குழுவில் உறுப்பினர்களாக இணைத்துக்கொள்ள வேண்டும்.

அதன்பின் learn-thirukkural@googlegroups.com என்ற புதிய மின்னஞ்சல் முகவரிக்கு நீங்கள் அல்லது உங்கள் மாணவர்கள் அனுப்பும் எல்லா மின்னஞ்சல்களும் பதிவு செய்து கொண்டுள்ள அனைவருக்கும் அனுப்பி வைக்கப்படும். உதாரணமாகத் தமிழாசிரியராகிய நீங்கள் ஒரு திருக்குறள் மற்றும் அதன் பொருளை மின்னஞ்சலாக learn-thirukkural@googlegroups.com என்ற முகவரிக்கு அனுப்புவீர்களாயின், அதைப் பெறும் மாணவர், அக்குறளைப் பற்றிய வினா ஒன்றைப் பதிலாக அனுப்பினால் அப்பதிலும், இம்மின்னஞ்சல் குழுவிலுள்ள அனைவருக்கும் அனுப்பப்படும். இப்படியாக மின்னஞ்சல் குழுவை ஒரு கலந்துரையாடும் களமாகப் பயன்படுத்தலாம்.

2. கணினிக் கரும்பலகை/வெண்பலகை (Microsoft Power Point Presentations like software)

சிறிய பயிற்சி நிலையங்கள் முதல் பெரிய பல்கலைக்கழகங்கள் வரை பலவிதமான வகுப்பறையில் இன்று கணினிக் கரும்பலகைகள்/வெண்பலகைகள் பயன்படுத்தப் படுகின்றன.

ஆசிரியர் Microsoft Power Point Presentations Like Software அல்லது Open Office Impress போன்ற செயலிகளைக் கொண்டு தமது வகுப்புகளுக்குத் தேவையான பாடத்தினைத் தயாரித்துக் கொள்வார். இவற்றில் வண்ணப் படங்கள், படத் துணுக்குகள் போன்றவற்றை இணையத்திலிருந்தோ Paint brush, Microsoft word, Open office writer, Microsoft Excel போன்ற செயலிகளிலிருந்தோ வெட்டி ஒட்டிக் கொள்ளலாம்.

இக்கணினிக் கரும்பலகை/வெண்பலகை கொண்டு தயாரிக்கும் பாடங்களைக் கண்ணுக்குக் கவர்ச்சியாகப் பல வண்ணங்களில் தயாரித்துக் கொள்ளலாம். மடிக் கணினியை (Laptop) ஆசிரியர் வகுப்பறைக்கு எடுத்துச் செல்லுவார். வகுப்பறைகளில் காட்சிக் கருவி (Digital projector) தயாராக வைக்கப்பட்டுள்ளது. கணினியை இக்காட்சிக் கருவியுடன் இணைத்து இயக்கும்போது, அதற்கெனப் பொருத்தப்பட்ட திரையில் பாடம் படமாகத் தெரிகிறது. இவற்றை ஆசிரியர் ஒவ்வொரு பக்கமாக நகர்த்திப் பாடத்தினை விளக்குவார். மாணவர்களுக்கு இவற்றைக் கையேடாகவும் (notes) வழங்கலாம்.

3. இணையம்வழி வகுப்பறை (Webinar)

கடலுக்கடியில் புகார்ப்பட்டினம் இருந்ததற்கான சான்றுகள் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதைப்பற்றிய பல படங்களையும் செய்திகளையும் விவரங்களையும் திரட்டி வந்திருக்கிறீர்கள். இவையனைத்தும் உலகெங்கிலுமுள்ள தமிழர்களுக்கு நேரடியாகத் தெரிவித்து அவர்களது பாராட்டுதல்களையும் பங்களிப்பையும் நேரில் பெற விழைகிறீர்கள். இதனைச் செய்வதெப்படி? இணையம்வழி நேர்முக வகுப்பறைகள்/ கருத்தரங்குகள் ஒன்றினை ஒழுங்கு செய்வதன் மூலம் இதனைச் செயல்படுத்தலாம்

இணையவழி நேர்முக வகுப்பறை/கருத்தரங்கம் செயல்படும் விதம்

இதனை நடத்துபவர், தனது கணினியில் காட்சிக் கோவையாக (Presentation) கருத்தரங்கிற்குத் தேவையான தகவல்களைத் தொகுத்து வைத்துக்கொள்ள வேண்டும். இவரது கணினியில் படமெடுக்கும் கருவி/செயலி இருத்தல் வேண்டும். கருத்தரங்கம் நடத்துபவர் பங்குகொள்பவர்களிடம் உரையாடுவதற்குத் தொலைபேசி குழும (Tele conferencing) வசதி வேண்டும். உலகில் எந்த மூலையில் இருந்தாலும் இணைய இணைப்பும் ஒலிபெருக்கி கொண்ட தொலைபேசியும் இருப்பவர்கள் இதில் பங்கு கொள்ளமுடியும்.

இத்தகைய இணையவழி நேர்முக வகுப்பு/கருத்தரங்கம் சில வாரங்களுக்கு முன்னரே, முன்னேற்பாடு செய்யப்படுகிறது. இதில் பங்குகொள்ளக் கூடியவர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அழைப்பு அனுப்பப்படுகிறது. பங்கு கொள்ள விரும்புபவர்கள் குறிப்பிட்ட இணைய தளத்தில் பதிவுசெய்து கொள்கின்றனர்.

குறித்த நேரத்தில், நுகருவோர் தங்களது கணினிவழி குறித்த இணைய தளம் மூலமாக இணைகின்றனர். அதே நேரத்தில் குறிப்பிட்ட தொலைபேசி எண்ணைத் தொடர்பு கொண்டு குழுமத்திலும் இணைகின்றனர்.

கருத்தரங்கு நடத்துநர் துவங்கியதும் நுகர்வோர் நடத்துநரைத் தங்கள் கணினித் திரையில் காண்கின்றனர். அவரது பேச்சைத் தொலைபேசி ஒலிபெருக்கி வழிக் கேட்கின்றனர்.

பாடம் துவங்கியதும் நடத்துநரின் கணினியில் நடக்கும் காட்சிக்கோவை நுகருவோரின் திரையில் தெரிகிறது. அவரது பேச்சு தொலைபேசியில் ஒலித்த வண்ணம் உள்ளது. ஆசிரியர் ஒருவர் நேரில் பாடம் நடத்துவது போல் இணையவழி வகுப்பு நடக்கிறது. நுகருவோரொருவர் நடத்துநரை இடைமறித்து வினா ஒன்றை எழுப்புகிறார். உடனே நடத்துநர் கணினித்திரையில் தோன்றி விடை பகர்கிறார். மீண்டும் வகுப்பு தொடரும் போது, நுகருவோரின் கணினித் திரையில் நடத்துநர் வழங்கும் காட்சிக்கோவை தெரிகிறது. இந்தக் காட்சிக் கோவைதான் வகுப்பறையின் கரும்பலகை/வெண்பலகை எனக்கொண்டால், இது ஒரு உலகளாவிய வகுப்பறையன்றோ?

வகுப்பு முடிந்ததும் மீண்டும் நடத்துநர் திரையில் தோன்றுகிறார். நுகருவோரின் சந்தேகங்களைத் தீர்த்து வைக்கிறார். மேலும் சந்தேகங்கள் இருப்பின் நடத்துநரின் இணைய விவாதம் (Blog) அல்லது மின்னஞ்சல் வழி அவற்றைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

சாதாரணத் தொலைபேசிக் குழுமத்திற்குப் பதிலாக (Voice Over IP) எனும் தகவல் தொழில் நுட்பத்தின் உதவியால், கணினியில் உள்ள ஒலிவாங்கி ஒலி பெருக்கி மூலமாகவும் இணையவழி நேர்முக வகுப்பறைகளை நடத்தலாம்.

4. மின் வினாக் கோவை

இணையவழிக் கற்பித்தலில் மின் வினாக் கோவைகள் (Internet based online tests) ஒரு முக்கிய அங்கமாகும். குறிப்பிட்ட கல்வி வழங்கும் இணையத்தளம் சென்று, மின் வினாக் கோவையைத் தெரிவு செய்தால், கேள்விகளையும் அவை ஒவ்வொன்றிற்கும் பல (மூன்று அல்லது நான்கு) பதில்களையும் தரும். கேள்வியை வாசித்து அதற்குச் சரியான பதிலை மாணவர் தெரிவு செய்ய வேண்டும்.

5. விக்கிபீடியா மின் கலைக்களஞ்சியம் (Wikipedia)

விக்கிபீடியா என்பது இணையத்தில் உள்ள ஒரு உலகளாவிய இலவச மின் கலைக் களஞ்சியம் (Electronic Encyclopedia) செயலியாகும். இதில் உலகிலுள்ள பல மொழிகளில் பல தலைப்புகளில் கலைக்களஞ்சியப் பக்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழர்களாகிய கணினி வல்லுநர்களின் தகைமையால் சுமார் நான்காயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் விக்கிபீடியா பக்கங்கள் இணையத்தில் http://ta.wikipedia.org.wiki/ என்ற முகவரியில் நமக்குக் கிடைக்கின்றன. இந்த மின் கலைக்களஞ்சியத்தில் தமிழின் தொன்மையான, சொற்கள், கலைகள், இலக்கியங்கள், இலக்கணங்கள், அறிவியல் ஆகியவற்றிற்குப் பல மின் கலைக்களஞ்சியப் பக்கங்களைத் தமிழறிவுடைய புலவர்களும் பேராசிரியர்களும் அதிக அளவில் உருவாக்கினால், விக்கிபீடியா ஒரு முழுமையான தமிழ்க் கலைக் களஞ்சியமாகிவிடும். அந்நிலை வரும்போது, தமிழில் தோன்றும் சந்தேகங்களுக்கெல்லாம் பதில் தரும் இடமாகிவிடும். விக்கிபீடியாவில் புதிய பக்கங்களையும் உருவாக்கலாம்.

6. பல்லூடக வட்டுகள் (குறுந்தட்டுகள்) Multi Media CD/DVD

வட்டுகளைக் கண்டால் மக்களுக்குத் திரைப்படங்களும் இசையுமே நினைவிற்கு வரும். ஆதலால் அனைவருக்கும் இது ஒரு கவர்ச்சியான பொருளாக விளங்குகிறது. இவ்வட்டுகளை நூதனமான முறைகளில் தமிழ் கற்பிக்கவும் பயன்படுத்தலாம்.

குழந்தை ஒன்று ஓடி விளையாடும் குறும்படக் காட்சி ஒன்றின் பின்னணியில் பாரதியாரின் "ஓடிவிளையாடு பாப்பா" என்ற பாடல் ஒலித்தால் அது தமிழ்க் குழந்தைகளைக் கவருமல்லவா? தமிழ் எழுத்துகளை எழுதும் முறை, தமிழை எழுதிக்கொண்டே வாசித்தல் (உதாரணம்: அ...ம்...மா... என்ற எழுத்துகள் திரையில் தோன்றும் போதே பின்னணியில் அ...ம்...மா... என்ற குரலும் ஒலித்தால் தமிழை முதன் முறையாகக் கற்கும் குழந்தைகளுக்கு எளிதாகவும் இனிதாகவும் இருக்குமல்லவா?) சிறு கதைகளைப் படத்துடன் திரையில் காட்டிப் பின்னணியில் அதை வாசிக்கும் ஒலியையும் தருதல் எனப் பலவகைகளிலும் இப்பல்லூடகக் கணினி கொண்டு தயாரிக்கலாம்.

கணினி கொண்டு தயாரித்த இவ்வட்டுகளை வட்டுக்காட்டிகள் (DVD player) மூலமாகவோ, கணினி கொண்டோ பார்த்துப் பயனடையலாம்.

7. POD Cast எனும் சேமிக்கபட்ட ஒலிக் கோவைகள்

IPOD, IPAD, TABLET, NOTE போன்ற கையடக்கமான ஒலிவாங்கு கருவிகள் கடந்த சில ஆண்டுகளாகப் பெருகி வருகின்றன. இவற்றில் பாடல்கள், இசைத்துணுக்குகள் மட்டுமல்ல, முழுநேர இசைக் கச்சேரிகளையும் இறக்குமதி செய்து கேட்க முடிகிறது.

இணையத் தளங்களிலுள்ள MP3 வடிவிலான ஒலிக்கோவைகளை இக்கருவியில் பதிவிறக்கம் செய்து கேட்கலாம். வேண்டியவற்றை வைத்துக் கொண்டு வேண்டாத வற்றை அழித்து விடலாம். குழந்தைகளுக்கான பாடல்களையும் திருக்குறள், தேவாரம் முதலான பழந்தமிழ் பாடல்களையும் பண்ணோடு பயிற்றுவிக்கவும் பட்டிமன்றம் வழி அறிவு புகட்டவும் இந்த ஊடகம் மிகச் சிறந்த சாதனமாகும். தற்போது இச்சாதனங்களை இசை அல்லது செய்தி கேட்க மட்டுமன்றி கற்பித்தலுக்கும் பயன்படுத்தலாம்.

8. கல்வி பயிற்றும் இணையத் தளங்கள்

தமிழ் இணையப் பல்கலைக்கழகம் போன்று கல்வி வழங்கும் இணையத் தளங்கள் பல செயல்பட்டு வருகின்றன. இத்தகைய இணையத் தளங்களில்

1. மின் நூலகங்கள்
2. மின்கேள்விக் கொத்துகள் கொண்ட பயிற்சித் தேர்வுகள்
3. மின்கேள்விக் கொத்துகள் கொண்ட தேர்வுகள்
4. மின் பாடங்கள்
5. மின் அளவளாவுதல் (Forum)
6. மின் விவாத அரங்குகள் (Blog) போன்ற பல வசதிகள் உள்ளன.

பட்டங்கள் வழங்கும் பெயர் பெற்ற பல்கலைக்கழகங்கள் பெயர் தெரியாத போலிப் பல்கலைக்கழங்கள், கணினித்துறையில் சான்றிதழ்கள் வழங்கும் நிறுவனங்கள் எனப் பல

வகையான கல்வி பயிற்று இணையத் தளங்கள் இயங்கி வருகின்றன. இத்தகைய இணையவழிக் கல்வி வழங்கும் தளங்கள் அமைக்கப் பொருட் செலவைத் தவிர, அதனைத் தொடர்ந்து நடத்துவதற்கும் ஆசிரியர்கள், கணிபொறியாளர்கள், நிர்வகிப்பவர்கள் எனப் பல துறைகளைச் சார்ந்த வல்லுநர்களெல்லாம் தேவைப்படுவர்.

முடிவுரை

எதிர்வரும் நூற்றாண்டில் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை கல்வி எப்படி அமையவேண்டும் என்பது பற்றி அனைத்து நாட்டுக் கல்வி, சமுதாய பண்பாட்டு ஐ.நா. நிறுவனமான யுனெஸ்கோ சிந்தித்து அறிக்கையாகவும் ஆசிய வட்டாரக் கருத்தரங்காகவும் விவாதித்தவற்றில் நான்கு கருத்துகள் முதன்மையானதாக அமைகின்றன.

அறிவைப் பெறக் கற்றல்	-	Learning to know
செயல் புரியக் கற்றல்	-	Learning to do
கூட்டாக வாழக் கற்றல்	-	Learning to live together
சுயம் இழக்காமல் இருக்கக் கற்றல்	-	Learning to be

கற்பித்தலில் புதுமையையும் புரட்சியையும் ஏற்படுத்தும் ஆற்றல் கணினி வழிக் கல்விக்கு மிகுதியாக உண்டு. திட்டமிட்டு பாடப்பொருள் வழி கணினிக் கல்வி அளிப்பதன் வாயிலாக மாணாக்கர் பலமுறைப் பயிற்சிபெற்று கற்றல் நிலை மேம்பட வழியுண்டு. தகுதியிலும் தொழில்நுட்பத்திலும் ஆசிரியர் இக்கற்றல் நிலையில் மேம்படுவதற்கான பயிற்சிகள் முதலில் அளிக்கப்படவேண்டும். அடுத்து மிகுதியான பொருள் செலவு, நேரம், உழைப்பு போன்றவை இன்றியமையாது தேவைப்படும், இத்தகு முறை கற்பித்தலில் இடம்பெறுவதற்கான சூழல் உருவாக்கப்பட வேண்டும். ஏனெனில் 'கேட்பவை எளிதில் மறக்கப்படுகின்றன. பார்த்தவற்றை நாம் நினைவில் வைத்துக் கொள்கிறோம். ஆனால், நாமே பங்குகொண்டு செயலில் ஈடுபட்டால் அதன் தன்மையும் அடிப்படையாக அமைந்துள்ள கருத்துகளையும் நாம் நன்கு அறிந்து கொள்கின்றோம்'

What I hear I forget
What I see I remember
What I participate and do I understand

என்னும் சீனப் பழமொழி ஈண்டு நினைக்கத்தக்கது.

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்

என்றார் திருவள்ளுவர். அதைப் போன்று மாற்றி

காலத்தோடு ஒட்ட ஒழுகல் கலைபலகற்றும்
கணினிகல்லார் பயன் தெரியாதவர்

என்ற பழி வராமல், காலத்திற்கேற்ப, தமிழ் கற்பிப்பதற்குத் தகவல் தொழில் நுட்பங்களைக் கைக்கொண்டு நன்மை பெற முயலவேண்டும்.

துணைநூற்பட்டியல்

குழந்தைவேல் பன்னீர்செல்வம், சு. (2009). *இணையம்வழி மொழி கற்றல் கற்பித்தல் புதிய அணுகுமுறைகள், தமிழ் இணைய மாநாட்டு மலர்*, செருமானியம்.

ரபி, சிங். எம். ஜே. (2010). "மின்னணு வழியில் தமிழ்மொழி கற்பித்தல் மற்றும் கற்றல்", *தமிழ் இணைய மாநாட்டு மலர்*, கோவை.

நக்கீரன், பி. ஆர். (2010). "தமிழ் இணையப் பலகலைக்கழக மென்பொருள்கள் ஒரு கண்ணோட்டம்". *தமிழ் இணைய மாநாட்டு மலர்*, கோவை.

இளஞ்செழியன், வே. & இளந்தமிழ், சி. ம. (2011). "தமிழில் தகவல் தொழில் நுட்பத்தைக் கற்பித்தல்: வாய்ப்புகளும் சிக்கல்களும்". *தமிழ் இணைய மாநாட்டு மலர்*, பென்சில்வேனியா.

பெரியண்ணன், கோ. (2011). "இணையம் மற்றும் கணினி வழி தமிழ் கற்றல் கற்பித்தல்". *தமிழ் இணைய மாநாட்டு மலர்*, பென்சில்வேனியா.

Seetha Lakshmi. (2011). Facebook and Tamil Language in Singapore's Teachers Education. *Proceedings on Tamil Internet Conference*. Pennsylvania.

Collins, B. (1996). "The Internet as an Educational Innovation: Lesson from Experience with Computer Implementation". *Education Technology*, 36(6), pg. 21 & 30.

தமிழ்மொழி கருத்தாடல்:
ஐந்தாம் படிவ மாணவர்களின் கட்டுரைகளில் சொற்பிணைப்புப் பகுப்பாய்வு

குமரன் இராமையா
சுல்தான் அப்துல் அலிம் ஆசிரியர் கல்விக் கழகம்,

1.0 முன்னுரை

சொற்பிணைப்பு என்பது ஓர் எழுத்துப் படிவத்திலுள்ள சொற்களுக்கிடையே அமைந்திருக்கும் நெருக்கமான இணைப்பேயாகும். மொழியிலுள்ள சொற்பிணைப்பை இரு வகையாகப் பகுக்கலாம். அவற்றுள் இலக்கணம் சார்ந்த சொற்பிணைப்பு ஒருவகை; மற்றொரு வகை பொருள் சார்ந்த சொற்பிணைப்பாகும் (பியாவ்கிராண்டெ, 1986 ப.3). ஓர் எழுத்துப் படிவத்தில் பல்வேறு வழிகளில் சொற்பிணைப்பு உருவாக்கப்படும். மொழியில் பொதுவாக ஐந்து வகையான சொற்பிணைப்புத் தன்மைகள் கொண்ட சொல்வகைகள் உள்ளன. சொற்களஞ்சியம் (lexical), மேற்கோள் (referencing), இணைப்பு (conjunction), எச்சம் (ellipsis), மாற்றீடு (substitution) தன்மை கொண்ட ஐவகைச் சொற்களைச் சொற்பிணைப்பிக் கருவிகள் என்றும் அழைக்கலாம். இவ்வாய்வு ஐந்தாம் படிவ மாணவர்களின் தமிழ்மொழிக் கட்டுரைகளில் அமைந்துள்ள சொற்பிணைப்பைப் பற்றி ஆராய்கின்றது (பிராவ்ன் யூல், 1987, ப.7).

2.0 ஆய்வின் சிக்கல்

இடைநிலைப்பள்ளி மாணவர்களின் கட்டுரைகளில், குறிப்பாகத் தேர்வுக்கு அமரும் ஐந்தாம் படிவ மாணவர்களின் கட்டுரைகளில் இயைபற்ற வாக்கியங்களைக் கொண்டிருப்பதும் செறிவான நிலையில் கருத்துகளைப் படைக்கவியலாததும் முக்கியப் பலவீனமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது (செ முகமட் அரிப், 1996, ப. 7). இதைத் தவிர்த்து, பரவலாக மாணவர்கள் அரசுத் தேர்வுகளில் (UPSR, PMR, SPM) கட்டுரை எழுதுவதில் பல்வேறு விதமான பிழைகளைச் செய்கின்றனர் (SPM தேர்வு அறிக்கை, மலேசியத் தேர்வு வாரியம், 2000). பள்ளியில் நடைபெறும் கட்டுரை போதனைகளில் பெரும்பாலும் ஆசிரியர்கள் கருத்து, சந்திப் பிழை, நிறுத்தக்குறி ஆகியவற்றை வலியுறுத்திக் கற்பிக்கின்றனர். இலக்கணப் பிழையின்றி சரியான வாக்கியம் அமைப்பதையே பயிற்சியாக மாணவர்களுக்கு அளிக்கப்படுகிறது (SPM தேர்வு அறிக்கை, மலேசிய தேர்வு வாரியம், 2002).

சொற்பிணைப்புத் தன்மைகளன்றி எழுதப்படும் கட்டுரைகள் தெளிவில்லாத கருத்துத் தொடர்பு கொண்டிருக்கும் (வொய்த், 1983). ஒரு கட்டுரை வரைதலில் கருத்து (சிந்தனை), அமைப்பு (இலக்கணக் கட்டமைப்பு), நடை (சொல்லணி), இயக்கமுறை (நிறுத்தக்குறிகள்) ஆகியவை அவசியம் கையாளப்பட வேண்டுமென இவான்ஸ் (1986) கூறியுள்ளார். உத்துசான் மலேசியா (1997) பள்ளியில் பதினோராண்டுகள் பயின்ற பின்பும் இந்நாட்டில் ஐந்தாம் படிவ மாணவர்களுக்குச் சரியாகக் கட்டுரை எழுதத் தெரியவில்லையென செய்தியறிக்கை வெளியிட்டுள்ளது. இருந்த போதிலும், கட்டுரைகளில் மேற்கண்டவற்றோடு புதைந்துள்ள சொற்பிணைப்புக் கூறுகளும் முக்கியப் பங்காற்றுகின்றன என்பதனை யாவரும் மறுக்க முடியாத உண்மையாகும். இவ்வாய்வானது ஐந்தாம் படிவ மாணவர்களின் தமிழ்மொழிக் கட்டுரைகளில் சொற்பிணைப்பிப் பயன்பாடுகள் பற்றி ஹல்லிடெ & ஹசன் (1976) உருவாக்கிய உருப்படிவம் கொண்டு ஆராயப்படும்.

3.0 ஆய்வின் நோக்கம்

இவ்வாய்வு, ஐந்தாம் படிவ மாணவர்களின் தமிழ்மொழிக் கட்டுரைகளிலுள்ள சொற்பிணைப்பிப் பயன்பாடுகளை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தொடர்ந்து, கட்டுரைகளில் மாணவர்கள் பயன்படுத்தும் சொற்பிணைப்பிகளின் வகை தொகையினையும் கண்டறியும் முயற்சியாக இவ்வாய்வு விளங்குகிறது. கட்டுரைகளில் பயன்படுத்தப்படும் சொற்பிணைப்பிகளைக் கொண்டு அக்கட்டுரையின் தரத்தையும் அளவிட இந்த ஆய்வு வகை

செய்கிறது. அது மாத்திரமல்லாமல், சொற்பிணைப்பிகளைப் பயன்படுத்துவதில் மாணவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களையும் அடையாளங்காண இவ்வாய்வு செயல்படுத்தப்படுகிறது.

4.0 ஆய்வு வினா

இவ்வாய்வு பின்வரும் வினாக்களுக்கு விடைகாண முற்படுகிறது.

(அ) தமிழ்மொழிக் கருத்து விளக்கக் கட்டுரைகளில் சொற்பிணைப்பிகளை எவ்வளவு நெருக்கமாக ஐந்தாம் படிவ மாணவர்கள் பயன்படுத்துகின்றனர் ?

(ஆ) மாணவர்களின் கருத்து விளக்கக் கட்டுரைகளில் பயன்படுத்தப்படும் சொற்பிணைப்பிகளுக்கும் கட்டுரைத் தரத்திற்கும் எவ்வாறான தொடர்பு உள்ளது ?

(இ) சொற்பிணைப்பிகளைப் பயன்படுத்துவதில் மாணவர்கள் என்ன சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர்?

5.0 ஆய்வு முறைமை

ஐந்தாம் படிவ மாணவர்கள் 30 பேரின் தமிழ்மொழி கருத்து விளக்கக் கட்டுரைகள் ஆய்வுப் பொருளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. படிவம் நான்கு, ஐந்து ஆகிய ஈராண்டுகளில் உயர்நிலைக் கல்வியைக் கற்றுள்ளனர். ஏற்கெனவே அம்மாணவர்கள், தொடக்கநிலை, இடைநிலைக் கல்வி கற்று UPSR, PMR சோதனையில் கட்டுரை எழுதி அனுபவம் பெற்றுள்ளனர். எனவே, முழுமையான கட்டுரை எழுதுவதற்கு எவ்விதச் சிக்கலும் இருக்க மாட்டா.

மாணவர்களின் கட்டுரைகளை முழுமையாக ஆராய ஹல்லிடே & ஹசன் (1976) பகுப்பாய்வு உருப்படிவம் பயன்படுத்தப்பட்டது. அவர்களின் உருப்படிவம் சொற்பிணைப்புக் கோட்பாட்டிற்கு இணங்குவதாலும் பூரண பகுப்பாய்விற்கு உதவுவதாலும் பயன்படுத்தப்படுகிறது. தமிழ்மொழிக்குப் பொருந்துவதாகத் தெளிவான குறியீட்டுடன் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இதனால் அக்கருவியின் நோக்கம், நம்பகத்தன்மை, ஏற்புடைமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

மாணவர்களின் கட்டுரைகளை மதிப்பிடவும் அளவிடவும் மலேசியத் தேர்வு வாரியத்தின் வழிகாட்டி விபரங்கள் மதிப்பீட்டுக் கருவியாக இவ்வாய்வில் பயன்படுத்தப்படுகிறது. அம்மதிப்பீட்டுக் கருவியானது கட்டுரைகளை முறையாகப் பகுப்பாய்வு செய்ய வழிகோலுகின்றது. 6 கூறுகள் அமைந்த அக்கருவியினுள் கருத்து, கட்டமைப்பு, சொற்களஞ்சியம், மொழிப்பயன்பாடு ஆகியவை அடங்கியுள்ளன. எழுத்துத் தரவுகளைத் தரமாக மதிப்பிடுவதாலும் நம்பகத்தன்மை கொண்டிருப்பதாலும் உலகளாவிய நிலையில் பரவலாகப் பயன்படுத்துவதாலும் மேற்கண்ட மதிப்பீட்டுக் கருவி பயன்படுத்தப்படுகிறது.

30 மாணவர்களுக்கும் கட்டுரை வினாத்தாளும் பதிலெழுத காகிதங்களும் தயார் செய்யப்பட்டன. வினாத் தாளில் தெளிவான கட்டளைகள் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டன. மாணவர்கள் 250 சொற்களுக்குள் 'சமுதாயச் சீர்கேடு' எனும் தலைப்பில் அறுபது மணித்துளிகளில் ஒரு கருத்து விளக்கக் கட்டுரை வரைய வேண்டும். கட்டுரை வரையும்முன் ஆய்வின் நோக்கங்களும் நெறிமுறைகளும் விளக்கப்படுத்தப்பட்டன.

மாணவர்களின் கட்டுரைப்படிகள் கிடைத்தவுடன் திருத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது. முதலில், தகுதியற்ற கட்டுரைகள் தள்ளுபடி செய்யப்பட்டன. எஞ்சிய கட்டுரைகளை மலேசியத் தேர்வு வாரியத்தின் மதிப்பீட்டுக் கருவியைக் கொண்டு இரு அனுபவம் வாய்ந்த தாள் திருத்துனர்களைக் கொண்டு மதிப்பீடு செய்யப்பட்டது. அவ்விருவரும் 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஐந்தாம் படிவ தமிழாசிரியர்களாகவும் 5 ஆண்டுகளுக்கும் மேலாக SPM தமிழ்மொழி தாள் திருத்துநர்களாகவும் செயல்பட்டிருக்கின்றனர். இரு திருத்துனர்களின் சராசரி மதிப்பெண்கள், மதிப்பெண் வேறுபாடுகள் உள்பட கட்டுரையின் மொத்த மதிப்பெண்கள் சிறப்புப் பாரத்தில் (பாரம் A) பதிவு செய்யப்பட்டன (கார்சன் & நண்பர்கள், 1990:252).

அதே கட்டுரைப்படிகள் சொற்பிணைப்பி பகுப்பாய்வுக்கும் பயன்படுத்தப்பட்டன. ஒவ்வொரு கட்டுரையும் 250 சொற்கள் கணக்கிடப்பட்டு கோடிடப்பட்டன. எஞ்சிய சொற்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டா. மேற்கோள் காட்டுவதற்கும் பகுப்பாய்வதற்கும்

எளிமையாக்க கணக்கில் கொள்ளப்பட்ட ஒவ்வொரு சொற்களுக்கும் எண் குறிக்கப்படும். பிறகு, சொற்பிணைப்பிகள் கண்டுபிடிக்கப்பட்டு வகைப்படுத்தி சிறப்புப் பாரத்தில் (பாரம் B) பதிவு செய்யப்பட்டன.

அதே கட்டுரைப்படிகள் தர ரீதியாகவும் ஆய்வு செய்யப்பட்டன. இதன்வழி மாணவர்கள் கட்டுரைகளில் சொற்பிணைப்பிகளைப் பயன்படுத்தும்போது எதிர்நோக்கும் சிக்கல்களை அடையாளங்கண்டு சிறப்புப் பாரத்தில் (பாரம் C) பதிவு செய்யப்பட்டன.

6.0 தரவுப் பகுப்பாய்வும் விவாதமும்

விவாதத்தை எளிமையாக்க கட்டுரைகளில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் அடைவு நிலைகளாக மாற்றப்பட்டுள்ளன. A நிலைக் கட்டுரைகள் 10 (சராசரி 87.3%) சிறந்த கட்டுரைகளாகவும், B நிலைக் கட்டுரைகள் 9 (சராசரி 75.2%) நல்ல கட்டுரைகளாகவும், C நிலைக் கட்டுரைகள் 6 (சராசரி 65.8%) சுமாரான கட்டுரைகளாகவும், D நிலைக் கட்டுரைகள் 5 (சராசரி 55.8%) பலவீனமான கட்டுரைகளாகவும் பகுக்கப்பட்டுள்ளன. மாணவர்களின் கட்டுரை மதிப்பெண் வரம்பு 68 முதல் 77 வரையிலாகும். பரவல் வரம்பு குறுகி காணப்படுகிறது. எனவே, மாணவர்கள் கட்டுரை எழுதுவதில் பலவீனமான நிலையில் அல்லர் என்பது தெளிவாகிறது.

6.1 வினா 1:

மாணவர்கள் கட்டுரைகளில் பல்வேறு சொற்பிணைப்பிகளைப் பயன்படுத்துகின்றனர். ஒவ்வொரு கட்டுரையிலும் பயன்படுத்தப்படும் சொற்பிணைப்புகளின்படி ஆராயும்போது சொற்களஞ்சியவகைச் சொற்பிணைப்பிகள் அதிகமாக (63.5%) பயன்படுத்தப்பட்டுள்ளன. தொடர்ந்து, மேற்கோள்வகைச் சொற்பிணைப்பிகள் (16.9%) கையாளப்பட்டுள்ளன. மூன்றாவது நிலையாக இணைப்புவகைச் சொற்பிணைப்பிகள் (11.7%) இடம்பெறுகின்றன. மாற்றீடுவகைச் சொற்பிணைப்பிகள் (5.6%), எச்சவகைச் சொற்பிணைப்பிகள் (2.3%) ஆகிய அளவுகளில் இருக்கின்றன.

சொற்களஞ்சியவகைச் சொற்பிணைப்பிகள் ஏடல்களை விளக்கப்படுத்துவதற்குக் கருத்து விளக்கக் கட்டுரைகளில் அதிகமாகப் பயன்பாட்டில் உள்ளதென்பது தெளிவாகிறது. சிறந்த கட்டுரைகளில் அதிகமாகவும் திறம்படவும் சொற்பிணைப்பிப் பயன்பாடு இருக்கின்றதென ஆய்வு முடிவுகள் காட்டுகின்றன.

6.2 வினா 2 :

மாணவர்கள் பயன்படுத்தும் சொற்பிணைப்பிகளின் எண்ணிக்கைக்கும் கட்டுரைகளின் தரத்திற்குமிடையேயுள்ள உறவைத் தொடர்பு பகுப்பாய்வின்வழி கண்டறியப்பட்டுள்ளது. அப்பகுப்பாய்வின்படி, கட்டுரையில் பயன்படுத்தப்படும் சொற்பிணைப்பிகளுக்கிடையே நேர்மறையான, முக்கிய உறவு உள்ளதென காட்டுகிறது. சொற்பிணைப்பிகளுக்கிடையேயுள்ள தொடர்பைப் பியர்சன் (r) மதிப்பின்படி 0.846 கணிசமாக 0.01 மட்டத்தில் காட்டுகிறது. எனவே, சொற்பிணைப்பிகள் திறம்பட கையாளப்பெற்ற கட்டுரைகளின் மதிப்பெண்களும் உயர்ந்து காணப்படுகிறது.

6.3 வினா 3 :

ஐவகைச் சொற்பிணைப்பிகளைக் கட்டுரைகளில் பயன்படுத்தும்போது மாணவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களைத் தர பகுப்பாய்வு அலசுகின்றது. ஆய்வின் முடிவுகள் மேற்கோள், மாற்றீடு, எச்சம், சொற்களஞ்சியம், இணைப்பு ஆகிய வகை சொற்பிணைப்பிகளின் அடிப்படையில் விளக்கப்படுகிறது.

6.3.1 மேற்கோள்வகை சொற்பிணைப்புச் சிக்கல்

எ.கா : 1

> 16 க்கும் 25 அகவைக்கும் இடைப்பட்ட இளையோரே வன்முறைச் செயல்களில் ஈடுபடுகின்றனர். ***இதில்*** எரியும் நெருப்பில் நெய் ஊற்றுவது போல் புக்கிட் அமான் புலனாய்வுதுறை இந்தியர்கள் வன்முறை நடவடிக்கைகளில் அதிகளவில் ஈடுபடுகின்றனர் என்று புள்ளி விபரங்களுடன் வெளியிட்டுள்ளனர்.

மேற்கண்ட எடுத்துக்காட்டில் மாணவர் ***'இதில்'*** என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். அந்தச் சொற்பிணைப்பி முந்தைய வாக்கியத்துடன் உள்ள தொடர்பைத் தெளிவாக விளக்கவில்லை. மேற்கோள் சொற்பிணைப்பி பயன்பாட்டில் வாக்கியங்களுக்கிடையேயுள்ள தொடர்பில் ஐயம் எழுந்துள்ளது.

எ.கா : 2

> சமுதாயச் சீர்கேடு என்றாலே நாம் யாவருக்கும் தெரிந்த ஒன்றாக விளங்குகிறது. ***அவை*** என்னவென்றால் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, போதைப் பொருளுக்கு அடிமையாதல் போன்ற இன்னும் பல.

மேற்கண்ட பத்தியில் முதல் வாக்கியத்தை இணைக்க மாணவர் ***'அவை'*** என்ற மேற்கோள் சொற்பிணைப்பியைப் பயன்படுத்தியுள்ளார். ***'அவை'*** என்பது பன்மை பொருளைக் குறிப்பதால் முதல் வாக்கியத்தில் பன்மை பொருள் விளக்கப்படுத்தப்படவில்லை.

எ.கா : 3

> வெளிப்புற நடவடிக்கைகளில் ஈடுபடும் இளைஞர்களுக்குக் காற்பந்து, கூடைப்பந்து விளையாட்டுகள் ***சிறந்தது***.

மேற்கண்ட வாக்கியத்தில் ***'சிறந்தது'*** என்ற சொல் மிக நல்ல ஒன்றை மேற்கோளாகக் குறிப்பிடுகின்றது. இருந்த போதிலும், ***'சிறந்தது'*** என்ற சொல் மிக உயரிய நிலையை இன்னொரு நிலையோடு ஒப்பிட்டு காட்ட வேண்டும்.

எ.கா : 4

> சமூகச் சீர்கேடுகளிலிருந்து விளகியிருக்க ***ஆரோக்கியமான நடவடிக்கைகளில்*** ஈடுபட வேண்டும். அது மட்டும் அல்லாது நாம் ***நல்ல வாழ்க்கை*** முறையும் ***வேறு பல கூறுகளையும்*** கவனத்தில் கொள்ள வேண்டும்.

'ஆரோக்கியமான நடவடிக்கைகளில்', 'நல்ல வாழ்க்கை' ஆகிய சொற்றொடர்கள் அதன் நடவடிக்கையையும் வரையறையையும் தெளிவாகக் குறிக்கவில்லை. ***'வேறு பல கூறுகளையும்'*** என்ற சொற்றொடர் என்ன கூறுகள் என்பதனைத் தெளிவுபடுத்தவில்லை. எனவே, தெளிவில்லாத பொதுவான மேற்கோள் சொற்பிணைப்பிகள் வாசிப்பாளருக்கு மயக்க நிலையை ஏற்படுத்தி விளங்காமலேயே போய்விடுகிறது.

எ.கா : 5

> மக்கள் ***அந்த அருவருக்கத்தக்க*** செயல்களைப் பொருட்படுத்தாமல் இருந்தால் மேலும் மேலும் ***அதிகரித்த*** வண்ணமே இருக்கும்.

'அந்த அருவருக்கத்தக்க', 'அதிகரித்த' ஆகிய சொற்றொடர்களின் மேற்கோள் எதுவென குறிப்பிடவில்லை. எனவே, வாசிப்பாளருக்கு எதைப் பற்றியது என புரியாது. இது ஒரு நல்ல சொற்பிணைப்புக் கூறாகாது. இவ்வாறான குறைகள் தரமற்ற, செறிவில்லாத வாக்கிய அமைப்புக்கு வித்திடும்.

6.3.2 மாற்றீடுவகை சொற்பிணைப்புச் சிக்கல்

எ.கா : 1

> இருவர் வெட்டிக் கொலை, மது அருந்தி வாகனம் ஓட்டி மரணம் மற்றும் சிறுமி கற்பழிப்பு. இவையெல்லாம் இன்றைய நாளிதழில் வெளியாகும் பரபரப்பான முக்கியத் தலைப்புச் செய்திகள். ***இவையெல்லாம்*** யாரைக் குறை கூறுவது?

மேற்கண்ட எடுத்துக்காட்டில் மாணவர் ***'இவையெல்லாம்'*** என்ற மாற்றீடுவகை சொற்பிணைப்பியை முந்தைய வாக்கியத்திலுள்ள சமூகச் சீர்கேடுகளைக் குறிக்க பயன்படுத்தியுள்ளார். உண்மையில் ***'இவற்றுக்கெல்லாம்'*** என்ற மாற்றீடே அச்சூழலுக்குப் பொருத்தமானதாகும். பொருத்தமற்ற மாற்றீடு பயன்பாடு வாக்கிய இயைபைப் பாதிக்கும்.

எ.கா : 2

> அரசாங்கம் பல விழிப்புணர்வு ***பிரச்சாரங்களை*** நடத்த வேண்டும். ***பிரச்சாரம்*** செய்து மக்களிடையே விழிப்புணர்வைக் கட்டாயம் ஏற்படுத்த வேண்டும்.

மாணவர் ***'பிரச்சாரம்'*** என்ற அதேச்சொல்லை இருமுறை பயன்படுத்தியுள்ளார். இரண்டாம் வாக்கியத்தில் ***'இதன்மூலம்'*** என்ற சொல்லை மாற்றீடாகப் பொருத்தி ***'செய்து'*** என்ற சொல்லை நீக்கினால் சொற்பிணைப்புச் சரியாக அமைந்துவிடும். சரியான மாற்றீடுவகை சொற்பிணைப்பைப் பயன்படுத்துவதால் வாக்கியத்தின் நிலைத்தன்மையைப் பராமரிக்கலாம்.

எ.கா : 3

> பொது இடங்களில் ***அரைகுறையாக*** உடுத்துகிறார்கள், சரி அதை நவீனம் என்று மனதை தேற்றிக் கொள்வோம். ஆனால் கடவுள் சந்நிதியிலும் ***அரைகுறையாக*** உடுத்திக் கொண்டு வருவதை என்னதான் காரணங்கள் கூறினாலும் ஜீரணிக்க இயலாத ஒரு விஷயமாகும்.

மேற்கண்ட வாக்கியத்தில் ***'அரைகுறையாக'*** என்ற சொல்லை அநாகரிகச் செயலுக்கு மாணவர் மறுபடியும் பயன்படுத்தியிருக்கிறார். அச்சொல்லுக்கு மாற்றீடாக ***'இவ்வாறு'*** என்ற சொல்லை மாணவர் கையாளலாம்.

6.3.3 இணைப்புவகை சொற்பிணைப்புச் சிக்கல்

எ.கா : 1

> இந்தச் சினிமா நமெக்கெல்லாம் நன்மை கொண்டு வருகிறதோ ***அல்லது*** இல்லையோ ***ஆனால்*** நம் மக்கள் கெட்டுச் சீரழிந்துபோக நல்ல பாடத்தைச் சொல்லிக் கொடுக்கிறது.

மேற்கண்ட எடுத்துக்காட்டில் மாணவர் பொருத்தமற்ற இணைப்புவகை சொற்பிணைப்பைப் பயன்படுத்தியுள்ளார். அவ்வாக்கியத்தில் ***'அல்லது'*** என்ற சொல் பயன்படுத்தத் தேவையில்லை. ***'ஆனால்'*** என்ற சொல்லும் வாக்கிய இயைபுக்குத் தேவையற்றதாகும்.

எ.கா : 2

> ***பிறகு***, மிகவும் வேதனைக்குரிய அவல நிலை என்னவென்றால் இந்தச் சினிமாப் படங்களைப் பார்த்து கொஞ்சங் கொஞ்சமாக அழிந்து ஒழிந்து வரும் நமது கலையும் ***மற்றும்*** கலாச்சாரமும் ஆகும்.

மேற்கண்ட வாக்கியத்தில் **'பிறகு'** என்ற சொல் அவ்விடத்தில் பொருத்தமற்றதாகும். **'தொடர்ந்து'** என்ற இணைப்புவகைச் சொற்பிணைப்பைப் பயன்படுத்துவது சரியாக அமையும். **'மற்றும்'** என்ற சொல் அவ்வாக்கியத்தில் தேவையற்றதாகும்.

எ.கா : 3

இன்றையச் சூழ்நிலையில் நம்மிடம் இருக்க வேண்டிய சுயபக்குவம் போதவில்லை **மாறாக** சமயக் கல்வி போதனையும் போதவில்லை.

'மாறாக' என்ற சொல் எதிர்மாறான சூழலை ஒப்பிடுவதற்கு அல்லது நேர்மறை எதிர்மறை கூற்றுகளை விளக்கப் பயன்படுத்துவதற்காகும். மாணவர் இணைப்புவகை சொற்பிணைப்பிகளைத் தவறாகப் பயன்படுத்துகின்றனர். அவ்விடத்தில், **'அதுமட்டுமில்லாமல்' / 'அதோடு'** என்ற இணைப்புச் சொற்பிணைப்பிகளைப் பயன்படுத்தலாம்.

எ.கா : 4

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் சொகுசாக வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் ஒன்றுக்கு மூன்று வேலைகள் செய்கின்றனர். **ஆனால்** தங்கள் பிள்ளைகளோடு நேரத்தைச் செலவிட இயலாமல் ஆகிறது.

'ஆனால்' என்ற சொல் எதிர்மறையான பொருளை விளக்கும். எனவே, அச்சொல் பயன்பாடு பொருத்தமற்றதாகும். இணைப்பு சொற்பிணைப்பிகளான **'இருந்தாலும்' / 'இருப்பினும்' / 'இருந்தபோதிலும்'** போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.

6.3.4 சொற்களஞ்சியவகை சொற்பிணைப்புச் சிக்கல்

எ.கா : 1

சமூகச் சீர்கேடு அதிகமாக உள்ள **சமுதாயமாக** நம் இந்திய **சமூகம்** உள்ளது.

மேற்கண்ட வாக்கியத்தில் மாணவர் **'சமூகம்'** என்ற சொல்லை மும்முறை பயன்படுத்தியுள்ளார். மீண்டும் மீண்டும் அதே சொல்லைப் பயன்படுத்துவதினால் மாணவருக்குப் போதுமான சொற்களஞ்சியவகை சொற்பிணைப்புக் குறைவாக அறிந்துள்ளாரென புலப்படுகிறது. மாணவர் **'குழுகாயமாக'** , **'இனம்'** போன்ற சொற்பிணைப்பிகளைப் பயன்படுத்துவது மேலும் கட்டுரையின் தரத்தை உயர்த்தும்.

எ.கா : 2

சமூகச் சீர்கேட்டுப் பிரச்சினையை இப்போதே களையாவிட்டால் எதிர்காலத்தில் களைவது **முயலுக்கு மூன்று காலாகிவிடும்**.

மாணவர் **'முயலுக்கு மூன்று காலாகிவிடும்'** என்ற சொற்றொடரைப் பயன்படுத்தியுள்ளார். மேற்கண்ட வாக்கிய சூழலில் அச்சொற்றொடர் சரியான பொருளை விளக்கவில்லை. அதற்கு மாற்றாக **'குதிரைக் கொம்பாகிவிடும்'** என்ற சொற்றொடர் சரியான சொற்களஞ்சியவகை சொற்பிணைப்பியாக அமையும்.

7.0 பயன்விளைவுகள்

ஆய்வின் முடிவுகள் உயர்நிலைப் படிவங்களில் தமிழ்மொழிக் கட்டுரை கற்றல் கற்பித்தலில் மூன்று பயன்விளைவுகளைப் புலப்படுத்துகின்றன.

முதலாவதாக, நன்கு கட்டுரை எழுத வேண்டிய படிவம் ஐந்து மாணவர்கள் சொற்பிணைப்பிகளைப் பயன்படுத்துவதில் தெளிவில்லாமல் இருக்கின்றனர் என்பது உண்மை. எனவே, கட்டுரை கற்பிப்பதில் மாணவர் மைய நடவடிக்கைகள் அதிகம் நடத்தப்பெற வேண்டும். இதனால் அடையாளங் காணப்பட்ட மாணவர் சிக்கல்களைத் திட்டமிட்டு முறையாகக் களையலாம். கற்றல் கற்பித்தலின்போது போதுமான எடுத்துக்காட்டுகளைச் சரியாகவும் தெளிவாகவும் விளக்கப்படுத்த வேண்டும். மாணவர்கள் சொற்பிணைப்பிகளைப் புரிந்து பயன்படுத்துவதற்குச் செம்மையான கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் வழிவகுக்கும். மாணவர்களுக்குப் புதிய வழிமுறைகளான கணினி துணையுடன் கட்டுரை கற்பித்தலை மேற்கொள்வது நலம் பயக்கும்.

இரண்டாவதாக, சொற்களஞ்சியச் சொற்பிணைப்பிப் பயன்பாடு மிகவும் பலவீனமாக மாணவர் கட்டுரைகளில் காணப்பெறுகிறது. ஒரு குறுகிய வரம்புக்குள்ளேயே மாணவர்களின் சொற்களஞ்சியம் இருக்கின்றது. அதோடு மட்டுமல்லாமல், சில சொற்களஞ்சியச் சொற்பிணைப்பிகளையும் சிலேடைகளையும் தவறாகப் பயன்படுத்துகின்றனர். எனவே, மாணவர்கள் புதிய கலைச்சொற்களைச் சமூக சூழலில் கற்கத் தூண்டலாம். விரிவான அகரி பயன்பாட்டை மேற்கொள்ள வழிவகுக்கலாம். தொடர்ந்து, சொற்பட்டியல், பொழிப்புரை, அருஞ்சொற்பொருள், எதிர்சொல், மொழியணிகள் ஆகியவற்றைத் தெளிவான எடுத்துக்காட்டுகளுடன் கற்பிப்பதாகும்.

மூன்றாவதாக, கட்டுரை வரைதலுக்கும் வாசிப்புப் பாடத்திற்கும் இடையேயுள்ள தொடர்பு மிகவும் ஊனமாகக் காணப்படுகிறது. இவ்விரு கூறுகளையும் ஒருங்கிணைக்கும் பொருட்டு, கட்டுரை வரைவதற்கு முன்னர் அதிகமான வாசிப்புப் பொருண்மைகளை உரக்க வாசிக்கச் செய்யலாம். திட்டமிட்ட சொற்பிணைப்பிகள் கொண்ட வாசிப்புப் பனுவல்களை ஆசிரியர் வழங்கி விளக்குவது பொருத்தமாக அமையும். மாணவர்களுக்கு வழிகாட்டி கட்டுரைகளை இடுபணியாக வழங்கலாம். மாணவர் ஆசிரியர் கலந்துரையாடல்வழி ஒரு மாதிரி கட்டுரைப் பயிற்றிகளை உருவாக்கலாம். அப்பயிற்றியில் செறிவான கருத்தாடல்களைப் புகுத்தியிருப்பது முக்கியமாகும்.

8.0 முடிவுரை

இவ்வாய்வானது, தமிழில் சொற்பிணைப்பிகளைப் பற்றி அடையாளங் காட்டும் முயற்சியாக அமைந்தது. ஹல்லிடே & ஹசனின் (1976) சொற்பிணைப்பு உருப்படிவம்வழி தமிழ்மொழி கட்டுரைகளில் உள்ள கருத்தாடலை எளிமையான முறையில் சொற்பிணைப்புக் கூறுகளைப் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. சொற்பிணைப்பிகள் கட்டுரைகளையும் எழுத்துப் படிவங்களையும் பிணைத்து ஒட்டி வைத்திருக்கும் பசை போன்றது மட்டுமல்ல உரைக்குள்ளேயே செயல்படும் சமிக்ஞை விளக்காக அமைந்துள்ளது. எல்லா எழுத்துப் படிவங்களின் நிலைத்தன்மை சொற்பிணைப்பிகளின் பயன்பாட்டைப் பொருத்து அமைகின்றன. எனவே, சொற்பிணைப்பிகளைத் தெளிவாக அறிந்து மாணவர்களும் ஆசிரியப் பெருமக்களும் செயல்பட்டால் கட்டுரைகளின் தரம் மேம்படுவது திண்ணம்.

துணை நூற்பட்டியல் :

Beaugrande & Dressler (1986). *Introduction to text linguistics*. New York: Longman Logotron.

Brown & Yule (1987). *Discourse analysis*. Cambridge: New York: Cambridge University Press.

Carson, J.E., et.al., (1990). *Reading, writing relationships in first and second language.* TESOL Quaterly 24:2, 245-266.

Che Mohd. Arif Mohd Yusof (1996). *Penggunaan penanda wacana dalam kemahiran mengarang*. Kuala Lumpur: Jurnal Dewan Bahasa, jil. bil.11: 1032-1044.

Evans, Janet (1986). *The writing classroom : aspects of writing and the primary child 3-11*. London: David Fulton Pub.

Halliday, M.A.K., & Ruqaiya Hasan (1976). *Cohesion in English*. London: Longman Publications.

Lembaga Peperiksaan Malaysia, Kementerian Pelajaran Malaysia (2000 & 2002). *Laporan prestasi Sijil Pelajaran Malaysia*, Kuala Lumpur.

Utusan Malaysia Daily (1997). *Lemahnya kemahiran mengarang pelajar SPM*. Kuala Lumpur: Percetakan Utusan Melayu (M) Berhad.

White, James Boyd (1983). *When words lose their meaning : constitutions and reconstituitions of language, character and community*. Chicago: University of Chicago Press.

மொழி அனுபவ அணுகுமுறைவழி (Language Experience Approach) பேச்சுத் தமிழையும் எழுத்துத் தமிழையும் ஒருங்கே கற்பித்தல்

முனைவர் க. ஷண்முகம்
தலைவர், தமிழ்த் துறை, சிம் பல்கலைக்கழகம், சிங்கப்பூர்

தமிழ்மொழி இரட்டை வழக்கு கொண்டது: பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு. பேச்சு தோன்றிப் பரவலாகப் பயன்பட்ட பின்னரே எழுத்து வடிவம் உருவாகியிருக்கவேண்டும். பேச்சு வழக்கு என்பது பாமர மக்கள் முதல் கற்றவர் வரை அனைவராலும் பயன்படுத்தக்கூடியது. ஆனால், எழுத்து வழக்கு கற்றவர்களால் மட்டுமே கையாளக்கூடியது. பேச்சு மொழியை ஒருவர் வீட்டில் பெற்றோர், உறவினர், அதே மொழி பேசும் அண்டை அயலார் போன்றோரிடமிருந்து கைவரப் பெறுகின்றனர். மாறாக, எழுத்து வழக்கைக் குழந்தைகள் குறிப்பிட்ட வயதிலிருந்து பள்ளிக்குச் சென்று முறையாகக் கற்கின்றனர். இவ் இரண்டு வகைக வழக்குகளில் பேச்சு வழக்கைக் கைவரப்பெறுவது மிக எளிது. எழுத்து வழக்கைக் கற்றுக்கொள்வதற்குக் காலம் அதிகம் செலவாகும். பேச்சுத் தமிழ் நடைமுறை வாழ்க்கைக்கு, குறிப்பாக அன்றாட கலந்துரையாடலுக்கு அதிக அளவில் உதவுவது. மாறாக, எழுத்துத் தமிழ் மேடைப்பேச்சு, வானொலி, தொலைக்காட்சி அறிவிப்புகள், செய்தி வாசிப்பு போன்றவற்றில் இடம்பெறும்.

புலம் பெயர்ந்த நாடுகளில் குறிப்பாக, ஆதிக்க மொழியொன்று (Dominant) பரவலாகப் பேசப்படும் சூழலில் வாழும் பிற மொழியினர், தத்தம் மரபுடைமை மொழிகளைத் தக்கவைப்பதில் பல இடர்ப்பாடுகளை இன்று எதிர்நோக்குகின்றனர். பல சந்தர்ப்பங்களில் இந்நாடுகளில் குடியேறிய பின்னர் இரண்டாம், மூன்றாம் தலைமுறையினர் தம் மொழிகளை இழந்து விட்டனர் அல்லது இழந்தும் வருகின்றனர். எத்தனை முயற்சிகளை மேற்கொண்டாலும் அவை அதிகப் பலன்களை அளிப்பதில்லை. பொருளாதார அனுகூலங்கள், அரசியல் செல்வாக்கு, சமூக அந்தஸ்துள்ள மொழிகள் போன்றவற்றுடன் மரபுடைமை மொழிகளால் எதிர் நீச்சல் போடவியலவில்லை. இது தமிழர்கள் இன்று புலம் பெயர்ந்து வாழும் பல நாடுகளில் கண்கூடு. மொழியினைக் காப்பாற்ற தமிழ்ப்பள்ளிகள் வழியோ வார இறுதி வகுப்புகள் வழியோ தமிழைக் கற்பித்தாலும் வகுப்புக்கு வெளியிலும் குடும்பம் உட்படவும் தாய்மொழி பேசப்படுவது அருகி வருகிறது அல்லது அறவே கிடையாது. இதற்குச் சமூக மொழியியலார் பல காரணங்களைப் பட்டியலிட்டாலும் ஒரு காரணம் தலைதூக்கி நிற்கிறது. அது பேச்சு வழக்கிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காமல் எழுத்து வழக்கிற்கு முன்னுரிமை கொடுப்பது. இது தமிழுக்கு மிகப் பொருந்தும். பேர்த்திறன்களான (Macroskills) கேட்டல், பேசுதலுக்கு முன்னுரிமை வழங்காமல் இன்றும் வாசித்தல் மற்றும் எழுதுதல் திறன்களே மிக வலியுறுத்தப்படுகின்றன. இவையே தேர்விலும் அதி முக்கியத்துவம் பெறுகின்றன. இது மொழிச் சரிவையோ (Language shift) அல்லது மொழி இழப்பையோ (Language loss) தடுக்கும் அரண்களாக அமையா! தாய்மொழியில் நூல்கள் வாசிப்பதும் கவிதை, கதை போன்றவை எழுதுவதும் அம்மொழியை இரண்டாம் மொழியாக அல்லது அயல்மொழியாகக் கற்பவரிடையே இன்று குறைந்துவிட்டது. பள்ளி வாழ்க்கைக்குப் பின்னர்ப் பெரும்பாலோர் தமிழில் வாசிப்பதும் இல்லை எழுதுவதும் இல்லை.

ஓரளவுக்கேனும் அவர்களுக்கு உதவுவன கேட்டல் திறனும் பேசுதல் திறனமுமேயாகும். உப்பில்லாத பண்டம் குப்பையிலே என்பதுபோல் பேசப்படாத மொழி செத்த மொழியே!

பெரும்பாலான வீடுகளில் (குறிப்பாகச் சிங்கப்பூர்) இன்று தமிழ் பேசப்படுவது அரிதாகி வரும் வேளையில் பேச்சுத் தமிழையும் வகுப்பில் நடைமுறைப்படுத்துவது நல்லது. பெரும்பாலான பாலர் பள்ளிகளிலும் தமிழ் அறிமுகமில்லாத நிலையில் இது மிக அவசியமானது. இல்லையெனில் குழந்தைகள் முதலாம் வகுப்பில் சேரும்போதுதான் (ஆறு வயதில்) தமிழ்மொழியையே முதல்முதலாகக் கேட்கும் வாய்ப்புக் கிட்டும். இது கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வதற்கு ஒப்பாகும்.

பேச்சுத்தமிழ் ஒரு குறிப்பிட்ட வகுப்புகளுக்கு மட்டுமே அமலில் இருக்கவேண்டும் என்பதற்கு மாறாக அனைத்து நிலைகளிலும் மாணவர்-ஆசிரியர் உரையாடலிலும் மாணவர்-மாணவர் பேச்சிலும் இடம்பெறவேண்டும். இன்று தொலைக்காட்சி, திரைப்படங்கள், வானொலி, தமிழ்க்கல்வி இவற்றின் பயன்பாட்டால் தரமான பேச்சுத்தமிழ் பரவலாக உள்ளது. குறிப்பாக மலேசியா, சிங்கப்பூர் முதலிய நாடுகளில் தரமான பேச்சுத் தமிழ் பேசப்படுவதைக் காணலாம். இங்கு வதியும் அனைத்துத் தமிழ் மக்களும் வட்டார, அல்லது சமூக வழக்கு மொழிகளைப் பேசுவதில்லை. அதனால், இவர்களின் பேச்சுத்தமிழ் பாணி, பயன்படுத்தும் சிற்சில சொற்களை வைத்து இவர்களின் மூதாதையரின் பூர்வீகம்பற்றி உறுதியாக ஊகிக்க இயலாது. ஆனால், தமிழகத்தின் மொழிச்சூழல் சற்று வித்தியாசமாக இருக்கலாம். அங்குச் சமூக வழக்கு, வட்டார வழக்கு போன்ற அடிப்படையில் பேச்சு வழக்கு இடம்பெறுகிறது.

மாணவர்களிடையே பேச்சுத்தமிழை எங்ஙனம் பரப்புவது?
கீழ்க்கண்ட நடவடிக்கைகள்வழி பேச்சுத்தமிழைப் பயன்படுத்த ஆவன செய்யலாம்.

1. பாகமேற்று நடித்தல் (Role Play)
2. பொருள்களைக் காட்டிப் பேசுதல் (Show and Tell)
3. கதை கூறுதல்
4. ஓரங்க நாடகம்
5. நகைச்சுவைத் துணுக்குகளைப் பகிர்ந்துகொள்ளுதல்
6. சொந்த அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளுதல்
7. ஊடகங்களில் படித்த/கேட்ட/கண்ட (நாளிதழ்/வானொலி/தொலைக்காட்சி) சுவையான நிகழ்ச்சிகளைப் பகிர்ந்துகொள்ளுதல்

பேச்சுத்தமிழை வாழ்வுமொழியாக வளர்க்கும் தருணத்தில் எழுத்து வழக்கையும் ஆசிரியர்கள் கற்பிக்கும் பணியில் ஈடுபட வேண்டியுள்ளது. முறைசார்ந்த கல்வியில் எழுத்து வழக்கு முக்கியத்துவம் பெறுகின்றது. இந்த இரு துருவங்களையும் எவ்வாறு நாம் வகுப்பில் ஒன்றிணைத்துக் கற்பிக்கலாம்?

அதற்கு ஒரு வழி மொழி அனுபவ அணுகுமுறை (Language Experience Approach). இம்முறையைக் கல்வித்திட்டத்தில் பரவலாக மேனாட்டினர் பயன்படுத்தி வந்தனர். இன்று அம்முறை அதிகமாக வழக்கில் இல்லாவிடினும் ஒரு மொழியை இரண்டாம் மொழியாகவோ

அயல்மொழியாகவோ கற்போருக்கு இது வரப்பிரசாதமாக அமையும். இவ்வணுகுமுறைவழி கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல், சிந்தித்தல் முதலிய திறன்களைக் கற்பிக்க முடியும். படிமுறையில் (Process Writing) கட்டுரை எழுதும் உத்திகளையும் மாணவர்களுக்கு இந்த அணுகுமுறைவழி அறிமுகப்படுத்தலாம். பல வரைவுகளை எழுதுவதன்வழி எவ்வாறு தம் எழுத்துப்படைப்புகளை மேம்படுத்தலாம் என்பதையும் அவர்களுக்கு அறிமுகப்படுத்தலாம். தொடக்கப்பள்ளியில் படக் கட்டுரை (சிங்கப்பூரில) அதிகம் தரப்படுவதால் அப்படங்களைப் பார்த்து மாணவர்கள் கதை கூறுவதும் எளிதாகவிருக்கும்.

முதலில் இவ்வணுகுமுறையிலுள்ள படிநிலைகளைக் காண்போம்.

1. பிள்ளைகள் தங்களுக்கு ஏற்பட்ட ஓர் அனுபவத்தை அல்லது ஒரு கதையை வகுப்பில் கூறுவர். பெரும்பாலும் பேச்சுத்தமிழில் அல்லது பிழைகளுடன் அதைக் கூறுவர்.
2. ஆசிரியர் அவர்கள் கூறுவதை அப்படியே பெரிய தாள் (Majong Paper) ஒன்றில் எழுத்துத்தமிழில் எழுதுவார்.
3. எழுதி முடித்த பின்னர், ஆசிரியர் அதனை உரக்க வாசித்துக் காட்டுவார்.
4. ஆசிரியர் வாசிக்க, அவரைத் தொடர்ந்து அதைக் கூறிய மாணவன் வாசிப்பான். மாறுதலாக, எல்லா மாணவர்களையும் வாசிக்கவும் சொல்லலாம்
5. ஆசிரியரும் மாணவனும் சேர்ந்து உரக்க வாசிப்பர்.
6. மாணவன் மட்டுமே உரக்க வாசிப்பான்.
7. பின்னர் எழுத்துத் தமிழிலுள்ள அந்தக் கதையை மற்ற மாணவர்கள் பேச்சுத் தமிழில் ஒவ்வொருவராகக் கூறும்படிச் சொல்லலாம்.

மாணவர்களின் வயது, அனுபவம், மொழித்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் அவர்கள் சொல்லும் கதைக்கான/நிகழ்ச்சிக்கான வாக்கியங்கள் அமையும். பெரும்பாலும் அவை கரடுமுரடான/இலக்கணப் பிழையான வாக்கியங்களாக அமையும். அதே போன்று பேச்சுத் தமிழிலும் வாக்கியங்கள் முடிவற்று இருக்கும். பொதுவாக, ஆசிரியர்கள் வகுப்பில் பேச்சுத்தமிழைத் தவிர்ப்பதற்கான காரணம் அவர்களின் எழுத்துப்படைப்பில் பேச்சுத்தமிழ் இடம்பெற்றுவிடும் என்ற பயமே. இன்று பேச்சுத்தமிழை இல்லங்களிலும் வெளியிடங்களிலும் கேட்க இயலாதநிலையில் மாணர்களுக்கு அதனை அறிமுகப்படுத்தும் அவசியம் ஏற்படுகிறது. எனவே, ஆசிரியர் பேச்சுத்தமிழில் மாணவர்கள் கூறும் வாக்கியங்களை எழுத்துத் தமிழில் எழுதலாம். இதன்மூலம் பேச்சுத்தமிழுக்கும் எழுத்துத் தமிழுக்குமுள்ள தொடர்பை அவர்கள் அறிந்துகொள்வதோடு பேச்சுத்தமிழிலுள்ள சொற்களை அல்லது வாக்கியங்களை எவ்வாறு எழுத்துத் தமிழில் முறையாக எழுதுவது என்பதையும் அவர்களால் உணரமுடியும். பேச்சுத் தமிழைப் பேச அறிந்துகொள்வதால் பின்னர் எழுத்துத் தமிழைக் கற்பது சிரமம் என்றும் எழுத்து வேலையில் குறுக்கீடு ஏற்படும் என்ற கருத்துகளும் தவறானவை.

எவ்வாறு மொழி அனுபவ அணுகுமுறை அமல்படுத்தப்படுகிறது?

1. கலந்துரையாடல்/விவாதித்தல்

வகுப்புக்கேற்பப் படக்கட்டுரையையோ தலைப்பையையோ தரலாம். மாறாக, மாணவர்களுக்கு நினைவிலிருக்கும் நிகழ்ச்சி அல்லது அவர்கள் சென்று வந்த இடத்தைப் பற்றிக் கூறச் சொல்லலாம். முதலில் குழுமுறையிலும் படக்கட்டுரை அல்லது தலைப்பையொட்டிக் கலந்து பேசச் சொல்லலாம்.

1. கதை உருவாக்கம்

மாணவர்கள் படங்களைப் பார்த்தோ தலைப்பையொட்டியோ வாக்கியங்களைக் கூறச் சொல்லலாம். எல்லா மாணவர்களையும் ஒவ்வொரு வாக்கியமாகத் தொடர்ச்சியாகக் கூறச் சொல்லலாம். பெரிய தாளில் (Majong paper) ஆசிரியர் அவற்றை எழுதிக்கொள்வார்.

2. கதையைப் படித்தல்

தாளில் எழுதப்பட்ட கதையை ஆசிரியர் உரக்க வாசித்துக்காட்டுவார். எல்லா மாணவர்களும் ஆசிரியரைத் தொடர்ந்து உரக்க வாசிப்பர். மாறாக, ஆசிரியர் அந்தக் கதையை/நிகழ்ச்சியைக் கூறிய குறிப்பிட்ட மாணவனை மட்டும் உரக்க வாசிக்கச் சொல்லலாம். இத்தருணத்தில் மாணவர்களைக் கதைக்குப் பொருத்தமான தலைப்பை யோசிக்கச் சொல்லலாம்.

3. தொடர் நடவடிக்கை

குழுவாகக் கதையைப் படிக்கலாம் அல்லது இணையாளருடன் சேர்ந்து படிக்கலாம்.

மொழி அனுபவ அணுகுமுறையினால் ஏற்படும் நன்மைகள்

1. ஒவ்வொரு மாணவனின் மொழித்திறனை ஆசிரியரால் அளவிட வாய்ப்புள்ளது.
2. மாணவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள முடிகிறது.
3. கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல், சிந்தித்தல் முதலிய திறன்கள் மேம்பட வாய்ப்பு ஏற்படுகிறது.
4. போட்டி மனப்பான்மையின்றி, மாணவர்கள் தத்தம் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள இயலுகிறது.
5. படிநிலைவழி எழுதும் முறைகளையும் (Process Writing) அறிந்துகொள்கின்றனர்.
6. மாணவர்கள் இருவகை வழக்குகளையும் அறிந்துகொள்கின்றனர்.

இம்முறைவழி பல நன்மைகள் இருப்பினும் சில குறைபாடுகளையும் காணலாம். அவையாவன:

- கற்பிக்கக் கூடுதலான நேரம் தேவை
- குறைவான மாணவர்களுள்ள வகுப்புக்குப் பொருத்தமானது
- மாணவர்களின் அனுபவத்துக்கேற்ற தலைப்புகளோ படக்கட்டுரைகளோ மட்டுமே பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படும்
- மொழிவளம் இல்லாத மாணவர்கள் ஆங்கிலச் சொற்களைக் கலந்து கூறலாம்

குறைகளைக் களைய பரிந்துரைக்கப்படும் மாற்றங்கள்

1. வகுப்பிலுள்ள அனைத்து மாணவர்களும் பங்கேற்கும் வகையில் கூடிக்கற்றல் (Cooperative Learning) முறைகளைக் கையாளலாம். நான்கு பேர்கொண்ட குழுவில் ஒவ்வொரு மாணவனும் ஒரு வாக்கியம் கூறவேண்டும். அவற்றுள் சிறந்ததை ஆசிரியரிடம் கூறலாம். ஒன்றுக்கு மேற்பட்ட குழுக்களில் இருந்து அவர்கள கூறும் வாக்கியங்களில் சிறந்தவற்றை ஆசிரியர் தெரிவு செய்யலாம். குழுவில் மொழிவளம் இல்லாத மாணவர்கள் மற்ற மாணவர்களிடமிருந்து உதவிபெறலாம்.
2. மாணவர்கள் பிழையாகச் சொன்னாலும் அதைக் கேட்டுப் பிழை நீக்கி ஆசிரியர் எழுதுவதன்வழி மாணவர்கள் உடனுக்குடன் தம் பிழைகளையும் அறிந்துகொள்கின்றனர்.
3. மாறாக, மாணவர்கள் பிழையுடன் கூறும் வாக்கியங்களை எவ்விதத் திருத்தமும் செய்யாமல் எழுதிய பின்னர் மறு வரைவின்போது ஆசிரியர் மாணவர்களிடமே அவற்றின் பிழையற்ற வடிவத்தைக் கேட்டுத் திருத்தி எழுதலாம்.

முடிவுரை

ஆங்கிலமொழி கற்பித்தலுக்கு மொழி அனுபவ நடவடிக்கை பயன்படுத்தப்பட்டிருந்தாலும், அவ்வணுகுமுறையைத் தமிழ் கற்பித்தலுக்கும் பயன்படுத்தலாம். நம் மொழியைக் கற்பிப்பதற்குத் தேவையான மாற்றங்களை நாம் புகுத்திக்கொள்ளலாம். மாணவர்களின் வயது, அனுபவம், அறிவு முதிர்ச்சி போன்றவற்றிற்கேற்ற தலைப்புகளைத் தேர்ந்தெடுத்துக் கற்பிப்பது முக்கியம்.

மாணவர்களிடையே பண்பாட்டு விழுமியங்களைப் பேணுவதில் மலேசியத் தமிழ்மொழிப் பாடங்களின் பங்கு

முனைவர் சாமிக்கண்ணு ஜெபமணி ஈசாக்கு சாமுவேல்
சுல்தான் இட்ரிசு கல்வியியல் பல்கலைக்கழகம்

தமிழ்மொழி மலேசியத் தொடக்கப்பள்ளிகளில் பயிற்று மொழியாகவும் தேசியப்பள்ளிகளிலும் இடைநிலைப்பள்ளிகளிலும் ஒரு பாடமாகவும் அங்கீகாரம் பெற்றுள்ளது. தமிழ்ப்பள்ளி, தேசியப்பள்ளி, இடைநிலைப்பள்ளி ஆகியவற்றில் தமிழ்மொழியைக் கற்பிப்பதற்குப் தமிழ்ப் பாடநூல்கள் மலேசியப் பாடப்புத்தகப் பிரிவால் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. தொடக்கப்பள்ளிகளில் தமிழ்ப்பள்ளிக்கும் தேசியப்பள்ளிக்கும் முதலாம் ஆண்டு முதல் ஆறாம் ஆண்டு வரையும் இடைநிலைப்பள்ளிகளில் புகுமுக வகுப்புத் தொடங்கி ஐந்தாம் படிவம் வரையும் தமிழ்ப் பாடநூல்கள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. இப்பாடப்புத்தகங்கள் கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவால் உருவாக்கப்படும் தமிழ்மொழிப் பாடத்திட்டத்திற்கு ஏற்ப தயாரிக்கப்படுகின்றன. இப்பாடப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ள பாடப்பொருள்கள் திறன்களுக்கு ஏற்ப குமுகாயம், சமயம், கலை, பண்பாடு, வரலாறு, அறிவியல், தொழில்நுட்பம், நாட்டு நடப்பு, பல்லின மக்கள் போன்ற பல்வேறு துறைகளைச் சார்ந்தவையாக காணப்படுகின்றன. தமிழ்மொழிப் பாடப் புத்தகத்தில் எவ்வகையான பண்பாட்டுக் கூறுகள் காணப்படுகின்றன அவை எவ்வாறு மாணவர்களிடையே பண்பாட்டு விழுமியங்களைப் பேணுவதில் பங்காற்றுகின்றன என்பதை ஆராய்வதே இவ்வாய்வு கட்டுரையின் நோக்கமாகும்.

முதலாம் ஆண்டு தமிழ்மொழிப் பாடநூலில் தமிழர்களின் பண்பாட்டுப் பண்டிகைகளாகிய பொங்கல் (தமிழ்மொழி ஆண்டு 1, 2010:11), தீபாவளி (தமிழ்மொழி ஆண்டு 1, 2010:130) ஆகிய இரண்டு தமிழர் விழாக்கள் குறித்த செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்நூலில் தீபாவளி அன்று காலையில் எழுந்து எண்ணெய் தேய்த்துக் குளிக்கும் வழக்கம்; புத்தாடை அணிந்து கோயிலுக்குச் செல்லும் வழக்கம்; முறுக்குப் போன்ற பாரம்பரிய பலகாரங்களைத் தயாரித்து விருந்தினர்களை வரவேற்கும் வழக்கம் போன்ற பண்பாட்டு விழுமியங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன. இதன் வழி தீபாவளி பண்டிகையை எவ்வாறு கொண்டாட வேண்டும் என்ற பண்பாட்டுச் செய்தியை ஏழு வயதிலேயே முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு உணர்த்துவதில் முதலாம் ஆண்டு தமிழ்மொழிப் பாடநூல் வெற்றிக் கண்டுள்ளது.

மேலும், இப்பாடநூலில் பிள்ளைகள் தாய் தந்தையின் கால்களில் விழுந்து ஆசீர்வாதம் பெற வேண்டும் எனும் பண்பாட்டுச் செய்தி, முதலாம் ஆண்டு பாடத்திட்டத்தில் செய்யுளும் மொழியணியும் பகுதியில் இடம் பெற்றுள்ள 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்ற கொன்றை வேந்தனைக் கற்பிக்கும் போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது (தமிழ்மொழி ஆண்டு 1, 2010:88). இதன் வழி முதலாம் ஆண்டு மாணவர்கள் பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிதல், மரியாதை

செலுத்துதல், பெற்றோர்களை வணங்குதல் போன்ற பண்பாட்டு விழுமியங்களைப் பேணுவதில் முதலாம் ஆண்டு மலேசியத் தமிழ்மொழிப் பாடநூல் முக்கியப் பங்கு வகிக்கின்றது.

தொடர்ந்து, இரண்டாம் ஆண்டு தமிழ்மொழிப் பாடநூலில் மொழி எனும் கருப்பொருளின் கீழ்த் தமிழ்மொழியின் சிறப்புகள் காட்டப்படுகின்றன (தமிழ்மொழி ஆண்டு 2, 2011:7-8). இப்பகுதியில் தமிழ்மொழி பழமையான செம்மொழியெனவும், இலக்கண இலக்கிய வளம் பெற்ற மொழியெனவும், வாசிக்கவும் கேட்கவும் தெவிட்டாத மொழியெனவும் போற்றப்படுகின்றது. இப்பாடத்தின் வழி மாணவர்களிடையே தமிழ்மொழியின் பாரம்பரிய சிறப்பை உணர்த்தி அவர்கள் தமிழ்மொழியை நேசிக்கவும் சுவாசிக்கவும் இரண்டாம் ஆண்டு தமிழ்மொழிப் பாடநூல் வழி வகுத்துள்ளது.

மேலும், இரண்டாம் ஆண்டு தமிழ்மொழிப் பாடநூலிலும் தீபாவளி குறித்த பண்பாட்டுச் செய்திகள் காட்டுகின்றன (தமிழ்மொழி ஆண்டு 2, 2011:42-44). முதலாம் ஆண்டு தமிழ்மொழிப் பாட நூலில் இடம் பெற்றுள்ளது போலவே இந்நூலிலும் தீபாவளி அன்று காலையில் எழுந்து எண்ணெய் தேய்த்துக் குளிக்கும் வழக்கம்; புத்தாடை அணிந்து கோயிலுக்குச் செல்லும் வழக்கம்; முறுக்கு, அதிரசம், நெய் உருண்டை போன்ற பாரம்பரிய பலகாரங்களைத் தயாரித்து விருந்தினர்களை வரவேற்கும் வழக்கம் போன்ற பண்பாட்டுச் சிறப்புகள் சித்தரிக்கப்பட்டுள்ளன. இச்செய்தி முதலாம் ஆண்டு தமிழ்மொழிப் பாடநூலில் இடம் பெற்றுள்ளதால் இச்செய்தியை மீண்டும் கூறுவதிலிருந்து தவிர்த்திருக்கலாம். இதற்குப் பதில் வேறேதேனும் பண்பாட்டுச் செய்தியைக் கூறியிருக்கலாம்.

மேலும், இப்பாடநூலில் பண்பாடு என்ற கருப்பொருளின் கீழ்த் தமிழ் மாதங்களை அறிமுகம் செய்வதோடு இந்திய நடனக் கலையாகிய பரதமும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது (தமிழ்மொழி ஆண்டு 2, 2011:78-79). இதனை அடுத்து, இப்பாடநூலில் விளையாட்டு எனும் கருப்பொருளின் கீழ்க் கபடியும், ஆடுபுலி ஆட்டமும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது (தமிழ்மொழி ஆண்டு 2, 2011:100-101). அடுத்து, இப்பாடநூலில் இசை எனும் கருப்பொருளின் கீழ்த் தமிழர்களின் இசைக் கருவிகளாகிய வீணை, வயலின், மிருதங்கம், புல்லாங்குழல், தபேலா போன்ற இசைக் கருவிகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன (தமிழ்மொழி ஆண்டு 2, 2011:105-106). இப்பாடங்களின் வாயிலாகக் கொடுக்கப்பட்டுள்ள தமிழர்களின் நடனம், விளையாட்டு, இசைக் கருவிகள் குறித்த செய்திகளும் மாணவர்களிடையே பண்பாட்டு விழுமியங்களைப் பேணுவதில் தமிழ்மொழிப் பாடநூல்கள் முக்கியப் பங்காற்றுகின்றன.

தொடர்ந்து, மூன்றாம் ஆண்டு பாடநூலில், தமிழர்களின் பண்பாட்டினை வெளிப்படுத்தும் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ள வழக்குரை காதை காட்சிகள்

கொடுக்கப்பட்டுள்ளன (தமிழ்மொழி ஆண்டு 3, 2012:13). இக்காட்சிகள் வழி மாணவர்களிடையே தமிழர்களுடைய கற்பு நெறி, நீதி போன்ற பண்பாட்டு விழுமியங்களைப் பேணமுடிகிறது. இதற்கிடையே, இப்பாடநூலில் தமிழர் பண்பாடு எனும் தலைப்பின் கீழ்ச் சம்மணம் இட்டு அமர்ந்து உணவு உண்ணும் பழக்கம்; வாழை இலையில் உணவு பரிமாறும் பழக்கம்; வலது கையால் உணவு உண்ணும் பழக்கம் போன்ற தமிழர்களின் பண்பாட்டு விழுமியங்கள் காட்டப்படுகின்றன (தமிழ்மொழி ஆண்டு 3, 2012:14). இப்பாடப் பகுதி, அதனை வாசிக்கும் மாணவர்கள் இப்பண்பாட்டுப் விழுமியங்களைப் பின்பற்றி வாழ்வதற்கு வழி வகுக்கின்றது.

மேலும், மூன்றாம் ஆண்டு தமிழ்மொழிப் பாடநூலில் கோலாட்டம், பரதம், கரகாட்டம் ஆகிய பண்பாட்டு நடனக் காட்சிகள் காட்டப்படுகின்றன (தமிழ்மொழி ஆண்டு 3, 2012:60). இக்காட்சிகளைக் காணும் மாணவர்கள் தமிழர்களின் பாரம்பரிய நடனங்களை அறிந்துகொள்ளவும், இந்நடனங்களைக் கற்றுக்கொண்டு பேணவும் வாய்ப்பாக அமையும் என்பதில் ஐயம் இல்லை. இதற்கிடையில், இதே கருப்பொருளின் கீழ் ஆடுபுலி ஆட்டம், உறியடித்தல் போன்ற பண்பாட்டு விளையாட்டுகளும் பேசப்படுகின்றன (தமிழ்மொழி ஆண்டு 3, 2012:62). இதன் வழி மாணவர்கள் இவ்விளையாட்டுகளை அறிந்துகொள்வதோடு இவ்விளையாட்டுகளில் தங்களை ஈடுபடுத்திக்கொள்வதால் இப்பண்பாட்டு விளையாட்டுகள் நிலைப்பெற வாய்ப்பாக அமைகிறது.

மேலும், மூன்றாம் ஆண்டு தமிழ்மொழிப் பாடநூலில் இனிய இசை எனும் கருப்பொருளின் கீழ் கடம், நாதஸ்வரம், வீணை ஆகிய தமிழர்களின் பண்பாட்டு இசைக் கருவிகள் குறித்த செய்திகள் கொடுக்கப்படுள்ளன (தமிழ்மொழி ஆண்டு 3, 2010:99-101). மேலும் மொழி எனும் கருப்பொருளின் கீழ் இடம்பெற்றுள்ள பாடப்பகுதியில் செம்மொழியாகிய தமிழ்மொழியின் சிறப்புகள் காட்டப்படுகின்றன (தமிழ்மொழி ஆண்டு 3, 2012:115-116). தொடர்ந்து, மொழியும் விழாவும் எனும் கருப்பொருளின் கீழ் இடம்பெற்றுள்ள பாடப்பகுதியில் தமிழர்களின் பண்பாட்டு விழாவாகிய பொங்கல் குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன (தமிழ்மொழி ஆண்டு 3, 2012:137-139). மூன்றாம் ஆண்டு தமிழ்மொழிப் பாடநூலில் பேசப்பட்டுள்ள அனைத்துப் பண்பாட்டுச் செய்திகளும் முதலாம் இரண்டாம் ஆண்டு தமிழ்மொழிப் பாடநூல்களில் பேசப்பட்டுள்ளன. பேசியதையே மீண்டும் மீண்டும் பேசுவதைவிடுத்து புதிய பண்பாட்டுச் செய்திகளைக் கொடுத்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்.

தொடர்ந்து, நான்காம் ஆண்டு தமிழ்மொழிப் பாடநூலில், தமிழர் திருமணம் குறித்த செய்தி இடம்பெற்றுள்ளது (தமிழ்மொழி ஆண்டு 4, 2005:5-6). மேலும், இப்பாடநூலில் சித்திரைப் பௌர்ணமி திருவிழா பற்றியும் பேசப்பட்டுள்ளது. (தமிழ்மொழி ஆண்டு 4, 2005:11) இதற்கிடையே, இப்பாடநூலில் தமிழர் பண்பாட்டு விளையாட்டான கபடி ஆட்டம் குறித்துப் பேசப்பட்டுள்ளது (தமிழ்மொழி ஆண்டு 4, 2005:46). இப்பண்பாட்டுச் செய்திகளும் மாணவர்களிடையே பண்பாட்டு விழுமியங்களைப் பேணுவதில் முக்கியப் பங்கு வகித்துள்ளது.

ஐந்தாம் ஆறாம் ஆண்டு தமிழ்மொழிப் பாடநூல்களில் தமிழர் பண்பாட்டு விழுமியங்கள் குறித்த தகவல்கள் எதுவும் கொடுக்கப்படவில்லை. இவ்விரு ஆண்டு தமிழ்மொழிப் பாடநூல்களில் தமிழர் பண்பாட்டு விழுமியங்கள் குறித்த செய்திகள் இடம்பெறாதது வருத்தம் அளிக்கின்றது.

தொடர்ந்து, புகுமுக வகுப்புத் தமிழ்மொழிப் பாடநூலில் தமிழர்களுடைய பண்பாட்டு விழாவாகிய பொங்கல் குறித்துக் கவிஞர் சோமசன்மா இயற்றியுள்ள கவிதை இடம்பெற்றுள்ளது. ஆனாலும், இக்கவிதையில் பொங்கல் குறித்த பண்பாட்டுச் செய்திகள் இடம்பெறவில்லை மாறாக பொங்கல் வாழ்த்துக் கவிதையாக இடம்பெற்றுள்ளது. (தமிழ்மொழி புகுமுக வகுப்பு, 2004:78).

தொடர்ந்து, முதலாம் படிவத் தமிழ்மொழிப் பாடநூலில் தமிழ்மொழியின் சிறப்புகள் குறித்த செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் தமிழ்மொழியின் தொன்மை, இனிமை, ழகர சிறப்பு, இலக்கண இலக்கிய வளம் ஆகியவை குறித்து விளக்கப்பட்டுள்ளன. (தமிழ்மொழி படிவம் 1, 2002:155-156).

தொடர்ந்து, இரண்டாம் படிவத் தமிழ்மொழிப் பாடநூலில் தமிழர்களின் பண்பாட்டு இசைக் கருவிகளாகிய வீணை, மிருதங்கம், புல்லாங்குழல், நாதஸ்வரம் போன்ற இசைக் கருவிகள் பற்றி பேசப்பட்டுள்ளது (தமிழ்மொழி படிவம் 2, 2003:195-196).

மேலும், மூன்றாம் படிவத் தமிழ்மொழிப் பாடநூலில் தமிழ்மொழியின் சிறப்புகள் குறித்த செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் தமிழ்மொழியின் தொன்மையும் இனிமையும் சிறப்பும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன (தமிழ்மொழி படிவம் 3, 2004:44-46). மேலும், தமிழ்ப் பண்பாடு என்ற தலைப்பில் கண்ணகி தமிழர்களின் பண்பாட்டை மீட்டெடுத்த செய்தி பேசப்படுகின்றது (தமிழ்மொழி படிவம் 3, 2004:54)

தொடர்ந்து, நான்காம் படிவத் தமிழ்மொழிப் பாடநூலில் 'பழந்தமிழரின் உலக நோக்கு' எனும் தலைப்பில் இடம்பெற்றுள்ள பாடப் பகுதியில் 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்று உலக மக்கள் அனைவரையும் ஒரே குடும்பமாக எண்ணிப் பாடிய பண்பாட்டுச் செய்தியைக் காணமுடிகின்றது (தமிழ்மொழி படிவம் 4, 2002:43-44).

ஐந்தாம் படிவத் தமிழ்மொழிப் பாடநூலில் தமிழர் பண்பாட்டு விழுமியங்கள் குறித்த தகவல்கள் எதுவும் கொடுக்கப்படவில்லை. இருப்பினும், முதலாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம் படிவத் தமிழ்மொழிப் பாடநூல்களில் இராமாயணம், மகாபாரதம், நளவெண்பா, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன.

இக்காப்பியங்களில் இடம் பெற்றுள்ள கதைமாந்தர்களின் வழி தமிழர்களின் அறம், கற்பு, வீரம், கொடை, நீதி, பக்தி, இறை நம்பிக்கை போன்ற தமிழர்களின் பண்பாட்டு விழுமியங்கள் பேசப்பட்டுள்ளன என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

தமிழ்ப்பள்ளிகளுக்கான தமிழ்மொழித் தர ஆவணக் கலைத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள முதலாம், இரண்டாம், மூன்றாம் ஆண்டு தமிழ்மொழிப் பாடநூல்களில் அதிகமான பண்பாட்டு விழுமியங்கள் குறித்த செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன. தொடக்கப்பள்ளிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட பாடத் திட்டத்தின் கீழும் இடைநிலைப்பள்ளிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட பாடத் திட்டத்தின் கீழும் இயற்றப்பட்ட தமிழ்மொழிப் பாடநூல்களில் போதுமான பண்பாட்டு விழுமியங்கள் இடம்பெறவில்லை. மேலும், முதலாம் ஆண்டு தொடங்கி ஐந்தாம் படிவம் வரை தமிழ்ப் பயிலுகின்ற மாணவர்களின் பண்பாட்டு விழுமியங்களைப் பேணுவதில் தமிழ்மொழிப் பாடநூல்களின் பங்கு குறைவாக இருப்பது இவ்வாய்வில் தெரிகிறது.

மாணவர்களிடையே ஓர் இனத்தின் பண்பாட்டு விழுமியங்களைக் கொண்டு சேர்ப்பதில் பாடநூல்களின் பங்கு முக்கியமான ஒன்றாகும். இப்பணியினைப் பாடப் புத்தகப் பிரிவு கூடுதல் பொறுப்புடனும் கவனத்துடன் மேற்கொள்வது அவசியமாகும். ஒவ்வொரு ஆண்டு மாணவர்களுக்கும் கற்பிக்க வேண்டிய பண்பாட்டு விழுமியங்களைக் வரையறுத்துக் கொண்டு பாடநூல்களைத் தயாரித்தால் ஒரே மாதிரியான பண்பாட்டு விழுமியங்களை மீண்டும் மீண்டும் கற்பிப்பதிலிருந்து தவிர்க்கலாம். மேலும், பல்வேறு புதிய பயன்மிகு பண்பாட்டு விழுமியங்களைக் கற்பிப்பதற்கும் வாய்ப்பாக அமையும்.

மேற்கோள் நூற்கள்

ரவிந்திரன் தனபால் & சரஸ்வதி கண்ணன், (2010), *தமிழ்மொழிப் பாடநூல், ஆண்டு ஒன்று*, Petaling Jaya: Multi Educational Book Enterprise

ரவிந்திரன் தனபால் & சரஸ்வதி கண்ணன், (2011), *தமிழ்மொழிப் பாடநூல், ஆண்டு இரண்டு*, Petaling Jaya: Multi Educational Book Enterprise

சரஸ்வதி கண்ணன் & சந்திரன் வீரமுத்து, (2012), *தமிழ்மொழிப் பாடநூல், ஆண்டு மூன்று*, Petaling Jaya: Multi Educational Book Enterprise

சரஸ்வதி கண்ணன் & லெட்சுமி சுப்பையா, (2005), *தமிழ்மொழிப் பாடநூல், ஆண்டு நான்கு*, Kuala Lumpur: Syarikat P. Ganesan.

ரவிந்திரன் தனபால், சரஸ்வதி கண்ணன் & லெட்சுமி சுப்பையா, (2006), *தமிழ்மொழிப் பாடநூல், ஆண்டு ஐந்து*, Petaling Jaya: Multi Educational Book Enterprise.

ரவிந்திரன் தனபால் & சரஸ்வதி கண்ணன் (2007), *தமிழ்மொழிப் பாடநூல், ஆண்டு ஆறு*, Petaling Jaya: Multi Educational Book Enterprise.

முத்துசாமி, மொ. & ராஜேந்திரம், பெ. (2004), *தமிழ்மொழிப் பாடநூல், புகுமுக வகுப்பு*, Petaling Jaya: Multi Educational Book Enterprise.

முத்துசாமி, மொ. முனியன், வ. &.குழந்தைவேலு, க. (2002), *தமிழ்மொழிப் பாடநூல், படிவம் ஒன்று*, Kuala Lumpur: Penerbitan Jaya Bakti.

முத்துசாமி, மொ. முனியன், வ. &.குழந்தைவேலு, க. (2003), *தமிழ்மொழிப் பாடநூல், படிவம் இரண்டு*, Kuala Lumpur: Penerbitan Jaya Bakti.

முத்துசாமி, மொ. முனியன், வ. &.குழந்தைவேலு, க. (2004), *தமிழ்மொழிப் பாடநூல், படிவம் மூன்று*, Kuala Lumpur: Penerbitan Jaya Bakti.

முத்துசாமி, மொ. முனியன், வ. &.குழந்தைவேலு, க. (2002), *தமிழ்மொழிப் பாடநூல், படிவம் நான்கு*, Kuala Lumpur: Penerbitan Jaya Bakti.

முத்துசாமி, மொ. முனியன், வ. &.குழந்தைவேலு, க. (2003), *தமிழ்மொழிப் பாடநூல், படிவம் ஐந்து*, Petaling Jaya: Multi Educational Book Enterprise.

தமிழை இரண்டாம் மொழியாகப் பயில்வோர்க்கான கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள்

சிவமூர்த்தி இ சி
மொழியியல், ஆங்கிலத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

1. அறிமுகம்

பிரயோக மொழியியல் (Applied Linguistics) துறையில் மொழி கற்றல், கற்பித்தல் (Language Learning and Teaching) என்பது பிரதான இடம் வகிக்கின்றது. மொழி கற்றல் கற்பித்தலில் இரண்டாம் மொழி கற்றல் கற்பித்தல் (Second Language Learning and Teaching) என்பது தாய்மொழி அல்லாத மொழிகளைக் கற்பிக்கும் சூழலினைக் குறிப்பதாகும். தாய்மொழி அல்லாத மொழிகளைக் கற்பிக்கும் சூழலில் மொழியமைப்பு, மொழியின் பயன்பாட்டில் சிக்கல்கள் உருவாகின்றன. இவ்வாறான நிலையில் முரண்நிலை ஆய்வு (Contrastive Study) என்பது தீர்வாக அமைகிறது. இரண்டாம் மொழியின் ஒலியியல் (Phonetics) கூறுகளில் இருந்து தொடரமைப்பு (Syntax) வரை தாய்மொழியுடன் ஒற்றுமை வேற்றுமைகளை ஒப்பிட்டுக் கற்பிக்க வேண்டியது அவசியமாகும். கற்போர் அவற்றைத் தெளிவாக விளங்கிக் கொள்ளும் வகையில் கற்பிக்கும்போது இரண்டாம் மொழி கற்றல் கற்பித்தல் என்பது வெற்றிகரமாகவும், பயனுடையதாகவும் அமையும்.

இவ் ஆய்வுக்கட்டுரையானது இலங்கையில் இரண்டாம் மொழியாகத் தமிழைப் பேசுகின்ற சிங்கள சமூகத்தினரை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்யப்படுகிறது. இலங்கையின் கல்வி முறைமையைப் பொறுத்தவரையில் இரண்டாம் மொழிக்கல்வி என்பது இன்று முக்கிய இடம்பிடித்த ஒன்றாக விளங்குகின்றது. அது பாடசாலைகள் முதல் பல்கலைக்கழகங்கள், உயர் கல்வி நிறுவனங்கள் என்று தொடர்ந்து செல்வதாக அமைகின்றது.

இரண்டாம் மொழி (Second Language) என்பது பன்மொழிச் சமுதாயம் (Multi Lingual Society) உள்ள நாட்டில் சமுதாயங்களிற்கு இடையேயான கலாசார (Cultural) பாலமாகவும், இன ஒருமைப்பாட்டிற்கும் அடித்தளமாக அமைகின்றது. இரண்டாம் மொழிக் கல்வி முறைமையின் நோக்கமும் இதுவேயாகும்.

இலங்கையில் இரண்டாம் மொழிக் கல்வி என்பது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகள் அமைந்துள்ள சூழலில் ஆங்கிலம் என்பது சர்வதேச தொடர்பாடல் மொழியாகவும் (International Communication Language) தமிழ்பேசும் மக்களிடையே சிங்களமொழி இரண்டாம் மொழியாகவும், சிங்களமொழி பேசும் மக்களிடையே தமிழ் இரண்டாம் மொழியாகவும் நடைமுறையில் இருந்து வருகிறது.

பொதுவாக ஒரு மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பவர் முதலில் அம்மொழியினைப் பேசக் கற்றுக்கொள்ளுதல் வேண்டும். இந்நிலையில் ஒரு மொழியானது பல கிளைமொழிகளை (Dialects) கொண்டதாயின் எந்தக் கிளைமொழியைத் தேர்ந்தெடுத்துப் பேசுவது, கற்பிப்பது என்பது மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் எழும் ஒரு பிரச்சினையாகும். இரண்டாம் மொழியாகத் தமிழைக் கற்கின்ற சிங்கள மாணவர்கள் இலங்கையின் பேச்சுத்தமிழ் என்கின்றபோது யாழ்ப்பாணத்தமிழ், மட்டக்களப்புத்தமிழ், மலைநாட்டுத்தமிழ், இஸ்லாமியத்தமிழ் என வேறுபட்ட பேச்சு மொழிகளை எதிர்நோக்க வேண்டியவர்களாகவுள்ளனர். இந்நிலையில் தான் தராதரவழக்கினை (Standard Variety)

தேர்ந்தெடுத்து கற்பிப்பது ஆசிரியர்களுடைய கற்பித்தல் முறையாக அமையும். இத்தயை திட்டமிட்ட கற்பித்தல்முறை அமையாத சந்தர்ப்பத்தில் மிக நெருங்கிய தொடர்பு காரணமாகச் சிங்களத்தைத் தாய்மொழியாகக் கொண்டோர் மலைநாட்டுத் தமிழையோ, இஸ்லாமியத் தமிழையோ அதிகம் பேசுபவர்களாகக் காணப்படுவர்.

இரண்டாம் மொழியைக் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் அம்மொழியினை முதல்மொழியாக (First Language) கொண்டவர்களாக இருக்கின்ற நிலையில் கற்போரிடையே அவர்களுடைய தாய்மொழிச் செல்வாக்குக் குறைவாக அமைகின்றது. இரண்டாம் மொழியாகச் சிங்களத்தைக் கற்போர்க்கு சிங்கள மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட ஆசிரியரும், இரண்டாம் மொழியாகத் தமிழைக் கற்போர்க்கு தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட ஆசிரியர்களும் கற்பித்தலில் அமர்த்தப்படுகின்றபோது கற்போர் குறுகிய காலத்தில் பேச்சுப்பயிற்சியில் ஆளுமை உடையோராக வளர வாய்ப்புள்ளது. பாடசாலைகளைப் பொறுத்தவரையில் ஆசிரியநியமனங்களில் கல்விப்புலத்தில் கவனம் செலுத்தப்பட வேண்டிய முக்கிய விடயமாகும்.

இரண்டாம் மொழி கற்றல் என்பது பொதுவாக அம்மொழிச் சூழலில் பழகிக் கற்கின்றபோது நுண்ணியமான உச்சரிப்புக்களுடனும், குறுகிய காலத்தில் கற்க முடிகின்ற சூழ்நிலை உருவாகின்றது. எனினும் நமது நாட்டைப் பொறுத்தவரை இரண்டாம் மொழிக் கற்றலில் அத்தகைய சூழல்கள் எதுவும் உருவாக்கப்படவில்லை. இந்நிலைமையில் கல்வி முறைமையில் நவீனமயமாக்கலில் மொழி கற்றல், கற்பித்தலில் பல அணுகுமுறைகள் (Approaches), கற்பித்தல் உத்திகள் (Teaching Techniques), பாடத் திட்டமிடல் (Lesson Plan) என்பவற்றைக் கையாண்டு கற்பிக்கும்போது கற்பித்தலில் வெற்றி கிடைக்கின்றது.

மொழி கற்றல் கற்பித்தலில் கற்பித்தல் அணுகுமுறைகள் (Teaching Approaches) பிரதான பங்கு வகிக்கின்றன. இவ் அணுகுமுறைகள் தாய்மொழி கற்பித்தல், இரண்டாம்மொழி கற்பித்தலுக்கு ஏற்ப வேறுபட்டு அமைகின்றன. இரண்டாம்மொழி கற்பிப்போருக்கு இலக்கண மொழிபெயர்ப்பு அணுகுமுறை, கேட்டல் எழுதுதல் - அறிதல் அணுகுமுறை, கருத்துப்புலப்பாட்டு அணுகுமுறை, இருமொழிய அணுகுமுறை, பண்பாட்டு சமுதாய மொழியில் அணுகுமுறை என்பன சிறந்த பயன்களைத் தருகின்றன. இலக்கண மொழிபெயர்ப்பு அணுகுமுறையானது மிகப் பழமையானது எனினும் இரண்டாம்மொழி கற்போர்க்கு மொழிபெயர்ப்புச் சொற்களையும், தொடர்களையும் இலகுவில் அடையாளம் காணப் பயனுள்ளதாக அமையும். மொழியானது கருத்துப்புலப்பாட்டு கருவி என்பதால் கருத்துப்புலப்பாட்டு அணுகுமுறை மூலம் மொழிப் பயன்பாட்டுத் திறனைப் பெருக்கிக் கொள்வதற்கு பயன்பாட்டோடு அணுகிச் செல்லும் இவ் அணுகுமுறை பயனுடையது. அதாவது இரண்டாம் மொழியில் சொற்களைச் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப பொருத்தமான இடத்தில் பயன்படுத்துவது சிறந்த ஒன்றாகும்.

ஒரு மொழி கற்றலில் மொழி ஆய்வுகூடங்கள் (Language Laboratories) ஒலி உச்சரிப்பில் முக்கிய பங்காற்றுகின்றன. பாடசாலைகள் ஏனைய மொழி கற்பிக்கும் நிறுவனங்களில் இவ் ஆய்வுக்கூட வசதிகள் பிறமொழி உச்சரிப்பைச் சரியான முறையில் உச்சரிக்க வழிவகுக்கின்றன. இரண்டாம் மொழி கற்பித்தலில் களப்பிரயாணங்களைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டியது பிரதானமாகும். பாடசாலைகளைப் பொறுத்தவரையில் மாணவர்களை இரண்டாம் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட மாணவர்களுடன் தொடர்பாடலை ஏற்படுத்தி பேச்சு வழக்குகளை (Spoken Variety) வளர்ப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இதனைப் பாடத்திட்டத்தில் ஆசிரியர்கள் சேர்ப்பதன்மூலம் மேலும் வலுப்படுத்த முடிகிறது.

இரண்டாம் மொழி கற்பித்தலில் கற்பித்தல் உத்திமுறைகள் பயனுடையதாக அமைகின்றன. கற்பித்தலில் உத்திமுறைகள் கற்போருக்கு கற்கின்ற விடயத்தை விரைவாக விளங்க வைப்பதுடன் தெளிவு, நினைவாற்றல் என்பவற்றை அதிகரிக்கின்றது. கற்பித்தலில் கேட்பு பார்த்தல் உத்திமுறை (Audio Visual Aids) சிறந்த கற்பித்தல் முறையாக விளங்குவதுடன் மொழி கற்போர்க்கு ஆர்வத்தையும் எற்படுத்துகின்றது. அத்துடன் குழுச்செயற்பாடுகள் (Group Activities) கற்போரின் மொழி அறிவை அளவிடுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. பாடசாலைக் கல்வி முறைகளில் இத்தகைய மொழி கற்பித்தல் முறைக்கான நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படும்போது இரண்டாம் மொழிக் கற்றல் என்பது கல்வி முறைமையில் வெற்றிகரமான ஒன்றாக அமையும் என்பது வெளிப்படை.

2. தமிழ், சிங்கள மொழிகளின் முரண்நிலை அம்சங்கள்

மொழி அமைப்பு மொழிக்கு மொழி வேறுபடுவது இயல்பான விடயமாகும். இரண்டாம் மொழியாகக் கற்கின்ற நிலையில் வேறு மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளாக இருக்கும் சந்தர்ப்பத்தில் மொழி அமைப்பு (Language Structure) என்பது இரண்டாம் மொழி கற்போருக்கு தெளிவுபடுத்தப்பட வேண்டிய விடயமாகும்.

ஒரு மொழியின் கூறுகளில் ஒலியியல; (Phonetics), ஒலியனியல் (Phonology), உருபனியல் (Morphology), வாக்கியவியல் (Syntax), சொற்பொருளியல் (Semantics) என்பன அடங்குகின்றன. ஒரு மொழியை இரண்டாம் மொழியாகக் கற்கும்போது உச்சரிப்பு என்பது பிரதான இடம்வகிக்கின்றது. எனவே, இங்கு தமிழ், சிங்கள மொழிகளின் ஒலியியல், ஒலியனியல் கூறுகள் முரண்நிலை ஆய்வின் ஊடாக எடுத்துக்காட்டப்படுகின்றன. ஏனைய மொழியியல் கூறுகளும் தொடர்ந்து பிரயோகிக்கும்போது இரண்டாம் மொழியில் பூரணமான தேர்ச்சியை அடைய முடியும்.

முதலில் இருமொழிகளிலும் உயிர் ஒலியன்களைக் கவனத்தில் கொள்வோமாயின்

தமிழ்மொழியில் உயிர் ஒலிகள் (16)

அ	ஆ	இ	ஈ	உ	ஊ
எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ

தமிழ்மொழியில் உயிர் ஒலியன்கள் (10)

அ	இ	ஈ	உ
எ	ஏ	ஒ	ஓ
	ஆ		ஊ

சிங்களமொழியில் உயிர் ஒலியன்கள் (13)

අ	ඉ	ඊ	උ
එ	ඒ	ඔ	ඕ
ඇ	ආ	ඈ	ඌ

இரண்டாம் மொழியாகத் தமிழைக் கற்கின்ற மாணவர்கள் என்ற வகையில் யாழ்ப்பாணத் தமிழினைத் தராதரமாகக் கொண்டு ஆய்வுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. உயிர் ஒலிகளைக்

கற்பிக்கும்போது உச்சரிப்புமுறை தொடக்கம் அவற்றின் தொழிற்பாடு (Function) வரை பூரண விளக்கம் கொடுக்கப்பட வேண்டும்.

உயிர் ஒலியன்கள் ஒலியன் (Phoneme) மாற்றொலி (Allophone) நிலையிலும் இரு மொழிகளிலும் வேறுபடுவதனை அட்டவணையில் உள்ள தரவுகளை ஒப்பீட்டு முறையில் கற்பிக்க வேண்டியது பிரதான கற்பித்தல் முறையாக அமைய வேண்டும். [ɛ] [+] [ə] போன்ற உயிர் ஒலிகள் யாழ்ப்பாணத்தமிழிற்கு (JaffnaTamil) உரிய ஒலிகள் என்பதனையும் சிங்கள மொழியில் [æ] [ə] மேலதிக ஒலிகள் என்பதையும் சுட்டிக் காட்ட வேண்டும்.

உயிர் ஒலியன்களின் நிலையில் ஒற்றுமைத் தன்மைகள் காணப்படினும் மாற்றொலிகளில் வேறுபட்ட நிலையைக் காணலாம். தமிழ் மொழியில்,

	[ɛ]
∴ ய ∴	[a]
	+]
∴ ை ∴	i]
	+]
∴ ர ∴	u]
	ə]
∴ ந ∴	e]

என்பன மாற்றொலிகளாகக் காணப்படுகின்றன. சொல் இறுதியில் யாழப்பாணத்தமிழில் இருக்கின்ற / u / ஆனது **[+]** ஆக உச்சரிக்கப்படுகிறது.

[upp+] 'உப்பு' [uppu] > [upp+]

[uramb+] 'உடம்பு'

[amb+] 'அம்பு'

/i/ என்ற ஒலியன் மொழியின் முதல் நிலையில் **[+]** ஆகவும் உச்சரிக்கப்படுகின்றது.

[+Tam] ' இடம்'

[+Tiyappam] 'இடியப்பம்'

[+ Lamɛ] 'இளமை'

இத்தகைய சூழ்நிலையில் தமிழை இரண்டாம்மொழியாகக் கற்கும் சிங்கள மாணவர்கள் /u/ இன் மாற்றொலியான் [+] it /u/ ஆகவே உச்சரிக்க முயல்வர். [amb+] அம்பு என்பதை [ambu] எனவும் [va:ŋg+] வாங்கு என்பதை [va: ŋgu] எனவும் உச்சரிப்பர். யாழ்ப்பாணத் தமிழில் [+] ஆக உச்சரிக்கப்படுகின்ற மொழியின் தனித்தன்மை கற்பிக்கும்போது அடையாளப்படுத்திக் காட்ட வேண்டும்.

தமிழ்மொழியில் /e/> /o/ ஆகிய உயிர் ஒலியன்கள் சொல் இறுதியில் பயின்று வருவதில்லை. ஆனால் சிங்கள மொழியில் இவை அதிகமான சொற்களில் இடம்பெறுகின்றன.

[ballo] 'நாய்கள்'

[pætte] 'பக்கம்'

[koo] 'எங்கே'

சிங்கள மொழியில் /ə/ எனும் ஒலியன் சொல் முதல்நிலையில் பயின்று வருவதில்லை. ஆனால் யாழ்ப்பாணத்து தமிழில் [ə] என்ற ஒலியானது பயின்று வருவதைக் காணலாம்.

[əTT+] 'எட்டு'

[ə R+mb+] 'எறும்பு'

அதே போன்று /a/ இன் மாற்றொலியான [ɛ] I சிங்கள மாணவர்கள் [æ] என்றே உச்சரிப்பர். [ɛ] இதற்குரிய வேறுபாட்டைத் தமிழில் பயின்று வரும் சொற்களினைக் குறிப்பிட்டு ஒலிப்பு முறையுடன் தெளிவுபடுத்த வேண்டும்.

மூக்கினச்சாயல் பண்பு சிங்கள, தமிழ் மொழிகளில் காணப்பட்டாலும் தமிழ்மொழயில் அதன் வலிமை குறைவு என்பதை சுட்டிக்காட்ட வேண்டும். தமிழ் மொழியை உச்சரிக்கும் சிங்கள மாணவர்கள் அதிகப்படியான மூக்கினச் சாயலைப் பிரயோகிக்கத் தவறமாட்டார். [ɛnb+] [ɛ̃nb+] 'அன்பு' மூக்கினத்தன்மை ஒரளவு காணப்படுகிறது. ஆனால் சிங்கள மொழயில் [ammê:] 'அம்மே' மூக்கினத்தன்மை அதிகம்.

இதேபோன்று தமிழ்மொழியின் ஏனைய உயிரொலியன்களையும் மாற்றொலிகளையும் அவை மொழியில் பயின்று வரும் நிலையையும் சிங்கள மொழியுடன் ஒப்பிட்டு தெளிவாக விளக்குமிடத்து தமிழை இரண்டாம் மொழியாகக் கற்கும் சிங்கள மாணவர்கள் பேச்சு மொழியில் சிறப்பான நிலையை அடைய வாய்ப்பு உள்ளது.

மெய் ஒலியன்களின் நிலையிலும் தமிழ், சிங்கள மொழிகளிடையே முரண்நிலைகளை (Contrast) அவதானிக்க முடிகின்றது. தமிழ்மொழியில் பதின்னான்கு (14) மெய்யொலிகளும், சிங்கள மொழியில் (24) மெய்யொலியன்களும் காணப்படுகின்றன.

இரு மொழிகளிலும் மெய்யொலியன்களின் நிலையில் வேறுபட்ட இயல்புகளை அடையாளம் காண முடிகின்றது. இததனால் இரு மொழிகளிலும் காணப்படும் மெய்யொலியன்களை ஒப்பீட்டு முறையில் (Comparative Method) கற்பிக்கும்போது கற்போர்க்கு இலகுவானதாகவும் நுட்பமான ஒலியியல் அம்சங்களையும் அறிவதற்கு சந்தர்ப்பம் அமைகின்றது.

தமிழ்மொழியில் மெய் ஒலியன்கள்

p	t̪	t	T	c	k
m		n	N		
		l	ɻ		
			r		
v				y	

சிங்கள மொழியில் மெய் ஒலியன்கள்

p	t̲	T	c	k
b	d	d	j	g
^{n}b	^{n}d	^{n}d̆		^{n}g
m	n		ñ	
	S		š	
	I			
	r			
v		y		
		h		

தமிழ்மொழியில் உரசொலிகள் ஒலியன் நிலையைப் பெறவில்லை. ஆனால் சிங்களமொழியில் குழிந்துரசொலியன் ஒலியன் நிலையைப் பெறுகிறது. தமிழ்மொழியில் நுனிநா பல் ஒலியான [t̲] என்பது பிரதான தொழிற்பாட்டைக் கொண்டுள்ளது. சிங்கள மாணவர்களுக்குக் கற்பிக்கும்போது இதனை தெளிவுபடுத்த வேண்டியது அவசியம். தெளிவுபடுத்தாத சந்தர்ப்பத்தில் வளைநாத்தடை ஒலியான [T] ஆக உச்சரிக்க முற்படுவர்.

சிங்கள மொழியில் தடைஒலியன்களில் ஒலிப்புள்ள ஒலிப்பற்ற ஒலிகள் ஒலியன்களாகத் தொழிற்படுவதையும் தமிழ் மொழியில் ஒலிப்பற்ற ஒலிகள் மட்டும் ஒலியன்களாகத் தொழிற்படுவதையும் கற்பிக்கும் பொழுது தெளிவுபடுத்த வேண்டும்.

சிங்கள மொழியில் அரை மூக்கொலியன் (Pre- Nasalized) என்பது வலிமை பெற்றதாகக் காணப்படுகிறது. இதனைத் தமிழ்மொழியிலும் சிங்களமாணவர்கள் பிரயோகிக்கும்போது சிக்கல் நிலையைத் தோற்றுவிக்கின்றது.

மூச்சுநிறை ஒலிகள் (Aspirated Sounds) சிங்களமொழயில் பிரதானமான பண்பாகும். ஆனால் தமிழ்மொழயில் மொழி முதலில் வரும் தடை ஒலியன்கள் மூச்சுநிறை ஒலியாக வருவதில்லை. இப்பண்பு தமிழை இரண்டாம் மொழியாக கற்கும் சிங்கள மாணவர்களுக்குத் தெளிவுபடுத்தப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

சிங்கள மொழியில் தடை ஒலிகள் (Stop sounds) [p] [t] [T] [k] மூச்சுநிறை ஒலிகளாக உச்சரிக்கப்படுகின்றன. மூக்கொலிகளின் (Nasal Sounds) பண்பை ஒப்பிடுகின்றபோது தமிழ்மொழியில் நாவளை மூக்கொலி / N / தனிஒலியன; (Single Phoneme) நிலையிலும் [N] [l̨] ஆகியன ஒலியன் நிலையிலும் /N/ /l̨/

பயின்று வருகின்றன.

[ka!] 'கள்'

[kaN] 'கண்'

ஆனால் சிங்கள மொழியில் நாவளை மூக்கொலியனான [N] இடம் பெறுவதில்லை. மருங்கொலிகளின் தொழிற்பாட்டு நிலையில் நாவனை மருங்கொலியான /!/ உம் நுனிநாஅண்ண மருங்கொலியான /l/ உம் தமிழ்மொழியில் ஒலியனாகத் தொழிற்படுகிறது. இச்சந்தர்ப்பத்தில் இத்தகைய

வேறுபாட்டைத் தெளிவுபடுத்தாத சந்தர்ப்பத்தில் நாவனை மருங்கொலியான [N] I [n] எனவும் [!] I [l] ஆகவும் சிங்கள மாணவர்கள் உச்சரிக்கின்ற சூழ்நிலை உருவாவதற்கு சந்தர்ப்பம் அதிகமாகக் காணப்படுகின்றது. இதனால் பேச்சுஒலியில் முரண்பட்ட நிலைகள் பலவற்றை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்.

பொதுவாக மெய் ஒலிகளைப் பொறுத்தவரையில் தமிழ்மொழியில் ஈருயிர்களுக்கிடையில் வரும் மெய் ஒலிகளின் தொழிற்பாடு அவை பயின்று வரும் நிலை என்பவற்றைத் தெளிவாகக் குறிப்பிட்டுக் கற்குமிடத்து பேச்சு மொழியில் தவறுகளைத் தவிர்க்க முடியும்.

தமிழ்மொழியில்,

/k/ என்ற ஒலியன்

[k]

/k/ [g]

[x]

என்ற மூன்று மற்றொலிகளை உடையது.

[x] என்பது சொல்நிலையில் ஈருயிர்களுக்கிடையிலும்

[g] என்பது மூக்கின ஒலிப்புள்ள ஒலிகளை அடுத்தும் இடம்பெறுகின்றது.

இச் சூழ்நிலையைக் கற்பிக்காத சந்தர்ப்பத்தில்

[x] என்ற ஒலியைச் சிங்கள மாணவர்கள் [h], [g] ஆக ஒலிப்பதற்கான சந்தர்ப்பம் அதிகமாகக் காணப்படும்.

[ka : xam] காகம் என்பதைச் சிங்கள மாணவர்கள் [ka : kam] அல்லது [ka : ham] என உச்சரிக்கும் நிலையைக் காணலாம்.

[v] என்ற ஒலி சிங்களத்திலும் தமிழிலும் உண்டு. [v] ஒலியைச் சிங்கள மாணவர்கள் ஒலிக்கும்போது தமது உதடுகளைக் குவியவைத்து ஒலிக்கின்றனர். ஆதலால் அது தமிழ் ஒலியாகத் தோன்றுவதில்லை.

தமிழ்மொழியில் மெய்ஒலிகள் கூட்டாக வரும்போது சிங்கள மாணவர்களுக்கு உச்சரிப்பது கடினமானதாக அமையும். இருமொழிகளிலும் இரட்டிப்புத் தன்மை உண்டு. ஆனால் சிங்களத்தில் வரும் இரட்டிப்பு தமிழில் உள்ளதைக் காட்டிலும் விறைப்பும் நீட்டமும் அதிகமானதாகக் காணப்படும். இவ் உச்சரிப்பு நிலையைச் சிங்கள மாணவர்கள் தமிழை உச்சரிக்கும்போது பயன்படுத்துகின்றனர். தமிழில் வரும் மெய்க்கூட்டுக்களான [t t̪] [r r], [NN], [! !] இவற்றை அதிகமாக [TT] [r], [n n], [l l] ஆக உச்சரிக்கும் நிலையைத் தாய்மொழிச்சூழல் உருவாக்கிவிடுகின்றது.

முடிவுரை

இலங்கையைப் பொறுத்தவரையில் தமிழை இரண்டாம் மொழியாகப் பயில்வோர்க்கான கற்றல் கற்பித்தல் என்பது முரண்நிலை ஆய்வு (Contrastive Study) ஊடான கற்பித்தலுடன் இரு மொழியினையும் ஒப்பிட்டுக் கற்பிப்பது வெற்றியை அளிக்கும். இரண்டாம் மொழிக் கற்பித்தலில் புதிய

கற்பித்தல் உத்தி முறைகளும் (Teaching Techniques), மொழிச்சூழல் (Language Environment), பாடத்திட்டம் (Lesson Plan), கற்பித்தல் அணுகுமுறைகள் (Teaching Approaches) என்பன சரியாக நடைமுறைப்படுத்தும்போது இரண்டாம் மொழிக் கற்றல் கற்பித்தல் என்பது சாதகமாக அமையும். எதிர்காலத்தில் இன உறவுக்கும், கலாசார ஒருமைப்பாட்டுக்கும் இரண்டாம் மொழிக் கல்வி ஒரு பாலமாக அமையும் என்பது கண்கூடு.

உசாத்துணை நூல்கள்

1. கயிலைநாதன், ,> 1999, தமிழ்மொழிக் கற்பித்தல் மொழியிலாளர் நோக்கு. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் , இலங்கை.
2. கருணாகரன், கி. ஜெயா, வா. 1997, மொழியியல், சுவிதா பதிப்பகம், சென்னை.
3. Balasubramanian, K, Ratnamalar ,K, Subathini, R (ed.) ,1999, Studies in Srilankan Tamil Linguistics and Culture, Professor Swaminathan Suseendirarajah Sixty Fifth Birthday Commemoration Committee,University of Jaffna, SriLanka.

இலக்கிய கூறுகளின் வழி உயர்நிலைச் சிந்தனையைப் போதித்தல்: புறநானூறு ஒரு கண்ணோட்டம்

திரு. செல்வ சுப்ரமணியம் த/பெ ராமையா B.A(Hons),M.A (U.M)
மின் அஞ்சல் முகவரி : selva3098@yahoo.com

1.0 முன்னுரை.

கற்றல் கற்பித்தல் பல்வேறு காரணிகளை உள்ளடக்கிய ஒரு நிகழ்வாகும். இக்காரணிகள் கற்பவர் தன் இலக்கு நோக்கி செல்லும் போதும், விஷயங்களைத் தெரிந்துகொள்ளும்போதும், பழக்கவழக்கங்கள், கல்வி கற்றல் மூலம் அடையும் திறன்கள் முதலியவற்றில் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக அமைந்துள்ளது. அவ்வகையில் இரண்டு நூற்றாண்டுகளாக உலகில் உள்ள அனைத்து ஆய்வாளர்களும், கல்வியாளர்களும் சிந்தனைத்திறனைக் கற்றல் கற்பித்தல் முறையைப் பற்றி நிறையவே சிந்தித்துள்ளனர் (Stemberg.L & Spear- Swelling.L, 1996:2). உயர்நிலைச் சிந்தனைத்திறன் என்பது மாணவர்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தும் போது, அதனை ஆராய்ந்து, கருத்துக்களை உள்வாங்கி சிந்தனை விரிவாக்கம் செய்வதேயாகும். இன்றைய மாணவர்கள் தங்களுடைய அறிவைப் பயன்படுத்தி ஒரு பிரச்சனைக்குத் தீர்வு காண்பது என்பது அரிதான செயலாகத் திகழ்கிறது. இதனை உணர்ந்தே, மாணவர்கள் சிந்தனைத் திறனில் மேம்பாடு காணவேண்டி, பள்ளிகளிலும், ஆசிரியர் பயிற்சிக்கல்லூரிகளிலும் இச்சிந்தனைத் திறன் கற்றல் கற்பித்தலில், கல்வியமைச்சுவினால் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது (L.B.Resnick, 1987:2).

மாணாக்கர்களின் மத்தியில் உயர்நிலைச்சிந்தனை உருவாக்கம் பெற பல வழிமுறைகள் இருந்தாலும், அவற்றுள் இலக்கியம் சிறந்த கருவியாக திகழ்கிறது. இலக்கியத்தின் அவசியத்தைப் பற்றிய ஹட்சனின் (1913), கருத்து நம் கவனத்தை ஈர்க்கத் தக்கது.

"Why do we care about literature? We care literature primarily on account of its deep and lasting human significance. A great book grows directly out of life; in reading it, we are brought into large, close, and fresh relations with life; and in that fact lies the final explanations of its power. Literature is vital record of what men seen in life, what they have exprienced of it, what they thought and felt about those aspects of it which have the most immediate and enduring interest for all of us. It is thus fundamentally an expression of life through medium of language." (W.H.Hudson, 1913:11).

இலக்கியம் என்பது வாழ்க்கையின் கண்ணாடி. அது மனித வாழ்வோடு இணைந்தே செல்கின்றது (Ani Hj Omar 2012:68). . மனித வாழ்வை வளப்படுத்தவும் நெறிப்படுத்தவும் பயன்படுவதோடு வாழ்வின் இலக்கு என்ன என்பதை உணர்த்துவதும் இலக்கியமாகும். அதேவேளை ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியைப் படம் பிடித்துக் காட்டுவதும் இலக்கியமேயாகும் (K.Subramaniya Pillai, 2009:104).. ஆகவேதான் இலக்கியத்தின் வாயிலாக ஒரு சமுதாயத்தின் சிந்தனையையும் நம்மால் அறிய முடிகிறது. எனவேதான், சங்க இலக்கியத்தில் தொடங்கி, பல்வகையாகப் பரிணாமங்கள் அடைந்து தற்கால இலக்கியமாக இன்றும் வளர்ந்து வருகின்ற தமிழ் இலக்கியச் சுவையை மாணவர்களுக்கு உணர்த்தவே கல்வித்திட்டத்தில் இலக்கியக்கூறுகள் தமிழ்மொழிப்பாடத்திலும், இலக்கியம் ஒரு தனிப்பாடமாகவும் இணைக்கப்பட்டுள்ளது.

1.1 ஆய்வின் நோக்கம்.

இவ்வாய்வுக்கட்டுரை ஆசிரியர்கள் எப்படி இலக்கியங்களைப் பயன்படுத்தி மாணவர்களிடையே சிந்தனைத் திறன்களை வளர்க்க இயலும் என்பதனை விளக்க முயலும் நோக்கத்தைக் கொண்டுள்ளது. அதுவும் குறிப்பாக சங்க இலக்கியங்களின் ஒன்றான புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றில் காணப்படும் சிந்தனைகளை அடையாளங்கண்டு, மாணவர்களை எப்படி உயர்நிலைச்சிந்தனை பெற வைப்பது என்பதனை ஆய்வு செய்கிறது.

1.2 உயர்நிலைச் சிந்தனையும் இலக்கியம் கற்றல் கற்பித்தலும்.

மாணவர்களுக்கு உயர்நிலைச் சிந்தனையை ஊட்டுவதற்கு மொழியின் மூலமாக நடத்தப்படும் கற்றல் கற்பித்தல் நடவடிக்கை சிறந்த உபகாரணமாக திகழும். மொழியின் முக்கியக் கூறாகத் திகழும் இலக்கியத்தின் வாயிலாக மாணவர்களுக்கு அனுமானம், திறனாய்வு, முடிவெடுத்தல் போன்ற பல தரப்பட்ட உயர்நிலைச் சிந்தனைகளை ஆசிரியரால் வழங்க முடியும் (N.S.Rajendran, 2000:1). உயர்நிலைச் சிந்தனையை இலக்கியம் கற்பித்தலின் வழி வலுப்படுத்த மூன்று முக்கிய காரணிகளாக ஆசிரியர்கள், பயன்படுத்தும் அணுகுமுறை, மற்றும் தேர்ந்தெடுத்த பொருட்கள் என்ற மூன்றும் இடம் பெறுகின்றன. இலக்கியத்தையும் உயர்நிலைச் சிந்தனையையும் கற்பிக்க ஆசிரியர்களுக்குப் போதுமான அறிவும் ஆற்றலும் இருக்க வேண்டும். ஆசிரியர் கையாளும் அணுகுமுறை அனைத்தும் மாணவர்களுக்கும் ஏற்புடையதாகவும், அவர்கள் அதில் பங்கெடுப்பதாகவும் இருக்க வேண்டும் (C.C.Block, 1993: 4). ஆசிரியர் தேர்ந்தெடுக்கும் பாடவுரை மாணவர்களுக்குச் சவால் மிக்கதாகவும் இருந்தால், அவர்களின் சிந்தனையாற்றல் வளரும். இக்கருத்தினையே பெக் (1989) என்பவர் பின்வருமாறு விளக்கிகிறார்.

"Reading and language arts are the perfect vehicle for developing higher-order thinking because literature- perhaps more than any other source of information- provides powerful models of problem solving processes. It is full of characters who engage in effective and ineffective attempts at solving problem, who use incisive of fuzzy reasoning, and who rely on adequate or inadequate evidence... What is needed is to move the activities that involve higher-order thinking into the core of our lessons, to move our concern towards developing higher level thinking into the mainstream instruction"

(I.Beck, 1989:680-682).

இலக்கியப் பாடத்தைப் போதிக்கும் ஆசிரியர்கள் இலக்கியம் கற்றல் கற்பித்தலில் முழு கவனத்துடன் செயல்பட வேண்டும். மேலும், உயர்நிலைச் சிந்தனையைக் கற்பிக்க இலக்கியத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தும் பொறுப்பும் ஆசிரியர்களுக்கு இருக்க வேண்டும். அதற்கு முதலில் ஆசிரியர்கள் பொருத்தமான வழிமுறைகளையும், நடவடிக்கைகளையும் அடையாளங் காண முற்பட வேண்டும் (R.Stemberg & L.Spear-Swerling, 1996:5). அவ்வகையில் ஆசிரியர்கள் அடிப்படை நிலையிலான பாடத் திட்டமிடுதல், பாடத்தை வழிநடத்துதல் மற்றும் மதிப்பிடுதல் போன்ற கூறுகளில் போதிய கவனம் செலுத்துதல் அவசியமாகிறது (N.S.Rajendran, 2000:5). அது மட்டுமல்லாமல், இலக்கியத்தின் வாயிலாக மாணவர்களுக்கு பண்பாட்டுச் சிந்தனையையும் புகட்ட முடியும். இக்கருத்தினையே லாங்கர் *"... literature is considered as way to guide students into the cultural knowledge (construed broadly or narrowly), aesthetic, judgement, and high culture of society"* விவரிக்கின்றார் (A.Langer. 1995:207-226).

1.3 உயர்நிலைச் சிந்தனையும் இலக்கியம் கற்றல் கற்பித்தலின்போதும் போது கவனிக்கப்பட வேண்டிய கூறுகள்

உயர்நிலைச் சிந்தனையைப் போதிக்கும் ஆசிரியர் ஒரு சில முக்கியமான அறிவுத்திறன்கள் பெற்றிருப்பது அவசியமாகிறது. இத்திறனை ஆசிரியர்கள் கைவரப் பெற்றால்தான் அவர்களால் மாணவர்களிடம் சிந்திக்கும் திறனை வளர்க்க இலக்கிய கல்வி சிறந்த கருவியாக அமையும் (D.K.Cohen, 1991:327-345). அவ்வகையில் ஆசிரியர்கள் இலக்கியத்தில் உயர்நிலைச் சிந்தனையைப் போதிக்கும் போது கீழ்காணும் நடவடிக்கைகளில் கவனம் செலுத்த வேண்டும்.

i. தேர்ந்தெடுக்கப்படும் பனுவல்
ii. உயர்நிலைச் சிந்தனை போதிக்க தேவையான புலூம் (Taxanomy Bloom) படிநிலைகள்.
iii. கற்றல் கற்பித்தலில் மாணவர்களின் உத்வேகமான பங்கேற்பு.
iv. கற்றல் கற்பித்தலில் பயன்படுத்தப்பட வேண்டிய உத்திகளும் அணுகுமுறைகளும்.
v. திறந்த முடிவு கேள்விகள்
vi. கலந்துரையாடல்

vii. சுய மதிப்பீடு
viii. வரைப்படம் உருவாக்கம்
ix. சிக்கல் தீர்வு முறை

இனி மேற்காணும் நடவடிக்கைகள் எப்படி புறநானூறுப் பாடல்கள் உணர்த்தும் உயர்நிலைச் சிந்தனைகளை மாணவர்களுக்கு அறிமுகம் செய்யப் பயன்படுத்தலாம் என்று காண்போம்.

1.3.1 தேர்ந்தெடுக்கப்படும் பனுவலும், கற்றல் கற்பித்தலில் மாணவர்களின் உத்வேகமான பங்கேற்பும்

உயர்நிலைச் சிந்தனையை மாணவர்களுக்குப் புகட்ட நினைக்கும் ஆசிரியர் முதலில் கவனத்தில் கொள்ள வேண்டியது மாணவர்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் இலக்கியப் பனுவல் மாணவர்களின் அன்றாட வாழ்க்கையோடு தொடர்பு உள்ளதாக அமைதல் அவசியம் (Mohd Kassim Ismail, 1994:3). அதேவேளை அப்பனுவலானது சுவாரிசியமாகவும் மாணவர்களுக்கு ஆர்வத்தை மூட்டுவதாகவும் அமைதல் நன்று (N.S.Rajendran, 200:5). கற்றல் என்பது ஒரு சுறுசுறுப்பான நிகழ்வு. மாணவர்கள் தாம் ஏற்கனவே கற்றுக்கொண்டவைகளில் இருந்து புதிய விஷயங்களைத் தெரிந்து கொள்கின்றனர் என்பது தான் இக்கொள்கையின் சாராம்சம். கொடுக்கப்பட்ட தகவலை அலசி, ஆராய்ந்து, கோட்பாடுகளை உருவாக்கி அறிவுசார் முடிவுகளை மாணவர்கள் எடுக்கின்றனர். தகவலின் அர்த்தம் புரிந்து அதை வகைப்படுத்துகின்றனர். இது கொடுக்கப்பட்ட தகவலுக்கு அடுத்த நிலையைச் சிந்திக்க வாய்ப்பளிக்கிறது. இதற்கு மாணவர்களின் உத்வேகமான பங்கேற்பு மிக அவசியமாகிறது (Costa, 1985:62-65).

ஆகவே, பயிற்று முறையைப் பொறுத்தவரையில் மாணவர்கள் அவர்களாகவே கொள்கைகளைக் கண்டுபிடிக்கும்படி ஆசிரியர் ஊக்கப்படுத்த வேண்டும். இருவரும் ஆக்கப்பூர்வ உரையாடல்களில் அதிகம் ஈடுபடவேண்டும். இங்கு ஆசிரியரின் பணி என்பது பாடங்களை மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் படி மாற்றம் செய்வதுதான். இதன் மூலம் மாணவர்கள் தாங்கள் ஏற்கனவே கற்றுக்கொண்டவைகளிலிருந்து புதியவற்றை அறிவார்கள்; உயர்நிலைச் சிந்தனையையும் பெறுவர் (C.Bereiter & M.Scardamalia, 1987:9-30).

உதாரணத்திற்குப் பயம் மற்றும் வீரம் என்ற இரு கூறுகளும் மாணவர்கள் மிகவும் நன்கு அறிந்த விசயமாகும்.



பால்கொண்டு மடுப்பவும் உண்ணான் ஆகலின்,
செறாஅது ஓச்சிய சிறுகோல் அஞ்சி,
உயவொடு வருந்தும் மன்னே! இனியே
புகர்நிறங் கொண்ட களிறட்டு ஆனான்,
முன்நாள் வீழ்ந்த உரவோர் மகனே,
உன்னிலன் என்னும், புண்ஒன்று அம்பு_
மான்உளை அன்ன குடுமித்
தோல்மிசைக் கிடந்த புல்அண லோனே.

அன்று சிறு குச்சிக்குப் பயந்து பால் உண்ட அவனா, இன்று இவ்வளவு கூரிய அம்பு தன் மார்பின் மீது தைத்தும் அஞ்சாமல் இருக்கிறான்? என்று ஒரு தாய் வியப்பதாக இப்பாடல் அமைகிறது. இவனது வீரத்திற்குக் காரணம், அவன் பிறந்த மறக்குடி மரபுதான் என்று தெளிவடைகிறாள் இந்தத் தாய். இப்பாடலில் தாயின் அன்பும், தமிழரின் வீரமும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.

1.3.2 கலந்துரையாடலும் சுய மதிப்பீடும்

உயர்நிலைச் சிந்தனையை மாணவர்களுக்குப் புகட்ட கலந்துரையாடல் முறை மிகச் சிறந்ததாக திகழ்கிறது. மாணவர்கள் குழுவாகச் செயல்பட்டு கலந்துரையாடும் போது மாணவர்கள் வேகமாகவும் செம்மையாகவும் கற்றுக்கொள்வதோடு, அதிகம் தக்கவைத்துக்கொள்ளும் திறனையும் பெறுகின்றனர். இக்கலந்துரையாடலின் இறுதிக் கட்டமாக திகழும் முடிவெடுக்கும் தருணம் வரும்போது, தாங்கள் ஒரு கருத்தின் மீது கொண்டுள்ள சுய மதிப்பீட்டையும் அவர்கள் வெளிக்கொணர்கின்றனர். இதனால் ஆய்வு, ஆராய்ச்சி என பல நடவடிக்கைகள் தொடர்வதால் உயர்நிலைச் சிந்தனையும் பெருகுகிறது (N.S.Rajendran, 2000:7).

உதாரணத்திற்கு ஆசிரியர் மாணவர்களுக்குக் கதையொன்றைச் சொல்லி கலந்துரையாடச் செய்யலாம். பிறகு அக்கதையோடு பொருத்தமான புறநானுற்றுப் பாடலை அடையாளங் கண்டு மாணவர்கள் சுய மதிப்பீடும் செய்து கொள்ளலாம்.

பல்சான்றீரே! பல்சான்றீரே! *கயல்முள் அன்ன நரமுதிர் திரைகவுள்* *பயனில் மூப்பின் பல்சான்றீரே* *கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறல் ஒருவன்* *பிணிக்கும் காலை இரங்குவீர் மாதோ* *நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்* *அல்லது செய்தல் ஓம்புமின்; அதுதான்* *எல்லாரும் உவப்பது அன்றியும்* *நல்லாற்றுப் படூஉம் நெறியுமார் அதுவே* *புறநானூறு-195*	பயமனுள்ள செயல் எதுவும் செய்யாமல் மூப்பெய்தியுள்ள சான்றோர்களே! கையில் கூர்மையான மழுவாயுதத்தைக் கொண்ட எமன் உங்களைப் பாசக் கயிற்றால் பிணித்து இழுத்துச் செல்லும் போதுதான் வருந்துவீர்கள். உங்களால் நல்லது செய்ய முடியாமல் போனாலும் பரவாயில்லை; கெடுதல் செய்யாமல் இருக்கும் குணத்தையாவது பாதுகாத்திடுவீர்கள். அந்தச் செயல்தான் எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தருவது. அதுவே எல்லோரையும் நல்வழிப்படுத்தும்.

ஒரு மரத்தில் அணில் ஒன்று தாவி விளையாடிக் கொண்டிருக்கும் போது, தவறி கீழே நின்ற ஓநாயின் மீது விழுந்தது. ஓநாய் அவ்வணிலை சாப்பிட முயற்சிக்கும் போது, அணில் தன்னை விடுவிக்குமாறு ஓநாயிடம் மன்றாடியது. அதற்கு ஓநாய் தான் கேட்கும் கேள்விக்கு, அணில் சரியாகப் பதில் அளித்தால் அதனை விட்டுவிடுவதாக வாக்களித்தது. ஓநாயின் கேள்வி என்னவென்றால், அணிலால் மட்டும் எப்படி எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்க முடிகிறது என்பதுதான்.

1.3.3 திறந்த முடிவு கேள்விகளும் சிக்கல் தீர்வு முறையும்

திறந்த முடிவு கேள்விகள் மாணவர்கள் ஒரு சிக்கலைப் பல கோணங்களில் ஆராய வழிவகுக்கும். அதேவேளை உயர்நிலையில் அமைந்த கேள்விகள், மாணவர்களை உயர்நிலைச் சிந்தனைக்கு இட்டுச் செல்லும் ஆற்றல் வாய்ந்தது (Redfield & Rousseau, 1981:237-247). சிக்கல் தீர்வு முறையில் அமைந்த இலக்கியப் பகுதிகள் மாணவர்களுக்கு ஒரு சவாலை ஏற்படுத்தி மாணவர்களைப் பல கோணங்களில் சிந்திக்க வைக்கும். இதன் வழி மாணவர்கள் அறிவுப்பூர்வமாகவும், ஆக்கப்பூர்வமாகவும் சிந்தித்து சிறந்த கருத்துக்களை அடையாளங் காண்பர் (Rajendran, 1998:8). அவ்வகையில் ஆசிரியர் உலகில் தோன்றி மறையும் பொருள்கள் என்ன என்று கேள்வி கேட்டு மாணவர்களின் உயர்நிலைச் சிந்தனையைத் தட்டி எழுப்பலாம்.

	*தேய்தல் உண்மையும் பெருகல் உண்மையும்* *மாய்தல் உன்மையும் பிறத்தல் உன்மையும்* *அறியாதோரையும் அறியக் காட்டி* *திங்கட் புத்தேள் திரிதரும் உலகம்* *புறநானூறு- 27-11-14*

வளர்வது தேயும்! தேய்ந்தது வளரும்! பிறந்தது இறக்கும்! இறந்தது பிறக்கும். இவ்வுண்மையை அறியாதோருக்கு, இந்த நிலையாமையை, மாற்றத்தை உணர்த்தவே நிலவு வானில் வளர்ந்து தேய்கிறது என்ற சிந்தனையை மேற்கானும் பாடல் உணர்த்துகிறது.

1.4 முடிவுரை

மாணவர்களுக்கு இலக்கியத்தின் வாயிலாக உயர்நிலைச் சிந்தனையைப் போதிப்பது என்பது ஆசிரியர், கற்றல் கற்பித்தலில் பயன்படுத்தப்படும் அனுகுமுறைகள் மற்றும் பனுவல்கள் ஆகிய மூன்று முக்கிய கூறுகளை உள்ளடக்கியது. ஆகவே ஆசிரியராகப்பட்டவர் இலக்கியத்திலும், உயர்நிலைச் சிந்தனைத் துறையிலும் நல்லறிவு மிக்கவராகத் திகழ்வது அவசியம். ஆசிரியரால் தேர்ந்தெடுக்கப்படும் கற்றல் கற்பித்தலின் அனுகுமுறைகள் மாணவர்களைச் சுண்டி இழுக்கும் அமைதல் வேண்டும். அதேவேளை தேர்ந்தெடுக்கப்படும் பனுவல் பகுதிகளும் மாணவர்களுக்குச் சிந்திக்கும் ஆற்றலை மேம்படுத்தும் வண்ணம் அமைதல் நலம் (Rajendran, 2000:11) இப்படி அமைந்தால் மாணவர்களிடம் இலகுவாக உயர்நிலைச் சிந்தனையைப் புகட்டலாம்.

Biblografi

1. Ani Hj Omar. 2005. Citra *Manusia Dan Kemanusian Dalam Pengajaran Komsas,* Serdang: Universiti Putra Malaysia.
2. Beck,I. 1989. *Reading And Reasoning: The Reading Teacher* 42(9). EJ388 672.
3. Bereiter.C, &Scardamalia.M 1987. *An Attainable Version Of High Literacy: Approaches To Teaching High-Order skills In Reading And Writing*, Curriculum Inquiry, 17:1
4. Block.C.C 1993. *Teaching The Language Arts: Expanding Thinking Through Student-Centered Instruction*, Boston: Allyn and Bacon.
5. Cohen.D.K.1991. *A Revolution In One Classroom: The Case Of Mrs.Oublier, Educational Evaluation And Policy Analysis*. vol.12. No.3.
6. Costa, Arts. 1985. *Towards a model Of Human Intellectual Functioning: In A.L Costa (Ed), Developing Minds: A Resource Book For Teaching Thinking*, Alexendria: Association For Supervision And Curiculum Development.
7. Hudson,W.H. 1913. *An Introduction To The Study Of Literature*, London: George G.Harrap & Company.
8. Langer, Judith.A. 1995. *Literacy And Learning To Think: Journal Of Curriculam And Supervision. Spring*. Vol.10. No.3.
9. Rajendran,N.S. 2000. *Kesusasteraan Sebagai Wahana Mengajar Kemahiran Berfikir Aras Tinggi: Seminar Kebangsaan Penyelidikan Dan Pembangunan Dalam Pendidikan* , Kuala Lumpur:Kementerian Pendidikan Malaysia.
10. Rajendran,N.S. 1998. *Teaching High-Order Thinking Skills In Language Classroom: The Need For Transformation Of Teaching Practice*, Michigan : East Lansing Michigan State University.
11. Redfield,D.L. & Rousseau.E.W. 1981. *A Meta-Analysis Of Experimental Research On Teacher Questioning Behavior* : Review Of Educational Research. 51
12. Resnick,L.B. 1987. *Education And Learning To Think*, Washington: National Academy Press.
13. Sternberg,R & Spear-Swerling.L. 1996. *Teaching For Thinking*, Washington: American Psychological Association.
14. Subramaniya Pillai,K. 2009. *Ilakkiya Varalaru,* Chennai: Poombugar Patippakam.

கையடக்கக் கணினி வழியாக நுட்பக் கல்வி கற்பித்தல்

செல்வ.முரளி CEO, விசுவல்மீடியா டெக்னாலஜிஸ்
S.Maniam, Singapore New Wave Consulting Pte Ltd

நுட்பக் கல்வி கற்பிக்கும் முறை

தற்போது பள்ளி மாணவர்களுக்கு டிஜிட்டல் முறையில் பிரஜக்டர்களின் துணைக்கொண்டு செய்யப்பட்டு மாணவர்களுக்கு வகுப்புகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றாலும் அது வகுப்பைறையில் மட்டுமே உண்டு.

மாணவர்கள் விருப்பப்பட்ட நேரத்தில் படிக்க தற்போதைய முறைகள் உதவுவதில்லை எனவே மாணவர்களுக்குக் கையில் எடுத்துச்செல்லவேண்டிய கையடக்க கணினிகள் அவசியமாகிறது. தற்போதைய பாடப்புத்தகங்கள் உரை/காணொளி வழியாக இருந்தாலும் தனிப்பட்ட முறையில் மாணவர்களின் திறன் மேம்படுத்துதல் அவசியமாகிறது. ஐபேடு மற்றும் ஆன்டிராய்டு அடிப்படையிலான டேப்ளேட் பிசிக்கள் எனப்படும் கையடக்க கணினிகள் பரவலான பயன்பாட்டில் உள்ளன. எனவே இவைகள் வழியாக மேம்படுத்தப்பட்ட நுட்பக்கல்வியை வழங்கவேண்டும்.

ஒவ்வொரு பாடத்திட்டத்திற்கும் காணொளிகளையும் அதற்கேற்றவாறு மாணவ/மாணவியர்களின் கல்வித்திறனை அறியும் மென்பொருட்களை உருவாக்கவேண்டும். தற்போது பள்ளி மாணவர்களுக்குக் கற்பிக்கும் அதே முறைகளில் நாமும் சில மாற்றங்களை ஏற்படுத்தி நவீன முறையில் கற்பிக்கலாம்.

காமிக்ஸ் புத்தகங்கள்

மாயாவி, கழுகுவீரன் போன்ற முக்கிய அறிஞர்களின் வரலாறுகளை காமிக்ஸ் வடிவில் கொடுத்துவருவது போன்று டிஜிட்டல் காமிக்ஸ் புத்தகங்களை உருவாக்கி மாணவர்களுக்குத் தரலாம்.

கற்பனைப் பாடங்கள்

கற்பனைப் பாடங்கள் என்பது மாணவர்களின் கற்பனைத் திறனை மேம்படுத்தும் ஒரு சாதனமாக பயன்படுத்தலாம். உதாரணத்திற்கு மரம் தன் வாழ்க்கை மற்றும் அதன் பயனைக் கூறுவது போன்று, ஆறு தன் வாழ்க்கை மற்றும் அதன் பயனைக் கூறுவது போன்று முழுமையாக கற்பனையாகவும் ஆனாலும் காணொளி மற்றும் குரல் வடிவில் மாணவர்கள் கற்கும்போது மாணவர்களுக்கு மிகச்சிறப்பாக புரியும்.

டிஜிட்டல் பாடப்புத்தகங்கள்

தற்போதைய நம்முடைய பாடத்திட்டங்கள் முழுமையாக வெறும் எழுத்து வடிவிலான பாடத்திட்டங்களாகவே உள்ளன. இந்தப்பாடத்திட்டன் வழியேயே எதை

படிக்கின்றார்களோ அதை அறியும் வகையில் கற்கும்போது மாணவர்களின் அறிவுத்திறன் மேலும் மேம்படும்.

உதாரணம்

பொங்கல் பற்றிய பாடம் அதன் கொண்டாட்டாங்கள் பற்றி எழுத்து வடிவில் இருக்கும். அதையே பொங்கல் பற்றிய முழுமையான மூன்று நாட்கள் பண்டிகையின் போது என்னென்ன நடக்கும் என்பதினைக் காணொளி வழியே காட்டும்போது மாணவர்களுக்குப் பொங்கலின் முழுமையான சாரம்சம் தெரிந்துவிடும். இதுபோன்ற முறைகள் மூலம் நாம் நிறைய விஷயங்களை மாணவர்கள் முழுமையாக கற்கும்படி செய்யலாம்.

தமிழ் வழி கற்பித்தல்

இன்றைய 21 ஆம் நூற்றாண்டு தலைமுறைக்கு ஆங்கில அறிவு என்பது வெகு எளிதாக கிட்டிவிடுகிறது. ஆனால் தமிழ் அறிவு என்பது சற்று கடினமாக உள்ளது. இதற்கான காரணம் எல்லாரும் ஆங்கிலத்தினை நோக்கிவிடுவதுதான். அப்படியெனில் தமிழைக் கற்பிக்க என்னதான் வழி? ஆம் தமிழைக் கற்பிக்க இதே தகவல் தொழில்நுட்பத்தினைக்கொண்டே தமிழைப் போதிக்கலாம்

மாணவர்கள் பயன்படுத்தும் ஐபாடு மற்றும் டேப்ளேட் கணினிகளில் தமிழ் மொழி சார்ந்த காமிக்ஸ் புத்தகம், பாரம்பரிய விளையாட்டுக்கள், தமிழர் பண்பாடுகள், தமிழ் இலக்கணங்களை எளிமையாக புரியவைக்கும் காணொளி, தமிழ் - மற்ற மொழிக்களுக்காக அகராதிகள் என மென்பொருட்கள் மாணவ/மாணவியர்களின் கையடக்க கணினிகளில் நிறுவி அதன் வழியாக அவர்களின் கற்கும் திறனை மேம்படுத்தவேண்டும்.

டிஜிட்டல் முறையில் எழுதுதல்

இன்றைய சூழ்நிலையில் கணினியில் தமிழில் எழுதுவது என்பது எட்டாக்கனியாக உள்ளது. ஆனால் எங்கள் நிறுவனம் உருவாக்கிவரும் சிபேடு என்ற கையடக்க கணினி வழியாக எல்லாமே சாத்தியம். தமிழில் எழுத்துவதற்கு அண்ணா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் முனைவர். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பொன்மடல் என்ற ஐசிஆர் - இன்டெலிஜெண்ட் கேரக்டர் ரெகனைசசன் என்ற மென்பொருருளை உருவாக்கியுள்ளார்

இதன் வழியாக சாதாரண புத்தகங்களில் செய்யப்பட்டும், அடிக்கோடிடுதல், முக்கியமானவற்றைச் சேமித்தல் மற்றும் மாணவர்கள் தங்கள் பாடங்களில் வீட்டுப்பாடங்களைத் திரையில் எழுதலாம், சேமிக்கலாம். இந்த மென்பொருள் பள்ளி மாணவர்களுக்கு மிகவும் பயன்படும் மென்பொருள்.

படம்


ESLATE
அம்மா
Ok
Cancel
Line
Circle
Oval
Rectangle
Text
அம்மா
123
DEL





இதன் மூலம் மாணவர்களின் கையெழுத்தினை ஒப்பிட்டுப் பார்க்கவும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.வரும்காலங்களில் கையடக்க கணினிகள் வழியாகவே தேர்வுகளையும் எழுதலாம்.

மின்னணு தமிழ் அகராதி

மின்னணு தமிழ் அகராதி என்பது தற்போதைய காலத்திற்கு மிக முக்கியமான தேவை. தற்போது எங்கள் நிறுவனம் தமிழ் – தமிழ் | ஆங்கிலம் - தமிழ் | தமிழ் - ஆங்கிலம் ஆகியவற்றுக்கான கையடக்க மின்னணு தமிழ் அகராதியை உருவாக்கிவருகிறது. இதில்

இந்தியா, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் வார்த்தைகள் அடங்கிய மென்பொருள். இதில் 47000க்கும் மேலான சொற்கள் உள்ளன.

ல,ந,ர தேடும் வசதி

தமிழில் இதுவரை யாரும் தந்திராத ல,ந,ர என்ற தேடும் வசதி வார்த்தைகளில் எங்கே ல,ந, ர போன்றவை வரவேண்டும் என்ற வழிகாட்டும்.

நம்மில் பலருக்கு எங்கே சின்ன ர வரவேண்டும், எங்கே பெரிய ற வரவேண்டும் என்ற சந்தேகம் எப்போதும் உண்டு அதற்கு வழிகாட்டும் வகையில் இந்த மென்பொருள் உதவும் பழமொழி + தமிழில் உள்ள பழமொழிகளை அதற்கான விளக்கங்களோடு காட்டும் வசதி மரபுத்தொடர் மற்றும் உவமைகளுடன் உள்ள தொடர்கள். மேற்கண்ட இந்த தமிழ் மென்பொருள் உலகெங்கும் உள்ள தமிழ் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் மிக அதிகமாகப் பயன்படும். மாணவர்களின் கற்கும் திறனை மேம்படுத்துவதே எங்களின் முக்கியநோக்கமாக இருப்பதால் சாதாரண கற்கும் முறையில் உள்ள குறைகளைத் தவிர்த்து பல்வேறு ஆராய்ச்சிகளுடன் இந்த மென்பொருள்கள் மாணவர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளன

மாணவர்களின் பேச்சுத்திறன்

மாணவர்களின் கல்விகற்கும் திறனுடன் அவர்களின் பேச்சுத்திறனை மேம்படுத்துவதும் மிக முக்கியமான தேவை. எனவே அவர்கள் தமிழை எப்படி உச்சரிக்கவேண்டும் என்பது பற்றிய மென்பொருளையும் எங்கள் நிறுவனம் உருவாக்கிவருகிறது. இதன் மூலம் தமிழைச் சரியாக உச்சரிப்பதோடு மாணவர்கள் கேட்டு அதையே திரும்பவும் பேசி அதை மாணவர்கள் கேட்டுக் கேட்டு திருத்திக்கொள்ளும் அடிப்படையில் இம்மென்பொருள்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

எனவே, நவீன நுட்பத்தின் வழிகாட்டுதல்களுடன் 21ஆம் நூற்றாண்டில் இளையர்களுக்குத் தமிழைக் கொண்டுசெல்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

இடைநிலைப்பள்ளி தமிழ்ப் பாடநூல்களில் கட்டுரை வடிவங்கள்

தனலட்சுமி த/பெ பெருமாள் (புத்ரா பல்கலைக்கழகம் மலேசியா)

முன்னுரை

மனிதர்களை மனிதனாக்கும் கல்வியை மாணவர்கள் பெற பாடநூலானது பெரிதும் துணைபுரிகிறது. மலேசிய மாணவர்கள் தற்போது பயன்படுத்தும் படிவம் 4, படிவம் 5 பாடநூலை எழுதியவர்கள் எம். முத்துசாமி, வ. முனியன், க.குழந்தைவேலு ஆகியோர் ஆவர். 4-ஆம் படிவ பாடநூல் 2002-இலும். 5-ஆம் படிவ பாடநூல் 2003-இலும் வெளியிடப்பட்டன.

மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் கற்றல்-கற்பித்தல் நடவடிக்கைகளுக்குத் துணை செய்யும் வகையில் இவ்விரண்டு பாட நூல்களும் கல்வியமைச்சால் தயாரித்து வழங்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாமல் இவ்விரண்டு பாடநூல்களில் இடம்பெற்றுள்ள எல்லாப் பாடப் பகுதிகளும் மாணவர்களுக்குப் பொருத்தமான பல்வகை கருப்பொருள்களில் அமைந்துள்ளன. மேலும், அவை உரையாடல், கவிதை, கருத்து விளக்க கட்டுரை, உறவு கடிதம், அதிகாரப் பூர்வ கடிதம், விவாதக் கட்டுரை, கதை, உரை, நேர்காணல் போன்ற வெவ்வேறு வடிவங்களில் எழுதப்பட்டுள்ளன.

ஆய்வுச் சிக்கல்

எஸ்.பி.எம். தமிழ்மொழித் தேர்வுத் தாள் ஒன்றில் (6354/1) (அ) பிரிவு வழிகாட்டிக் கட்டுரையாகும். குறிவரைவுகளில் அடங்கியுள்ள தகவல்களைத் தொகுத்தல், கடிதம், அறிக்கை உரையாடல் போன்ற அமைப்புக் கட்டுரைகளை எழுதுதுதல், ஒரு வடிவத்தில் வழங்கப்பட்ட கட்டுரையை மற்றொரு வடிவில் மாற்றி எழுதுதல் எனும் திறன்கள் மதிப்பிடப்படுகின்றன. தேர்வுத்தாள் ஒன்றில் மதிப்பிடப்படுகின்ற வடிவங்களை அட்டவணை 1 காட்டுகிறது.

அட்டவணை 1: எஸ்.பி.எம். தேர்வுத் தாள் 1 (அ) பிரிவு கேள்விகள்

குறிவரைவு	அமைப்புக் கட்டுரைகள்	வடிவமாற்றுக் கட்டுரைகள்
அட்டவணை பட்டைக் குறிவரைவு வட்டக் குறிவரைவு கோட்டுக் குறிவரைவு மனவோட்டவரை புள்ளிவிவரப்பட்டியல் வரைப்படம்	அறிக்கை செயலறிக்கை, ஆண்டறிக்கை, முறையீட்டு அறிக்கை) கடிதம் (அலுவல், உறவு, நட்பு) நேர்காணல், உரையாடல்	கடிதம், கவிதை, பேட்டி உரைநடை உரையாடல் → உரைநடை உரைநடை → கடிதம், பேட்டி விமர்சனம் → கடிதம், பேட்டி → விமர்சனம், பாடல் → உரையாடல்

குறிவரைவில் 7 வகை வடிவங்களும், அமைப்புக் கட்டுரைகளில் 4 வகை வடிவங்களும், வடிவமாற்றுக் கட்டுரைகளில் 6 வகை வடிவங்களை 5 வடிவங்களுக்கு மாற்றும் திறன்கள் மதிப்பிடப்படுகின்றன. எனவே, இக்கேள்விகளுக்குச் சரியான முறையில் விடையளிக்க, மாணவர்கள் பல்வேறுவகை கட்டுரை வடிவங்களை இனங்கண்டு, படித்து, அவற்றை வேறுபடுத்தும் கூறுகளை அறிந்து கொள்வதும் அவசியமாகும். ஆகவே, மாணவர்களுக்கு வழிகாட்டியாக அமைந்திருக்கும் பாடநூல்களில் இடம்பெற்றுள்ள பாடப் பகுதிகளில் தேர்வுத் தாளில் எதிர்பார்க்கப்படுகின்ற எல்லா வடிவங்களையும் ஆராய்ந்து விவரிப்பதே இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகும்.

ஆய்வின் முக்கியத்துவம்

ஆசிரியர்கள் பாடநூலில் இடம்பெற்றுள்ள பல்வகைக் கட்டுரை வடிவங்களை அறிந்துகொண்டால், மாணவர்களைத் தேர்வுக்குத் தயார்ப்படுத்த பிற ஆவணங்களைத் தேடி நேரத்தை விரையமாக்காமல் பாடநூலை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். அதோடு பாடநூலை அடிப்படையாகக் கொண்டு வகுப்பறை மதிப்பீடுகளைத் தாயார் செய்யவும் இந்த ஆய்வு துணை செய்யும். மேலும், வழிகாட்டிக் கட்டுரைகளை வேறுபடுத்திக் காட்டும் கூறுகளை ஆசிரியர் மாணவர்களுக்கு அடையாளம் கண்டு கூறவும் இவ்வாய்வு துணைசெய்யும்.

ஆய்வுமுறை

இந்த ஆய்வின் முதற்கட்டமாக, வழிகாட்டிக் கட்டுரைக்கென வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து வடிவங்களும் பட்டியலிட்டுக் காட்டப்படும். அடுத்தக் கட்டமாக, படிவம் நான்கு, ஐந்து பாடநூலில்களில் இடம்பெற்றுள்ள வடிவங்கள் பட்டியலிட்டுக் காட்டப்படும். இறுதியாகப் பட்டியலிடப்பட்டவற்றை ஒப்பிட்டு, குறிவரைவு அமைப்புக் கட்டுரை, வடிவமாற்றுக் கட்டுரை ஆகியவற்றை வேறுபடுத்தும் கூறுகளும் விளக்கப்படும்.

ஆய்வுக் கருவி

இந்த ஆய்வுக்கு முக்கியத் தரவாகத் தற்போது நான்காம், ஐந்தாம் படிவ மாணவர்கள் பயன்படுத்தும் தமிழ்ப் பாடநூல் பயன்பட்டது. இப்பாடநூலில் இடம்பெற்றுள்ள எல்லாவகைக் கட்டுரைகளும் பாடவாரியாகத் தனித்தனியே பட்டியலிடப்பட்டு பின்னர் அவை தேவைக்கேற்ப விளக்கப்பட்டுள்ளன.

ஆய்வு முடிவுகள்

நான்காம் படிவப் பாடநூலில் 24 தலைப்புகளிலும் ஐந்தாம் படிவப் பாடநூலில் 22 பாடத்தலைப்புகளிலும் பாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடத் தலைப்புகளிலும் ஒன்றுக்கும் மேற்பட்ட பாடப்பகுதிகள் இடம்பெற்றுள்ளதைக் காண்கிறோம். சில பாடப் பகுதிகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட வடிவங்களும் இடம்பெற்றுள்ளதையும் காணலாம்.

படிவம் நான்கில் மொத்தம் 18 வகை வடிவ அமைப்புகளும் படிவம் ஐந்தில் 17 வகை வடிவங்களும் அமையப்பெற்றிருப்பதை நாம் காணலாம். படிவம் நான்கில் இடம்பெற்றுள்ள செய்தி, நாடகம் ஆகிய இரண்டு வடிவங்கள் படிவம் ஐந்தில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோல் படிவம் ஐந்தில் இடம்பெரற்றுள்ள கோட்டு குறிவரைவு நான்காம் படிவப் பாடநூலில் இடம்பெறவில்லை. பாடநூலில் காணப்படும் குறிவரைவுகளின் மொத்த எண்ணிக்கை அட்டவணை 2-இல் விளக்கப்பட்டுள்ளது

அட்டவணை 2 : பாடநூலில் காணப்படும் குறிவரைவு வடிவங்கள்

குறிவரைவு	படிவம் 4	படிவம் 5	மொத்தம்
வட்டக்குறிவரைவு	2	2	4
பட்டைக்குறிவரைவு	3	4	7
அட்டவணை	1	7	8
கோட்டுக்குறிவரைவு	-	1	1
மனவோட்டவரை	2	3	5
வரைப்படம்	6	6	12

பல்வகைக் குறிவரைவுகளை ஆராய்ந்து கருத்துகளைத் தொகுத்து எழுதும் திறனை வளர்க்க, நான்காம் ஐந்தாம் படிவப் பாடநூல்கள் அதிகமாகவே பயிற்சிகளைக் கொண்டுள்ளன என்பதை இந்த அட்டவணையில் உள்ள விவரங்கள் தெளிவுபடுத்துகின்றன. எனவே, மாணவர்கள் இவ்வகை

கேள்விகளுக்குத் தங்களைத் தயார்ப்படுத்திக்கொள்ள, பாடநூல்களில் போதுமான பயிற்சிகள் இருக்கின்றன என்பதை இந்த ஆய்வு உறுதிப்படுத்துகிறது.

குறிவரைவை வேறுபடுத்தும் கூறுகள் என்று பார்த்தோமானால் அவற்றின் புறத்தோற்றமே அவற்றை வேறுபடுத்திக் காட்டுகின்றன. இருப்பினும் குறிவரைவில் அடங்கியுள்ள கருத்துகளைத் தொகுக்கும் போது மாணவர்கள் குறிவரைவை நன்கு புரிந்து கொண்டு அவற்றில் அடங்கியுள்ள தெரிநிலை, புதைநிலை கருத்துகள் எழுதுவதோடு தவல்களுக்கேற்ற பரிந்துரைகளையும் விளைவுகளையும் சிந்தித்து எழுத வேண்டும் என்பது கருத்தில் கொள்வது அவசியம் ஆகும்.

தொடர்ந்து, இரு பாடநூல்களையும் ஆராய்ந்ததில், அவற்றில் இடம்பெற்றுள்ள வடிவமாற்றுக் கட்டுரைகளின் விவரங்களைப் அட்டவணை 3-இல் காணலாம்.

அட்டவணை 3: பாடப்புத்தகத்தில் உள்ள அமைப்புக் கட்டுரை வகைகள்

அமைப்புக் கட்டுரை	படிவம் 4	படிவம் 5	மொத்தம்
நேர்க்காணல்/பேட்டி	1	2	3
அறிக்கை	3	2	5
உரையாடல்	12	5	17
கடிதம்	5	3	2

பொதுவாகப் பார்த்தோமானால், இரு படிவப் பாடநூல்களிலும் பிற அமைப்புகளைக் காட்டிலும் உரையாடல் வடிவங்களே அதிகமாகக் காணப்படுகின்றன. இதைத் தவிர்த்து, எஸ்.பி.எம். தேர்வுத் தாள் 1-இல் மதிப்பிடப்படும் எல்லா வகை அமைப்புக் கட்டுரைகளும் படநூலில் இடம்பெற்றிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

அமைப்புக் கட்டுரை கேள்விகளுக்கு விடையளிக்கும் மாணவர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ள ஐந்து வகை வடிவங்களின் அமைப்பையும் அறிந்திருப்பது அவசியமான ஒன்றாகும். இதைத்தவிர்த்து, அமைப்புக் கட்டுரைகளை வேறுபடுத்தும் சில பொதுவான கூறுகளையும் மாணவர்கள் அடையாளம் கண்டு வைத்திருப்பது மாணவர்களுக்குப் பெரிதும் துணை செய்யும். அமைப்புக் கட்டுரைகளை வேறுபடுத்தும் சிலகூறுகளைப் அட்டவணை 4-இல் காணலாம்.

அட்டவணை 4 : நேர்காணல், உரையாடல் ஆகியவற்றின் அமைப்பு/கூறுகள்

நேர்காணல்	உரையாடல்
சூழல், அறிமுகம் (formal), கேள்வி பதில் அதிகாரப்பூர்வ தோரணை முடிவு	சூழல், முகமன், கலந்துரையாடல், மொழிக்கூறுகள் (ஆம்,சரி), உறவுச் சொற்கள் பயன்பாடு, முடிவு

நேர்காணலும் உரையாடலும் புறவடிவில் ஒன்றுபோல் தோன்றினாலும் அகவடிவில் அட்டவணை 4-இல் உள்ள சில கூறுகளால் வேறுபடுகின்றன. நேர்காணலில் அதிகாரபூர்வமான அறிமுகம் முக்கியமாகக் கருதப்படுகிறது. ஆனால் உரையாடலிலோ முகமனாக வணக்கம் கூறியோ நலம்விசாரித்தோ எழுதுவது இயல்பு. இவ்வாறு வேறுபடுத்தும் சில முக்கிய கூறுகளை மாணவர்கள் அறிந்திருக்க வேண்டும்.

அலுவல் கடிதத்தில் புகார்கடிதம், மனுசெய்தல், முறையீட்டுக்கடிதம் போன்றவற்றையும் அறிக்கை வடிவத்தில் ஆண்டறிக்கை, செயலறிக்கை முறையீட்டு அறிக்கை போன்றவற்றையும் வேறுபடுத்திக் காட்டுவன அவற்றின் அமைப்பும், பயன்படுத்தும் சொற்களுமாகும். அறிக்கை, உறவு கடிதம் அலுவல் கடிதம் ஆகிய அமைப்புக் கட்டுரைகள் எழுதும் போது அவற்றில் பயன்படுத்தும்

துறைசார் மொழிகளையும், சொற்தேர்வுகளையும் மாணவர்கள் இனங்கண்டு பயன்படுத்துதல் அவசியமாகும்.. அட்டவணை 5-இல் அறிக்கை, அலுவல் கடிதம், உறவு கடிதம் ஆகிய அமைப்புக் கட்டுரைகளில் வேறுபடுத்தும் கூறுகளைக் காணலாம்.

அட்டவண 5: அறிக்கை, அலுவல் கடிதம், உறவு கடிதம் ஆகிய அமைப்புக் கட்டுரைகளின் அமைப்பு வேற்றுமை

உறவு கடிதம்	அலுவல் கடிதம்	அறிக்கை
- முகவரி (எழுதுநர்)	- முகவரி (எழுதுநர், பெறுநர்)	- கழகப் பெயர், தலைப்பு
- திகதி	- திகதி, தலைப்பு	- நாள், இடம், நேரம்
- தொடக்கம் (நலம் விசாரித்தல்)	- தொடக்கம் (முகமன்/அறிமுகம்)	- தொடக்கம் (முன்னுரை)
- கருத்துகள் பத்திகளில்	- எண்ணிட்ட பத்திகள்	- துணைத் தலைப்புகள்
- விடைபெறுதல்	- எதிர்பார்ப்பு	- முடிவுற்ற நேரம்
- முடிவு அன்பு மறவா, அன்புடன்)	- முடிவு (இப்படிக்கு, உண்மையுள்ள)	- முடிவு (தயாரித்தவர், எழுதுநர்)
- கையொப்பம்	- கையொப்பம் (முழுப்பெயர்)	- கையொப்பம் (முழுப்பெயர், பதவி, கழகம்)
- உறவுமுறை உணர்வுகளை வெளிப்படுத்துதல்	அதிகாரப்பூர்வ தோரணை	- திகதி
- உறவுச் சொற்கள்		

அட்டவணை 5-இல் உள்ளது போல் அமைப்புக் கட்டுரைகளை வேறுபடுத்தும் கூறுகளை வகைப்படுத்தத் தெரிந்துகொள்ளுதல், மாணவர்கள் இவ்வகைக் கட்டுரைகளை எழுதுவதற்குத் துணையாக அமையும்

எஸ்.பி.எம். தேர்வுத் தாள் 1-இல் மதிப்பிடப்படும் வடிவமாற்றுக் கட்டுரைக்கான வடிவங்களில் விமர்சனத்தைத் தவிர பிற வடிவங்கள் அனைத்தும் பாடநூலில் இடம்பெற்றிருப்பதை நாம் காணலாம். அதோடு, கவிதை, உரையாடல், உரைநடை ஆகிய வடிவங்கள் தேவைக்கு அதிகமாகவே பாடநூலில் கொடுக்கப்பட்டுள்ளதை இந்த ஆய்வு காட்டுகிறது.

மாணவர்கள் கவிதை, உரையாடல் ஆகியவற்றை உரைநடையில் எழுதும் போது பனுவலில் உள்ளடக்கத்தை நன்கு புரிந்துகொள்வது மிக முக்கியமாகும். தொடர்ந்து, கொடுக்கப்பட்ட விவரங்களை எவ்வித மாற்றமுமின்றி மாற்று வடிவத்தில் அதற்கு ஏற்றமொழிநடையில் ஏற்ற வாக்கிய அமைப்போடு எழுத வேண்டும். நேர்கூற்றை அயர்கூற்றாகவும், அயற்கூற்றை நேர்க்கூற்றாகவும் மாற்றும் திறனையும் மாணவர்கள் பெற்றிருப்பது அவசியமாகும். கவிதை மொழிநடையை உரைநடை மொழிநடைக்கு மாற்றும் திறனை மாணவர்கள் வளர்த்துக் கொள்ள அகன்ற வாசிப்பும் தொடர்பயிற்சியும் மிக அவசியமாகும். மாணவர்களின் தொடர் பயிற்சிக்குப் பாடநூல்கள் பெரிதும் துணை செய்கின்றன.

சுருங்கக் கூறின், பாடநூலில் அமையப்பெற்றிருக்கும் குறிவரைவு, அமைப்புக் கட்டுரைகள், வடிவமாற்றத்திற்குப் பரிந்துரைக்கப்பட்ட கட்டுரைகள் யாவும் மாணவர்களுக்குத் தொடர்பயிற்சி செய்ய அடிப்படையாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. எனவே, மாணவர்கள் இப்பாடநூலை நன்முறையில் பயன்படுத்த ஆசிரியர்கள் துணைசெய்ய வேண்டும்.

சிக்கல்களும் பரிந்துரைகளும்

தேர்வுத் தாள் இரண்டில், தேர்வு வாரியத்தால் பரிந்துரைக்கப்பட்ட எல்லா வகை அமைப்புக் கட்டுரைகள் வடிவமாற்றுக் கட்டுரைகள் அட்டவணை, குறிவரைவு, மனவோட்டவரை, புள்ளிவிவரப்பட்டியல், நிரலோட்டவரை போன்ற அமைப்புகளும் பாடப்புத்தகத்தில் இடம் பெற்றிருந்தாலும் சில பாடப்பகுதிகள் சரியான அமைப்பைக் கொண்டு எழுதப்பெறாதது குறிப்பிடதக்கது. எடுத்துக்காட்டு பாடத்தலைப்பு அறிக்கை என்று குறிப்பிட்டிருந்த போதும் இடம்பெற்றுள்ள வடிவம் மாறுபட்ட அமைப்பைப் பெற்றிருக்கும் நிலையையும் நாம் இந்த இரு பாட நூல்களிலும் காணலாம். இவ்வாறான அமைப்பு முறைகள் பாடநூலைப் பயன்படுத்தும் மாணவர்களுக்குச் குழப்பத்தை ஏற்படுத்தும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். அது மட்டுமல்லாமல் பொதுவாகவே இந்த இரு பாட நூல்களிலும் கொடுக்கப்பட்டுள்ள பனுவல்கள் பெரும்பாலும் மிக நீளமாக அமைந்திருப்பதை காண்கிறோம். இவற்றை வாசிப்பதற்கு மாணவர்கள் அதிக நேரம் எடுத்துக்கொள்வதால் அவர்களுடைய கவனம் சிதைவதோடு சலிப்பும் அடைகிறார்கள். ஆகவே, பாடநூலைப் பயன்படுத்தும் ஆசிரியர்கள் இவ்வாறான சிக்கல்களுக்குச் சரியான தீர்வு கண்டு மாணவர்களின் தரத்திற்கு ஏற்றவாறு பாடப்பகுதியை மாற்றியமைத்து கற்றல் கற்பித்தல் நடவடிக்கைக்குப் பொருத்தமாகப் பயன்படுத்தி மாணவர்களின் எழுத்துத் திறனை மேம்படுத்த வேண்டும்.

முடிவுரை

படிவம் நான்கு, ஐந்து பாடநூலில்களில் பொதுவாகவே விமர்சனத்தைத் தவிர பிற எல்லா வடிவங்களும் காணப்பாடுகின்றன. இருப்பினும், சில அமைப்புக் கட்டுரைகள் மாறுபட்ட வடிவங்களைப் பெற்றிருப்பதும் இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் பாடநூலில் உள்ள பாடப்பகுதியைப் பயன்படுத்தும் போது போதிக்கும் கட்டுரையின் அமைப்பின் தேவைக்கேற்பவும் தங்கள் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளுக்கேற்பவும் கட்டுரையின் அடிப்படைக் கூறுகளை ஆராய்ந்து மாணவர்களுக்குத் தெளிவுப்படுத்துதல் அவசியமாகும். இவ்வாறு ஆசிரியர்கள் ஆக்ககரமாகச் சிந்தித்து பாடப்பகுதிகளைத் தேவைக்கேற்ப பயன் படுத்தினால் பாடநூல் ஆசிரியர்களுக்கு ஒரு சிறந்த பயிற்றுத் துணைப் பொருளாகப் பயன்படும்.

மேற்கோள் நூல்கள்

இராமசாமி, மு. (1993). **திருக்குறள்**. சென்னை: மின் அச்சுக்கோப்பு சுமதி லேசர்.

சுப்புரெட்டியார், நா. (1990). **தமிழ்ப் பயிற்றும் முறை.** சிதம்பரம்: தமிழ் நாடு, மணிவாசகம் நூலகம்.

முத்துசாமி, எம். (2003). **தமிழ் மொழி பாட நூல் படிவம் ஐந்து**. பெத்தாலிங் ஜாயா: மல்தி எடுகேஷன் புக் எண்டர்பிரைஸ்

முத்துசாமி, எம். (2002). **தமிழ் மொழி பாட நூல் படிவம் நான்கு**. பெத்தாலிங் ஜாயா. மல்தி எடுகேஷன் புக் எண்டர்பிரைஸ்.

தமிழ் மொழி கற்றல் கற்பித்தல் மதிப்பீட்டில் புதிய அணுகுமுறை

வே. தெக்ஷிணாமூர்த்தி இடைநிலை ஆசிரியர்
அரசுநிதி உதவி பெறும் நடுநிலைப் பள்ளி, புஸ்பவனம் 614809

முன்னுரை:
ஆசிரியர் அதுவும் தமிழாசிரியர் தங்களைப் பற்றிய அறிவே மிக உயர்ந்த சக்தியாகும் என்பதை உணரவேண்டும்.ஓர் ஆசிரியர் தாம் செய்வதைக் கண்டுபிடிக்க முடிந்தால் தம்முடைய பள்ளி வாழ்வையே மாற்றியமைக்க முடியும்.

மதிப்பீடு
கற்றலில் மதிப்பீடு முக்கிய இடத்தைப் பெறுகிறது. ஆசிரியர், மாணவனின் கற்றலை அளவிடவும், மாணவன் தன் செயல் திறனின் அளவை அளந்தறியவும் மதிப்பீடு துணை செய்கிறது. பாடம் கற்பிக்கும் நோக்கங்களை எய்தப் பெற்றோமா என்பதை அறியவும் தேர்வு பயன்படும். மாணவனின் முயற்சியையும் போட்டி உணர்வையும் தூண்டி படிப்பில் ஊக்கத்தையும், கவனத்தையும் தேர்வானது உண்டாகச் செய்யும்.

ஓர் ஆசிரியருக்குரிய பணிகளாகச் சிறந்த முறையில் பாடம் கற்பிப்பதற்கு ஏற்ற முறையில் பாடத் தயாரிப்பு செய்தல், சிறந்த முறையில் கற்பித்தல், கற்பித்தவற்றைச் சிறந்த தேர்வுகளின் மூலம் மதிப்பீடு செய்தல் ஆகியவை சிறப்பாகும்.

மதிப்பீடு என்பது
கற்றல் கற்பித்தலின் ஓர் அங்கம். மாணாக்கரை வகைப்படுத்துதல் மற்றும் தரப்படுத்த மதிப்பீட்டுச் செயல் தொடர் செயலாக அமைகிறது மாணாக்கரது அனைத்து வகை அடைவுகளையும் அளவிடுகிறது கல்வியின் அனைத்து குறிக்கோள்களின் அடைவினையும் அளவிடக்கூடியது கற்றல் கற்பித்தலில் முடிவான அங்கமாக இராமல் மாணவர்களுக்குக் குறை தீர்க்கும் நடவடிக்கைக்கான தொடக்கமாக அமைகிறது முறையான அறிவியல் நோக்கோடு அமைந்துள்ளது.

மதிப்பீட்டின் நோக்கங்கள்
கற்றல் நோக்கங்களின் அடிப்படையில் மாணாக்கர்களின் அடைவுத் திறனை அளவிடவும் கற்றலை வலுப்படுத்துவதற்காகவும் ஆசிரியர் தான் கற்பித்தது வெற்றி பெற்றுள்ளதா என்பதை அறியவும் மாணவனின் முந்தைய அடைவு நிலையின் வளர்ச்சியோடு ஒப்பிட்டு அறியவும் மாணவனைத் தொடர்ந்து கற்கச் செய்யவும் கற்பித்தல் அணுகுமுறையில் உள்ள தவறுகளை அறியவும் குறைதீர் நடவடிக்கைகளை அறியவும் செயல் ஆராய்ச்சியை வலுப்படுத்தவும் கலைத்திட்டத்தை மேம்படுத்தி மாற்றியமைத்திடவும் ஆசிரியர் - மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் தொடர்பான நெருக்கத்தை ஏற்படுத்தவும் சமுதாயம் மற்றும் பெற்றோருடன் தொடர்பு கொள்ள ஏதுவாகவும் வழிமுறைகளைத் தெளிவுபடுத்தி நோக்கங்களின் தன்மையை அறிந்திடவும் படைப்பாற்றலை வெளிக்கொண்டுவரவும் ஏதுவாக நோக்கங்கள் அமைந்திடல் வேண்டும்

மதிப்பீட்டுக் கருவிகள்

தொடக்க நிலையின் மதிப்பீட்டுக் கருவிகளாவன:

பலவுள் தெரிவு
வாய்மொழித் துலங்கல்
செய்முறை வேலை
களப்பணி
காட்சிப் படங்கள் தயாரிப்பு
தனியாள் செயல்முறை
குழுச் செயல்பாடு

மதிப்பீட்டுக்கருவிப் பண்புகள்

1. ஏற்புடைமை (Validity)
2. நம்பகத் தன்மை (Reliability)
3. புறவயத் தன்மை (Objectivity)
4. கையாளுவதில் எளிமை (Practicability)

கல்விக் குறிக்கோள்கள், கற்றல் அனுபவங்கள் மதிப்பீடு வற்றிற்கிடையேயான தொடர்பு



மதிப்பீட்டின் முழு அமைப்பு



மதிப்பீட்டின் வகைகள்

மதிப்பீட்டின் வகைகளாவன :

வளர்ச்சி அறி மதிப்பீடு, தொகுப்பு அடைவு மதிப்பீடு (Formative and Summative Evaluation)
அக மதிப்பீடு, புற மதிப்பீடு
முழுமையான தொடர் மதிப்பீடு

வளர்ச்சி அறி மதிப்பீடு (Formative Evaluation)

ஒரு பாடமோ, பாடத்தின் ஒரு பகுதியோ கற்பிக்கப்பட்டபின், அப்பாடப் பொருளின் மூலம் பெறப்படும் திறன்களை மாணாக்கர்கள் அடைந்துள்ளனரா என்பதைச் சோதித்து அறிதல்

(எ.கா.) அலகுத் தேர்வு நடத்துதல்.

அலகுத்தேர்வு

குறிப்பிட்ட பாடப் பகுதியில் இத்தேர்வு வைக்கப்படும். அது எழுத்து வழி / வாய்வழித் தேர்வுகளாக இருக்கலாம். பாட நூலின் ஒரு பகுதியில் மட்டும் வைக்கப்படும். மாணவர்களுக்கு முன்னறிவிப்புடனோ அல்லது அது இன்றியோ வைக்கலாம். பொதுவாக கற்றல் - கற்பித்தல் நிகழ்வு நடைபெற்ற பின்பு உடனே வைக்கப்படுகிறது. மாணாக்கரிடையே அச்ச உணர்வை உருவாக்காது.மாணவர்களின் பலத்தையும, பலவீனத்தையும் கற்பித்தலில் உள்ள குறைகளையும் அறிய உதவுகிறது. தொடர்ந்து நடத்தப்படுவது. ஆசிரியர் தன் விருப்பம் போல வடிவமைத்துக் கொள்ளலாம். நெகிழ்வுத் தன்மை கொண்டது. கற்பித்த பாடப்பகுதியின் அடைவு விளைவுகளை உடனே அறிய உதவுகிறது.

தொகுப்பு அடைவு மதிப்பீடு (Summative Evalution)

கற்பிக்கப்பட்ட பல திறன்களை உள்ளடக்கிய பாடப் பகுதிகளின் தொகுப்புகளிலிருந்து மாணவர் அடைந்த, அடைய உள்ள திறன்களைச் சோதித்தல். (எ.கா.)இடைப் பருவத் தேர்வுகள், கால், அரை, முழு ஆண்டுத் தேர்வுகள்.

அக மதிப்பீடு

பள்ளியிலேயே ஆசிரியர்கள், தாங்கள் கற்பிக்கும் மாணவர்களின் அடைவுத்திறன் மதிப்பிடலாகும்.

புற மதிப்பீடு

புற மதிப்பீடு பல நிலைகளைக் கொண்டது. பொதுவான வினாத்தாட்களை அனைத்துப் பள்ளிகளுக்கும் கொடுத்து மதிப்பீடு செய்தல். வெவ்வேறு பள்ளி ஆசிரியர்கள் வெவ்வேறு பள்ளிகளிலிருந்து வரும் விடைத்தாட்களை மதிப்பீடு செய்தல். அரசு வினாத்தாட்கள் தயாரித்து அனைத்துப் பள்ளிகளிலும் தேர்வு நடத்தி விடைத்தாட்களை பொது மைய திருத்தும் பணி மேற்கொண்டு மதிப்பிடல்.

முழுமையான, தொடர்ச்சியான திறன்கள் / கற்றல் இலக்குகளின் அடைவு மதிப்பீடு

முழுமையான பாடம் சார்ந்த, பாடம் சாராத மற்றும் செயல்முறைக் கூறுகளை மதிப்பிடல். இவை அனைத்தும் மாணவர் வாழ்க்கையில் முன்னேற உதவுகின்றன. தொடர் மாதாந்திர மற்றும் பருவத் தேர்வுகளில் மட்டுமின்றி கல்வி ஆண்டுக்காலம் முழுவதும் மாணவனது திறன்களை மதிப்பிடல். மதிப்பீடு என்பது அளவீடு மற்றும் மதிப்புகளை உள்ளடக்கியது. மதிப்பெண்ணை மட்டும் அடிப்படையாகக் கொண்டது அல்ல. முழுமையான தொடர் மதிப்பீடு மாணவர்களின் அனைத்து வகையான கற்றல் அடைவுத் திறன் (பாடம் சார்ந்த, பாடம் சாராத முன்னேற்றங்களையும்) தொடக்க நிலை வளர்ச்சி நிலை அடைவு நிலை ஆகிய நிலைகளிலும் தொடர்ந்து மதிப்பிட உதவுகிறது.

முழுமையான தொடர் மதிப்பீட்டின் முக்கிய கூறுகள்

திறன் மிக்க முழுமையான தொடர்மதிப்பீட்டு முறை கீழ்க்கண்ட சிறப்பியல்புகளைப் பெற்றிருக்க வேண்டும். முழுமையான தொடர் மதிப்பீடு வகுப்பாசிரியரால் செய்யப்பட வேண்டும். ஆரம்ப நிலையில் ஒவ்வொரு வகுப்பு வாரியாக, ஒவ்வொரு திறனாக மதிப்பிடுதல் வேண்டும். ஒவ்வொரு திறனையும் குறித்த நேரத்தில் குறித்த வகுப்பில் அடையுமாறு செய்தல் வேண்டும். இம்மதிப்பீட்டு முறை மாணவனை வருடம் முழுவதும் கற்கச் செய்கிறது. இம்மதிப்பீட்டு முறையைச் செயல்படுத்த பலதரப்பட்ட மதிப்பீட்டு வழிமுறைகள் மேற்கொள்ளலாம். இம்முறையில் பாடம் சாரா திறன்கள், திறமைகள், பண்புகள் போன்றவற்றையும் மதிப்பிடலாம் (படித்தல், பேசுதல், ஒழுக்கம் போன்றவைகள்) இம்முறை மாணவர்களின் செயல்திறன் குறைபாடுகள் பற்றி உடனுக்குடன் அறிந்துகொள்ள வழி செய்கிறது. இம்முறை மாணவர்கள் தம் ஆண்டு இறுதித் தேர்வுக்காக மட்டும் படிக்கும் இயல்பினை மாற்றி ஆண்டு முழுதும் படிக்கும் மன நிலையை ஊக்குவிக்கிறது. முழுமையான தொடர் மதிப்பீடு ஆண்டு முழுமைக்கும் பரவி இருப்பதால் மாணவர்களைப் பற்றிய அதிக

அளவு நம்பத்தக்க முழுமையான விவரங்களை அளிக்கிறது. முழுமையான தொடர் மதிப்பீடு தொடக்கப்பள்ளிகளில் தற்போது உள்ள ஆண்டு இறுதித் தேர்விற்கு மாற்று அல்ல. இது தற்போது உள்ள முறைக்குக் கூடுதல் அம்சமாகவே விளங்கும். முழுமையான தொடர் மதிப்பீடு என்பது உடன்வினை வழி மதிப்பீடு (Feed back) மற்றும் தொகுப்பு மதிப்பீடு இரண்டையும் இணைத்துச்செல்லும் முறையாகும். இம்முறையில் மதாந்திர / பருவத் தேர்வுகளின் மூலமாக மாணவர்களின் கற்றல் திறனை மதிப்பிடலாம். மாணவர்களின் தர நிலையை சுயக்கற்றல், குழுக்கற்றல் மூலமாக மதிப்பிடலாம்.

முழுமையான தொடர் மதிப்பீட்டைச் செயல்படுத்துவதில் கவனத்தில் கொள்ள வேண்டியவை

மதிப்பிட உதவும் செயல்பாடு எளிமையாகவும் சிக்கனமாகவும் தெளிவாகவும் இருக்கவேண்டும். புறவயத் தன்மை மிக்கதாக இருக்க வேண்டும். மதிப்பீடு வெளிப்படையாகச் செய்யப்படவேண்டும். கற்றல் - கற்பித்தல் விளைவுகளை மதிப்பிட வேண்டும். அனைத்து மாணவர்களையும் ஈடுபடுத்த வேண்டும். மதிப்பீடுகளைக் கண்கூடாக ஆதாரங்களின் அடிப்படையில் செய்தல் வேண்டும். பிற பள்ளிகள் / ஆசிரியர்கள் / கல்வியியல் வல்லுனர்களின் ஆதரவோடு செம்மையாகச் செய்தல் வேண்டும். முழுமையான தொடர் மதிப்பீடு ஒரு கருவி. உரிமம் அல்ல. எனவே எதேச்சாதிகாரமாக செயல் படுத்தக்கூடாது. ஒரு தலைபட்சமாக / அக வயத் தன்மையுடன் செயல்படுத்தக் கூடாது. மாணவரைப் பற்றிய நம் சொந்த விருப்பு வெறுப்புகளோடு அவரை மதிப்பிடக்கூடாது. மதிப்பீடு அளவீடுகளுடன் நின்றுவிடக்கூடாது. அவைகளின் மேல் தொடர் செயலாக இருக்க வேண்டும். இரகசியமாகவோ, யாருக்கும் தெரியாமலோ மதிப்பீடு செய்தல் கூடாது. மதிப்பீட்டு முடிவுகளை பெற்றோருடன் / மாணவனுடன் விவாதிக்கத் தயங்கக்கூடாது. புறமதிப்பீட்டைப் பாதிக்கும் வகையில் அகமதிப்பீடு மாணவர்களிடையே சந்தேகத்தை எழுப்ப அனுமதிக்கக்கூடாது.

பாடம் சார்ந்த பகுதியில் மதிப்பீட்டுச் செயல் முறைகள் (Evaluation Techniques)

பள்ளிக் கலைத் திட்டத்தில் வகுத்துள்ள பாடம் சார்ந்த மற்றும் பாடம் சாரா பாடக்கலைத்திட்டத்தின் குறிக்கோள்களின் அடைவினை அறியவும், அளவிடவும் வகுப்பறையிலும், பள்ளி வளாகத்திலும், பள்ளிக்கு வெளியேயும் ஆசிரியர்களால் பல்வேறு மதிப்பீட்டு உத்திகளைச் செயல்படுத்தப்படுகின்றது. இப்பகுதியில் பாடம் சார்ந்த பகுதியின் பல்வேறு மதிப்பீட்டுச் செயல் முறைகளைப் பட்டியலிடுவோம்.

அவையாவன:

வகுப்பு நடத்தும்போது செயல்படுத்தும் வாய்மொழி சிறுவினாக்கள் மீட்டறிதலுக்கான சோதனை – வினாக்கள் ஒப்பிடும் முறை (நன்மை, தீமை அடிப்படையில்) வாழ்க்கைத் தொடர்பு முறை (நடைமுறை வாழ்க்கைக் கணக்கு) தொடர்பு படுத்தும் முறை (தெரிந்ததிலிருந்து தெரியாததை வேறுபடுத்துதல்) காரண காரிய மதிப்பீட்டு முறை அடியொற்றி எழுதுதல் மதிப்பீட்டுமுறை நினைவு கூர்தல் (வினாக் கேட்டு விடை எழுதுதல்) வரைபடங்கள் வரைதல், பாகங்களைக் குறித்தல் தேர்ந்தெடுக்கும் முறை (புறவய வினாக்கள் மூலம்) களப்பயணம் மூலம் மதிப்பிடல் (படைப்புத்திறன், கற்பனைத்திறன்) சோதனைகள் மூலம் மதிப்பிடல் (சோதனைகளைச் செய்யச் சொல்லி மதிப்பிடல்)

தொடர்ச்சியான விரிவான திறன் மதிப்பீட்டை செயல்படுத்தும் பட்டியல்

மதிப்பீட்டுப் பகுதி	மதிப்பீட்டு உத்தியும் மதிப்பீட்டுக் கருவியும்	மதிப்பீட்டுக் கால முறைகள்	செயல்படுத்தும் பகுதி
புலன் வழிக்கற்றல் பிரிவு			
பாடம் சார்ந்த பகுதிகள்	1.இடைப்பருவத் தேர்வுகள் 2.பருவத் தேர்வுகள் 3.செயல்திட்டம் 4.ஒப்படைப்புகள்	குறிப்பிட்ட காலங்களில்	அனைத்துப் பள்ளி மாணவர்கள்
பாடம் சாரா கற்றல் பரப்பு (பணிசார் வழிக் கற்றல்)			
.உடல் நலம்	1.மருத்துவ சோதனை 2.உடற் பரிசோதனை 3.உடல் நலப் பதிவேடு 4.புள்ளி தர அளவுகோல்	2 முறைகள்	ஒவ்வொரு மாணவருக்கும்
தன் மற்றும் சமூக நற்பண்புகள்	1.உற்றுநோக்கல் 2. வாழ்க்கை துணக்குப் பதிவேடு 3.புள்ளி தர அளவுகோல்	2 முறைகள்	ஒவ்வொரு மாணவருக்கும்
ஆர்வம்	1.உற்றுநோக்கல் 2.செயல்பாடுகள் 3.விளைவுகள் 4.புள்ளி தர அளவுகோல்	2 முறைகள்	ஒவ்வொரு மாணவருக்கும்
மனப்பான்மை	1.உற்றுநோக்கல் 2. வாழ்க்கை துணுக்குப் பதிவேடு	2 முறைகள்	ஒவ்வொரு மாணவருக்கும்

இணை கலைத்திட்ட பிரிவு			
உடல் சார்ந்த இணை கலைத்திட்டச் செயல்பாடுகள்	1.உற்றுநோக்கல் 2.நிலை தர அளவுகோல்	2 முறைகள்	ஒவ்வொரு மாணவருக்கும்
பாட இணை கலைத்திட்டச் செயல்பாடுகள்	1.உற்றுநோக்கல் 2.நிலை தர அளவுகோல்	2 முறைகள்	ஒவ்வொரு மாணவருக்கும்

ஆண்டு முழுவதும் மாணவர்களின் கற்றல் அடைவினை மதிப்பீடு செய்வதற்கான மாதிரி கால அட்டவணை

மாதம்	புலன் சார்ந்த கற்றல் பரப்பு செயல்பாடுகள்	புலன் சாரா கற்றல் பரப்பு செயல்பாடுகள்
ஜூலை	-	உடல்நலம்
ஆகஸ்டு	முதல் இடைப் பருவத் தேர்வு	-
செப்டம்பர்	முதல் ஒப்படைப்பு	தன் மற்றும் சமூக நற்பண்புகள்
அக்டோபர்	காலாண்டுத் தேர்வு	ஆர்வம்
நவம்பர்	செயல்திட்டம்	கல்வி இணைச்செயல்பாடுகள்
டிசம்பர்	அரையாண்டுத் தேர்வு	மனப்பான்மை
ஜனவரி	செயல்திட்டம்	உடல்நலம்
பிப்ரவரி	இரண்டாம் இடைப் பருவத் தேர்வு	கல்வி இணைச் செயல்பாடுகள்
மார்ச்	இரண்டாம் ஒப்படைப்பு	ஆர்வம் தன் மற்றும் சமூக நற்பண்புகள்
ஏப்ரல்	ஆண்டுத் தேர்வு	மனப்பான்மை

மதிப்பீட்டு முறைகளைக் கொண்டு அனைத்து மாணவர்களின் புலன் வழிக் கற்றல் பகுதியையும் புலன் சாரா வழிக் கற்றல் பகுதியையும் அறிவு சார் பகுதியையும் மதிப்பிடுதல் அவசியமாகிறது.

மதிப்பிட வேண்டிய பகுதிகள்	மதிப்பீட்டு உத்திகள்	மதிப்பீட்டுக் கருவி	கால முறைகள்
அறிதல் புரிதல் பயன்படுத்துதல் திறன்கள்	வாய்மொழித் தேர்வு எழுத்துத் தேர்வு செயல்முறைத் தேர்வு	அலகுத் தேர்வுகள் ஒப்படைப்புகள் வினாடி வினா தரப்படுத்தப்பட்ட அடைவுச் சோதனை குறையறிச் சோதனைகளப் பணி செயல்முறை வேலை வாய்மொழித்துலங்கள்	இடைப் பருவத் தேர்வுகள் பருவத் தேர்வுகள் சிறப்புத் தேர்வுகள்

உள இயக்கத்திறன் பகுதி

உடல்நலம்

மதிப்பிட வேண்டிய பகுதிகள்	மதிப்பீட்டு உத்திகள்	மதிப்பீட்டுக் கருவி	கால முறைகள்
உயரம் எடை உயரம் எடைக்கு இடையேயுள் விகிதம் மார்பளவு விரிவு பார்வைத் திறன் கேட்டல் திறன் நோய்கள் (ஏதேனும் இருந்தால்) அதன் வரலாறு உடல் குறைபாடுகள்	மருத்துவ பரிசோதனை ஆசிரியரின் உற்றுநோக்கல்	தர அளவுகோல் மருத்துவரின் ஆய்வுகள்	வருடத்திற்கு இரு முறைகள்

தன் மற்றும் சமூக நற்பண்புகள்

தொடக்கப் பள்ளி மாணவர்கள் அனைவரும் அடிப்படையான சமூக நற்பண்புகளைப் பெற்றிருக்க வேண்டும். நடுநிலைப் பள்ளி நிலையில் கூடுதலாக மேலும் சில சமூக நற்பண்புகளைக் கற்க ஆசிரியர்கள் மாணவர்களுக்கு உதவ வேண்டும்.

தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி மாணவர்கள் பெற வேண்டிய நற்பண்புகள்

மதிப்பிட வேண்டிய பகுதிகள்	மதிப்பீட்டு உத்திகள்	மதிப்பீட்டுக் கருவி	கால முறைகள்
ஒழுங்கு முறை காலம் தவறாமை உடல் தூய்மை கூட்டுணர்வு கூடி வாழும் பண்பு பின்பற்றுதல் நேர்மை கடமையுணர்வு கீழ்ப்படிதல்	உற்றுநோக்கல்	தர அளவுகோல் வாழ்க்கைத் துணுக்குப் பதிவேடு	வருடத்திற்கு இரு முறைகள்

நடுநிலைப் பள்ளி மாணவர்கள் பெற வேண்டிய கூடுதல் பண்புகள்

- பொறுப்பேற்றல்
- தன்னம்பிக்கை
- படைப்பாற்றல்
- விடாமுயற்சி
- அழகுணர்வு
- தான்தொடங்காற்றல்
- அஞ்சாமை
- நன்றியுணர்வு
- அறிவியல் நோக்கு
- விளையாட்டுணர்வு
- குழு உணர்வு
- மனவெழுச்சிச் சமநிலை
- குடிமையுணர்வு
- கடவுள் பக்தி
- மொழிப்பற்று
- நாட்டுப்பற்று
- நடுவுநிலைமை
- உண்மை பேசுதல்
- கடின உழைப்பு
- சமய சார்பின்மை
- உழைப்பின் உயர்வைப் போற்றுதல்

மனப்பான்மை

பள்ளி ஆசிரியர்கள் நடத்தும் பாடம் பள்ளி வளாகம் ஒழுக்கம் பள்ளிப் பொருட்களைப் பாதுகாத்தல் போன்றவைகளின் மீது பள்ளி மாணவர்களின் மனப்பாங்கினை தர வரிசைப்படுத்த வேண்டும்.

மதிப்பிட வேண்டிய பகுதிகள்	மதிப்பீட்டு உத்திகள்	மதிப்பீட்டுக் கருவி	கால முறைகள்
தொடக்க நிலை தூய்மை பள்ளி ஒழுங்கு வீட்டுப்பாடம் பள்ளி நண்பர்கள் பள்ளிப் பொருட்களைப் பாதுகாத்தல்	உற்றுநோக்கல் வாழ்க்கைத் துணுக்கு முறை	தர அளவுகோல்	வருடத்திற்கு இரு முறைகள்
நடுநிலை கற்பித்தல் ஆசிரியர்கள் உடற்பயிற்சிகள் பள்ளி விழாக்கள் சகோதரத்துவம் தண்டனைகள்			

ஆர்வம்

ஆர்வப் பகுதி மதிப்பீட்டில் மாணவர்கள் செயல்படுகின்ற பாங்கினைக் கொண்டு உற்றுநோக்கலின் வழியே பெறப்பட்ட பொருள் விளைவுகளைக் கொண்டும் 3 புள்ளித் தர அளவுகோல் மதிப்பீட்டுக் கருவியின் துணை கொண்டும் மதிப்பிடலாம்.

மதிப்பிட வேண்டிய பகுதிகள்	மதிப்பீட்டு உத்திகள்	மதிப்பீட்டுக் கருவி
இலக்கியம் சார்ந்தவை இசை கலை அறிவியல் சமூக அறிவியல்	உற்றுநோக்கல் செயல்பாங்கு விளைவுகள்	3 புள்ளி தர அளவுகோல்

முடிவுரை:

ஆசிரியரிகள் தம் பள்ளி மாணவர்களின் பாடம் சார்ந்த மற்றும் பாடம் சாராப் பகுதிகளின் அடைவினை முழுமையாகவும் முறையாகம் விரிவாகவும் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்து குறைந்தபட்சக் கற்றல் இலக்குகளின் முழுமையான தொடர்ச்சியான வரிவான மதிப்பீட்டு முறையினை கடைபிடித்து மாணவர்களின்முழு ஆளுமை வளர்ச்சியினை அடைவிக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

தமிழ் கற்றல்-கற்பித்தலில் கூட்டுக்கலந்தாய்வு முறை (Discussion Method)

பரமசிவம் முத்துசாமி
மலேசிய புத்ராப் பல்கலைக்கழகம்.

முன்னுரை

கற்றல் என்பது மனிதவாழ்வின் அடிப்படை அனுபவங்களில் ஒன்றாகும். 'கல்' என்ற வேர்ச்சொல்லின் அடியிலிருந்து கல்வி, கற்றல் ஆகிய சொற்கள் பிறக்கின்றன. கல்வி என்ற சொல் 'அறிந்து கொள்ளுதல்' என்று பொருள்படும். கற்றல்-கற்பித்தல் ஆகியவற்றுக்கு அறிந்து கொள்ளும் தேடலே மூலக்காரணமாக அமைகின்றது. இவ்விரு சொற்களும் உட்பிணைப்பு கொண்டும், ஒன்றையொன்று சார்ந்தும் நிற்பவை. கற்றல்-கற்பித்தல் என்பவற்றில் பல்வேறு படிநிலைகள் உண்டு. அவற்றில் கூட்டுக் கலந்தாய்வு முறையும் (Discussion Method) ஒன்றாகும்.

கற்றல்-கற்பித்தலில் கூட்டுக் கலந்தாய்வு முறையைப் பின்பற்றும் போது ஏற்படும் விளைவுகள் மற்றும் தாக்கங்கள் குறித்த செய்திகளை இக்கட்டுரையில் விரிவாகக் காணலாம்.

பழங்காலக் கல்விமுறை

ஆதிகாலத்தில் மனிதர்கள் குழுவாகவும் கூட்டாகவும் வாழ்ந்து வந்தனர். நாகரிகம் அடையாத காலத்தில் கூட, வேட்டை, உணவு, இருப்பிடம் என அனைத்துச் செயல்களும் கூட்டாகவே நிகழ்த்தப்பட்டு வந்தன. நாகரிக வாழ்வில் அடியெடுத்து வாழ்ந்த நிலையிலும் இந்நிலை தொடர்ந்தது. கல்வி, போர்ப்பயிற்சி செய்தல் போன்றவற்றை ஒன்றிணைத்து மேற்கொண்டனர் (Anant Sadashiv Altekar, 2009, p. 98-100).

பெரும் இதிகாசமான மகாபாரதத்தில் பாண்டவர்கள், கௌரவர்கள் மற்றும் பிற அரசக்குடும்பத்தைச் சேர்ந்த இளவரசர்களுக்குப் பீஷ்மரும், துரோணரும் கூட்டாக வகுப்புகள் கற்றுத் தந்த செய்தி காணப்படுகிறது (Promotha Nath Mullick, 2004, p. 38-39). பழந்தமிழ் இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவை சங்கம் என்ற புலவர்களின் கூட்டமைப்பில் வைத்து உருவாக்கப் பட்டவையாகச் செய்திகள் கூறுகின்றன. அறிஞர்களின் அவையில் மணிமேகலை சமயம் குறித்த வாதங்களை நிகழ்த்திய செய்திகளை அக்காப்பியம் காட்டுகின்றது. பழங்கால ஆசியா முழுவதுமே குரு-மாணவர்கள் என்ற அடிப்படையில் கற்றல்-கற்பித்தல் ஒருவகையான கூட்டுக்கலந்தாய்வு முறையில் நடைபெற்றதைச் சான்றுகள் உணர்த்துகின்றன. சீனாவின் கல்வி, போர் மற்றும் தற்காப்புக்கலைகள் அனைத்தும் கூட்டுப் பயிற்சியாகவே கற்கப்பட்டு வந்ததை அறியமுடிகிறது.

இன்றைய கல்விமுறை

தற்போதைய கல்விமுறை ஒவ்வொரு நாளும் புதிய எல்லையைத் தொட்டு வருகின்றது. அதிவேகத் தொழில்நுட்ப வளர்ச்சியானது கற்றல்-கற்பித்தல் முறைகளில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. பழங்காலக் கல்விமுறையில் ஆசிரியருக்கே அதிக முக்கியத்துவம் இருந்தது. இன்று ஆசிரியரின் இடத்தைக் கணிப்பொறி எட்டிப்பிடித்துள்ளது. ஆசிரியரே இல்லாமல் கணினியின் வாயிலாகவே உலகின் எந்த மூலையில் இருந்தாலும் கல்வியைப் பெற்றுவிடக்கூடிய சாத்தியக்கூறுகள் இன்று வந்து விட்டன. தொலைநிலைக்கல்வி (Teleconferencing) என்ற வசதியின் மூலமாக, ஒரே ஓர் ஆசிரியரைக் கொண்டு உலகின் எல்லாப்பகுதிகளிலும் இருக்கும் இலட்சக்கணக்கான மாணவர்கள் ஒரே நேரத்தில் கல்வியைப் பெறும் வசதியும் வளர்ந்து விட்டது. இது அறிவியலின் பெரும் சாதனை என்பதில் எந்த ஐயமும் இல்லை. உலகம் முழுவதையும் ஒரே வகுப்பறையாக மாற்றுவதில் அறிவியலுக்குக் கிடைத்த வெற்றி என்றும் இதை வருணிக்கலாம் (M.S.Househ, 2011, p. 407). ஆனால், கூட்டுக் கலந்தாய்வு முறை என்னும் அறிவுப்பகிர்தல் இக்கல்விமுறையில் முழுமையாக வெளிப்பட இயலுமா என்ற கேள்வியும் உடன் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

ஏனெனில் ஆசிரியரின் நேரடியான பங்களிப்பு ஒரு வகுப்பறையில் இருப்பதைப் போன்ற நேரடி அனுபவத்தை எந்த அறிவியல் கருவியாலும் ஈடு செய்ய முடியாது. உணர்ச்சியோடும், சூழலுக்கேற்ற இயல்புகளோடும் ஓர் ஆசிரியர் கற்பித்தலை நிகழ்த்துகிறார். அம்மனநிலையைக் கற்றலில் ஈடுபட்டுள்ள மாணவரும் அப்படியே உள்வாங்கிக் கொள்கிறார். கற்றல்-கற்பித்தல் என்ற செயல்களுக்கு ஊடாக அங்கு மறைமுகமாக உணர்வுகளும் தம் பங்களிப்பைச் செய்கின்றன என்பதே உண்மை. இச்சூழலைக் கணிப்பொறி போன்ற கருவிகளால் உருவாக்க முடிவதில்லை. இதுவே கருவியின் துணை கொண்டு கல்வி பெறும் முறையில் உள்ள அடிப்படைச் சிக்கலாகும். மேலும் ஆசிரியரின் நேரடியான கவனம் அற்ற கல்வியில் மாணவராலும் முழு ஈர்ப்பினையும், ஆர்வத்தினையும் செலுத்த இயலுவதில்லை.

கூட்டுக்கலந்தாய்வின் நன்மைகள்

கல்வியைக் கற்றலிலும், கற்பித்தலிலும் கலந்தாய்வு முறை குறிப்பிட்ட விளைவை ஏற்படுத்துகிறது. முதலாவதாக வெவ்வேறு குணநலன்கள், விருப்புவெறுப்புகள் நிறைந்த மனிதர்களை ஒரே இடத்தில் இக்கல்விமுறை கொண்டு வந்து சேர்க்கிறது. தனிமனிதர்களின் கொள்கைகளே பெரும்பாலான மனிதர்களின் மீது திணிக்கப்படுவதாக இன்றைய நவீன உலகம் மாறி விட்டது. ஆனால் வெவ்வேறு நிலைப்பாடுகளைக் கொண்ட மனிதர்களை ஒரு பொதுவான நேர்க்கோட்டில் கொண்டு வந்து நிறுத்தும் பணியைக் கலந்தாய்வு முறையிலான கல்வி செய்து தருகிறது. குறிப்பாக, 'தான்' என்ற நிலையிலிருந்து விடுபட்டு 'நாம்' என்ற பொதுநிலையில் நின்று ஒரு பாடம் அல்லது கேள்விக்கான விடை இங்குத் தேடப்படுகிறது. ஒரு பாடத்தைக் கற்பதில் இருக்கக்கூடிய வெவ்வேறு கோணங்களை அவரவரின் பார்வையில் கலந்தாய்வு முறை வெளிக்கொண்டு வந்து தருகிறது (H.Douglas Brown, 1987).

கற்றல் முறையில் பின்பற்றி வரும் தவறுகள் மற்றும் பின்னடைவுகளைச் சீராக்கும் நிலையையும் கலந்தாய்வு முறையிலான கல்வி ஏற்படுத்துகிறது. ஏற்கனவே தவறாகக் கற்று வந்த செய்திகளுக்கு மாறான சரியான விடைகளைப் பெறவும் வழியேற்படுகிறது (William M.Welty, 1999, p. 190) இது தவிர ஒரு கூட்டுக்கருத்தினை அனைவரும் மதித்து ஏற்றுக் கொள்ளும் மனநிலையையும் கூட்டுக் கலந்தாய்வு முறையிலான கல்வி கற்றுத் தருகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக அறிவு என்பது தனிப்பட்ட சொத்தாக இல்லாமல், அது அனைவருக்கும் உரித்தான பொதுச்சொத்தாகப் பரவலாக்கம் செய்யப்படுகிறது.

கருவியும் கலந்தாய்வு முறையும்

கணிப்பொறி போன்ற கருவியின் துணையின்றி நம்மால் இன்றைக்கு வாழவே இயலாது. மனிதனின் எதிர்பார்ப்பைச் சுமந்து கொண்டு வேகத்துடன் ஓடும் குதிரையாகக் கணிப்பொறி மாறிவிட்டது. இதனால் ஏற்பட்டுள்ள நன்மைகளை எளிதில் வரிசைப்படுத்தி விட இயலாது. கற்றல்-கற்பித்தலுக்கு இதயமாக இயங்கிக் கணிப்பொறி துணை செய்கிறதென்றால் அது மிகையன்று.

கல்வி மட்டுமில்லாமல் அனைத்துத் துறைகளும் கணிப்பொறியின் துணையுடனே வாழ்ந்து வருகின்றன (Allan B. Ellis, 1974, p. 9-12). எனவே கணினியைப் புறந்தள்ளி விட்டுக் கலந்தாய்வு முறையில் கல்வியை வளர்க்கவியலாது. ஆனால் கணிப்பொறியை நம்பி மட்டுமே வாழும் தலைமுறை இன்று உருவாகி வருவதை நாம் காண்கிறோம். எந்த ஒரு செய்தியையும் நம் கையில் கொண்டு வந்து தரும் ஆற்றல் கணிப்பொறியிடம் உள்ளது. இதைக் கற்றலுக்குக் கிடைத்த பெரும் வரமாக ஏற்றுக் கொள்ளலாம். அதே வேளையில் தன்னுடைய அறிவைப் பயன்படுத்தாமல், கணிப்பொறியில் பெறப்பட்ட விடைகளை ஒன்றிணைத்துத் தன் படைப்பாகக் காட்டும் போலித்தனங்களும் பெருகி விட்டதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.(D.Bhaskar Rao, 2000, p. 161-162)

சிக்கல் நிறைந்த எந்தத் தலைப்பிற்கும் தேவையான செய்திகளைப் பத்து, பதினைந்து இணையத்தளங்களில் இருந்து பெற்றுக் கத்தரித்து ஒட்டும் (Cut & Paste) கலையை அதிகமாகக் காணமுடிகிறது. பள்ளி மற்றும் பல்கலைக்கழகங்களில் தரப்படும் திட்டப் பாடங்களுக்கு (Project Work) இவ்வகையில் விடைகள் எளிதில் தயாரிக்கப்பட்டு விடுகின்றன. அறிவைப் பயன்படுத்திப் பிறருடைய கருத்தைத் தேடி எடுக்கக் கற்றுக்கொள்ள முடிகிறது. ஆனால் அறிவைப் பயன்படுத்தி

அத்திட்டப்பாடங்களைத் தாமே உருவாக்கும் ஆற்றல் மாணவர்களிடம் அரும்புப் பருவத்திலேயே கருகி விடுகிறது.

மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட கருவிகள் மனிதனின் எல்லையில்லாப் பேரறிவையும் சிந்தனைத் திறனையும் முடக்குவதற்கு இடம் தருதலாகாது. இது கற்றலைச் செய்யும் மாணவரை மட்டும் இன்றி, கற்பித்தலைச் செய்யும் ஆசிரியரையும் பாதித்து விடும். எனவே கருவியும், மனித அறிவாற்றலும் இணைந்த கற்றல்-கற்பித்தல் முறை உருவாக்கப்பட்ட வேண்டும். இதனால் மேலும் வவிமை கொண்ட கல்விமுறை உருவாகும். எனவே கணிப்பொறியின் வேகமும், மனித அறிவாற்றலும் இணைந்த கற்றல்-கற்பித்தலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

மாணவர்களுக்கான கலந்தாய்வுமுறை

கலந்தாய்வு என்பது கல்விமுறையில் ஏற்கனவே பின்பற்றப்பட்டு வரும் ஒன்றென்பதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை. அதை மேலும் சீர்ப்படுத்திப் பயன்படுத்துவதே தற்போதைய தேவையாகும். கலந்தாய்வுமுறை என்பது இளம்பருவத்திலேயே கல்விக்கூடங்களில் வலுப்படுத்தப்பட வேண்டும். வகுப்பறையில் ஆசிரியர் கற்றுத்தருவதை அப்படியே தலையில் திணித்துக் கொள்ளும் கல்விமுறையும், கருவிகள் காட்டுவதை அப்படியே நம்புகின்ற நடைமுறையும் மாறவேண்டும்.

ஆய்வுக்குட்படுத்தி எந்த விடையையும் ஏற்றுக் கொள்ளும் முறையைக் கல்வியில் மேலும் வலுவோடு செயல்படுத்த வேண்டும். ஒவ்வொரு பாடத்தையும் சுற்றி அமர்ந்து விவாதித்து அறிந்து கொள்ளும் தேர்ச்சியை மாணவர்களுக்குப் பழக்கித் தருதல் பயன் தரும் (Neal A. Glasgow Cathy D. Hicks, 2003) நியூட்டனின் விதி, ஐன்ஸ்டீனின் விதிக்கொள்கை போன்ற எதைக் கற்றுத் தந்தாலும், அது குறித்த முழுமையான கருத்துப்பரிமாற்றம் நிகழ்ந்து, அக்கண்டுபிடிப்புகளின் மெய்த்தன்மையைச் சோதித்தறியும் திறனைக் கொண்ட தலைமுறையை உருவாக்குதல் முக்கியமாகும்.

ஆசிரியர்களுக்கான கலந்தாய்வுமுறை

வகுப்பறையில் மாணவர்களிடையே மட்டும் கூட்டுக்கலந்தாய்வுமுறை என்னும் பண்பு வளர்ந்தால் போதுமானதன்று. அப்பாடத்தைப் போதிக்கும் ஆசிரியர்களிடையேயும் கலந்தாய்வுகள் பரந்துபட்ட நிலையில் நிகழ வேண்டும். அதுவே தரமான கல்வியை மேலும் வளர்த்தெடுக்கும்.

பொதுவாகக் கற்பித்தலில் ஒவ்வொரு ஆசிரியருக்கும் ஒருவித பாணி (Style) இருக்கும். ஒருவரை மற்றொருவருடன் ஒப்பிட்டுக் காணமுடியாது. ஆசிரியர்களின் கற்பிக்கும் திறன் மேம்பட உதவும் கருத்தரங்குகள், பயிலரங்குகள் உலகெங்கும் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் பல்வேறு தலைப்புகளில் விவாதம் நடத்தப்படும் சூழலைக் காண்கிறோம். இந்த முறையில் சற்றே மாற்றம் செய்து ஒவ்வொரு கல்வி நிலைய அளவிலும் பாடங்கள் மற்றும் பொதுவான விஷயங்கள் தொடர்பான கலந்தாய்வுகள் அடிக்கடி நிகழ வேண்டும். இது ஆசிரியர்களுக்கு இடையேயான இடைவெளியைக் குறைக்க உதவுவதுடன் அறிவுப் பரவலாக்கத்திற்கும் உறுதுணை புரிகிறது. இக்கலந்தாய்வு முறையின் முடிவுகளைக் கற்பித்தலில் சிறப்பாக வெளிப்படுத்திக் கொள்ள ஆசிரியர்களுக்கு வழி கிடைக்கும். கலை, அறிவியல் என எத்துறையாக இருந்தாலும் இக்கலந்தாய்வுமுறை பெரும் துணை செய்யும் என்பது உறுதி. ஒரு காலகட்டத்தில் அனைவருக்கும் பொதுவாக ஏற்கப்படும் தீர்வு, பிற்காலத்தில் பொருத்தமற்றது என நிராகரிக்கப்படுவதைக் காண்கிறோம். இதைத் தவிர்க்க கலந்தாய்வு முறையிலான கல்வி பெருந்துணை செய்கிறது. எல்லாக்காலத்துக்கும் பொருந்தும் தீர்வுகளைப் பெற இது வகை செய்கிறது.

முடிவுரை

கற்றல்-கற்பித்தல் என்பது முடிவற்ற தேடலை மையமாகக் கொண்டது. புதிய விஷயங்களைத் தேடி அதைக் கற்பதில் மனிதனுக்கு உள்ள ஆர்வத்திற்கு எல்லையே இல்லை. மனிதனின் பிறப்பு தொடங்கி இறப்பு வரை கற்றலும், கற்பித்தலும் இடையறாது தொடர்கின்றன. இதைச் சற்றுப் பண்படுத்திக் கற்றால் மேலும் பயன்கள் விளையும். கற்றல்-கற்பித்தல் என்பது உரை நிகழ்த்தும் தன்மையிலிருந்து மாறி, ஒரு விஷயத்தைப் பரிமாறிக் கொள்ளும் ஒன்றாக மாற வேண்டும். அந்தப் பரிமாற்றத்தில் புதிய செய்திகள் பெறப்படுவதோடு, மாற்றுச் சிந்தனைகளும், வித்தியாசமான கோணங்களும் சேர்த்துப் பெறப்படுகின்றன. அனைத்திற்கும் மேலாகப் பிறரின் அறிவைச் சகித்துக் கொள்ளும் மனநிலையும், பக்குவமும் அனைவருக்குள்ளும் வளர்கிறது. இதற்கான வழிமுறைகளைக் கூட்டுக் கலந்தாய்வு முறையிலான கல்வி நமக்குக் கற்றுத் தருகிறது.

துணை நூல்கள்:

Anant Sadashiv Altekar. (2009). ***Education in Ancient India***. Isha Publishers (Pg. 98-100)

Promotha Nath Mullick. (2004). ***The Mahabhartha: A Critical Study 1934***. Kessinger Publications (Pg. 38-39).

M.S. Househ. (2011). ***Strengths and weaknesses of using Conferencing Technologies***. (article), International Perspectives in Health Informatics, IOS Press BV. (Pg. 407)

H. Douglas Brown. (1987). ***Studies in Second Language Acquisition*** Vol.10 Issue.03 Cambridge Journals.

William M. Welty. (1999). ***Discussion Method Teaching-How to make it work? Learning from*** **change, Landmarks in Teaching and Learning in Higher Education** from change Magazine 1969-1999 (Pg. 190)

Allan B. Ellis. (1974) ***The Use & Misuse of Computer in Education***, McGraw-Hill Publications (Pg. 9-12)

D. Bhaskar Rao. (2000). ***International Encyclopaedia of Science and Technology Education***, Volume 1 Discovery Publishing House, NewDelhi. (Pg. 161-162)

Neal A. Glasgow Cathy D.Hicks. (2003). ***What successful Teachers Do? Research Based Classroom Strategies for New and Veteran Teachers***. Sage Publications USA. (Pg. 48)

கிராமப்புற மாணவர்களின் தமிழில் படித்தல் இடர்பாடுகளைக் கண்டறிதல் மற்றும் படித்தல் குறைநீக்கி, மேம்படுத்தும் நுட்பங்களை உருவாக்குதல் - ஓர் ஆய்வு

பா. பத்மா
உதவிப்பேராசிரியை (தமிழ்க் கல்வி)
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

"தாய்மொழி மூலம் பெறும் கல்வி தாய்ப்பாலைப் பெறுவது போன்றது;
அயல்மொழி மூலம் பெறும் கல்வி, புட்டிப்பாலைப் பெறுவது போன்றது".

- காந்தியடிகள்

"Indian students ranked 2nd last among the 73 countries in Global Test on Reading by OECD" – The Times of India, 15.01.2012

ஆய்வின் சமுதாயப் பொருத்தப்பாடு (Social Relevance of the Study)

அறிவு உலகத்தின் திறவுகோலாகப் படித்தல் திறன் திகழ்கிறது. மனிதனை முழு மனிதனாக ஆக்குவது படித்தல் திறனே என்கிறார் பேகன். ("Reading maketh a Complete Man" - Bacon). படித்தலில் முறையான பயிற்சி இல்லாவிடில் மாணவர்களால் பிற பாடங்களில் செம்மையடைய இயலாது. 2011ஆம் ஆண்டு நடைபெற்ற உலக அளவிலான 73 நாடுகளின் மாணவர்கள் பங்கேற்ற ***OECD*** படித்தல் சோதனையில், கடைசியில் இருந்து இரண்டாவது இடத்தை (72/73) பிடித்த மோசமான துயரம் இந்தியக் கல்வியின் கரும்புள்ளியாகும். இந்தப் பன்னாட்டுப் படித்தல் சோதனையில் பங்கேற்று, சோகமான முடிவைச் சந்தித்தவர்கள் தமிழ்நாட்டு மாணவர்கள் என்பது இந்த ஆய்வின் அவசியத்திற்கு உரைகல்லாக அமைகின்றது. தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி (NCERT) நிறுவனம் 2011-ஆம் ஆண்டு வெளியிட்ட ஒரு ஆய்வு முடிவானது, தேசிய பள்ளி மாணவர்களின் படித்தல் திறன் அடைவு மிகவும் குறைவாக, 28 சதவிகித அளவே இருப்பதை வெளிப்படுத்தியுள்ளது. பெரும்பாலான பள்ளிமாணவர்கள் படித்தல் திறனில் பின்தங்கி இருப்பதால், அது அவர்களின் கற்றல் அடைவினை (Learning Achievement) கடுமையாகப் பாதிக்கின்றது என்ற எச்சரிக்கையினையும் மேற்குறிப்பிட்ட ஆய்வு முடிவு குறிப்பிடுகின்றது. இந்தப் பின்னணியில் தமிழ்நாட்டில் பள்ளி மாணவர்களின், குறிப்பாகக் கிராமப்புறப் பள்ளி மாணவர்களின் படித்தல் திறன் எவ்வாறு உள்ளது என்பதைக் கண்டறிந்து, அத்திறனைக் கிராமப்புற மாணவர்களிடையே மேம்படுத்தும் நுட்பங்களை உருவாக்குதலே ஆய்வாளர் மேற்கொண்ட பொருத்தமான, காலத்திற்கேற்ற, சமுதாயப் பொருத்தப்பாடு உள்ள ஆய்வாகும்.

மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முக்கியத்துவம்

இயந்திரமயமாகிவரும் தற்போதைய சூழ்நிலையில் தொலைக்காட்சி, இணையதளம் போன்ற மக்கள் தொடர்பு சாதனங்களால் படித்தல் பழக்கம் வெகுவாகக் குறைந்து விட்டது என்றே சொல்லலாம். குறிப்பாக, பள்ளி மாணவரிடையே பாடநூல் தவிர்த்த வேறு நூல்களைப் படிக்கும் வழக்கம் அறவே இல்லையென்றே சொல்லலாம். கணிப்பொறி, முகநூல் (Facebook), டுவிட்டர் (Twitter), ஆர்க்குட் (Orkut) போன்ற சமூக ஊடகங்களின் (Social Media) தாக்கங்களினாலும்

மாணவர்களிடையே படித்தல் பழக்கம் வெகுவாகக் குறைந்து வருகின்ற காரணத்தினாலும் மற்ற திறன்களை விடவும் படித்தல் திறனை மேம்படுத்த வேண்டுவது அவசியம் என்பது கல்வியியல் வல்லுனர்களின் பரவலான கருத்தாகும். எனவே, பள்ளி மாணவர்களின் படித்தல் திறனின் நிலைபாடு என்ன என்பது குறித்து ஆய்வதும், அதனை மேம்படுத்தும் நுட்பங்களை உருவாக்குதலும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

ஆய்வுமுறை

ஆய்வின் இலக்கினை அடைவதற்கு விவரிக்கும் ஆராய்ச்சி மற்றும் பரிசோதனை முறை ஆராய்ச்சி ஆகிய இரண்டு ஆய்வு முறைகளுமே ஆய்வாளரால் பயன்படுத்தப்பட்டன.

ஆய்வின் நோக்கங்கள்

இந்த ஆய்வானது கீழ்க்காணும் நோக்கங்களை அடைவதற்காக மேற்கொள்ளப்பட்டதாகும்:

1. தமிழ் மொழியில் எட்டாம் வகுப்பு மாணவர்களின் படித்தல் திறனை மதிப்பீடு செய்வதற்கு, வரையறுக்கப்பட்ட சில படித்தல் திறனுக்கான சோதனைகளை உருவாக்குதல்.
2. ஆய்வாளரால் உருவாக்கப்பட்ட தமிழ் மொழியில் படித்தல் திறனின் மதிப்பீட்டு சோதனை முடிவுகளைப் பகுப்பாய்வு செய்தல்.
3. மேற்குறிப்பிட்ட பகுப்பாய்வு முடிவுகளின் அடிப்படையில் பள்ளி மாணவர்களின் தமிழ் மொழியில் படித்தல் திறனின் மேம்பாட்டிற்கான பரிந்துரைகளை அளித்தல்.
4. பரஸ்பரம் கற்பித்தல் நுட்பங்கள் (Reciprocal Teaching Techniques), தமிழில் எட்டாம் வகுப்பு அளவில் படித்தல் திறனை மேம்படுத்தக் கூடுமா என்று ஆராய்தல்.
5. ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், கிராமப்புற எட்டாம் வகுப்பு பயிலும் மாணவர்கள் தமிழில் படித்தல் திறன் மேம்பட, ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகள் வழங்குதல்.

ஆய்வுக்கருவிகள் (Research Tools)

எட்டாம் வகுப்பு மாணவர்களின் தமிழ் மொழியில் படித்தல் திறன்கள் அடைவினையும், அதன் தொடர்புடைய காரணிகளையும் மதிப்பீடு செய்வதற்குக் கீழ்க்கண்ட ஆய்வுக்கருவிகள் (Research Tools) பயன்படுத்தப்பட்டன.

1. படித்தல் திறனறிச் சோதனை (படித்துப் புரிந்துக் கொள்ளும் சோதனை, படித்தல் வேகச் சோதனை மற்றும் சொற்களஞ்சியப் பெருக்கச் சோதனை ஆகியவற்றை உள்ளடக்கியது)
2. படித்தல் பழக்கத் தர அளவுகோல்
3. மொழியார்வச் சோதனை
4. சமுதாய-பொருளாதார அளவுகோல்
5. மாணவருக்கான வினாநிரல்.
6. பரஸ்பரம் கற்பித்தல் விருப்பச் சோதனை

இவ்வாய்வுக் கருவிகள் கீழ்க்கண்ட நிலைகளுக்கு உட்படுத்தப்பட்டு தரப்படுத்தப்பட்டதாகும்.

1. சோதனைக் கருவிகளின் பல்வேறு உருப்படிகளானது (Test items) மொழியாசிரியர்கள், கருத்தாடல் திறன் வல்லுனர்கள் மற்றும் கல்வியியல் நிபுணர்கள் என தலா மூன்று பேர் வீதம் ஒன்பது பேர் கொண்ட வல்லுனர் குழுவிடம் தீவிரமாகக் கலந்து ஆலோசிக்கப்பட்டு உருவாக்கப்பட்டன.

2. சோதனைக் கருவிகளின் ஏற்புடைமைகள் (validity)இ **நம்பகத் தன்மை (Reliability)** ஆகியன உறுதிசெய்யப்பட்டன.

தரவுகளின் பகுப்பாய்வு (Analysis of Data)

எட்டாம் வகுப்புப் பயிலும் கிராமப்புற மாணவர்களிடையே படித்தல் திறன் அடைவின் அளவு, அதன் தொடர்பான காரணிகள் ஆகியன சம்பந்தமான தரவுகள் மற்றும் பரஸ்பரம் கற்பித்தல் நுட்பங்கள் (Reciprocal Teaching Techniques), என்ற பரிசோதனையின் விளைவுகள் சம்பந்தமான தரவுகள் விவரிக்கும் பகுப்பாய்வு (Descriptive Analysis), வேறுபாட்டுப் பகுப்பாய்வு (Differential Analysis), அனுமானப் பகுப்பாய்வு (Inferential Analysis) மற்றும் தரவு தர பகுப்பாய்வு (Qualitative Analysis of Data) ஆகியனவற்றிற்கு உட்படுத்தப்பட்டு, இந்தப் பகுப்பாய்வினால் புரிந்துகொள்ளப்பட்ட முடிவுகள் பொருத்தமான பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகளுடன் தரப்பட்டுள்ளன.

ஆய்வு முடிவுகள்

1. தமிழ்மொழி படித்தல் திறனில் எட்டாம்வகுப்பு மாணாக்கரது அடைவு மதிப்பெண் 30.3 சதவிகிதமே உள்ளது என்பது அதிர்ச்சி மற்றும் வருத்தத்தைத் தரக்கூடிய கசப்பான உண்மையாகும். (எண் கணித இடை - Arithmetic Mean = 45.38, திட்ட விளக்கம்- Standard Deviation = 4.36, 10ஆவது நூற்றுமானம; P_{10} = 105, 90ஆவது நூற்றுமானம் P_{90} = 25)
2. அரசுப்பள்ளி மாணவர்களைவிட, தனியார்பள்ளி மாணவர்களே படித்தல் திறன் அடைவினை அதிகமாகப் பெற்றுள்ளார்கள் என்பது தெளிவாகின்றது.
3. ஆண்பால் மாணவர்களைவிட, பெண்பால் மாணவர்களே படித்தல் திறன் அடைவினை அதிகமாகப் பெற்றுள்ளார்கள் என்பது தெளிவாகின்றது.
4. தமிழ்மொழியில் படித்தல் திறனில் மிக அதிக உயர்நிலை அடைவினை அடைந்த மாணவர்களின் படித்தல் பழக்கம், மிகக் குறைந்த குறைநிலை அடைவினை அடைந்த மாணவர்களின் படித்தல் பழக்கத்தினைவிட சிறப்பாக உள்ளது.
5. தமிழ்மொழியில் படித்தல் திறனில் மிக அதிக உயர்நிலை அடைவினை அடைந்த மாணவர்களின் மொழி ஆர்வம், மிகக் குறைந்த குறைநிலை அடைவினை அடைந்த மாணவர்களின் மொழி ஆர்வத்தைவிட சிறப்பாக உள்ளது.
6. தமிழ்மொழியில் படித்தல் திறனில் மிக அதிக உயர்நிலை அடைவினை அடைந்த மாணவர்களின் சமுதாய **எ** பொருளாதார தரம், மிகக் குறைந்த குறைநிலை அடைவினை அடைந்த மாணவர்களின் சமுதாய **எ** பொருளாதார தரத்தைவிட அதிகமாக உள்ளது.
7. தமிழ்மொழியில் மிக அதிக உயர்நிலை அடைவினை அடைந்தவர்களில், ஆண்பாலாரைவிட, பொண்பாலாரே எண்ணிக்கையில் விஞ்சுகின்றனர். ஆனால், இதற்கு நேர்மாறான போக்கு, மிகக் குறைந்த குறைநிலை அடைவினைக் கடந்த மாணவர்களிடையே காணப்படுகின்றது. இங்கு பெண்பாலாரைவிட, ஆண்பாலாரே அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றனர்.
8. படித்தல் திறனில் மிகக் குறைந்த குறைநிலை அடைவினை அடைந்த மாணவர்களின் பெரும்பாலான குடும்பங்கள் திட்டமிடப்படாமல் இருப்பதையே எடுத்துக் காட்டுகின்றது. குடும்பத்தின் வருமானம், அதிக எண்ணிக்கையான குடும்ப உறுப்பினர்களிடையே பங்கிடப்படுவதால், மாணவர்களின் படித்தல் திறன் அடைவும், குடும்பத்திலுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரிப்பதினால் குறைவடைகின்றது.

9. மிக அதிக உயர்நிலை அடைவினை அடைந்த மாணவர்களுடைய, தந்தையரின் கல்விமட்டம், மிகக் குறைந்த குறைநிலை அடைவினை அடைந்த மாணவர்களின் தந்தையரின் கல்விமட்டத்தினை விட அதிகம் என்பது தெளிவாகின்றது. தந்தை, போதிய கல்வியறிவற்றவராய் இருக்கையில், தாமும் பிள்ளைகளுக்கு உதவ முடியாதிருப்பதுடன், வழிகாட்டவும் முடியாமல் இருப்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றது. எனவே, தந்தையர் பெற்றுள்ள கல்விமட்டம் என்பது மாணவர்களின் தமிழ்மொழிப் படித்தல் திறனில் செல்வாக்குச் செலுத்தும் ஒரு முக்கியக் காரணி என்ற முடிவிற்கு வரமுடிகின்றது.
10. மிக அதிக உயர்நிலை அடைவினை அடைந்த மாணவர்களின் தாயாரின் கல்வி மட்டம், மிகக் குறைந்த குறைநிலை அடைவினை அடைந்த மாணவர்களின் தாயாரின் கல்வி மட்டத்தினைவிட அதிகம் என்பது தெளிவாகின்றது. போதிய கல்வியறிவு பெற்ற தாய்மார்கள், சமூகத் தடைகளையும், பொருளாதாரத் தடைகளையும் வெற்றிகரமாகத் தாண்டிவிடுகின்றனர்.
11. படித்தல் திறனில் மிக்ககுறைந்த குறைநிலை அடைவினை அடைந்த மாணவர்களில், 72மூ தொலைக்காட்சி பார்ப்பதையே முதன்மைப் பொழுதுபோக்காகவும் 35மூ சதவிகித மாணவர்கள் திரைப்படம் பார்ப்பதையே முதன்மைப் பொழுதுபோக்காகக் கொண்டுள்ளதோடு, மிகக் குறைந்த அளவு மாணவர்களே (3மூ) நூலகம் மற்றும் வீட்டில் படித்தலை முதன்மைப் பொழுதுபோக்காகக் கொண்டுள்ளனர் என்ற கசப்பான உண்மையும் தெரியவருகின்றது.
12. மிகக் குறைந்த குறைநிலை அடைவினை அடைந்த மாணவர்களில், 25 சதவிகிதத்தினரே தங்கள் வீடுகளில் செய்தித்தாள் வசதியினையும், 20 சதவிகிதத்தினரே சஞ்சிகை வசதியினையும் பெற்றிருக்கின்றார்கள்.
13. மிகக் குறைந்த குறைநிலை அடைவினை அடைந்த மாணவர்களில் 45 சதவிகித மாணவர்கள் தினமும் மூன்று மணி நேரத்திற்கு மேல் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பார்ப்பதில் தங்கள் நேரத்தினைச் செலவிடுகிறார்கள். அவர்களது படிக்கும் பழக்கம் மற்றும் அடைவு குறைவாக இருப்பதற்கு இது ஒரு முக்கியமான காரணமாக இருக்கும் என்பதை மறுக்க இயலாது.
14. மிகக் குறைந்த குறைநிலை அடைவினை அடைந்த மாணவர்களில் நாற்பது சதவிகிதம் பேர் செய்தித்தாள்கள் படிக்கும் பழக்கத்தினை அடியோடு பெற்றிருக்கவில்லை. கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளில் செய்தித்தாள்கள் உட்பட அனைத்து செய்திவழிச் சாதனவசதிகளை உள்ளடக்கிய வாசகர் வட்டங்கள் உடனடியாக நிறுவப்படுவது இக்குறைப்பாட்டை நீக்க உதவிபுரியும்.
15. பரஸ்பரம் கற்பித்தல் நுட்பம், எட்டாம் வகுப்பு மாணவர்களின் தமிழில் படித்துப் புரிந்துகொள்ளும் திறனை மேம்படுத்த உதவுகின்றது.
16. பரஸ்பரம் கற்பித்தல் நுட்பம், எட்டாம் வகுப்பு மாணவர்களின் தமிழில் படிக்கும் வேகத்தினை மேம்படுத்த உதவுகின்றது.
17. பரஸ்பரம் கற்பித்தல் நுட்பம், எட்டாம் வகுப்பு மாணவர்களின் தமிழில் சொற்களஞ்சியப் பெருக்கத்திற்கு உதவுகின்றது.

மேற்கண்ட ஆய்வு முடிவுகளை எண்ணுகையில் வீடு, பள்ளி, சமுதாயம் மற்றும் மக்கள் தொடர்பு போன்ற அனைத்து நிறுவனங்களும் ஓர் ஒருங்கிணைந்த முயற்சியினைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதினால் மட்டுமே படித்தல் திறனை மேம்படுத்த முடிவும் என்பது தெளிவாகிறது.

ஆய்வுப் பரிந்துரைகள்

பரஸ்பர கற்பித்தல் நுட்பம், இந்த ஆய்வின் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, இந்திய கிராமப்புறப் பள்ளிகளுக்குப் பயனுள்ளதாக நிரூபிக்கப்பட்டுள்ளதால், பள்ளிக் கல்வியிலும், ஆசிரியர் கல்வியிலும் இந்த நுட்பம் பாடத்திட்டத்தில் இடம்பெற்று, தேவையான பயிற்சியினை ஆசிரியர்களுக்குத் தர வேண்டும். கல்வி நுட்பவியல் (Educational Technology), தமிழ்மொழிக் கல்வியைச் சிறப்பாக வழங்குவதற்குக் கைக்கொள்ள வேண்டிய அறிவியல் பூர்வமான உத்தியாக வரவேண்டியது மிக இன்றியமையாததாகும். எனவே, கீழ்க்கண்ட கல்வி நுட்பவியலின் தற்கால அணுகுமுறைகள், தமிழ் மொழி ஆசிரியர்கள் அனைவராலும் அறிந்து, பயன்படுத்தப்பட வேண்டும் என்பது இந்த ஆய்வின் ஓர் முக்கியப் பரிந்துரையாகும்.

(1) கல்வித் தொலைக்காட்சி (Educational Television) (2) சுற்றுப்பூர்த்தி (CCTV), (3) மொழி ஆய்வகம் (Language Laboratory) (4) நிகழ்பட நாடா (Video) (5) ஊடாடும் நிகழ்பட நாடா (Interactive Video) (6) நிகழ்படச் சொற்றொடர்கள் (Video Text) (7) தொலைவரங்கம் (Teleconference) (8) மின்னஞ்சல் (email) (9) கணிப்பொறி வழிக்கல்வி (Computer Based Education) (10) செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) (11) வளாக வலைப்பின்னல் (Local Area Network) (12) குறுவட்டு - படிக்க மட்டும் முடியும் நினைவகம் (CD – ROM) (13) கணிப்பொறி இணைந்த திரை வீழ்த்தி (LCD Projector) முகநூல் (Face book, Twitter, Orkut) போன்ற சமுதாய ஊடகங்கள் (Social Media).

- நால்வகைத் திறன்களிலுமே ஒரு மாணவர் போதிய அளவு வளர்ச்சி பெறுவதற்குரிய இயல்புகள் அளிக்கப்படாததே இத்தகைய நிலைக்குக் காரணமாகும். எட்டாம் வகுப்பு மாணவராக இருந்தும் அக் கல்விநிலை வரையிலும்கூட இந் நால்வகைத் திறன்களும் அம்மாணவனை எட்டிச் சென்று அடையாததற்குக் காரணம், அடிப்படையில் நம்முடைய இத்திட்டத்தில் இந் நால்வகைத் திறன்களும் முக்கியத்துவம் கொடுக்கப்படாததேயாகும்.
- குறை தீர்க்கும் கற்பித்தல்:

ஒரு குறிப்பிட்ட மாணவரின் கற்பதில் உள்ள இடர்ப்பாடுகளைக் கண்டறிவதே இந்த முறையின் முதற்படியாகும். கற்பதில் இடர்ப்பாடு என்பது, மாணவரின் முன்னேற்றத்தைப் பாதிக்கும் ஒரு கருத்தாக இருக்கும். குறைதீர்க்கும் கற்பித்தல் முறையில் ஆசிரியர் சிறப்புப் போதகராகவும், மாணவர் பிரத்யேகப் பயில்வோராகவும் செயல்படவேண்டும். இதில் ஆசிரியர் தனியாக ஒவ்வொரு மாணவரிடம் தொடர்பு கொண்டு பிரத்யேக அணுகுமுறையைப் பின்பற்றி மாணவர்களுக்குக் கற்பிக்கவேண்டும். இந்த அணுகுதலைப் பள்ளிநேரத்திற்கு முன்னரோ, பின்னரோ, படிக்கும் நேரத்திலோ வைத்துக் கொள்ளவேண்டும்.

- ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரகம், தமிழ் மாநில ஆரம்பப் பள்ளி மாணவர்களின் படித்தல் திறன் குறைபாடுகளைக் களைவதற்கு, படித்தல் அட்டைகள் (Reading Cards) பயனுள்ளவையாகக் கண்டறிந்துள்ளது (2011). இத்தகைய படித்தல் அட்டைகள், பள்ளி மாணவர்களுக்குத் தயாரிக்கப்பட்டு, தரப்படுத்தப்பட்டு, வகுப்பறையில் ஆசிரியர்களால் பயன்படுத்தப்பட வேண்டும்.

தற்போதைய ஆய்வானது, பரஸ்பரம் கற்பித்தல் நுட்பம் என்ற எளிமையான, செலவில்லாத, இந்தியக் கிராமப்புறப் பள்ளிகளுக்கு ஏற்ற ஒரு குணப்படுத்தும் நுட்பத்தினை (Remedial Technique) நிரூபித்துக் காட்டுகின்றது. அந்த வகையில், இந்த ஆய்வின் பங்களிப்பு (Research Contribution) பள்ளிக் கல்வியில் நடைமுறைப் படுத்தப்பட வேண்டிய ஒரு கல்விச் சீர்திருத்தத்திற்கு வழிவகுக்கின்றது.

பண்பாட்டு விழுமியங்களைப் பேணுவதில் மலேசிய இடைநிலைப்பள்ளிகளில் தமிழ்க்கல்வியின் பங்கும் பணியும்.

பார்வதி நல்லியண்ணன்
முனைவர் பட்ட ஆய்வாளர், மலாயாப் பல்கலைக்கழகம்

1. பண்பாடு என்றால் என்ன?

மனிதர்களுடைய மொழி, எண்ணங்கள், நம்பிக்கைகள், பழக்கங்கள், தடைகள், விதிமுறைகள், செயல்முறைகள், கலைகள், சடங்குகள், விழாக்கள், அடையாளச் சின்னங்கள் போன்ற அம்சங்களின் கலவையே பண்பாடு. மனிதனின் பரிணாம வளர்ச்சியில் இந்தப் பண்பாடு ஒரு முக்கியப் பங்கை வகிக்கிறது. கற்றுக் கொள்வதற்கான ஆற்றலும், தான் கற்றதை அடுத்த சந்ததியினருக்கு எடுத்துச் செல்லும் ஆற்றலும் மனிதருக்கு இயல்பானவை. இந்த ஆற்றல்களின் விளைவாக அவனுக்கு ஏற்படக்கூடிய அறிவு, நம்பிக்கை, நடவடிக்கைகள் ஆகியவற்றின் கலவையே பண்பாடு எனப்படுகிறது. பண்பாடு என்பது உயர்ந்த நாகரிகம். கல்வியால் ஏற்படும் மேம்பாடு என்று அகராதியில் சொல்லப்படுகிறது. சேம்பர்லேன் (2005) என்பவர், பண்பாடு என்பது வாழ்வியல் மதிப்புகள், வழக்கங்கள், பாரம்பரியம் இவற்றை உள்ளடக்கியது என்கிறார். மேலும், அது ஒரு குறிப்பிட்ட பிரிவினர் எவ்வாறு சிந்திக்கின்றனர், நினைக்கின்றனர், அவர்களுக்கிடையில் உறவாடுகின்றனர், உலகத்தைப் பற்றி முடிவெடுக்கின்றனர் என்பதைக் குறிக்கிறது என்கிறார். பண்பாடு என்பது மனிதர்களின் நடத்தை, எண்ணம், தொடர்பு, உறவுமுறை ஆகியவற்றை உள்ளடக்கியது என்று டெய்லா (1996) கூறுகிறார். நைன் கேர்ட் (1984) என்பவரோ பண்பாடு என்பது மனிதர்களின் நடத்தை, நம்பிக்கைகள், எண்ணங்கள், மதிப்பீடுகள், அனுபவங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது என்று குறிப்பிடுகிறார்.

பண்பாடு என்பது கலைகள், இலக்கியங்கள், நன்னெறிகள், கற்றலில் நாட்டம் போன்றவற்றின் உன்னத நிலை; கல்வி அல்லது பயிற்சிவழி மனதை வளப்படுத்துதல் அல்லது சீர்படுத்துதல்; ஒரு குறிப்பிட்ட சமூக, இன அல்லது வயதுப் பிரிவினரிடம் காணப்படும் பழக்க வழக்கங்கள் மற்றும் நம்பிக்கைகள் என்றும் பொருள் கொள்ளப்படுகிறது.

1.1 தமிழ்ப்பண்பாடு

உலகெங்கும் வாழும் தமிழர்களின் வாழ்க்கை முறையிலும் அன்றாட பழக்க வழக்கங்களிலும், வேரூன்றியுள்ள மொழி, இலக்கியம், பாரம்பரியக் கலைகள், சடங்குச் சம்பிரதாயங்கள், திருவிழாக்கள், உணவு, உடை போன்றவற்றின் பிரதிபலிப்பாகும். பேசுகின்ற மொழி, இலக்கியம், இசை, நடனம், பாரம்பரிய கலைகள், நாடகம், தற்காப்புக் கலைகள், ஓவியம், சிற்பக்கலை, கட்டட வடிவமைப்பு, விளையாட்டுகள், உணவு, உடை, திருவிழாக்கள், தத்துவங்கள், சடங்கு சம்பிரதாயங்கள், கிராமியக் கலைகள், அறிவியல், தொழில் நுட்பம் போன்ற அனைத்திலுமே தமிழ்ப் பண்பாட்டின் கூறுகளைப் பார்க்கலாம்.

1.2 விழுமியம் என்பது

மதிப்புகள் (values), நெறிமுறைகள், மக்கள் வாழ்ந்து அறிந்து அடுத்தத் தலைமுறைக்குக் கொடுத்துச் செல்லும் நெறிகள். இதனை, தனி மனித விழுமியங்கள் மற்றும் பண்பாட்டு விழுமியங்கள் என இரு வகைகளாகப் பகுக்கலாம். தனி மனித விழுமியங்கள் தனி மனிதருடைய வாழ்வைச் செம்மைப் படுத்துகின்றன. அவை ஒரு சமுதாயத்தின் ஒழுங்கமைவுக்கு அடிப்படையாகும். மனிதர்கள் சேர்ந்து வாழ்வதற்குத் தேவையான விழுமியங்கள் பண்பாட்டு விழுமியங்கள் எனப்படுகின்றன (தமிழ் விக்கிபிடியா).

2. மலேசியாவில் தமிழ்ப்பண்பாடு

மனிதனின் பரிணாம வளர்ச்சியில் பண்பாடு ஒரு முக்கியப் பங்கை வகிக்கிறது. ஒவ்வொரு மனிதச் சமுதாயமும் தனக்கே உரிய பண்பாட்டு அமைப்பைப் பெற்றிருக்கிறது. காலச் சூழலில் பண்பாட்டு மாற்றங்கள் ஏற்படுகின்றன. அதற்குப் பல்வேறு காரணங்களும் உள்ளன. பூகோள அமைப்பு, இயற்கைச் செல்வங்கள், பிற இன, மொழி, சமயச் சூழல், சமூக அமைப்புகள், வரலாற்றுப் பின்னணி, தனி மனிதரின் மனோபாவம், மதிப்பு, லட்சியங்கள், நம்பிக்கைகள், பொருளாதார நிலைமை, அரசியல் போன்றவை பண்பாட்டு மாற்றங்களுக்குக் காரணமாக அமைகின்றன. அவ்வகையில் பன்மொழி, பல்லினச் சூழலில் வாழும் மலேசியத் தமிழரின் பண்பாடுகளும் புறத்தாக்கங்களுக்கு ஆளாகும் நிலை உண்டு. இருப்பினும், தமிழ்ப்பண்பாட்டு விழுமியங்கள் மலேசியாவில் இன்றளவும் பேணிக்காக்கப்பட்டு வருகின்றன என்றால் அது தமிழ்க்கல்வியின் வாயிலாகத்தான் என்று ஆணித்தரமாகக் கூறலாம்.

3. மலேசிய இடைநிலைப்பள்ளிகளில் தமிழ்மொழிப் பாடத்திட்டம்.

மலேசியக் கல்வித் தத்துவம் இளைய தலைமுறையினரைப் புதிய நூற்றாண்டுக்குத் தேவையான தூர நோக்குச் சிந்தனை உள்ளவர்களாக உருவாக்கும் வண்ணம் வடிவமைக்கப் பட்டுள்ளது. உடல், உளம், ஆன்மீகம், அறிவாற்றல் ஆகிய கூறுகளில் மாணவர்கள் சமன்நிலை வளர்ச்சியடைவதை இக்கல்வி ஏற்பாடு வலியுறுத்துகிறது. முழுமையான மலேசிய மக்களை உருவாக்குவதற்குத் தேவையான பல கூறுகளை உள்ளடக்க வேண்டிய சூழலில், மலேசியாவின் தமிழ்மொழிப் பாடத்திட்டமானது பண்பாடு தழுவிய தமிழ்க்கற்றல் கற்பித்தலுக்கும் சிறப்பாக வழிவகுத்துள்ளது. அதற்காகத் தயாரிக்கப்பட்ட இடைநிலைப் பள்ளிகளுக்கான பாடப் புத்தகங்களும் மிகவும் சிறப்பாகத் துணை நிற்கின்றன.

3.1 இடைநிலைப் பள்ளியில் தமிழ்க் கல்வி

அனைத்தும் உலகமயமாகிக் கொண்டிருக்கும் இந்நூற்றாண்டில் தமிழ்ப் பண்பாடும் அதன் விழுமியங்களும் காற்றில் கரைந்து கற்பூரம்போல் மறைந்தாலும் வியப்பு ஒன்றும் இல்லை. இச்சூழலில் மலேசியாவில் தமிழும் தமிழர் பண்பாடும் பண்பாட்டு விழுமியங்களும் இன்னும் தழைத்தோங்கிக் கொண்டிருக்கின்றன என்றால் அதற்குப் பள்ளிகளில் நடக்கும் தமிழ்மொழிப் பாடமே காரணம் என்று துணிந்து கூறலாம். நம் மாணவர்கள் தங்களின் தாய்மொழிக் கல்வியை ஆரம்பப் பள்ளிகளில் செவ்வனே கற்று வந்தாலும் அதனைத் தொடர்ந்து கற்கக் கரம் ஈந்து மேலே தூக்கி விடுவது இடைநிலைப் பள்ளியின் தமிழ்மொழிப் பாடத்திட்டம்தான்.

ஏறக்குறைய 55 விழுக்காடு மாணவர்கள்தான் (என்.எஸ். ராஜேந்திரன் 2008) தமிழ்க்கல்வியை அடிப்படையாகக் கொண்டு இடைநிலைப் பள்ளிகளுக்கு வருகிறார்கள். இதர 45 விழுக்காட்டு மணவர்கள் தமிழையும், தமிழ் சார்ந்த கூறுகளையும் இடைநிலைப் பள்ளிகளுக்கு வந்த பின்புதான் கற்றுக் கொள்கிறார்கள்.

பெரும்பாலான இடைநிலைப் பள்ளிகளில் படிவம் மூன்று வரையிலும் பள்ளி நேரத்திலேயே தமிழ்ப்பாடம் நடத்தப்படுகிறது. மலாய் ஆரம்பப் பள்ளியில் இருந்து வரும் இதர 45% மாணவர்களும் தமிழ்ப்பாட வேளையில் வகுப்பிலேயே அமர்ந்து பாடங்களைக் கேட்கும் வாய்ப்பும் உண்டு.

4. கட்டுரையின் நோக்கம்

மலேசிய இடைநிலைப்பள்ளித் தமிழ்க்கல்வி பண்பாட்டு விழுமியங்களைப் பேணுவதில் பங்காற்றுகிறது என்பதாகும்.

அடிப்படை மொழித்திறன்களான கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய மொழித்திறன்களைக் கற்பிக்கப் பாடப் புத்தகங்கள் ஓர் ஊடகமாகத் திகழ்கின்றன. அப்புத்தகங்களில் உள்ள பாடங்கள் எவ்வாறெல்லாம் தமிழ்ப்பண்பாட்டு விழுமியங்களை, தமிழர்களின் சிறப்புகளை, சிந்தனைகளைப் புதிய தலைமுறையினருக்குக் கொண்டு சேர்க்கின்றன என்பதைப் பார்க்கலாம். பாடல்கள், கவிதைகள், உரையாடல்கள், நாடகங்கள் கதைகள் என

முத்தமிழில் அமைந்திருக்கும் இப்பாடங்கள் தமிழ்ப்பண்பாட்டுக் கூறுகளை மாணவர் மனதில் பதிக்க உதவும் என்பதில் ஐயமில்லை.

5. தமிழ்ப் பாடத்திட்டமும் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளும்

5.1 இலக்கியத்துறைக்கான கற்றல்பேறு

தமிழ்மொழியோடு இலக்கியத் துறைக்கான திறன்களும் மலேசிய இடைநிலைப்பள்ளித் தமிழ்ப்பாடத்திட்டத்தில் இடம்பெற்றுள்ளன. பல்வேறு இலக்கிய வகைகளைப் பொருளுணர்தல், எழுத்துப் படிவங்களை வாசித்து அவற்றுள் காணப்படும் மொழிச்சிறப்பை உய்த்துணர்தல், இலக்கியங்களின் நலம் பாராட்டுதல் போன்றவை இலக்கியத் துறைக்கான கற்றல்பேறுகளாக இப்பாடத்திட்டத்தில் அமைந்திருக்கின்றன.

ஒரு சமுதாயத்தின் பண்பாட்டு விழுமியங்கள் மொழியின் வாயிலாகவும் இலக்கியம் வாயிலாகவும் வெளிப்படுகின்றன. மொழிக்கற்றலில் இலக்கியம் முக்கியப் பங்கை வகிக்கிறது. அதை நன்குணர்ந்த தமிழ்க்கல்வியாளர்கள் சிறப்பான பாடப் புத்தகங்களைத் தயாரித்திருக்கின்றனர். இலக்கியக் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், இலக்கிய நாடகங்கள், காப்பியங்கள், இதிகாசங்கள், பல்வகைச் செய்யுள்கள் மற்றும் படங்கள் வாயிலாக தமிழ்ப்பண்பாட்டு விழுமியங்கள் மாணவ தலைமுறையினரைச் சென்று சேர வழியமைத்துள்ளனர். இப்பாடங்கள் தமிழரின் நாகரிக முதிர்ச்சியையும் மொழியின் ஆழத்தையும் நம் பண்பாட்டினையும் சுவைபட உணர்த்துவனவாய் அமைந்திருக்கின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேல் உள்ள இடைநிலைப் பள்ளிகளுக்கான தமிழ்ப் பாடப் புத்தகங்களைப் பார்ப்போம்.

5.1.1காப்பியங்கள், இதிகாசங்கள்

சோழன், கம்பர் நாடகம் (படிவம் 2). அதில் வரும் கதைப்பாத்திரங்களான சோழ மன்னன், கம்பர், ஒட்டக்கூத்தர், சடையப்பவள்ளல் இவர்களின் பண்பு நலன்களை மதிப்பிட வகைசெய்கிறது. இராமாயணம், மகாபாரதம், நள தமயந்தி போன்ற காவியங்கள் மொழி வளம், அக்காலத் தமிழர்களின் சிறப்புகள், சிந்தனைகள், மன்னர்களின் ஒப்பற்ற ஆட்சிமுறைகள் போன்றவற்றைப் போற்றவும் உய்த்துணரவும் வழிசெய்கின்றன.

சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்ப இராமாயணம், நளவெண்பா போன்ற பண்டைய காப்பியங்களில் கையாளப்பட்ட மொழிச்சிறப்பையும் உய்த்துணர முடிகிறது. பல்வகைச் செய்யுள் பகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட மூதுரை, திருமுறை, நாலடியார், அறநெறிச்சாரம் பாடல்கள் மாணவர்கள் பல்வேறு இலக்கிய வகைகளைப் பொருளுணரவும் போற்றவும் பண்பாட்டு விழுமியங்களை அறியவும் வகைசெய்கின்றன.

கற்பின் கனலி (படிவம் 4) என்ற பாடம். அதில் 'கற்பெனப் படுவது சொல்திறம்பாமை' என்ற ஔவைப் பிராட்டியாரின் அமுதமொழி வழி கூறப்படுகிறது. கற்பு என்பது ஆண் பெண் இருபாலாருக்கும் உரியது; கற்பு நெறி ஆணுக்கும் வேண்டும் என்பதை வலியுறுத்துவதாக இது அமைகிறது.

சிலப்பதிகாரம், கோவலன் கண்ணகி கதையைச் சொல்வதற்கு மாத்திரம் எழுதப்படவில்லை. மாறாக, அரசியல் பிழைத்தோருக்கு அறமே கூற்றாகும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர், ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும் என்ற மூன்று உண்மைகளைக் கூறவே இளங்கோவடிகளால் படைக்கப்பட்டது என புலவர் அருணாசலம் தமது 'சிலப்பதிகாரச் சிந்தனை'யில் கூறுவதையும் சுட்டுகிறது. மேலும், கற்புடைய பெண்களை மக்கள் மட்டுமன்றி தேவரும் முனிவரும் கூட போற்றுவர் என்ற கருத்துகளை இளம் நெஞ்சங்களில் பதிக்க வழி செய்கிறது. சிலப்பதிகாரத்தில் வரும் ஆடல்மகள் மாதவியும் கூட ஒழுக்கநெறியைக் கடைப்பிடித்து வாழ்ந்ததைக் கூறுகிறது. மூன்றவதாக வரும் கோப்பெருந்தேவியும் கற்பில் சிறந்தவளே என அக்காலத்தில் வாழ்ந்த சிறந்த பண்பாளர்களையும் அதன்வழி பண்பாட்டு விழுமியங்களையும் கூறுகிறது.

கணவன் மனம் திருந்தி நலிவுற்று வரும் காலத்தில் அவனுக்கு உறுதுணையாக இருப்பதே கற்புடைய மகளிரின் தன்மை எனவும் கணவனுக்கு அநீதி இழைக்கப்படும்போது தன் கணவன் கள்வன் அல்லன் என வழக்குரைத்து, அச்சமின்றி பாண்டிய மன்னனிடம் நீதி கேட்ட கண்ணகியின் மாண்பும் இளைய தலைமுறையினரைச் சென்று சேர இப்பாட நூல்கள் துணைசெய்கின்றன.

படிவம் நான்கில் மற்றொரு பாடம், தலைப்பு- நல்லாட்சி. ஒரு மன்னனின் ஆட்சி எவ்வாறு இருக்கவேண்டும் என்று விளக்குகிறது. வரிச்சுமை இல்லாத நேர்மையான செங்கோலாட்சி. நிடத நாட்டு மன்னன் நளனின் ஆட்சி. பச்சைக்கிளியும் பருந்தும் ஒரே கூட்டில் பகைமை நீங்கி ஒன்றாய் வாழ்ந்த நாடு என்று ஒப்பற்ற நளனின் குளிர்ந்த நிலவைப் போன்ற ஆட்சியை வருணித்துப் பாடுகிறார் புகழேந்திப் புலவர். இது போன்ற கருத்துகள் நம் இளையோரின் உள்ளங்களில் பசுமரத்தாணிபோல் பதியாதா?

கர்ணன் கதை. வாக்குத் தவறாமை, வாக்குத் தூய்மை பற்றி இயம்புகிறது. நளனைப் பிரிந்த தமயந்தியின் கதை கணவனைப் பிரிந்த மனைவியின் துன்பநிலையை விவரிக்கின்றது. இலக்குமணன் வீழ்ந்து கிடப்பதைப் பார்த்த இராமனின் துக்க நிலை அண்ணன் தம்பி பாசத்தைக் கூறுகிறது. 'வெற்றி உன்றன் கைகளிலே' என்ற பாடம் துரோணர் - அர்ச்சுணன் - ஆசிரியர் - மாணாக்கன் கதையை விளம்புகிறது. மணிமேகலையின் சிறப்பு தெரிகிறது. எப்படி வாழக்கூடாது என்பதற்கு இராவணனின் கதை நல் உதாரணமாய் அமைகிறது. இவ்வாறாக, பல இதிகாசங்கள், புராணக் கதைகள், இலக்கியங்கள் இந்நூல்களிலே இடம்பெற்று நம் பண்பாட்டு விழுமியங்கள் அடுத்தத் தலைமுறையினரைச் சென்றடைய தடம் அமைக்கின்றன என்பதைப் பெருமையோடு பறைசாற்றலாம்.

5.1.2 உலகளாவிய நோக்குடைய இலக்கியங்கள்

மற்றொரு பாடம், பழந்தமிழரின் உலக நோக்கு. தொன்னெடுங்காலத்திற்கு முன்னரே தமிழில் இயற்றப்பட்ட இலக்கியங்கள் தமிழர்தம் வாழ்வை நன்கு படம் பிடித்துக்காட்டுகின்றன. இலக்கியம் காட்டும் பழந்தமிழர் வாழ்வியல் மாண்புகளைக் காணும்போது அவர்தம் பரந்து விரிந்த உலகக் கண்ணோட்டம் நமக்குத் தெளிவாகின்றது. நன்னோக்கமே தமிழரை வழிநடத்திச் சென்றது எனவும் இப்பாடம் கூறுகிறது. அமெரிக்க எழுத்தாளர் வெண்டல் வில்கி என்பவர் ஒரே உலகம் (One World) எனும் நூலினை எழுதியுள்ளார். அந்நூலில் 'எதிர்காலத்தில் நம் சிந்தனைகள் உலகை அளாவியதாக இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். இந்தக் கருத்து உயர்வானதொன்று என்று அமெரிக்கர்கள் பாராட்டுகின்றனர். ஆனால் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பழந்தமிழ்ப் புலவர் கணியன் பூங்குன்றனார்,

'யாதும் ஊரே யாவரும் கேளிர்'

என்று உலக மக்கள் அனைவரையும் ஒரே குடும்பமாக எண்ணிப் பாடிய உண்மையினை அறிந்தால் எத்துணை மதிப்பினையும் சிறப்பினையும் தமிழர்பால் கொண்டு பாராட்டுவர்.

மேலும்,

யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு (397)

என்ற குறளில் தெய்வப் புலவர் திருவள்ளுவர், கற்றவர்கள் உலகிற்கே உரியவர்கள் என்கிறார். இவை போன்ற கருத்துகள் நம்மை வியக்கச் செய்வதோடு தமிழரின் பண்பாட்டு விழுமியங்களை நம் வளரும் சந்ததியினர் அறியவும் மலேசிய இடைநிலைப் பள்ளித் தமிழ்க்கல்வி வழிவகுக்கின்றது.

5.2 தமிழ், இந்திய நாகரிகங்கள்

பழமையும் தொன்மையும் வாய்ந்த இந்திய நாகரிகம் பற்றிய பாடம் படிவம் ஒன்றில் இடம்பெற்றுள்ளது. இந்திய நாகரிகம் கம்போடியா வரை பரவி இப்பொழுது அங்கோர் வாட் பாழடைந்து கைவிடப்பட்டு கிடப்பது ஏன் எனும் கேள்வி மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுவதாக அமைந்திருக்கின்றது. மேலும், உலகில் வேறு எந்தெந்த நாடுகளுக்கு இந்திய நாகரிகமும் பண்பாடும் பரவியிருக்கிறது என்பதை மொழி, வழிபாட்டுத்தலங்கள், உணவுமுறை, கட்டடக்கலை, சமயம், பழக்க வழக்கம், உடை, வரலாறு குறித்த சான்றுகளோடு ஆராய்க என்ற தூண்டல், ஆழமானதொரு சிந்தனையைப் பதிக்கவல்லது. இதன் வழி நம் பண்பாட்டின் வேரையும் அது பரவிக்கிடக்கும் ஆழத்தையும் உணர்ந்து பெருமைகொள்வதோடு அதனைப் போற்றிக்

காக்கவும் முனைவார்கள். இவ்வாறாக, நம் பண்பாட்டின் வேர்களை மாணவர்கள் அறியவும் இப்பாடத்திட்டமும் பாடநூல்களும் வழிசெய்கின்றன.

மொரிசியஸ் மக்கள் தமிழை மறந்திருப்பதற்கான காரணங்களை ஆராய்ந்து பட்டியலிடுதல், அங்கு தமிழ் மொழியையும் பண்பாட்டினையும் வளர்க்க மேற்கொள்ளத்தக்க திட்டங்களைக் கூறுதல் போன்ற அணுகுமுறைகள் மாணவர் எதிர்காலத்தில் நம் தாய்மொழியாம் தமிழுக்கு அப்படியொரு நிலை ஏற்படக்கூடாது என, வளரும் பிஞ்சு உள்ளங்ககளை எச்சரிப்பதாகவும் தமிழர் தம் பண்பாடுகளைக் காக்க வழி செய்வனவாயும் அமையும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

5.3 திருவிழாக்கள், பெருநாட்கள்

படிவம் 1 பாடப்புத்தகத்தில் தைப்பொங்கல் என்ற கவிதை இடம் பெற்றிருக்கிறது. அதில் பொங்கலைக் கொண்டாடும் முறை கூறப்படுகிறது. கவிதையை உய்த்துணரும் தருணத்தில் தேவையான பொருட்களான புதுப்பானை, செங்கல், விறகு, மஞ்சள் கொத்து, அரிசி, சர்க்கரை, நெய் போன்ற பொருட்கள் கூறப்படுகின்றன. வாசலில் போடப்படும் கோலம், கட்டப்படும் தோரணம், மாவிலை, கரும்பு பற்றியும் அறியமுடிகிறது. மேலும், பொங்கலுக்கு முதல் நாள் கொண்டாடப்படும் போகிப்பண்டிகை பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. பழையன கழிதலும் புதியன புகுதலும், மாடு கன்று போற்றுதல், கூட்டுப் பொங்கல், விருந்தினரைச் சென்று காணல் (காணும் பொங்கல்) போன்ற சொற்கள் நம் பண்பாட்டின் மதிப்புகளைக் காட்டவல்ல பல தகவல்களைக் கூறுகின்றன. வளரும் தலைமுறையினரிடையே தமிழர் பண்பாட்டுச் சொற்களும் விழுமியங்களும் மறையாது நிலைத்திருக்க இப்பாடங்கள் துணை செய்யும் என்பது திண்ணம்.

5.4 தமிழர் வாழ்வியலும் பண்பாட்டு விழுமியங்களும்

காணி நிலம் வேண்டும் என்ற பாரதியாரின் பாடல் படிவம் 3 பாடப்புத்தகத்திலே இடம்பெற்றிருக்கிறது. இக்கவிதை அமைதியான வாழ்வுக்குக் காணி நிலமே போதும் என்ற பொருளை உணர்த்தி நிற்கின்றது. காணி நிலம், அதன் அருகே கேணி, பத்துப் பதினைந்து தென்னை மரங்கள், இளம் தென்றல், நிலாவொளி முற்றத்திலே, அங்கே கத்தும் குயிலோசை கேட்க வேண்டும். குயிலோசையைக் கேட்க வேண்டும், இளம் தென்றல் வீச வேண்டும் என்றால் சுற்றிலும் பசுமை நிறைந்திருக்க வேண்டும். 'அந்தக் காட்டு வெளியிலே அம்மா நின்றன் காவல் வேண்டும்' என பாரதியார் சக்தியைப் பார்த்துப் பாடுவதாகவும் அமைந்த இந்தப் பாடல் இயற்கையோடு இயைந்த வாழ்வை நம் முன்னோர் எவ்வாறு அனுபவித்திருக்கிறார்கள், விரும்பினார்கள் என்பதையும் இறையருளை வேண்டி வாழ்ந்த அமைதியான வாழ்வையும் படம் பிடித்துக் காட்டுகிறது. 'காணி நிலம்', 'நிலாவொளி முற்றத்திலே', 'அம்மா' (பராசக்தி) என்றெல்லாம் நம் முன்னோர்கள் போற்றிய எளிய அமைதியான வாழ்க்கை, இயற்கையோடு ஒன்றிய வாழ்க்கை, இறை பக்தி போன்ற வாழ்வியல் மதிப்புகள் தெரிகின்றன. இதுபோன்ற பாடங்கள் மாணவப் பருவத்தினரைப் பக்குவப்படுத்தி எதிர்காலத்திற்குத் தயார்செய்ய வல்லவை என்றால் இங்கே பண்பாட்டு விழுமியங்களைப் பேணிக்காப்பதில் தமிழ்க் கல்வி பங்காற்றுகிறது என்றுதானே பொருள்.

பாரதியார் மேலும்,
வயிற்றுக்குச் சோறிட வேண்டும்- இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்
பயிற்றிப் பலகல்வி தந்தே- இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்
என்று, உலகில் வாழும் மக்கள் அனைவரும் பசியற்று வாழ்ந்து, கல்வி கற்கும் வசதி பெற்று, அதனால் உலகை உயர்த்தும் திருப்பணியில் தலைப்படவேண்டும் என்கிறார். இவ்வாறு காலந்தோறும் தமிழ்ச்சான்றோர்கள் பரந்துபட்ட உலக நோக்கிலேயே நின்று உலகுயிர் அனைத்தையும் ஓரினமாகக் கண்டு வாழ்வாங்கு வாழ்ந்த இவ்வுண்மைகளை இப்பாடல்கள் எடுத்தியம்புகின்றன. இது போன்ற கவிதைகளின் மொழிச்சிறப்பு, குறளடிகளின் தெய்வீகம் இளம் உள்ளங்களிலே நம் பண்பாட்டினைப் பதிப்பதில் நிச்சயம் வெற்றி பெற்றிருக்கும் என்று ஆணித்தரமாகக் கூறலாம்.

5.5 தமிழர் உணவுமுறையும் உடல் நலமும்

நலம் தரும் தமிழர் உணவுகளைப் பேசுகின்றன மலேசிய தமிழ்ப் பாடப்புத்தகங்கள். தமிழர் உணவு வகைகளும் இயற்கை மருந்துகளும் அதன் பெயர்களும் இன்று மறைந்துவருகின்றன என்றே சொல்லலாம். இச்சூழலில் தமிழர் பாரம்பரிய உணவுகளை இப்பாடங்கள் அறிமுகப்படுத்துவதோடு ஆரோக்கியமான வாழ்விற்கும் வித்திடும் வகையில் பாடத்திட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது. துளசி, வேப்பிலை, வெற்றிலை, மஞ்சள் போன்ற இயற்கைப் பொருள்களின் பெயர்களும் மகிமையும் தமிழர் வாழ்வில் ஒன்றிவிட்ட பாரம்பரியமும் மறக்கப்படாமல் இருக்க இப்பாடப்புத்தகங்கள் வழிவகுக்கின்றன. சித்த மருத்துவம், மூலிகைப் பெயர்கள் போன்றவற்றை மலாய் ஆரம்பப் பள்ளியில் இருந்து வந்த மாணவர்களும் பேசுகிறார்கள் என்றால், அதில் இடைநிலைப் பள்ளித் தமிழ்க்கல்வியின் பங்கும் இருக்கிறது என்று கூற முடியும்.

5.6 இறை நம்பிக்கை ஊட்டுகிறது

இறை பேராற்றல் என்ற பாடம் (படிவம் 2) இந்த இயற்கையின் சுழற்சி, கோள்கள், இவற்றின் இயக்கம், அதனை இயக்குபவர் யார் என்ற புதிர்களுக்கு,

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக
என்று கூறும் பொய்கை ஆள்வாரின் நாலாயிரத்திவ்யப்பிரபந்தம், உலகை இயக்கும் பேராற்றல் இறைவனே என அழகுற விளக்கி நிற்கின்ற காட்சியைத் தெளிவுறுத்துகிறது.

மேலும், படிவம் ஒன்றில் 'விறகில் தீயினன் பாலில் படுநெய்போல்' என்ற திருமுறை, படிவம் மூன்றிலே திருவருட்பா ஆகியவை இறைநம்பிக்கையை ஊட்டுவனவாய் அமைந்து இளநெஞ்சங்களிலே பதியவும் பக்தி மொழியாம் தமிழ்மொழி வகைசெய்கிறது. இதன்வழி இறை நம்பிக்கை அடுத்த தலைமுறையினரைச் சென்று சேர்கின்றது என்பது இன்னொரு சான்று.

5.7 மொழியணி

தமிழ் மொழியில் நெடுங்காலமாகச் சிறந்து விளங்கும் பழமொழிகள், உவமைத்தொடர்கள், மரபுத் தொடர்கள், இணைமொழிகள் போன்ற மொழியணிகள், உதாரணமாக 'மணியும் ஒலியும் போல', 'பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும்', 'அவனன்றி ஓரணுவும் அசையாது, போன்ற மொழியணிகள் நம் பண்பாட்டிற்கு மட்டுமே சொந்தமானவை. இவற்றின் வழி பாரம்பரியமும் பாண்பாடும் அறிய முடிகிறது.

5.8 தமிழ்மொழியின் சிறப்பு

ஒரு பண்பாட்டின் அடையாளத்திற்கு மொழியே முக்கியமாக இருக்கிறது. தமிழ் நம் தாய்மொழி; தொன்மையானது. அதன் தொன்மையையும் ஆழத்தையும் அகலத்தையும் எழிலையும் ஓரளவுக்கேனும் இளைய தலைமுறையினர் அறிந்து போற்றவேண்டும் என்பதில் பாடத்திட்டக் குழுவினர் கவனமாய்ச் செயல்பட்டிருப்பதும் தெரிகிறது. தமிழ், தமிழ் எனக் கூற அஃது அமிழ்து என ஒலிக்கும் எனக்கூறி மகிழ்ந்தவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். தன்னைப் பித்தன் என்று சுந்தரமூர்த்தி நாயனார் வைதபொழுது, இறைவன் பெரிதும் மகிழ்ச்சியடைந்தாராம். காரணம் 'தமிழால் வைதான்' என்பதால் (படிவம் 3). இது போன்ற பாடங்கள் தமிழின் சிறப்பையும் மறைமுகமாக இறை மாண்பினையும் மொழியின் மீது பற்றுதலையும் இளம் உள்ளங்களிலே விதைப்பதாய் அமைகின்றன. அவ்விதைகள் விருட்சமாய் வளரும். இங்கே பண்பாட்டு விழுமியங்கள் பேணப்படுகின்றன என்பது நிரூபணமாகின்றது.

5.9 திருக்குறள்

எக்காலத்திற்கும் நல்வழி காட்டும் தெய்வப் புலவரின் திருக்குறள் இப்பாடத்திட்டத்திலே அமைந்திருப்பதுதான் எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாய் அமைந்திருக்கிறது எனலாம். இன, மத வேறுபாடுகளைக் கடந்து தமிழினத்தின் உயரிய விழுமியங்களைக் கூறும் நூல் இது. மகனின்

கடமை, ஒரு தந்தையின் கடமை, நல் நட்பு, நாவடக்கம், நல்லொழுக்கம், நன்றி, புகழ்பட வாழ்தல், ஊக்கம், வாய்மை, உலக அறிவு, சான்றாண்மை போன்ற முத்துக்குள் முத்தான குறள்களைத் தேர்ந்தெடுத்து மாணவர்கள் அவற்றை அறிந்து உணர்ந்து வாழ்வில் கடைபிடிக்கவும் இடைநிலைப் பள்ளித் தமிழ்க்கல்வி பங்காற்றுகிறது.

5.10. அறம் காட்டும் பிற நூல்கள்

மேலும், விவேக சிந்தாமணி, நள வெண்பா, சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்ப இராமாயணம், நன்னூல் போன்ற இலக்கிய நூல்களும் பண்பாட்டு விழுமியங்களைப் புகட்டுவதில் முதன்மைப் பங்கை வகிக்கின்றன. இவற்றைப் பாடத்திட்டத்திற்கு ஏற்ப பாடப்புத்தகங்களில் புகுத்தி நூலாசிரியகளும் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

6 தமிழ்க்கல்வியின் வழி ஏற்பட்டிருக்கக் கூடிய சாத்தியக்கூறுகள்

இடைநிலைப் பள்ளியின் தமிழ்க்கல்விவழி கற்ற பாடங்களைப் பார்த்தோம். இனி அக்கல்வி விளைவித்திருக்கக் கூடிய நன்மைகளையும் பேணிக் காத்திருக்கக்கூடிய தமிழ்ப்பண்பாட்டுக் கூறுகளையும் விழுமியங்களையும் சிந்திப்போம்:

1 தமிழர் வாழ்வியல் நெறிகள்
2. நன்மை தீமைகள்
3. குடும்ப அமைப்பு
4. நேர நிர்வாகம்
5. பேசும் மொழி
6. பிறருடன் நல்லிணக்கத்துடன் வாழ்தல்
7. ஆண் பெண் உறவுகளின் வரையறை
8. உணவுப் பழக்கங்கள்
9. தலைமைத்துவத்தை மதித்தல்
10. நகைச்சுவையின் வரையறை
11. சமயம்
12. ஆடை அணிகலன்கள்
13. நாம் எனும் குழு உணர்வு
14 ஆழ்மனதின் வெறுமைகளை நிரப்புதல்.
15. கலைகளைப் போற்றி ஆத்ம திருப்தி அடைதல்
16. பாரம்பரியத்தின் சிறப்பு, ஆழம், மதிப்புகள் வழி இளையோரை நன்னெறிப்படுத்துதல்
17. பண்பாட்டின் சிறப்பைக் கட்டிக்காத்தல்
18. பின்பற்ற தடம் அமைத்தல்
19. உடல், உள ஆரோக்கியத்தைப் பேணுதல்
20. சார்ந்திருக்க ஓர் சமூக அமைப்பு இருக்கிறதே என்ற மனோதைரியம்.
21. எதிர்காலத்திற்குத் தயார்படுத்துதல்
22. மனம் அமைதி பெற வழிவகுத்தல்.
23. இதிகாசங்கள், இலக்கியங்கள் மூலம் முன்மாதிரியானவர்களைப் பின்பற்ற வழியமைத்தல்.

மொழிக்கற்றலில் பண்பாடும் பண்பாட்டு விழுமியங்களும் காக்கப்படுகின்றன. பண்பாட்டுச் சொற்கள் மறையாமல் நிற்க, மொழி வளர, பண்பாடு சார்ந்த இலக்கியமாக இருப்பின் அது மொழிக்கற்றல் கற்பித்தலுக்கு இரட்டிப்பு நன்மையைத் தருகிறது என்பது திண்ணம். பண்பாடு சார்ந்த மொழிக்கற்றல் கற்பித்தலில் மொழியைக் கற்கும் தருணத்தில் பண்பாட்டினையும் மறையாமல் பாதுகாக்க இயலுகிறது. மொழியையும் அது சார்ந்த பண்பாட்டினையும் பிரித்துக் கற்க இயலாது. பண்பாட்டுக் கூறுகளை மொழி வழியாகவும், மொழியைப் பண்பாட்டுக் கூறுகள் வழியாகவும் கற்க இயலும். பண்பாடு நிறைந்த மொழித்திறனே எதிர்காலத்தில் அன்றாட வாழ்வில் தகவல்களைச் சீர்தூக்கிப் பார்த்து, சூழலுக்கு ஏற்பத் தரமான மொழியில் கருத்துகளை வெளியிட உதவும்.\\

7 முடிவுரை.

மலேசியாவில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் தமிழ் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகிறது என்றால் அவ்வுயர் கல்விக்கு மாணவர்களைத் தயார் செய்யும் பணியை இடைநிலைப் பள்ளித் தமிழ்தான் நிறைவு செய்கிறது என்பதைச் சொல்லவும் வேண்டுமா? ஒவ்வொரு தலைமுறையினரும் இடைநிலைப் பள்ளிக் காலக்கட்டத்தைக் கடந்துதான் ஒரு சமுதாயத்தின் அங்கமாகிறார்கள். இன்று நம்மிடையே தமிழ் அறிஞர்களும் தமிழ் சான்றோர்களும் அதிகமாகவே இருக்கிறார்கள் என்றும் கூற இயலும். உலகமயச் சூழலில் பல்வேறு தாக்கங்கள் இருப்பினும் இன்று தமிழ்ப்பண்பாடும் அதன் விழுமியங்கஎளும் நம் தமிழ் மக்களைச் சென்று அடைந்திருக்கின்றன, அவை பேணிக்காக்கப் படுகின்றன என்று கூற இயலுமாயின் பண்பாட்டு விழுமியங்களைப் பேணுவதில் மலேசிய இடைநிலைப்பள்ளித் தமிழ்க்கல்வியின் பங்கும் பணியும் அளப்பரியது என்று உறுதியாய்க் கூறலாம். இவ்வேளையில், பாடத்திட்டத்திற்கு ஏற்பத் தரமான பாடப்புத்தகங்களை உருவாக்கித் தந்த ஆசிரியர்களுக்கும் கல்வியாளர்களுக்கும் மலேசிய தமிழ்ச் சமுதாயம் என்றும் கடமைப்பட்டுள்ளது.

மேற்கோள்கள்

1. ஆசிரியர் வழிகாட்டி நூல் படிவம் 1 முதல் 5 வரை
2. தமிழ்மொழி பாட நூல் படிவம் 1 முதல் 5 வரை
3. என்.எஸ். ராஜேந்திரன், (2008). ஆசிரியம்
4. கே.பி. எஸ்.எம். பாடத்திட்டம்
5. இடைநிலைப்பள்ளிகளுக்கான இலக்கண இலக்கிய விளக்கவுரை
6. பிரிட்டானிக்கா தகவல் களஞ்சியம்- Tamil Edition II (2008)
7. இணையத் தளங்கள்

தமிழ்மொழி - தொடக்கக்கல்வி - கற்றல் - கற்பித்தல் ஓர் ஆய்வு

முனைவர். பி.ஆர் இலட்சுமி, தமிழ்த்துறை வல்லுநர்

அறிவியல் வளர்ச்சியின் முன்னேற்றம் காரணமாகத் தமிழ்மொழி எகற்றல் - கற்பித்தலில் பல இடர்பாடுகள் ஏற்படுகின்றன. இன்றைய காலகட்டத்தில் தமிழ் மொழியைக் கற்க மாணவர்கள் மறுக்கும் நிலை உருவாகியுள்ளது. தமிழ்மொழியின் எழுத்துகளைச் சரிவரக் கற்காததினால் மாணவர்களின் படைப்புத்திறன் குறைந்துள்ளது. இதற்குத் தொடக்கக்கல்வியில் கற்றல்-கற்பித்தல் சிறப்புற நிகழ்தல் அவசியமாகிறது. இதன்வழி வகுப்பறையில் தமிழ்மொழியின் கற்றல்திறன் அதிகரிக்கும். தொடக்கநிலைக் கல்வியில் தமிழ் கற்றல்- கற்பித்தல் குறித்து இவ்வாய்வுக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

மொழி கற்றலின் நோக்கம்

மொழி கற்றலின் நோக்கம் பண்பாட்டை அறிந்து அதன்வழி நடத்தல், மொழியறிவை வளர்த்தல், சொற்களஞ்சியத்தைப் பெருக்குதல், தெளிவான முறையில் எழுதுவதற்கு உரிய ஆற்றலை வெளிப்படுத்துதல், தன்னை உணர்ந்து தானே நிற்றல் போன்றவையாகும். "எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ, மன வலிமையை வளர்க்கச் செய்யுமோ, விரிந்த அறிவைத் தருமோ, ஒருவனைச் சுயவலிமையைக் கொண்டு ஏற்கச் செய்யுமோ அத்தகைய கல்விதான் நமக்குத் தேவை" என்ற சுவாமி விவேகானந்தர் கருத்துப்படி ஆசிரியர் கற்பித்தலை நடத்துதல் இன்றியமையாதது.

மொழி கற்பித்தலின் நிலைகள்

❖ திட்டமிடல், வழங்கல், விளக்கல், படிகள், மதிப்பிடல் எ *மொழி கற்பித்தலின் நிலைகள்* எனக் குறிப்பிடப்படுகிறது.

திட்டமிடல், வழங்கல், விளக்கல் போன்றவை விளையாட்டு முறையில் அமைந்தால் தொடக்கக்கல்வி நிலையில் தமிழ்மொழி கற்றல் சிறப்புடன் அமையும்.

1. கேட்டல்	2. படித்தல்	3. பார்த்தல்	4. எழுதுதல்	5. நுகர்தல்
6. பகுத்தாய்தல்	7.தொடர்புடைய இணையைத் தேடுதல்	8.கருத்து உருவாக்கல்	9.வண்ணம் பற்றிய கருத்து	10. வடிவம்

போன்றவை தொடக்கக்கல்வி நிலையில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

முறையில் கற்பித்தல் ஆசிரியரின் கடமையாகிறது. தமிழ்மொழி கற்பித்தலில் விளையாட்டுமுறை, நடிப்புமுறை, மேற்பார்வைப் படிப்புமுறை, செயல்திட்டமுறை, ஒப்பந்தமுறை, கண்டறி முறை, உரையாடல் சொற்பொழிவுமுறை, திட்டமிட்டதைக் கற்றல்முறை, மொழிப் பயிற்றாய்வுக்கூடமுறை, கட்டுரை படித்தல், பலர் கருத்துகளைத் திரட்டல், செயல்முறைக் கருத்தரங்கு, சொற்போர் போன்றவை பின்பற்றப்படுகின்றன.

மாணவன் சுயமாகச் செயல்படுதல், படைப்பாற்றல், சமூகப் பங்கேற்பு இம்மூன்றிலும் சிறந்தோங்கும் முறையில் தொடக்கக் கல்வி அமைதல் வேண்டும்.

- மாணவர்களுக்கு ஆர்வமானவற்றைக் கற்பித்தல்
- எளிமையான முறையில் ஆசிரியர்கள் பாடப்பொருளை அமைத்தல்.
- நேர்முறை – சொல்லுக்கு முன் பொருள் – பருப்பொருள் கொண்டு கற்பித்தல்.
- விதி, தத்துவம் முதலில் கூறி விட்டு உதாரணம் கொடுத்து விளக்குதல்.
- ஒன்றைப் புரிந்து கொண்ட பின்னரே அடுத்த பகுதிக்குச் செல்லுதல்
- ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்திக் கற்பித்தல்.
- துண்டு துண்டான கருத்துக்களைக் கூறாமல் முன் நடத்தியதுடன் தொடர்பு படுத்திக் கற்பித்தல்.
- நடைமுறையில் பயன்படுத்தக் கூடியவற்றைக் கற்பித்தல்.
- பல கருத்துக்கள் இருப்பின் அவற்றை வரிசைப்படுத்தி ஒவ்வொன்றாகக் கற்பித்தல்.

போன்ற கற்பித்தலின் முறையின்படி கற்றல் நடைபெறுதல் வேண்டும்.

மொழி கற்பிப்பதில் உரையாடல் பயிற்சி

மொழி கற்பிப்பதில் உரையாடல் பயிற்சி இன்றியமையாததாகும்.

- இயல்பாகவும் தொடர்ச்சியாகவும் உரையாடுகிற திறன்
- சரியான உச்சரிப்புடன், தெளிவாகப் பொருள் விளங்குமாறு உரையாடுதல்
- செய்திகளை நுட்பமாகத்திரட்டி, உடல் அசைவுடன் விளங்குகிற உரையாடல்
- நிகழ்ச்சிகளையும், சூழ்நிலைகளையும் அப்படியே கண்முன் காட்டுகிற வகையிலான உரையாடல்.
- உரையாடலைப் பதற்றமில்லாமல், தெளிவாக, நுட்பமாகப் பயிற்றுவித்தல்.

போன்றவற்றில் தொடக்கக்கல்வி ஆசிரியர் திறன் பெற்றிருத்தல் வேண்டும்.

துணைக்கருவிகள்

துணைக்கருவிகள் இல்லா வகுப்பறை மலர்களில்லாத் தோட்டம் போன்றது. துணைக்கருவிகளின் தெளிவு பற்றிய தரவுகள் தெளிவுபடக் கிடைக்காமையே காரணம் எனலாம். தொடக்கக்கல்வி நிலையில் பாடப்பொருளுக்கு ஏற்ற

- மின்அட்டை
- சுழல் அட்டை
- கரும்பலகைப் பயன்பாடு
- உள்ளரங்க, வெளியரங்க விளையாட்டுத் துணைக்கருவிகள்
- ஆசிரியரின் கற்பனைக்கேற்ற வகையில் சுயமாகத் தயாரித்த பாடப்பொருள் தொடர்பான துணைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றின் வழியே தமிழ் கற்பித்தல் நடைபெறுவதால் மாணவன் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் போன்ற திறன்களை எளிதில் அடைய இயலுகிறது.

இணையம் வழி தமிழ் கற்பித்தல்

தமிழ் எழுதும் முறை (மென்பொருள் பயன்பாடு), மின்அட்டை, இதழ்கள், மின் புத்தகங்கள், அசைவூட்டம், வலைப்பூக்கள் தொடர்பு போன்ற நிலைகளில் இணையம் வழியாகத் தமிழ் கற்பித்தல் நடைபெறுகின்றன. இச்சூழ்நிலையில் தமிழாசிரியருக்கு இணையம் பற்றிய முழுமையான தெளிவு நிலை அவசியமாகிறது. அமெரிக்கா, தென்ஆப்ரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற பல நாடுகளில் வசிக்கும் புலம் பெயர்ந்த தமிழர்கள் தமிழ்மொழி கற்கப் போதுமான வசதிகள் இல்லை. இச்சூழ்நிலையில் பல நாட்டினரும் தமிழ்மொழியினைக் கற்க இணையவழித் தமிழ்க் கல்வி அவசியமாகிறது. தமிழ் பேசும் இந்தியநாடு, சிங்கப்பூர், மலேசியா, ஸ்ரீலங்கா போன்ற நாடுகளிலும் இணையவழி தமிழ்க்கல்வி சிறப்பாக நடைபெற்று வருகிறது.

ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்கள்

சுவாமி விவேகானந்தர் (1863 – 1902) வெறும் புத்தகம் படிப்பது மட்டும் படிப்பன்று குழந்தைகளின் உள்ளார்ந்த ஆற்றலைத் தானாக மலரச் செய்வதே கல்வி என்றார். இன்றைய நிலையில் தமிழ்மொழி கற்பித்தலில் ஆசிரியர் வெறும் மனப்பாட மந்திரத்தை உருவேற்றும் கருவிகளாக மாறியுள்ளனர். இதன்விளைவாக மாணவர்களின் படைப்பாற்றல் திறன் வெளிப்பாடு மிகவும் குறைந்து வருகிறது. இவ்வுலக வாழ்க்கைக்குத் தேவையான பணம் ஈட்டுதலின் பொருட்டு அதற்குத் தேவையான பாடங்களைக் கற்கும் மாணவர்கள் தமிழ் படிப்பதைச் சுமையாகக் கருதுகின்றனர். தமிழ் படிப்பது வெறும் பண்பாட்டினைப் போதிக்கும் ஏட்டளவுக் கல்வியாய் மாறி இருப்பதைக் காரணமாகக் கருதலாம். இத்தகைய சூழ்நிலையில் கற்பித்தலில் தமிழாசிரியரின் கடமை மிகவும் இன்றியமையாததாகிறது.

மாணவர்களின் கவனத்தைத் திசை திருப்ப நவீன அறிவியல் சாதனங்கள், பொழுதுபோக்கு அம்சங்கள் இவற்றினூடே பாடம் என்பது மாணவனுக்கு மிகவும் கடினமான கற்றல் முறையாகிறது. எனவே, அறிவியல் முறைகளுக்கேற்பத் தமிழாசிரியர்களும் அறிவியல் தொடர்பானவற்றை அறிந்து

கொள்வது அவசியமாகின்றது. எதையும் இணையம் வழி அறிந்து கொள்ளும் மாணவர் சமூகத்தினைத் தமிழ்ப்பண்பாட்டினை அறிந்து அதன்வழி தனது வாழ்க்கைப் பாதையினை அறிந்து கொள்ள இணையவழி தமிழ் கற்பித்தலும் அவசியமாகிறது.

இணையம் வாயிலாகக் கற்பித்தலின்போது

- ❖ கணினியில் ஏற்படும் பிரச்சினைகள்
- ❖ மென்பொருள் பற்றிய பயன்பாடு - அறியாமை
- ❖ எழுத்துருப் பிரச்சினைகள்
- ❖ அகராதிகளைத் தெளிவுறப் பார்க்கும் நேரமின்மை

போன்ற காரணங்களினால் இணையம் வழி - தமிழ் கற்பித்தல் நடைபெற சிக்கல்கள் ஏற்படுகின்றன. கணினி பற்றிய போதிய தெளிவுபெற www.eegarai.net, velanblogspot.com போன்ற வலைத்தளங்களைப் பயன்படுத்தலாம்.

- ❖ நழுவல் தயாரிப்புகள்
- ❖ அசைவூட்டம்
- ❖ ஒளி, ஒலி வடிவத் தயாரிப்புகளைத் தரவேற்றம் செய்யக் கற்றுக் கொள்ளுதல்

போன்றவற்றை ஆசிரியர்கள் கற்பித்தல் திறனில் வெளிப்படுத்துவதால் மாணவர்களின் கற்றல் திறன் அதிகரிக்கும்.

மாணவர்கள் எழுதுவதற்கான பயிற்சிமுறை கற்பிக்க

- ❖ **www.tamil virtual academy.org**
- ❖ **www.kidzone.com**
- ❖ **www.pollachinasan.com**
- ❖ **www.unltd.com**
- ❖ கலிஃபோர்னியப் பல்கலைக்கழகம்

போன்றவை சிறப்பான முறையில் இயங்கி வருகின்றன.

இன்றைய மாணவர்கள் வரைகலைப் பயிற்சியை அதிகமாக விரும்புகின்றனர். Coolpaint, Kea colouring setup, Drawing for children, kea colouring book 3.7.0, paintslate (BENDIGE DESIGN) போன்ற மென் பொருட்களின் வாயிலாகப் பலவித வடிவங்களில் பயிற்சித்தாள் உருவாக்கலாம். மாணவனையும் படைப்பாற்றல் திறன் நிறைந்த பயிற்சித்தாளினை உருவாக்கம் அளிக்கப் பயிற்சி அளிக்கலாம். 'படைப்புச் செயல்களின் சிறந்த வெளிப்பாடே விளையாட்டு' எனக் கல்வியாளர் நன் (NUNN) குறிப்பிடுகிறார். அறிவியல் வளர்ச்சியின் வெளிப்பாடு தமிழ் மொழியில் வெளிப்படுமாயின் வகுப்பறையில் தமிழ்மொழியின் கற்றல்திறன் அதிகரிக்கும் என்பது இவ்வாய்வின் முடிவாகிறது.

தமிழ்க் கற்பித்தல் நிகழ்வில் 'துணையெழுத்துப் பயன்பாடுகள்'

முனைவர் ஆ.பூமிச்செல்வம், அமெரிக்கன் கல்லூரி, மதுரை

கடந்த ஈராயிரமாண்டு கால நகர்வில், தமிழ் எழுத்துக்களின் அமைப்புகள் குறித்தான, பன்முகப்பட்ட செயல்முறைகளானவை பற்பல விதங்களில் முன்னெடுக்கப்பட்டு வரப்பட்டுள்ளன. காலத்தின் தேவைகளுக்கேற்ப, புதிய புதிய தொழில் நுட்பங்களின் வருகைக்கேற்ப தமிழெழுத்துக்களுங்கூடத் தம்மை உருமாற்றிக் கொள்ள வேண்டிய நிர்பந்தம் இருந்தே வருகிறது. இத்துடன், தமிழ் வரிவடிவத்தில் மாற்றமும் திருத்தமும் மேற்கொள்ள வேண்டியமை என்பது காலத்தின் கட்டாயமாகவும் அமைகிறது. இவ்வாய்வில் நாம் விவாதிக்கவிருப்பது, வளமையாக - தமிழ் மொழிச் சான்றோர்களால் கவனத்திற் கொள்ளப்பட்டு, அன்றாட நடைமுறையில் பெரிதும் சிலாகிக்கப்பட்டு வரும் 'தமிழின் முதன்மை எழுத்துக்கள்' குறித்தானதல்ல! இவ்வெழுத்துக்களானவை தோன்றிட, திரிந்திட இன்னும் பலவிதமான இஸவாத மாற்றங்களைப் பெற்றிட ஊடுபாவாகத் தொழிற்படும் 'துணையெழுத்துக்களைப்' பற்றியேயாம்.

தமிழ்ச்சூழலில், 'துணையெழுத்துக்கள்' என்பன, பலராலும் பேசப்பட்ட, பன்முக விவாதங்களுக்கெனத் தேர்ந்து கொள்ளப்பட்ட, காலந்தோறும் திருத்தங்களுக்குட்பட்ட, சீரமைப்புகளுக்காட்பட்ட செயல்நிலைகளைத் தனக்கெனப் பெரிதும் கொண்டிருக்கவில்லை. ஆகையால், இவ்வெழுத்துக்கள் குறித்துப் பேசுவது, விவாதிப்பது, புதிய மெய்மைகளைக் கட்டமைப்பது நடப்புக்காலத் தேவையாகிறது. எனவே, இவற்றைக் கருத்திற் கொண்டு, தமிழில் துணையெழுத்துக்களின் பயன்பாட்டு முறைமை' குறித்து ஆய்ந்தறிந்து விளம்புவதாக இவ்வாய்வு அமையலுறுகிறது.

துணையெழுத்துச் சீரமைப்பின் நோக்கம் :

துணையெழுத்துக்களைச் சீரமைத்தல் என்று கூறும் போது, இதனை எதற்காக, யாங்ஙனம் சீரமைப்புச் செய்யப் போகிறோம் என்பதை முதலில் தெளிவுபடுத்துதல் முறையாகும். இவ்விடத்து நாம் முன்வைக்க விரும்பும் மாற்றத்தின் பரிமாணம் என்பது, தமிழில் துணையெழுத்துக்களின் எண்ணிக்கையை, இவ்வெழுத்துக்களானவற்றை இதுநாள் வரைத் தவறாகப் பெயரிட்டு அழைக்கின்ற செய்கை, தற்காலம்வரைத் தவறுதலாகவே எழுதிவருகின்ற நிலைமை ஆகியனவற்றில் அவசியம் மேற்கொள்ளப்படவேண்டிய செயல்நிலைகளை வரையறுப்பதற்கேயாகும்.

துணையெழுத்துக்களைச் சீரமைப்பதன் தேவை :

தமிழ்மொழியினைக் கற்பதை முதன்மை நோக்கமாகக் கொண்டு செயலுறும் ஒரு புதுமுகப் பள்ளிக் குழந்தையோ அல்லது வேற்றுமொழிப் புலத்தைச் சார்ந்தவரோ, தமிழ் உரைநடையைமுறையாக எழுவதற்கு அடித்தளமாய் அமைகின்ற 'தமிழ் நெடுங்கணக்கு' அட்டவணையை நோக்கும் பட்சத்தில், இவர்கள் சிற்சில பிரச்சினைகளை எதிர்கொள்ள நேர்கிறது.

குறிப்பாக, உயிரெழுத்துக்கள் பன்னிரெண்டில் இரட்டை எழுத்துக்களால் ஆகிய ஊகார, ஔகாரங்களைக் கண்ணுறும்போது பெருங்குழப்பமடைகின்றனர். அடுத்ததாக, உயிர்மெய் எழுத்துக் குறியீட்டு வரிசைகளில், இடஞ்சுழி, வலஞ்சுழி, மேல் மற்றும் கீழ் இணைப்பிழுவைக் கோடுகளை அணுகி, அகன்றபின் (ா, ூ, ர, ெ, ே. ை, ள - ஆகிய துணையெழுத்துக் குறியீடுகளைக் (ஈரெழுத்துக் கூட்டாக.·. மூவெழுத்துச் சேர்க்கையாக - வே.·. கௌ ... எனச் சேர்ந்து இருக்கும்)-

கண்டு அவதானிக்க நேர்கையில் பெருங்குழப்ப நிலையை எய்துகின்றனர். இவ்விதக் குழப்பங்களுக்கு இவர்கள் தெளிவும் தீர்வும் காணவேண்டுமாயின், எவ்வித வழிகாட்டுதலும் இந்நாள் வரை இருக்கவில்லை எனும் செய்தி அதிர்ச்சியூட்டுவதாக அமைகிறது. செம்மொழியாகிய தமிழ் மொழிக்கு இலக்கணம் வகுத்துள்ள இலக்கணிகளோ அல்லது தற்காலத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தாரோ இதற்கான விளக்கங்களை இந்நாள்வரைத் தந்திருக்கவில்லை எனும் விடயம் விநோத மனநிலையை எட்ட வைக்கிறது.

எனவே, தொல் பழங்காலந்தொட்டு, வாய்மொழியாக மட்டுமே பிரயாணித்து வந்துள்ள இத் துணையெழுத்துக்களுக்கான பெயரிட்டழைக்கும் முறையையோ, எழுதுதல் முறையையோ இன்று மாற்றியமைத்துச் சீராக்குதல் வேண்டும் என்பது நடப்பு நாளுக்கான அத்தியாவசியத் தேவையாக அமைந்து விடுகிறது.

மரபுவழிப்பட்ட.ஃ. வாய்மொழி வழக்காறு வழிவந்த துணையெழுத்துப் பயன்பாட்டு வழமைகள்:

தமிழ் வரிவடிவத்திற்கு முன், ஒலி வடிவமே தொடக்கத்தில் இருந்துள்ளது. இதன் வழியே மட்டுமே கேட்டல், மணங் கொள்ளல், ஒப்புவித்தல் என்கின்ற அடிப்படைச் செயல்பாடுகள் அரங்கேறியுள்ளன. காலநகர்வில் தமிழ் வரிவடிவமானது உருப்பெற்றுள்ளது. இவ்வெழுத்துருவாக்க அமைப்புங்கூட எழுதும் கருவி, எழுதப் பயன்படுத்தும் பொருள், எழுதுகிற நபரின் இரசனை, அவ்வப்போது நிகழும் கலாச்சாரத் தாக்கங்கள் ஆகியவற்றால் பாதிப்புற்று, வெவ்வேறு உருக்களாய்த் திரிந்தே வந்துள்ளது. இவ்வித எழுத்துருவாக்கத்தில், உயிரும் உடம்புமாகிய முப்பது முதலெழுத்துக்கள், இவற்றைச் சார்ந்து தோன்றும் மூன்று சார்பெழுத்துக்கள், மெய்யும் உயிரும் கூடுவதன் வழிப் பிறக்கின்ற 216 உயிர்மெய்யெழுத்துக்கள் என இவை மட்டுமே, மனனித்து வெளிப்படுத்த முனைபவர்களின் கவனத்திலிருந்தனவேயொழிய, இவற்றைச் சீர்மையாக்கம் பெற உதவிபுரிகின்ற 'துணையெழுத்துக்களின்' பிறப்பு, பண்பு, பயன்பாடுகள் பற்றிய அவதானிப்புகள் கிஞ்சித்தும் இருக்கவில்லை. இதனினும், வாய்மொழி வழக்காறுகளின் வாயிலாகவே இவ்வெழுத்துக்கள் இரண்டாயிரம் வருடங்கள், கவனிப்பின்றி பயணித்து வந்துள்ளன எனும் செய்தி கவனித்திற் கொள்ள வேண்டிய ஒன்றாகும். இதன் விளைவாகவே இன்றளவுங்கூட,

தொணைக்கால் (ா), ஒத்தக் கொம்பு (ெ), ரெட்டக் கொம்பு (ே), மஞ்சுளா ளானா (ள), நய்யிக்கிப் போடுற குறி (ை) - எனத் துணையெழுத்துக்கள் பெயர் கூறப்பட்டு, மிகத் தவறுதலாக அழைக்கப்படுகின்ற மெத்தனப் போக்குக் காணக்கிடைக்கின்றது.

மேற்கண்ட செய்கையோடு, இத்துணையெழுத்துக்களை எழுத ஆரம்பிக்கும் படலமானதோ மிகுந்த சோகவுணர்வை ஊட்ட வல்லதாகவே நடப்புச் சூழலில் காட்சிப்படத் தொடங்கி விடுகிறது. இப் பிற்போக்குத்தன வழமையிலிருந்து விடுபட வேண்டுமெனில், துணையெழுத்துச் சீர்திருத்தம் எனும் செயல்பாட்டில் உடனடியாக மிகு கவனம் செலுத்த வேண்டியமை அவசியமாகிறது.

துணையெழுத்துக்களை முறைப்படப் பெயரிட்டு அழைக்க வேண்டிய விதங்கள் :

துணையெழுத்துக்களைப் பெயரிட்டு வழங்குவதில் 'தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம்' கூடப் பிழையான போக்கையே நடப்புநாள் வரைக் கடைப்பிடித்து வருகின்றது. துணையெழுத்துக் குறியீடுகளைச் சரியான பெயர்களில் அழைக்க வேண்டுமானால், உலகலாவிய ஒத்திசைவு ஏற்பு மனோநிலையை முதலில் கேட்போர் எய்திட வேண்டும்.

துணையெழுத்துக்களை அழைக்க வேண்டிய முறைமை:

ா - கால், ◌ா - மடக்கேறுகால், ர - தாடை, ெ - ஒற்றைக் கொம்பு, ே-கொம்புச்சுழி, ை - இணை கொம்பு அல்லது இரட்டைக் கொம்பு, ள - கொம்புக்கால் - என்கின்ற விதங்களில் பெயர்கள்

சரியாக அமைவுபடும். இவ்வாறு பெயர்கொண்டு அழைப்பதன் வழி, புதுமுகமாகத் தமிழ்க் கற்க முனைபவர்களுக்கு எழுத்துக் குறித்த மயக்கநிலை ஏற்படுவது தவிர்க்கப்படும். கற்றல் முறைமையிலும் தெளிவு கிடைக்கும்.

மேற்சுட்டியுள்ள வழிமுறைகளைப் பின்பற்றாத தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் (டீ)- என்பதை 'கொம்புச் சுழி' எனச் சரியாக அழைக்காது, இரட்டைக் கொம்பு எனப் பிழைபடச் சுட்டுவது (பாடம் : கொம்பை வெட்டிக் காலை நடு, ஆசிரியர்: திருமதி சந்திரா ராஜ்மோகன், ப.142).:. வகுப்பு - 8, முதற்பதிப்பு - 2005) அறிவுக்குகந்ததாக இல்லை. இவ்வாறு ஏன் அழைத்தல் கூடாது என வினவுவோருக்கு, இவ்வெழுத்தக்களை எம்முறையில் எழுதுதல் வேண்டும் என்பதை உணர்த்துமிடத்து விடை கிடைக்கும்.

துணையெழுத்துக்களை எழுதுகிற முறை :

தமிழெழுத்துக்களை எழுதுகின்ற முறைமை பற்றி விளக்குகிற தொடக்கநிலை வகுப்புப் பாடநூல்களில், இரண்டு கோடுகளுக்குள்ளேயே அனைத்து வகை எழுத்துக்களும் அடக்கி எழுதப்பட்டிருப்பதைக் கண்ணுறும்போது, பெரிய பிழையை உணர முடிகிறது. ஆங்கில எழுத்துக்களைக் கூட எழுதிட நான்கு கோடுகள் போட்ட ஏடுகளைப் பயன்படுத்துகிற போது, எழுத்து வடிவ வகைமைகளில் சிக்கலான அமைப்பு முறைகளைத் தன்னகங் கொண்டுள்ள தமிழ் எழுத்துக்களை எழுதிட ஐந்து கோடுகளிட்ட ஏடுகளையே பயன்படுத்திட வேண்டியதிருக்கும் என்பதை அறிதல் அவசியம். குறிப்பாக, மேல் விலங்கு, கீழ் விலங்கு, இழுவைக் கோடுகளுக்கு ஏற்ப, ஐந்து கோடுகளில், முதல் மற்றும் இறுதிக்கோடுகளும், ஏனைய எழுத்து வடிவங்களுக்கு, இடையிலுள்ள முக்கோடுகளும் அவசியமாவதை எழுதுதல் முயற்சியின் வழி உணரலாம். இத்துடன் துணையெழுத்துக்களை எழுதும்பட்சத்தில் கீழ்க்காணும் முறைமைகளில் அமைவு படுமாறு எழுதுதல் நலம்



மேற்கண்ட விதங்களில், துணையெழுத்துக் குறியீடுகளை எழுதும்பட்சத்தில், இவ்வெழுத்துக்களைப் பெயரிட்டழைப்பதிலும் தெளிவு ஏற்படுகிறது. சான்றாக, (ெ) - எனும் எழுத்தை ஒற்றைக் கொம்பு எனும்போது, (டீ) - எனும் எழுத்தைக் கீழிருந்துதான் எழுதவேண்டும் என்கின்ற முறையும், இவ்வாறு கீழிருந்து செல்லும்கோடு, மேலே சென்று சுழிக்கப்படுகிற பட்சத்தில் 'கொம்புச் சுழி' எனப் பெயர் பெறுகிறது என்றும் விளங்கிக் கொள்ள முடிகிறது. அடுத்ததாக, கொம்புடன் ஒரு கால் சேரும்போது (ெ ா ஸ்ரீ ள) கொம்புக்கால் எனவும், (ெ ெ ஸ்ரீ ை) என இரு கொம்புகள் இணையும் போது, இணை கொம்பு அல்லது இரட்டைக் கொம்பு எனவும், (ம், ஞ். ண், த், ந், ல், ற், ன்) ் உகரம் இணைந்து தோன்றும் எழுத்துக் குறிகளுடன், ஒரு கால் (ா) இணையும்போது, உருவாகும் எழுத்துக்குறி (மடங்கியேறும் ் கால்) 'மடக்கேறுகால் கால்' (நூ, ணூ, தூ, நூ, லூ, றூ, னூ) எனவும், எகரத்திலிருந்து (எ), ஏகாரத்தை (ஏ) வேறுபடுத்தும் கீழ்ச்சாய்வுக்கோடு தாடைபோல அமைப்பைப் பெற்றிருப்பதால் 'கீழ்த்தாடை' எனவும் அழைக்கப்படுதல் வேண்டும். இவ்விடத்து மற்றோர் ஐயத்திற்கும் தெளிவு காண வேண்டியுள்ளது. குறிப்பாக, ர, ரா, ரி, ரீ ... என நீளும் ரகர நெடுங்கணக்கு கீழ்த்தாடை இன்றி, (ர்) என எழுதுகிற போக்கு நடப்பில் உள்ளது 'ர்' கரத்தின் மீது புள்ளி வைத்து (ர்) என மெய்யாக ஆக்கும் பட்சத்தில், என்ன பிரச்சினையைக் கற்பவர் எதிர்கொள்ள

நேரும் என்கின்ற ஐயத்திற்கு, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தாரே தெளிவுதர வேண்டும் என இவ்விடத்து வேண்டப்படுகிறது.

நிறைவாக:

எவ்வொரு மொழியிலும் அது குறித்த அடிப்படையறிவைப் பெறுதலென்பது, அம்மொழியிலுள்ள எழுத்துக்களையும் சொற்களையும் அவற்றின் பொருளுணர்த்தும் முறைமைகளையும் சொற்சேர்க்கை, வாக்கிய அமைவு, பத்தியாக்கம் என்பனவற்றையும் தெரிந்திருப்பதேயாகும். இவையனைத்தையும் உள்வாங்கியிருப்பதையே மொழியிலக்கணப் புலமையாக்கம் என்கிறோம். இவ்வகை இலக்கணச் சட்டகத்திற்கு அப்பாலும் எழுத்துருக்களை, எழுதுதல்சார் நடைமுறைகளில் பின்பற்றப்படவேண்டிய பன்முகப்பட்ட நெறிமுறைகளை நடப்புக் காலகட்டங்களிலும் கடைப்பிடிக்க வேண்டிய தேவை வேண்டியவொன்றாக உள்ளது. இவ்வித நெறிமுறைகளின் ஒரு பரிமாணமே 'துணையெழுத்துக்களை' நெறிப்பட எழுதுதல், முறையான பெயரிட்டழைத்தல் என்பனவும். மேற்சுட்டியுள்ள ஆய்வறிதல் வழிப் பெறப்பட்ட கருத்துநிலைகளை முறையாகப் பின்பற்றிடின், 'எழுதுதல்' என்பது சீராகவும், கருத்துக்களை வெளிப்படுத்துதல், புரிந்து கொள்ளுதல் என்பன தெளிவாகவும் இருக்குமென்பதில் ஐயமில்லை.

தமிழ்நாடு, மலேசியா இடைநிலைப்பள்ளித் தமிழ்ப் பாடநூலில் அறிவியல் – ஒப்பாய்வு

த. பொன்னி, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

முன்னுரை

அறிவியலும் தொழில்நுட்பமும் மிக வேகமாக வளர்ந்துவரும் இந்நாளில் அச்செய்திகள் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றன என்பதை அறிந்து கொள்வது இன்றியமையாததாகும். அறிவியல் செய்திகளைத் தாய்மொழியில் கற்பது மிகவும் சிறப்பாகும். அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், ஆஸ்திரேலியா, சீனா முதலிய நாடுகள் தாய்மொழி வாயிலாக அறிவியலைக் கற்பிப்பதால்தான் இன்று அறிவியல் வளர்ச்சியில் சிறந்து விளங்குகின்றன. மலேசியாவில் பல இன மக்கள் வாழ்கின்றனர். தேசிய மொழியாக மலாய் உள்ளது. ஆனால் அரசு அங்கீகாரம் பெற்ற மொழியாகத் தமிழ் உள்ளது. தொடக்கத்தில் தமிழ்நாட்டுத் தமிழ்ப் பாடநூல்களே மலேசியாவில் கற்பிக்கப்பட்டது. 1988ஆம் ஆணடு இடைநிலைப் பள்ளிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட பாடத்திட்டம் (K.B.S.M.) அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்பிறகு புதுப்புது உத்திகளுடன் நுட்பமாய் பாடநூல் உருவாக்கப்பட்டன. "மலேசிய நாட்டு வளத்திற்கேற்ப வண்ண வேலைப்பாடுகளுடன் உயர்ந்த தாளில் தமிழ்ப் பாடநூல்கள் அச்சேறின. மற்ற நாடடுத் தமிழ்ப் பாடநூல்களுடன் ஒப்பிட்டால் அவை தனித்த சில சிறப்புகளுடன் மிளிர்வதைக் காணலாம்" (முரசு நெடுமாறன்). இக்கட்டுரையில் தமிழ்நாடு எட்டாம் வகுப்புத் தமிழ்ப் பாடநூலில் உள்ள அறிவியல் செய்திகளையும் மலேசியா படிவம் இரண்டு தமிழ்ப் பாடநூலில் உள்ள அறிவியல் செய்திகளையும் ஒப்பாய்வு செய்யப்படுகின்றது.

தமிழ்நாட்டுப் பாடநூல் (எட்டாம் வகுப்பு)

தமிழ்நாடு எட்டாம் வகுப்புத் தமிழ்ப் பாடநூல் மூன்று பருவங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சமச்சீர்க்கல்வி 2011ஆம் ஆண்டு முதல் கொண்டு வரப்பட்டது. இதில் அனைத்துப் பாடங்களின் தரமும் உயர்த்தப்பட்டது. இதற்கு முன் தமிழ்ப் பாடநூல் சிறிய அளவில் காணப்படும். தற்போது பல வண்ண எழுத்துக்களையும், புகைப்படங்களையும் கொண்டு பெரியளவில் காணப்படுகிறது.

தமிழ்நாடு அரசு 2012ஆம் ஆண்டு முதல் முப்பருவ நூலை வெளியிட்டுள்ளது. தமிழ்ப் பாடநூலின் ஒவ்வொரு பருவமும் மூன்று இயல்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு இயலிலும் செய்யுள், உரைநடை, துணைப்பாடம், இலக்கணம் ஆகியவை இடம்பெற்றுள்ளன. செய்யுளில் சில மனப்பாடப் பகுதியாக கொடுக்கப்பட்டுள்ளது.

செய்யுள், உரைநடை பாடங்களுக்குப் பின் மாதிரி வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதில் பொருள் கூறு, பிரித்தெழுது, சேர்த்தெழுது, கோடிட்ட இடத்தை நிரப்புக,

குறுவினாக்கள், சிறுவினாக்கள், நெடுவினாக்கள் ஆகியவை இடம்பெற்றுள்ளன. துணைப்பாடத்திற்குப் பின் கட்டுரை வினா கேட்கப்பட்டுள்ளது.

இலக்கணப் பாடத்திற்குப் பின் மாதிரி வினாக்கள், வகுப்பறைத் திறன்கள், பேசுதல் திறன், படித்தல் திறன், எழுதுதல் திறன், மொழித்திறன் பயிற்சி, தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம், வாழ்க்கைத் திறன், மதிப்புக் கல்வி வளரறி செயல்பாடுகள்- செயல்பாடுகள் 1, 2, . . ., கற்றலடைவுச் சிறு மதிப்பீடு ஆகியவை காணப்படுகின்றன.

மலேசியப் பாடநூல் (படிவம் 2)

மலேசிய இடைநிலைப் பள்ளிப் படிவம் 2 தமிழ்ப் பாடநூல் 2003ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அதன் பொருளடக்கத்தில் உரைநடைப் பாடங்கள் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளன. தெரிந்துகொள்க, புரிந்து கொள்க என்ற தலைப்புகளில் ஒவ்வொரு பாடத்திற்குப் பின்பும் இலக்கணம் கொடுக்கப்பட்டுள்ளது. செய்யுளில் திருக்குறள் மட்டும் மூன்று இடம்பெற்றுள்ளது. வைரமுத்து, சி. வேலுசாமி, முருகதாசன், ஞானதேசிகன் ஆகியோரின் கவிதைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்நூலின் ஆசிரியர்களாக கு. நாராயணசாமி, இல. சதாசிவம், சோ. சுப்ரமணி ஆகியோர் விளங்குகின்றனர். இவர்கள் முன்னுரையில் பாடநூல் அமைப்பின் நோக்கம், பாடநூல் உருவாக்கத்தில் கருத்தில் கொள்ளப்பட்டவை, கல்வித்திட்டம் பரிந்துரைத்துள்ள சில முக்கியக் கூறுகள் ஆகியவற்றின் அடிப்படையில் இப்பாடநூல் உருவாக்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ளனர்.

ஒவ்வொரு பாடத்திற்கு முன்பும் 'நோக்கம்' என்று ஒரு கட்டத்திற்குள் 'இப்பாட இறுதிக்குள் நீங்கள்' என்று மாணவர்கள் பெறும் பயன்களை எழுதியுள்ளனர். அடுத்து இடுபணி 1, 2, 3, . . . என்று பாடங்களைக் கொடுத்துள்ளனர். (எ.கா.) இடுபணி 1 'பனுவலைக் கருத்தூன்றி வாசிக்கவும்' என்ற தலைப்பில் கல்லீரல் தொடர்பான செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன.

இடுபணி 2 வினாக்களுக்கு விடை கூறுக. இடுபணி 1இல் உள்ள செய்திகள் குறித்த வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

இடுபணி 3 கல்லீரலைப் பாதுகாக்கும் சிறந்த வழிகளைக் குழுவில் கலந்துரையாடிப் பட்டியலிடுக. இவ்வாறு கல்லீரல் தொடர்பான செய்திகள் இடுபணி 5 வரை காணப்படுகின்றது.

இடுபணி 6 "உடல் உறுப்பு தானம்"

உரையாடலைப் பாகமேற்று வாசி என்று மூன்று பக்கங்களுக்கு உடல் உறுப்புதானம் குறித்த உரையாடல் கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பல தலைப்புகளில் செய்திகள் கொடுக்கப்பட்டு அது குறித்த இடுபணிகள் பல மாணவர்கள் சொந்தமாகச் சிந்தித்து எழுதும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பாடத்தில் மொத்தம் 12 இடுபணிகள் கொடுக்கப்பட்டுள்ளன. இதற்குப் பிறகு இலக்கணம் உள்ளது. அதன் கீழ் "எதிர்காலவியல்" என்ற தலைப்பில் "நம்நாடு இயற்கை வளமும் எழிலும்

மிக்கது. இருப்பினும் பல்வேறு மேம்பாட்டுப் பணிகளால் இவ்வளங்கள் சிறுகச் சிறுக அழிக்கப்பட்டு வருகின்றன. இவை தொடர்ந்து அழிக்கப்படாமல் இருக்க மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகளைக் குழுவில் கலந்துரையாடிப் பரிந்துரைத்திடுக" என்று கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு, மலேசியத் தமிழ்ப் பாடநூல்களில் உள்ள அறிவியல் செய்திகளில் ஒற்றுமை வேற்றுமைகள்

	தமிழ்நாடு (8ஆம் வகுப்பு)	மலேசியா (படிவம் 2)
1.	8ஆம் வகுப்பு தமிழ்ப் பாடநூல் மூன்று பருவமும் சேர்த்து மொத்தம் 7 பாடங்கள், சில பயிற்சிகளில் அறிவியல் செய்திகள் உள்ளன.	படிவம் 2இல் மொத்தம் 21 பாடங்களில் 15 பாடங்கள் அறிவியல் தொடர்பான செய்திகள் காணப்படுகின்றன.
2.	வானியல், கணினி, அறிவியல் அறிஞர், சுற்றுச்சூழல் தொடர்பான அறிவியல் செய்திகள் பாடமாகக் கொடுக்கப்பட்டுள்ளது	இயற்கை, மருத்துவம், தகவல் தொடர்பு, அறிவியல் அறிஞர்கள், சுற்றுச்சூழல் ஆகியன தொடர்பான அறிவியல் செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன.
3.	அறிவியல் செய்திகள் படங்களுடன் விளக்கப்பட்டுள்ளன.	அறிவியல் செய்திகள் படங்களுடன் விளக்கப்பட்டுள்ளன.
4.	பயிற்சிகள் சிலவற்றில் அறிவியல் செய்திகள் காணப்படுகின்றன.	பயிற்சிகள் பலவற்றிலும் அறிவியல் செய்திகள் காணப்படுகின்றன.
5.	மருத்துவம் தொடர்பான பாடம் கொடுக்கப்படவில்லை	மருத்துவம் தொடர்பாக ஐந்து பாடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
6.	அறிவியல் செய்திகள் மேலோட்டமாகக் கூறப்பட்டுள்ளது.	அறிவியல் செய்திகள் ஆழ்ந்து காணப்படுகின்றன.
7.	அறிவியல் செய்திகளைக் கூடுதலாக அறிய இணையத்தில் தேடுக என்று கொடுக்கப்படவில்லை.	அறிவியல் செய்திகளைக் கூடுதலாக அறிந்துகொள்ள இணைய தளங்களுக்குச் செல்க என்று இணைய முகவரிகள் கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடநூலில் உள்ள அறிவியல் செய்திகள் அடங்கிய பாடத் தலைப்புகளை 4 பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. இயற்கை அறிவியல்
2. மருத்துவம்
3. தகவல் தொடர்புத் தொழில்நுட்பம்
4. பொது அறிவியல்

மலேசியா பாடநூல்.

I. இயற்கை அறிவியல்

1. நிலவில் உலா
2. முத்து பிறக்கிறது
3. நீர் மின்னாற்றல் நிலையம்
4. உலக வெப்பநிலை
5. புவியைக் காப்போம்
   5.1. இயற்கை அழுகிறது
6. அமிலப்படிவு
7. இறைபேராற்றல்

II. மருத்துவம்

1. நடை பயில்க! நலமாக வாழ்க!
2. நலம்தரும் நாட்டு மருத்துவம்
   2.1. நாட்டு மூலிகை வெந்தயம்
   2.2. சித்தர்களின் மருத்துவப் புலமை
3. மாந்தப் படியாக்கம்
4. உடலின் பெரிய தொழிற்சாலை
   4.1. உடல் உறுப்பு தானம்
5. நோயும் நாமும்

III. தகவல் தொடர்புத் தொழில்நுட்பம்

1. கதை கூறும் கட்டங்கள்
   1.1 அதிநுட்பக் கட்டடம
2. எட்டாவது உலக அதிசயம்
3. அறிவியல் ஆட்சி செய்கிறது
   3.1 அறிவியலும் தொழில்நுட்பமும்
4. தகவல் தொடர்பு
5. வியக்க வைக்கும் தொடர்புத்துறை

IV. பொது அறிவியல்

1. எண்ணச் சிறகுகள்
2. நிலைத்தணைப் பொழில்
   2.1 கவின்மிகு லங்காவி
   2.2 உங்களுக்குத் தெரியுமா? (டைனசோர்)
3. படிக்காத மேதை (எடிசன்)
4. சிறகடிக்க ஆசை
5. பத்தி அமைப்போம் (உலக வெப்பநிலை)

தமிழநாட்டுப் பாடநூல்

I. இயற்கை அறிவியல்

1. தமிழர் வானியல்
2. மரத்தின் வேண்டுகோள்
3. காட்டுயிரிகள்

II. தகவல் தொடர்புத் தொழில் நுட்பம்

1. உலகம் உள்ளங்கையில்
2. வகுப்பறைத் திறன்கள் - பேசுதல் திறன்
   (i) தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி
   (ii) இணையத்தின் இணையற்ற சாதனை
3. சொற்போர் - பட்டிமன்றம் நடத்துக.

அறிவியல் கண்டுபிடிப்புகள் ஆக்கத்திற்கா? அழிவிற்கா?

III. பொது அறிவியல்

1. கலீலியோ கலிலி
2. சென்னை அருங்காட்சியகம்
3. அகரமுதலி வரலாறு

மலேசியப் பாடநூலில் உள்ள அறிவியல் செய்திகள்

1.இயற்கை அறிவியல்

இயற்கை அழுகிறது

இப்பாடம் நாடகமுறையில் அமைக்கப்பட்டுள்ளது. இம்முறையில் தமிழ்ப் பாடம் கற்பிக்கும போது மாணவர்கள் ஆர்வமுடன் கற்பர். பாடமும் எளிதாக மனதில் பதியும். அறிவியல் செய்திகளை இம்முறையில் கற்பிப்பது சிறப்பாக உள்ளது, தற்காலத்தில் வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியினால் இயற்கை எவ்வாறு மாசுபடுகிறது என்பதை இப்பாடம் விளக்குகிறது. வளிமண்டலம். கடல். ஆறு, காடு, மலை ஆகியன புவித்தாயிடம் குறைகளை முறையிடுகின்றன.

இப்பாட இறுதியில் 'இயற்கைக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தித் தங்களுக்குத் தாங்களே அழிவைத் தேடிக் கொள்கிறார்கள். அவர்கள் இச்சிக்கலைக் களைவதற்குத் துரிதமாகச் சிந்தித்துச் செயல்பட வேண்டும்" என்று புவித்தாய் கூறுகிறாள். இன்றைய உலகில் மனிதன் எதிர்நோக்கும் முக்கியப் பிரச்சனைகள் பாடமாக வைக்கப்பட்டுள்ளது மிகவும் சிறப்பானதாகும்.

II. மருத்துவம்

உடலின் பெரிய தொழிற்சாலை

இப்பாடமானது கல்லீரல் (டுளநச) தன்னைப் பற்றிக் கூறுவதுபோல் அமைக்கப்பட்டுள்ளது.

- கல்லீரல், மனித உடலில் எப்பகுதியில் உள்ளது? அதன் நிறம், எடையைப் பற்றிக் கூறுகிறது.
- அது செய்யும் பணிகளை விளக்குகிறது.
- கல்லீரல் எவற்றால் பாதிப்படைகிறது.

ஆகிய செய்திகள் இப்பாடத்தில் இடம்பெற்றுள்ளன. இச்செய்திகளுக்கு அடுத்து வினாக்கள் இடுபணியாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

இடுபணி 2 கல்லீரலைப் பாதுகாக்கும் சிறந்த வழிகளைக் குழுவில் கலந்துரையாடிப் பட்டியலிடுக.

இதுபோன்ற சில இடுபணிகளை மாணவர்கள் செய்யும்படிக் கொடுக்கப்பட்டுள்ளது.

கல்லீரலின் புகைப்படம் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. கலைச்சொற்கள் அதாவது சில தமிழ்ச் சொற்களுக்கு ஆங்கிலத்தில் அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளது.

எ.கா. பித்தநீர் (bile)
செரிநீர்மம் (enzyme)
வளர்சிதைமம் (metabolism)
கிளைக்கோஜன் (glycogen)
ஹெபடைடிஸ் (hepatitis)

சிறு கட்டத்திற்குள் "நவீன மருத்துவ ஆய்வின்வழி உறுதிப்படுத்தப்படாத மருந்துகளை உட்கொள்வதால், கல்லீரல் பாதிப்படைந்து இறப்போர் பலருண்டு" என்ற செய்தி கொடுக்கப்பட்டுள்ளது.

III. தகவல் தொடர்புத் தொழில்நுட்பம்

அறிவியல் ஆட்சி செய்கிறது

இப்பாடமானது நம் வாழ்வின் ஒவ்வொரு நாழிகையையும் அறிவியல் ஆட்சி புரிகின்றது என்றும் அறிவியல் ஆட்சியில் அடிமையாகவே வாழ்கிறோம் என்றும் கூறுகிறது. மாணவர்களுக்கு இடுபணியாகக் காலை முதல் இரவு வரை அறிவியல் உங்களை எவ்வாறு ஆட்சி செய்கிறது என்பதனை விளக்கிக் கூறுக என்று கூறி கீழே அது தொடர்பான படங்கள் தரப்பட்டுள்ளன.

அறிவியல் என்பது இயற்கையாக நிகழும் நிகழ்வினைக் காரண காரியத்துடன் விளக்குவது, தொழில்நுட்பம் என்பது அறிவியல் மூலம் பெற்ற அறிவினைப் பொருட்களாகவும் சேவைகளாகவும் மாற்றி மக்கள் பயன்பெறச் செய்வது என்ற விளக்கம்

கொடுக்கப்பட்டு அறிவியலும் தொழில்நுட்பமும் வேறுபாடு உடையவை. ஆனால் ஒன்றோடு ஒன்று தொடர்புடையன என்று கூறப்பட்டுள்ளது.

மேலும் அறிவியலாளருக்கும், தொழில்நுட்பருக்கும் உள்ள வேறுபாட்டைப் படத்துடன் விளக்கப்பட்டுள்ளது.

பொது அறிவியல்

பத்தி அமைப்போம் (உலக வெப்பநிலை)

இச்செய்தியானது மாணவர்களுக்கு இடுபணியாக வழங்கப்பட்டுள்ளது. முதன்மைக் கருத்து, துணைக் கருத்துகள், எடுத்துக்காட்டுகள் போன்றவற்றின் அடிப்படையில் பத்தி அமைக்க வேண்டும். பத்திகளால் ஆனதே கட்டுரை என்று கூறப்பட்டுள்ளது.

முதன்மைக் கருத்து

உலக வெப்பநிலை உயர்வினால் தென் துருவத்தில் (அண்டார்டிகாவில்) உள்ள பனிப்பாறைகள் உருகி கடல் மட்டம் மெல்ல மெல்ல உயர்ந்து வருகின்றது.

துணைக்கருத்துகள்

கடலில் உள்ள பல தீவுகளும், தாழ்வான நிலப்பரப்புகளும் நீரில் மூழ்கும்ட அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன. ஒரு நூற்றாண்டில் 15 செ.மீ. அளவிற்கு கடல் நீர் மட்டம் உயரும் என அறிவியலாளர்கள் கணக்கிட்டுள்ளனர்.

சான்றுகள்

ஐரோப்பியத் தொலையுணர்வுத் துணைக்கோள் மூலம் கிடைத்துள்ள தகவல்களைக் கொண்டு அறிவியலாளர்கள் அச்சமூட்டும் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளனர்.

இப்பாடமானது பத்திகள் எவ்வாறு அமைக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுடன் விளக்கியுள்ளது. மேலும் தொடர்புடைய கருத்துகள் ஒன்றோடு ஒன்று கோவையாகப் பிணைக்கப்பட்டு உரைக்கப்படுவது கட்டுரை ஆகும் என்கிறது. இவ்வாறு பத்திகள் அமைத்துக் கட்டுரை எழுதவேண்டும் என மாணவர்களுக்கு விளக்குவதிலும் அறிவியல் செய்தி இடம்பெற்றுள்ளது.

தமிழ்நாட்டுப் பாடநூல்

இயற்கை அறிவியல்

தமிழர் வானியல்

மேலைநாட்டார் கண்டறிந்ததாகக் கூறப்படும் பல உண்மைகளைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழரும் அறிந்திருந்தனர் என்பதைத் தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், திருமந்திரம், திருவாசகம் முதலிய நூல்களின் மூலம் அறியலாம் என இப்பாடம் கூறுகிறது. தமிழரின் அறிவியல் சிந்தனையில் குறிப்பிடத்தக்கது வானியல் பற்றிய அறிவாகும். எனவே அது குறித்த சில செய்திகள் இப்பாடத்தில் இடம்பெற்றுள்ளன.

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை" (குறள். 1031)

இக்குறளில் உலகம் உருண்டையானது என்னும் அறிவியல் செய்தியை எந்தக் கருவியும் இல்லாத அக்காலத்தில் வள்ளுவர் கூறியிருப்பது வியப்பிற்குரியது.

செந்நிறமாய் இருந்த கோளைச் செவ்வாய் என அழைத்தனர். வெண்மை நிறமுடைய கோளை வெள்ளி என அழைத்தனர். இதனை இன்று அறிவியல் ஆய்வு புலப்படுத்தியுள்ளது. பழந்தமிழ் இலக்கியங்களில் வான்வழிப் பயணங்கள் இடம்பெற்றுள்ளன. "வலவன் ஏவா வானவூர்தி" (புறம். 27 8)

இப்பாடல் வரி, சங்க காலத்தில் ஓட்டுநர் இல்லா வானவூர்தி இருந்தது என்ற வியக்கத்தக்க செய்தியைத் தருகிறது. மேலும் சிலம்பு, மணிமேகலை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், பெருங்கதை ஆகிய நூல்களில் வான்வழிப் பயணம், வானூர்தி வடிவம், அதனை இயக்கும் முறைமை பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

இப்பாடமானது தமிழரின் வானியல் அறிவு, உலகம் தட்டையா? உருண்டையா? ஞாயிற்றுக்காட்சி, திங்கள் தோற்றம், கோள்கள் பற்றிய தமிழரின் கருத்து, வான்வழிப்பயணம் ஆகிய தலைப்புகளில் விளக்கப்பட்டுள்ளது. கோள்களின் புகைப்படமும், புஷ்பக விமானத்தின் புகைப்படமும் கொடுக்கப்பட்டுள்ளது.

தகவல் தொடர்புத் தொழில்நுட்பம்

உலகம் உள்ளங்கையில்

இப்பாடமானது அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியின் புதுமைகளான கணினியும் இணைய தளமும் தொலைத்தொடர்புக் கருவிகளும் உலகத்தை நம் உள்ளங்கையில் கொண்டு வந்துள்ளன என்பதை விளக்குகிறது.

பாடத் தொடக்கத்தில் இருவர் உரையாடுகின்றனர். அதாவது அமெரிக்காவில் இருக்கும் உன் மகனைப் பார்த்து ஆறுமாதம் இருக்குமா? என்கிறார். மற்றவர் இணையத்தில் அடிக்கடி பார்த்துக் கொண்டும் பேசிக் கொண்டும் இருக்கிறேன் என்கிறார். இவ்வாறு அறிவியலில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

இப்பாடமானது கணினியின் தோற்றமும் வளர்ச்சியும், கணினியின் வகைகள், இணையம், இணையத்திற்குத் தேவையானவை, இணைய இணைப்பு வகைகள், கணினி வழிக் கல்வி, கணினியின் பயன்கள் உள்ளங்கையில் உலகம் ஆகிய தலைப்புகளில் விளக்கப்பட்டுள்ளது.

சார்லஸ் பாப்பேஜ் வடிவமைத்த முதல் கணினியின் புகைப்படமும், சார்லஸ் பாப்பேஜ், ஜான் பாஸ்டல், பிம்பெர்னர் லீ போன்றவர்களின் புகைப்படங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

தற்காலத்தில் கணினி அனைத்துத் துறைகளுக்கும் இன்றியமையாத ஒன்றாகிவிட்டது. பாடநூலில் கணினி குறித்துப் படிக்கும் போது குக்கிராமத்தில் உள்ள வசதியற்ற குழந்தைகளும் கணினி பற்றித் தெரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே இப்பாடம் காலத்திற்கு ஏற்ற வகையில் கொடுக்கப்பட்டிருப்பது சிறப்பான ஒன்றாகும். அறிவியலைத் தமிழ்மொழியில் படிக்கும்போது மாணவர்களுக்கு அறிவியலில் ஆர்வம் உண்டாகும், நன்கு புரிந்து கொள்ளவும் முடியும்.

பொது அறிவியல்

கலீலியோ கலிலி

இது துணைப்பாடமாக உள்ளது. கலீலியோ கலிலியின் இளமைப்பருவம், அறிவியல் ஆய்வு, வானியல் ஆய்வு, இறுதிக்காலம் என்ற தலைப்பின்கீழ் இத்துணைப்பாடம் அமைந்துள்ளது.

தமிழ்ப் பாடநூலில் அதறிவியல் அறிஞர்களின் வாழ்க்கை வரலாறு பாடமாக அமைக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும். மாணவர்கள் இளம் வயதில் இப்பாடத்தைப் படிக்கும்போது அறிவியலில் ஆர்வம் உண்டாகும். இந்த அறிவியலாளர் போல் நாமும் புதியதை உருவாக்க வேண்டும் என்ற எண்ணமும் தோன்ற வாய்ப்புள்ளது.

முடிவுரை

தமிழ்ப் பாடநூலில் அறிவியல் செய்திகள் என்று ஆராயும்போது தமிழ்நாட்டை விட மலேசியாவில் அதிகளவு (75%) அறிவியல் செய்திகள் காணப்படுகின்றன.

மலேசியத் தமிழ்ப் பாடநூலைப் படிக்கும்போது சில பாடங்கள், அறிவியல் பாடம் படிக்கின்றோமா அல்லது தமிழ்ப் பாடம் படிக்கின்றோமா என்று சந்தேகம் வரும்படிக் காணப்படுகின்றன.

வளர்ந்து வரும் அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்பத் தமிழ்நாட்டுத் தமிழ்ப் பாடங்களிலும் அதிகளவு அறிவியல் செய்திகள் இடம்பெற்றால் சிறப்பாக இருக்கும்.

தமிழ்நாட்டுத் தமிழ்ப்பாட நூலில் செய்யுள், இலக்கணத்திற்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. ஆனால் மலேசியாவில் செய்யுளில் குறள் மட்டுமே (மூன்று குறள்) கொடுக்கப்பட்டுள்ளது. புதுக்கவிதைகள் காணப்படுகின்றன. உரைநடைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதால் அதிகளவு அறிவியல் செய்திகள் காணப்படுகின்றன.

தமிழ்நாட்டுப் பாடநூலில் பாடத்திற்குப் பின் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி வினாக்கள் அந்தப் பாடத்தை மனப்பாடம் செய்து எழுதும் விதத்தில் கேட்கப்பட்டுள்ளன. சில பயிற்சிகள் மாணவர்கள் சிந்தனைத் திறனைத் தூண்டும் வகையில் காணப்படுகின்றன.

மலேசியப் பாடநூலில் சில வினாக்கள் மட்டுமே பாடப்பகுதியிலிருந்து கேட்கப்பட்டுள்ளன. பெரும்பாலான இடுபணிகள் மாணவர்கள் சொந்தமாகச் சிந்தித்து எழுதும் வகையில் காணப்படுகின்றன.

இருநாட்டுத் தமிழ்ப் பாடநூல்களிலும் அறிவியல் செய்திகள் காணப்படுவது வரவேற்கத்தக்கதாகும். தமிழ்நாட்டில் இலக்கிய இலக்கணங்களை வளர்க்கும் விதத்தில் பாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மலேசியாவில் மாணவர்கள் தமிழ்மொழி அறிவைப் பெறும் வகையில் பாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

என் கருத்து

ஒரு மொழி வளரவேண்டுமானால் அம்மொழியில் அறிவியல் செய்திகள் அதிகளவு இடம்பெறவேண்டும். எனவே மலேசியத் தமிழ்ப் பாடநூலில் அதிகளவு அறிவியல் செய்திகளைக் கொடுத்து அறிவியல் தமிழை வளர்த்து வருகின்றனர். தமிழ்நாட்டுத் தமிழ்ப் பாடநூலில் அறிவியல் செய்திகளை இன்னும் அதிகமாகக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும். பண்டைய இலக்கியங்களில் அறிவியல் செய்திகள் குறித்த செய்யுள்களைப் பாடமாகக் கொடுக்கலாம்.

துணைநூல்கள்

1. தமிழ்நாட்டு எட்டாம் வகுப்பு தமிழ்ப் பாடநூல் (மூன்று பருவங்கள்), 2012
2. மலேசியா இடைநிலைப்பள்ளி படிவம் 2, தமிழ்ப் பாடநூல், 2003
3. முரசு நெடுமாறன், மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், அருள் மதியம் பதிப்பகம், மலேசியா, 1997
4. சை. பீர்முகம்மது, மலேசியத் தமிழர்களின் வாழ்வும் இலக்கியமும், (ந. கந்தசாமி, மலேசியாவில் தமிழ்க் கல்வி), 2001.

இடைநிலைப்பள்ளி படிவம் நான்கு தமிழ்மொழிப் பாடநூலில் காணப்படும் நன்னெறிக்கூறுகள்

பொன்னியம்மா மு.முனியாண்டி (mponni@yahoo.com)

புத்ரா பல்கலைக்கழகம் (Universiti Putra Malaysia)

முன்னுரை

மனிதன் தன் வாழ்நாளில் ஒவ்வொரு வினாடியும் கல்வி கற்று வருகிறான். கல்வி எனப்படுவது அறிவாற்றலோடு ஏற்ற உடல் வளர்ச்சியும், ஆன்மிக வளர்ச்சியும், நன்னெறி தேர்ச்சியும் கொண்ட மனிதரை உருவாக்குவதாகும். உடல், அறிவு, ஆன்மிக வளர்ச்சியை நெறிப்படுத்துவதற்கு ஏற்ற உள வளர்ச்சியும் அமைதல் வேண்டும். எனவேதான், மாந்தனின் உடல், உள்ளம், அறிவு, ஆன்மிகம் ஆகியவற்றில் நிகழும் மாற்றங்களே கற்றல் எனப்படுகிறது (நாராயணசாமி, 2012). ஆகவே, அறிவுத்திறன், நற்பண்புகள் ஆகியனவற்றோடு வாழ்க்கைத் தேவைக்கேற்ற ஆற்றலையும் பெற்று சமுதாயத்தில் ஒன்றிணைந்து வாழும் மாந்தனை உருவாக்கும் கல்வியானது நோக்கம், செயல்திட்டம், அமைப்புமுறை ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு நடவடிக்கையாகும்.

மலேசிய நாட்டுக் கல்வித்திட்டம் சுதந்திரத்திற்கு முன்பே தொடங்கி பல பரிணாமங்களை அடைந்துள்ளது. அவ்வளர்ச்சியில் அரசாங்கம் ஆரம்ப, இடைநிலைப்பள்ளி மாணவரிடம் நன்னெறிப்பண்புகளைப் புகுத்துவதில் மிகுந்த அக்கறையும் முக்கியத்துவமும் அளித்து வந்துள்ளது; வருகின்றது. 1957ஆம் ஆண்டு முதல் போதிக்கப்பட்டு வருகின்ற இஸ்லாமியக் கல்வி, நன்னெறிக்கல்வி, குடியியல், குடியியலும் குடியுரிமைக் கல்வியும் போன்ற பாடங்கள் இதற்குச் சான்றுகளாக அமைகின்றன.

ஆய்வுச்சிக்கல்

நாட்டிற்குப் பயன்மிக்க, நற்பண்புகள் நிறைந்த, முழுமைபெற்ற ஒரு மாந்தனை உருவாக்குவதே கல்வித்திட்டத்தின் இலக்காகும். இந்நோக்கத்தையடைய, கல்வியமைச்சு இடைநிலைப்பள்ளியின் புதிய பாடத்திட்ட அமைப்பில் பாடத்திட்டத்தில் விரவி வரும் கூறுகள் (merentasi kurikulum) எனும் அடிப்படையில் தனிப்பட்ட பாடங்களைத் தவிர்த்து பிற பாடங்களின் ஊடேயும் நன்னெறிப்பண்புகளை மாணவருக்குப் புகுத்தத் திட்டமிட்டது. எனவே, மொழி, கணக்கியல், அறிவியல், கலைக்கல்வி என அனைத்து பாடபோதனையின் போதும் நன்னெறிப்பண்புகளை மாணவர்களுக்குப் புகுத்துதல் வலியுறுத்தப்பட்டது. இதனை உறுதிசெய்ய பல்வகை நன்னெறிக்கூறுகள் அடங்கிய பாடநூல்கள் மாணவருக்காகத் தயாரிக்கப்பட்டன. ஆனால், அப்பாடநூல்களில் என்னென்ன நன்னெறிக்கூறுகள் இணைக்கப்பட்டுள்ளன? அவை இன்றைய மலேசிய வாழ்க்கைச் சூழலுக்குப் பொருந்துவனவா? எனும் கேள்விகள் எழவே செய்கின்றன.

எனவே, நான்காம் படிவத் தமிழ்மொழி பாடநூலின் வழி மாணவருக்குப் புகுத்தப்படும் நன்னெறிக்கூறுகளை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

பாடநூலின் பங்கு

மலேசியப் பள்ளிகளின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கையில் பாடநூல்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. கற்றல் கற்பித்தல் நடவடிக்கையில் பாடநூல்கள் பாடப்பொருளின் முதன்மை வழிகாட்டியாகவும் முதன்மை கருவூலமாகவும் அமைகின்றன. அதோடு இப்பாடநூல்கள் பாடத்திட்டத்தின் பொது குறிப்புநூலாகவும்; தேர்வு அல்லது மதிப்பீட்டுக்குப் பொது வழிகாட்டி நூலாகவும்; சில விரிவான தகவல்களுக்கு அறிமுக நூலாகவும் அமைகின்றன (Ngui, 1989). எனவே, மாணவர்களுக்குத் தகவலைச் சேர்ப்பிக்கும் முதன்மை ஊடகமாக விளங்கும் இப்பாடநூல்கள் தயாரிப்பில் கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டத்தில் இடம்பெற்றுள்ள அனைத்துக் கூறுகளும் கவனிக்கப்பட வேண்டும் (Jamaliah Mohd Salleh, 2003).

இன்று கல்வி போதனாமுறையில் பயிற்றுத்துணைப்பொருள்கள் பல்வகை வளர்ச்சியை அடைந்திருந்தாலும் கலைத்திட்டத்தின் இலக்கை அடைய பாடநூல்களே அடிப்படை மூலமாக விளங்குகின்றன (Hussin Ahmad, 1993). மேலும், மாணவரின் நடத்தை, பண்பு, மனப்பாங்கு, தன்மை போன்றவற்றின் உருவாக்கத்திலும் பாடநூல்கள் குறிப்பிட்ட தாக்கங்களை உண்டாக்குகின்றன. பாடநூல்களில் இடம்பெற்றிருக்கும் நன்னெறிக்கூறுகளைப் பற்றி விவாதித்த கத்ரி (1983), அவை ஒரு சமுதாயத்தின் கலாச்சாரத்தையும் நன்னெறிக்கூறுகளையும் புகுத்தும் ஊடகமாகும் என வலியுறுத்திக் கூறியுள்ளார் (Ngui, 1989). எனவே, பாடநூல்களின் குறைபாடுகளைக் களைந்து அவற்றின் தரத்தைச் செம்மைப்படுத்த அவ்வப்போது பாடநூல்கள் தொடர்பான அனைத்து அம்சங்களிலும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுவது அவசியம் (Hussin Ahmad, 1993:226).

ஆய்வின் வரையறை

இடைநிலைப்பள்ளி தமிழ்மொழிப் பாடநூலில் இடம்பெற்றிருக்கும் நன்னெறிக்கூறுகளை ஆராயும் இந்த ஆய்வு, இடைநிலைப்பள்ளியின் நன்னெறிப் பாடத்திட்டத்தில் இடம் பெற்றிருக்கும் 36 பண்புக்கூறுகளை அடிப்படையாகக் கொண்டது. கல்வியமைச்சின் பாடநூல் பிரிவால் அங்கீகரிக்கப்பட்டு 2002ஆம் ஆண்டு ஜெயபக்தி நிறுவனத்தினால் பிரசுரிக்கப்பட்ட இடைநிலைப்பள்ளியின் நான்காம் படிவத் தமிழ்மொழிப் பாடநூல் மட்டுமே இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. இப்பாடநூலில் 24 அலகுகள் இடம்பெற்றுள்ளன. பாடநூலின் ஒவ்வோர் அலகிலும் இடம்பெற்றுள்ள கேட்டல், வாசிப்பு, எழுத்து, கருத்துணர்தல், கலந்துரையாடல் பகுதிகள், சிந்தனைக்குரிய பகுதிகள், கருத்தூற்றுப்பகுதிகள் ஆகிய அனைத்தும் இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

நான்காம் படிவத் தமிழ்மொழிப் பாடநூலில் காணப்படும் நன்னெறிக்கூறுகள்

இடைநிலைப்பள்ளிகளுக்கான நன்னெறிக்கல்வி பாடக் கலைத்திட்டம் மொத்தம் 36 நன்னெறிக்கூறுகளை 7 தொகுதிகளில் அடக்கியுள்ளது. அவை முறையே சுயவளர்ச்சி (12 உட்கூறுகள்), குடும்பவியல் (4 உட்கூறுகள்), சுற்றுச்சூழல் (4 உட்கூறுகள்), நாட்டுப்பற்று (3 உட்கூறுகள்), மனித உரிமை (5 உட்கூறுகள்), குடியரசியல் (5 உட்கூறுகள்), அமைதியும் நல்லிணக்கமும் (3 உட்கூறுகள்) என வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. மேற்கூறிய நன்னெறிக்கூறுகள் நான்காம் படிவத் தமிழ்மொழிப் பாடநூலில் எந்த அளவில் விரவியுள்ளன என்பதைத் தொடர்ந்து காண்போம்.

அட்டவணை 1: சுயவளர்ச்சி எனும் தொகுதியிலுள்ள பண்புக்கூறுகள்

எண்	சுய வளர்ச்சி	எண்ணிக்கை
1.	இறைவன் மீது நம்பிக்கை வைத்தல்	10
2.	நம்பிக்கையுடைமை	6
3.	சுய மதிப்பு	13
4.	பொறுப்புடைமை	21
5.	உயர்வெண்ணம்	29
6.	விட்டுக்கொடுத்தல்	18
7.	சுய காலில் நிற்றல்	15
8.	ஊக்கமுடைமை	27
9.	அன்புடைமை	13
10.	நடுநிலைமை	6
11.	ஏற்புடைமை	11
12.	மிதமான மனப்பான்மை	13
	மொத்தம்	**182**

நான்காம் படிவத் தமிழ்மொழிப் பாடநூலில் சுய வளர்ச்சி எனும் முதலாம் தொகுதியில் உள்ள பண்புக் கூறுகள்தாம் மிக அதிக அளவில் பேசப்பட்டுள்ளன. இத்தொகுதியிலுள்ள 12 பண்புக்கூறுகள் பாடநூலின் 24 இயல்களிலும் 182 முறை இணைக்கப்பட்டுள்ளன. அவற்றிலும் உயர்வெண்ணம், ஊக்கமுடைமை எனும் பண்புகள்தான் மிக அதிக எண்ணிக்கையில் புகுத்தப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து, பொறுப்புடைமை, விட்டுக்கொடுத்தல் மனப்பான்மை, சுயகாலில் நிற்றல், சுயமரியாதை, அன்புடைமை, மிதமான மனப்பான்மை, ஏற்புடைமை, இறைவன்மீது நம்பிக்கை வைத்தல் என்பன 10 முறைக்கும் மேல் இணைக்கப்பட்டுள்ளன. இத்தொகுதியில் மிகக் குறைவாக இணைக்கப்பட்ட பண்புக்கூறுகளாக நம்பிக்கையுடைமையும் நடுநிலைமையும் அடையாளங்காணப்பட்டுள்ளன.

சுற்றுச்சூழல் தொடர்பான மூன்றாம் தொகுதியும், நாட்டுப்பற்றுத் தொடர்பான நான்காம் தொகுதியும் அமைதியும் நல்லிணக்கமும் எனும் தலைப்பிலான ஏழாம் தொகுதியும், நன்னெறிக்கல்வி கலைத்திட்டத்திலுள்ள ஏழு தொகுதிகளில் இரண்டாம் இடத்தை வகிக்கின்றன. இத்தொகுதிகளின் பண்புக்கூறுகள் தளா 21 முறை இடம்பெற்றுள்ளன.

அட்டவணை 2: சுற்றுச்சூழல் எனும் தொகுதியிலுள்ள பண்புக்கூறுகள்

எண்	சுற்றுச்சூழல்	எண்ணிக்கை
1.	சுற்றுச்சூழலை மதித்து நேசித்தல்	7
2.	மாந்தனும் சுற்றுச்சூழலுக்கிடையிலான இணக்கமும்	5
3.	நீடித்திருக்கும் சுற்றுச்சூழலும்	3
4.	சுற்றுச்சூழல் விவகாரங்களை நுண்ணுணர்தலும்	6
	மொத்தம்	21

அட்டவணை 2இல் காட்டப்படும் பண்புக்கூறுகள் நான்காம் படிவத் தமிழ்மொழிப் பாடநூலிலுள்ள 24 இயல்களில், 8 இயல்களில் இணைக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 3: நாட்டுப்பற்று எனும் தொகுதியிலுள்ள பண்புக்கூறுகள்

எண்	நாட்டுப்பற்று	எண்ணிக்கை
1.	நாட்டின் மீது அன்பு வைத்தல்	10
2.	அரசர் மீதும் நாட்டின் மீதும் விசுவாசம் செலுத்துதல்	6
3.	நாட்டிற்காகத் தியாகம் செய்யத் தயாராயிருத்தல்	5
	மொத்தம்	21

மூன்று பண்புக்கூறுகளைக் கொண்ட நாட்டுப்பற்று அடிப்படையிலான நான்காம் தொகுதி பாடநூலின் 13 இயல்களில் இடம்பெற்றுள்ளது. நாட்டின் மீது அன்பு வைத்தல் எனும் முதல் பண்புக்கூறே இத்தொகுதியில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட பண்புக்கூறாகும்.

அட்டவணை 4: அமைதியும் நல்லிணக்கமும் எனும் தொகுதியிலுள்ள பண்புக்கூறுகள்

எண்	அமைதியும் நல்லிணக்கமும்	எண்ணிக்கை
1.	ஒன்றிணைந்து அமைதியாக வாழ்தல்	8
2.	ஒருவருக்கொருவர் ஒத்துழைத்து உதவுதல்	7
3.	நாடுகளுக்கிடையே மரியாதை செலுத்துதல்	6
	மொத்தம்	21

ஏழாம் தொகுதியிலுள்ள ஒன்றிணைந்து அமைதியாக வாழ்தல், ஒருவருக்கொருவர் ஒத்துழைத்து உதவுதல், நாடுகளுக்கிடையே மரியாதை செலுத்துதல் ஆகிய மூன்று கூறுகளும் ஏறக்குறைய ஒரே அளவில் (சமன்நிலையில்) பாடநூலின் 11 இயல்களில் இடம்பெற்றுள்ளன.

அட்டவணை 5: குடும்பவியல் எனும் தொகுதியிலுள்ள பண்புக்கூறுகள்

எண்	குடும்பவியல்	எண்ணிக்கை
1.	குடும்பத்தின்பால் பற்றும் பாசமும் கொள்ளுதல்	6
2.	குடும்ப உறுப்பினர்களை மதித்து கீழ்ப்படிதல்	3
3.	குடும்ப பண்பாட்டைப் பேணுதல்	2
4.	குடும்பத்தின்பால் பொறுப்புடைமை	9
	மொத்தம்	20

குடும்பவியல் தொகுதியிலுள்ள நான்கு பண்புக்கூறுகளும் நான்காம் படிவத் தமிழ்மொழிப் பாடநூலில் குறைவாக (20 முறை) புகுத்தப்பட்டுள்ளன. பாடநூலின் 24 இயல்களில் 12 இயல்களில் மட்டுமே இப்பண்புக்கூறுகள் இடம்பெற்றுள்ளன.

அட்டவணை 6: குடியரசியல் எனும் தொகுதியிலுள்ள பண்புக்கூறுகள்

எண்	குடியரசியல்	எண்ணிக்கை
1.	விதிமுறைகளையும் சட்டதிட்டங்களையும் பின்பற்றுதல்	6
2.	பேச்சு சுதந்திரம்	3
3.	மதச் சுதந்திரம்	2
4.	நாட்டு முன்னேற்றத்தில் பங்கெடுத்தல்	4
5.	வெளிப்படைத்தன்மை	3
	மொத்தம்	18

நான்காம் படிவத் தமிழ்மொழிப் பாடநூலில் விரவியுள்ள நன்னெறிக்கூறுகளில் குடியரசியல் எனும் தொகுதி ஆறாம் இடத்தையே வகிக்கிறது. இத்தொகுதியிலுள்ள ஐந்து பண்புக்கூறுகளும் மேற்கூறிய பாடநூலில் 18 முறை மட்டுமே இணைக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 7: மனித உரிமை எனும் தொகுதியிலுள்ள பண்புக்கூறுகள்

எண்	மனித உரிமை	எண்ணிக்கை
1.	சிறார்களின் உரிமையைப் பாதுகாத்தல்	1
2.	பெண்களின் உரிமையை மதித்தல்	0
3.	தொழிலாளர்களின் உரிமையைப் பாதுகாத்தல்	3
4.	மாற்றுத்திறனாளிகளின் உரிமையை மதித்தல்	0
5.	பயனீட்டாளர் உரிமைகளைப் பாதுகாத்தல்	5
	மொத்தம்	9

இறுதியாக மனித உரிமை தொடர்பான ஐந்தாம் தொகுதி மிகவும் குறைவான எண்ணிக்கையில் இணைக்கப்பட்ட தொகுதியாக அடையாளங்காணப்பட்டுள்ளது. இத்தொகுதியிலுள்ள ஐந்து பண்புக்கூறுகளும் 24 இயல்களில் 9 முறை மட்டுமே இடம்பெற்றுள்ளன. சிறார்களின் உரிமையைப் பாதுகாத்தல் எனும் பண்புக்கூறு ஒரு முறை மட்டுமே இடம்பெற்றுள்ளது. மேலும், பெண்களின் உரிமையை மதித்தல், மாற்றுத்திறனாளிகளின் உரிமையை மதித்தல் எனும் இரு பண்புக்கூறுகள் இப்பாடநூலில் முற்றாகவே இணைக்கப்படவில்லை.

பண்புக்கூறுகளின் பொருளடக்கம்

இடைநிலைப்பள்ளி நன்னெறிப்பாடத்திட்டம் மாணவர்களுக்குப் புகுத்தப்பட வேண்டிய 36 பண்புக்கூறுகளை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் அவற்றுள் 34 பண்புக்கூறுகள் மட்டுமே நான்காம் படிவ தமிழ்மொழிப் பாடநூலில் இடம்பெற்றுள்ளன.

தொகுக்கப்பட்டுள்ள தரவுகளின் வழி 1, 2, 3, 4, மற்றும் 6, ஆகிய தொகுதிகளின் அனைத்து பண்புக்கூறுகளும் இப்பாடநூலில் இணைக்கப்பட்டுள்ளன. ஆனால் மனித உரிமைகள் எனும் ஐந்தாம் தொகுதியில் இடம்பெற்றுள்ள ஐந்து கூறுகளில் மூன்று கூறுகள் மட்டுமே இப்பாடநூலில் இடம்பெற்றுள்ளன. 5.2 பெண்ணுரிமையை மதித்தல், 5.4 மாற்றுத்திறனாளிகளின் உரிமையை மதித்தல் எனும் இரு பண்புக்கூறுகளும் இப்பாடநூலில் முற்றிலும் விவாதிக்கப்படவில்லை.

ஆனால், நன்னெறிக்கல்வி கலைத்திட்டத்தில் இடம்பெற்றுள்ள பண்புக்கூறுகளைத் தவிர்த்துத் தமிழர்களின் பண்பாடு இலக்கியத்துடன் தொடர்புடைய இதர பண்புக்கூறுகள் இப்பாடநூலில் புகுத்தப்பட்டுள்ளன எனக் கண்டறியப்பட்டுள்ளது. தமிழ் மொழியணிகளான பழமொழி, திருக்குறள், மரபுத்தொடர், உவமைத்தொடர், இணைமொழி, செய்யுள் போன்றவற்றுடன் கவிதைகளின் வழியும் இப்பண்புக்கூறுகள் புகுத்தப்பட்டுள்ளன.

நட்பின் சிறப்பை விவரிக்கக் கூடா நட்பின் விளைவு, நட்பில் பிழை பொறுத்தல், நன்நட்பை அறிதல் போன்ற பண்புகள் இப்பாடநூலில் விவாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் தமிழர்களின் வாழ்வியல் கூறுகளில் சிறப்பு வாய்ந்த இல்வாழ்க்கையைச் சித்தரிக்கும் ஒருவனுக்கு ஒருத்தி, எனும் பண்புடன் கணவனை மதித்தல், கணவன் மனைவின் பொறுப்புகள் எனும் பண்புக்கூறுகளும் இடம்பெற்றுள்ளன. இவற்றுடன் நற்குணம் வாய்ந்த ஒரு மனிதனை உருவாக்கும் பொய் பேசாமை, சுற்றுப்புற மாற்றங்களையும் வளர்ச்சியையும் நுண்ணுணர்தல், வாய்ப்பினை பயன் அறிந்து பயன்படுத்துதல், பிறர் திறமையை அறிதல், வாக்குறுதியை நிறைவேற்றுதல் ஆகிய பண்புக்கூறுகளும் இப்பாடநூலில் புகுத்தப்பட்டுள்ளன. தவிர மொழிப்பற்றினை வளர்க்க தாய்மொழியைப் பேணுவோம் எனும் கூறும் இப்பாடநூலில் இணைக்கப்பட்டுள்ளது.

பரிந்துரை

நன்னெறிப்பண்புகளைப் புகுத்தி சிறந்த மாணவனை உருவாக்குவதே ஒவ்வோர் ஆசிரியரின் தலையாய கடமையாகும். எனவே பயிற்றுத்துணைப்பொருள் பட்டியலில் முக்கிய இடம் வகிக்கும் பாட நூலைத் தயாரிக்கும் நூலாசிரியர்கள் சமகால சிந்தனைக்குப் பொருந்தும் வகையில் அனைத்து பண்புக்கூறுகளையும் பாடநூலில் இணைப்பது சிறப்பு.

சிறந்த பாடநூல்களை உருவாக்குவதே கல்வி அமைச்சின் நோக்கமாகும். எனவே பாடநூலாசிரியர்கள் நூலை எழுதத் தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்ய தேர்வு செய்யப்பட்ட நூலாசிரியர்களுக்குக் கல்விக்கொள்கையின் நோக்கம், இடைநிலைப்பள்ளி புதிய பாடத்திட்டத்தின் நோக்கம், நன்னெறிப்பண்புக்கூறுகள் குறித்த பயிற்சி அல்லது தெளிவுரை வழங்கப்படுவது அவசியம்.

இடைநிலைப்பள்ளியின் நன்னெறிப்பாடத்தின் 36 பண்புக்கூறுகளும் பொதுவானவையே. இருப்பினும், மாணவர்களின் பள்ளி வாழ்க்கையில் நட்பு பெரும் பங்காற்றுவதோடு பல விளைவுகளையும் ஏற்படுத்துகிறது. எனவே நட்பு தொடர்பான பண்புக்கூறுகள் பாடநூலிலும் நன்னெறிப்பாடத்திட்டத்திலும் இணைக்கப்பட்டால் மாணவருக்குப் பெரும் பயனளிக்கும்.

முடிவுரை

இவ்வாய்வின் வழி நான்காம் படிவ தமிழ்மொழிப் பாடநூலில் விரவியுள்ள பண்புக்கூறுகள் சமன்நிலையில் இல்லை எனக் கண்டறியப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொகுதியின் அடிப்படையிலும் புகுத்தப்பட்டுள்ள பண்புக்கூறுகளின் எண்ணிக்கையும் மிகவும் வேறுபட்டுள்ளன. சுய வளர்ச்சி எனும் தலைப்பிலான முதல் தொகுதியே 62.33% (182 முறை) இடம்பெற்று 24 அலகுகளிலும் முதன்மை வகிப்பதைக் காணலாம். மனித உரிமை தொடர்பான ஐந்தாம் தொகுதி 3.08% (9 முறை) மட்டுமே இடம்பெற்று இறுதி நிலையிலுள்ளது. அத்துடன் புகுத்தப்பட்டுள்ள பண்புக்கூறுகளின் எண்ணிக்கையும் சமன்நிலையில் இல்லாததும் தெளிவாகிறது. உயர்வெண்ணம் எனும் பண்புக்கூறு 29 முறை இடம்பெற்றிருக்க பெண்களின் உரிமையை மதித்தல், மாற்றுத்திறனாளிகளின் உரிமையை மதித்தல் ஆகிய பண்புக்கூறுகள் இப்பாடநூலில் இணைக்கப்படவில்லை. எனவே நான்காம் படிவ தமிழ்மொழி பாடநூலில் புகுத்தப்பட்டுள்ள பண்புக்கூறுகள் சமன்நிலையில் அமைக்கப்படவில்லை என்பது தெளிவாகின்றது.

மேற்கோள்கள்:

1. நாராயணசாமி, கு. (2012). ***சிந்திக்கக் கற்பித்தலும் சிந்தனையைக் கற்பித்தலும்.*** சிலாங்கூர்.
2. ***Buku Teks Bahasa Tamil Tingkatan Empat KBSM,*** (2002) /2001. Kuala Lumpur : Jaya Bakti
3. ***Buku Panduan Guru Pendidikan Moral Tahun 5 SJKT***, (2005).Kuala Lumpur: Sykt.P.Ganesan
4. Hussin Ahmad, (1993). ***Antara Reformasi Pendidikan dan Wawasan 2020.*** Kuala Lumpur: Institusi Kajian Dasar
5. Jamaliah Mohd Salleh. (2003). ***Penerapan Nilai Murni dalam Buku Teks: Kajian Terhadap Buku Teks Sains Menengah Rendah.*** Universiti Malaya:Fakulti Sastera dan Sains Sosial, Jabatan Pengajian Media
6. Ngui Kuan Sang. (1989). ***Strategi Pengajaran Geografi KBSM.*** Kuala Lumpur: Fajar Bakti

தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பித்தல்: கோட்பாடுகளும் சிக்கல்களைக் களையும் செயல்முறைகளும்

மணிமாறன் கோவிந்தசாமி
ஆசிரியர் கல்விக்கழகம் துவான்கு பைனூன் வளாகம்

முன்னுரை

மனிதானவன் தன் அன்றாட வாழ்க்கையில் மொழியோடு இரண்டற கலந்தவனாவான். ஒரு மனிதனுக்கு தாய்மொழி அல்லது பேச்சுமொழி இயற்கையாகவே அவன் பிறப்பிலிருந்தே அவனோடு சேர்ந்து வளர்கிறது. அவ்வாறு வளரும் அம்மொழி அவர்களின் வாழ்க்கை முறையை அடிப்படையாகக் கொண்டு வளரும். ஆனால், இரண்டாம் மொழியை முறையான கற்றல் கற்பித்தல் வழியே ஒருவன் கற்றுக்கொள்கிறான். மொழி ஆய்வாளர் கமரூடின் ஹஜி ஹசான் (1998) தாய்மொழியை அடுத்து ஒருவன் வேறு எம்மொழியைப் பயின்றாலும் அம்மொழி அவனுக்கு இரண்டாம் மொழியாகக் கருதப்படும் என்கிறார். இரண்டாம் மொழியைக் கற்பதில் மாணவர்கள் பல சிக்கல்களை எதிர்நோக்கினாலும் சரியான அணுகுமுறைகள், இடைவிடாத பயிற்சிகள், கூரிய நினைவாற்றல், மனனம் முதலிய நடவடிக்கைகள் அக்கற்றல் கற்பித்தலைப் பயன்மிக்கதாக ஆக்க வழிவகுக்கும் (Rivers, W.M.,1964).

ஆய்வு நோக்கம்

மலேசியாவில் இன்று தமிழ்மொழி படிக்கும் ஆர்வம் எல்லா நிலைகளிலும் மிகுந்திருப்பதை நாம் அறிவோம். இதன் அடிப்படையிலேதான் பல பல்கலைக்கழகங்களிலும் தேசிய தொடக்கப்பள்ளிகளிலும் தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தேசியப் பள்ளிக்கான ஒருங்கிணைக்கப்பட்ட தொடக்கப்பள்ளிக் கலைத்திட்டத்திலும் (KBSR), தொடக்கப்பள்ளி தர அடிப்படையிலான கலைத்திட்டத்திலும் (KSSR) தமிழ்மொழி ஒரு கூடுதல் பாடமாக இடம்பெற்றுள்ளதை நாம் அறிவோம். ஆகவே, இந்தக் கட்டுரை தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும் கோட்பாடுகளைப் பற்றி ஆராய்கிறது. அத்தோடு, இரண்டாம் மொழியாகத் தமிழைக் கற்பித்தலில் அடையாளங் காணப்பட்ட சில சிக்கல்களையும் அவற்றைத் திறம்பட களைவதற்கான சில செயல்முறைகளையும் பரிந்துரை செய்யும் நோக்கிலே இக்கட்டுரை படைக்கப்படுகிறது.

இரண்டாம் மொழிக் கற்பித்தலின் கோட்பாடுகள்

அ. இரண்டாம் மொழிக் கற்றலானது முதலில் பேச்சில் தொடங்கி பிறகு பயிற்சிகளின் மூலம் அன்றாட வழக்கத்திற்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

ஆ. இரண்டாம் மொழியைக் கற்றுக்கொள்வதற்கு முதலில் அடிப்படை மொழித்திறன்களைக் கைவரப்பெறுதல் அவசியமாகும். மொழித் திறன் கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய திறன்களை உள்ளடக்கியதாகும். கேட்டல் திறனில் மாணவர்கள் பல்வேறு சூழல்களில்

உன்னிப்பாகச் செவிமடுத்து, அவற்றின் கருத்துகளைப் புரிந்துகொள்வர். பிறகு அம்மொழியில் பேச முற்படுவர். அப்பொழுது அவர்கள் கேட்டல் - பேச்சு முறையை தங்களின் உரையாடலில் பயன்படுத்த முனைவர். தொடர்ந்து, அம்மொழியில் உள்ள எழுத்துப் படிவங்களை வாசிப்பர். இதில் பல்வேறு எழுத்துப் படிவங்களைச் சரியான உச்சரிப்பு, தொனி, வேகம், சரளம் ஆகியவற்றோடு முறையாக வாசிப்பர். இறுதியாக, எழுத்துத் திறனில் மாணவர்கள் எழுத்து, சொல், வாக்கியம் எனும் வகையில் பரிணாம வளர்ச்சி அடைவர். பெற்ற அனுபவங்களையும் அறிவையும் பயன்படுத்தி சிறந்த வாக்கியங்கள், சொற்களஞ்சியம் மற்றும் சரியான நிறுத்தற்குறிகளுடன் சரியாக எழுதுவர்.

இ. இரண்டாம் மொழியை ஆசிரியர் கற்பித்தபின் மாணவர்கள் சுயமாகவே இரண்டாம் மொழியிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டறிந்து இரண்டாம் மொழியை மேன்மையடையச் செய்வர்.

ஈ. இரண்டாம் மொழியைப் பயிலும் மாணவர்கள் அம்மொழியை அடிப்படை நிலையிலிருந்து கற்பர். ஆகவே, இரண்டாம் மொழியின் கற்றல் பாடத்திட்டத்தின் உள்ளடக்கமானது மாணவர்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தொடர்புடையதாகவும் இருத்தல் வேண்டும்.

தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பிப்பதில் அடையாளங் காணப்பட்ட சில சிக்கல்கள்

நான் சில பள்ளிகளில் நுண்நோக்கல் செய்ததன்வழி அடையாளங் காணப்பட்ட சில சிக்கல்களை இக்கண் விளக்குகிறேன். கற்பிப்பதில் ஆக்கமும் புத்தாக்கமும் இல்லாத ஆசிரியரே முதல் சிக்கலாகக் கருதப்படுகிறார்கள். வெண்கட்டியையும் (வெண்பலகையில் எழுதுவதற்கான எழுதுகோளையும்) தனது வாயையும் மட்டும் நம்பிருக்கும் ஆசிரியர்களின் செயல் தற்காலத்திற்கு அவ்வளவாகப் பொருந்தி வாரா. ஆசிரியர் என்பவர் பயன்பாட்டில் இருக்கும் பல்வகை ஊடகங்களைப் பயன்படுத்தி மாணவர்களைக் கவரும் வகையில் கற்றல் கற்பித்தலை மேற்கொள்ள முனைய வேண்டும். வேலை பளுவைக் காரணமாகக் காட்டி, ஆசிரியர் கவர்ச்சிகரமான கற்றல் கற்பித்தல் நடவடிக்கைளை உருவாக்குவதிலிருந்து தப்பிக்க முற்படக்கூடாது. இரண்டாம் மொழியைக் கற்கும் மாணவனுக்கு இத்தகைய நடவடிக்கைகள் பெரிதும் துணைபுரிகின்றன என்பதை நினைவிற் கொள்ளவேண்டும். மாணவர்களின் ஆர்வத்தையும் திறனையும் வளப்படுத்தும் திறவுக்கோலாக ஆசிரியர்கள் திகழ வேண்டும். புறநகர்ப் பகுதிகளில் பயிலும் மாணவர்கள் பல்லூடகங்களின் வழி கற்பதையே பெரிதும் விரும்புகின்றனர் (Juriah Long et.al,1994).

மாணவர்கள் பெரும்பாலோர் இரண்டாம் மொழியைக் கற்றுக்கொள்வதில் ஆர்வமின்றி இருக்கின்றனர். இரண்டாம் மொழியை ஏன் கற்க வேண்டும்? கற்பதனால் எனக்குக் கிட்டும் பயன் யாது? என்பதே பெரும்பாலான மாணவர்களின் வினாக்களாக இருக்கின்றன. ஆசிரியர்கள் இரண்டாம் மொழியைக் கற்பதன் காரணத்தையும் ஏரணத்தையும் தெளிவுப்படுத்தாத நிலையில்

இம்மாணவர்களுக்குக் குழப்பங்கள் நீடித்த வண்ணமாகவே இருக்கும். இக்கால மாணவர்கள் தாம் செய்யும் செயலுக்குத் தகுந்த பிரதிபலனை எதிர்பார்ப்பவர்களாவே இருக்கின்றனர்.

பெரிய வகுப்பும் பல தரப்பட்ட மாணவர்களும் கொண்ட சூழலில் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிப்பதில் ஆசிரியர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். இது அறிவுபூர்வமான நிலை அல்ல. எத்தகைய தரமான கல்விச் சீர்திருத்தங்கள் வந்தாலும், இத்தகைய சூழ்நிலைகள் வெற்றியைத் தடைசெய்யும் என்பதில் மாற்றுக் கருத்துகள் இருக்க முடியாது(Kamaruddin Hj Husin,1998). ஆசிரியர்கள் தனியாள் கற்றல் கற்பித்தலில் கவனம் செலுத்த இயலாது. அதே வகுப்பில் பலதரப்பட்ட மாணவர்கள் இருந்தால் இந்நிலை மேன்மேலும் மோசமடையும். ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தலைத்திறம்பட நடத்த இயலாது.

தொடர்ந்து, ஆசிரியர்கள் சிலர் மறைமுகமாக மாணவர்களைச் சோம்பேறிகளாக்க முற்படுகின்றனர் (சீனிவாச சர்மா,கோ., 1940).இரண்டாம் மொழியைக் கற்பிக்கும்போது முதன்மை மொழியிலேயே ஆசிரியர்கள் சிலர் கற்றல் கற்பித்தலை நடத்துகின்றனர். வீட்டில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளிடம் இரண்டாம் மொழியைச் பேசுவதில்லை அல்லது பேசுவது மிகக் குறைவு. பள்ளியில் இரண்டாம் மொழிக்காக ஒதுக்கப்பட்ட பாட வேளையில் மட்டும் மாணவர்கள் இம்மொழியைக் கேட்கின்றனர். ஆனால், இவ்வேளையிலும் முதன்மை மொழியின் தாக்கம் முழுமையாக இருந்தால் மாணவர்கள் இரண்டாம் மொழியில் எவ்வாறு வளம் பெறுவது?அப்பாட வேளை முழுதும் ஆசிரியர் இரண்டாம் மொழிக் கற்பித்தலில் கண்டிப்பாக இல்லாத பட்சத்தில் மாணவர்கள் எவ்வாறு அம்மொழியில் இயல்பாகப் பேசியும் வாசித்தும் எழுதவும் முடியும்?

இறுதியாக, இரண்டாம் மொழிக் கற்பித்தலில் பல வகை அணுகுமுறைகளையும் செயல்முறைகளையும் பயன்படுத்தி ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை அமலாக்கம் செய்வதில்லை (Jill Kerper Mora,2000). தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும் அணுகுமுறைகள் அல்லது செயல்முறைகள் தொடர்பான தகவல்கள் அல்லது தரவுகள் தமிழ்மொழியிலேயே கிடைக்கப் பெறுவது மிக அரிது. பிற மொழிகள் குறிப்பாக ஆங்கில மொழியிலேயே அதிகமான தகவல்களைப் பெற முடியும்; திரட்ட முடியும். அத்தகவல்களைத் திரட்டி, மொழிப்பெயர்ப்புச் செய்வதிலும் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். இரண்டாம் மொழியைக் கற்பிக்கும் தமிழாசிரியர்கள். இவ்வகையில் தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப் பயன்படுத்தப்படும் சில அணுகுமுறைகள் அல்லது செயல்முறைகள் தொடர்ந்து பரிந்துரை செய்யப்படும்.

தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப் பயன்படுத்தப்படும் செயல்முறைகள்

அ) இலக்கண மொழிப்பெயர்ப்பு அணுகுமுறை (Grammar - Translation Approach)

இம்முறை பண்டைய முறை. இவ்வணுகுமுறையில் எழுதும் திறனுக்கு முக்கியத்துவம் தரப்படும்; பேசும் திறனுக்கு அல்ல; மொழியியல் கூறுகள் வலியுறுத்தப்பட மாட்டா; சொற்களை எழுத்துக்கூட்டி எழுதுவதற்கு முக்கியத்துவம் தரப்படும்; பாடத் தொடக்கத்தில் கலைச்சொற்கள் பட்டியல் தரப்படும். இலக்கண விதியின் அடிப்டையில் சொற்கள் வரிசைக்கிரமமாக அடுக்கப்படும். மொழியைக் கைவரப்பெறும் வகையில் இவ்விதிகள் மனனம் செய்யப்படும்.

ஆசிரியர் முதலில் இலக்கண விதிகளை பல்வகைக் காட்டுகளுடன் மாணவர்களுக்கு விளக்குவார். மாணவர்கள் அவ்விதிகளை மனனம் செய்வர். மனனம் செய்ய வேண்டிய கலைச்சொற்கள் பட்டியலை ஆசிரியர் தருவார். அக்கலைச்சொற்களை பயன்படுத்தி மாணவர்கள் வாக்கியம் அமைப்பர். இந்நடவடிக்கைகள் மூலம் மாணவர்கள் இலக்கண விதிகளை முழுமையாக அறிந்து, சரியான மொழியில் எழுதப் பயிற்சி பெறுவர் (Galeb Cattegno,1972).

இவ்வணுகுமுறை நேரத்தை மிச்சப்படுத்தும். ஆசிரியரின் வேலை பளுவைக் குறைக்கும். ஆசிரியர் துணையின்றியும் மாணவர்கள் சுயமாகவே கற்றலை மேற்கொள்ளலாம். இருப்பினும், மாணவர்கள் மொழிப்பெயர்ப்புச் செய்வதில் சிரமத்தை எதிர்நோக்குவர்.

ஆ) நேரடி அணுகுமுறை (Direct Approach)

போரின் போது இராணுவத்தை வழிநடத்த கையாளப்படும் அணுகுமுறை இதுவாகும் (Michael West & Harald Palmer,1935). இம்முறையில் கேட்டல் திறன் முக்கியப் பங்காற்றும். இங்கு எழுதும் திறன் முக்கிய நோக்கம் அல்ல. மொழியாசிரியர் மூலம் பன்முறை பயிற்சி பிரத்தியேகமாகப் பயன்படுத்தப்படும். குழந்தைகளின் உளவியலுக்கேற்ப கற்பித்தல் கொள்கைகளுக்கு முன்னுரிமை தரப்படும். இம்முறை இரண்டாம் மொழி கற்பித்தலுக்கு மிகவும் பொருந்தும். குழந்தைகளுக்கு இரண்டாம் மொழியை உரையாடல் வழி கற்பிக்கும் அணுகுமுறை(Salleh Mohd Akib,1975).

உண்மைப் பொருள்களைத் துணையாகக்கொண்டு கற்பித்தல் மேற்கொள்ளப்படும். பயன்படுத்தப்படும் பொருளுக்கும் சொற்களுக்கும் நேரடியான தொடர்பை உண்டுபண்ணும். மாணவர்களின் முன்னறிவோடு கற்பித்தலைத் தொடர்புப்படுத்தலாம். கேள்விகள் கேட்டு மாணவர்களைத் துலங்கச் செய்யலாம். பேச்சுத் திறனைவிட கேட்டல் திறனுக்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும். மாணவர்களைக் கற்றுத்தரப்படும் மொழிக்கு நேரடியாக தொடர்புப்படுத்த வேண்டும். மொழிப் பெயர்ப்புப் பயன்படுத்தலாகாது. சரியான உச்சரிப்பு வலியுறுத்தப்படும். மீள்பார்வை மற்றும் திடப்படுத்துதல் பயிற்சிகள் அதிகமாக்கப்பட வேண்டும். எளிமையிலிருந்து கடினத்திற்குச் செல்லும் கற்றல் நெறியைப் பயன்படுத்திக் கற்பித்தலை நிகழ்த்த வேண்டும். கலைச்சொற்கள் மற்றும் மொழி அமைப்புத் தொடர்பான கற்பித்தலை அனுதினமும் நடத்த வேண்டும். முதல் மொழிக்கற்றலில் குழந்தைகள் கேட்டலுக்கும் பேச்சுக்கும் முக்கியத்துவம்

தரப்படுவதால், இவ்வணுகுமுறை இரண்டாம் மொழிக் கற்றலுக்கு மிகவும் பொருத்தமாக அமைகிறது.

இ) கேட்டல் பேச்சு அணுகுமுறை (Audiolingual Approach)

இது கேட்டல் பேச்சுக்கு முக்கியத்துவம் தரும் அணுகுமுறையாகும். மனனம் செய்வதற்கு உரையாடல் பயன்படுத்தப்படும். சரியான தொனியை வலியுறுத்தும் வண்ணம் உரையாடல் பன்முறை பயிற்சிக்கு உட்படுத்தப்படும். ஒலி ஒளி கருவிகள் பரவலாகப் பயன்படுத்தப்படும். மாணவர்களிடம் கலைச்சொற்கள் கட்டம் கட்டமாகக் கொடுக்கப்படும். கேட்டல் பேச்சைக் கைவரப்பெற்றப்பின், வாசிப்பிற்கும் எழுதும் திறனுக்கும் பயிற்சிகள் வழங்கப்படும்.

ஆசிரியர் மாணவர்களுக்கு இரண்டாம் மொழி சொற்களை அல்லது வாக்கியங்களை ஒலிப்பரபுதல். மாணவர்கள் தாங்கள் கேட்ட சொற்களை அல்லது வாக்கியங்களைச் சரியான உச்சரிப்புடன் மீண்டும் கூறுதல் (Charles A.1976). மாணவர்கள் உச்சரிப்பில் பிழையிருப்பின் ஆசிரியர் திருத்துதல். மாணவர்கள் சரியான உச்சரிப்பில் வளமடைந்தவுடன் பலவகை வாக்கிய அமைப்புத் தொடர்பான திறனை வளர்த்தல். பாட இறுதியில் எழுதும் திறனுக்கு முக்கியத்துவம் தருதல்.

ஈ) சமூகமொழிக் கற்றல் அணுகுமுறை (Community Language Learning Apporoach)

நெறியுரை (Counselling) தொடர்பான உளவியல்(Psychology) உத்தி இவ்வணுகுமுறையில் பயன்படுத்தப்படும். நடத்தையியல் திறனும் மொழியியல் அறிவும் உணர்வும் கொண்ட மனிதனாக மாணவர்கள் இவ்வுத்தியில் கருதப்படுவர்.இவ்வணுகுமுறை பயன்படுத்தப்படும் வகுப்பில் முதல் நாளில் ஆசிரியர் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன (Dieter Stroinigs,1983).

- ஒருவருக்கொருவர் பார்க்கின்ற வகையில் மாணவர்கள் வட்டத்தில் நிற்க வேண்டும். எளிதில் ஒலிப்பெருக்கியையும் பதிவுநாடாவையும் கைப்பற்றும் தூரத்தில் நிற்க வேண்டும்.
- ஒருவன் மற்றொருவனிடம் தனது தாய்மொழியில் உரையாடலைத் தொடங்க வேண்டும்.
- ஆசிரியர் மாணவர்களின் பின்நின்று, அத்தாய்மொழியினை இரண்டாம் மொழியில் மொழிப் பெயர்க்க வேண்டும்.
- மாணவர்கள் அவ்விரண்டாம் மொழியின் உரையை மீண்டும் கூறி பதிவுநாடாவில் பதிவு செய்யவேண்டும்.
- ஒவ்வொரு மாணவர்களுக்கும் தங்கள் தகவல்களைப் பதிவுசெய்ய வாய்ப்பு வழங்கப்படும்.
- பதிவுநாடா சில நிமிடங்களுக்கு மீண்டும் ஒலிப்பரப்பப்படும்.
- ஒவ்வொரு மாணவனுக்கும் இரண்டாம் மொழியின் பொருளைக் கூற வேண்டும். இந்நடவடிக்கை மாணவர்களின் நினைவாற்றலுக்குப் புத்துணர்ச்சியைத் தரும்.

- மாணவர்கள் தங்கள் அனுவபத்தையும் மனவுணர்வையும் வெளிபடுத்த ஊக்கமளிக்கப்படும்.
- பதிவுசெய்யப்பட்ட தகவல்களிலிருந்து ஆசிரியர் வாக்கியங்களைத் தெரிவுசெய்து பசும்பலகையில் எழுதுதல்; இலக்கணக் கூறுகளை விளக்குதல்.
- மொழிக்கூறுகள் தொடர்பான கேள்விகள் கேட்க மாணவர்களைத் தூண்டுதல்.
- பசும்பலகையில் எழுதப்பட்ட வாக்கியங்களை மாணவர்கள் எழுதுதல்; சொற்களின் பொருளையும் பயன்பாட்டையும் குறித்து வைத்தல். இல்லத்தில் மீள்பார்வை செய்யப் பயன்படும்.

இவ்வணுகுமுறையில் மாணவர்கள் ஒரு குமுகாயத்தின் உறுப்பினர்களாக ஆக்கப்படுகின்றனர் (Curran, 1976). கற்றல் ஒரு கூட்டு முயற்சியில் நடைபெறுகிறது. மாணவர்கள் தெளிவாகக் கேட்டு, சுதந்திரமாகக் கருத்துகளைத் தெரிவித்து, குமுகாயத்தின் சக உறுப்பினர்களுக்கும் உந்துதல் கொடுத்து, மனவுணர்வுகளையும் வெளிப்படுத்தி, ஒரு நெறியுரையாளராகவே மாறிவிடுவர். ஆசிரியரும் நெறியுரையாளராக இருந்து, மாணவர்களுக்கு வழிக்காட்டியாகவும் அவர்களின் பிரச்சனைகளைச் சுமூகமாகத் தீர்ப்பவராகவும் செயல்படுவார். இரண்டாம் மொழிக் கற்றலில் மாணவர்களுக்கு ஏற்படும் சிக்கல்களைக் களைய முன்னுரிமை தரப்படும்.

உ) போலச் செய்தல் - மனனம் அணுகுமுறை (Imitate and Memorize Approach)

இரண்டாம் மொழிக்கான கற்பித்தல் இரு வகைப்படும்.

- செய்துகாட்டல் (demonstrate) : இலக்கணம், பேச்சு, கலைச்சொற்கள் தொடர்பானவை.
- பன்முறை பயிற்சி (drill) : வாக்கியங்களைப் பன்முறை வாசித்து மனனம் செய்தல்.

மாணவர்கள் ஒவ்வொரு சொல்லையும் மொழிப்பெயர்ப்புச் செய்ய வேண்டிய அவசியமில்லை.அனைத்து வாக்கியங்களையும் இரண்டாம் மொழியில் கற்றப்பின், மாணவர்கள் தங்களது தாய்மொழியில் விளக்கிக் கூறுவர். தாய்மொழியில் அதே பொருளைத் தரும் வண்ணம் மாணவர்கள் இரண்டாம் மொழியில் காட்டுகள் தருவர். கேட்டல் பயிற்சியை மேற்கொள்ளும் முன் பேசும்போது பல்வகை வாக்கியங்களைக் கேட்டறிவர். இறுதியாக, உரையாடல்வழி பன்முறை பயிற்சிகளை மேற்கொள்வர். தெளிவான பாட பயிற்றுவிப்பு முக்கியமாகக் கருதப்படுகிறது. சரியான தெளிவான உச்சரிப்பு மாணவர்களுக்குச் சரியான தெளிவைத் தரும். சரியான தெளிவு மாணவர்கள் மொழியை முழுமையாகக் கைவரப்பெற வழிவகுக்கும். இலக்கணம் பன்முறை பயிற்சிகள் மூலம் மனனம் செய்ய ஊக்குவிக்கப்படும். ஆசிரியர் பேச்சுத் தொடர்பான பல்வகைப் பயிற்சிகளைத் தயார்படுத்துதல் மிக முக்கிய அம்சமாகும்.

முடிவுரை

இவ்வாறாகத் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிப்பதற்கு பல்வேறு அணுகுமுறைகளும் உத்திகளும் கையாளப்படுகின்றன. மாறாக, எளிமையான மற்றும் மனோதத்துவ அடிப்படையில் கால வளர்ச்சிக்கேற்ப அவ்வப்போது மொழியியல் வல்லுனர்கள் மேன்மேலும் பல்வகை அணுகுமுறைகளக் கண்டுபிடித்த வண்ணமாகவே இருக்கின்றனர். பல வகை வசதிகளைக் கொண்ட இணையமும் கணிப்பொறியும் சிறப்பாக வளர்ந்துள்ள இக்காலகட்டத்தில் இவற்றை ஆக்கப்பூர்வமாக இரண்டாம் மொழிக்கற்றலுக்குப் பயன்படுத்தும் வண்ணம் பல நிலைகளில் பல்வேறு ஆராய்ச்சிகள் நடத்தப்பெறுகின்றன. ஒரு மாணவனுக்குத் தாய்மொழியைக் காட்டிலும் இரண்டாம் மொழிக் கற்பித்தல் சற்றுச் சிக்கலானது. முரண்பாடுகள் எழும்பும். ஆகவே, ஆசிரியர்கள் சரியான அணுகுமுறைகளைத் தெரிவுசெய்வதிலும் அவற்றை அமலாக்கம் செய்வதிலும் தர்க்க ரீதியாகவும் ஏரணச் சிந்தனையுடனும் செயல்பட்டால் இரண்டாம் மொழிக் கற்பித்தல் பெரும் பயன்விளைவைத் தரும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

மேற்கோள் நூல்கள்

Curran, Charles A.(1976). Counseling Learning in Second Languages. Apple River,liinois:Apple River Press, 1976.

Caleb Cattegno.(1972). Teaching Foreign Languages in School. New York City: Educational Solutions.

Jill Kerper Mora, Ed.D.(2000). Second Language Teaching Methods. Apple River,liinois: Apple River Press, 1976.

Juriah Long, et.al.(1994). Perkaedahan Bahasa Melayu (edisi ke-4). Kuala Lumpur: Fajar Bakti Sdn.Bhd.

Kamaruddin HJ Husin.(1998).Pedagogi Bahasa Melayu(edisi ke-8). Selangor: Long Man Sdn. Bhd.

சீனிவாச சர்மா,கோ.(1940).இருமொழியியம்.அனைத்திந்தியர் தமிழ்மொழியிற் கழகம்: அண்ணாலை நகர்.

ஜெயதேவன்,வ.(2006). தமிழியலில் எதிர்காலவியல். தியாகராஜ நகர்:சென்னை

மொழி வளர்க்கும் முகநூல் பக்கங்கள்

மலர்விழி சின்னையா *(kovaimalar@yahoo.com)* புத்ரா பல்கலைக்கழகம்

முன்னுரை

மலேசியாவில் நடைமுறையில் உள்ள, உயர்கல்விக் கூடங்களில் அமல்படுத்தப்படுகின்ற இணைய வழிக்கற்றல், நான்காம், ஐந்தாம் படிவ மாணவர்களுக்குரிய தகவல் தொழில்நுட்ப பாடம், ஒரே மலேசியா இலவய மடிக் கணினி, விவேகத் தொலைப்பேசி வாங்குவதற்கு நிதியுதவி, மலேசிய சமூகவலைத்தள வார அனுசரிப்பு என்பன அனைத்தும் நம் நாட்டில் இணையப் பயன்பாட்டில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியையும் தேவையையும் புலப்படுத்துகின்றன. தொலைக்காட்சி செய்திகளில் முகநூல், டுவிட்டர் போன்ற சமூகவலைத்தளங்களில் பதிவேற்றிய கருத்துகளை ஒலி-ஒளிபரப்பி விவாதிப்பதும், வானொலி செய்திகளுக்குப் பின்னர் நேயர்களைச் சமூகவலைத்தளங்களில் கருத்துரைக்கச்சொல்வதும், பிரதமரோடும் அமைச்சர்களோடும் டுவிட்டரில் கருத்துரைக்கலாம் என்பனவும் மலேசியாவில் சமூகவலைத்தளங்களின் பங்கினையும் தொடர்புமுறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் அறிவிக்கின்றன.

தகவல் தொடர்புத் துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கற்பிக்க வேண்டியதும், அம்மாற்றங்களை ஏற்றுப் பயன்படுத்த வேண்டியதும் கல்வித் துறையின் மிக முக்கியப் பணியாகும். அதனால்தான், காலந்தோறும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப பயிற்றுத் துணைக்கருவிகளும் மாறி வந்துள்ளன. அவ்வகையில் இணையவழிக் கற்றலில் ஓரளவு பழக்கப்பட்டுவிட்ட கல்வியாளர்கள், தற்போது தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் மிகச் சமீபத்திய கண்டுபிடிப்பாகக் கருதப்படும் சமூக வலைத்தளத்தினைப் பற்றியும் அதனைப் பயன்படுத்தியும் கற்பிக்கும் வழிமுறைகளைச் சிந்திக்க வேண்டும்.

ஆய்வின் பின்புலம்

அமெரிக்க மக்கட்தொகை கணக்கெடுப்புத் துறையின் (யு.எஸ். சென்சஸ் பீரோ) விவரப்படி உலக மக்கட்தொகையில் 55.9 விழுக்காட்டினர் ஆசியாவைச் சேர்ந்தவர்களாவர். இவர்களுள் 44.8 விழுக்காட்டினர் இணையப் பயனர்களாக உளர். 2012 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30ஆம் நாள் கணக்கெடுப்பு, இணையத்தைப் பயன்படுத்தும் ஆசிய மக்களின் பட்டியலில் மலேசியா 10ஆவது இடத்தில் இருப்பதாகக் காட்டுகிறது. அதே ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாளின் கணக்கெடுப்பில் சமூகவலைத்தளமான முகநூலைப் பயன்படுத்தும் ஆசியர்கள் பட்டியலில் மலேசியா 6ஆம் இடத்தை எட்டியுள்ளது. மேலும், மலேசிய மக்கட்தொகையோடு ஒப்பிடுகையில் 46.57 விழுக்காட்டினர் முகநூலைப் பயன்படுத்துகின்றனர் என்பதை அறியலாம். (http://www.internetworldstats.com/stats3).

இவ்வேற்றத்திற்கும் மாற்றத்திற்கும் நம் நாட்டின் அரசியலும் கல்வித் திட்டங்களும் பெரும் பங்காற்றியிருக்கின்றன என்பதே உண்மை. மலேசிய கல்வித் துறையில் அதுவும் குறிப்பாகத் தமிழ்க்கல்வி வளர்ச்சிக்குப் பயன்படக்கூடிய முகநூல் பக்கங்களைத் தெரிந்துகொள்வதற்கு முன்னர், அதற்கு அடிப்படையாக விளங்கும் மலேசியாவில் தமிழ்க் கல்வியின் நிலை, இணையத்தில் தமிழ்மொழியின் வளர்ச்சி என்பனவற்றையும் அறிதல், இக்கட்டுரையைப் புரிந்துகொள்ள துணை செய்யும்.

மலேசியாவில் தமிழ்க் கல்வி

பல்லின, பன்மொழிச் சூழலில் வாழ்கின்ற சிறுபான்மையினரின் மொழி நிலைப்பாட்டுக்கும் மொழி வளர்ச்சிக்கும் கல்வித்திட்டங்கள் பெரும் துணைபுரிகின்றன. மலேசியாவின் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் தமிழ்க்கல்வி இதற்கு நல்ல சான்றாகும். 1816-இல் பினாங்கு ஃபிரி ஸ்கூலில் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கிய தமிழ் வகுப்பு, கடந்த 197 ஆண்டுகளில் பல மாற்றங்களையும் பரிணாமங்களையும் கண்டு வந்துள்ளது; வளர்ந்துள்ளது. அரசாங்கத்தால் அமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்ற கல்வித்திட்டங்கள், கல்வி நிலைகள் (தொடக்கக் கல்வி, இடைநிலைக்கல்வி, உயர்நிலைக்கல்வி), கல்விக்கூடங்கள், கற்றல்-கற்பித்தல் அணுகுமுறைகள், பயிற்றுத் துணைப்பொருள்கள், பாடநூல்கள் என அனைத்திலும், பிறமொழி கல்வி வளர்ச்சிக்கு ஈடாகத் தமிழ்க் கல்விக்கும் வாய்ப்புகளும் வசதிகளும் வழங்கப்படுகின்றன.

இன்றைய நிலையில் மலேசியாவில் தமிழ்மொழி, தொடக்கப் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை அரசு கல்விக்கூடங்களில் அதிகாரப்பூர்வமாகக் கற்பிக்கப்படுகின்றது. 7 முதல் 12 அகவைக்குட்பட்ட மாணவர்கள் தொடக்கப்பள்ளிகளிலும், 13 முதல் 17 அகவைக்குட்பட்ட மாணவர்கள் இடைநிலை, மேல்நிலைப்பள்ளிகளிலும் 18 அகவைக்கு மேற்பட்டவர்கள் உயர்நிலைப்பள்ளிகள், ஆசிரியர் பயிற்சிக்கழகங்கள், பல்கலைக்கழகங்கள் போன்றவற்றிலும் தமிழ்மொழியைக் கற்றுக்கொள்ளலாம். இடைநிலைக்கல்வியில் நான்காம் ஐந்தாம் படிவங்களில் தமிழ் இலக்கியமும் தனியொரு தேர்வுப் பாடமாக விளங்குகின்றது.

தேசிய அளவில் பாடத்திட்டத்தில் மாற்றங்களோ, சீரமைப்போ செய்யப்படும்பொழுது எல்லாப் பாடங்களைப் போலவே தமிழ்மொழிப் பாடத்திலும் மாற்றங்கள் செய்யப்படுகின்றன. பல்லூடகத்தைப் பயன்படுத்தி கற்றல்-கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனும் நோக்கில், தற்போது மாற்றப்பட்டு வரும் இடைநிலைப் பள்ளிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட பாடத்திட்டத்தில் (கே.பி.எஸ்.எம்.), பாடநூல்களோடு செரிவட்டுகளும் வழங்கப்பட்டன. தமிழ்மொழிப் பாடநூல்களோடும் இத்தகைய செரிவட்டுகள் கல்வி அமைச்சின் ஏற்பாட்டிலேயே வழங்கப்பட்டன. 2004ஆம் ஆண்டு தொடங்கி நம் நாட்டுத் தொடக்கப்பள்ளிகளிலும், இடைநிலைப்பள்ளிகளிலும் இணையக்கல்வி பரவலாக மேற்கொள்ளபடுகின்றது. இருப்பினும்,

தமிழ்மொழிக்கென திட்டமிட்ட முறையான மின்கற்றல் எதனையும் மலேசிய கல்வி அமைச்சு அறிமுகப்படுத்தவில்லை என்றாலும், அதனை வடிவமைத்து மேற்கொள்ள தடைகளேதும் இல்லை.

இணையத்தில் தமிழ்

ஏறக்குறைய 60 ஆண்டுகளுக்கு முன்னர், அதாவது 1950ஆம் ஆண்டு முதற்கொண்டு மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முயற்சிகளினால் உருவானதே, உலகையே ஒரு குவலயக் கிராமமாக (குளோபல் வில்லேஜ்) மாற்றியுள்ள இணையம் (இரபிசிங், 2009). இணையத்தில் பயன்படுத்தப்பட்ட முதல் இந்தியமொழி தமிழ்தான் (சுடலி தியாகராஜன், 2008) என்று இன்று நாம் பெருமைபட்டுக் கொண்டாலும், இணையம் கண்டுபிடிக்கப்பட்ட காலத்திலிருந்து 1980கள் வரை கணினியில் தமிழ் எழுத்துகளைத் தட்டச்சு செய்ய இயலாத நிலை இருந்ததை மறந்துவிடக்கூடாது. திருவாசகம் (2010) இணையத்தில் தமிழ்மொழி வளர்ச்சியை மூன்று படிநிலைகளாகப் பகுத்துக் காட்டுகிறார். முதல் நிலையில் உரோமன் எழுத்துகளில்தாம் தமிழை எழுத முடிந்தது என்றும், இரண்டாவது நிலையில் உரோமன் எழுத்துகளில் தட்டச்சு செய்து பின்னர், தமிழ் எழுத்துகளில் மாற்றிக்கொள்ளக்கூடிய வளர்ச்சி ஏற்பட்டது என்றும், மூன்றாவது கட்ட வளர்ச்சியாகத் தமிழ் எழுத்துகளையே நேரடியாகத் தட்டச்சு செய்துகொள்ளக் கூடிய வளர்ச்சி ஏற்பட்டது என்றும் கூறுகிறார்.

அண்மைய ஆண்டுகளில் இணையத்தில் தமிழ்மொழி பயன்பாடு பல்வேறு நிலைகளில் பன்மடங்கு வளர்ச்சி கண்டுள்ளது. வலைப்பக்கங்கள், மின்னஞ்சல், வலைப்பூ என்பனவற்றோடு தற்போது முகநூல் போன்ற சமூக வலைத்தளத்திலும் தமிழிலேயே உரையாடும் வாய்ப்பும் வசதியும் தமிழ் இணையப் பயனர்களுக்கு உண்டு. மேலும், இணையத்தளங்களில், மொழி கற்றலுக்குத் தேவையாக விளங்கும் மின்-நூல்கள், மின்-நூலகம், மின்-இதழ்கள் போன்ற பலவற்றையும் தமிழ்மொழியிலேயே பார்க்கவும் படிக்கவும் இயலும்.

ஆய்வின் நோக்கம்

அரசியல், பொருளாதாரம், மருத்துவம், அறிவியல், விளையாட்டு என்று பல்துறைகள் சார்ந்த முகநூல்பக்கங்கள் பல உருவாக்கப்பட்டுள்ளன. அவ்வகையில் கல்வி சார்ந்த அதுவும் குறிப்பாகத் தமிழ்க்கல்வி அல்லது தமிழ்மொழியோடு தொடர்புடைய, மொழித்திறன்களை வளர்க்கத் துணைசெய்யும் முகநூல் பக்கங்கள் உளவா எனும் ஐயம் தெளியவே இக்கட்டுரை படைக்கப்படுகிறது.

முகநூல் சட்டப்படி, 13 அகவைக்கு மேற்பட்டவர்கள்தாம் முகநூலில் கணக்கு (அக்கௌண்டு) வைத்துக்கொள்ள முடியும். இவ்விதிப்படி 12 அகவைக்குட்பட்ட தொடக்கப்பள்ளி மாணவர்கள் முகநூலைப் பயன்படுத்தக் கூடாது என்பதால் முகநூலைப் பயன்படுத்த அனுமதியுள்ள இடைநிலைப்பள்ளி மாணவர்களை இலக்காகக் கொண்டு இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது. யாருடைய வற்புறுத்தலும் இல்லாமல் இடைநிலைப்பள்ளி மாணவர்கள், தாமாகவே விரும்பி ஈடுபடும் இந்த முகநூல் பக்கத்தை அவர்களது மொழித்திறன்களை வளர்ப்பதற்கு எப்படிப்

பயன்படுத்திக் கொள்ளலாம் எனும் வினாவே இக்கட்டுரை எழுதுவதற்குக் காரணமானது. பொழுதைக் கழிக்கவும், நண்பர்களோடும் தெரிந்தவர்களோடும் அரட்டை அடிப்பதற்கும் மட்டுமே முகநூலைப் பயன்படுத்தும் மாணவர்களுக்குத் தமிழ்மொழியில் அமைந்துள்ள, தமிழ்மொழி வளர்ச்சிக்குத் துணைசெய்யக்கூடிய முகநூல் பக்கங்களை அடையாளங்காட்டுவதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாகும். மேலும், அப்பக்கங்களின் துணையோடு இடைநிலைப்பள்ளி மாணவர்களின் மொழியாற்றலை வளர்க்கும் வழிமுறைகளையும் இக்கட்டுரை விவரிக்கும்.

மொழிவளர்க்கும் முகநூல் பக்கங்கள்

முகநூலில் இடம்பெற்றுள்ள எல்லாப் பக்கங்களிலுள்ள பதிவுகளையும் எல்லாராலும் பார்க்க முடியாது. குறிப்பாகத் தனிநபர், தம்முடைய இணைப்பில் ஒருவரை ஏற்றுக் கொண்டாலொழிய அவருடைய முகநூல் பக்கத்திலுள்ள பதிவுகளைப் பிறரால் பார்க்க முடியாது. ஆனால், திறந்த குழுக்கள், பக்கங்கள் அல்லது சமூகங்கள், நூல்கள் போன்றவற்றிலுள்ள பதிவுகளை முகநூல் கணக்கு வைத்துள்ள எவரும் பார்வையிடவும், கருத்துரைக்கவும் பகிர்ந்துகொள்ளவும் இயலும். அவ்வகையில், "பக்கங்கள்", "நூல்கள்" எனும் இரு தலைப்புகளின் கீழ் பட்டியலிடப்பட்ட நான்கு பக்கங்கள்தாம் இந்த ஆய்வுக்குட்படுத்தப்பட்டன.

முகநூலில் "மக்களுக்காகவும் இடங்களுக்காகவும், பொருட்களுக்காகவும் தேடுக" எனும் பகுதியில் தட்டச்சு செய்து, கிடைக்கப்பெற்ற இருபதுக்கும் மேற்பட்ட பக்கங்களிலிருந்து, வரிசைமுறையின்றி (ரேண்டம்) தேர்வு செய்யப்பட்ட, ஆசிரியர் பக்கம், படித்ததில் இரசித்தது, தகவல் புத்தகம், தமிழ் எனும் நான்கு பக்கங்கள் மட்டுமே ஆய்வுப்பொருளாகக் கொள்ளப்பட்டன. அப்பக்கங்களின் உள்ளடக்கம், கற்றல்-கற்பித்தலுக்குப் பயன்படுத்தும் வழிமுறைகள் ஆகியனவற்றைத் தொடர்ந்து நோக்குவோம்.

க) ஆசிரியர் பக்கம்

"ஆசிரியர் பக்கம்" எனும் பெயரில் அமைந்த முகநூல் பக்கம் (http://www.facebook.com/Aasiriyarpakkam) 2012ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் அமைக்கப்பட்டது. தமிழர் கலை, பண்பாடு, இலக்கியம் போன்ற படைப்புகளை வரவேற்கும் இப்பக்கத்தை 7,583 பேர் விரும்புகின்றனர். இப்பக்கத்தில் காணும் படங்கள் எனும் எழுத்தில் சொடுக்கினால் இருநூற்றுக்கும் மேற்பட்ட படங்களையும் அவற்றில் அல்லது அவற்றைப்பற்றித் தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட கருத்துகளையும் காணலாம். மேலும், அப்படங்களைப் புறநானூறு (65 புகைப்படங்கள்), குறுந்தொகை (4 புகைப்படங்கள்), தமிழர் வரலாறும் பெருமைகளும் (30 புகைப்படங்கள்), திருக்குறள் (7 புகைப்படங்கள்) போன்ற தலைப்புகளில் தொகுத்தும் வழங்கியுள்ளதால் ஆசிரியர்களுக்குத் தேவையான தலைப்புகளின் அடிப்படையிலும் படங்களைத் தேர்ந்தெடுத்துப் பகிரலாம்.

ஆசிரியர்கள், அவரவர் மாணவர்களுக்கு ஏற்புடைய பொருத்தமான படங்களைத் தேர்ந்தெடுத்து, தத்தம் முகநூல் பக்கங்களில் பகிர்ந்துகொண்டால் அவர்களோடு இணைப்பில் உள்ள மாணவர்கள் அத்தகவல்களை அறிந்துகொள்வர். புறநானூறு எனும் தொகுப்பில், கடந்தாண்டு ஐந்தாம் படிவ மாணவர்கள் இலக்கியப் பாடத்தில் பயின்ற காவிய நாயகி எனும் நாடகத்தில் வரும் வெண்ணிக்குயத்தியாரின் பாடலும் அதற்கான விளக்கமும் இடம்பெற்றிருக்கின்றன. இப்படிப்பட்ட தகவலைப் பகிர்ந்துகொள்வதால் வகுப்பறை நேரத்துக்குப் பிறகும் மாணவர்களை வாசிக்கத் தூண்டுகிறோம். மாணவர்களின் வாசித்தல் திறனை வளர்ப்பதோடு அவர்களுக்கு இலக்கியச் சுவையை ஊட்டவும் இத்தகைய முகநூல் பக்கங்கள் நமக்குத் துணை செய்கின்றன.

உ) படித்ததில் இரசித்தது

"படித்ததில் இரசித்தது" எனும் முகநூல் பக்கமும் (http://www.facebook.com/albilganesh2) இடைநிலைப்பள்ளி மாணவர்களின் மொழியாற்றலை வளர்ப்பதற்குத் துணைசெய்யும் என்பதில் ஐயமில்லை. இப்பக்கத்தின் முகப்பில் பொழுது போக்கிற்கான வலைத்தளம் என்றும் இணையத்தில் படித்ததில் இரசித்தவற்றை இணைப்பதோடு மற்றவர்களுக்கும் பகிருங்கள் என்றும் எழுதப்பட்டுள்ளது. 2012ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 27ஆம் நாள் அமைக்கப்பட்ட இப்பக்கத்தை 769 பேர் விரும்புகின்றனர். 201 படங்களைக் கொண்ட இப்பக்கத்தில் மலேசிய நாளிதழ் செய்திகளும், மாணவர்களை நல்வழிப்படுத்தக் கூடிய கருத்துகளும், மொழிப்பற்றை ஏற்படுத்தக்கூடிய கூற்றுகளும், விவேகானந்தரின் போதனைகளும் எனப் பலதரப்பட்ட கருத்துகள் இடம்பெற்றுள்ளன. நல்ல பல கருத்துகளும் காட்சிகளும் இடம்பெற்றிருந்தாலும் காதல், சினிமா என்பன போன்ற இடைநிலைப்பள்ளி மாணவர்களுக்குப் பொருந்தாத சில தகவல்களும் இடம்பெற்றிருக்கின்றன. எனவே, இப்பக்கத்திலுள்ள கருத்துகளைப் பகிரும் பொழுது ஆசிரியர்கள் சற்றுக் கவனமுடன் செயல்பட வேண்டும்.

இப்பக்கத்திலுள்ள நாளிதழ் செய்திகளை முகநூலில் பகிர்வதோடு, அவற்றையொட்டிய மாணவர்களின் கருத்துகளையும் வினவலாம். மாணவர்கள் ஆர்வமாக ஈடுபடும் வகையிலும், சிந்திக்க வழிவகுக்கும் நிலையிலும் ஆசிரியர்கள் வினாக்களை அமைக்க வேண்டும். இப்பக்கத்திலுள்ள பதிவுகளை முகநூல் உரயாடலில் மட்டுமின்றி, வகுப்பறைக் கற்றலிலும் ஆசிரியர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். வகுப்பறைக் கற்றலுக்கு அனியப் படுத்தும் நோக்கிலும் ஆசிரியர்கள் இந்த முகநூல் பக்கத்திலுள்ள படங்களைப் பகிர்ந்துகொள்ளலாம். மேலும், மிகச் சுருக்கமாக அமைந்த விவேகானந்தரின் போதனைகளைப் பகிர்வதால், மாணவர்களை வாசிக்கத் தூண்டுவதோடு அவர்களுக்குத் தன்னம்பிக்கையும் ஊக்கமும் ஊட்டி அவர்களை நல்வழிப்படுத்தவும் முடியும்.

ஈ) தகவல் புத்தகம்

புத்தகம் என்று தட்டச்சு செய்து தேடியதில் கிடைத்த "தகவல் புத்தகம்" எனும் முகநூல் பக்கம் (http://www.facebook.com/TakavalPuttakam) 2012ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 10ஆம் நாள் உருவாக்கப்பட்டது. அஃது உருவாக்கப்பட்டு ஏழு மாதங்களில் 3,050 விரும்பிகளைப் பெற்றுள்ள இப்பக்கத்தில் 233 படங்கள் இடம்பெற்றுள்ளன. இளையோருக்குரிய சிறுகதைகள், தன்னம்பிக்கை வாசகங்கள், விவேகானந்தரின் கூற்றுகள், தமிழறிஞர்கள், அறிவியலாளர்கள் பற்றிய தகவல்கள், பொது அறிவு கருத்துகள் எனப் பல்வகைப் பனுவல்களையும் படங்களையும் கொண்டுள்ள இம்முகநூல் பக்கம் ஒரு தகவல் களஞ்சியமாகவே விளங்குகிறது.

இடைநிலைப் பள்ளிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட பாடத்திட்டத்தில், நான்காம், ஐந்தாம் படிவ மாணவர்கள் பல்வகை சிறுசிறு பனுவல்கள் உணர்த்தும் கருத்துகளைப் புரிந்துகொண்டு, அவற்றை எடுத்துரைக்கவும் அறிந்திட வேண்டும். மாணவர்களிடையே இத்திறனை வளர்க்க ஆசிரியர்கள், "தகவல் புத்தகம்" எனும் முகநூல் பக்கத்தை நல்லதொரு பயிற்றுத் துணைப் பொருளாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். இப்பக்கத்திலுள்ள படங்களைப் பகிர்வதோடு, அப்படங்களைப் பற்றிய சிறுசிறு கேள்விகளையும் இணைத்து மாணவர்களைக் கருத்துரைக்கத் தூண்டலாம். தெரிபொருள், மறைபொருள் ஆகிய இரண்டுநிலைகளிலும் கருத்துரைக்கும் வகையில் கேள்விகளை அமைக்க வேண்டும். இதன் வழி மாணவர்களைத் தேர்வுக்குத் தயார்படுத்துவதோடு, அவர்களது எழுத்தாற்றலையும் சிந்தனையாற்றலையும் வளர்க்க முடியும்.

உ) தமிழ்

கல்வி இணையத்தளம் எனக் குறியிடப்பட்டுள்ள "தமிழ்" எனும் முகநூல் பக்கம் (http://www.facebook.com/pages/தமிழ்-Tamil/141482842472) 2009ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 3ஆம் நாள் உருவாக்கப்பட்டது. தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும் எனும் நோக்கத்தோடு அமைக்கப்பட்ட இப்பக்கத்தை 3,19,173 பேர் விருப்புகின்றனர். மூன்றரை ஆண்டு அகவையான இப்பக்கத்தில், நடப்பு விவகாரங்கள், பொன்மொழிகள், உங்களுக்குத் தெரியுமா?, அறிவியலும் தொழில்நுட்பமும், தமிழின் சிறப்புகள், கேலிச் சித்திரங்கள், தமிழ் மருத்துவம், தமிழர் வரலாறு, தமிழ் அறிஞர்கள் என்பன போன்ற 71 தொகுதிகளில் 1,991 படங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், குறிப்புகள் எனும் தலைப்பின் கீழ் தமிழ் இலக்கணம், தமிழ்ப் பழமொழிகள், பாரதியார் பாடல்கள், பாரதிதாசன் கவிதைகள், ஆயக்கலைகள் 64 என ஐநூறுக்கும் மேற்பட்ட கட்டுரைகளும் சிறுகதைகளும் இப்பக்கத்தில் இணைக்கப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் தத்தம் மாணவரின் தரத்திற்கேற்ற கட்டுரைகளைத் தங்களது முகநூலில் பகிர்ந்து மாணவர்களின் மொழித்திறனை வளர்ப்பதோடு மொழிப்பற்றையும் வளர்க்கலாம்.

மேற்கூரியவற்றைத் தவிர இப்பக்கத்தில் கண்ணுக்கும் காதுக்கும் விருந்தளிக்கக் கூடிய காணொலிகளும் இணைக்கப்பட்டுள்ளன. உலகத் தமிழருக்குப் பெருமை சேர்க்கும் வகையில், கனடிய நாடாளுமன்றத்தில் இராதிகா சிற்சபேசன் தமிழில் ஆற்றிய உரை, தமிழ் அறிஞர்களின் இலக்கிய உரைகள், பொங்கல் பாடல், பட்டிமன்றங்கள், தன்னம்பிக்கை உரைகள், எழுச்சி உரைகள் என ஒன்று முதல் இருபது மணித்துளிகளில் அமைந்த 117 காணொலிகள் இப்பக்கத்தில் இடம்பெற்றுள்ளன. எழுத்துவடிவில் உள்ளவற்றைக் காட்டிலும் காட்சி வடிவில் உள்ளவை மாணவர்களைக் கவர்வதோடு, அவர்களது புரிதலுக்கும் துணை செய்யும். எனவே, வாசிக்கச் சிரமப்படும் மாணவர்கள் பயனடையும் வகையிலும் மாணவர்களின் கேட்டல் திறனை வளர்ப்பதற்கும் ஆசிரியர்கள் இக்காணொலிகளைத் தங்கள் முகநூல் பக்கங்களில் பகிர்ந்துகொள்ளலாம்.

பரிந்துரைகள்

ஆங்கிலத்தைப் பயன்படுத்துவது போல் எல்லாக் கணினிகளிலும் எல்லாராலும் தமிழை இலகுவாகப் பயன்படுத்த முடிவதில்லை அல்லது பயன்படுத்த அறிந்திருக்கவில்லை. இணையத்தில் தமிழ்மொழியைப் பயன்படுத்தும் பலர் குறிப்பாக மலேசியத் தமிழர்களுள் பெரும்பாலோர், தாமாகவே தட்டுத்தடுமாறிதான் தமிழைப் பயன்படுத்த அறிகின்றனர். எனவே, "ஊடகங்களில் வாடும் தமிழ்", "தொழில்நுட்ப வளர்ச்சியால் மொழி சிதைக்கப்படுகின்றது" என்று, வெறும் குறைகளை மட்டுமே ஆராய்ந்து சமூக வலைத்தளங்களில் தமிழ்மொழி பயன்பாட்டினை நிராகரிக்காமல், அவற்றை நிறைகளாக மாற்றுவது எப்படி என்று சிந்திக்க வேண்டும். தமிழில் தட்டச்சு செய்ய இயலாத நிலையில் உரோமன் எழுத்துகளால் தமிழில் உரையாடியவர்கள்தாம் இன்று இணையத்தில் தமிழ்மொழி வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. எனவே, தமிழில் தட்டச்சு செய்யத் தெரியாத மாணவர்கள் ஆங்கிலத்திலோ உரோமன் எழுத்திலோ தட்டச்சு செய்தால் அக்கருத்துகளை ஒரேயடியாக நிராகரிக்காமல் அல்லது தமிழில்தான் தட்டச்சு செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்தித் துரத்தி விடாமல், அவர்களையும் அரவணைத்து, வழிகாட்டி அவர்களும் நாளடைவில் தமிழில் தட்டச்சு செய்ய ஊக்குவித்து, அவர்களது மொழித்திறன்களை வளர்க்க வேண்டியது ஆசிரியர்களின் கடன்.

நிறைவு

மொழித்திறனை வளர்ப்பதற்கு முறைசார் (ஃபோர்மல்) கல்வியைப் போலவே அல்லது அதைக்காட்டிலும் விளைபயன்மிக்க பலனை, முகநூல் போன்ற ஊடகங்களின் வழி வழங்கப்படும் முறைசாரா (இன்ஃபோர்மல்) கல்வியால் ஏற்படுத்த முடியும். அதற்கு, இந்த முகநூல் பக்கங்களை முறையாகக் கையாள்வது எப்படி, எவற்றைப் பதிவேற்றலாம், எவற்றைப் பிறரோடு பகிர்ந்துகொள்ளலாம் என்பனவற்றை ஆசிரியர்கள் அறிந்துகொள்வதோடு மாணவர்களுக்கும் வழிகாட்ட வேண்டும்.

மேற்கோள் நூல்கள்:

இரபிசிங், ம. செ. (2009). ***தமிழ் இணையம் / தமிழ் வலைத்தளங்கள்: பங்களிப்பும் பயன்பாடுகளும்.*** சென்னை: நர்மதா பதிப்பகம்.

_____ (2010). ***தமிழ் இணையம் 2010 கோவை;*** தமிழ்க் கற்றல் கற்பித்தலில் மின் கற்றல் முறை. (மாநாட்டுக் கட்டுரை). கோவை.

சுடலி தியாகராஜன். (2008). ***ஆய்வுக்கோவை,*** தமிழ்க் கணினியில் தரப்படுத்தப்பட்ட குறிமுறை. சென்னை: பச்சையப்பன் கல்லூரி.

திருவாசகம், க. (2010). ***உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டுச் சிறப்பு மலர்,*** கணினித் தமிழ் வளர்ச்சி. (மாநாட்டுக் கட்டுரை). தமிழ்நாடு

Jane Hart, (2009). *From e-learning to social learning* - the slides from a Cafe Session at the Learning & Skills Group Conference. http://c4lpt.co.uk/janes-articles-and-presentations/from-e-learning-to-social-learning/ (retrieved on 8.3.13)

Jane Hart, (2011). ***Social Media + Learning = much more than Social Learning.*** http://www.elearningcouncil.com/content/social-media-learning-more-social-learning-jane-hart (retrieved on 8.3.13)

Seetha Lakshmi. (2011). ***Tamil Internet 2011;*** Facebook and Tamil Language in Singapore's Teacher Education. (Conference Paper). USA: University of Pennsylvania.

http://www.facebook.com/Aasiriyarpakkam (retrieved on 11.03.2013)

http://www.facebook.com/albilganesh2 (retrieved on 11.03.2013)

http://www.facebook.com/pages/தமிழ்-Tamil/141482842472 (retrieved on 11.03.2013)

http://www.facebook.com/TakavalPuttakam (retrieved on 11.03.2013)

http://www.internetworldstats.com/stats3.htm#asia (retrieved on 8.03.13)

திரையிசைப் பாடல்கள் வழி குற்றியலுகரம் கற்பித்தல்

மனோன்மணி தேவி அண்ணாமலை,
மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்.

1 முன்னுரை

தமிழ்மொழியின் செம்மைக்கு முதலானது அதன் பண்டைச் செவ்வியல் இலக்கியமே. அச்செம்மையைத் தொடர்ந்து காப்பதில் இலக்கணத்திற்குப் பெரும்பங்குண்டு. .இலக்கணம் ஒரு மொழிக்கு முதுகெலும்பு போன்றது.இலக்கணமின்றி மொழி சிறந்து விளங்காது என்கின்றார் அ.கி. பரந்தாமனார் (1984:3). இதனை மேலும் விளக்கிக் கூறினால், மொழி என்னும் பயிருக்கு இடப்பட்ட வேலியே இலக்கணம் ஆகும். அவ்வகையில், தமிழின் செம்மையைக் காக்கும் நோக்கில், உருவாக்கப்பட்ட முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தில், எழுத்ததிகாரத்தின் முதல் இயலான நூன் மரபில் இரண்டாவது சூத்திரத்தில், குற்றியலுகரம் எனும் சொல்லாட்சி நமக்கு அறிமுகம் ஆகின்றது.

2.ஆய்வின் நோக்கம்

மலேசிய நாட்டில், தொடக்கப்பள்ளி தொடங்கி பல்கலைக்கழகம் வரை, குற்றியலுகரம் எனும் இலக்கணக்கூறு தமிழ்மொழிப்பயிலும் மாணவர்களுக்குப் பாடத்திட்டத்தில் புகுத்தப்பட்டுள்ளது. ஆனால், எல்லா நிலையிலும் மாணவர்கள், குற்றியலுகர விதிகளைப் புரிந்து கொள்வதில் சிக்கலை எதிர்நோக்குகின்றனர். இதற்குக் காரணம் ஆசிரியர்களின் கற்பித்தல் அணுகுமுறையாகும். இன்றைய மாணவர்கள் தங்களுக்குக் கற்பிக்கப்படும் அனைத்து விதிகளுக்கும் பயன்பாட்டு மரபுகளும் தங்கள் அறிவு ஏற்றுக்கொள்ளும் விளக்கங்களும் கூறப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். எனவே, அவர்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு அறிவுப்பூர்வமான விளக்கத்தைக் கூறி, கற்பித்தல் நடவடிக்கை நடத்த வேண்டியது ஆசிரியர் கடப்பாடாகும். அடுத்து, மாணவர்களுக்குப் பயிற்சிகள் கொடுக்கும் போதும் எடுத்துக்காட்டுகள் கொடுக்கும் போதும், அவர்கள் அதிகம் ஆர்வம் காட்டும் திரையிசைப்பாடல்களைப் பயன்படுத்தும் முறையானது மாணவர்கள் கற்றல் கற்பித்தலை எளிதில் புரிந்து கொள்ள வழிவகுக்கும். இந்த அடிப்படையில் குற்றியலுகரம் குறித்த ஆழமான அறிவு ஆசிரியர்களுக்கு இருக்க வேண்டும். அதனை முறையாக மாணவர்களுக்குச் சேர்க்க வேண்டும்.

3. தமிழ் எழுத்துகளில் குற்றியலுகரம்

தமிழ் எழுத்துகள், அடிப்படையில் முதலெழுத்து சார்பெழுத்து என இருவகைப்படும்.மற்ற எழுத்துகளைச் சாராமல் தனியே உருவாவது முதலெழுத்து. இதற்கு தனி வரி வடிவம் உண்டு. மற்ற எழுத்துகளைச் சார்ந்து தோன்றுவது சார்பெழுத்து. இதற்குத் தனிவரிவடிவம் இருதலும் இல்லாமையும் உண்டு. தொல்காப்பியர் கூற்றுப்படி தமிழில் மொத்தம் மூன்று சார்பெழுத்துகள் உள. அவை குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் என மூவகைப்படுகின்றன.

4. குற்றியலுகரம்

குற்றியலுகரம் என்பது குறுமை + இயல் + உகரம்> குறு + இயல்+உகரம் > குற்று + இயல் + உகரம் = குற்றியலுகரம் என்று புணர்ந்து உருவான சொல். குறுகிய இயல்புடைய உகரம் என்பது இதன் பொருள்.

தனிநெடிலுக்குப் பிறகும் இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துகளுடைய சொல்லின் இறுதியிலும் வருகிற, கு,சு,டு,து,பு,று என்ற வல்லின மெய்யுடன் சேர்ந்த உகர ஒலிகள் அரை மாத்திரையளவே ஒலிக்கின்றன. அதாவது இயல்பான உகர உயிரின் ஒலிப்பில் பாதியளவே ஒலிக்கின்றன. இதனால் இவை ஒரு மாத்திரை உடைய முழு உகரங்கள் அல்ல என்பதை உணர்த்துவதற்காகக் குற்றியலுகரம் எனப்படுகின்றன. இவை இடஞ்சார்ந்து ஒலிப்பதால், இடஞ்சார்ந்தே அறியப்படுகின்றன. இவற்றுக்குத் தனி வரிவடிவம் இல்லை (சி.இலக்குவனார்,2011:30).

5. குற்றியலுகரம் வல்லினமெய்களின் மீது மட்டும் ஊர்ந்து வருவதற்கான காரணம்.

குற்றியலுகரம் என்பது ஒரு மாத்திரையுடைய உகரக்குறில் குறுகியதால் வந்த ஒலியன்று. அது நெடிலுக்குப் பின்னும்,இரண்டெழுத்துக்கு மேலுடைய சொல்லின் இறுதியிலும் வரும் வல்லின மெய்களைப் புலப்படுத்துவதற்காக அரை மாத்திரை ஒலியாகவே தோன்றும் தனி உயிரொலியாகும் (சிவஞானமுனிவர், 1952:30). இந்தத் தனி உயிரொலி, க்,ச்,ட்,த்,ப்,ற் எனும் ஆறு வல்லின மெய்களின் மீது மட்டுமே ஊர்ந்து வருவதற்குக் காரணம் உண்டு. வல்லினமெய்கள் ஆறும் ஒலிப்பிலா ஒலிகள் அல்லது அடைப்பொலிகள் எனப்படுகின்றன. ஓசையில்லா ஒலிகள் என்பது இதன் பொருள். இவற்றை ஒலிக்கும் முயற்சியில் ஒலிக்காற்று குரல்வளை வழியாக வெளிப்பட முயலும் போது, அண்ணம், நாவு,பல்,இதழ் ஆகிய ஒலியுறுப்புகள், ஒலிக்காற்றை வெளியேற விடாமல் வாயறையில் தடை செய்கின்றன. இத்தடைகளைக் கடந்து ஒலிக்காற்று வெளிப்பட, இந்தத் தனி உயிரொலி ஓடி வந்து துணைபுரிகின்றது. மேலும் விரித்துக்கூறினால், ஒலிப்பில்லாத ஈற்று வல்லின மெய்யொலியைச் செவிக்குப் புலப்படுத்துவதற்காக ஒலியுறுப்புகள் இடையேற்பாடாகச் சேர்த்துக்கொண்ட குற்றுயிரொலியே குற்றியலுகரம் என்கின்றார் செ.சீனி நைனா முகம்மது (2010:3).எடுத்துக்காட்டாக 'க்' என ஒலிக்க முயலும் போது, அடி நாவும் உட்புற அண்ணமும் ஒட்டிக்கொள்கின்றன.

எடுத்துக்காட்டாக 'க்' என ஒலிக்க முயலும் போது அடி நாவும் உட்புற அண்ணமும் ஒட்டிக்கொள்கின்றன. ஒலிக்காற்று வாயறையில் இருந்து வெளியேற இடைவெளியே இல்லாத நிலையில் ஒரு சிறிய உயிரொலியைச் சேர்த்துக்கொள்ளும்போதுதான், ஒலிக்காற்று வெளியேற வழி ஏற்பட்டு 'க்' எனும் ஒலிப்பிலா வல்லின மெய்யை நம்மால் ஒலிக்க இயலுகிறது.

6. மெல்லின இடையின மெய்களின் மீது ஊர்ந்து வராமைக்கான காரணம்.

ஒவ்வொரு வல்லின மெய் பிறக்கும் இடத்திலும் முயற்சியிலும்ஒவ்வொரு மெல்லின மெய்யும் பிறப்பதாயினும் மெல்லின மெய்கள் பிறக்கும்போது ஒலிக்காற்று மூக்கைச் சார்ந்து வெளிப்பட வழி இருப்பதால் அவற்றிற்கு உயிரொலியின் துணை தேவைப்படுவதில்லை. சான்றாக, 'ம்' எனும் ஒலியை இதழும் இதழும் இணந்த நிலையிலும் தொடர் இசை செய்ய முடியும். எ.காட்டு பாடல் வரி, நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேச வேண்டும்.ம்ம்ம்ம்) காரணம் இதழ் மூடிய நிலையில் ஒலிக்காற்று மூக்கின்வழி வெளியே சென்று ஒலி எழுப்புகிறது. ஆனால், வல்லினமெய்களை ரீங்காரம் செய்ய இயலாது. அது போலவே, குரல்வளை ஒலிகள் எனக்கூறப்படும் இடையின மெய்களின் ஒலித்தன்மை உயிருக்கும் மெய்யுக்கும் இடையில் இருப்பதால் ஒலிக்காற்றுத் தடைகளை கடந்து வாயறையின் இரு மருங்கிலும் இருக்கும் இடைவெளியில் (நாக்கின் வலதுபுறமும் இடதுபுறமும்) வெளிப்பட்டு ஓசையை வெளிக்கொண்டு வருகிறது.

7. குற்றியலுகரத்தின் வகைப்பாடு

குற்றியலுகரத்தின் வல்லின மெய்யொலி அதன் ஈற்றயல் (இறுதிக்கு முந்திய)ஒலியின் பாதிப்பால் வேறுபடுகிறது. இந்த வேறுபாட்டின் அடிப்படையில் குற்றியலுகரம் ஆறுவகைப்படும்.

7.1 வன்றொடர்க்குற்றியலுகரம்

குற்றியலுகரத்துக்கு முந்திய எழுத்து வல்லின மெய்யானால் இந்த வல்லின மெய்யும் இறுதியிலுள்ள வல்லினக் குற்றியலுரமும் சேர்ந்து வன்மையாக ஒலிக்கின்றன. எனவே, வல்லின மெய்யைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் வன்றொடர்க் குற்றியலுகரம் என்று பெயர்பெற்றது.

காட்டுகள்:

உப்பு- ப்பு என வல்லினமெய்யைத் தொடர்ந்ததால் வன்றொடர்க்குற்றியலுகரம்
மூச்சு - ச்சு என வல்லினமெய்யைத் தொடர்ந்ததால் வன்றொடர்க் குற்றியலுகரம்

மேலே கண்டதுபோல், குற்றியலுகரத்திலுள்ள அதே வல்லின மெய் ஈற்றயலாக வரவேண்டும் என்பதில்லை. வேறோரு வல்லினமெய் ஈற்றயலாக வந்தாலும் அது வன்றொடர்க்குற்றியலுகரமே.
காட்டுகள்:

மேற்கு - ற்கு என வேறு வல்லின மெய்யைத் தொடர்ந்த வன்றொடர்க்குற்றியலுகரம்
நட்பு - ட்பு என வேறு வல்லின மெய்யைத் தொடர்ந்த வன்றொடர்க்குற்றியலுகரம்

7.2 மென்றொடர்க்குற்றியலுகரம்

குற்றியலுகரத்துக்கு முந்திய எழுத்து மெல்லின மெய்யானால், இந்த மெல்லின மெய்யும் இறுதியிலுள்ள வல்லினக் குற்றியலுகரமும் சேர்ந்து மென்மையாக ஒலிக்கின்றன. எனவே, மெல்லின மெய்யைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் மென்றொடர்க் குற்றியலுகரம் என்று பெயர்பெற்றது.

காட்டுகள்:

பந்து _ ந்து என மெல்லின மெய்யைத் தொடர்ந்ததால் மென்றொடர்க்குற்றியலுகரம்

கன்று - ன்று என மெல்லின மெய்யைத் தொடர்ந்ததால் மென்றொடர்க்குற்றியலுகரம்

7.3 இடைத்தொடர்க் குற்றியலுகரம்

குற்றியலுகரத்திற்கு முந்திய எழுத்து இடையின மெய்யானால், இந்த இடையின மெய்யும் இறுதியிலுள்ள வல்லினக் குற்றியலுகரமும் சேர்ந்து வன்மை குறைந்து ஒலிக்கின்றன. எனவே, இடையின மெய்யைத் தொடர்ந்துவரும் குற்றியலுகரம் இடைத்தொடர்க் குற்றியலுகரம் என்று பெயர்ப்பெற்றது. காட்டுகள்:

அமிழ்து - ழ்து என இடையினமெய்யைத் தொடர்ந்ததால் இடைத்தொடர்க்குற்றியலுகரம்.

7.4 உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்

குற்றியலுகரத்துக்கு முந்திய எழுத்து உயிர்மெய்யானால் இந்த உயிர்மெய்யிலுள்ள உயிரும் வல்லினக் குற்றியலுகரமும் சேர்ந்து வன்மை குறைந்து ஒலிக்கின்றன. இங்கு ஈற்றயலாக வருவது உயிர்மெய் என்றாலும் அதிலுள்ள உயிரே குற்றியலுகரத்துக்கு முந்தியதாகிறது. காட்டாக, அழகு என்பதில் 'கு' குற்றியலுகரம். இதற்கு முந்தியுள்ள 'ழ' உயிர்மெய் என்பதால் இதில் (ழ்+அ) என இரண்டு எழுத்துகள் உள்ளன. இவை இரண்டில் அ என்ற உயிரே 'கு' என்ற குற்றியலுகரத்திற்கு முந்தியுள்ளது. (அழகு + அ(ழ்அ)கு). இதன்படி, 'அ' என்ற உயிரெழுத்தையே குற்றியலுகரம் தொடர்கிறது. எனவே, இஃது உயிரைத் தொடர்ந்து வந்ததால் உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் என்று பெயர்ப்பெற்றது. காட்டுகள்:

மரபு - ர்அபு என உயிரைத் தொடர்ந்ததால் உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்.
வயிறு - ய்இறு என உயிரைத் தொடர்ந்ததால் உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்.

7.5 நெடிற்றொடர்க் குற்றியலுகரம்

குற்றியலுகரத்துக்கு முந்திய எழுத்துத் தனிநெடிலானால், அஃது உயிர் என்பதைவிட, நெடில் என்றே கருதப்படும். ஈற்றயலாக வரும் நெடில், உயிராகவோ உயிர்மெய்யாகவே இருக்கலாம். இந்த நெடிலில், குற்றியலுகரத்துக்கு முந்தியிருப்பது உயிர் என்பதால் இஃது உயிர்த்தொடர்க் குற்றியலுகரமாகக் கொள்ளப்பட வேண்டியதேயாகும். ஆயினும், இந்தச் சொல் இரண்டே எழுத்துகளைக் கொண்டதாய் இருப்பதால், இதன் ஈற்றிலுள்ள உகரம் குற்றியலுகரமாக ஒலிப்பதற்குக் காரணமாக அமைவதே, அதற்கு முந்தியிருக்கும் உயிர், நெடிலாக இருப்பதுதான். இந்த உயிர், குறிலாக இருக்குமாயின் இறுதியிலுள்ள உகரம் குற்றியலுகரமாக ஒலிக்காமல் முற்றியலுகரமாகிவிடும். காட்டாக, ஆடு என்ற சொல்லில், 'டு' வுக்கு முந்தியிருக்கும் 'ஆ' என்ற நெடில் 'அ' எனக் குறிலாக இருந்தால் அச்சொல் அடு ஆகும். அடு என்பதிலுள்ள உகரம் குற்றியலுகரமன்று; முற்றியலுகரம். எனவே, 'ஆடு' என்ற சொல்லின் இறுதி உகரம் குற்றியலுகரமாக ஒலிப்பதற்கு, அதற்கு முந்திய உயிர், நெடிலாக இருந்ததே காரணமாயிற்று. இதனால் இரண்டு எழுத்துச் சொல்லின் இறுதியில் கு, சு, டு, து, பு, று என்ற உகரங்கள் இருக்க அதற்கு முந்திய எழுத்து நெடிலாக இருப்பின், அது நெடில் என்பது மட்டுமே கருதப்படும். அதனைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் நெடிற்றொடர்க் குற்றியலுகரம் என்றே பெயர்ப்பெறும். இரண்டு எழுத்துகள்

கொண்ட சொல்லில் மட்டுமே குற்றியலுகரத்துக்கு முந்திய உயிர்நெடில், மேற்கண்டவாறு நெடிலாக கொள்ளப்படும்.காட்டுகள்:

காடு - டு, தனிநெடிலுக்குப்பின் வந்ததால் இது நெடிற்றொடர்க்குற்றியலுகரம்.
ஆறு - று, தனிநெடிலுக்குப்பின் வந்ததால் இது நெடிற்றொடர்க்குற்றியலுகரம்.

இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துகளுடைய சொல்லில் குற்றியலுகரத்துக்கு முந்தியது நெடிலாக இருந்தாலும், அது உயிரைத் தொடர்ந்துவந்த உயிர்த் தொடர்க் குற்றியலுகரமாகவே கொள்ளப்படும். காட்டுகள்:

சாக்காடு - க்ஆடு என உயிரைத் தொடர்ந்ததால் உயிர்த்தொடர்க் குற்றியலுகரமே.
பாலாறு - ல்ஆறு என உயிரைத் தொடர்ந்ததால் உயிர்த்தொடர்க் குற்றியலுகரமே.

7.6 ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்

குற்றியலுகரத்துக்கு முந்திய எழுத்து, ஆய்த எழுத்தானால், இந்த ஆய்தமும் இறுதியிலுள்ள வல்லினக் குற்றியலுகரமும் சேர்ந்து வன்மை குறைந்து ஒலிக்கின்றன. எனவே, ஆய்தத்தைத் தொடர்ந்துவரும் குற்றியலுகரம் ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் என்று பெயர்ப்பெற்றது. காட்டுகள்:

எஃகு - 'கு' என ஆய்தத்தைத் தொடர்ந்ததால் ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்.

8.குற்றியலுகரப்புணர்ச்சி

குற்றியலுகர ஈறுகொண்ட சொற்கள் தமிழில் எண்ணற்றவை. அவற்றுக்கான புணர்ச்சி முறைகள் பின்வரும் மூன்றே விதிகளில் அடங்குவது அவற்றின் புணர்ச்சியை எளிதில் கையாள உதவுகிறது. இவை அடிப்படையில் ஒலிசார்ந்த புணர்ச்சி விதிகளே. எனினும் மென்றொடர்க் குற்றியலுகரம் மட்டும் பொருள் சார்ந்து செயற்படுகிறது.

1. வன்றொடர்க்குற்றியலுகரம் வினையடிச்சொல் தவிர மற்ற எல்லாத் தொடர்களிலும் வலிமிகும். காட்டுகள்:
பார்த்து + பேசு = பார்த்துப்பேசு (பார்த்து என்பது வன்றொடர்க்குற்றியலுகர ஈறு)
கத்து + கடல் = கத்து கடல் (கத்து, வன்றொடர்க்குற்றியலுகர ஈறு ஆனால் ஈங்கு, கத்து என்பது வினையடிச்சொல்லாகும்.
கொட்டு + கரம் = கொட்டுகரம் (கொட்டு - வினையடிச்சொல்)

2. மென்றொடர்க்குற்றியலுகரம் பெயர்பெயர்ப் பொருட்டுத் தொடரான அடைப்பெயர்களிலும், பெயர்வினைத்தொடரான இடச்சுட்டுப்பெயர்களிலும் மட்டும் வலிமிகும். பெயரும் பெயருமாக இருப்பினும் அடுக்குத்தொடரிலும் பிற இடங்களிலும் இயல்பாக புணரும்.
குண்டு + சட்டி = குண்டுச்சட்டி (குண்டு, அடைப்பெயரானதால் மென்றொடர்க்குற்றியலுகரம் வலிமிகுந்தது)
பாம்பு + பாம்பு = பாம்புபாம்பு (அடுக்குப்பெயர், மென்றொடர்க்குற்றியலுகரம் வலிமிகவில்லை.)

கண்டு + பிடித்தான் = கண்டுபிடித்தான் (கண்டு, வினையெச்சம், மென்றொடர்க்குற்றியலுகரம் வலிமிகவில்லை.)

அங்கு + சென்றான் = அங்குச்சென்றான் (அங்கு, இடச்சுட்டுப்பெயர் வலிமிகுந்தது.)

3. இடைத்தொடர், நெடிற்றொடர்,உயிர்த்தொடர்,ஆய்தத்தொடர் ஆகிய நான்கு குற்றியலுகரங்களும் எந்தத் தொடரிலும் வலிமிகுவதில்லை. காட்டுகள்:

அழகு + தமிழ் = அழகுதமிழ் (உயிர்த்தொடர்)

காது + கடுக்கண் = காதுகடுக்கண் (நெடிற்றொடர்)

தொடர்பு + சாதனம் = தொடர்புசாதனம்(இடைத்தொடர்)

எஃகு + கம்பி = எஃகுகம்பி (ஆய்தத்தொடர்)

4. வன்றொடர் அல்லது மற்ற குற்றியலுகரங்கள், ஒற்று இரட்டுவதால் வன்றொடர்க்குற்றியலுகரமாக மாறும்போது, வன்றொடர்க்குற்றியலுகர விதிப்படி வலிமிகும். டு,று என முடிகிற உயிர்த்தொடர், நெடிற்றொடர்க் குற்றியலுகரங்களே புணர்ச்சியில் இவ்வாறு இரட்டுகின்றன.

காட்டுகள்: வயிறு + பசி = வயிற்றுப்பசி

நாடு + பற்று = நாட்டுப்பற்று

5. மொழியிறுதிக் குற்றியலுகரம் மெய்யின் தன்மையை உடையது என்பதால் வருமொழி முதலில் ஓர் உயிரைச் சந்திக்கும் போது, உ கரம் கெட்டுப் புணரும். காட்டுகள்:

காது + அணி = காதணி

8. திரையிசைப்பாடல்கள் வழி பயிற்சிகள்

இவ்வாறு குற்றியலுகரம் குறித்த முழுமையான தகவல்களை மொழியியல் நோக்கில் மாணவர்களுக்குக் கற்பித்த பின்னர், அவர்கள் புரிதலை மேலும் திடப்படுத்தும் நோக்கில் திரையிசைப்பாடல்கள் சிலவற்றை அவர்களிடம் எழுத்து வடிவில் கொடுத்துக், குற்றியலுகரங்களை அடையாளங்காண செய்யலாம். இவ்வாறு செய்வதின் வழி, மாணவர்கள் மகிழ்ச்சியுடனும் ஆர்வத்துடனும் குற்றியலுகரத்தைப் புரிந்து கொள்வர் என்பது திண்ணம்.இலக்கணக் கோட்பாடுகளை இலக்கியங்கலில் எடுத்தாளும் போக்கு மாணவர்களுக்கு இலக்கணத்தில் ஆர்வத்தை ஏற்படுத்த உதவும்.

எடுத்துக்காட்டுப் பாடல்கள்:

பாடல்களில் காணப்படும் குற்றியலுகரங்களை வகைப்பிரித்துக் காட்டு

1. ***நாடு*** அதை ***நாடு***
அதைநாடாவிட்டால் ***ஏதுவீடு***
2. ***வீடு*** வரை உறவு
வீதி வரை மனைவி

காடு வரை பிள்ளை

கடைசி வரை யாரோ

3. ***ஆறு*** மனமே ***ஆறு*** எஇந்த

ஆண்டவன் கட்டளை ***ஆறு***

4. ***அழகு*** குட்டி செல்லம்
உன்னை அள்ளி தூக்கும் ***போது***

உன் ***பிஞ்சு*** விரல்கள் மோதி

நான் நெஞ்சம் ***உடைந்து*** போனேன்

5. மலரே மௌனமா?
மௌனமே வேதமா?

பாதி ஜீவன் ***கொண்டு***

தேகம் ***வாழ்ந்து*** வந்ததோ!

மீதி ஜீவன் என்னை

பார்த்துபோது வந்ததோ!

6. ***பாட்டு*** வரும்- உன்னைப்
பார்த்து கொண்டிருந்தால்***பாட்டு*** வரும்

8.முடிவுரை

தமிழுக்குக் குற்றியலுகரம் உயிர் போன்றது. தமிழ்ச்சொற்களில் உகரத்தில் முடியும் சொற்களே அதிகம். தமிழிலுள்ள எண்ணுப்பெயர்கள் யாவும் நூறு முடியக் குற்றியலுகரங்களே. தமிழ்ச்சொல்லை இனங்காட்டுவதும், பிறமொழிச்சொல்லைத் தமிழாக்கம் செய்ய உதவுவதுமாகிய குற்றியலுகரம் இன்றும் சிறப்பிடம் பெறுகிறது என்கின்றார் தமிழண்ணல்(1993:195). தமிழிலக்கணம் மிகுந்த அறிவியல் முறையில் அமைந்தது: தர்க்க முறையில் பொருந்தியது. இலக்கணம் வெறும் மொழியோடு தொடர்புடையது மட்டும் அல்ல. மாறாக, அது வாழ்வியற் கட்டுக்கோப்பு என்பதற்கும் தமிழர்களின், கட்டமைக்கப்பட்ட மொழி மரபின் சான்றாண்மைக்கும் இக்குற்றியலுகர ஆய்வுரையே சான்று பகரும் என்பது திண்ணம்.

பயன்கொண்ட நூல்கள்:

தமிழண்ணல், **தொல்காப்பியம்எழுத்ததிகாரம்**, மணிவாசகர்பதிப்பகம், சென்னை, 1993.(முதற்பதிப்பு)

தமிழண்ணல், **தொல்காப்பியம்**, மீனாட்சிபுத்தகநிலையம்,மதுரை,2009.(இரண்டாம்பதிப்பு)

தமிழண்ணல், **நன்னூல்எழுத்ததிகாரம்**, செல்லப்பாபதிப்பகம், மதுரை, 2012.

சண்முகம்,செ.வை.,**எழுத்திலக்கணக்கோட்பாடு**,உலகத்தமிழாராச்சிநிறுவனம்,சென்னை,1980.

சண்முகம்,செ.வை., **சொல்லிலக்கணக்கோட்பாடு-2(தொல்காப்பியம்)**,
அனைத்திந்தியதமிழ்மொழியியற்கழகம், அண்ணாமலைநகர்,1986.ச்

பரந்தாமனார்,ஆ.கி.,**நல்லதமிழ்எழுதவேண்டுமா?**,அல்லிநிலையம்,சென்னை,1984.

சண்முகம்.அ., **தமிழ்மொழிஇலக்கணஇயல்புகள்**, பூபாலசிங்கம்புத்தகசாலை,கொழும்பு,1997.

சீனிநைனாமுகம்மது,செ., **தமிழ்இலக்கணஅறிமுகம்**, சுலுத்தான்இதுரீசுபல்கலைக்கழகம், பேரா, மலேசியா, 2011.

சீனிநைனாமுகம்மது,செ., **செம்மொழிமாநாட்டுக்கட்டுரை**, நுழைவெண் 031234.

இலக்குவனார்,சி., **தொல்காப்பியஆராய்ச்சி**, பூம்புகார்பதிப்பகம், சென்னை, 2011.

உலகத்தமிழியக்கஆய்வுக்கோவை, மீராநிலையம், ஈரோடு, 2002.

முத்துச்சண்முகன், **இக்காலமொழியியல்**,முல்லைநிலையம்,சென்னை,1998.

சிவஞானமுனிவர், **தொல்காப்பியமுதற்சூத்திரவிருத்தி**, ஆறுமுகநாவலர்பதிப்பு,1952.

தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் இணைய மென்பொருளும் சமூக ஊடகங்களும்

திரு லூயிஸ் ஐசக் குமார், பார்ட்லி உயர்நிலைப்பள்ளி
திருமதி. பாலின் தெபோராள், CHIJ உயர்நிலைப்பள்ளி

முன்னுரை:

தகவல் தொழில்நுட்பம் இன்று மக்களின் அன்றாட வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ளது. வெகுசன மக்களுக்கான ஊடகமாகக் கணினி மாற்றம் பெற்றுள்ளது. கணினியுடன் இணைந்து இன்று உலகளாவிய அளவில் பல்வேறு செய்திகளை விவாதிக்கும் மிகப்பெரும் இடமாகத் தகவல் தொழில்நுட்பமும், சமூக ஊடகமும் உருவாக்கியுள்ளன. அப்படிப்பட்ட தகவல் தொழில்நுட்பத்தையும், சமூக ஊடகத்தையும் கல்விக்காகப் பயன்படுத்துவது இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டில் அவசியமாகியுள்ளது. குறிப்பாக, இணையம்வழி இலவசமாகக் கிடைக்கும் மென்பொருள்களும் சமூக ஊடகங்களும் இன்றைய 21-ஆம் நூற்றாண்டுக் கற்றல் கற்பித்தல் சூழலுக்குப் பயன்படுகின்றன. மாணவர்கள் கற்றலில் விருப்பத்தோடு ஈடுபட இவற்றில் சிலவற்றைத் தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலுக்கு எவ்வாறு பயன்விளைவுமிக்கதாய் பயன்படுத்தலாம் என்பதைப்பற்றிக் கண்டறியப்பட்ட முடிவுகளைப் பகிர்ந்துகொள்வதாக இக்கட்டுரை அமைகிறது.

தகவல் தொடர்புத் தொழில்நுட்பம்:

- சிங்கப்பூர்க் கல்வி அமைச்சின் பிரதான குறிக்கோள் தாய்மொழியைத் தேர்வுப்பாடமாக மட்டுமின்றி வாழ்க்கைக்குப் பயன்படும் மொழியாகவும் – வாழும் மொழியாகவும் நிலைபெறச் செய்தல் ஆகும். இதனைச் செயல்படுத்த சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு 2010 ஆம் ஆண்டு தாய்மொழி மறு ஆய்வுக் குழு ஒன்றை அமைத்தது. அதில் தமிழை வாழும் மொழியாக்குவதற்கான வழிவகைகளை அலசி ஆராய்ந்து சில பரிந்துரைகளை முன் வைத்தது. ஆய்வறிக்கையில் மொழித் திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் திறன்களோடு இருவழித் தொடர்பு திறன்களும் பரிந்துரைக்கப்பட்டன. பேச்சு, எழுத்து ஆகிய

இருவழிகளிலான கருத்துப்பரிமாற்றத் திறன்களை மேம்படுத்துவதற்கும் சுய முனைப்புடன் கற்றல், உடனிணைந்து கற்றல் ஆகியவற்றிற்கு வாய்ப்பளிக்கவும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் உகந்த கருவியாகும் எனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் எங்கள் பள்ளியில் இணைய மென்பொருளைப் பயன்படுத்தி கற்றல் கற்பித்தலை மேற்கொண்டோம்.

தமிழ்மொழிக் கற்றலுக்கு இணைய மென்பொருள்கள்:

இணையத்தில் இலவசமாகக் கிடைக்கும் மென்பொருள்களும் (Screencast-o-matic, Vocarroo, Camstasia, Camstudio) சமூக ஊடகங்களும் (Facebook, Twitter, YouTube etc...) இன்றைய 21-ஆம் நூற்றாண்டுக் கற்றல் கற்பித்தல் சூழலுக்குப் பயன்படுகின்றன. மாணவர்கள் கற்றலில் விருப்பத்தோடு ஈடுபட இவற்றில் சிலவற்றைத் தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலுக்கு எவ்வாறு பயன்விளைவுமிக்கதாய்ப் பயன்படுத்த முடியும் என்பதைக் கண்டறிந்தோம். இதற்காக முகப்புத்தகத்தில் (Facebook) எங்கள் பள்ளியின் பெயரில் 'பார்ட்லி தமிழ் அரங்கம்' என்னும் பக்கத்தை உருவாக்கி அதில் எங்கள் பள்ளியின் தமிழ் மாணவர்களைச் சேர்த்து ஒரு கருத்துத்தெரிவிப்புத் தளத்தை உருவாக்கினோம்.

இணையத்தில் இலவசமாகக் கிடைக்கும் மென்பொருளான Screencast-o-matic மூலம் பட உரையாடல், அகன்ற படிப்பு, தலைப்பையொட்டிய உரையாடல் போன்றவை ஒளிப்பதிவாகவோ ஒலிப்பதிவாகவோ பதிவு செய்யப்பட்டன. இதன் மூலம் எங்கள் மாணவர்கள் ஈடுபாட்டுடன் கற்றனர். அவர்களின் பேச்சுத்திறன் மேம்பட்டது. இலவசமாகக் கிடைக்கும் மென்பொருள்கள் இணையவழி இயங்குகின்றன. இவை பனுவல்கள், ஒலிப்பகுதி, பல்லூடகத் தொழில்நுட்பம், காணொளிகள், படங்கள் (Text, audio and video chat, streaming audio and video, file sharing, etc.,) ஆகிய பல்வேறு தகவல் தொழில்நுட்பங்களின் வாயிலாகப் **பயன்படுகின்றன.**

தமிழ்மொழிக் கற்றலுக்குச் சமூக ஊடகங்கள்:

மாணவர்கள் www.screencast-o-matic.com என்னும் இணையப்பக்கத்திற்குச் சென்று தங்கள் குரலைப் பதிவு செய்தனர். ஒலிப்பதிவு அல்லது ஒளிப்பதிவு செய்யப்பட்ட படஉரையாடல், படித்தல் போன்ற தங்களுடைய படைப்புகளை முகப்புத்தகம் (Facebook) என்னும் சமூக வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்து ஆசிரியருடனும் சக மாணவருடனும் பரிமாறிக்கொண்டனர்; அதில் படைப்புப்பற்றி ஆசிரியர், சக மாணவர் ஆகியோரின் கருத்துத் தெரிவிப்பு இடம்பெற்றது. அவ்வாறு வழங்கப்பட்ட கருத்துகளைக்கொண்டு மாணவர்கள் தத்தம் படைப்பினைச் செம்மைப்படுத்தித் தரமானதாகப் படைத்தல் அல்லது புதியதோர் படைப்பினை உருவாக்குதல் நிகழ்ந்தது. மேற்கண்டவாறு எங்கள் மாணவர்கள் செயற்பட்டதால் அவர்கள் பெற்ற பயன்கள் பின்பவருமாறு:

இணைய மென்பொருளையும் சமூக வலைத்தளங்களையும் கற்றலுக்குரிய முறையில் பயன்டுத்தினர். இதன்வழி சக மாணவருடன் உடனிணைந்து கற்றலிலும், சுயமாகக் கற்றலிலும் ஈடுபட்டனர்.

- சக மாணவரின் படைப்பிற்குக் கருத்துத்தெரிவிப்பு வழங்கவும், தங்களது படைப்பிற்கு ஆசிரியர், சக மாணவர் ஆகியோர் வழங்கும் கருத்துத்தெரிவிப்பினைக் கொண்டு தம் படைப்பினைச் செம்மைப்படுத்தவும் கற்றுக்கொண்டனர்.
- சமூக வலைத்தளங்கள் வாயிலாக வேறுபடுத்தப்பட்ட கற்றல் சூழலில் ஆசிரியருடனும் சக மாணவருடனும் இருவழிக் கருத்துப்பரிமாற்றத்தை மேற்கொண்டனர்.
- ஒருங்கிணைக்கப்பட்ட மொழித்திறன்களும் இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களும் மேம்பட்டன.

இணையம்வழிக் கலந்துரையாடல் மூலம் பெரும் நன்மைகள்:

- மாணவர்கள் வகுப்பறைக்கு அப்பாலும் கற்றல் - தகவல் பரிமாறிக்கொள்ளுதல்.
- சகமாணவர், குழுவினரின் தகவல்கள், விவாதங்கள், கலந்துரையாடல்கள் மற்றும் கருத்துப் பரிமாற்றங்கள் நடைபெறுதல்.

- ❖ பங்கேற்பாளர்களின் கருத்துப் பதிவு.
- ❖ மாணவர்களுடனான நேரடித் தொடர்பு மற்றும் புரிதல்கள்.
- ❖ பல்லூடகம் வழித் தகவல் தொடர்புகளைக் கற்றல்.
- ❖ அளவீடும் மதிப்பீடும் செய்தல்.

முடிவுரை:

இணைய மென்பொருளைப் பயன்படுத்தி மாணவர்கள் கல்வி கற்பதன்வழி தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின்வழிப் பரிமாற்றமுறை எளிமையாகின்றது, மாணவர்கள் இணையப் பாதுகாப்பு நெறிபற்றி அறிந்தும் புரிந்தும்கொண்டு அதன்படி நடந்துகொள்ளவும் செய்கின்றனர். பள்ளிக்கு அப்பாலும் வேறுபட்ட கற்றல் சூழலில் ஆசிரியருடனும் சக மாணவருடனும் இருவழிக் கருத்துப்பரிமாற்றம் நடைபெறுவதால் அர்த்தமுள்ள, பயன்மிக்க, புதிய கற்றல் அனுபவங்களையும் பெற முடிகிறது.

முகநூல் வழி கற்றல் கற்பித்தல்

கி.விக்கினேசு

சுல்தான் இட்ரிசு கல்வியல் பல்கலைக்கழக இளங்கலைப் பட்டப்படிப்பு மாணவர்

ஆசிரியர் - மாணவர், மாணவர் - மாணவர், ஆசிரியர் -ஆசிரியர்

கற்றல் கற்பித்தலின் புதிய அணுகுமுறை இது. அதிகமான பயனர் கொண்ட சமூக வலைத்தளம் (social network) முகநூல் ஆகும். பள்ளி நேரத்திற்குப் பிந்தியதும் , 24 மணி நேர பள்ளியாகவும் இது செயல்படும். காலத்திற்கேற்றதும் கட்டாயமானதும் கூட. முகநூல் என்பது மலேசியர்களின் வாழ்வில் இன்றியமையாத ஓர் இணைய சமூக வலைத்தளம் ஆகிவிட்டது எனலாம். அதிலும் குறிப்பாக 13 வயது முதல் 30 வயதுக்கு உட்பட்ட ஆண்களும் பெண்களும் முகநூல் பயனர்களாய் இருப்பது இயல்பு நிலையாகிவிட்டது. மலேசியச் சூழலில், இணையத் தொடர்பும் ஓர் கணினியும் ஒரு மின்னஞ்சல் முகவரியும் இருந்தாலே போதுமானது, எவரும் இம்முகநூலின் பயனர் ஆவதை தடுக்கவியலாது. எல்லைகளில்லா உலகம் இப்போது நம் கண்முன்னே!



சோசியல்பேகர்ஸ்.காம் எனும் வலைத்தளத்தின் கூற்றுப்படி, மலேசியா, உலக முகநூல் பயனர் வரிசையில் 18-வது இடத்தைப் பிடித்துள்ளது. மேலும் 13 085 000 மலேசியக் குடிமக்கள் (46.28%) முகநூல் பயனராக உள்ளனர் என்று அவ்வலைத்தளம் கூடுதல் தகவல் அளிக்கிறது. எனவே, இதில் கால்பதித்து கற்றல் கற்பித்தலில் ஒரு புதிய அணுகுமுறையைச் செயல்படுத்த இதுவே சரியான தருணம்.

தொடக்க நிலையில் முகநூல் வெறும் தொடர்பு கருவியாய் மட்டுமே செயல்பட்டது. நாளடைவில் இவ்வலைத்தளத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு செயலிகள், இம்முகநூலின் பயன்பாட்டை வேறொரு கட்டமைப்புக்கு இட்டுச் சென்றது. உலகின் ஏதோ ஒரு மூலையில் நடக்கும் செய்திகளை விரைந்து, சுடச்சுட தருவதற்கான வசதியும் வாய்ப்பும் இதில் அமைந்துள்ளது. மேலும், அச்செய்தியைக் காணும் மற்றொரு பயனர், அது பற்றிக் கருத்திடவும், தனது முகநூல் நண்பர்களோடு பகிர்ந்து கொள்ளவும் ஏதுவாக இருக்கின்றது. இது இதுவரை இல்லாத ஒரு புதிய தொழில்நுட்பமாகக் கருதப்பட்டது.



இத்துணை ஆற்றல் மிக்க ஒன்றை கல்விக்கழகங்கள் முறையான வழியில் பயன்படுத்திக் கொள்ளுதல் நலமாகும். அதிலும் பள்ளிக்கூடங்கள் இம்முகநூல் பயன்பாட்டைத் தனது கற்றல்

கற்பித்தலின் புதிய அணுகுமுறையாகக் கொள்ளுதல் சிறப்பை அளிக்கும் என்பதே இக்கட்டுரையின் முதன்நோக்கமாகும். பள்ளி நேரத்திற்குப் பிந்தியதும், 24 மணி நேர பள்ளியாகவும் இது செயல்படும்.

விக்கிப்பீடியா எனும் கலைக்களஞ்சிய வலைத்தளத்தின் கூற்றுப்படி, முகநூல் அதன் பயனர்களுக்கிடையே சமுகதொடர்பாடுதலை முன்னிறுத்தி, பயனரின் விருப்பங்கள், நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை உடனுக்குடன் பகிர்ந்து கொள்ளும் தன்மையில் செயல்படுகிறது. 2012 வாக்கில், முகநூல் நேரக்குறியீட்டினை (TIMELINE) அறிமுகப்படுத்தியுள்ளது. இந்நேரக்குறியீடானது பயனரின் தொடக்க காலம் முதல் தற்போதைய நடவடிக்கைகளைத் தன்னகத்தே குறித்துக் கொள்ளும் தன்மை வாய்ந்தது. பயனர்களும் குழுமம் அமைத்துக் கொண்டு செயல்பட முகநூலில் வசதியும் உண்டு. குழுவில், பயனர்களின் தகவல்கள் அந்தக் குழுமத்தினரிடையே மட்டுமே பறிமாறிக்கொள்ளப்படும். இதனால் குழுமத்துக்கு வெளியே தகவல் கசிந்திட வாய்ப்பு இல்லை. எனவே, ஒரு பயனர் தம் கருத்தைத் தயக்கமின்றிச் சுதந்திரமாகப் பதிவு செய்யமுடிகிறது.

முகநூலின் பயன்மிக்க செயலிகள்

முகநூலைப் பயன்படுத்தும் முன்னர் அதன் முக்கிய செயலிகளை அறிந்து கொள்ள வேண்டும். அவற்றின் பயன்பாட்டைத் தெளிவாகப் புரிந்து கொள்வதன் வழி, முகநூலை அதிவேகமாகவும் அறிவார்ந்தும் பயன்படுத்திப் பலனடையலாம்.

கீழ்க்காணும் செயலிகளின் பட்டியல், பயனருக்குப் பயன் அளிப்பது ஆகும்:

முகநூலின் பயன்மிக்க செயலிகள்					
Search	- தேடுதளம்	Tag	- மேற்கோள்	Dynamic content	- பல்வகை உள்ளடக்கம்
Link	- தொடுப்பு	Forum	- பொது மன்றம்	hyperlink	- மீத்தொடுப்பு
Authoring	- படைப்பாக்கம்	Emel	- மின்னஞ்சல்	digital gift	- இலக்கமுறை பரிசுகள்

இவற்றையும் தவிர்த்து முகநூல் மீத்தொடுப்பு வழியாகவும் பல செயலிகளை நாம் பயன்படுத்த இயலும். இவையாவும் பயனருக்குப் பயனுள்ளது, எளிமையானதும் கூட.

<u>பள்ளி நிருவாகம் - முகநூல்</u>

முகநூலில் ஒரு பள்ளி, குழுமம் அமைத்து அதன் தனது நிருவாக செயல்முறைக்கு ஏற்ப உருபடுத்திக்கொண்டு செயல்பட்டால், முக்கிய தகவல் பரிமாறிக்கொள்ள, படிவ ஆவணங்களை உடனடி பார்வைக்கு வழங்க; பகிர்ந்து கொள்ள, அரசு கட்டளைகளை விரைந்து நிறைவேற்றிட என பல்வகை வேலைகளை விரைந்து செயலாற்ற முகநூல் பேருதவியே. பள்ளி நேரம் தவிர்த்து இதர நேரங்களிலும் வேலை தடை இல்லாமல் தொடர்ந்திட இது வழிகோலும். அது மட்டுமல்லாது, நிருவாத்தின் செயல்முறை தொடர்பில் உடனடி கருத்து வழங்க ஆசிரியர்க்கும், மாற்று ஏற்பாடுகள்

தேவையிருப்பின் செய்து கொள்ள நிருவாகத்திற்கும் சிறந்த வாய்ப்பு. நிருவாகத் திறனும் தரமும் இதனால் மேம்படும். படிவ ஆவணங்கள் மட்டும் அல்ல, பள்ளியில் நடைபெறும் நிகழ்ச்சிகளின் நிழற்படங்களும், காணொளியும் தரவேற்றும் வசதி முகநூலில் உண்டு.

முகநூல் கற்றல் கற்பித்தல் பாடப்பொருளுக்கான கோட்பாடுகள்

1. கற்றலும் அறிவும் பல்வகையானது.
2. ஏற்புடைய தகவல் மூலங்களுக்கு இடையிலான தொடர்புகள் குறித்த தெளிவு.
3. எல்லா தகவல் மூலங்களும் மனிதனை மட்டும் முன்னிருத்துவதில்லை.
4. ஒன்றை அறிந்து கொள்ளும் ஆர்வமானது அறிந்து கொள்ளுதல் என்பதை விட மேலானது.
5. பெறப்படும் தகவலால் தொடர்ச்சியான கற்றல் நடைபெறுகிறது.
6. துறை, சிந்தனை, கருத்துக்கோடல் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பை அறியும் ஆற்றல்.
7. பெறப்படும் தகவல் சரியானது; புதியதானது என்பதை உறுதிபடுத்திக்கொள்ளும் திறன்.

மேற்சொன்ன ஏழும் முகநூல் பயனருக்குச் சரியான முடிவெடுக்கும் திறனை உண்டாக்கும்.

ஆசிரியர் - மாணவர்

முகநூல் வழி கற்றல் என்பது வழக்கநிலை கற்றலை விட மேம்பட்டது. முகநூலில் பதியப்படும் தகவல்களை அவ்வப்போது தேவைக்கேற்ப திருத்தம் செய்யவும் மாற்றம் செய்யவும் மேம்படுத்தவும் முடியும். முகநூல் வழி கற்றல் என்பது வகுப்பறைப் பாடத்தின் தொடர்ச்சி என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

முகநூல் கற்பித்தலில் ஆசிரியர் கடப்பாடு

1. வகுப்புகேற்பத் தனி கணக்கு வைத்திருத்தல்
2. ஆசிரியரின் தனிப்பட்ட வாழ்க்கைக்கும் தொழிலுக்கும் வேறுபாட்டை உணர்ந்திருத்தல்.
3. எந்த மாதிரியான படங்களைப் பகிரலாம் என்பதை அறிந்திருத்தல்.
4. எவ்வகை செய்திகளைப் பகிரலாம் (Netiquette) என்பது பற்றி மாணவரிடம் தெளிவாக அறிவுருத்துதல்.
5. மாணவரை முகநூல் கற்றல் கற்பித்தலுக்கும் உட்படுத்தும் முன் பெற்றோரின் அனுமதிப் பெற்றிருத்தல், அவ்வப்போது மாணவரின் வளர்ச்சி குறித்து பெற்றோரிடத்தில் தெரிவித்தல்.
6. எப்போதும் பொறுப்புணர்வோடு பதிவு செய்தல். பள்ளியைப் பற்றித் தூற்றுதல் கூடாது.
7. மாணவர்களை நண்பர்களாக இணைத்துக் கொள்ள வேண்டாம். அளவான இடைவெளி தேவை.
8. கூடுமானவரை ஒரு நாளைக்கு இரு முறையேனும் முகநூல் இணைப்பில் இருங்கள். இஃது உங்கள் வகுப்புக்குக் கூடுதல் மதிப்பளிக்கும்.

வகுப்பில் படித்த பாடத்தின் சுருக்கத்தினை ஆசிரியர் முகநூல் குழுமத்தில் பகிரலாம். இதை அவரது முகநூல் சுவரில் (WALL) எழுதிப் பகிரலாம். அப்பாடம் தொடர்பாக எழும் வினாக்களை மாணவர்கள் அந்த ஆசிரியரின் முகநூல் சுவரிலேயே தொடுக்கலாம். இதற்கான பதில்மொழியை அந்த ஆசிரியரோ அல்லது அந்தக் குழுமத்தில் இருக்கும் வேறு மாணவரோ வழங்கலாம். இதன்வழி, உடனுக்குடன் பாடவிளக்கம் மாணவர்களைச் சென்று அடையும். வகுப்பு கலந்துரையாடலில் பங்கு பெறவியலாத மாணவரும், அச்சம் கூச்சத்தால் பங்கு பெறாத மாணவரும் முகநூலில் தைரியமாக கலந்து கொள்ள முடியும். வேண்டிய விளக்கம் பெறவும் நிறைய வாய்ப்பும்

உண்டு. வகுப்பில் நேரப்பற்றாக்குறை காரணமாக எல்லா கேள்விகளுக்கும் விடையளிக்க இயலாத ஆசிரியரும் இந்த முகநூலில் மாணவரின் ஐயங்களுக்குத் தீர்வு காண முடியும். தவிர, **ஆசிரியர்-மாணவர்** கொண்ட இக்குழுமம், பாடம் சார்ந்த அறிவார்ந்த கலந்துரையாடலையும் இனிதே மேற்கொள்ளலாம். இவ்வாறாக ஒரு பாடத்தின் தொடர்ச்சியும் வளர்ச்சியும் ஆசிரியருக்கும் மாணவருக்கும் நன்மையளிக்கின்றன.

பாடச்சுருக்கம் மட்டுமல்லாது, பாடத் தொடர்பான குறிப்புகள், கேள்விகள், பயிற்சிகள், புதிர்கள், உடனடித் தேர்வுகள் என பல்வகை கூறுகளை இம்முகநூல் வழி ஆசிரியர் பகிரலாம். இதற்கான பல நுட்பமான, பயனருக்கு எளிமையான பல செயலிகளை முகநூல் தன்னகத்தே கொண்டுள்ளது. இளையோர் விரும்பும் வகையில் வண்ணப்படங்களாக, காணொளிகளாக, முப்பரிமாண படைப்பாக வழங்க முடியும். இது மாணவர்களுக்குப் பாடத்தின்பால் புது ஈர்ப்பை உண்டுபண்ணும். மேலும், மாணவரே பாடத் தொடர்பான குறிப்புகளை மேற்சொன்ன செயலிகளைக் கொண்டு தானே உருவாக்கிக் குழுமத்தில் பகிரலாம். அந்தக் குறிப்புகள் பற்றி பிற மாணவர்கள் கருத்திடலாம். மாற்றம் வேண்டியிருப்பின் குறிப்புகளைத் திருத்தவோ, மேம்படுத்தவோ முகநூலில் வழியிருப்பதால் முழுமையடைந்த பாடக்குறிப்பு மாணவரைச் சென்றடையும். இவ்வாறான பணிகளை மாணவர்கள் தனியாகவோ அல்லது குழுவாகவோ இணைந்து உருவாக்கலாம். இதன் மூலம் அவர்களின் தன்னம்பிக்கை வளரும். எந்நேரமும் ஆசிரியரைச் சார்ந்திராமல், தானே கற்கும் வழிமுறையை மாணவரே கண்டறிந்து சிறக்க முடியும். பாடமும் எந்த அளவு புரிந்து இருக்கின்றது என்பதை ஆசிரியரும் மாணவரும் மதிப்பீடு செய்து கொள்ளவும் முடியும் என்பதால் முகநூல்வழி கற்றல் ஒரு சிறந்த அணுகுமுறையே.

காட்டு 1:-

மாணவருக்கு இணைய வாயிலாக சிறு தேர்வு நடத்தப்படுகிறது. மாணவர் முகநூல் வழியாக பதில் மொழிய வேண்டும். ஒரே மாதிரியான பதில்கள் ஏற்கப்படமாட்டா. பதில்மொழி 100 சொற்களுக்கு மேற்போகாமல் இருத்தல் அவசியம்.

இவ்வாறான சிறு கட்டளைகள் மாணவரின் சிந்தனைத் திறனையும் கருத்துணர் ஆற்றலையும் ஒங்கச் செய்யும். (அப்துல் சமாட், 2011)





இப்படி தேர்வு மட்டுமல்லாது, விடை அளிக்கவியலாத கேள்விகளைக் கூட குழுமத்திடம் வினவலாம். சரியான விடை கிடைக்கப்பெறும் போது அதனை மற்ற மாணவர்களும் அறிந்து கொள்ள முடியும். இப்படியாக மாணவரின் கற்றல் செம்மையாக நடைபெறும்.

காட்டு 2 :-

இடுபணியும் அது தொடர்பான கலந்துரையாடலும் சிக்கலுக்குத் தீர்வாக அமையும்.

தகவல் / செய்தி தொடுத்தல்

முகநூல் வழியாக ஆசிரியர் அவ்வப்போது மாணவருக்குத் தகவல் தொடுத்தல் அவசியமாகிறது. பாடக்குறிப்பு தவிர்த்து, பாட வளர்ச்சி, தேர்வுக் குறிப்புகள், பாடத் தொடுப்புகள் என பல்வேறு செய்திகளை விடுக்கலாம். மாணவரோடு ஆசிரியர் நன்முறையில் அக்கறையோடு இருப்பதை இஃது உறுதி செய்யும்.

கருத்துத் சேகரித்தல்

பள்ளியில் நடத்தப்பட்ட தேர்வு குறித்தும் மாணவர்களின் கருத்துக் கேட்கலாம். கேள்வி முறைகள், நேரப் பயன்பாடு, தேர்வு தயார்நிலை குறித்தும் மாணவர் கருத்திட வைக்கலாம். பல்வேறான கருத்துக்கள் ஆசிரியரின் பணிக்கு வளமை சேர்க்கும்.

வாக்கெடுப்பு

இது தவிர்த்து, வாக்கெடுப்பு முறையும் முகநூலில் முக்கிய கூறு ஆகும். கேள்விகளையோ அல்லது கருத்துக்களையோ ஆசிரியர் தன் முகநூலில் Ask Question எனும் சுட்டியின் மூலம் எழுதி வாக்கெடுப்பு நடத்தலாம். இதன்வழி சொல்லப்படும் செய்திக்கு மாணவரின் ஆதரவும் எதிர்ப்பும் எவ்வளவு என்று கணித்திட ஆசிரியருக்கு எளிதாக இருக்கும். இக்கேள்வியும் கருத்தும் பாடத் தொடர்புள்ளதாய் மட்டும் அல்லாமல் பொதுவறிவு வடிவமாய்க் கூட இருக்கலாம்.

மாணவர் - மாணவர்

முகநூலில் ஆசிரியர் துணையின்றி மாணவர் கற்கவும் முடியும். வேறு மாணவர்களோடும் குழுமம் அமைத்துப் பயிலலாம். ஆனால் ஒரே வகுப்பு மாணவராக இருத்தல் சிறப்பு. காரணம் ஆசிரியர் வேறாக இருந்துவிட்டால் இக்குழுமம் சரியாக இயங்க முடியாது. பாடத் தொடர்ச்சியும் வளர்ச்சியும் சீராக அமையாது. எனினும் குழுமம் அமைத்த பின் மற்ற குழுமத்தின் உதவியை நாடுவதில் தவறில்லை. பாடம் தொடர்பான ஒளிப்படங்களை, படத்தொகுப்புகளைக் குழுமத்தில பகிரலாம். கூடுதல் தகவல்கள் ஒரு பாடத்தை நன்றாய் விளங்கிக் கொள்ள உதவும். சிறப்பாய் பாட விளக்கம் வழங்கும் நண்பருக்கு உடனடியாக பாராட்டுத் தெரிவிக்க வேண்டும். இது அவரை மேலும் உற்சாகப்படுத்தும். இன்னும் அதிக தகவல்களை அவர் பெற்றுத் தர முனைவார். ஆசிரியரிடம் கேட்க தயங்கிய வினாக்களை இந்தக் குழுமத்தில் விடுக்கலாம். நட்பு என்பதால் இங்கே தயக்கத்துக்கு விடுப்பு இருக்கும். ஆசிரியர் சொல்லி விளங்காதது பல நேரங்களில் நட்பு

சொல்லி எளிதாய் விளங்குவது இயல்பே. வகுப்புக்கு வெளியே என்பதாலும் தனக்கு விருப்பமான, நாள்தோறும் பயன்படுத்தும் முகநூல் என்பதாலும் கற்றல் இங்கே விருப்பமான ஒன்றாக மாறுகிறது. நினைத்த நேரத்தில் படிக்கலாம் என்பதும், பிடித்த நேரத்தில் கற்கலாம் என்பதும் மாணவரைக் கவர்ந்ததே.

ஆசிரியர்- ஆசிரியர்

இன்று கல்வி இணையமயமாகிவிட்ட நிலையில், பெருவாரியான தகவல்கள் இணைய தரவேற்றம் காண்கின்றன. எனவே ஆசிரியரும் இணைய அலையில் இணைவது காலத்தின் கட்டாயம்.

பாடத் தொடர்புடைய குறிப்புகளைச் செய்திகளைக் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ள முகநூல் ஓர் அரிய கருவியே. மொழி, இனம், ஊர், நாடு கடந்து ஆசிரியர்கள் ஒரே குடையின் கீழ் சந்திக்க முகநூல் ஓர் அருமையான தளம். மேலும், கல்வி தொடர்பான செய்திகளையும் அதன் வளர்ச்சிதனையும் தொடர்ந்து கண்காணிக்க முகநூல் ஓர் ஆவணமாகவும் செயல்படுகிறது.

கற்றல் கற்பித்தலின் சிக்கல்களை ஆய்ந்திட முகநூல் வாய்ப்பளிக்கிறது. அவற்றைக் களையும் முறை பற்றி அறிய குழுமப் பயனர்களைக் கேட்டாலே 100 மேற்பட்ட தகவல்கள் கிட்டும். அவற்றில் சிறந்தவற்றை ஆசிரியர் பயன்படுத்தவும் முயலலாம். தானே ஆய்வு செய்து, பயன் அறிந்து பயன்படுத்த நேரமும் காலமும் போதாத நிலையில் இவ்வாறான செயலிகளின் மூலம் ஆசிரியர் எளிதில் பயனடையலாம்.

மலேசியக் கல்வி சூழலில், நிறைய ஆவணங்கள் கற்றல் கற்பித்தலுக்குத் தேவைப்படுகின்றன. அவற்றைப் பெறுவதில் பல சிக்கல்களைப் பல ஆசிரியர்கள் எதிர்நோக்குகின்றனர். பாடத்திட்டத்தின் ஆவணங்கள், மதிப்பீடுப் படிவங்கள், தமிழ் இலக்கியம் இப்போது அதிகம் முகநூலில் பகிரப்படுகின்றன. எனவே முகநூலைப் பயன்படுத்தும் ஆசிரியர்கள், இதை எளிதாய்ப் பெற்றுக்கொள்ள முடிகிறது. இதுகாறும் முகநூலில் அதிகமான ஆசிரியர் குழுமங்கள் செயல்படுகின்றன. அதில் ஏதாவது ஒன்றிரண்டில் தம்மை இணைத்துக் கொள்ளும் ஆசிரியர் கட்டாயமாக பயன் அடைகிறார் என்பது உறுதி.

இவை தவிர்த்து, ஓர் ஆசிரியருக்குச் சமுதாயக் கடப்பாடும் உண்டு. தான் எதிர்பார்க்கும் சமுதாயத்தை உருவாக்குவதில் ஆசிரியர் பெரிய பொறுப்பு வகிக்கிறார். அவ்வகையில் சமுதாயம் தொடர்பான கல்விச் சிந்தனையோடு கலந்துரையாடவும் குழுமம் அமைத்துச் செயல்படலாம். நல்விளைவு கொண்ட கருத்துக்களால் விழிப்புணர்வு மேலோங்க இது வழிகோலும். அவ்வாறு செயல்படும் குழுமங்களும் இருக்கவே செய்கின்றன. அவற்றிலும் தம்மை இணைத்துக் கொண்டு சமூகப் பணியாற்றலாம்.

நிறைவுக்கு முன்...

கற்றல் கற்பித்தலில் முகநூல் பற்றி இதுவரை கண்டோம். கல்வி சார்ந்து இருக்கும் எவரும் முகநூலைக் கற்றல் கற்பித்தலுக்குப் பயன்படுத்தலாம். எனினும் முறையாக, சமூகப் பொறுப்புணர்வுடன் செயல்படுவது மிகமிக கட்டாயம். அதே வேளை ஒரு புதுமையான அணுகுமுறையைக் கையாளுவதில் சுணக்கம் காட்டுவதும் தீமை விளைவிக்கும். கல்வி இன்று அதிவேகத்தில் பயணித்துக் கொண்டிருக்கிறது. அந்த வேகத்துக்கு ஈடுகொடுத்துப் பயணிப்பது காலத்தின் தேவை என்பதை நாம் உணர வேண்டும். சுருங்கச் சொன்னால்,

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.

முகநூலுக்கும் பொருந்தும் இந்தக் குறள்.

துணை நூல்கள்

Penggunaan Facebook Sebagai Alat Bantu Dalam Pengajaran dan Pembelajaran di FTMK, Dr Abdul Samad bin Shibghatullah,2011

Facebook Statistics by Country. URL: www.SocialBakers.com

Facebook. URL: http://ms.wikipedia.org/wiki/Facebook

http://havefunteaching.com/

http://www.educatorstechnology.com/2011/10/best-facebook-learning-apps.html

http://www.educatorstechnology.com/2012/06/ultimate-guide-to-use-of-facebook-in.html

http://www.fractuslearning.com/2013/01/30/facebook-for-education/

http://www.freetech4teachers.com/2010/09/using-facebook-to-connect-with-students.html#.UUNZVlezyqF

http://www.onlinedegree.net/50-useful-facebook-tips-for-teachers/

http://www.slideshare.net/CPappasOnline/facebook-for-elearning-20-educational-applications

http://www.teachthought.com/technology/100-ways-to-use-facebook-in-education-by-category/

நாடக வழி தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பித்தல்

குமாரி சரஸ்வதி குதிரக்கள் குஞ்சுக்கண்ணன்
தெங்கு அம்புவான் அப்சான் ஆசிரியர் கல்விக்கழகம் (குவால லிப்பீஸ் வளாகம்)

மலேசியா திருநாட்டில் தமிழ்மொழியினை இரண்டாம் மொழியாகக் கற்பிக்க அரசாங்கம் தேசிய பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் தமிழ்மொழியினை விருப்பப் பாடமாக அல்லது கூடுதல் பாடமாகத் தெரிவு செய்ய வழிவகுத்துள்ளது. இதனை முறையாக அமலாக்கம் செய்யும் நோக்கில் ஆசிரியர் கல்விக்கழகங்களில் முறையான பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்மொழியினை இரண்டாம் மொழியாகக் கற்பிப்பது சுலபமான ஒன்றல்ல. சிறந்த அணுகுமுறை மிக அவசியமாகக் கருதப்படுகிறன்து.

பிலெமிங் (Fleming,2006) என்ற ஆய்வாளர் நாடகம் மாணவர் மையக் கற்பித்தலை வலியுறுத்துவதோடு தனியாள் வளர்ச்சிக்கும் வித்திடுகின்றது என்கிறார். இந்தக் கருத்தினை ஏற்றுக் கொள்ளும் வண்ணம் வேறு சில ஆய்வுகளின் முடிவுகளும் அமைந்துள்ளன. மலெ மற்றும் டவ் (Maley & Duff, 2001), பிலிப்ஸ் (Philips, 2003) அவர்களின் ஆய்வின் முடிவுகள் நாடகம் வாயிலாக ஆசிரியர் மற்றும் மாணவர்கள் ஆர்வமூட்டும் சூழலில் கற்றல் கற்பித்தலை மேற்கொள்வதோடு மாணக்கர் தன் தனித்திறமைகளை வெளிக்கொணர வாய்ப்பாக அமைகிறது என்கின்றனர்.

கார்கின் (Carkin, 2008) தைவான் சீனாவில் மேற்கொண்ட ஆய்வின் படி பின் தங்கிய மற்றும் நடுநிலை மாணவர்கள் முழு தன்னம்பிக்கையுடன் நாடகத்தில் ஈடுபட்டு கூச்சமின்றி அந்நிய மொழியைப் பேசி கெட்டிக்கார மாணவர்களுக்கு ஈடாக சிறந்து விளங்குகின்றனர் என்கிறார். குறைவான சொற்களஞ்சியம் கொண்டவர்கள் கூட கற்றல் கற்பித்தலில் இயல்பாக ஈடுபட நாடகம் வழிவகுக்கிறது என்பது இவரின் ஆய்வின் முடிவுகளுள் ஒன்றாகும்.

நாடகம் மாணவர்களின் வாசிப்புத்திறன், கேட்டல் பேச்சுத்திறன், எழுத்துத்திறன் ஆகியவற்றை வளர்க்கும் ஆற்றல் மிக்கது. நாடக வழி மாணவர்கள் ஒருவரொடு ஒருவர் தொடர்பு கொள்ள இயலும். தமிழ்மொழி இங்கு இரண்டாம் மொழியாக இருப்பதால் இருவழி தொடர்பு மிக முக்கியக் கூறாகக் கருதப்படுகின்றது. நாடகம் மாணவர்களின் அறிவுநிலையையும் மனோநிலையையும் ஒருங்கிணைத்துச் சிந்தனைக்கும் செயலுக்கும் நெருங்கின தொடர்பினை ஏற்படுத்துகின்றது. தமிழ்மொழியை இரண்டாம் மொழியாக அல்லது அயல் மொழியாகக் கற்கும் மாணவர்கள், கருத்தினை உள் வாங்கிக் கொண்டு வெளிகொணரும் முயற்சியில் சரியான சமநிலை பகிர்வினைக் கொண்டிருப்பது அவசியமாகின்றது.

நாடக வழி தமிழ்மொழியை இராண்டாம் மொழியாகக் கற்பிக்கும் வேளை மாணவர்கள் உண்ணிப்பாகக் கேட்பதோடு, பேசவும், வாசிக்கவும், எழுதவும் வழிவகுக்கின்றது. அதோடு மட்டுமின்றி வகுப்பறை கற்றல் கற்பித்தல் பொருள் மிக்கதாக உருப்பெருகிறது. பலதரப்பட்ட மாணவர்கள் தங்கள் திறத்திற்கு ஏற்ப கற்றல் கற்பித்தலில் மனமகிழ்ச்சியோடு ஈடுப்பட வழிகோலுகிறது. புரியாத, தெரியாத புதுமொழியை உடல் அசைவு மூலமும் பலவகைச் சொற்கள் பயன்பாட்டு மூலமும் தெரிந்து கொள்கின்றனர். இந்நாடக வழி கற்பித்தலை ஆசிரியர், உடல் அசைவு, பாகம் ஏற்றல், போலச்செய்தல் மற்றும் வசனமின்றியும் நடத்தலாம்.

1. உடல் அசைவு (Bodily Movement)

மாணவர்கள் குறிப்பிட்ட அல்லது ஆசிரியர் தெரிவு செய்த கருப்பொருள் அடிப்படையில் உடல் அசைவினைச் செய்தல் வேண்டும். இந்நடவடிக்கையின் போது மாணவர்கள் உடல் அசைவினை மட்டும் செய்தல் வேண்டும் எந்த வித உச்சரிப்பினையும் செய்தல் கூடாது. இந்நடவடிக்கையினை முதலில் ஆசிரியர் செய்ய பின்னர் மாணவர்கள் பின் தொடர்ந்து செய்தல் வேண்டும். உதாரணமாக அன்றைய கருப்பொருள் உணர்ச்சி என்று வைத்துக் கொள்வோம். மாணவர்கள் சிரிப்பு, அழுகை, கோபம், குளிர், வெயில், பசி போன்றவற்றை உடல் அசைவு,சைகை அல்லது முகபாவனையினைக் கொண்டு வெளிப்படுத்த வேண்டும்.

ஆசிரியர் மாணவர்களின் செயல்களை உற்றுக் கவனிக்க வேண்டும். ஒரு மாணவன் செய்த முகபாவனையினை அடுத்த மாணவன் செய்யலாகாது. ஒரு மாணவன் அழுவதைப் போல் முகபாவனைச் செய்தால் அடுத்த மாணவன் வேறு உணர்ச்சியினை வெளிக்கொணர வேண்டும். வார்த்தைகளின்றி இவ்வாறு அனைத்து மாணவர்களும் செய்து முடித்தப் பின் ஆசிரியர் அவர்கள் வெளிக்கொணர்ந்த உணர்ச்சி என்னவென்று வினவ வேண்டும்.

இவ்வேளையில் மாணவர்கள் பெரும்பாலும் அவர்களின் தாய் மொழியில் தான் பதில் கூற முற்படுவர். இத்தருணத்தில் ஆசிரியர் குறிப்பிட்ட ஏதேனும் ஒன்று அல்லது இரு உணர்ச்சியினைத் தெரிவு செய்து அதனை உரக்க கூற வேண்டும். மாணவர்கள் ஆசிரியரைப் பின்பற்றி உச்சரிக்க வேண்டும். அதன் பின் ஆசிரியர் மாணவர்களை உடல் அசைவு, சைகை அல்லது முகபாவனை வாயிலாக உணர்ச்சியினை வெளிகொணரும் வேளை உணர்ச்சியினைக் குறிக்கும் சொல்லினையும் மெல்ல உச்சரிக்க வேண்டும். இவ்வாறே நடவடிக்கை தொடர வேண்டும். இந்நடவடிக்கையில் உடல் அசைவு, சைகை மற்றும் முகபாவனைக்கு அதிக முக்கியத்துவம் தருதல் வேண்டும். ஆசிரியரின் ஈடுபாடு மிக குறைவாக இருத்தல் வேண்டும். மாணவர்கள் இணையராகவோ, குழுவாகவோ இயங்கலாம்.

2. பாகம் ஏற்றல் (Role Play)

பாகம் ஏற்று நடித்தல் வாயிலாகவும் தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கலாம். கொடுக்கப்பட்ட சூழலுக்கு ஏற்ப மாணவர்கள் பாகம் ஏற்று நடித்தல் வேண்டும். ஆசிரியர் மாணவர்களுக்குப் குறிப்பிட்ட சூழலை வழங்கி பாகமேற்று எவ்வாறு நடிப்பது என்பதனைக் கலந்துரையாடப் பணிக்க வேண்டும். மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் சூழல் அவர்கள் அனுபவித்த, பார்த்த, கேட்ட, வாசித்த ஒன்றாக அமையலாம். முதலில் ஆசிரியர் மற்றும் மாணவர்கள் தங்கள் வாழ்க்கை அனுபங்களை வகுப்பில் கலந்துரையாட வேண்டும், ஏதேனும் ஒரு ஆர்மூட்டும் சூழலைத் தெரிவு செய்ய வேண்டும்.

ஆசிரியர் மாணவர்கள் இயங்க வழிவிட்டு ஒதுங்கிக் கொள்ள வேண்டும். மாணவர்கள் குழு தலைவரை நியமித்துக் கதாபாத்திரங்களை உருவாக்குவர். அனைவருக்கும் அறிந்த சூழலாக அமைதல் வேண்டும். உதாரணமாகக் குடும்பம், பள்ளி, விளையாட்டுப் பூங்கா, சந்தை போன்ற சூழல்களின் அடிப்படையில் மாணவர்கள் பாகம் ஏற்று நடிக்க வேண்டும். இப்பாகம் ஏற்று நடிக்கும் வேளை நடிப்பிற்கு முக்கியத்துவம் வழங்கப்படாது மாறாகப் பயன்படுத்தப்படும் சொற்களின் சரியான பயன்பாடு, தொனி, உச்சரிப்பிற்கு அதிக கவனம் செலுத்தப்படும். மாணவர்கள் விருப்பப்பட்ட கதாபாத்திரங்களை ஏற்று நடிக்க வாய்ப்பாக அமைவதோடு சரியான மொழிப் பயன்பாட்டையும் வலியுறுத்தும்.

3. போலச்செய்தல் (Simulation)

குறிப்பிட்ட சூழல் அடிப்படையில் மாணவர்கள் கலந்துரையாடிக் கொடுக்கப்பட்ட சிக்கலுக்குத் தீர்வு காண வேண்டும். ஒவ்வொரு மாணவருக்கும் கதாபாத்திரம், பணி, பங்கு பொறுப்புகள் உண்டு. மாணவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட சூழலுக்கு ஏற்ப இயங்க வேண்டும். மாணவர்களுக்குப் பல்வகையான உரையாடல் சூழல் வழங்கலாம். உதாரணமாக வாழ்த்துக் கூறுதல், முகமன் கூறுதல், அறிமுகம் செய்தல், விடைப்பெறல், புகார் செய்தல், பொருள்கள் வாங்குதல், பேருந்து டிக்கேட் வாங்குதல் போன்ற நடவடிக்கைகளை மாணவர்கள் மேற்கொள்ளலாம். இது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதால் மாணவர்கள் குறிப்பிட்ட சூழலில் பாகமேற்று முறையாக மொழியினைக் கையாள வழிவகுக்கிறது. போலச்செய்தல் நடவடிக்கையில் ஈடுபடும் ஒரு மாணவனின் நடத்தையினைக் கட்டுப்படுத்தக் கூடாது. ஒரே மாதிரியான சூழலுலைக் கையாளுவதில் மாணவர்கள் அதிக அளவில் வேறுபட வாய்ப்புண்டு. மாணவர்களின் சரியான மொழிப் பயன்பாட்டைக் கருத்தில் கொண்டு ஆசிரியர் வளப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

4. உடனுக்குடன் (Improvisation)

ஆசிரியர் மாணவர்களுக்குச் சூழலை வழங்கி உடனுக்குடன் பேசப் பணித்தல். இந்நடவடிக்கையில் மாணவர்கள் குழுவாகவோ அல்லது தனியாளாகவோ இயங்கலாம். மாணவர்கள் வசனமின்றி, ஒத்திகையின்றி கொடுக்கப்பட்ட சூழலுக்கு ஏற்ப நடிக்க வேண்டும். ஆசிரியரின் தலையீடு மிக குறைவாகவே இருத்தல் வேண்டும். மாணவர்களுக்குக் சூழலை வழங்கி நன்கு விளக்கியவுடன் மாணவர்கள் சுயமாக இயங்க வேண்டும். வழங்கப்பட்ட சூழல் மாணவர்கள் வாழ்க்கையோடு தொடர்புடையதாக அல்லது தொடர்பின்றியும் அமையலாம். தொடக்கத்தில் இந்நடவடிக்கையில் ஈடுபட மாணவர்கள் அதிகளவில் சிரமத்தை எதிர்க்கொள்வர். பல முயற்சிகளுக்குப் பின் மாணவர்கள் மொழியினை இயல்பாகக் கையாள இயலும்.

நாடகம் வழி தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிப்பதால் அடையும் நன்மைகள்:

- மாணவர்கள் தங்கள் கற்றல் கற்பித்தலுக்கு முழுப் பொறுப்பு ஏற்பர்.
- மன உளைச்சல் இல்லாத மொழி கற்பதற்கான சூழல் உருவாகும்.
- புதிய சொல்லாட்சியினைச் சூழலுக்கு ஏற்ப பயன்படுத்த இயலும்.
- சரியான உச்சரிப்பு, தொனி, வேகம் பேச்சிலும் எழுத்திலும் வளரும்.
- அந்நிய மொழியையும் கலாச்சாரத்தையும் முறையகாகப் புரிந்து கொள்ள இயலும்.
- கற்றலில் மனமகிழ்வு ஏற்படும்.
- தன்னம்பிக்கை வளரும்.
- உண்மையான வாழ்க்கை சூழலை வகுப்பறைக்குக் கொண்டுவர இயலும்.
- மாணவர்களிடையே புரிந்துணர்வும் ஒற்றுமையும் மேலோங்கும்.
- கண், காது உடல் அசைவு அனைத்தும் பொருள் மிக்கதாக அமையும்.
- மாணவர்களின் சிந்தனை ஆற்றலையும்,அறிவாற்றலையும் கற்பனை ஆற்றலையும் மேலோங்கச் செய்யும்.
- முறையாகத் தன் கருத்தைக் கூற வழிவகுக்கும்.
- பிறர் முன்னிலையில் துணிவுடன் இயங்கச் செய்யும்.
- கற்பனை, உற்று நோக்கல் திறன் வளரும்.
- கதை அல்லது குறிப்பிட்டச் சூழலைச் சொற்களைப் பயன்படுத்தாது உடல் அசைவுகள் மூலம் வெளிப்படுத்த இயலும்.
- மற்றவர் முன்னிலையில் அச்சம் கூச்சமின்றி பேச இயலும்.
- கூடிக்கற்றல் வலுப்பெரும்.
- கட்டொழுங்கு வளரும்.

முடிவுரை

தமிழை இராண்டாம் மொழியாகக் கற்பிப்பது சவால் மிக்கது என்பதனை மறுக்க இயலாது. இருப்பினும் சரியான கற்றல் கற்பித்தல் அணுகு முறைகளைக் கையாள்வதன் வழி ஆசிரியர் எதிர்பார்க்கும் கற்றல் கற்பித்தல் நோக்கங்களை முறையாக அடைய இயலும். ‘என்னிடம் கூறு நான் மறந்து விடுவேன்; கற்றுக்கொடு நான் நினைவில் வைப்பேன்; என்னை ஈடுபடுத்து நான்

கற்றுக்கொள்வேன் எனும் சீன வாசகத்திற்கு ஏற்ப, நாடக வழி தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பிக்க முயற்சிப்போமாக.

துணைநூல்கள்

Hayes,Suanne,Karbowska,(1984) Drama as a second language: A practical Handbook for language teachers.National Extension College.

Livingstone,C.,(1993) Role in Language learning.London Longman.

Maley,A.and Duff,A (1979) Drama Techniques in Language Learning. Cambridge: Cambridge University Press.

Sam Wan Yee.(1990) Drama in teaching English as a second language: A communicative Approach.

தமிழ் கற்றல் - கற்பித்தலில் புதிய அணுகுமுறைகள் - எதிர்பார்ப்புகளும் பிரச்சினைகளும். (யாழ்ப்பாணப் பாடசாலைகளை மையமாகக்கொண்ட ஆய்வு)

முனைவர்(திருமதி).அனுஷ்யா சத்தியசீலன்
தலைவர் / முதுநிலை விரிவுரையாளர் தரம் 1
கல்வியியற்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

முன்னுரை

இன்றைய உலகில் எல்லாத் துறைகளிலும் பல்வேறு மாற்றங்கள் சதா நிகழ்ந்தவண்ணம் உள்ளன. மாற்றங்களை உள்வாங்காத எந்தத் துறையும் வளர்ச்சிப் பாதையில் பயணிப்பது சாத்தியமற்றதாகிவிட்டது எனலாம். அந்தவகையில் கல்வியுலகில் குறிப்பாக, கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டுவருகின்றன. இந்நிலையில் தமிழ் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் புதிய அணுகுமுறைகள், நுட்பங்கள் எதிர்பார்க்கப்படுவது வெளிப்படையானதும் தவிர்க்கமுடியாததுமாகும்.

தமிழ் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் அடிப்படையில் கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து என்ற மொழியின் அடிப்படைத் திறன்கள் நான்கையும் விருத்தி செய்தலை நோக்காகக் கொண்டனவாகும். இங்குக் கேட்டல், பேச்சு ஆகிய இரண்டையும் ஒன்றாகவும் வாசிப்பு, எழுத்து ஆகிய இரண்டையும் வேறாகவும் இணைத்துப் பார்க்கும் தன்மை காணப்படுகின்றது. முன்னைய இரண்டும் மொழி சார்ந்து ஒலி வடிவத்துடனும் பின்னைய இரண்டும் வரி வடிவத்துடனும் தொடர்புடையன. முதலில் ஒலி வடிவம் சார்ந்த கற்றல் கற்பித்தலே நடைபெறுகின்றது. பின்னரே வரி வடிவம் சார்ந்த கற்றல் - கற்பித்தலில் கவனம் செலுத்தப்படுகின்றது. மாணவர்களின் வயது, ஆற்றல், தேவை ஆகியவற்றுக்கு ஏற்ப இவை வெவ்வேறு அளவுகளில் முன்வைக்கப்படுகின்றன. ஏனைய பல மொழிகளைப் போலவே தமிழ் மொழியும் பேச்சுமொழி, நியமமொழி என்ற இரு பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. இங்குத் தமிழ் கற்றல் - கற்பித்தல் செயற்பாடு என்பது பெரிதும் நியம மொழி கற்பித்தலையே கருதுகின்றது.

இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட இலக்கிய, இலக்கண வரலாற்றையுடைய மொழி என்ற வகையிலும், இன்று செம்மொழி என்ற தகுதியைப் பெற்ற சீரிய மொழி என்ற வகையிலும் தமிழ்மொழி முக்கியத்துவம் பெறுகின்றது. இந்நிலையில் உலகளாவிய ரீதியில் பல்லாயிரக்கணக்கானோர் தமிழ் மொழியைக் கற்கின்றார்கள். தனியே தமிழ்மொழி ஒரு கருத்துப் பரிமாற்ற ஊடகம் என்ற வகையில் மட்டுமல்லாது, சிந்தனைக் கருவூலம், பண்பாட்டுக்கருவி, கற்றல் - கற்பித்தல் ஊடகம் என்ற வகையிலும் பயன்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு நாட்டினதும் கலைத்திட்டத்தில் மொழி கற்றல் - கற்பித்தல் முக்கியத்துவம் பெறுகின்றது. மொழி விருத்தியுள்ள பிள்ளையாலேயே ஏனைய பாடங்களிலும் சிறப்பாகத் துலங்கலை வெளிப்படுத்த முடியும் என்பதை ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. கோவார்ட் கார்ட்னர் (Howard Gardner) இனங்கண்டு கூறிய ஏழு விதமான நுண்மதிகளில் மொழி சார்ந்த நுண்மதியும் ஒன்றாகும் என்பது மொழிக் கற்றல் - கற்பித்தலின் அவசியத்தை உணர்த்துகின்றது.

மரபு ரீதியான குருகுலக் கல்விமுறை, திண்ணைக் கல்விமுறைகளினூடாகக் கற்பிக்கப்பட்டு வந்த தமிழ்மொழி கற்றல் - கற்பித்தலில் நீண்டகாலமாக பெரியளவிலான மாற்றங்களை உள்வாங்கவில்லை என்றே கூறலாம். செய்யுள்கள், சூத்திரங்களை மனனம்

செய்தல், மரபு ரீதியான இலக்கண விதிகளை உதாரணங்கள் மாறாது ஒப்புவித்தல், விரிவுரையாற்றுதல் என்ற வரையறைக்குள்ளேயே தமிழ் கற்றல் - கற்பித்தல் வகுப்பறைகளில் நிகழ்வதை இன்றும் அவதானிக்கமுடிகின்றது.

தொடர்பு சாதனங்களின் ஆதிக்கம், உலகமயமாதல் மீதான முனைப்பு, புலப்பெயர்வு, அறிவியற் பொருளாதாரத்தின் மீதான நாட்டம், வேற்று மொழிகளின் தாக்கம், மொழியியல் ஆய்வுகளின் போக்குப் போன்ற பல காரணிகள் தமிழ் கற்றல் கற்பித்தலில் புதிய அணுகுமுறைகளை அவாவி நிற்கின்றன. குறிப்பாக அறிவுப் பொருளாதாரத்திற்கு இன்றியமையாத திறன்களாக கீழ் வருவன கூறப்படுகின்றன.

- வாசித்தல், எழுதுதல், கணித்தல் மற்றும் அடிப்படைக் கணினிப் பிரயோகங்களைச் செயற்படுத்தல் என்பவற்றை உள்ளக்கிய அடிப்படைத்திறன்கள்
- பயன்மிகு தொடர்பாடல்
- சிந்திக்கும் திறன்கள்
- குழுச்செயற்பாடுகள்
- தகவல்கள் பற்றிய அறிவு
- தொடர்ந்து கற்கும் பழக்கங்கள்

இவற்றில் பல விடயங்கள் மொழியின் அடிப்படைத் திறன்களோடு நெருங்கிய தொடர்புடையன. எனவே மொழி இருவருக்கிடையேயான அல்லது ஒரு குழுமத்திற்கிடையேயான கருத்துப் பரிமாற்ற ஊடகம் என்ற நிலையிலிருந்து இன்று உலகை வெற்றி கொள்வதற்கான அடிப்படை விடயங்கள் பலவற்றை வழங்கும் ஊடகம் என்றவாறாக மாற்றம் பெற்று விட்டது. இந்நிலையில் தமிழ்மொழி கற்றல் - கற்பித்தலிலும் புதிய அணுகுமுறைகள் பின்பற்றப்படவேண்டும் என்பதன் அவசியம் உணரப்பட்டுள்ளது.

ஆய்வின் முக்கிய பதங்களின் விளக்கம்

இங்கு முன்னெடுக்கப்படுகின்ற ஆய்வின் முக்கிய பதங்களின் சுருக்கமான விளக்கங்களை நோக்குவது பொருத்தமானதாக அமைகின்றது.

1. **தமிழ் கற்றல் - கற்பித்தல்**

தமிழ் ஒரு மொழியாகும். அதனை ஆசிரியர்கள் முறைசார்ந்த கலைத்திட்டத்தினூடாக மாணவர்களுக்குக் கற்பிப்பதும் மாணவர்கள் அதனைக் கற்பதுமான சமாந்தரச் செயற்பாடாகும்.

2. **புதிய அணுகுமுறைகள்**

கற்றல் - கற்பித்தலில் அண்மைக் காலமாக உள்வாங்கப்பட்டுள்ள கற்பித்தல் முறைகள்/நுட்பங்கள், கற்பித்தல் தொழில்நுட்பச்சாதனப் பயன்பாடுகள், போன்றனவற்றைக் குறிக்கும்

3. **எதிர்பார்ப்புகள்**

கற்றல் - கற்பித்தல் திருப்திகரமாக இடம்பெற கல்வியைப் பெறுநர், வழங்குனர் உளத் திருப்தியுடன் கூடிய வகையில் எதிர்நோக்கும் தேவை சார்ந்த விடயங்கள்.

4. பிரச்சினைகள்

கல்வியைப் பெறுநர்களும் வழங்குனர்களும் நடைமுறையில் எதிர்நோக்குகின்ற இடையூறுகளும் பின்னடைவுகளும்.

ஆய்வின் நோக்கங்கள்

தமிழ் கற்றல் - கற்பித்தல் முறைசாராத வகையிலும் முறைசார்ந்த வகையிலும் அன்றாடம் நிகழ்ந்தவண்ணமே உள்ளது. இன்றைய மொழி கற்பித்தலில் தனியார் மயப்படுத்தல் (Individualisation), ஒன்றிணைத்தல் (Integration) ஆகிய விடயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. தனியார்மயப்படுத்தல் என்பது, மாணவர்கள் தமது சுயவேகத்தில் மொழியைக் கற்றல் ஆகும். ஒன்றிணைத்தல் என்பது, மொழிக் கலைகளைக் கதைகள், கவிதைகள், கட்டுரைகள் முதலியவற்றுடன் ஒன்றிணைத்துக் கற்க வழிகாட்டுதலாகும். பாடநூல்களைக் கற்பித்தல் என்ற அடிப்படையிலேயே பாடசாலைகளில் தமிழ் கற்றல் - கற்பித்தல் பெரிதும் முன்னெடுக்கப்படுகின்றது. ஆனால் புதிய கற்பித்தல் அணுகுமுறையில் முழுமொழி அணுகுமுறை மொழிப்பாடங்களைக் கற்பிக்கும்போது பாடநூல்களில் முற்றாகத் தங்கியிருக்கும் நிலையை மாற்றியமைக்கின்றது. செயல்முறைகளின் மூலம் மாணவனின் தீவிர பங்குபற்றலினூடாக அவன் தனக்குரிய மொழியைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து மொழியாற்றலைப் பெருக்கிக்கொள்வதை இது வேண்டி நிற்கின்றது. மொழியறிவு விருத்தி, மொழித்திறன் விருத்தி, இலக்கியத்தை நயக்கும் திறன் வளர்ச்சி, படைப்பாற்றல் விருத்தி, பண்பாட்டு விழுமிய உணர்வு விருத்தி ஆகிய கூறுகள் ஒன்றிணைக்கபடுகின்ற கற்றல் - கற்பித்தல் செயற்பாடே சிறப்பான அணுகுமுறையாக அமையலாம். இந்நிலைமைகளைக் கருத்திற்கொண்டு இந்த ஆய்வின் நோக்கங்கள் பின்வருமாறு:-

1. தமிழ் கற்றல் - கற்பித்தலில் புதிய அணுகுமுறைகள் புகுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை விளங்கிக்கொள்ளல்.
2. கற்றல் - கற்பித்தலில் புதிய அணுகுமுறைகளை அடையாளங்காணல்.
3. தமிழ் கற்றல் - கற்பித்தலில் புதிய அணுகுமுறைகள் தொடர்பாக மாணவர்கள், ஆசிரியர்கள் கொண்டுள்ள ஆர்வத்தை, பயன்படு நிலையினைக் கண்டறிதல்.
4. புதிய அணுகுமுறைகளைக் கையாள்வதில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளை இனங்காணுதல்.
5. பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வழிமுறைகளை முன்வைத்தல்.

ஆய்வு முறைமை

மேற்கூறப்பட்ட நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இது பரப்பளவு ஆய்வாக முன்னெடுக்கப்பட்டது. இந்த ஆய்விற்கான தகவல் சேகரிப்புக் கருவியாக வினாக்கொத்து பயன்படுத்தப்பட்டது. மாணவர்களுக்குத் தனியாகவும் ஆசிரியர்களுக்குத் தனியாகவும் ஆய்வாளரால் தயாரிக்கப்பட்ட வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு தகவல்கள் சேகரிக்கப்பட்டன. புதிய அணுகுமுறைகளைப் பின்பற்றல் தொடர்பாக மாணவர்களது ஆர்வத்தை அறிவதாகவும், ஆசிரியர் தொடர்பாக புதிய கற்பித்தல் முறைமைகள், நுட்பங்கள், தொழில்நுட்ப சாதனங்களுடைய பொருத்தமான பயன்பாடு பற்றிய மாணவரது அபிப்பிராயத்தை அறியும் வகையிலுமாக வினாக்கள் வழங்கப்பட்டன. அதே போன்று புதிய அணுகுமுறைகளை பின்பற்றல் தொடர்பாக, ஆசிரியர்களது ஆர்வத்தை அறிவதாகவும், புதிய கற்பித்தல்முறைகள், நுட்பங்கள், தொழில்நுட்ப சாதனங்களின் பொருத்தமான பயன்படுநிலை பற்றி அறியும்

வகையிலுமாக வினாக்கள் வினாக் கொத்தில் இடம் பெற்றன. பெறப்பட்ட தகவல்கள் விபரணப் புள்ளி விபரவியல் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டன. 'ஆம்' 'இல்லை' எனப் பெறப்பட்ட தரவுகள் 1,0 என்ற மதிப்பெண்கள் வழங்கப்பட்டு அவை நூற்று வீதத்தில் மாற்றப்பட்டு விளக்கங்கள் அளிக்கப்பட்டன. மேலும் நேரடி அவதானிப்பு, கலந்துரையாடல் நுட்பங்களும் ஆய்வாளரால் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆய்வின் வரையறைகள்

1. யாழ்ப்பாண நகரப்புற பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களும் ஆசிரியர்களும் மட்டும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர்.
2. யாழ்ப்பாண நகரப்புற பாடசாலைகளிலுள்ள 155 மாணவர்களும் 53 ஆசிரியர்களும் மட்டுமே எழுமாற்றாக மாதிரிகாளக தெரிவுசெய்யப்பட்டனர்.
3. இவர்கள் தரம் 6 முதல் 9 வரையான கனிஷ்ட இடைநிலை வகுப்புக்களில் கற்போராகவும் கற்பிப்போராகவும் காணப்பட்டனர்.
4. கற்றல் - கற்பித்தல் எனப் பொதுவாக குறிப்பிடப்பட்டாலும் ஆசிரியர் சார்பாக கற்பித்தல் முறைகள், நுட்பங்கள், தொழில்நுட்ப சாதனங்களுடைய பொருத்தமான பயன்பாடு தொடர்பான விடயங்கள் மட்டுமே இங்குக் கருத்திற்கொள்ளப்பட்டன.

தரவுப்பகுப்பாய்வு

வினாக்கொத்துக்களின் வழி பெறப்பட்ட தரவுகள் - **தமிழ் கற்றல் - கற்பித்தலில் புதிய அணுமுறைகளிலான ஆர்வம்** பின்வரும் அட்டவணையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

அட்டவணை 1 புதிய அணுகுமுறைகளைப் பயன்படுத்துவதிலான விருப்பு

வகையினர்	விருப்பு	விருப்பின்மை	பொருத்தமாகக் கையாளுதல்
மாணவர்கள்	91.61%	8.39%	47.10% (ஆசிரியர் தொடர்பான கருத்து)
ஆசிரியர்கள்	75.47%	24.53%	54.72%

மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையின் மூலம் புதிய அணுகுமுறைகளைக் கையாள்வதிலான விருப்பு மாணவர், ஆசிரியர் பொறுத்து 75% க்கு மேலாகவே காணப்படுகின்றது. அதிலும் மாணவர் பொறுத்து மிக உயர்ந்த நிலையில் 91.61% உள்ளது. ஆயினும் மாணவர்கள் ஆசிரியர்களுள் 47.10% ஆனவர்களே பொருத்தமான கையாளுதலைச் செய்வதாக குறிப்பிட்டுள்ளார்கள் இது மிகக் கவனத்தில் கொள்ளத்தக்க விடயமாகும். ஆசிரியர்களிடையிலும் பொருத்தமான கையாளுதலைச் செய்வதாக 54.72% மட்டுமே ஒப்புக்கொண்டுள்ளனர்.

இதன்படி தமிழ்க் கற்றல் - கற்பித்தலில் புதிய அணுகுமுறைகளைக் கையாளுதல் தொடர்பாக ஆசிரியர்களின் செயற்பாடு குறிப்பிடத்தக்க நிலையில் உள்ளதாகத் தெரிகின்றது. ஆனாலும் மாணவர்களிடத்தில் அவை பெரியளவில் வரவேற்பைப் பெறவில்லை என்பதும் இங்கு சுட்டிக்காட்டப்படத்தக்கது. ஆசிரியர்கள் புதிய அணுகுமுறைகளைக் கையாள்வதில் நாட்டமுடையவர்களாக உள்ளபோதும் செயற்பாட்டு ரீதியாக முன்னேற்றம் காணவேண்டிய நிலையிலேயே உள்ளனர். இன்றைய சூழலில் மாணவர்களிடமே கற்றல் இடம்பெறவேண்டும்

என்பதால் ஆசிரியர்கள் மாணவர்கள் ஆர்வத்தைத் தூண்டக்கூடிய வகையில் புதிய அணுகுமுறைகளைக் கையாளவேண்டியதில் கவனம் செலுத்தவேண்டியது அவசியம்.

அட்டவணை 2 புதிய கற்பித்தல் முறைமைகள், நுட்பங்களை ஆசிரியர் பொருத்தமாக கையாளுதல்

வகையினர்	விரிவுரை முறை	கலந்துரையாடல்	கணணி வழிக்கற்றல்	மின்னிலக்க வளங்களின் வழிக்கற்றல்	ஆக்கத்திறன் வழிக்கற்றல்	இணைய வழிக்கற்றல்
மாணவர்கள்(ஆசிரியர் தொடர்பான கருத்து)	79.35%	52.90%	47.10%	24.52%	52.90%	23.23%
ஆசிரியர்கள்	75.47%	54.72%	45.28%	24.52%	45.28%	28.30%

மேற்சுட்டப்பட்ட அட்டவணை 2 இன் மூலம் இங்கு கனிஷ்ட இடைநிலைப்பிரிவில் தமிழ் கற்பித்தலில் விரிவுரை முறை, கலந்துரையாடல், கணினி வழிக்கற்றல், மின்னிலக்க வளங்களின் வழிக்கற்றல், ஆக்கத்திறன் வழிக்கற்றல், இணையவழிக்கற்றல் போன்றவாறன பல்வேறு கற்பித்தல் முறைமைகள் நுட்பங்கள் கையாளப்படுதல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு மாணவர்கள் பொறுத்து ஆசிரியர்கள் விரிவுரை முறையினையே பொருத்தமாக கையாள்வதாக 79.35% குறிப்பிட்டுள்ளனர். ஏனைய புதிய அணுகுமுறைகளான கணினிவழிக்கற்றல் 47.10%, மின்னிலக்க வளங்களின் வழிக்கற்றல் 24.52%, இணையவழிக்கற்றல் 23.23% ஏற்றுக் கொண்டுள்ளனர். இதனடிப்படையில் மாணவர் பொறுத்து புதிய கற்பித்தல் முறைகள், நுட்பங்கள் தொடர்பான ஆசிரியர் அணுகுமுறைகள் திருப்திகரமாக இடம்பெறவில்லை என்பது உணரப்படுகின்றது. ஆசிரியர் பொறுத்தும் விரிவுரை முறைமையே அதிகளவில் கையாளப்படுவது 75.47% வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கணினி வழிக்கற்றல் 45.28% பின்பற்றப்பட்டாலும் மின்னிலக்க வளங்களின் வழிக்கற்றல் 24.53%, இணையவழிக்கற்றல் 28.30% போன்ற புதிய அணுகுமுறைகள் அதிக செல்வாக்குப் பெற்றிருக்கவில்லை என்பது புதிய அணுகுமுறைகளிலான ஆசிரியர்களின் போதிய தேர்ச்சியின்மையை வெளிப்படுத்துவதாக உள்ளது. கற்பித்தல் துணைச்சாதனங்களைக் கையாள்தல் தொடர்பான தரவுகள் அட்டவணை 3-இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அட்டவணை 3 கற்பித்தல் துணைச்சாதனங்களைப் பயன்படுத்துதல்

வகையினர்	பாரம்பரிய சாதனங்கள்	பல்லூடகம்	கணணிப் பயன்பாடு	தமிழ் மென்பொருள் பயன்பாடு
மாணவர்கள்(ஆசிரியர் தொடர்பான கருத்து)	72.26%	53.55%	24.52%	24.52%
ஆசிரியர்கள்	79.25%	71.70%	45.28%	28.30%

தமிழ் கற்பிக்கும் பெரும்பாலான ஆசிரியர்கள் பாரம்பரிய துணைச்சாதனங்களான கரும்பலகை, அட்டவணைகள, படங்கள் போன்றவற்றினையே பெருமளவில் பயன்படுத்துவதை அறிய முடிகிறது. பல்லூடகங்களின் துணைகொண்டு கற்பிப்பதிலும் ஓரளவிற்கு ஆர்வம் காட்டப்படுவதை மாணவர் - 53.55%, ஆசிரியர் – 71.70% அறிய முடிகிறது. ஆயினும் நவீனதொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்தி தமிழ் கற்பித்தல் குறிப்பிடத்தக்களவில் இடம்பெறவில்லை என்பதனை தரவுகள் நிரூபிக்கின்றன. கணனி வழி நுட்பங்களைப் பயன்படுத்தி உதாரணமாக கணனி வழிவிளையாட்டு இலகுவாக, தெளிவாக, சுமையின்றி கற்றல் - கற்பித்தல் இடம்பெறமுடியுமாயினும் மாணவர் - 24.52%, ஆசிரியர் – 42.28% ஏற்றுக்கொண்டமையானது அவற்றிலான கவனக்குவிப்புக் குறைவாகவே காட்டப்பட்டுள்ளமையைத் தெளிவுபடுத்துகின்றது. ஆதனை ஒத்த வகையிலேயே தமிழ் மென்பொருட்களைப் பயன்படுத்தலும் (Lectora, Bravu, News Maker, Google doc) ஆசிரியர்களிடையே அதிக செல்வாக்குப் பெற்றிருக்கவில்லை என்பதனை மாணவர் - 24.52%, ஆசிரியர் – 28.30% தரவுகள் வெளிப்படுத்துகின்றன.

ஆய்வாளரால் வகுப்பறைகளின் நேரடி அவதானிப்பின் போதும் புதிய அணுகுமுறைகளைக் கையாள்வதில் மாணவர், ஆசிரியருக்கான விருப்பு அதிகமாக உள்ளமை அவதானிக்கப்பட்டது. ஆயினும் ஆசிரியர் அவற்றைக் கையாள்வதிலான நடைமுறைப் பிரச்சினைகளும், மாணவர் பொறுத்த திருப்தியீனங்களும் அவதானிக்கப்பட்டன. அதே போன்று கலந்துரையாடல்களின் போதும் இணையவழிக்கற்றல், கணணிவழிக்கற்றல், தொழில்நுட்ப துணைச்சாதனங்களைப் பயன்படுத்தல் போன்றவற்றிலான பின்னடைவுகள் இருசாராராலும் வெளிப்படுத்தப்பட்டன. அத்தகைய பின்னடைவுகளுக்குக் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும் அவற்றினைப் பின்வரும் வகைப்பாட்டினுள் அடக்கமுடியும்.

1. பரீட்சைமையக் கல்வியே தொடர்ந்தும் முதன்மைப்படுத்தப்படுவதால் .மாணவர், ஆசிரியர்கள் அதைக் கருத்தில் கொண்டு நகர்கின்றமை – அதனால் புதிய அணுகுமுறைகளில் அதிக புலன் செலுத்தமுடியாமல் இருக்கின்றமை.
2. பெரும்பாலான ஆசிரியர்கள் இரண்டாம் தொழிலொன்றை செய்பவர்களாக இருப்பதனால் புதிய முறைகளில் அக்கறை செலுத்தாமை.
3. தொழில்நுட்ப சாதனங்கள் போதியளவில் கிடைக்காமை, இருப்பனவற்றை வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்குப் போதிய திட்டமிடலின்மை, நேரமின்மை.
4. ஆசிரியர்களுக்கான போதிய வழிகாட்டல்கள் இடம்பெறாமை.
5. ஆசிரியர்களுக்கான கணணி அறிவு போதியளவு இல்லாமை.

இப்பகுப்பாய்வினூடாக பின்வரும் முக்கிய பெறுபேறுகள் வெளிப்படுத்தப்பட்டன.

ஆய்வுப் பெறுபேறுகள்

1. தமிழ் கற்றல் - கற்பித்தலில் புதிய அணுகுமுறைகளிலான விருப்பு மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகிய இரண்டு பகுதியினராலும் உணரப்பட்டாலும் கையாளுதலிலான பின்னடைவுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.
2. புதிய அணுகுமுறைகளை கையாள்வதிலான விருப்பு மாணவர், ஆசிரியர் பொறுத்து 75% க்கு மேலாகவே காணப்பட்டது. அதிலும் மாணவர் பொறுத்து மிக உயர்ந்த நிலையில் (91.61%) உள்ளது. ஆயினும் மாணவர்கள் ஆசிரியர்களுள் 47.10% ஆனவர்களே பொருத்தமான கையாளுதலை செய்வதாக குறிப்பிட்டுள்ளமை ஆசிரியர்

தொடர்பான பின்னடைவினை வெளிப்படுத்தியுள்ளது.

3. மாணவர், ஆசிரியர் என்ற இருசாரார் பொறுத்தும் விரிவுரை முறைமையே பெருமளவில் செல்வாக்குப் பெற்றிருப்பதை வெளிப்படுத்தியுள்ளார்கள்.(சராசரி 75%)
4. மாணவர்கள், ஆசிரியர்கள் சார்பாக முறையே கணினிவழிக்கற்றல் 47.10%, 45.28%, மின்னிலக்க வளங்களின் வழிக்கற்றல் 24.52%, 24.52% இணையவழிக்கற்றல் 23.23%, 28.30% என மிகக் குறைவான செல்வாக்குப் பெற்றிருப்பதை அறியமுடிகின்றது.
5. கற்பித்தல் துணைசாதனைப்பயன்பாட்டிலும் பாரம்பரிய சாதனங்களே அதிகளவில் பயன்படுத்தப்படுவதனை மாணவர் 72.26%, ஆசிரியர் 72.25% வெளிப்படுத்தியுள்ளனர்.
6. கணினி 24.52%, தமிழ் மென்பொருள்கள் 24.25%, மட்டுமே ஆசிரியர்களால் பயன்படுத்தப்படுவதனை மாணவர்கள் வெளிப்படுத்தியுள்ளார்கள்.
7. பரீட்சை மையக்கல்வியே புதிய அணுகுமுறைகளைப் பயன்படுத்துவதில் குறிப்பிடத்தக்களவு பின்னடைவை ஏற்படுத்துவதாக மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகிய இருசாராரும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

மேற்படி ஆய்வினூடாக மாணவர், ஆசிரியர்களிடம் புதிய அணுகுமுறைகளிலான விருப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் கையாளுதலிலான திருப்தியீனங்களும், போதாமைகளும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அந்தவகையில் மேற்கூறப்பட்ட பின்னடைவுகளை நீக்குவதற்கான வழிமுறைகள் பற்றி ஆசிரியருடன் கலந்துரையாடப்பட்டது அதன்வழி பின்வரும் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

1. தமிழ் கற்றல் கற்பித்தலில் ஆர்வத்தை ஏற்படுத்தக்கூடிய புதிய கற்றல் கற்பித்தல் முறைகள், நுட்பங்கள், கற்றல் - கற்பித்தல் தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்துதல் தொடர்பாக நிபுணத்துவமுடையோரால் காலத்துக்குக் காலம் பொருத்தமான சேவைக்காலப் பயிற்சிகள் ஆசிரியர்களுக்கு வழங்கப்படல்.
2. ஆசிரியர்களிடையே புதிய அணுகுமுறைகள் பின்பற்றப்படவேண்டியதன் அவசியம் உணர்த்தப்படல்.
3. பாடசாலைகளுக்கிடையேயும் பாடங்களுக்கிடையேயும் பொருத்தமான வகையில் போதிய வளங்களை ஒருங்கிணைப்பதில் அக்கறை காட்டப்படல்.
4. தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவருக்கும் கணினிப் பயன்பாட்டில் பொருத்தமான பயிற்சி அளிக்கப்படல்.
5. ஆசிரியர்கள் தமது கற்றல் - கற்பித்தல் திறன்களை இற்றைப்படுத்திக்கொள்ள போதிய சந்தர்ப்பங்கள் வழங்கப்படல்.
6. புதுமைநாட்டம் மிக்கவர்களாகவும் புத்தாக்கச் சிந்தனையுடையவர்களாகவும் ஆசிரியர்கள் செயற்படுவதற்கு தேவையான பயிற்சிப்பட்டறைகள் அவ்வப்பொழுது ஒழுங்கு செய்யப்படல்.
7. அவற்றுக்கான போதியளவு ஊக்குவிப்புக்கள் பொறுப்பாளிகளினால் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுதல்.

முடிவுரை

அறிவியற் பொருளாதாரம் தலைதூக்கியுள்ள சூழலில் எல்லா விடயங்களிலும் புதுமை நாட்டம் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. சந்தைப் பொருளாதாரத்தைப் பொறுத்து வழங்குநர்களின் திருப்தியைக் காட்டிலும் கொள்வோரின் திருப்தியும் நாட்டமும் முனைப்புப் பெற்றுள்ளன. கல்வியுலகிலும் இந்நிலை செல்வாக்குச் செலுத்துகின்றது. ஆசிரியர் எதைக் கற்பிக்கின்றார் என்பதைக் காட்டிலும் கற்றலுக்கு எவ்வாறு உதவுகின்றார் என்றவகையில் ஆசிரியரின் வகிபாகம் மாற்றம் பெற்றுள்ளது.

இன்று பல்வேறுவகையான புதிய கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் காணப்படுகின்றன. நேரடிப்போதனை, நேரில் போதனை, அனுபவம்சார் கற்றல், சுதந்திரமான கற்றல், இடைத்தாக்கத்துடன் கூடிய கற்றல் போன்ற புத்தாக்கம்சார் கற்றல் - கற்பித்தலும் நேரடியாகக் கற்றல், கூட்டுக் கற்றல், கலந்துரையாடலுடன் கூடிய கற்றல், சிந்தனைக் கிளறல், பல்லூடக எறியி மூலம் கற்றல், கலந்துரையாடல், பாத்திர நடிப்பு, விடய ஆய்வு, இணைய வழிக்கற்றல், கணினி உதவிக் கற்றல் என புதிய பல கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் இன்று பேசப்படுகின்றன. இவற்றையெல்லாம் உள்வாங்கி ஆசிரியர்கள் தமிழ் கற்றல் - கற்பித்தலில் புதிய அணுகுமுறைகளை கையாளவேண்டும் என்று எதிர்பார்க்கின்றது. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை அண்மைக்காலமாக தமிழ்மொழி அடைவு வீழ்ச்சியடைந்து செல்வதை புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இதற்கு மாணவர்கள் மட்டுமல்லாது ஆசிரியர்களது கற்றல் - கற்பித்தல் முறைகளில் காணப்படும் பின்னடைவும் முக்கிய காரணமாகும்.

மொழித்திறன் விருத்தியை மாணவர்களிடத்தில் ஏற்படுத்தக்கூடிய வகையில் சிறப்பாக கையாளக்கூடிய பல கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் காணப்படுகின்றன. புதிய கற்பித்தல் முறைகள், கற்பித்தல் துணைகளைப் பொருத்தமான வகையில் கையாளுதல் போன்றன மாணவர்களிடத்தில் கற்றல் ஆர்வத்தை அதிகரிக்கச் செய்யும் என்பதால் ஆசிரியர்கள் அந்த விடயங்களில் அதிக அக்கறை காட்டவேண்டும். அதற்கான வழிகாட்டல்கள் ஆசிரியர்களுக்குப் போதியளவில் கிடைக்கப்பெறவேண்டும்.

தமிழ் கற்றல் - கற்பித்தலில் புதிய அணுகுமுறைகளைக் கையாளவேண்டும் என்பது பலரது எதிர்பார்ப்பாக அமைந்தாலும் அதனை நடைமுறைப்படுத்துவதில் யாழ்ப்பாணப் பாடசாலை ஆசிரியர்கள் பல பின்னடைவுகளைச் சந்திக்கின்றனர். ஆனால் அவற்றையெல்லாம் வெற்றிகொண்டு புதிய அணுகுமுறைகளை தமிழ் கற்றல் - கற்பித்தலிலும் உள்வாங்கிக் கொள்வது மிக அவசியம். எதிர்காலச் சமுதாயத்திடம் ஆரோக்கியமான மொழித்திறன் விருத்தியை ஏற்படுத்தவும், அவர்களை ஆளுமை மிக்கவர்களாக்க ஆக்கவும், தமிழ் மொழியை வளர்ச்சியுறு நவீன மொழியாக மாற்றவும் புதிய அணுகுமுறைகளை புகுத்துதல் அவசியமானதும், அவசரமானதும் ஆகும்.

துணைநூற்பட்டியல்

1. சிவத்தம்பி கார்த்திகேசு, **தமிழ் கற்பித்தல்**. (2007) குமரன் புத்தக இல்லம் கொழும்பு -12, இலங்கை.

2. ஜெயராசா.சபா. **தாய்மொழிக் கல்வியும் கற்பித்தல் கலையும்** (2009) சேமமடு பதிப்பகம், கொழும்பு 11, இலங்கை.

3. எலியட் எல்.ஜீட், விஹ்ரீவா டான். **மேலதிகமொழிகளைக் கற்பித்தல்** (2010) குமரன் புத்தக இல்லம், கொழும்பு 12, இலங்கை.

4. இராஜேந்திரன் என்.எஸ். "மலேசியாவில் தமிழ்க் கல்வியும் கற்றல் கற்பித்தலும" **ஆசிரியம்,** (2008). உமா பதிப்பகம். கோலாலம்பூர்.

5. **தமிழ் மொழிகற்பித்தல்**. ஆசிரியர் கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம், மகரகம,இலங்கை.

6. **புத்தாக்கம்சார் கற்பித்தல்**. (2009), கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்லை.

7. **கற்றல் கற்பித்தல் முறையியல்கள்**. (2009), கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்லை, இலங்கை.

8. **கற்றல் கற்பித்தல் வளங்களின் விருத்தியும் பயன்பாடும்** (2009), கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்லை, இலங்கை.

மொழி & பண்பாட்டு விழுமியங்களைக் கற்பிப்பதில் குறும்படங்கள்

ம. ஞானசேகரன், பாடத்திட்ட அதிகாரி, கல்வி அமைச்சு, சிங்கப்பூர்
முனைவர் பொன் சசிகுமார், பாடத்திட்ட அதிகாரி, கல்வி அமைச்சு, சிங்கப்பூர்

ஒரு மொழி வாழும் மொழியாக நிலைபெற்றிருக்க வேண்டுமானால் அது பேசும் மொழியாகப் புழக்கத்தில் இருக்க வேண்டும். அவ்வாறு அது புழக்கத்தில் இருப்பதற்குக் கற்றல் கற்பித்தல் முறைகளும் காலத்திற்கு ஏற்ப மாற்றத்தைப் பெறவேண்டும். இதனையே சிங்கப்பூர்ப் பாடத்திட்டமும் வலியுறுத்தி வருகின்றது.

இன்றைய மின்னியல் யுகத்தில் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய அடிப்படை மொழித்திறன்களுடன் பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றம், எழுத்து வழிக்கருத்துப் பரிமாற்றம் ஆகிய இருவழிக் கருத்துப் பரிமாற்றத் திறன்களும் முக்கியத்துவம் பெறுகின்றன.

தாய்மொழிக் கல்வி என்பது ஒருவரின் பண்பாட்டு அடையாளத்தையும் மரபுவழிப் பண்புகளையும் விழுமியங்களையும் உணர்த்தவல்லது. காலம் காலமாக விரும்பிப் போற்றப்பட்டு வரும் வாழ்க்கை முறையைப்பண்பாடு எனலாம். இவ்வகையில் ஓர் இனத்தினரின் பண்பாட்டில் பொதிந்துள்ள உயர்ந்த சிந்தனைகளையும் கருத்துகளையும் விழுமியங்கள் எனக் கொள்ளலாம்.

கல்வி வளர்ச்சி என்பது தனிமனிதனின் பொருளியல் வாழ்வையும்நாட்டின் பொருளாதாரத்தையும் உயர்த்தலாம். ஆனால் அந்த வாழ்வும் செழிப்பும் நிலைத்து நிற்க வேண்டுமானால் கல்வித்திட்ட முறையில் விழுமிய நெறிகளும் பண்பாடும் முக்கியமானவைகளாக இருக்க வேண்டும். இத்தகைய விழுமிய ஒழுக்கங்களைக் கற்பித்தலே சிறந்த கல்வி என்று கூறப்படுகிறது.

இன்றைய உலகின் அதிவேக முன்னேற்றமும் அறிவியலின் வியத்தகுவளர்ச்சியும் மனித வாழ்க்கைக்கும் விழுமியங்களுக்கும் சவால் விடுக்கக்கூடிய நிலையில் உள்ளன. அதற்கேற்ப மாணவர்கள் தங்கள் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சவால்கள், சிக்கல்கள் ஆகியவற்றுக்கான தீர்வுகளையும் முடிவுகளையும் தாங்களாகவே எடுப்பதற்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.

மாணவர்களை நாட்டின் சிறந்த குடிமக்களாக ஆக்குதல் கல்வியின் அடிப்படைக் குறிக்கோளாகும். இதனை அடைவதற்கு வாய்மை, அக்கறை, முனைப்பு, தலைமைப் பண்பு, தன்னம்பிக்கை, பிறர்நலம் போற்றுதல், நாட்டுப்பற்று, கடமை, நேர்மை, இரக்கம், விடாமுயற்சி, பொறுமை, சகிப்புத்தன்மை, மன்னிக்கும் மனப்பான்மை, பெரியோரை மதித்தல், முடிவெடுத்தல் போன்ற விழுமியங்களை

மாணவர்களின் மனத்தில் விதைத்து அதனை வளர்த்தெடுக்க வேண்டும். இதற்குப் பண்பாட்டுக் கல்வி பெருந்துணை புரியும்.

மாணவர்களிடம் ஏட்டுக்கல்வி மூலமாக மேற்கண்ட விழுமியங்களையும் பண்பாட்டையும் வலியுறுத்திக் கற்பித்தல் அன்று முதல் இன்று வரை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. சங்க இலக்கியங்கள், திருக்குறள், புராணங்கள், இதிகாசங்கள், காப்பியங்கள் போன்றவற்றில் இடம்பெற்றுள்ள நிகழ்வுகளையும் கதைகளையும் சொல்லி அவற்றில் பொதிந்துள்ள விழுமியக் கருத்துகளை மாணவர்களின் மனத்தில் பதியும்படிச் செய்கின்றோம். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கணியன் பூங்குன்றனாரின் புறநானூற்றுப் பாடல் (புறநானூறு 192) உலக மாந்தர் அனைவரையும் உறவினராகக் கருதும் பண்பாட்டை உணர்த்துகிறது. பண்பாட்டில் சிறந்தவர்களின் இயல்புகள் எப்படியிருக்கும் என்பதைப் புறநானூற்றில் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதியின் பாடல் பட்டியலிடுகிறது. நல்லியல்பினர், அமிழ்தமே கிடைத்தாலும் தாம் மட்டும் வைத்துக்கொண்டு தனியே உண்ணமாட்டார்கள்; பிறரை வெறுக்கமாட்டார்கள்; பழி பாவங்கட்கு அஞ்சுவார்கள்; புகழ் வரும் என்றால் அதற்காக உயிரையும் கொடுப்பார்கள்; பழி வரும் என்றால் அதற்கு ஈடாக எதைக்கொடுத்தாலும் அதனை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று பட்டியல் நீள்கிறது.

"கல்வியானது முழுமையடைய வேண்டுமெனில் அது நுண்ணறிவிற்கான பயிற்சியினை அளிக்கக்கூடியது மட்டுமன்றி ஒருவரது உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவதாகவும் நடத்தையினை மேம்படுத்துவதாகவும் இருக்க வேண்டும்," என்று விழுமிய கல்வித் திட்டம்பற்றிக் கூறுகிறார் இந்தியாவின் அதிபராக இருந்த டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்.

தொழில்நுட்பம் என்பது அனைவரையும் தன் பக்கம் இழுத்துக் கட்டிப் போட்டுவிடும் வல்லமை படைத்ததாக உள்ளது. இன்றைய சமூகமோ காட்சிச் சமூகமாக மாறிக்கொண்டிருக்கின்றது. இத்தகைய சூழலில் கற்றல் கற்பித்தலும் அதனை ஒதுக்கிவிட முடியாது. மாணவர்களின் மனங்களைக் கவரும் வகையில் கற்றல் கற்பித்தலும் இருக்க வேண்டுவது அவசியமாகிறது. அதற்கான பயிற்சிக் களங்களாகவும் கற்பித்தலுக்கான கருவிகளாகவும் இன்றைக்குக் குறும்படங்கள் உலா வந்துகொண்டிருக்கின்றன. அவற்றை ஆசிரியர்களாகிய நாம் மாணவர்களின் நிலைக்கேற்பவும் அவர்களின் தேவைக்கேற்பவும் தேர்ந்தெடுத்துக் கற்றல் கற்பித்தலில் பயன்படுத்தும்பொழுது இதுவரை நாம் கூறிவந்த நோக்கங்களை நிறைவேற்ற முடியும் என்பது உறுதி.



எடுத்துக்காட்டாக சாப்பாடு தயார் (Meals Ready) என்றொரு குறும்படம். அதில், ஒரு வயதான பெரியவர் வேகமாக நடந்து வருகிறார். நேராக அவர் வேலை பார்க்கும் உணவுக்கடைக்குச் செல்கிறார். சீருடையை அணிந்து கொண்டு தம் கையில் ஒரு விளம்பரப் பலகையை எடுத்துக்கொண்டு வருகிறார். நகரத்தை நோக்கிச் செல்லும் விரைவுச் சாலையில் 'MEALS READY' என்ற அந்தப் பலகையை வைத்துக்கொண்டு நிற்கிறார். உச்சி நேர வெயிலில் செருப்புக்கூட இல்லாத வெறுங்காலுடன் சாலையில் வாகனங்களில் செல்பவர்கள் பார்க்குமாறு மாலை வரை அந்தப் பலகையுடன் நின்றுகொண்டிருக்கிறார். ஒரு குடும்பத்தினர் வாகனத்தில் வந்து அந்தக் கடையில் உணவு சாப்பிட்டு விட்டுப் புறப்படுகின்றனர். புறப்படும் நேரத்தில் அந்த வாகனத்தில் இருந்து சிறுவயது குழந்தை ஒன்று சாக்லெட் ஒன்றை அந்தப் பெரியவரிடம் கொடுக்கிறது.

மதிய உணவு நேரம் முடிந்த பின்னர் அந்தப் பெரியவர் பலகையைக் கடைக்காரரிடம் ஒப்படைக்கிறார். அதுவரை வேலை செய்ததற்கான கூலியாகக் கடைக்காரர் உணவுப் பொட்டலம் ஒன்றை அந்தப் பெரியவரிடம் கொடுக்கிறார். உணவுப் பொட்டலத்தை எடுத்துக்கொண்டு வேகமாக வீட்டிற்குச் செல்கிறார். அங்கே அவருடைய வயதான மனைவியுடன் அந்த உணவைப் பகிர்ந்துகொண்டு சாப்பிடுகிறார். அதன் பிறகு அந்தக் குழந்தை கொடுத்த அந்தச் சாக்லெட்டையும்கூட அவர் தம் மனைவியிடம் கொடுத்துப் பகிர்ந்து சாப்பிடுகிறார்கள்.

இப்படத்தில் வசனங்கள் இல்லை; பேச்சு இல்லை; மொழி இல்லை. பேசாத இந்தப் படத்தின் வழி மொழியைப் பேச இயலாத மாணவர்களையும் பேச வைக்க இயலும். பொறுப்பு, பிறர் நலம் போற்றுதல், கடமை, தியாக உணர்வு, பொறுமை, அன்பு முதலிய பண்பாட்டு விழுமியங்களையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் மாணவர்களின் மனத்தில் விதையாக விதைத்துப் பயிரிட்டுச் செழிக்கச் செய்ய முடியும்.**ஒரு படம் ஆயிரம் சொற்களுக்கு ஈடானது** (A picture is worth a thousandwords) என்னும் கூற்றினை நோக்கும் பொழுது குறும்படத்தின் வலிமையைப் பற்றிக் கூறவேண்டியதில்லை.



செல்வன் என்று ஒரு சிறுவன். அவன் தன்னுடைய வீட்டிலிருந்து தொலைதூரம் சென்று ஒரு மளிகைக் கடையில் வேலை செய்கிறான். அவனுடைய ஆசை தன் அம்மாவிடம் எப்படியாவது தொலைபேசியில்

பேச வேண்டும் என்பது. தொலைபேசி கடையில் வேலை செய்யும் பெண் தொலை தூரத்தில் இருக்கும் தன் அம்மாவிடம் ஐந்து நிமிடம் பேச எவ்வளவு ஆகும் என்று கணக்குப் போட்டுக் கூறுகிறாள். செல்வன் அந்தப் பணத்தைச் சிரமப்பட்டுச் சேர்க்கிறான்.

ஐந்து நிமிடங்களில் என்னவெல்லாம் பேச வேண்டும் எப்படியெல்லாம் பேச வேண்டும் என்று பயிற்சி செய்கிறான். செல்வன் தன் அம்மாவிடம் பேசினானா? இதுதான் ஆசை என்ற குறும்படத்தின் கதை.

அக்கறை, முனைப்பு (initiative), தன்னம்பிக்கை, கடமை, தியாக உணர்வு, மானுட அன்பு, விடா முயற்சி, பொறுமை, சகிப்புத் தன்மை, அன்பு இப்படி எத்தனையோ விழுமியங்களைப் பற்றிப் பேசுவதற்கும் விவாதிப்பதற்கும் கருத்துரைப்பதற்கும் கற்றுக்கொள்வதற்கும் இடமளிக்கும் குறும்படமாக 'ஆசை' அமைந்துள்ளது.

தமிழ் இனி என்று ஒரு குறும்படம். தமிழில் குறும்படத்தைப் பற்றி அறிந்தவர்கள் என்றால் கண்டிப்பாக இப்படத்தைப் பார்த்திருப்பார்கள். தமிழர்கள் குடியேறிகளாக வாழும் நாடுகளில் பிறமொழிகளின் ஆதிக்கம் அதிகமாக இருக்கும் சூழலில் தமிழின் நிலை எதிர்காலத்தில் எப்படியிருக்கும் என்பதைப் படம்பிடித்துக் காட்டிச் சற்றுச் சிந்திக்க வைத்திருக்கும் படம். இன்றைக்குத் தமிழ் பேசத் தயங்கும் மாணவர்களுக்கும் தமிழ் பேச மறுக்கும் பெற்றோர்களுக்கும் தேவையான படம். இரண்டு மூன்று தலைமுறைகளுக்குப் பின்னர் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களிடம் தமிழ் மொழியின் நிலை எப்படியிருக்கும் என்பதைப் பற்றிய ஆழ்ந்த சிந்தனையை விதைத்திருக்கும் படமாகத் 'தமிழ் இனி ...?'என்னும் குறும்படம் அமைந்துள்ளது.



'தமிழ்மொழியைக் கற்பதன் மூலம் மாணவர்கள் தமது பண்பாடு, கலாசாரம், வரலாறு, இலக்கியம் ஆகியவற்றைப் பற்றித் தெரிந்து கொள்வார்கள். இதன்-வழி மாணவர்கள் தங்களது பண்பாட்டு விழுமியங்களையும் பாரம்பரிய மரபு-களையும் போற்றிப் பின்பற்றுவார்கள். பல இனச் சமுதாயத்தோடு இணைந்து பழகும் நிலையிலும் இவற்றைக் கட்டிக் காப்பார்கள்' என்று கூறிக்கொண்டிருக்கும் வேளையில் அந்தத் தமிழ் மொழிக்கே ஆபத்து என்று கூறுகிறது இந்தப் படம்.

இந்தப் படத்தைப் பார்ப்பவர்களுக்கு நம் மொழியின்மீது அக்கறை வரும். அதைக் கட்டிக் காக்க வேண்டிய பொறுப்பை எண்ணிப் பார்ப்பார்கள். விரைந்து தெளிந்த முடிவெடுக்க வேண்டியதன் அவசியத்தை உணர்வார்கள்.

குறும்படங்களை இன்றைய கற்பித்தல் உத்தி முறைகளுடன் இணைத்துக் கற்பிக்கும்போது மாணவர்கள் இன்னும் ஈடுபாட்டுடன் கற்பார்கள்; தமிழ்மொழி கற்றலை ஓர் இனிய அனுபவமாக உணர்வார்கள். வகுப்பறை துடிப்புமிக்க கற்றல் சூழலுடன் காணப்படும்.

பல்வேறு கற்பித்தல் உத்தி முறைகளுள்' முதன்மை இருக்கை, ''மனசாட்சிப் பாதை' என்ற இரண்டு உத்தி முறைகளின்வழிக் குறும்படங்களை எவ்வாறு கற்பிக்கலாம் என்பதை மட்டும் இக்கட்டுரையில் காண்போம்.

1. முதன்மை இருக்கை

'ஆசை' என்ற குறும்படத்தை எடுத்துக்கொள்வோம். இதனை முதன்மை இருக்கை(Hot Seating) என்ற நாடக உத்தியைப் பயன்படுத்திக் கற்பிக்கலாம். இதில் மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட கதாபாத்திரத்தையோ, அல்லது அவர்கள் விரும்பும் கதா பாத்திரத்தையோ கற்பனைப் பாத்திரமாக ஏற்க வேண்டும். முதன்மை இருக்கையை வகுப்பின் முன்போ அல்லது ஒரு வட்டத்தின் நடுவிலோ அமைக்க வேண்டும்.

பாத்திரத்தை ஏற்கும் மாணவர் முதன்மை இருக்கையில் அமர வேண்டும். மற்ற மாணவர்கள் கேள்விகளைக் கேட்க வேண்டும். மாணவர்கள் கேட்கும் கேள்விகள் பாத்திரத்தின்மீது பரிவு காட்டவும் பாத்திரத்தைப்பற்றித் தெரியாத செய்திகளை மேலும் தெரிந்து கொள்ளவும் அல்லது விளங்கிக்கொள்ளவும் உதவும். ஒரு குறிப்பிட்ட பிரச்சனையோ, யோசனையோ, ஒரு மர்மப் பாத்திரமோகூட முதன்மை இருக்கைக்கு வரலாம்.

முதன்மை இருக்கை என்ற இவ்வுத்தி முறையில் சிலவற்றை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். ஒருவரே நிறைய வினாக்கள் கேட்டல் கூடாது. வினாக்கள் ஆமாம், இல்லை என்று ஒரே சொல்லில் பதில் கூறும் வகையில் இருத்தல் கூடாது.

இவ்வுத்தி முறையில்,

- மாணவர்களுள் ஒருவரை ஒரு கதாபாத்திரமாகவோ அல்லது ஓர் எழுத்தாளராகவோ முதன்மை இருக்கையில் அமர வைக்க வேண்டும்.
- மாணவர்கள் தனியாகவோ குழுவாகவோ கலந்துரையாடல் மூலம் அந்தப்

பாத்திரத்தைப் பற்றி மேலும் செய்திகள் சேகரிக்க வேண்டும்.

- ஆசிரியர் கேள்விகள் கேட்கும் உத்திகளைக் கற்பிக்க வேண்டும்.
- (எ-டு) ஆசை என்ற படத்தின் கதையை எழுதிய எழுத்தாளர் முதன்மை இருக்கையில் அமர்ந்திருப்பதாக இருந்தால் மாணவர்கள், 'செல்வன் எப்படிப்பட்ட குணங்கள் உடையவன்?' என்று கேட்கலாம்.
- மாணவர்கள் அந்தப் பாத்திரத்தைப் பற்றிய செய்திகளை அறிந்து புரிந்து கொண்டு பொருத்தமான கேள்விகளை உருவாக்க வேண்டும்.
- மாணவர்கள் தாங்கள் கேட்கும் கேள்விகளுக்கு முதன்மை இருக்கையில் அமர்ந்திருப்பவர் கூறும் பதில்களிலிருந்து கதாபாத்திரத்தைப் பற்றியும் கதாபாத்திரத்தின் தன்மைகள், பிரச்சினைகள் பற்றியும் மேலும் புரிந்துகொள்வர்.
- நடவடிக்கையின் இறுதியில் மாணவர்களைத் தாங்கள் கற்ற, ரசித்த, சிந்தித்தக் கருத்துகளைக் கூறச் செய்யலாம்.

2. மனசாட்சிப் பாதை

'தமிழ் இனி ...?' என்ற குறும்படத்தை 'மனசாட்சிப் பாதை' என்ற நாடக உத்தி முறையில் எவ்வாறு கற்பிக்கலாம் என்று பார்ப்போம். இவ்வுத்தி முறையில், மாணவர்கள் இரண்டு வரிசையில் நிற்பார்கள். கதாபாத்திரத்தின் மனசாட்சியாகப் பேசுபவர்களில் ஒரு பிரிவினர் ஆதரித்தும் மற்றொரு பிரிவினர் எதிர்த்தும் பேசுவர். கதாபாத்திரமேற்பவர் மெதுவாகப் பாதையில் நடப்பார்.

கதாபாத்திரத்தின் மனசாட்சியாகப் பேசுபவர்கள் கூறும் சாதகமான கருத்துகளையும் பாதகமான கருத்துகளையும் உள்வாங்கிக் கொள்வார். பின்னர், நன்கு ஆராய்ந்து பார்த்து ஒரு முடிவெடுப்பார். இந்நடவடிக்கையில் எல்லா மாணவர்களுக்கும் கலந்து கொள்வதற்கான வாய்ப்பிருக்கும். எடுத்துக்காட்டாக,'தமிழ் இனி ...?' என்ற குறும்படத்தில் வரும் தாத்தாவாக ஒரு மாணவர் பாகமேற்க வேண்டும். அவர் பாதையில் மெதுவாக நடக்க வேண்டும். அவருடைய மனசாட்சியாகப் பேசுபவர்கள் அவருடைய கவலைக்கான சாதகமான கருத்துகளையும் பாதகமான கருத்துகளையும் கூறவேண்டும்.

தாத்தாவாகப் பாத்திரமேற்பவருடைய கவலை உண்மையானது; சரியானது என்றும் அதற்கான காரணங்கள் பற்றியும் ஒரு பக்கத்தில் உள்ளவர்கள் பேசவேண்டும். எதிர்ப்பக்கத்தில் நிற்பவர்கள் அவருடைய கவலை தேவையற்றது என்றும் அவர்

நினைப்பது போன்ற நிலைக்குத் தமிழ்மொழி செல்லாது என்றும் ஆதாரத்துடன் பேசவேண்டும்.

இவ்வுத்தி முறையில்,

- மாணவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்துக் கொள்ளவேண்டும்.
- நடந்து சென்று கருத்துக் கேட்பவர் ஒருவர் இருக்க வேண்டும்.
- தலைப்பையொட்டி மாணவர்கள் கலந்துரையாடுவர்.
- ஆதரித்து ஒரு குழுவினரும், எதிர்த்து ஒரு குழுவினரும் பேசக்கூடிய கருத்துகளைப் பற்றிச் சிந்திப்பர்.
- ஒருவர்கூறும்கருத்துகளைமற்றவர்திரும்பக்கூறக்கூடாது.
- இரு குழுவினரும் கருத்துக்கேட்பவருக்குச் சாதகமான, பாதகமான கருத்துளைக் கூறத்தொடங்குவர்.
- நடப்பவர் காது கொடுத்துக் கேட்பார். ஆனால், அவர் பதில் கூறக்கூடாது.
- எல்லாரும் கருத்துகளைக் கூறிய பின் கருத்துகளைக் கேட்டவர் இருசாராரின் கருத்துகளையும் சீர்தூக்கிப்பார்ப்பார். அதன் பின்னர் சுயமாக முடிவெடுத்துக் கருத்துக் கூறுவார். முடிவு எப்படி வேண்டுமானாலும் அமையலாம்.

கட்டுரை எழுத வேண்டியிருந்தால் நடவடிக்கையின் மூலம் திரட்டிய கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு குழுவினர் முழுமையான கட்டுரையைப் படைப்பர். (எ-டு. எதிர்காலத்தில் தமிழின் நிலை எவ்வாறு இருக்கும். அதற்காக இன்றைய தலைமுறையினர் மேற்கொள்ள வேண்டிய பணிகள் யாவை?

- இறுதியாக மாணவர்கள் அனைவரும் அமர்ந்து கலந்து பேசுவர். தங்களுக்கு ஏற்பட்ட உணர்வுகளைப் பற்றிக் கலந்துரையாடுவர்.

இன்றைய மாணவர்கள் மின்னியல் சாதனங்களோடு நெருங்கிய தொடர்புடையவர்களாக இருக்கிறார்கள். எனவே, அவர்களுக்குக் குறும்படங்களைக் காண்பித்து விழுமியங்களைக் கற்பிப்பதோடு, அவர்களையே குறும்படங்கள் எடுத்துப் படைக்குமாறும் கூறலாம். மாணவர்களை நால்வர் அல்லது ஐவர் கொண்ட குழுக்களாகப் பிரித்து அவர்களிடம் சில விழுமியங்களைக் கருப்பொருள்களாகக் கொடுக்கலாம். அவற்றுள் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுக்கச் செய்து ஒரு கதையை உருவாக்கி அதனைக் குறும்படமாக எடுத்து வகுப்பில் படைக்குமாறு செய்யலாம்.

இவ்வாறு செய்வதன் மூலம் தாங்கள் தேர்ந்தெடுத்த விழுமியத்தைப் பற்றிய ஆழமான புரிதலையும் தெளிதலையும் மாணவர்களிடம் ஏற்படுத்த முடியும்.

இவ்வாறு குழுவாக இணைந்து செயல்படும்போது அக்கறையும் பொறுப்பும் மேம்படும். முனைப்பு(initiative), தலைமைப் பண்பு, தன்னம்பிக்கை, பிறர் நலம் போற்றல், கடமை, உழைப்பின் மேன்மை, தியாக உணர்வு, விடா முயற்சி, பொறுமை, சகிப்புத் தன்மை, மன்னிக்கும் மாண்பு, விரைந்த தெளிந்த முடிவெடுத்தல், அன்பு போன்ற விழுமியங்களை அவர்கள் அனுபவத்தின் மூலம் கற்றுக்கொள்வர்; கற்றுப் பின்பற்றுவர். இன்றைக்கு மொழி கற்றல், கற்பித்தல் என்பது வகுப்பறையோடு முடிந்துவிடக்கூடிய பாடம் அன்று. அது வகுப்பறைக்கு அப்பாலும் நடைபெறக் கூடியது. மாணவர்கள் தமிழ்மொழியை வகுப்பறைக்கு அப்பாலும் தொடர்ந்து பயன்படுத்தும்-போதுதான் அது என்றென்றும் வாழும் மொழியாக நின்று நிலைத்திருக்கும்.

குறும்படங்களைத் தேர்ந்தெடுத்து நாம் பயன்படுத்தினால் வகுப்பறையில் மொழி கற்றல் கற்பித்தல் என்பது மேலும் சுவாரசியமாக அமையும். அதோடு மாணவர்களின் கற்றல் ஈடுபாட்டையும் தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ள முடியும். அவர்கள் தொடர்ந்து மொழியைப் பேசுவதற்கும் அது வழிவகுக்கும். நமது பண்பாட்டையும், விழுமியங்களையும் அவர்களிடம் கொண்டுசென்று அவற்றை அவர்களிடம் நிலை நிறுத்துவதற்கும் அவர்களை வழி நடத்துவதற்கும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

பார்வைக்குச் சில குறும்படங்கள்

வ. எண்	தலைப்பு	இணைப்பு
1	ஆசைAasai	http://www.youtube.com/watch?v=2T699DfffhU
2	தமிழ் இனி ...? Tamil Ini	http://www.youtube.com/watch?v=ufvA_VNj--M
3	சாப்பாடு தயார் Meals Ready	http://www.youtube.com/watch?v=9gZCwY9qJL4
4	கர்ண மோட்சம் Karna motcham	http://www.youtube.com/watch?v=qrW7s0DcRMA
5	ஆயிஷா Asyeeshaa	http://www.youtube.com/watch?v=8-BuyTExd_o
6	இலட்சுமி Lakshmi	http://www.youtube.com/watch?v=D6yren8Q_kY
7	அப்பா வந்தார்	http://www.youtube.com/watch?v=_PzqCUPmC1E

	DAD'S VISIT	
8	செருப்பு Seruppu	http://www.youtube.com/watch?v=Q7WrGcOr70Q
9	புதியவன் Puthiyavan	http://www.youtube.com/watch?v=cZ_yaIKcp7A
10	தமில் Thamil	http://www.youtube.com/watch?v=MzT7_Flgz_o

பரஸ்பரக்கற்பித்தல் முறையைப் பயன்படுத்திக் கருத்தறிதல் திறனை வளர்த்தல்

Dr. Alamal Thanganathan (Ph.D. Linguistics)
Mdm. Bama Govindasamy

நோக்கம்

பரஸ்பரக் கற்பித்தல் அல்லது பரிமாற்றக் கற்பித்தலின் தந்தை என்று அழைக்கப்பட்டவர்கள் பலின்சர் (Palincer), பிரவுன் (Brown) ஆகிய இருவரும்ஆவர். இவர்களின் கடுமையான உழைப்பின் காரணமாகவே இக்கற்பித்தல் உருவானது. இக்கற்பித்தலைத் 'தலைகீழ்ப்பாடம்' என்றும் கூறுவர். இக்கற்பித்தலானது 'கூடிக்கற்றல் அணுகுமுறையைச் சார்ந்தது. 'பேசுதல்' முறையில் கூடிக்கற்றல் அனுபவத்தை ஒன்று இணைத்துக் கற்பிக்கும்போது படித்தவர்களின் திறமைகள் 'பகிர்ந்துகற்றல்' அனுபவத்தின் வழிவெளிப்படுத்தப்படுகிறது. இம்முறையில் கற்பித்தல் மாணவர்களின் கற்பித்தல் திறன் மேம்பட உதவியதோடு கற்றலில் ஆர்வத்தையும் தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது. மேலும், நுண்ணாய்வுச் சிந்தனைத் திறன்களையும், உடனிணைந்து செயல்படுத்துதல், பொறுப்புணர்வு ஆகிய பண்புகளையும் மாணவர்களிடம் வளர்க்கப் பெரிதும் துணைபுரிந்துள்ளது.

நாம் கற்பிக்கும் வகுப்பில் பல தரப்பட்ட அறிவு நிலையில் உள்ள மாணவர்கள் இருக்கிறார்கள். அவர்களுள் ஒரு சில மாணவர்கள் கொடுக்கப்படும் பனுவலைப் படித்தவுடன் புரிந்துகொள்ளும் திறன் படைத்தவர்களாகவும்,ஒரு சிலர் பலமுறை படித்த பின்னரே புரிந்துகொள்ளும்திறன் படைத்தவர்களாகவும் இருக்கின்றனர். இத்தகையவர்களை ஒன்றிணைக்கும் பாலமாகப் பரஸ்பரக்கற்பித்தல் முறை அமைந்துள்ளது.

எனவே ஆசிரியர்கள் பல அனுபவ முறைகளை மாணவர்களின் பயன்பாட்டிற்கேற்ப வகுப்பறையில் பயன்படுத்துகிறார்கள். இந்தக் கற்பித்தல் முறை ஆசிரியர் மாணவர்களிடையே கற்றலை உயர்தரத்திற்குக் கொண்டுசெல்ல உதவுகிறது. இந்தக் கருத்துகளைக் கற்பனைத்திறனோடு கூடிய எண்ணங்களுடன் பரிமாறிக்கொள்ளும்போது மாணவர்கள் அவரவருக்குரிய பணியை ஏற்றுச் செயல்படுகிறார்கள்.

செயல்முறை

ஆசிரியர்மாணவர்களைச் செயல்படுத்தத் தூண்டுவதற்குக் கொடுக்கும் வாசித்தல் கருத்தறிதல் பனுவல் எளிதாகவும் கடினத்தன்மை உடையதாகவும் அமையாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். குழு நடவடிக்கையின்போது மாணவர்களே தங்கள் குழுவை வழி நடத்த ஊக்குவிக்கவேண்டும். இங்கு ஆசிரியரின் பணி சற்று அதிகமாக உள்ளது. வகுப்பில் மாணவர்களில் சிலர் கூடுதல் திறன்(higher ability)மிக்கவர்களாகவும், சிலர் திறன் குறைந்தவர்களாகவும், சிலர் மிகக் குறைந்த திறன் (low ability) மிக்கவர்களாகவும் இருக்கிறார்கள். ஆசிரியர் இவற்றைக் கருத்தில்கொண்டு குழுவினைப் பிரிக்கவேண்டும்.



பரஸ்பரக் கற்பித்தலில் (பரிமாற்றக் கற்பித்தலில்) மாணவர்கள் நால்வர் கொண்ட குழுவாகப் பிரிக்கப்பட்டுச் செயல்படுவர்.குழுவில் உள்ள ஒவ்வொருவரும் தமக்குக் கொடுக்கப்பட்ட வெவ்வேறு பொறுப்புகளை வகிப்பர். ஊகிப்பவர், கேள்வி கேட்பவர்,விளக்குபவர், சுருக்கிக் கூறுபவர் என்ற பெயர்களை இவர்கள் பெற்றுச் செயல்படுவர். இதுபோலவே ஒவ்வொரு

குழுவிலும் உறுப்பினர்கள் இருப்பர். இவ்வாறு ஒவ்வொரு குழுவிலும் உள்ளவர்களை 'இல்லக்குழுவினர்' என்பர்.

பரஸ்பரக் கற்பித்தல் என்பது வட்ட நிலையில் செயல்படும் ஒரு கற்பித்தல் முறையாகும்.

இதில் **ஊகிப்பவருக்கு** என்று சில பொறுப்புகள் உள்ளன. அவை

1. பகுதியை நன்கு வாசிக்க அறிந்தவர். அடுத்து என்ன வரும் என்பதை ஊகித்து அறியும் தன்மையினைக் கொண்டிருப்பார்.
2. பகுதியைப் படித்து, ஒப்பிட்டறியும் திறனைக் கொண்டிருப்பார்.
3. ஊகித்ததைக் காரண காரியங்களுடன் விளக்குவார்.





அடுத்து **கேள்வி கேட்பவர்,** இவருக்குரிய பொறுப்புகள்.

1. தலைப்பை ஒட்டிய பகுதியை வாசிக்கும்போது உள் மனதில் எழும் கேள்விகளை வரிசைப்படுத்தி எழுதுவார்.
2. முக்கியக் கருத்தை உணர்த்தும் யார்?, எது?, எங்கே?, எப்போது?, ஏன்?, எப்படி? போன்ற பொறுத்தமான கேள்விகளை உருவாக்குவார்.
3. மாணவர்கள் கேள்விகள் கேட்பதன் மூலம் பகுதியை எளிதாகப் புரிந்துகொள்வார்.

அடுத்துவிளக்குபவர்,இவருக்குரிய பொறுப்புகள்.

1. தடயத்தை வைத்துக்கொண்டு பகுதிகளுக்கிடையே உள்ள தொடர்பைக் கண்டுபிடிப்பார்.
2. பகுதிகளின் பொருளை அறிய இலக்கணத் தடையத்தைப் பயன்படுத்துவார்.
3. கடின சொற்களுக்கு அகராதியைப் பார்த்துப் பொருள் அறிவார். அல்லது வாக்கியத்தைப் படித்துப் பொருளை அறிவார்.





இறுதியாகச் **சுருக்கிக் கூறுபவர்,** இவருக்குரிய பொறுப்புகள்.

1. முதலில் ஒவ்வொரு பத்தியிலும் உள்ள மையக்கருத்தைக் கண்டுபிடிப்பார்.
2. பகுதியில் தேவையற்ற வார்த்தைகளை நீக்கி, முக்கியக் கருத்துகளைச் சுருக்கி எழுதிக்கொள்வார்.

3. பின்னர் அக்கருத்துக்களை இணைத்து, பகுதி முழுவதையும் தெளிவாக அறிந்துகொள்வார்.

வகுப்பறை செயல்பாடு

ஆசிரியர் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு குவிற்கும் ஓர் அகராதியையும், ஓர் உறையையும் கொடுப்பார். குறிப்பிட்ட நேரத்திற்குள் அந்தப் பணியைச் செய்து முடிக்க ஆசிரியர்கள்மாணவர்களை ஊக்குவிப்பர்.ஆசிரியர் கொடுத்த உறையில் ஊகிப்பவர், கேள்வி கேட்பவர், விளக்குபவர், சுருக்கிக் கூறுபவர் ஆகியோரின் பணிகள் குறிக்கப்பட்டிருக்கும். அதோடு ஒவ்வொரு பணியாளர்களுக்கும் ஒவ்வொரு வண்ணம் கொடுக்கப்பட்டிருக்கும். ஆசிரியர் பயிற்சிப் பனுவலை ஒவ்வொரு மாணவர்களுக்கும் கொடுக்கவேண்டும். மாணவர்கள் அவற்றைக் கவனமாகப் படித்துப் பார்த்து, அவரவர் சேகரிக்கவேண்டிய தகவல்களை அவரவருக்குரிய வண்ணத்தாள்களில் குறித்துக் கொள்வார்கள். பின்னர் அவற்றைத் தங்கள் குழுவில் பரிமாறிக்கொள்வார்கள்.

மாணவர் படைப்பு- மாதிரி









அடுத்ததாக, எல்லாக்குழுக்களிலும் உள்ள மாணவர்கள் வெண்பலகையில் எழுதப்பட்டுள்ள தலைப்பு அடிப்படையிலான பொறுப்புகளின் அடியில் தங்கள்

கருத்துகளை வரிசைப்படுத்தி ஒட்டுவர். பின்னர் மாணவர்கள் 'வல்லுநர் குழுவில்' கூடி, கலந்துரையாடி, தத்தம் கருத்துகளைச் செம்மைப் படுத்திக்கொள்வர். அவர்கள் மீண்டும் தத்தம் இல்லக்குழுக்களுக்குத் திரும்பி, தாங்கள் செய்த மாற்றங்களைப் பகிர்ந்துகொள்வர். இத்தகைய நடவடிக்கைகளால் மாணவர்கள் பனுவலை நன்கு புரிந்துகொள்வதோடு கருத்துகளை நன்கு உள்வாங்கிக்கொள்கின்றனர்.
இறுதியில் ஆசிரியர் கொடுக்கும் வினாத்தாள்களில் உள்ள வினாக்களுக்கு மாணவர்கள் விடை எழுதுவர்.



மதிப்பீடு

வாய் விட்டுப்படித்தல், வாய்க்குள் படித்தல் திறன்களை வளர்க்க நுண்ணாய்வுத்திறன், பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் திறன், படைப்பாக்கத் திறன்கள் உதவுகின்றன.இவற்றின் மூலம் கேள்விகளுக்கு ஏற்ப பொருத்தமான பதில்களைச் சொந்த நடையில் எழுத அறிந்திருப்பார்கள்
இக்கற்பித்தல்உடனிணைந்து செயல்படும் திறன்களை வளர்ப்பதோடு, மாணவர்களிடையே பொறுப்புணர்வையும் வளர்க்க ஊக்குவிக்கிறது.

பரிந்துரைகள்

- இந்தப் பரிமாற்றக் கற்பித்தலில் ஆசிரியரின் பங்கு மிகவும் குறைவாக இருந்தது.
- ஒவ்வொரு குழுவிலும் மாணவரே ஆசிரியராகச் செயல்பட்டனர்.
- இதில் மாணவர்கள் தாங்களாகவே கேள்விகளைக் கேட்டு பகுதியை நன்கு புரிந்துகொண்டனர்.
- இந் நடவடிக்கைகளில் மாணவர்களை ஆர்வத்தோடு செயல்பட உக்குவித்தது.

பின்னிணைப்பு 1
வாசிப்புக் கருத்தறிதல்

பல இன மக்களைக் கொண்ட சமுதாயமாக நம் நாடு திகழ்வதால் நமது பண்பாட்டுப் பழக்க வழக்கங்கள் வேறுபட்டிருப்பது இயல்பே. சிங்கப்பூரின் இன்றைய வளர்ச்சிக்குரிய முக்கியக் காரணங்களில் ஒன்றாக விளங்குவது இன நல்லிணக்கமாகும். பல்லின மக்களிடையே காணப்படும் வேற்றுமைகளுடன் சில ஒற்றுமைகளும் நிலவுவதை நாம் அறிந்து வைத்திருப்பது அவசியம். வீட்டிற்கு வரும் விருந்தினர்களை

முகமலர்ச்சியுடன் வரவேற்று, நலம் விசாரித்து, அன்புடன் உணவு வழங்குவது நம் நாட்டு மக்களிடையே காணப்படும் பழக்கமாகும்.

பண்டிகைகளின்போது மூதாதையர்களை வழிபட்ட பின்னரே, தங்கள் கொண்டாட்டங்களைத் தொடங்கும் வழக்கத்தை நம் நாட்டு மக்களிடையே பார்க்கலாம். விழாக்களின்போது நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையும் வெளிப்படுத்தும் வகையில் ஓர் இனத்தினர் மற்றோர் இனத்தவரின் நிகழ்ச்சியில் கலந்துகொள்வர். உதாரணத்திற்குச் சிராங்கூன் சாலையில் பொங்கல் விழாக் கொண்டாட்டங்களில் சீன மாணவர்களைக் காணலாம். அதே போல, விளக்குக்கூண்டுத் திருவிழாவின்போது பல்லின மக்கள் விளக்குக் கூண்டுகளைத் தூக்கிக்கொண்டு செல்வதைப் பார்க்கலாம். நோன்புப் பெருநாளின் பல இன மக்களும் அதில் கலந்துகொண்டு சிறப்பிப்பதைக் காணலாம்.

விழாக் காலங்களின்போது ஓர் இனத்தவர் மற்றோர் இனத்தவரின் இல்லங்களுக்குச் சென்று வாழ்த்துகளைக் கூறிப் பரிசுகளைக் கொடுப்பது நம் நல்லணக்கத்தைப் பறைசாற்றுகிறது. பிறந்தநாள், திருமணம் முதலிய நிகழ்ச்சிகளின்போது பரிசுகள் வழங்குவதை அனைத்து இனத்தவரும் வழக்கமாகக் கொண்டுள்ளனர். பரிசைக் கொடுப்பவரும் பரிசைப் பெறுபவரும் தம் மரியாதையை வெளிக்காட்டும் விதமாக இருகைகளையும் பயன்படுத்துவர். பரிசைப் பெறுபவர்கள் உடனே அதைக் கொடுத்தவர் முன்னிலையில் திறந்து பார்ப்பதைத் தவிர்க்கலாம்.

வசதி குறைந்தவர்களுக்கு உதவி செய்யும் பண்பு எல்லா இனத்தவர்களுக்கும் உண்டு. அவர்கள் விழாக் காலங்களின்போது வசதி குறைந்தவர்களுக்கு உணவுப் பொருள்களையும் நன்கொடைகளையும் வழங்குவதுண்டு. இத்தகைய நாள்களில் அவர்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்துவதில் எல்லா இனத்தவர்களும் ஒருமித்த எண்ணம் உடையவர்களாக உள்ளனர்.

பல்லாண்டுகளாக இன, சமய நல்லிணக்கம் நம் நாட்டில் வேரூன்றி வளர்வதற்கு நம் நாட்டுத் தலைவர்களும் சமூகத் தலைவர்களும் சிறந்த முறையில் பங்களித்திருக்கின்றனர். அதைத் தொடர்ந்து கட்டிக்காப்பது நமது கடமையாகும். ஒற்றுமையை வலுப்படுத்துவதிலும் வேற்றுமையைப் புரிந்துகொள்வதிலும் நாம் அக்கறை காட்ட வேண்டும். இதை விழிப்புடன் கடைப்பிடித்து வந்தால் நம் சிங்கப்பூரர்களிடையே நல்லுறவு மேலும் வலுப்படும்.

(தமிழ்ச்சுடர்-MOE)

பின்னிணைப்பு 2

பரிமாற்றக் கற்பித்தலின் வழி வாசிப்புக் கருத்தறிதலைச் சரிபார்க்கும் பட்டியல்

பரிமாற்றக் கற்பித்தலின் பாத்திரங்கள்	வெற்றிக்கான நெறிமுறைகள்	(/) அடைதல்
1. விளக்குபவர்	• சில தொடர்கள் பகுதியைப் படிக்கும்போதே தெளிவாகப் புரிந்துகொண்டேன்.	
	• நான் கடின சொல் உள்ள வாக்கியத்தைப் பலமுறை வாசித்ததன் மூலம் பொருளை அறிந்துகொண்டேன்.	
	• நான் அகராதியைப் பயன்படுத்தி, கடினசொற்கள் அல்லது சொற்றொடர்களுக்குப் பொருளை அறிந்துகொண்டேன்.	
2. கேள்வி கேட்பவர்	• நான் பகுதியைப் படிக்கும்போதே அதில் உள்ள வாக்கியத்தின் வழி கேள்விகளை எவ்வாறு உருவாக்குவது என்று அறிந்தேன்.	
	• நான் கேட்கும் கேள்விகள்	

‘எண்ணியதை எண்ணியாங்கு எழுதத்தூண்டும் எழுச்சிப் படிநிலைகள்’

துறைமுத்து சுப்ரமண்யம்
தெங்கு அம்புவான் அப்சான் ஆசிரியர் கல்வியியல் கழகம், கோலலிப்பீஸ், பகாங்.

முன்னுரை:

இன்றைய கற்றல் கற்பித்தலில் முத்தாய்ப்பாக அமைய எதிர்ப்பார்க்கப்படுவது மாணவரின் எண்ணக்குவியலாக அமையும் எழுத்தாற்றல் படைப்பான கட்டுரையாகும். தலைப்பையொட்டி தமது கருத்துகளைத் சரியாகத் தெளிவாகப் படைப்பதில் மாணவர் காட்டும் ஒருமைப்பாடே அவரின் எழுத்தாற்றலை நிர்ணயமும் நிருபனமும் செய்கின்றது. கற்பனை கலந்த உண்மையுடன் தமது கருத்துகளைச் சரியாக எழுத்தில் காட்ட முனைந்த மாணவரே இத்திறனில் கைவரப் பெற்றவராகக் கருதப்படுகிறார்.

ஒரு முன்னுரை ஐந்து கருத்துகளும் அதனையொட்டிய விளக்கமும் ஏற்றதொரு முடிவும் எழுதுதலே நல்ல கட்டுரையாகக் கருதப்படுகிறது. இவ்வாறு எழுதுவதற்கு ஓரளவிற்கான முன்னறிவும் பட்டறிவும் ஆசிரியரின் விளக்கமும் அதனை வலியுறுத்தும் கருத்துக் கோவையும் போதுமானது என்று கருதுபவர்கள் நம்முள் பலர் உள்ளனர் என்றால் மறுப்பார் யாருமில்லை.இதுவே கட்டுரை கற்பிப்பதில் இன்றைய வழக்கமும் பழக்கமுமாகி விட்டது.

இந்நிலைக்கு முன்னர் மாணவர் பிரிதொரு பரிணாம வளர்ச்சியில் கைவரப் பெற்றிருத்தல் அவசியமாகிறது. மொழியில் மெல்ல மெல்லப் படிப்படியாக அஸ்திவாரம் அமைத்து தாமாகவே தமது எண்ணத்தை எடுத்துரைக்க இம்முறைமை வழிவகுக்கும் என்று ஆணித்தரமாகக் கூறிடலாம். ஒரு மொழியின் எழுத்துகளையும் அதன் ஒலிப்பு முறைமையையும் அறிந்த எந்த வயதைச் சார்ந்த மாணவரையும் இக்கட்டுக்குள் கொண்டு வர இயலும் என்பது கட்டுரையாளரின் திடமான முடிவாகும்.

வழி நடத்தும் முறைமை :

ஒன்றாம் ஆண்டு இரண்டாம் பருவத்தில் பயிலும் மாணவர்கட்கு இப்படிநிலைகளை மெல்ல மெல்ல புகுத்திடலாம். மாணவரின் மொழியாற்றல் ஈடுபாடு இனங்கண்டு ஆசிரியர் இவர்களுக்கு சளிப்புத் தராவண்ணம் இப்பயிற்சிகளைத் தருதல் வேண்டும்.

இந்நாற்பது படிநிலைகளுள் ஏதாகினும் ஓரிரு படிநிலைகளில் மாணவர் கைவரப் பெறாவிடில் உடனே அதனைச் சரிசெய்தல் வேண்டும். இதற்குத் தனியாள் முறைமை சிறந்ததாக அமையும். அதிகமான படமும் உயிர்ச்சித்திரக் காட்சிகளும் உரைக்குமிழ்கள் சூழ்ந்த படங்களும் இத்திறனை விரைந்து கற்கும் சூழலை உருவாக்கும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயம் வேண்டாவே.

படிநிலை 1 :	படங்களை வரிசைப்படுத்துதல்
படிநிலை 2:	காலியான இடத்திற்கு அருகிலுள்ள படங்களைப் பார்த்து தரப்பட்ட சொல்லை வாக்கியத்தில் எழுதுக.
படிநிலை 3:	காலியான இடத்திற்கு அருகிலுள்ள படம் பார்த்து தரப்பட்ட சொல் பத்தியில் எழுதவும்.
படிநிலை 4:	காலியான இடத்திற்கு அருகிலுள்ள படம் பார்த்து சொல்லை வாக்கியத்தில் எழுதுதல்.
படிநிலை 5:	காலியான இடத்திற்கு அருகிலுள்ள படம் பார்த்து சொல்லை பத்தியில் எழுதுதல்.
படிநிலை 6:	வாக்கியத்துடன் படத்தை வரிசைப்படுத்துதல்
படிநிலை 7:	வாக்கியத்துடன் படத்தை இணைத்தல்.
படிநிலை 8:	படத்திற்கு ஏற்ப வாக்கியத்தை வரிசைக்கிரமாக்குதல்.
படிநிலை 9:	வாக்கியத்திற்கு ஏற்ப படத்தை வரிசைக்கிரமாக்குதல்.
படிநிலை 10:	வாக்கியத்தில் தரப்பட்டப் பொருத்தமானச் சொல்லைத் தெரிவு செய்து எழுதுதல் (இருசொற்கள்).
படிநிலை 11:	பத்தியில் தரப்பட்டப் பொருத்தமானச் சொல்லைத் தெரிவு செய்து எழுதுதல் (இரு சொற்கள்).
படிநிலை 12:	தொடர்படத்தைப் பார்த்து மாறி மாறி தந்துள்ள வாக்கியங்களை எண்ணிட்டு வரிசைக்கிரமமாக்குதல்.
படிநிலை 13:	தனிப்படத்தைப் பார்த்து மாறி மாறி தந்துள்ள வாக்கியங்களை எண்ணிட்டு வரிசைக்கிரமாக்குதல்.
படிநிலை 14:	படமின்றி மாறி மாறி தந்துள்ள வாக்கியங்களை எண்ணிட்டு வரிசைக்கிரமமாக்குதல்.
படிநிலை 15:	படத்திற்கு பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்து தொகுத்து எழுதுதல்.
படிநிலை 16:	படத்தையொட்டி வாக்கியத்தில் மாறி மாறி வந்துள்ள சொல்லை வரிசைப்படுத்தி வாக்கியமாக்குதல்.
படிநிலை 17:	படமின்றி வாக்கியத்தில் மாறி மாறி வந்துள்ள சொல்லை வரிசைப்படுத்தி வாக்கியமாக்குதல்.
படிநிலை 18:	தலைப்பையொட்டி வாக்கியத்தில் மாறி மாறி வந்துள்ள சொல்லை வரிசைப்படுத்தி வாக்கியமாக்குதல்.
படிநிலை 19:	படமின்றி வாக்கியத்தில் விடுபட்டச் சொல்லை எடுத்து எழுதுதல்.
படிநிலை 20:	படமின்றி பத்தியில் விடுபட்டச் சொல்லை எடுத்து எழுதுதல்.
படிநிலை 21:	படமின்றி வாக்கியத்தில் விடுபட்டச் சொல்லை ஊகித்து எழுதுதல்.
படிநிலை 22:	படமின்றி பத்தியில் விடுபட்டச் சொல்லை ஊகித்து எழுதுதல்.
படிநிலை 23:	படத்தைப் பார்த்து வாக்கியத்தில் விடுப்பட்டச் சொல்லை எடுத்து எழுதுதல்.

படிநிலை 24:	படத்தைப் பார்த்து பத்தியில் விடுப்பட்டச் சொல்லை எடுத்து எழுதுதல்.
படிநிலை 25:	படத்தைப் பார்த்து வாக்கியத்தில் விடுப்பட்டச் சொல்லை ஊகித்து எழுதுதல்.
படிநிலை 26:	படத்தைப் பார்த்து பத்தியில் விடுப்பட்டச் சொல்லை எடுத்து எழுதுதல்.
படிநிலை 27:	பத்தியில் மாறி மாறி வந்துள்ள வாக்கியங்களை வரிசைப்படுத்திக் கட்டுரையாக்குதல்.
படிநிலை 28:	பிரிவு வாக்கியங்களை இணைத்தல்.
படிநிலை 29:	படம் பார்த்து வினாவிற்கு விடையை எடுத்து எழுதுதல்.
படிநிலை 30:	படம் பார்த்து வினாவிற்கு விடையளித்தல்.
படிநிலை 31:	காலியான இடத்தில் தந்துள்ள பொருத்தமானச் சொற்றொடரை எடுத்து எழுதுதல்.
படிநிலை 32:	காலியான இடத்திற்குப் பொருத்தமானச் சொற்றொடரை எழுதுதல்.
படிநிலை 33:	தொடர்நிகழ்வுப்படத்தையொட்டிய கருத்துகளுக்கு ஏற்ப பத்திகளை வரிசைக்கிரமமாக்கி எழுதுதல்.
படிநிலை 34:	தனிப்படத்தையொட்டிய கருத்துகளுக்கு ஏற்ப பத்திகளை வரிசைக்கிரமமாக்கி எழுதுதல்.
படிநிலை 35:	மாதிரி கட்டுரைகளைப் பார்த்து எழுதுதல்.
படிநிலை 36:	மாதிரி கட்டுரைகளைப் பார்த்து மற்றொரு தலைப்பில் எழுதுதல்.
படிநிலை 37:	தலைப்பையொட்டி சொற்களை எழுதுதல்.
படிநிலை 38:	தலைப்பையொட்டி சொற்றொடர்களை எழுதுதல்.
படிநிலை 39:	தலைப்பையொட்டி கருத்துகளின் துணையுடன் எழுதுதல்.
படிநிலை 40:	தலைப்பையொட்டி ஊகித்து கட்டுரையாக எழுதுதல்.

ஆசிரியப் பெருமக்கள் நாற்பது படிநிலைகளுள் முதல் பத்தை மீண்டும் மீண்டும் என இருமுறையும் பின் தொடர்ந்த அடுத்தப் பத்துப் பத்துப் படிநிலைகளையும் இவ்வாறு நடத்துதல் வேண்டும்.

கவனத்தில் கொள்ள வேண்டிய மற்றொரு கூறுயாதெனில், திருத்துகையில் பிழையென இடாமல் அவர்கள் தாமாகச் சரியான விடையை எழுதத் தூண்டுதல் வேண்டும்.

குறிப்பிட்டப் படிநிலைகளுக்குப் பிறகு, பார்த்து நல்ல கையெழுத்தில் எழுதத்தூண்டுவது அவசியமாகிறது. ஆசிரியப் பெருந்தகையினர் குறைந்த பட்சம் சிவப்பு வண்ணப் பேனாவிற்கு வேலை இல்லாதவாறு பார்த்துக் கொள்ளல் வேண்டும்.

ஒரு மொழியின் எழுத்துகளையும் அதன் ஒலிப்பு முறைமையையும் அறிந்த எந்த வயதைச் சார்ந்த மாணவரையும் இக்கட்டுக்குள் கொண்டு வர இயலும். இந்நாற்பது படிநிலைகளையும் பொதுவாக மாணவர்களிடம் 12 முதல் 16 வார காலகட்டத்திற்குள் கற்பித்து அவர்களை இத்திறனில் கரையேற்றத் தோள் கொடுக்க இயலும் என்பது கட்டுரையாளரின் முடிவான முடிவாகும்.

எழுதத்தூண்டும் நாற்பதுப் படிநிலைகள் :

மனத்தில் தோன்றும் கருத்துகளைக் கோவைப்படுமாறு காரண காரியத் தொடர்பில் அழகான மொழியில் அமைப்பது கட்டுரையாகும். எழுத்து மொழியால்தான் ஒருதலைமுறையின் அறிவுச் செல்வம் இன்னொரு தலைமுறைக்குப் பயன்பட வாய்ப்புக்கு வழிவகுக்கின்றது.

இயற்கையில் மனத்தில் தோன்றி எழும் எண்ணங்கள்; மொழியைப் பொறுத்த வரையில், இரண்டு விதமாக வெளிப்படும் எண்ணங்கள் எழுத்து வடிவு பெறாமல் நிலைத்த தன்மையை அடைய இயலாது. இவை சிறந்தவனாய், கேட்க வாய்ப்பிறாதப் பிறரும் படிக்கத் தக்கனவாய் இருக்க வேண்டுமானால், இவை எழுத்து நிலையைப் பெற வேண்டும். எழுதிவைக்கும் பழக்கம் இல்லையேல்,மனித நாகரிகம் இன்றிருப்பது போல சிறந்து வளர்ந்தோங்கி இருக்க முடியாது என்கிறார் சுப்பு ரெட்டியார்.

தனிமனிதனது அனுபவம் சமுதாய முன்னேற்றத்திற்கு வித்திடல் வேண்டும்.ஒருவரது கண்டறிவிலிருந்து மற்றவரது முயற்சித் தொடருதல் வேண்டும்.தொடரியலான இம்முயற்சி சமுதாய வளர்ச்சியைத் துரிதப்படுத்தும். இதற்கு எழுத்தாற்றல் ஆர்வமுள்ள இளந்தலைமுறையினரை உருவாக்கும் கடற்பாடும் கடமையுணர்வும் சமுதாய உழவர்களான ஆசிரியராகிய நமக்கு அவசியமாகிறது.

கட்டுரை திருத்துவது என்பதே பல மாணவரது முயற்சியையும் தன்னம்பிக்கையையும் கொன்றுவிடுகிறது.இது தனிக்கலை. மொழியைக் கற்பிப்பதில் கட்டுரை திருத்துவது ஒரு முக்கியமான பணியாகும். இப்பணி அருமையானதும் இன்யமையாததுமாகும். இதில் அலுப்பும் சலிப்பும் ஏற்படக்கூடாது. மாணவர்களின் மொழித்திறன் திருத்தமும் வளர்ச்சியடைவது ஆசிரியரின் இந்தப் பணியைப் பெறுவதே அமைகின்றது.

கட்டுரை திருத்துவது தேர்வு விடைத்தாள்களை மதிப்பிடு மதிப்பெண்கள் தருவது போன்றதன்று. கட்டுரை திருத்துவதில் மாணவர்களையும் நேரடியாக ஈடுபடுத்தினால் நிறைந்த பயன் விளையும். ஆகவே, சரியான முறையையே மேற்கொள்வது அவசியமாகும். பல்வேறு முறையில் கட்டுரைகளைத் திருத்தலாம். அவற்றுள் சில:

- கருத்து நடை, பிழையின்மை, கையெழுத்து என்று தனித்தனியே மதிப்பெண்கள் வழங்கித் திருத்தலாம்.
- கட்டுரையில் உள்ள பிழைகள் ஆசிரியரே முழுமையாக எழுதிக் காட்டித் திருத்துதல்.

- கட்டுரையில் உள்ள பிழைகளை குறியீடுகள்/ அடையாளங்கள் இட்டுக் காட்டித் திருத்துதல்.
- மாணவர்களே தங்களது கட்டுரைகளைத் திருத்துதல். (தனித்தனியாக/ இணைந்து/ குழுவாரியாகச் செயல்படுதல்.)
- ஆசிரியர் மேலோட்டமாகக் கட்டுரையை வாசித்து மதிப்பெண்கள் வழங்குதல்.

மேற்காணும் முறைகளுள் எது சிறந்தது? எது பொருத்தமானது? போன்ற கேள்விகளுக்குப் பதில் அளிப்பது சற்றுச் சிரமமாகும். காரணமெனில் பள்ளிக்குப் பள்ளி, வகுப்புக்கு வகுப்பு மாணவர்களின் தரம் வேறுப்படுவதேயாகும்.

மாணவர்கள் குறிப்பிட்ட தலைப்பில் கட்டுரை எழுதப் பணித்தல். மாணவர்கள் எழுதிய கட்டுரைகளை ஆசிரியர் குறியீடுகளைப் பயன்படுத்தித் திருத்துதல் (ஆசிரியர் எந்த ஒரு திருத்தமும் செய்யாமல் / திருத்தி எழுதாமல் அடையாளங்களை மட்டுமே இடுதல்).கட்டுரைகளைத் திருத்திய பிறகு, அக்கட்டுரைகளுடன் ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதனை நகல் எடுத்து வகுப்பு மாணவர்கள் அனைவருக்கும் அளித்தல். ஆசிரியர் தான் கட்டுரையைத் திருத்தப் பயன்படுத்திய குறியீடுகளின் விளக்கம் அடங்கிய அட்டையை வகுப்பறையில் மாணவர்களின் பார்வைக்கு வைக்கலாம். நாலடைவில் மாணவர்கள் அக்குறியீடுகளின் பயன்பாட்டினைப் புரிந்துகொள்ள உதவியாக இருக்கும். மாணவர்கள் ஆசிரியரின் உதவியுடன் அம்மாதிரி கட்டுரையில் காணப்படும். பிழைகளை அடையாளம் கண்டு அக்கட்டுரையைத் திருத்தி எழுதுவர். இப்பயிற்சிக்குப் பின்னர் மாணவர்கள் ஓரளவுக்கு இம்முறையைப் புரிந்துகொள்ளமுடியும்.

மாணவர்கள் தங்களது பிற கட்டுரைகளை, குறியீடுகளை அடையாளம் கண்டு தாங்கள் செய்த பிழைகள் என்னவென்று அறிந்து, மீண்டும் திருத்தி எழுதுவர். இந்நடவடிக்கையை ஆசிரியரின் துணையுடன் மாணவர்கள் இணைந்தோ குழுவாகவோ செயல்படுத்தலாம். ஆசிரியரின் வழிகாட்டுதல் வெகு அவசியமாகும்.இரண்டு அல்லது மூன்று ஆசிரியரின் துணையுடன் இவ்வாறு கட்டுரைகளைத் திருத்தி எழுதச் செய்யாலாம். இப்பயிற்சிகளின் வழி மாணவர்கள் அடையாளங்களை அறிந்து பழக்கப்படுத்திக் கொள்வதோடு இம்முறையைப் புரிந்துகொள்வர்.உடல்,உள ரீதியில் இது அவர்களைப் பாதிக்கவும் செய்யாது.

முடிவுரை :

`மொழிகாக்க இனம்காக்க காவாகால் மொழி
அழிந்து இனம் அழியும் ’

என்றான் நம்முள்ளொரு மொழிக் காவலன். அன்றைய அவனது பயம்.

இன்று நியாயமாகும் வண்ணம் பற்பல சூழல்கள் ஒன்றன் பின் ஒன்றாய் உருவெடுத்து வருகின்றன.` சொல்லிக் கொடுத்தால் குயிலும் சிந்து படிக்கும்' என்று ஆசிரியத்தைச் சிறப்பித்துக் கூறுவர். கற்றுக் கொடுப்போரும் கற்றுக் கொள்வோரும் எத்தகைய தன்மையினராக இருத்தல் அவசியம் என்பதனை உணர்ந்து செயல்படுவோம் வாரீர்!

மேற்கோள் நூல்கள் :

இராஜேந்திரன், N. S. (2008) *ஆசிரியம்*, கோலாலம்பூர்: உமா பதிப்பகம்

ஆசிரியர் குழு. (2000). தமிழ்க்கோவை. கோலாலம்பூர்: மலாயாப் பல்கலைக்கழகம்.

முரசு நெடுமாறன், (2007) *மலேசியத் தமிழரும் தமிழும்*, சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

சுப்பிரமணி,சோ.(2007) மலேசியாவில் தமிழ்க்கல்வி, *தமிழ்ச் செம்மொழிச் சிறப்பு மலர்*, பினாங்கு: உங்கள் குரல்.

சுப்புரெட்டியார், நா(1956)நல்ல தமிழ் எழுதவேண்டுமா?,சென்னை

தமிழ்மொழிக் கற்பித்தலில் சிந்தனை வழமைகளின்(Thinking Routines) ஒருங்கிணைப்பு

ஃபிரான்சிஸ்கா சுபாஷ் - இந்நோவா தொடக்கப்பள்ளி, சிங்கப்பூர்

முன்னுரை

அண்மையில் சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு மாணவர்களிடையே 21-ஆம் நூற்றாண்டுத் திறன்களை வளர்க்க ஒரு பணிச்சட்டத்தை அமல்படுத்தியது. இதில் நான்கு கற்றல் அடைவுகளைக் கல்வி அமைச்சு வரையறுத்தியுள்ளது. அவை பின்வருமாறு;

1. தன்னம்பிக்கையுள்ள மனிதர் (Confident Person)
2. சுயமுனைப்புடன் கற்பவர் (Self-Directed Learner)
3. துடிப்புடன் பங்களிப்பவர்(Active Contibutor)
4. அக்கறை கொண்ட குடிமகன் (Concerned Citizen)

இந்த நான்கு கற்றல் அடைவுகளை அடைய மூன்று முக்கியத் திறன்களை வளர்க்க வேண்டும் என்று தமிழ்மொழிப் பாடக்கலைத்திட்டத்திலும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

1. குடியியல்சார் அறிவு, உலகளாவிய விழிப்புணர்வு, மற்றும் பிற கலாசாரங்களைப் புரிந்துகொண்டு கையாளக்கூடிய திறன்கள் (Civic Literacy, Global awareness and Cross-cultural skills)
2. நுண்ணாய்வுத் திறனும் புத்தாக்கப்புனைவுத் திறனும் (Critical and Inventive Thinking)
3. தகவல் மற்றும் கருத்துப்பரிமாற்றத் திறன்கள் (Information and Communication Skills)

இந்தத் திறன்களை வளர்க்கவும் கற்றல் அடைவுகளை அடையவும் பள்ளிகள் தத்தம் பள்ளி மாணவர்களுக்கு ஏற்பப் பல புத்தாக்கத் திட்டங்களை வகுத்துக்கொண்டு பாடங்களை நடத்த முற்படுகின்றன. இந்த முயற்சி பள்ளிகளுக்கு நல்ல பயன்களைத் தந்துவருகின்றது.

<u>பின்னணியும் நோக்கமும்</u>

இந்நோவா தொடக்கப்பள்ளி 2009-இல் புத்தாக்கக் **கற்பித்தல்** அணுகு முறைகளை அனைத்துப் பாடங்களிலும் ஒருங்கிணைத்து மாணவர்களிடையே 21-ஆம் நூற்றாண்டுத் திறன்களை வளர்க்க முனைந்தது. ரிச்சர்ட் டூஃபோரின் (Richard DuFour) கோட்பாட்டின்படி முப்பெரும் யோசனைகள்(3 Big Ideas) மற்றும் 4 முக்கியக் கேள்விகள்(4 Critical Questions) ஆகியவற்றின் அடிப்படையில் பாடங்கள் திட்டமிடப்பட்டன.

அதாவது;

1. மாணவர்கள் கற்றுக்கொண்டதை உறுதிப்படுத்துதல். (Ensuring Students Learn)
2. உடனிணைந்து செயற்படும் போக்கினை அமைத்தல் (Building a Culture of Collaboration)
3. மாணவர்களின் கற்றல் அடைவுகளை நோக்கமாகக்கொள்ளுதல். (Focusing on Student Outcomes)

ஆகிய முப்பெரும் யோசனைகளும்

1. மாணவர்கள் எதைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்? (What is it we expect students to learn?)
2. மாணவர்கள் அதைக் கற்றுக்கொண்டார்களா என்பதை நாம் எவ்வாறு அறிவோம்? (How will we know when they have learned it?)

3. மாணவர்கள் அதைக் கற்றுக்கொள்ளவில்லை என்றால் நாம் என்ன செய்ய வேண்டும்? (How will we respond when they don't learn?)
4. மாணவர்கள் அதைக் கற்றுக்கொண்டுவிட்டனர்என்றால் நாம் என்ன செய்ய வேண்டும்?(How will we respond when they already know it?)

என்னும் **நான்கு முக்கியக்கேள்விகளும்** புத்தாக்க அடிப்படையில் அமைந்த பாடங்களைத் திட்டமிட்டுக் கற்பிக்க உறுதுணையாக அமைந்தன. அந்த முயற்சியோடுபுத்தாக்கத் திறனை வளர்க்கப் பயனுறுதித் தன்மைகொண்ட அணுகுமுறைகளைத் தேடும் முயற்சியை மேற்கொண்டபோது ஹார்வர்டு பல்கலைக் கழகத்தினர் (Harvard University) உருவாக்கிய `பிரஜெக்ட் ஜீரோ - சிந்தனை வெளிப்பாட்டுத் திட்டம்` (Project Zero எ Visible Thinking) என்னும் அணுகுமுறை மேல்பர்ன், பியாலிக் கல்லூரியைச் சார்ந்த கல்வியாளர்களால் பரிந்துரைக்கப்பட்டது. அதில் குறிப்பாகச் சிந்தனை வழமைகள் (Thinking Routines) என்பனசிந்தனை வளர்ச்சிக்கும் மொழி வளர்ச்சிக்கும் மிகப் பயனுடையனவாக அமைந்தன. தமிழில் மாணவர்கள் மொழிகற்றலில் எதிர்நோக்கும் சிரமங்களை ஆராய்ந்தபோது, கருத்தறிதலிலும் வாய்மொழித் தேர்விலும் அதிகச் சிரமங்கள் எதிர்நோக்குகின்றனர் என்பது தெரியவந்தது. அவற்றைக் களையத் தகுந்த அணுகுமுறையைப் பயன்படுத்தவேண்டும் என்ற ஒரு தேடல் முயற்சியில் ஈடுபட்டோம். சிந்தனை வழமைகள் என்னும் கற்பித்தல்முறை மற்றப் பாடங்களில் நல்ல ஒரு பயனை ஏற்படுத்தியுள்ளதைக் கண்டு, தமிழிலும் இதை அறிமுகப்படுத்தலாம் என்ற எண்ணம் தோன்றியது. தமிழில் இதை அமல்படுத்தியபோது கண்ட பயன்களைப்பற்றிப் பகிர்ந்துகொள்வதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

<u>சிந்தனை பற்றிய ஆய்வாளர்களின் விளக்கம்</u>

மொழி கற்றலில் மொழி வளத்தையும் சிந்தனை வளத்தையும் மேம்படுத்துவது முக்கியம். திருத்தியமைக்கப்பட்ட புளூம் கோட்பாட்டில் சிந்தனையானது, நினைவுகூரல், புரிந்துகொள்ளுதல், பயன்படுத்துதல், பகுத்தாய்தல், மதிப்பிடுதல், உருவாக்குதல் என்னும் நிலைகளைக் கொண்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

*"We must **remember** a concept before we can **understand** it.*
*We must **understand** a concept before we can **apply** it.*
*We must be able to **apply** a concept before we **analyze** it.*
*We must have **analyzed** a concept before we can **evaluate** it.*
*We must have **remembered, understood, applied, analyzed,** and **evaluated** a concept before we can **create.**"*
http://morethanenglish.edublogs.org/for-teachers/blooms-revised-taxonomy/

பிரஜெக்ட் ஜீரோ - சிந்தனை வெளிப்பாட்டுத் திட்டத்தை உருவாக்கியவர்கள் "சிறந்த சிந்தனை என்பது திறன்கள், மனப்போக்கு மற்றும் விழிப்புநிலை ஆகிய மூன்றையும் கொண்டிருக்க வேண்டும். இந்த மூன்றையும் வளர்க்க முனைவதுதான் சிந்தனை வெளிப்பாடுத் திட்டத்தின் முக்கியக் குறிக்கோள்," என்று விளக்கினர்.

"really good thinking involves abilities, attitudes, and alertness, all three at once. Technically this is called a dispositional view of thinking. Visible Thinking is designed to foster all three."
http://www.old-pz.gse.harvard.edu/vt/VisibleThinking

இதைத் தமிழ்மொழி கற்பித்தலில் அமல்படுத்துவதே எங்களது முயற்சியாக இருந்தது. இது ஒரு சிறு முயற்சியாக தொடங்கினாலும் முதல் முயற்சியில் நல்ல பல பயன்களைக்கண்டோம். அதற்கு மேலும் உரமூட்ட முயன்றுவருகிறோம்.

சிந்தனை வழமைகளும் புளூமின் கோட்பாடும்

முதலில், சிந்தனை வழமைகளைப் பற்றிப் பார்ப்போம். ஒரு குறிப்பிட்ட பாடத்தைப் பற்றி மனத்தில் எழுப்பப்படும் எண்ணங்களை ஒரு வழக்கத்திற்குக் கொண்டு வரும் உத்தியே *சிந்தனை வழமைகள்* ஆகும். இதில் பலவகை உண்டு. அடிப்படையில் சிந்தனை என்பது வெவ்வேறு சிந்தனை அசைவுகளைக் (Thinking Moves) கொண்டது.இந்தச்சிந்தனை அசைவுகள்புளூமின் கோட்பாட்டோடு பொருந்தி வருகின்றன. இவ்வாறான சிந்தனை அசைவுகளும் சிந்தனை நிலைகளும் வயதிற்கும் அனுபவத்திற்கும் ஏற்பப் படிப்படியாக அமையும். இந்தச் சிந்தனை நிலைகளில் ஆழமான நிலைகளை அடைய வெவ்வேறு சிந்தனை வழமைகள் பெரிதும் துணைபுரிகின்றன.

<table>
<tr><th colspan="2">Bloom's Revised ThinkingTaxonomy
திருத்தியமைக்கப்பட்ட புளூமின் சிந்தனைக் கோட்பாடு</th><th colspan="2">சிந்தனை அசைவுகள் (Thinking Moves)</th><th colspan="2">சிந்தனை வழமைகள் (ThinkingRoutines)</th></tr>
<tr><td>நினைவுகூரல்</td><td>Remember</td><td>உள்ளதை உள்ளவாறு விளக்குதல்</td><td>Describe What's There</td><td>மைய வழமைகள்</td><td>Core Routines</td></tr>
<tr><td>புரிந்துகொள்ளுதல்</td><td>Understand</td><td>வியப்புக்கொள்ளுதல்</td><td>Wonder</td><td rowspan="2">புரிந்துணர்வு வழமைகள்</td><td rowspan="2">Understanding Routines</td></tr>
<tr><td>பயன்படுத்துதல்</td><td>Apply</td><td>தொடர்புபடுத்துதல்</td><td>Make Connections</td></tr>
<tr><td rowspan="3">பகுப்பாய்தல்</td><td rowspan="3">Analyze</td><td>விளக்கங்கள் அமைத்தல்</td><td>Built explanations</td><td rowspan="4">சார்பற்ற வழமைகள்</td><td rowspan="4">Fairness Routines</td></tr>
<tr><td>சான்றுகளை விளக்குதல்</td><td>Reason with Evidence</td></tr>
<tr><td>முடிவுகளுக்கு வருதல்</td><td>Form Conclusions</td></tr>
<tr><td>மதிப்பிடுதல்</td><td>Evaluate</td><td>சிக்கல்களை வெளிக்கொணர்தல்</td><td>Uncover Complexity</td></tr>
<tr><td>உருவாக்குதல்</td><td>Create</td><td>பல்வேறு கண்ணோட்டங்களைக் கருத்திற்கொள்ளுதல்</td><td>Consider Different View Points</td><td>படைப்பாக்க வழமைகள்</td><td>Creativity Routines</td></tr>
</table>

வகுப்பில் பெரும்பாலும் முதல் நான்கு சிந்தனை அசைவுகளை வளர்க்கக் கீழ்வரும் சிந்தனை வழமைகள் பயன்படுத்தப்பட்டன. மீத்திறன்மிக்க மாணவர்களை அடுத்த நிலைக்கு இட்டுச் செல்லப் பொருத்தமான சிந்தனை வழமைகள் பயன்படுத்தப்பட்டன.

SEE- THINK-WONDER பார்-யோசி-வியப்புக்கொள்	COLOUR-SYMBOL-IMAGE வண்ணம்-குறியீடு-உருவம்
WHAT MAKES YOU SAY THAT? எது உன்னை இவ்வாறு சொல்லத் தூண்டியது?	PERCEIVE-KNOW-CARE உள்வாங்கு-தெரிந்துகொள்-அக்கறை காட்டு
QUESTION STARTS கேள்வியில் ஆரம்பித்தல்	THINK-PUZZLE-EXPLORE யோசி-புதிரிடு-தேடு

மாதிரிப் பாடம் 1

1. தொடக்கநிலை 5-ஆம் வகுப்புப் பயிற்சிநூலில் *உலக அதிசயங்கள்* என்னும் பாடத்தை நடத்தியபோது, பொருத்தமான கற்றல் அடைவுகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.
2. பொருத்தமான சிந்தனை வளமைகளும் தேர்ந்தெடுக்கப்பட்டன. 'கேள்வியில் ஆரம்பம்' மற்றும் 'ஏன் அப்படிச் சொல்கிறாய்?' என்னும் சிந்தனை வளமைகள் இப்பாடத்தில் பயன்படுத்தப்பட்டன.
3. சாய்ந்த பிசா கோபுரத்தைப் பற்றிக் கொடுக்கப்பட்ட தகவல்களை மாணவர்கள் சரிவரப் புரிந்துகொண்டனரா என்பதை அறிய 'ஏன் அப்படிச் சொல்கிறாய்?' என்னும் கேள்வி அடிக்கடி கேட்கப்பட்டது.
4. அவ்வாறு கேட்கும்போது மாணவர்கள் தங்கள் விடைகளை நியாயப்படுத்தப் பகுதியை மீண்டும் ஆழமாகப் படிக்கத் தொடங்கினர். கருத்தை இன்னும் நன்றாகப் புரிந்துகொண்டனர்.
5. அதன்பிறகு கருத்தறிதல் பகுதியில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர்களால் சரியாகப் பதிலளிக்க முடிந்தது.

மாதிரிப் பாடம் 2

1. அகன்ற படிப்புக்கு ஒரு செய்தித்தாள் பகுதி கொடுக்கப்பட்டது. சாதாரண நாள்களில் செய்தித்தாளை விரும்பிப் படிக்காத மாணவர்கள், வண்ணம்- குறியீடு- உருவம் (COLOUR-SYMBOL-IMAGE) என்னும் சிந்தனை வழமையைப் பயன்படுத்தியபோது, அதிக ஈடுபாட்டுடன் பகுதியைப் படித்து ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.
2. இந்தப் பயன்பாட்டிற்கு முன் மாணவர்கள் கடினமான கேள்விகளுக்கு விடை அளிப்பதில் சிரமம் எதிர்நோக்கினர். இவற்றைப் பயன்படுத்திய பிறகு, கேள்வி எதை எதிர்ப்பார்க்கின்றது என்ற தெளிவு அவர்களுக்குக் கிடைத்தது. அதற்கு ஏற்றாற்போல அவர்கள் விடையளிக்க முற்பட்டனர்.

மொழி கற்றலில் சிந்தனை வழமைகளின் பங்களிப்பு

இவ்வாறு சிந்தனை வளமைகள் மாணவர்களின் சிந்தனைப் போக்கை ஒரு வழக்கத்திற்குக் கொண்டுவர உதவின. படிப்படியாகக் கேள்விகளைக் கேட்கும்போது, மாணவர்கள் பகுதியை இன்னும் ஆழமாகப் புரிந்துகொள்ள முடிந்தது; ஆர்வமும் அதிகரித்தது, அதனால், மாணவர்கள் மேற்குறிப்பிட்ட கேள்விகளைக் கேட்க இது நல்ல ஒரு வாய்ப்பாக அமைந்தது. மாணவர்கள் கேள்விகளுக்கான விடைகளைக் கூறியபோது ஆதாரபூர்வமாக நியாயப்படுத்தப் கற்றுக்கொண்டனர். சற்றுக் கடினமான பகுதிகளையும் இந்தச் சிந்தனை வழமைப் பயிற்சியின் மூலம் சுலபமாகப் புரிந்துகொள்வது சாத்தியமாகியது. ரிச்சர்ட் டூ்போரின் கோட்பாட்டின்படி பாடங்கள் வெற்றிகரமாக அமையச் சிந்தனை வழமைகள் பெரிதும் துணைபுரிந்தன.

கண்ட பயன்கள்

இந்த முயற்சியின் மூலம் கண்ட பயன்கள் பல. அவை பின்வருமாறு:

1. பாடப்பொருளை எளிதில் புரிந்துகொண்டனர்.
2. மாணவர்களிடையே அதிக ஆர்வமும் ஊக்கமும் வெளிப்பட்டது.
3. மாணவர்களின் சிந்தனையையும் கற்றல் திறனையும் வளர்க்க முடிந்தது.
4. ஈடுபாடுமிக்க சிந்திக்கும் மாணவர் சமூகம்கொண்ட ஒரு வகுப்பறைச் சூழல் உருவாகியது.
5. மாணவர்களின் வாய்மொழி மற்றும் கருத்தறிதல் மதிப்பெண்களில் முன்னேற்றம் தென்பட்டது.

எதிர்கொண்டசவால்கள்

மேற்குறிப்பிடப்பட்ட திட்டத்தைச் செயற்படுத்தியபோது கண்ட சவால்கள் பின்வருமாறு:

1. சிந்தனை வழமைகள்கொண்ட பாடத்தைத் திட்டமிடுவதற்கு அதிகக் கால அவகாசம் தேவைப்பட்டது. நேரம் ஒதுக்குவது பெரும்சவாலாக அமைந்தது.
2. முதல் பாடம் மூலம் எதிர்பார்த்த பயன்களை அடைய முடியவில்லை. மாணவர்கள் தங்களுடைய சிந்தனைகளை வகுப்பில் வெளிப்படுத்தத் தயங்கினர். இதைக்களைய கூடிக்கற்றல் அணுகு முறை கையாளப்பட்டது. மாணவர்கள் குழு நிலையில் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்திய பிறகு, வகுப்பளவில் அவ்வாறே வெளிப்படுத்தப் படிப்படியாகத் தங்கள்திறனை வளர்த்துக்கொண்டனர்.
3. மாணவர்கள் சிலர் இதில் சிரமத்தை எதிர்நோக்கினர். அவர்களுக்கு உதவுவது முக்கிய நோக்கமாக இருந்தது.
4. மாணவர்கள் சிந்தனையை வளர்க்கும் அதே நேரத்தில் தமிழ்ச்சொல்வளப் பெருக்கத்தையும் வளர்ப்பது அவசியமாயிற்று. இதுகுறிப்பாகவீட்டில் அதிகமாக ஆங்கிலம் பேசும் சூழலில் வளரும் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினையாக இருந்தது. இதை ஒரே நாளில் களையமுடியாது.

எதிர்காலத் திட்டங்களும் பணிகளும்

இந்த முயற்சியைக் கண்டிப்பாகத் தொடர்ந்து செயற்படுத்தும் எண்ணம் உள்ளது. மேற்கொண்டு தொடர்செயலாய்வு முயற்சிகளையச் செய்வதற்கு ஆசிரியர் குழுக்களை அமைக்க வேண்டியுள்ளது. திரட்டிய தரவுகள் உணர்த்தும் முடிவுகளின் அடிப்படையில் திட்டங்களை வகுத்துச் செயற்படும் முயற்சிகள் தற்போது நடப்பில் உள்ளன. தேசிய நிலையிலும் குழுமப் பள்ளிகளிலும் பகிர்வுகள் நடத்தும்திட்டங்களும் உள்ளன.

முடிவுரை

21-ஆம் நூற்றாண்டின் கற்றல் அடைவுகளை அடையச் சிந்தனை வழமைகள் சிறந்த ஒரு கற்பித்தல் முறையாக அமைகிறது. இந்தக் கற்பித்தல் முறை தொடக்கநிலை மாணவர்களுக்கும் மட்டுமின்றி உயர்நிலை மற்றும் கல்லூரி மாணவர்களுக்கும் பொருந்தும். மாணவர்களைச் சிறந்த சிந்தனையாளராக உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர்களுக்கு உண்டு. அந்த இலக்கை நோக்கியே நம் பயணம் தொடரட்டும்.

விளையாட்டின் வழிக் கற்றல்: மகிழ்ச்சியும் பயனும் தரும் பேசுதலும் எழுதுதலும்

திருமதி கௌரி சோழராஜன், எட்ஜ்ஃபீல்டு தொடக்கப்பள்ளி, சிங்கப்பூர்

முன்னுரை

"விளையாட்டின்வழி ஒரு குழந்தை தன் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும். அக்குழந்தை தன் விளையாட்டுக்கான விதிமுறைகளைத் தானே உருவாக்கிக்கொள்வதோடு தன்முனைப்பையும் வளர்த்துக்கொள்ள முடியும். இவ்வாறு குழந்தை தன்னையே மேம்பட்டவராகவும் முதிர்ச்சியுடையவராகவும் பாவித்துக்கொள்ள விளையாட்டு உதவுகிறது" வைகோட்ஸ்கீ (Vygotsky).

விளையாட்டு என்பது குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்கு முக்கியப் பங்களிப்பதை வைகோட்ஸ்கீ மேற்கொண்ட ஆய்வுகள் காட்டுகின்றன. விளையாட்டுவழி ஏற்படும் அனுபவங்கள் பிள்ளைகளுக்கு உற்சாகமூட்டுவதோடு அதன் வழிக் கற்றுக்கொள்ளும் பாடம் அவர்கள் மனத்தில் ஆழப் பதிந்துவிடும். பாலர் பள்ளியில் பயிலும்போது பிள்ளைகள் பலவித விளையாட்டுகளில் ஈடுபடுகின்றனர். அவர்களது பாடத்திட்டத்தில் அதற்காகவே நேரம் ஒதுக்கப்படுகிறது. அதே பிள்ளைகள் தொடக்கப்பள்ளிக்குச் சென்றபின் அங்கே விளையாட்டுவழிக் கற்றலின் அளவு படிப்படியாகக் குறையத் தொடங்குகிறது. அவர்கள் உயர்நிலைப்பள்ளியில் பயிலும்போது விளையாட்டு என்பது பெரும்பாலும்மறைந்துவிடுகிறது. இவ்வாறு பிள்ளைகள் வளரும் பருவத்தில் விளையாடுவதற்கான வாய்ப்புகள் கொஞ்சங்கொஞ்சமாகக் குறையும்போது அவர்களின் கற்றல் ஈடுபாடும் குறையக்கூடும். விளையாட்டின்வழி ஆசிரியர் கற்பிக்கும்போது அவர் கற்பிக்க விழைவதை மாணவர் எளிதில் புரிந்துகொள்ளவும், மனத்தில் நிறுத்தவும் அதிக வாய்ப்பு உண்டு. விளையாட்டின் வழிக் கற்பிப்பது கற்றலை மாணவர்க்குச் சுகமான அனுபவமாக்கும்.

விளையாட்டின்வழிப் பேசுதலும் எழுதுதலும்

நான் தமிழ்மொழி கற்பித்தலுக்குப் பல்வேறு விளையாட்டு உத்திகளைப் பயன்படுத்தி வருகிறேன். இதனால், என் மாணவர்கள் கற்றலில் முன்னேற்றம் கண்டுள்ளனர். எனது வகுப்பில் தமிழில் பேசத் தயங்கிய மாணவர்களும் பேச முயன்றனர். தற்போது தமிழில் ஓரளவுக்கு நன்றாகவே பேசுகின்றனர். என்னுடைய தொடக்கநிலை ஆறாம் வகுப்பு மாணவர்களில் பலர் படத்திலுள்ள காட்சிகளையொட்டித் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களை நினைவு கூர்ந்து பேசுவற்குச் சிரமப்பட்டனர். ஆனால், நான் மேற்கொண்ட விளையாட்டு நடவடிக்கைகளுக்குப் பின் அவர்கள் சுயமாகச் சிந்தித்து

அவற்றைப்பற்றி நன்றாகப் பேசும் அளவுக்கு மேம்பட்டுள்ளனர். நான் பயன்படுத்திய விளையாட்டுகள் பாடத்தின் முன்நடவடிக்கைகளாக அமைந்ததால் மாணவர்களுடைய கவனத்தை நன்கு ஈர்த்துப் பின் பாடத்தினுள்ளே கொண்டு செல்ல மிகவும் உதவியாக இருந்தது. விளையாட்டின்வழிக் கற்பித்தல், பேசுதலையும் எழுதுதலையும் எவ்வாறு மகிழ்ச்சியும் பயனும் மிக்கதாக்கும் என்பதையும் அவற்றைச் செயற்படுத்தும் முறைகளையும் பகிர்ந்துகொள்வதாக இக்கட்டுரை அமைகிறது.

சொல்வளப் பெருக்கம்

'சொல்வளப் பெருக்கம்' என்னும் விளையாட்டினை ஆங்கிலத்தில் 'WordRace' என்று அழைப்பர். இவ்விளையாட்டினை முதலில் ஆங்கிலத்தில் விளையாடிக் காட்டிவிட்டுப் பின் தமிழில் விளையாடுவது, இதனை விளையாடும் முறையை மாணவர்கள் எளிதில் புரிந்துகொள்ள ஏதுவாகும். இவ்விளையாட்டில், மாணவர்கள் கொடுக்கப்படும் கருப்பொருளோடு தொடர்புடைய சொற்களை எழுதவேண்டும். அவ்வாறு எழுதும்போது முதல் சொல்லின் ஈற்றெழுத்து அடுத்த சொல்லின் முதலெழுத்தாக அமையவேண்டும். எடுத்துக்காட்டுக்கு, ஆங்கிலத்தில் 'Supermarket' என்னும் கருப்பொருளைக் கொண்டு முதல் சொல்லை ஆசிரியர் வெண்பலகையில் எழுதவேண்டும். அவரைத் தொடர்ந்து மாணவர்கள் ஒவ்வொருவராக அக்கருப்பொருளோடு தொடர்புடைய அடுத்தடுத்த சொற்களை எழுதவேண்டும். ஆசிரியர், Supermarke**t** என்று எழுதும்போது அச்சொல்லின் ஈற்றெழுத்து 'ட்' என முடிகிறது. அடுத்த மாணவர் 'ட்' என்னும் எழுத்தில் தொடங்கும் அடுத்த சொல்லை எழுதவேண்டும். உதாரணத்திற்கு அவர், **T**ins என்று எழுதலாம். (Supermarket**T**ins**S**helves. . .) தமிழில் 'பூங்கா' எனும் கருப்பொருளைக் கொண்டு முதல் சொல் பூங்**கா** என வரும்போது, அடுத்த சொல், **கா**ற்று என வரலாம்.

ஆங்கிலத்தில் 26 எழுத்துக்கள் மட்டுமே இருப்பதால் மேற்குறிப்பிட்ட விதிமுறை அம்மொழிக்கு அப்படியே பொருந்தும். ஆனால், தமிழில் 247 எழுத்துக்கள் இருப்பதால் விதிமுறை சற்று மாறுபடும். அதாவது,'க'கர வரிசையில் வரும் *('க'முதல் 'கௌ'வரை)* எழுத்துக்களில், ஏதேனும் ஒன்றிலிருந்து அடுத்த சொல் தொடங்கலாம். எடுத்துக்காட்டுக்கு, பூங்**கா**கு**ளம்** . . . எனப் போகலாம். தமிழில் சில எழுத்துகள் சொல்லின் முதலில் வாரா. அந்நிலை வருமாயின் பின்வரும் 2 வழிகளில் விளையாடலாம்:

- முதல் வழியில், ஈற்றெழுத்தின் முன் நிற்கும் எழுத்தைக்கொண்டு அடுத்த சொல் தொடங்கலாம். எடுத்துக்காட்டுக்குப், பூங்கா குளம் மரங்**கள்** **கா**ற்று **கு**ப்பைத்தொட்டி என வரலாம். இந்த எடுத்துக்காட்டில் வரும் 'மரங்கள்' என்னும் சொல்லின் ஈற்றெழுத்தான ***'ள்'*** என்னும் எழுத்தில் சொல் தொடங்காது. அதனால், அதற்கு முன் நிற்கும் ***'க'***கர வரிசையிலிருந்து அடுத்த சொல் தொடங்கலாம்.

- இரண்டாம் வழியில், ஈற்றெழுத்துக் கொண்டிருக்கும் உயிரெழுத்து ஒலியைக்கொண்டுஅடுத்தசொல் தொடங்கலாம். எடுத்துக்காட்டுக்கு, கண்காட்சி சிறுவர்கள் கவனித்து துண்டு (ட்+உ) உறுதி என அமையலாம். கொடுக்கப்படும் கருப்பொருள் சொல்லிலிருந்து விளையாட்டைத் தொடங்க வேண்டும்.

ஆசிரியர் வெண்பலகையின் நடுவே கருப்பொருள் சொல்லை எழுதவேண்டும். உதாரணத்திற்கு, நூலகம், பூங்கா, பேரங்காடி, பள்ளி உணவகம் என மாணவர்களின் அனுபவத்திற்குட்பட்ட கருப்பொருளாக இருத்தல் நல்லது. கருப்பொருளோடு தொடர்புடைய சொற்களைக் கண்டுபிடிக்கச் சிரமப்படும் மாணவர்களை 2 சொற்கள் கொண்ட சொற்றொடராகச் சொல்ல ஊக்குவிக்கலாம். இரண்டு சொற்களுக்கு மேலாக அமைந்த சொற்றொடர்களைத் தவிர்ப்பது நல்லது. ஏனெனில், அது விளையாட்டின் ஆர்வத்தைக் குறைத்துவிடும். மாணவர்கள் சொல்லச் சொல்ல ஆசிரியர் அச்சொற்களை வெண்பலகையில் எழுதுவார். சொல்லை எழுதும்போது ஈற்றெழுத்தை/ஈற்றெழுத்தின்முன் நிற்கும் எழுத்தை அடிக்கோடிடுவது மாணவர்களுக்கு உதவியாக இருக்கும். இறுதியில் அக்கருப்பொருள் சொல்லோடு தொடர்புடைய பல சொற்கள் சேகரிக்கப்பட்டு அவை மாணவர்களுக்குச் சொல்வங்கியாகவே அமைந்துவிடும்.

மாணவர்கள் இவ்விளையாட்டை முதலில் வகுப்பு நிலையில் விளையாடிவிட்டுப் பின் குழு நிலையிலும் இணை நிலையிலும் விளையாடுவதுநல்லது. அவ்வாறு விளையாடியபின் ஆசிரியர் மாணவர்கள் தொகுத்துள்ள சொற்களைப் பிரதியெடுத்து அனைவருக்கும் கொடுக்கலாம். இவ்விளையாட்டு, பட உரையாடல், கட்டுரை எழுதுதல் போன்ற பயிற்சிகளுக்கு உதவும். இதுமேற்குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கு முன்நடவடிக்கையாக நடத்தப்படலாம்.

இவ்விளையாட்டியில் மாணவர்கள் சக மாணவர்களோடு சேர்ந்து விளையாடும்போது அவர்களுக்குத் தெரியாத சொற்களும் தெரியவரும். அதுமட்டுமன்றிக் கொடுக்கப்படும் கருப்பொருள் சொல்லுடன் தொடர்புடைய சொற்களைச் சேகரிக்க உதவும்.மேலும்,மாணவர்களிடையே போட்டித்தன்மையைஏற்படுத்தி அவர்களை ஆழமாகச் சிந்திக்கவும் தூண்டும். மாணவர்களின் சொல்வளம் பெருகும். மாணவர்களுக்குத் தெரியாத சொற்களும் தெரிய வரும். உரையாடும் போதும் கட்டுரை எழுதும் போதும் விளையாட்டின் வழித் தாங்கள் கற்ற சொற்களை நினைவுகூர்ந்து மாணவர்கள் பயன்படுத்துவர்.

ஞாபகம் வருதே! ஞாபகம் வருதே!

'ஞாபகம் வருதே! ஞாபகம் வருதே!' என்னும் விளையாட்டை விளையாட ஐம்புலன்களையும் பயன்படுத்த வேண்டும். இவ்விளையாட்டுக்குச் சில பொருட்களைத் தயார் செய்துகொள்ள வேண்டும். நுகர்தல் புலனைப் பயன்படுத்தி விளையாட 3 அல்லது 4 சிறுபுட்டிகள் தேவைப்படும். ஒவ்வொரு புட்டியிலும் மணம் வீசும் திரவங்களையோ உணவு பொருளையோ இட்டு அடைத்துவிடவேண்டும். ஒவ்வொரு புட்டியிலும் 1, 2, 3, 4 என குறிப்பிடவேண்டும். மாணவர்கள் குறிப்பெழுதும் அட்டவணையைத் தயாரித்து வைத்துக்கொள்ள வேண்டும். அவ்வட்டவணையில் ஐந்து பிரிவுகள் வருமாறு அமைத்துக்கொண்டு அவற்றின் தலைப்புகளாகப் பின்வருவனவற்றை எழுதிக்கொள்ளலாம்: என்ன பொருள்? எது நினைவுக்கு வந்தது? அப்போது உனக்கு என்ன வயது? உனக்கு என்ன நடந்தது? அனுபவத்தோடு சம்மந்தப்பட்டவர்கள் யார்? முதலில் ஆசிரியர் மாணவர்களிடம் புட்டிகளைத் தந்து அவற்றை நுகர்ந்து பார்க்கச் சொல்லவேண்டும். பின் புட்டிகளிலுள்ள திரவங்கள் யாவை என ஊகிக்கச் சொல்லவேண்டும். மாணவர்கள் புட்டிகளை நுகர்ந்த பின் கொடுக்கப்பட்டிருக்கும் அட்டவணையைப் பூர்த்தி செய்யுமாறு கூறவேண்டும். பின் மாணவர்கள் நுகர்ந்த பொருளோடு தொடர்புடைய ஏதேனும் ஓர் அனுபவத்தைப் பற்றிப் பேசுமாறு கூறவேண்டும். தொடக்கநிலை 1 முதல் 3 வரை பயிலும் மாணவர்களிடம் அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் பற்றிப் பேசச் சொல்லலாம்.தொடக்கநிலை 4 முதல் 6 வரை பயிலும் மாணவர்கள் அவர்களது அனுபவங்கள் பற்றிப் பேசுவதோடு குறிப்பிட்ட நிகழ்வுகளில் தங்கள் மனத்தில் அதிகத்தாக்கத்தை ஏற்படுத்திய ஒன்றைப்பற்றிச் சுருக்கமாக எழுதச் சொல்லலாம். அட்டவணையில் உள்ளவற்றை ஆசிரியர் தம் மாணவர்களின் திறனுக்கேற்ப மாற்றி அமைத்துக்கொள்ளலாம்.

இவ்விளையாட்டினை மற்றப் புலன்களைப் பயன்படுத்தி விளையாட விரும்புவோர் பின்வருவனவற்றைக் கடைபிடிக்கலாம்: பார்த்தல் புலனைப் பயன்படுத்தும்போது, பொருட்கள், பொருட்களின் படங்கள், பெயர்ச்சொற்கள்/வினைச்சொற்கள் போன்றவற்றை மாணவர்களிடம் காட்டி மேற்குறிப்பிட்டுள்ள படிநிலைகளைப் பின்பற்றி விளையாடலாம். கேட்டல் புலனை பயன்படுத்தும்போது பல்வேறு ஒலிகளைக் கேட்க வைத்து விளையாடலாம்.உணர்தல் புலனைப் பயன்படுத்தும்போது மாணவர்களின் கண்களைக் கட்டிவிட்டுப் பின் பல்வேறு பொருட்களைத் தொட வைத்து விளையாடலாம். சுவைத்தல் புலனைப் பயன்படுத்தும்போது மாணவர்களுக்கு ஏற்ற உணவுப் பொருட்களை உணவுப் பெட்டிகளில் இட்ட பின்னர், அவர்களின் கண்களைக் கட்டிவிட்டு உணவுகளைச் சுவைக்கச் சொல்லி விளையாடலாம்.

இவ்விளையாட்டு மாணவர்களுக்கு நல்ல பலன்களைத் தரும். மாணவர்கள் பெற்ற அனுபவம் பற்றிப் பேசுதல் பயிற்சிக்கும் அனுபவக் கட்டுரை எழுதுவதற்கும்பெரிதும் உதவும். இதனை நான் தொடக்கநிலை இரண்டு மாணவர்களிடம் பயன்படுத்திய போது தமிழில் பேசத் தயங்கிய மாணவர்களும் பேச முயன்றனர். ஆறாம் வகுப்பு மாணவர்கள் தங்கள் வாழ்வில் ஏற்பட்ட அனுபவங்களை நினைவு கூர்ந்து பேசுவதற்குச் சிரமப்படுவர். ஆனால், இவ்விளையாட்டைத் தொடர்ந்து ஐந்து முறை நடத்தியபின் அவர்கள் தங்கள் அனுபவங்களைப்பற்றி நிறையப் பேசத் தொடங்கினர். சிலர் மற்ற மாணவர்கள் பகிர்ந்துகொண்ட அனுபவங்களைக் கேட்டபின்னர்,அவற்றை முன்மாதிரியாகக் கொண்டு தங்களது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர். ஆறாம் வகுப்பு மாணவர்கள் கட்டுரை எழுதுவதற்கும் இவ்விளையாட்டு பெரிதும் உதவியது. படத்தோடு தொடர்புடைய உரையாடல் அல்லது கட்டுரைப் பாடங்களுக்கு முன்நடவடிக்கையாக இவ்விளையாட்டு நடத்தப்படலாம்.

கண்டுபிடி! கண்டுபிடி!

'கண்டுபிடி! கண்டுபிடி!' என்னும் விளையாட்டை மாணவர்களது திறனுக்கேற்ப மூன்று நிலைகளில் விளையாடலாம்.

- முதல் நிலையில், ஒரு மாணவருடைய கண்களைத் துணியால் கட்டிவிடவேண்டும். அதன்பின் ஆசிரியரும் மற்ற மாணவர்களும் அம்மாணவரிடம் வகுப்பினுள் இருக்கும் ஒருபொருளைப் பற்றி வர்ணிக்கவேண்டும். அவ்வாறு வர்ணித்த பொருள் என்ன என்று அம்மாணவர் ஊகித்துச் சொல்ல வேண்டும்.
- இரண்டாம் நிலையில் ஒரு மாணவருடைய கண்களைத் துணியால் கட்டிவிட்டு அவரை வகுப்பிற்கு வெளியே அழைத்துச் செல்லவேண்டும். பின் ஆசிரியரும் மற்ற மாணவர்களும் பள்ளியில் இருக்கும் இடங்கள், பொருள்கள், அங்கு காணும் காட்சிகள் போன்றவற்றை வர்ணிக்கவேண்டும். அவ்வாறு வர்ணித்த பொருளை அல்லது காட்சியை அம்மாணவர் ஊகித்துச் சொல்ல வேண்டும்.
- மூன்றாம் நிலையில் விளையாடும்போது ஆசிரியர் ஒரு மாணவரைத் தேர்ந்தெடுத்து அவரை வகுப்பின் நடுவே அமரச்செய்து அவரது கண்களைத் துணியால் கட்டிவிட்டு அவரை வகுப்பின் முன் ஒரு நாற்காலியில் அமர வைக்கவேண்டும். பின் பாடநூல், கதைப்புத்தகம் போன்றவற்றில் உள்ள படங்கள் சிலவற்றைப் பிரதி எடுத்துக்கொண்டு வெண்பலகையில் ஒட்டவேண்டும். மற்ற மாணவர்கள் எந்தப் படத்தைப்பற்றி வர்ணிக்கவேண்டும் என்பதை ஆசிரியர் சுட்டிக்காட்டுவார். அதன் பின்னர், மாணவர்கள் இந்த விளையாட்டுக்குத் தங்களைத் தயார் செய்து கொள்வர். மாணவர்கள் தங்களைத் தயார்செய்துகொள்ள அவர்களுக்குச் சுமார் 5 நிமிடங்கள் கொடுத்துவிட்டுப் பின்

விளையாட்டைத் தொடங்கலாம்.மாணவர்கள் இவ்விளையாட்டுக்குத் தயாராகும் வரையில் கண்கள் மூடப்பட்ட மாணவர் ஏதேனும் இசையைக் கேட்டுக்கொண்டிருக்கும்படி செய்யலாம். மாணவர்கள் தயாரானதும் ஒவ்வொருவராக எழுந்து நின்று குறிப்பிட்ட படத்திலுள்ள பொருட்கள், நிகழ்வுகள் போன்றவற்றை வர்ணிக்கவேண்டும். எடுத்துக்காட்டுக்கு,கடற்கரையில் ஒரு சிறுமி மணல்வீடு கட்டி விளையாடும் காட்சி என்று வைத்துக்கொள்வோம். அதனை,*"இங்கே கடல் இருக்கிறது. கடற்கரையில் ஒரு சிறுமி அமர்ந்திருக்கிறாள். அவள் மஞ்சள் நிற நீச்சல் உடை அணிந்திருக்கிறாள். அவள் மணல் வீடு கட்டி விளையாடுகிறாள். அவளுடைய மணல்வீடு நான்கு அடுக்குகள் கொண்ட மாளிகைபோல் இருக்கிறது. அதன் உச்சியில் ஒரு சிவப்பு நிறக் கொடியைச் செருகியிருக்கிறாள். . . ."* என்று வர்ணிக்கலாம். முழுப்படத்தின் வர்ணனையையும் கேட்ட அம்மாணவர் தன் கண்கட்டை அவிழ்த்துவிட்டு அது என்ன படம் எனக் கண்டுபிடிக்கவேண்டும்.

இவ்விளையாட்டு உரையாடல் படத்தை விவரித்துப் பேசுதலுக்குப் பெரிதும் உதவும். அதுமட்டுமன்றிக் படக்கட்டுரையை விவரித்து எழுதவும் உதவும். இவ்விளையாட்டை வகுப்பில் பயன்படுத்திய போது, மொழிப் பயன்பாட்டில் சிரமப்பட்ட மாணவர்கள் மற்ற மாணவர்கள் வர்ணிப்பதை எடுத்துக்காட்டாகக் கொண்டு தாங்களும் பேசினர். ஓரளவு பேசக்கூடிய மாணவர்கள் படத்தை நன்றாக விவரித்துக்கூறக் கற்றுக்கொண்டார்கள். பின் பாட வேளையிலோ தேர்வு வேளையிலோ, பட உரையாடல் பகுதியில் தாங்கள் கற்றுக்கொண்டவற்றைப் பயன்படுத்தினார்கள். உரையாடல் படத்தை விவரிக்கத் தெரியாமல் சிரமப்பட்ட மாணவர்கள், தங்கள் நண்பர்கள் வர்ணிக்கும் விதத்தைப் பார்த்து அவர்களும் அவ்வாறு கூற முயன்றனர். இரண்டாம் வகுப்பில் பயிலும் மீத்திற மாணவர்கள் கட்டுரைப் படங்களை விவரித்துக் கூறவும் எழுதவும் தொடங்கினர்.

கண்டு கொண்டு வருகிறேன்!

தொடக்கநிலை ஒன்று, இரண்டு ஆகிய நிலைகளில் மாணவர்கள் எழுத்துகளையும் சொற்களையும் பயில்கின்றனர். இவர்களுக்கு நடத்தப்படும் சொல்வதெழுதுதல் நடவடிக்கையை விளையாட்டுவழியும் நடத்தலாம். மாணவர்களுக்குச் சொல்வதெழுதுதல் பட்டியல் ஒன்றைத் தயாரித்துக் கொடுத்துவிடவேண்டும். சுமார் மூன்று நாட்களுக்குப் பிறகு வகுப்பில் 'கண்டு கொண்டு வருகிறேன்' எனும் விளையாட்டை விளையாடலாம். அதற்குத் தேவையான பொருள்களை முதலில் ஆசிரியர் தயாரித்துக்கொள்ளவேண்டும். பட்டியலிலுள்ள சொற்களுக்கான படங்களையும் அச்சொற்களின் ஒவ்வொரு எழுத்தையும் தனித்தனியாக A4 அளவில் பிரதி எடுத்துவைத்துக்கொள்ளவேண்டும். பின் ஆசிரியர் மாணவர்களில் 6 பேரை மட்டும் தேர்ந்தெடுத்து அவர்களை 2 குழுக்களாகப் பிரிக்க வேண்டும். அக்குழுக்களுக்குச்'சிங்கம்', 'புலி' என ஏதேனும் பெயரிட்டுக்கொள்ளலாம்.

ஏனைய மாணவர்களிடம் ஆளுக்கொரு எழுத்து அட்டையைக் கொடுக்க வேண்டும். பிறகு ஆசிரியர் ஒரு படத்தை இரு குழுவினரிடமும் காட்டவேண்டும். அவர்கள் உடனே அப்படத்தில் இருக்கும் பொருளின் பெயரை உருவாக்கப் பயன்படும் எழுத்து அட்டைகளைக் கண்டுபிடிக்கவேண்டும். அவ்வாறு செய்வதற்கு சிங்கமும் புலியும் தங்களுக்குத் தேவையான எழுத்துகள் கொண்ட மாணவர்களைத் தங்களருகே முறையாக வரிசைப்படுத்தி நிற்கவைக்க வேண்டும்.எந்தக் குழு முதலில் சரியான சொல்லை உருவாக்குகிறதோ அதற்கு 2 புள்ளிகள் வழங்கப்படும். இவ்வாறு விளையாடி இறுதியில் எந்தக் குழு அதிகப் புள்ளிகள் பெறுகிறதோ அதுவே வெற்றி பெற்ற குழுவாகும்.

இவ்விளையாட்டை விளையாடும்போது சொல்வதெழுதுதல் என்றாலே நடுங்கும் மாணவர்களும் தைரியமாக முன் வந்து இவ்விளையாட்டில் ஈடுபடுகின்றனர். என் வகுப்பில் ஆங்கிலம் மட்டுமே பேசும் குடும்பச் சூழலிலிருந்து வந்த மாணவர்கள், தமிழ் என்றால் கடினம் என்று சொன்ன காலம் மாறி இப்போது தாங்களே விரும்பித்தமிழ் வகுப்பிற்கு வந்து பயில்கின்றனர். அவர்களை விளையாட்டுவழி பாடத்தில் ஈடுப்படுத்தியது பெரிதளவு வெற்றியையே ஈட்டித் தந்துள்ளது.

நினைவிருக்கிறதா?

ஆறாம் வகுப்பு மாணவர்ளுக்கு தொடக்கநிலை இறுதியாண்டு தேர்வையொட்டித் தீவிர பயிற்சி அளிக்கும் பொறுப்பு எல்லா ஆசிரியர்களுக்கும் ஏற்படும். அவர்களுக்கு வெறும் பயிற்சித்தாள்களையே கொடுத்துக்கொண்டு இருக்காது அவ்வப்போது சிறு சிறு விளையாட்டுகளையும் விளையாடச் செய்யலாம். என் ஆறாம் மாணவர்களுக்கு ஒலி வேறுபாடு மொழிக்கூறு கடினமாக இருந்தது. “இத்தனை சொற்களை மனனம் செய்யவேண்டுமா?” என்று வாயைப் பிளப்பர். அந்த மனனம் செய்யும் வேலையைச் சற்றே சுவாரசியமானதாக்கினால் நிச்சயம் வெற்றி கிட்டும் என்று தோன்றியது. அதன் விளைவே ‘நினைவிருக்கிறதா?’ எனும் விளையாட்டு. இவ்விளையாட்டை விளையாடுவதற்கு முன் ஆசிரியர் சோதிக்கவிருக்கும் ஒலி வேறுபாட்டுச் சொற்களைச் சிறு அட்டைகளில் தனித்தனியாக அச்சிட்டுக்கொள்ளவேண்டும். அதன் பிறகு அச்சொற்களுக்கேற்ற வாக்கியங்களைத் தனித்தனியாக அச்சிட்டு அவற்றையும் வாக்கிய அட்டைகளாக அமைத்துக் கொள்ளவேண்டும்.

இவ்விளையாட்டில் ஒன்று முதல் மூன்று குழுக்கள் வரை விளையாடலாம். ஒவ்வொரு குழுவிலும் மூன்று அல்லது நான்கு விளையாட்டாளர்கள் விளையாடலாம். ஒவ்வொரு குழுவிலுமுள்ள விளையாட்டாளர்கள் தங்களை 1, 2, 3, 4 என்று எண்ணிட்டுக்கொள்ள வேண்டும். 4வது விளையாட்டாளர் ‘விடைகளைச் சரிபார்ப்பவராக’ மற்றொரு மேசையில் அமர்ந்து தன் பணியைச் செய்வார். முதல் 3 விளையாட்டாளர்களும்

ஒலி வேறுபாட்டுச் சொல்லட்டைகளிலுள்ள சொற்கள் தெரியாதவாறு அவற்றைத் திருப்பித் தங்கள் மேசையின் மீது வைக்கவேண்டும். ஒலி வேறுபாட்டு வாக்கிய அட்டைகளை அக்குழுவின் 'விடைகளைச் சரிபார்ப்பவர்' தான் இருக்கும் மேசையின்மீது அடுக்கி வைக்கவேண்டும்.

ஆசிரியர், "தொடங்கு!" என்று கூறியதும் முதல் விளையாட்டாளர் ஒரு சொல்லட்டையைத் திறந்து பார்த்துவிட்டுப் பின் அதற்கான இணை அட்டையைக் கண்டுபிடிக்க இரண்டாவது அட்டையைத் திறந்து பார்க்கவேண்டும். திறக்கப்பட்ட இரண்டாவது அட்டை சரியான அட்டையாக இருந்தால் அவ்விளையாட்டாளர் அவ்விரு அட்டைகளையும் எடுத்துக்கொண்டு வாக்கிய அட்டைகள் இருக்கும் மேசைக்குச் செல்லவேண்டும். திறக்கப்பட்ட இரண்டாவது அட்டை தவறான அட்டையாக இருந்தால் அவ்விளையாட்டாளர் தாம் எடுத்த இரண்டு அட்டைகளையும் எடுத்த இடத்திலேயே சொற்கள் தெரியாதவாறு வைத்துவிடவேண்டும்.

அடுத்து இரண்டாவது விளையாட்டாளர் விளையாடத் தொடங்குவார். விளையாட்டாளர் வாக்கிய அட்டைகள் இருக்கும் மேசைக்குச் சென்றதும் அச்சொற்களுடன் பொருந்தும் சரியான வாக்கிய அட்டைகளை எடுக்கவேண்டும். பிறகு, அவற்றை 'விடை சரிபார்ப்பாளரிடம் கொடுத்துவிட்டுத் தங்கள் குழு இருக்கும் மேசைக்கு வந்துவிடவேண்டும். சொல்லட்டைகள் தவறான வாக்கியத்துடன் இணைக்கப்பட்டால் அவ்விளையாட்டாளர் அடுத்தச் சுற்றுக்கான வாய்ப்பினை இழந்து விடுவார். அதுமட்டுமன்றி அவர் தாம் எடுத்த சொல்லட்டைகளை மீண்டும் முன்பு இருந்த இடத்திலேயே சொற்கள் தெரியாதவாறு வைத்துவிடவேண்டும். முதல் விளையாட்டாளர் மேசைக்குத் திரும்பிய பிறகுதான், அக்குழுவின் இரண்டாம் விளையாட்டாளர் தம்முடைய கண்டுபிடிக்கும் வேலையைத் தொடங்க முடியும். இவ்வாறாகக் கொடுக்கப்பட்ட அனைத்துச் சொல்லட்டைகளையும் சரியாக இணைத்தபின் அவற்றை வாக்கிய அட்டைகளுடன் இணைத்துவிடும் வேலையை எந்தக் குழு முதலில் முடிக்கிறதோ அதுவே வெற்றி பெற்ற குழுவாகும்.

முடிவுரை

மேற்கூறிய விளையாட்டுகளோடு மேலும் பலவகையான சின்னச் சின்ன விளையாட்டுகளை அவ்வப்போது ஆசிரியர்கள் தம் பாடவேளைகளில் பயன்படுத்தினால் கற்றல் என்பது மாணவர்களுக்குப் பயனுள்ளதாகவும் சுகமானதாகவும் மாறும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.விளையாட்டில் பலவகை உண்டு. அவற்றில் அர்த்தமும் உண்டு. அவற்றைக் கற்பித்தலில் பயன்படுத்தினால் நிச்சயம் பலனும் உண்டு.

மேற்கோள் இணையத்தளங்கள் / நூல்கள்

1. http://www.childdevelopmentmedia.com/play-the-work-of-lev-vygotsky/

2. http://en.wikipedia.org/wiki/Lev_Vygotsky

3. http://www.simplypsychology.org/vygotsky.html

4. *UnderstandingChildren'sPlay*byJennieLindon,publishedbyNelsonThornesLtdin 2001

மாணவர்கள் கட்டுரையில் ஏன் இனிய தொடர்களைப் பொருத்தமான வகையில் பயன்படுத்துவதில்லை? ஒரு செயலாய்வு

திரு க. முருகன் - பெண்டிமியர் உயர்நிலைப் பள்ளி, சிங்கப்பூர்
திரு கோ. கிருஷ்ணமூர்த்தி - பாடத்திட்ட வரைவுமற்றும் மேம்பாட்டுப் பிரிவு, சிங்கப்பூர்

அறிமுகம்

மொழி கருத்துப் பரிமாற்றத்திற்குத் துணைபுரியும் மிக முக்கியமான கருவி என்பதால் ஒவ்வொருவரும் மொழியைக் கவனமாகவும் திறமையாகவும் கையாள வேண்டியது அவசியம். ஓர் இடத்தை, சூழலை, மாந்தரின் குண இயல்பை, செயலை விளக்குவதற்கு எடுத்துக்காட்டையோ, இனிய தொடர்களையோ பயன்படுத்தும்போது கூற வேண்டிய செய்தி தெளிவும் இனிமையும் பெறுகிறது. 'மனோன்மணீயம்' நாடகத்தில் சுந்தரம் பிள்ளை பாத்திரங்களின் இயல்புகளை உணர்த்தவும், சூழ்நிலைகளை விளக்கவும் பல மரபுத்தொடர்களையும் பழமொழிகளையும் பயன்படுத்தியுள்ளார். இதன்மூலம் இனிய தொடர்களின் முக்கியத்துவத்தை நன்கு உணரமுடிகிறது.

பத்தாண்டுக் கட்டாயக் கல்வி பயிலும் ஒரு மாணவர் தமிழையும் இந்தப் பத்தாண்டுகாலம் பயில்கிறார். பத்தாவது ஆண்டு நிறைவில் ஓரளவு தம் கருத்தை மற்றவருக்குப் பேச்சின் மூலமோ எழுத்தின் மூலமோ தெளிவாகத் தெரிவிக்கத் தெரிந்திருக்க வேண்டும். பேச்சும் எழுத்தும் சாதாரணமாக இருக்கும்போது பிறரைக் கவராது. இனிய தொடர்களையோ, மேற்கோள்களையோ, உதாரணங்களையோ பயன்படுத்தும்போது கூறும் கருத்து வலிமைபெறுகிறது. 'உயர்தரக் கட்டுரை இலக்கணம் முதற்பாகம்' என்னும் நூலில் தேவநேயப் பாவாணர் சொற்களுக்கிடையே வேறுபாடு காட்டுவதற்காக இணைமொழிகளைக் கையாளுவதாகக் கூறுகிறார்.[1] எனவே, மாணவர்களும் இனிய தொடர்களைக் கையாளும்போது சொல்ல வேண்டியதைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் ஆழமாகவும் கூறமுடியும் என்று கூறலாம்.

பின்னணி

சிங்கப்பூரில் தமிழ்மொழி பயிலும் மாணவர்களின் மொழித்திறனைச் சோதித்தறியத் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. இத்தேர்வுகளில் உரையாடல், கட்டுரை, மின்னஞ்சல் போன்ற கூறுகள் சோதிக்கப்படுகின்றன. இக்கூறுகளுள் கட்டுரையில்தான் மாணவர்களின் மொழித்திறனை முழுமையாகக் காணலாம். அவர்களுக்கு இனிய தொடர்களைப் பயன்படுத்தி மொழியைச் சிறப்பாகக் கையாளத் தெரியும்போது கட்டுரையை நன்றாக எழுதுவதோடுபிற தேர்வுக் கூறுகளையும் தன்னம்பிக்கையுடனும் சிறப்பாகவும் செய்ய முடிகின்றது.

செயலாய்வின் முக்கியத்துவம்

உயர்நிலைப்பள்ளியில் ஒவ்வொரு வகுப்பிற்கும் மரபுத்தொடர்கள், இணைமொழிகள், உவமைத்தொடர்கள், பழமொழிகள் என இனியதொடர்களின் பட்டியல் பாடத்திட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் இந்தத் தொடர்களைப் பயன்படுத்தினால் சொல்ல வேண்டிய கருத்துகளைச் சிறப்பாகச் சொல்ல முடியும். ஆனால், செயலாய்வாளரின் வகுப்பு மாணவர்கள் எழுத்துத் தேர்வில், அதுவும் கட்டுரைப் பகுதியில் படித்த இனியதொடர்களைமிகவும் குறைவாகவே பயன்படுத்துகின்றனர். அவ்வாறுபயன்படுத்திய மாணவர்களில்ஒரு சிலர்சரியான சூழலில் பொருத்தமாகப் பயன்படுத்தாமலிருப்பதும் கண்டறியப்பட்டது. நான்கு ஆண்டுகள் இனியதொடர்களைப் படித்தும் ஏன் இந்த மாணவர்களால் கட்டுரை எழுதும்போது இந்தத் தொடர்களைக் கையாள முடியவில்லை என்ற வினா எழுந்தது. இவ்வினாவிற்கான விடைகாணும் முயற்சியே இச்செயலாய்வு.

செயலாய்வுக்குட்பட்டோர்

இச்செயலாய்வில் இரு பள்ளிகளைச் சேர்ந்த உயர்நிலை நான்கு விரைவு நிலை மாணவர்களும் நான்கு ஆசிரியர்களும் ஈடுபட்டனர். முதல் பள்ளியில் 17 மாணவர்களும்இரண்டாம் பள்ளியில்10 மாணவர்களும் இச்செயலாய்வில் கலந்துகொண்டனர். இவ்விரு பள்ளிகளும் அக்கம்பக்கப் பள்ளிகள் என்பதாலும், ஏறக்குறைய மாணவர்களின் செயல்திறன்கள் ஓரளவிற்கு ஒத்திருப்பதாலும் இச்செயலாய்வில் இணைந்து செயல்பட முடிவெடுக்கப்பட்டது.

செயலாய்வுக்குட்பட்ட சிக்கல்கள்

- மாணவர்கள் மொழிப் பயன்பாட்டில், குறிப்பாகக் கட்டுரை எழுதும்போது இனியதொடர்களைப் பயன்படுத்துவதில் இடர்ப்பாடுகளை எதிர்நோக்குதல்
- கட்டுரை எழுதும்போது ஆசிரியர்களின் வலியுறுத்தலுக்குப் பணிந்து கற்ற ஓரிரு தொடர்களைப் பொருத்தமற்ற வகையில் கையாளுதல்

செயலாய்வின் நோக்கம்

- மாணவர்களுக்குத் தாங்கள் முந்திய வகுப்புகளில் படித்த இனியதொடர்களை நினைவுபடுத்துதல்
- இனியதொடர்களைப் பயன்படுத்துவதால் கருத்துகளைத் தெளிவாகவும்கவரும் வகையிலும் கூறமுடியும் என்பதை உணரச் செய்தல்
- இனியதொடர்களையும் அவற்றின் சரியான பொருளையும் பயன்பாட்டையும் அறியச் செய்தல்
- இனியதொடர்களைஅன்றாடப் பயன்பாட்டில் கொண்டுவர ஊக்குவித்தல்

செயலாய்வுக்குரிய கேள்விகள்

- மாணவர்கள் இனியதொடர்களைக் கட்டுரை எழுதும்போது ஏன் பயன்படுத்தச் சிரமப்படுகின்றனர்?
- இனியதொடர்களின் பயன்பாட்டை மாணவர்களுக்கு எவ்வகையில் ஊக்குவிக்கலாம்?
- இனியதொடர்களைப் பயன்படுத்தும்போது எத்தகைய பயன்களைக் காணலாம்?

செயலாய்வின் எல்லை

2012-ஆம் ஆண்டு ஜனவரி இரண்டாம் வாரத்திலிருந்து தொடர்ந்து 10 வாரங்களுக்கு வாரத்தில் ஒரு நாள், 2 பாடவேளை (70 நிமிடங்கள்) ஒதுக்கப்பட்டு இச்செயலாய்வு மேற்கொள்ளப்பட்டது.இச்செயலாய்வில் மாணவர்கள் கட்டுரை எழுதும்போது எந்த அளவிற்கு இனியதொடர்களைப் பயன்படுத்துகின்றனர் என்பது முதன்மை நோக்கமாகக் கொள்ளப்பட்டது. அதனால், முந்திய வகுப்புகளில் படித்த இனிய தொடர்களை நினைவுபடுத்துவதும், புதிய தொடர்களை அறிமுகப்படுத்துவதும், கற்ற தொடர்களைப் பயன்படுத்துவதற்கேற்ற வாய்ப்புகளை ஏற்படுத்துவதும், இனியதொடர்களைப் பயன்படுத்தும்போது கட்டுரையின் தரம் வேறுபட்டுள்ளதா என்பதைக் கண்டறிவதும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

மரபுத்தொடர்கள், இணைமொழிகள், பழமொழிகள், உவமைத்தொடர்கள், திருக்குறள், இலக்கிய மேற்கோள்கள், திரையிசைப் பாடல்கள் போன்றவை மட்டுமே இனியதொடர்களாக இச்செயலாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இவற்றுள் மரபுத்தொடர்கள், இணைமொழிகள், பழமொழிகள் மற்றும் உவமைத்தொடர்கள் ஒவ்வொரு வகுப்பிற்கும் பாடப்புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன. எனவே, இவற்றை மீண்டும் ஒருமுறை நினைவுபடுத்தினால் போதும் என்ற அளவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

திருக்குறள் மற்றும் இலக்கிய மேற்கோள்கள் மாணவர்களின் பயன்பாட்டில் அவ்வளவாக இல்லாததால் இவற்றைக் கற்பிப்பதற்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டது. திரையிசைப் பாடல்கள் மாணவர்களால் அன்றாடம்பெரிதும் விரும்பிக் கேட்கப்படுகின்றன. எனவே, இவற்றை எந்த அளவு நினைவில் வைத்திருந்து உரிய நேரத்தில், சரியான இடத்தில் பயன்படுத்துகிறார்கள் என்பதைச் சோதித்தறிவது அடுத்த நிலையில் வைக்கப்பட்டது. மேற்குறிப்பிட்டவற்றைத் தவிரவேறு தொடர்கள் பயன்படுத்தப்பட்டிருந்தால் அவையும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

செயலாய்வினை நடத்தியவிதம்

2012-ஆம் ஆண்டு ஜனவரி இரண்டாவது வாரத்தில் முன்னிலைத் தேர்வாகக்கட்டுரை கொடுக்கப்பட்டது. இக்கட்டுரையில் மாணவர்கள் உயர்நிலை ஒன்று முதல் மூன்று வரையில் படித்த இனியதொடர்களைப் பயன்படுத்தியிருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவர்கள் எதிர்பார்த்த அளவு பயன்படுத்தவில்லை. ஏன் என்பதைக் கண்டறிய வினாநிரல் கொடுக்கப்பட்டது. அதில் கலந்துகொண்ட 27 மாணவர்களுள், முன்னைய வகுப்பில் படித்த தொடர்கள் நினைவில் இல்லை (28%) என்றும், தொடர்களின் பொருள் தெரியவில்லை (18%) என்றும், தொடர்கள் சரியான நேரத்தில் ஞாபகத்திற்கு வரவில்லை (54%) என்றும் குறிப்பிட்டிருந்தனர். ஜனவரி 13,2012அன்று இரு பள்ளி ஆசிரியர்களாலும் கலந்துரையாடிப் பிரச்சினைக்குத் தீர்வுகாணபணித்திட்டமும் அதற்கான பணிநிரலும் தயாரிக்கப்பட்டன.

பணித்திட்டம்

காலம்	**பயிற்றுவளங்களைத்தயாரித்தல்**	**வகுப்பறைச்செயற்பாடு**
வாரம் 1	• **முன்னிலைத் தேர்வுக்கான தலைப்பினை முடிவுசெய்தல்** • வினா நிரல் தயாரித்தல்	
வாரம் 2	**இனிய தொடர்களைத் தொடர் பத்தி மூலம் கற்பித்தல்** இனிய தொடர்களைப் பயன்படுத்தி எழுதப்பட்டுள்ள செய்தித்தாள் பகுதிகள், கட்டுரைகள், வாரமாத இதழ்களிலிருந்து தகுந்த பகுதிகளைத் தேர்ந்தெடுத்தல்	**வாரம் 1-இல் தயாரித் தவளங்களைப் பயன்படுத்துதல்** • தேர்வு நடத்துதல் • வினா நிரல் தந்து கருத்துகளைச் சேகரித்தல் • தரவுகளைத் திரட்டுதல்
வாரம் 3	**இனியதொடர்களைக்கண்டுபிடி** இனிய தொடர்களைப் பயன் படுத்துவதற்கு ஏற்ற சூழலை/பத்தியை/ வாக்கியத்தை/ படத்தைத் தெரிவு செய்தல் (இனிய தொடர்கள் இதில் இடம் பெற்றிருக்கா)	**வாரம் 2-இல் தயாரித்த வளங்களைப் பயன்படுத்துதல்** • இனிய தொடர்களைத் தொடர் – பத்தி மூலம் கற்பித்தல் • இனிய தொடர்களின் பயன்பாட்டை அறிதல்
வாரம் 4	**ஒலி, ஒளிக்காட்சிகள்** இனிய தொடர்கள் பயின்று வரும் ஒலி, ஒளிக்காட்சிகளையுடைய திரைப்பட, நாடகக்காட்சிகளைச் சேகரித்தல்	**வாரம் 3-இல் தயாரித்த வளங்களைப் பயன்படுத்துதல்** • சூழல் மூலம் இனிய தொடர்களைக் கற்பித்தல் - பயன்படுத்தத் தூண்டுதல் • கொடுக்கப் பட்டுள்ள பகுதிக்கு ஏற்ற இனிய தொடர்களைக் கண்டுபிடிக்க / நினைவுபடுத்தக் கூறுதல்

வாரம் 5	**சிறுகதைகள் / கட்டுரைகள்** இனிய தொடர்களைப் பயன்படுத்தி எழுதியுள்ள மாதிரிக்கட்டுரைகள், சிறுகதைகள் போன்றவற்றைச் சேகரித்தல்	**வாரம் 4-இல் தயாரித்த வளங்களைப் பயன்படுத்துதல்** • ஒலி-ஒளிக்காட்சிகள்மூலம் மேற்கோள்கள் சிலவற்றை அறிமுகம் செய்தல் • இடையீட்டுத் தேர்வு
வாரம் 6	**நிழற்படங்கள்** இனிய தொடர்களைப் பயன்படுத்துவதற்கு ஏற்றசூழலை/காட்சிகளையுடைய நிழற்படங்களைத் தெரிவுசெய்தல்	**வாரம் 5-இல் தயாரித்த வளங்களைப் பயன்படுத்துதல்** • சிறுகதைகள், கட்டுரைகளில் இனிய தொடர்கள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன என அறிதல் • தம் படைப்புகளில் பயன்படுத்த ஊக்குவித்தல்
வாரம் 7	**வர்ணனை / விவரித்தல்** தனிமனித உணர்வுகள்,பண்புகள், அடையாளங்களை விவரித்தல் வழி இனிய தொடர்களைக் கற்பிக்க வேண்டிய சூழல்களைத் தயாரித்தல்	**வாரம் 6-இல் தயாரித்த வளங்களைப் பயன்படுத்துதல்** • கொடுக்கப்பட்டுள்ள நிழற்படங்கள் எந்த இனிய தொடரை நினைவுபடுத்துகிறது? • தொடரை எவ்வாறு பத்தியமைப்பில் பயன்படுத்துவது என அறிதல்
வாரம் 8	**பாடத்திருப்பம்** வாரம் 2முதல் 7வரை நடந்த பயிற்சிகளை உள்ளடக்கிய பயிற்சிகளைத் தயாரித்தல்	**வாரம் 7-இல் தயாரித்த வளங்களைப் பயன்படுத்துதல்** • உணர்வுகள் / பண்புகளை வலியுறுத்தும் இனிய தொடர்களை அனுபவக் கட்டுரையின் வழி பயன்படுத்த ஊக்குவித்தல் • இடையீட்டுத் தேர்வு
வாரம் 9	**பின்னிலைத் தேர்வுக்கான தலைப்பினை முடிவு செய்தல்**	**வாரம் 8-இல் தயாரித்த வளங்களைப் பயன்படுத்துதல்** • மீண்டும் நினைவு கூர்தல்
வாரம் 10	**சிந்தனை மீட்சி**	**பின்னிலைத் தேர்வு**

ஒவ்வொரு வாரமும் வாரத்தில் ஒரு நாள் இனிய தொடர்களைக் கற்பிப்பதற்காகவும், படித்த இனியதொடர்களை நினைவுபடுத்துவதற்காகவும், சூழலுக்கேற்பப் படித்த தொடர்களைப் பயன்படுத்துவதற்காகவும் ஒதுக்கப்பட்டது. முதல்வாரத்தில் தயாரிக்கப்பட்டவளங்களும், செயல்திட்டங்களும், கற்பித்தல் முறைகளும் அடுத்த வாரத்தில் செயற்படுத்தப்பட்டன. இவ்வாறு ஒவ்வொரு வாரமும் தயாரிக்கப்பட்ட வளங்கள் அதற்கு அடுத்த வாரத்தில் கற்பிக்கப்பட்டன.

தரவுகளைத் திரட்டியவிதம்

செயலாய்வின் முன்னிலைத் தேர்வு ஐனவரித் திங்கள் இரண்டாவது வாரத்தில் நடத்தப்பட்டது. அந்தத் தேர்வில் திரட்டப்பட்ட தகவல்கள் செயலாய்விற்கான முன்னிலைத் தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டன. வாரம் 3முதல் 5வரை கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பின்னர் 5ஆவது வாரத்தில் ஒரு செயல்முறைத்தேர்வு நடத்தப்பட்டது. பிறகு, வாரம் 6, 7, 8-இல் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. வாரம் 8-இல் மற்றொரு செயல்முறைத்தேர்வு நடத்தப்பட்டது. வாரம் 10-இல் பின்னிலைத் தேர்வு நடத்தப்பட்டது. இந்த நான்கு தேர்விலும் மாணவர்கள் எத்தனை இனியதொடர்களைப் பயன்படுத்தியுள்ளார்கள் என்ற அடிப்படையில் தரவுகள் தொகுக்கப்பட்டன. மாணவர்கள் ஒவ்வொருமுறை கட்டுரை எழுதிய பின்பும் சரிபார்ப்புப் பட்டியலைக் கொண்டு எத்தனை இனியதொடர்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதைக் கண்டறியச் சுய மதிப்பீடும், இணையாளர் மதிப்பீடும் மேற்கொள்ளப்பட்டன.

தரவுகளின் பகுப்பாய்வு

எண்	தேர்வு	மரபுத் தொடர்	இணை மொழி	பழமொழி	உவமைத் தொடர்	திருக்குறள்	இலக்கியமேற்கோள்	திரையிசைப்பாடல்	பிற	தவறானபயன்பாடு
1	முன்னிலைத் தேர்வு	5 (18.5%)	8 (29.5%)	11 (40.7%)	3 (11.11%)	6 (22.22%)	4 (14.8%)	4 (14.8%)	11 (40.7%)	2 (7.4%)
2	பின்னிலைத் தேர்வு	1 (3.8%)	6 (23%)	15 (57.7%)	4 (15.4%)	7 (26.9%)	4 (15.4%)	13 (50%)	16 (61.5%)	2 (7.7%)

(குறிப்பு; தரவுகள் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறிக்கிறது)

முன்னிலைத் தேர்வில் பழமொழிகளும், பிற மேற்கோள்களும் மாணவர்களால் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன. அதற்கு அடுத்த நிலையில் இணைமொழிகள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன. மரபுத்தொடர், இலக்கிய மேற்கோள், திரையிசைப் பாடல் போன்றவை மாணவர்கள் சிலரால் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தன. உவமைத்தொடர்கள் மிகக் குறைவாகவே கையாளப்பட்டிருந்தன. சில தொடர்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன.

இடையீட்டுத்தேர்வு1-இல் திரையிசைப் பாடல்களின் பயன்பாடு அதிகரித்திருந்தது. அதற்கடுத்த நிலையில், பழமொழிகளும்பிற மேற்கோள்களும் கையாளப்பட்டிருந்தன. மரபுத்தொடர்கள், இணைமொழிகள், உவமைத்தொடர்கள், திருக்குறள் போன்றவற்றைக் கையாளும் நிலையும் முன்னிலைத் தேர்வைவிட அதிகரித்திருந்தன. மேலும், தவறாகத் தொடரைப் பயன்படுத்திய நிலை குறைந்திருந்தது. இடையீட்டுத் தேர்வு2-இல்திரையிசைப்பாடல்கள் ஆக அதிகமான மாணவர்களால் பயன்படுத்தப்பட்டிருந்தன. அடுத்த நிலையில் பிற மேற்கோள்களைப் பயன்படுத்தியிருந்தனர். இணைமொழிகள், பழமொழிகள், உவமைத்தொடர்கள் மற்றும் திருக்குறள் போன்ற தொடர்கள் சம அளவில்பெரும்பான்மையான மாணவர்களால் பயன்படுத்தப்பட்டிருந்தன. இத்தேர்வில் மரபுத்தொடர்களின் பயன்பாடு குறைந்திருந்ததைக் கவனிக்க முடிந்தது. செயல்திட்டத்தின் நிறைவாகப் பத்தாவது வாரத்தில் பின்னிலைத் தேர்வு தரப்பட்டது. இதில் பழமொழி, திரையிசைப் பாடல்கள் மற்றும் பிற தொடர்களை மாணவர்கள் சம அளவில் பயன்படுத்தியிருப்பது கண்டறியப்பட்டது.

இச்செயலாய்வின் முடிவில் 66.66% மாணவர்களிடையே இனிய தொடர்களின் பயன்பாடு தொடர்ந்து அதிகரித்து வருவதைக் காண முடிந்தது. அடுத்த 14.81% மாணவர்கள் முன்னிலைத் தேர்விற்கும் பின்னிலைத் தேர்விற்கும் இடையில் அவ்வப்போது பயன்படுத்துபவர்களாக உள்ளனர் என்பது கண்டறியப்பட்டது. இதில் 14.81% மாணவர்கள் கற்றவற்றை உடனுக்குடன் மறந்து விடுவதாகவும் தேர்வு நேரத்தில் பயன்படுத்த முடியாமல் போய்விடுவதாகவும் கூறியிருந்தனர். 3.7% அதாவது ஒரு மாணவர் துவக்கத்தில் நிறையத் தொடர்களைப் பயன்படுத்தியவர் செயலாய்வின்போது படிப்படியாகக் குறைவான எண்ணிக்கையிலேயே இனிய தொடர்களைக் கையாண்டிருப்பது தெரியவந்தது.

செயலாய்வில் கண்டறிந்தவை

செயலாய்விற்குப் பின் மாணவர்களுக்கு இனியதொடரின் முக்கியத்துவம் புரிந்திருக்கிறது. எழுத்திலும் பேச்சிலும் இந்தத் தொடர்கள் விரவி வருகின்றன. மாணவர்கள் ஒருசில தொடர்களை மீண்டும் மீண்டும் பயன்படுத்துவது புலனாகிறது. மனத்தில் ஆழப்பதிந்துள்ளதும், அடிக்கடி பயன்படுவதும், கற்றலின்போது நடந்த சுவையான கருத்துப் பரிமாற்றமும் தமக்கு ஏற்பட்ட அனுபவமும் ஒரு தொடரை அடிக்கடி பயன்படுத்துவதற்கான காரணங்களாக மாணவர்கள் தெரிவித்தனர்.

பின்தங்கிய மாணவர்கள்கூடத் தாங்களும் ஏதேனும் இனிய தொடர்களைப் பயன்படுத்த வேண்டுமென்ற ஆர்வத்தில் தெரிந்த தொடர்களைப் பொருத்திப் பார்க்க முனைந்தனர்.மொழியைப் பிழையில்லாமல் எழுதக்கூடிய மாணவர்கள் மட்டுமே இனியதொடர்களைப் பயன்படுத்தி எழுத முடியும் என்ற தவறான மனப்போக்கு மாணவர்கள் சிலரிடம்இருப்பது அவர்களின் சிந்தனை மீட்சியின் போது வெளிப்பட்டது.

இனியதொடர்களைச் செய்தித்தாள்களில் வெளிவரும் கட்டுரைகள், வாசகர்களின் கருத்துகள், அனுபவக் கட்டுரைகள் போன்றவற்றின் மூலம் அறிந்துகொள்ளும்போது அன்றாட நிகழ்வுகளை இனிய தொடர்களைப் பயன்படுத்திக் கூறுகின்றனர். இலக்கிய மேற்கோள்களை விடத் திரைப்பட வசனங்களும், பாடல் வரிகளும் மாணவர்களின் மனதில் எளிதில் பதிகின்றன. வகுப்பைத் துவங்குவதற்கு முன் ஓர் இனியதொடரை வகுப்பில் கூறி அதன் பொருள் விளக்கத்தைக் கூறுவதை வழக்கமாகப் பின்பற்றுகின்றபோதும், திருக்குறள் போன்றவற்றை ஒரு வாரத்திற்கு வகுப்பு வெண்பலகையில் எழுதிவைத்து மாணவர்களை வகுப்பிற்கு வரும்போதெல்லாம் படிக்கச் செய்கின்றபோதும் மனத்தில் பதித்துக் கொள்கின்றனர்.

ஒவ்வொரு முறை கட்டுரை எழுதும்போதும் இனியதொடர்களின் பட்டியலை வைத்துக்கொண்டு எழுதச் சொல்லும்போது இனியதொடர்களின் பயன்பாடு அதிகரிக்கிறது. சரிபார்ப்புப் பட்டியலை வைத்துக்கொண்டு சுயமதிப்பீடு செய்யும்போதும் இணையாளர் மதிப்பீடு செய்யும்போதும் பிறரால் பயன்படுத்தப்படும்போது நம்மால் ஏன் பயன்படுத்த முடியாமல் போகின்றது என்ற சிந்தனைத் தூண்டல் ஏற்படுகின்றது.

பரிந்துரை

- செயலாய்வுகளில் உயர்நிலை நான்கு மாணவர்களை உட்படுத்துவதற்குப் பதிலாக உயர்நிலை 1 முதல் 3 வரையுள்ள மாணவர்களை ஈடுபடுத்தினால் செயலாய்விற்கான கால கட்டத்தையும் சுழற்சியையும் தேவைக்கேற்ப அமைத்துக்கொள்ள வாய்ப்புண்டு. செயலாய்விற்குப் பின் இனியதொடர்களை அடுத்தடுத்த ஆண்டுகளில் பயன்படுத்துகிறார்களா என்பதைக் கண்காணிப்பதற்கும் தொடர் வலியுறுத்துதலுக்கும் ஏதுவாக இருக்கும்.
- உயர்நிலைக்குப் பிறகு கற்ற இனிய தொடர்களைப் பயன்படுத்துகிறார்களா என்பதில் செயலாய்வு மேற்கொள்வது கடினம். எதிர்காலத்தில் இது பற்றித் தனியே ஒரு செயலாய்வை மேற்கொள்ளலாம்.

முடிவுரை

மாணவர்கள் ஆசிரியரின் தொடர் ஊக்குவிப்பாலும் வலியுறுத்துதலாலும் இனிய தொடர்களைத் தன்னம்பிக்கையுடன் தங்களின் எழுத்திலும் பேச்சிலும் பயன்படுத்த முயற்சி மேற்கொள்கின்றனர். சில நேரங்களில் சரியான இனியதொடர் நினைவில் வராதபோது அத்தொடரின் பொருளைப் பயன்படுத்துகின்றனர். கற்பித்தலின்போது பயன்படுத்திய உதாரணத்தையும் விளக்கங்களையும் கொண்டு தொடரை நினைவுகூர முயல்வது பெரிதும் பாராட்டுக்குரியதாகும். கட்டுரைக்காக பயின்ற இனிய தொடர்களை மின்னஞ்சலுக்கும் உரையாடலுக்கும் பயன்படுத்த முற்பட்டிருப்பது செயலாய்வின் முடிவில் உற்சாகத்தைத் தந்தது.

துணைநூல்கள்

சிவகுமரன், ஆ, இரா.பண்பாட்டின் வழி மொழிக் கல்வி.
http://sivakumaranara.blogspot.sg/2008/04/blog-post_28.html (Accessed on August 2012)

சிறந்த கட்டுரையை எழுதுவது எப்படி? http://ta.wikipedia.org (August, 2012)

ஜெயமோகன். கட்டுரை வடிவம் பற்றி ஒரு கடிதம்.http://www.jeyamohan.in/?p=170 (August, 2012)

சேதுராமன், சி.பண்பாட்டு நோக்கில்
பழமொழிகள்.http://www.muthukamalam.com/essay/serial/p5.html(August, 2012)

தியாகராஜன், மா.மரபுத்தொடர்கள் பாடத்தின்வழி மாணவர்களின் சிந்தனையைத் தூண்டிப்
படைப்பாற்றல் திறனை வளர்த்தல்.www.tamilthottam.in/t7854-b (August, 2012)

தியாகராஜன், மா.கற்றல் எ
கற்பித்தல்.http://www.muthukamalam.com/muthukamalam_katturai_special4.2.htm (August 2012)

ஈடுபாடுமிக்க கற்றலுக்கு - ஆர்வமூட்டும் கற்பித்தல் முறைகள்
(Pedagogies for Engaged Learning)

பிரேமா ராமலிங்கம் & ராமசாமி கண்ணப்பன், சங்காட் சாங்கி உயர்நிலைப்பள்ளி, சிங்கப்பூர்

முன்னுரை

"கற்றல்" என்பது வாழ்நாளில் ஒவ்வொரு நொடிப்பொழுதும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலைத்த தன்மையுடைய ஒரு செயலாகும். இது மாணவர்களை வருங்காலச் சிற்பிகளாக மாற்றக்கூடிய வல்லமை படைத்தது. ஆசிரியர் என்பவர் பாடம் கற்பிப்பவர் என்ற ஒருநிலையில் மட்டும் இருப்பவர் அல்லர். அவர் பன்முக நோக்கு உடையவராக, சிறந்த வழிகாட்டியாக, ஊக்கமூட்டுபவராக, பாடப் பொருளில் அதிகபட்ச மேம்பாடு உடையவராக இருப்பவர் ஆவார்.

இந்நிலையில் தமிழ் மாணவர்களைத் தாய்மொழியான தமிழ்ப்பக்கம் ஈர்த்து, மொழியுடன் விழுமியங்களை இணைத்து அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்க்க வேண்டிய கடப்பாடு தமிழாசிரியர்களுக்கு நிறையவே உள்ளது. இச்சுழலில், தமிழாசிரியர்கள் கற்பித்தல் தொடர்பான தங்களது அணுகுமுறைகளையும் கற்பித்தல் உத்திகளையும் அவ்வப்போது மறுபரிசீலனை செய்தும், மாற்றியமைத்தும் மாணவர்களின் ஆர்வத்தை ஈர்க்கும் வண்ணம் கற்பிக்க முயற்சிகள் மேற்கொண்டு வரவேண்டும். ஆசிரியர்கள் நெகிழ்வுத்தன்மையையும் புத்தாக்கத்தையும் கொண்ட ஆர்வமூட்டும் கற்பித்தல் அணுகுமுறைகளைப் பயன்படுத்திக் கற்பிப்பது அவசியமாகும்.

சிங்கப்பூர் தமிழ்மொழிப்பாடக் கலைத்திட்டம்

"அச்சமோ தயக்கமோ இன்றித் தமிழ்மொழியைக் கற்பதற்கு இந்த மாணவர்களுக்கு உதவும் வகையில் வெவ்வேறு வகையான கற்பித்தல் முறைகளை ஆசிரியர்கள் கையாள வேண்டும். குறிப்பாகத் தொடக்க நிலையில் முதல் சில ஆண்டுகளுக்கு இது மிகவும் அவசியம்," (தமிழ்மொழிப் பாடத்திட்ட கற்பித்தல் முறை மறு ஆய்வுக்குழு அறிக்கை நவம்பர் 2005) என்று கூறப்படுவது ஏற்புடைய ஒன்று. அதற்கு ஏற்றாற்போல மாணவர்களுக்குத் தமிழ் கற்றல் ஒரு சுகமான அனுபவமாக அமைதல் இன்றியமையானது. மாணவர்கள் தமிழ்மொழியை விருப்பத்துடன் கற்கவும், கற்றவற்றைச் சிறப்பாக வெளிப்படுத்தும்வகையிலும்கற்பிக்க வேண்டியது ஆசிரியரின் கடமையாகும். இதன் தொடர்பாகவே, சிங்கப்பூர் தமிழ்மொழிப்பாடக் கலைத்திட்டமும் அமைந்திருக்கிறது.

மாணவர்கள் தாய்மொழியைக் கற்று அதைத் தம் வாழ்க்கையில் பயன்படுத்த வேண்டும்அத்துடன்இயல்பான வாழ்க்கை சூழல்களில் தன்னம்பிக்கையுடனும் பயனுள்ள வகையிலும் கருத்துப்பரிமாற்றம் செய்யும் திறன்மிக்கவர்களாக அவர்கள்உருவாகக்கப்படவேண்டும் என்பதும் இந்தக் கலைத்திட்டத்தின் நோக்கமாகும். இதற்குத் தமிழாசிரியர்கள் பல்வேறு பயன்முனைப்புமிக்க கற்பித்தல் உத்திகளையும் அணுகுமுறைகளையும் பயன்படுத்திக் கற்றலை நிகழ்த்துவது சிறப்பாகும்.

ஈடுபாடுமிக்க கற்றல்

இந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஈடுபாடுமிக்க கற்றல் என்பது மாணவர்களை மையமாகக் கொண்டு பாடங்களை நடத்துவது ஆகும். ஆகவே, மாணவர்களை மையமாகக் கொண்ட கற்றல், அவர்களைத் தங்களின் சொந்தப் படைப்பாற்றலை வெளிப்படுத்தவும் துணைபுரிகிறது. இது மாணவர்களின் மொழியாற்றலையும் அறிவாற்றலையும் வளர்ப்பதுடன் மாணவர்களின் கற்றல் அனுபவங்களை விரிவடையச் செய்கிறது. இந்த ஈடுபாடுமிக்க கற்றல் சுயமாகக் கற்கத் தூண்டுவதோடு கற்றல் விளைவுகளை அடைய துணைபுரிகிறது. கற்பித்தல் முறைகளின் பயன்பாடு, கற்றல் அனுபவங்கள், கற்றலுக்கு ஏதுவான சூழல், கற்றலுக்கான மதிப்பீடு, கற்றலுக்கான பாடப்பொருள், கற்றல் பாணிகள், மாணவரின் தயார்நிலை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு கற்பித்தல் அணுகுமுறைகளைத் திட்டமிடுதல் ஈடுபாடுமிக்க கற்றலுக்கு வழிவகுக்கும்.

மாணவர்களை மையமாகக்கொண்ட கற்றல் நிகழும்போது மாணவர்கள் தனித்துச் செயற்பட அவர்களுக்குச் சுதந்திரம் வழங்கப்படவேண்டும். மாணவர்கள் பெறும் கற்றல் அனுபவங்கள் அவர்களுடைய சிந்தனையை வளர்க்கவும், மேம்படுத்தவும் உதவுகின்றன.

ஆர்வமூட்டும் கற்பித்தல் முறைகள்

வகுப்பறையில் மாணவர்கள் தமிழ்மொழியின் பால் நிறைந்த ஈடுபாடு கொள்வதற்கும் ஏற்படுத்துவதற்கும், மொழியை விரும்பிக் கற்பதற்கும் மொழிப் பாடங்களின் போது ஆர்வமூட்டும் கற்பித்தல் முறைகள் கையாளப்பட வேண்டும். இவ்வாறு வகுப்பறையில் அறிமுகப்படுத்தப்பட்ட சில ஆர்வமூட்டும் கற்பித்தல் முறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

1. கேள்விகள் கேட்பதன் மூலம் கற்றல் (Learning through Questioning)
2. ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலம் கற்றல் (Learning through Group Interaction)
3. நாடகத்தின் மூலம் கற்றல் (Learning through Drama)
4. வெளியுலக அனுபவத்தின் மூலம் கற்றல் (Learning through Experiencing)
5. சுய பிரதிபலிப்பின் மூலம் கற்றல் (Learning through Self - Reflection)

இந்தக் கற்பித்தல் முறைகள் மாணவர்களை மையமாகக் கொண்டு அமைவதோடு மாணவர்களின் அடிப்படை மொழித் திறன்களை வளர்க்கவும் துணைபுரிகின்றன.

1. கேள்விகள் கேட்பதன் மூலம் கற்றல் (Learning through Questioning)

பாடங்களைக் கற்றுள்ளனரா என்பதை அறிந்து கொள்வதற்குக் கேள்விகள் கேட்கும் உத்திகள் பரவலாக உதவுகின்றன. மாணவர்கள் பாடத்தின் போது மேலோட்டமாகப்

புரிந்துகொண்டு கொடுக்கும் சரியான பதில்களைத் துருவிக் கேட்கும் போதுதான் அவர்களின் தவறான புரிந்துணர்வைத் தெளிவுபடுத்தமுடியும். ஆகவே, கேள்வி கேட்கும் உத்தி கற்பித்தலுக்கு மட்டுமின்றி மாணவரின் கற்றலை மதிப்பிடும் கருவியாகவும் விளங்குகிறது. மாணவர்களின் கவனத்தைத் தக்கவைக்கவும் சிந்தனையை மேலும் தூண்டவும் கேள்வி கேட்டல் உதவுகிறது. "சாக்ரடீஸின் கேள்வி கேட்டல் முறையைப் (SocraticQuestioning) பயன்படுத்தி மாணவர்களிடம் கேள்விகள் கேட்பதன் மூலம் அவர்களைப் பாட நடவடிக்கைகளில் உற்சாகத்துடன் பங்கேற்கவைக்கலாம். கி.மு ஐந்தாம் நூற்றாண்டு கிரேக்க நாட்டில் வாழ்ந்தவர், உலகம் போற்றும் தத்துவ ஞானி சார்க்ரடீஸ் ஆவார். அவரின்கேள்வி கேட்கும் முறைகளை, ஆறுவகையாக வகைப்படுத்திச் சார்க்ரடீஸ் கேள்விகேட்கும் கோட்பாடாக (Socrates Questioning Principle) சிந்தனைத் திறன் ஆசிரியர் ரிச்சட் பால்(Richard Paul) கொடுத்துள்ளார்.

சாக்ரட்டீஸ் கேள்விகேட்கும் அணுகுமுறை மாணவர்களிடையே சுயமாகச் சிந்தித்துக் கேள்வி கேட்பதைஊக்குவிப்பதுடன் கேள்விகளுக்கு உடனுக்குடன் பதிலளிக்கும் திறனையும் வளர்க்கிறது. பல்வேறு கருத்துகளைக் கலந்துரையாடும் ஆற்றலைப் பெறுக்குவதோடு ஒரு பிரச்சினைக்குச் சுயமாக முடிவெடுக்கும் திறனையும் வளர்க்கிறது.

சார்க்ரடீஸ் கேள்வி வகைகள்:

கேள்வி வகை 1: **கருத்தைத் தெளிவுப்படுத்தும் கேள்விகள்** (குறிப்பாக எதைப் பற்றிப் கேட்கப்படுகிறதோ; மேலும் அதைப் பற்றி கூறுதல்)எ.டு: ஏன் இவ்வாறு சொல்கிறாய்? இதை விவரித்துக் கூற முடியுமா? உன் கருத்து எவ்வாறு பொருந்தும்?	**கேள்வி வகை 4:** **தொலைநோக்குப் பார்வையில் பார்க்கத் தூண்டும் கேள்விகள்** (வேறுபட்ட விடைகளுக்குக் காரணங்கள் கண்டறிந்து வேறு கோணங்களில் பார்த்தல்)எ.டு: இதை வேறு எவ்வழியில் பார்க்கலாம்? இவற்றில் உள்ள வேறுபாடுகள் யாவை? இவற்றின் பலத்தையும் பலவீனத்தையும் விளக்கு?
கேள்வி வகை 2: **ஊகங்களைத் துருவும் கேள்விகள்** (ஊகித்திருந்த அனுமானங்கள் களையும் வண்ணம் முடிவுக்கு வருதல்)எ.டு: நீ ஏன் இவ்வாறு ஊகிக்கிறாய்? இதிலிருந்து வேறு எவற்றை ஊகிக்க முடியும்? உன் ஊகத்தை மேலும் விளக்கமுடியுமா?	**கேள்வி வகை 5:** **விளைவுகளை வெளிக்கொணரக்கூடிய கேள்விகள்** (ஏற்பட்ட விவாதங்கள் நியாயமானவை என்பதை முன்கூட்டியே தொடர்புப்படுத்திக் கணிக்கலாம்)எ.டு: அவ்வாறு செய்தால் ஏற்படும் விளைவுகள் யாவை? நீ கூற விரும்பும் பொது கருத்து யாது? எது சிறந்த முடிவு? ஏன்?

கேள்வி வகை 3: **காரணங்களையும் ஆதாரங்களையும் துருவும் கேள்விகள்** (விவாதத்திற்காகக் கொடுக்கப்பட்ட காரணங்களை மேலும் துருவி ஆராய்தல்)எ.டு: இது இவ்வாறு நடப்பதற்கான காரணம் என்ன? இதற்குச் சான்றுகள் கூறுக? நீ ஏன் இக்காரணங்களைத் தேர்ந்தெடுத்தாய்?	**கேள்வி வகை 6:** **கருத்துகளைக் காரண காரியங்களுடன் தெளிவுபடுத்தும் கேள்விகள்** (நுணுக்கமாகச் சிந்திப்பதற்காக மேலும் துருவிக் கேள்வி கேட்டல்)எ.டு: இக்கேள்வி கேட்கக் காரணம் என்ன? இக்கோள்வி நமக்கு எவ்வாறு பயனளிக்கிறது? இக்கேள்வியின் மூலம் எதை உணர்த்த விரும்புகிறாய்?

கேள்விகள் கேட்பதன் மூலம் கற்றலுக்குரிய மாதிரி நடவடிக்கை

சார்க்ரடீஸ் கேள்வி கேட்டல் முறையைப் பயன்படுத்திக்கற்பிக்கும் ஆசிரியர்கள், மாணவர்களுக்கு ஏற்புடைய கேள்விகளைத் தாயாரிப்பது அவசியமாகும். 'ஆமாம், இல்லை' போன்ற கேள்விகளைத் தவிர்த்து, அனுபவத்திற்கும் தரத்திற்கும் உட்பட்ட கேள்விகள் கேட்பது சிறப்பு. மேலும், மாணவர்களின் ஆர்வத்தை ஊக்குவிக்க நுணுக்கமாகச் சிந்திக்கத் தூண்டும் கேள்விகளைத் தயாரிப்பது நன்று.

நடவடிக்கை1

மாணவர்களைக் குழுக்களாகப் பிரிக்கவும்.குழுவில் உள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஓர் எண்ணை வழங்குதல். (எடு:1,2,3). ஒவ்வொரு மாணவர்களிடம் ஒரு வாசிப்புப் பனுவலைக் கொடுத்துப் படிக்கச் செய்யவும். படித்தப் பிறகு, ஒவ்வொரு குழுவையும் பகுதியை ஒட்டி மூன்று கேள்விகள் தயாரிக்கச் சொல்லவும். ஆசிரியர் ஏதாவது ஓர் எண்ணைக் அழைப்பார். ஒவ்வொரு குழுவிலிருந்தும், ஆசிரியர் அழைத்த எண் கொண்ட மாணவர், அடுத்த குழுவிடம் தம் குழு தயாரித்த ஒரு கேள்வியைக் கேட்க வேண்டும். கேள்வி கேட்கப்பட்ட குழுவிலிருந்து அதே எண் கொண்ட மாணவர்பதில் சொல்ல வேண்டும். அம்மாணவர், தம் குழுவினரோடு விடையைச் சரி பார்த்த பிறகு வகுப்பில் பகிர்ந்துகொள்வார். இம்முறை, பதில் கூறிய மாணவர், வேறொரு குழுவினரிடம் கேள்வியைக் கேட்க வேண்டும். ஒரு சுற்று முடிந்த பிறகு, ஆசிரியர் வேறொரு எண்ணை அழைப்பார். இவ்வாறு நடவடிக்கை தொடரும்.

சார்க்ரடீஸ் கேள்விகேட்டல் முறையை கலந்துரையாடல், விவாதம்செய்தல், கருத்தறிதல், கற்பித்தல் போன்ற வகுப்பறை நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தலாம்.மாணவர்கள் கேள்வியைக் கேட்பதன் மூலம் காரண காரியங்களைப் பகுப்பாய்ந்து, ஆழமாகச் சிந்திக்கத் தூண்டப்படுகின்றனர். இத்தகைய திறனாய்வுச் சிந்தனை, 21-ஆம் நூற்றாண்டுத் திறன்களை வளர்ப்பதற்கு அவசியமாகின்றது.

2. ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலம் கற்றல் (Learning through Group Interaction)

ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலம் கற்றல்முறை மாணவர்களைக் குழுவாகவோ இணையாகவோ செயல்பட ஊக்குவிக்கிறது. மாணவர்கள் குழுவாகச் செயல்படும்போது அவர்களின் கருத்துப் பரிமாற்றத் திறன்கள் இன்னும் வளர்ச்சி பெறுகின்றன. இருவழிக் கருத்துப் பரிமாற்றம், பேசுவோர் கேட்போர் இருவரிடையே மொழித் தொடர்பினை வலியுறுத்துகிறது. இந்தக் கற்றல் மூலம் மாணவர்கள் குழு உணர்வு, தலைமைத்துவ பண்புகள் போன்றவற்றைக் கற்றுக் கொள்கின்றனர். ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலம் கற்றல் முறையின் வழி, மாணவர்கள் குழுவாகச் செயல்படுவதால் கற்கும் பாடம் தொடர்பான செய்திகள் மற்றும் தகவல்கள் ஆகியவற்றைத் திரட்டிப் பகிர்ந்து கொள்கிறார்கள். இத்தகைய செயற்பாடு, பயன்மிக்க கற்றல் அனுபவங்களாக மாணவர்களுக்கு அமைவதோடு, அந்த அனுபவங்கள் அவர்களின் நினைவிலும் நிலைத்தும் நிற்கின்றன.

ஒரு குழுவில் அதிகமானவர்கள் இருக்கும்போது பலவித கருத்துகள் வெளிப்பட வாய்ப்புண்டு. குழுவின் நோக்கத்திற்கு முக்கியதுவம் கொடுப்பதன் அவசியம் வலியுறுத்தப்படுவதால் கற்றல் கற்பித்தலில் மாணவர்களின் ஈடுபாடே மேலோங்கி நிற்கிறது. மாணவர்கள் தம் சக வகுப்பு மாணவர்களோடு சேர்ந்து கற்கும் போது அவர்களிடையே இணக்கமான உறவு பிறக்கிறது. இதனால் மாணவர்கள் கற்றலின்பால் ஆர்வமும் ஈடுபாடும் காட்ட இம்முறை ஒரு தூண்டுகோளாக விளங்குகிறது.

ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலம் கற்றலுக்குரிய மாதிரி நடவடிக்கை

நடவடிக்கை 1

மாணவர்களைக் குழுக்களாகப் பிரிக்கவும். குழுவினர் ஒவ்வொருவருக்கு ஒரு வண்ணப் பேனாவைக் கொடுக்கவும்.ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு பெரிய வெள்ளைத் தாளைக் கொடுக்கவும்.குழுவிலிருந்து ஓர் உறுப்பினரைத் தனக்குத் தோன்றிய எண்ணத்தைச் சொல்லாகவோ அல்லது சொற்றொடராகவோ அல்லது ஓர் ஓவியமாகவோ தாளின் நடுவில் எழுதச் சொல்லவும்.அதன் பிறகு, குழு உறுப்பினர்கள் எழுதப் பட்டிருக்கும் சொல்லுக்குத் தொடர்பாகத் தம் எண்ணங்களை எழுத வேண்டும்.1-2 நிமிடங்களுக்குப் பிறகு, குழுவினர் வேறொரு குழுவினரின் இடத்திற்குச் செல்ல வேண்டும். அங்குத் தாளில் எழுதப்பட்டிருக்கும் சொல்லுக்குத் தொடர்பாகத் தம் எண்ணங்களை எழுத வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு குழுவுக்கும் சென்ற பிறகு, குழுவினர் தம் இருப்பிடத்திற்குத் திரும்பிச் செல்லவேண்டும். இங்குக் குழுவினர், தம் தாளில் மற்ற குழுவினர்கள் எழுதிய கருத்துக்களைப் படித்துத் தொகுத்து வகுப்பில் பகிர்ந்து கொள்வர்.

இங்குக் கொடுக்கப்பட்ட நடவடிக்கையைத் தவிர, 'எண்களைக் கூறி அழைத்தல்', 'கதைத் துண்டுகள்', 'சுழற்றிவிடு-சிந்தி' போன்ற கூடிக் கற்றல் உத்திகள் கருத்தறிதல் மற்றும் வாசிப்புப் பாடங்கள் கற்பித்தலுக்குப் பயன்படுத்தப் படலாம். 'பிரச்சினையை அனுப்புதல்', 'பனுவல் துண்டுகள்', 'கற்றல் மூலைகள்' போன்ற உத்திகள் கட்டுரை மற்றும் கலந்துரையாடல்

நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப் படலாம். இவ்வாறு குழு நடவடிக்கைகளில் ஈடுபடும் போது, மாணவர்களுக்குப் பாடத்தின்பால் ஆர்வம் ஏற்படுவதோடு அவர்களின் பேசுதல் மற்றம் கேட்டல் திறன்களும் வளர்க்கப் படுகின்றன.

3. நாடகத்தின் மூலம் கற்றல் (Learning through Drama)

கற்பனையின் பெருக்கே கலைகளின் வளர்ச்சி. மாணவர்களின் விளையாட்டு உலகில் பாவனையின் ஆற்றல் எல்லையற்றது. மாணவர்களின் கற்பனை வளத்தை ஆக்கப்பூர்வமான பயன் விளைவுக்கு இட்டுச் செல்வது ஆசிரியரின் கடமையாகும். இதற்கு நாடக உத்தி துணைபுரிகிறது.

21-ஆம் நூற்றாண்டுத் திறன்களான படைப்பாக்கத் திறன், புத்தாக்கத் திறன், திறனாய்வுச் சிந்தனையும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் திறன், ஆக்கப்பூர்வ கருத்துப் பரிமாற்றத் திறன் மற்றும் கூடிச் செயலாற்றும் திறன் ஆகியவை நாடக உத்தியின் மூலம் மாணவர்களிடம் வளர்க்கப்படுகின்றன. ஆகவே, இந்த நாடக உத்தி ஈடுபாடுமிகுந்த வகுப்பறைக் கற்றலுக்கு வழிவகுக்கிறது. வகுப்பறையில் மாணவரின் வகுப்பு நிலைக்கும், பட்டறிவுக்கும் ஏற்ப எளிய கதை நிகழ்ச்சிகளை நடிக்கச் செய்யும்போது, மாணவர்களின் வாய்மொழித் திறன்கள், படைப்பாற்றல் முதலியன மேம்படுகின்றன. தமிழ் மாணவர்களில் ஒரு சிலர் வகுப்பில், கற்றதை வெளிப்படுத்துவதில் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். இவர்கள் தம் கருத்துகளை வகுப்பின்முன் வந்து பகிர்ந்து கொள்வதற்கும் தயக்கம் காட்டுகின்றனர். மாணவர்களின் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் நாடக உத்தி மிகவும் பொருத்தமாக அமைகிறது. இதனால் மாணவரிடம் இயல்பாக இருக்கும் தயக்கம், நடுக்கம், படபடப்பு முதலியன நீங்கி அவர்களிடையே தன்னம்பிக்கை வளரும். ஒப்பனை, திரைச்சீலை மேடை ஆகியன இன்றி வகுப்பறையில் நடிக்கச் செய்வது இக்கற்றல் முறையில் ஒன்று.

நாடக உத்தியானது மாணவர்களின் பல்வகை நுண்ணறிவுத் திறன்களை ஒருங்கே கொண்டதாக அமைந்திருப்பது இதன் சிறப்பாகும். இம்முறையைத் தொடர்ந்து பயன்படுத்திக் கற்றல் நடவடிக்கைகளை நடத்தி வந்தால், மாணவர்கள் கற்றலில் எதிர்நோக்கும் பிரச்சனைகள் நாளடைவில் குறைந்து அவர்களின் கற்றலில் மேம்பாடு காணமுடியும்.

நாடகத்தின் மூலம் கற்றலுக்குரிய மாதிரி நடவடிக்கை

நடவடிக்கை1

மாணவர்களைக் குழுக்களாகப் பிரிக்கவும். குழுவில் உள்ள அனைவரையும் தங்களிடம் கொடுக்கப்பட்டுள்ள தாளில் ஒரு வரிக்குள் ஒரு வசனத்தை எழுதச் செய்தல். ஆசிரியர் மாணவர்களிடமிருந்து எல்லாத் தாள்களையும் பெற்றுக்கொள்ளவும். பிறகு, எல்லாத் தாள்களையும் மடித்து ஒரு பெட்டியில் போட்டுவிடவும் இதன் பின், ஒவ்வொரு குழுவினரையும் அழைத்து, பெட்டியிலிருந்து மூன்று வசனங்களைப் பார்க்காமல் தேர்ந்தெடுக்கச் செய்தல். குழுவினர் தாம் தேர்ந்தெடுத்த மூன்று வசனங்களை ஒன்றிணைத்து நடித்துக் காட்டவேண்டும். தயாரிப்பதற்குக் குழுக்களுக்கு நேரம் கொடுக்கப்படும். இவ்வாறு எல்லாக் குழுக்களும் பங்கெடுக்க வேண்டும். ஒரு

குழு நடித்துக் காட்டும்போது மற்ற குழுவினர், நடித்துக்காட்டும் குழுவினருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வசனங்களை ஊகித்துக் கூறவேண்டும். அவ்வசனத்தை எழுதிய மாணவர் வேறு குழுவில் உறுப்பினராக இருந்தால், அந்த மாணவர் மட்டும் பதில் கூற வேண்டியதில்லை.

இங்குக் கொடுக்கப்பட்ட நடவடிக்கையைத் தவிர, வகுப்பறையில் 'முதன்மை இருக்கை '(Hot Seating), 'மனக் குரல்' (Voices in the Head), 'என்ன முடிவு'(HeadorTail) போன்ற நாடக உத்திகளும் அறிமுகம் செய்யப்படலாம்.

மாணவர்களைக் குழுவாக மட்டும் இன்றி தனியாக வகுப்பின் முன் நடிகர்களைப் போல குரலைமாற்றிப் பேசச் வைக்கலாம் மற்றும் பாவனை நடிப்பு(Role-Play) மூலமும் நடிக்கச் செய்யலாம். இதற்கு மாணவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட தகவல்களைக் கொண்டு புதிதாக ஒன்றைத் திட்ட மிட்டு உருவாக்கிப் படைக்கும்போது மாணவர்களிடம் உயர்நிலைச் சிந்தனைத் திறன்களான பகுப்பாய்தல், உருவாக்குதல் போன்ற திறன்கள் வளர்கின்றன. நாடகத்தைத் தீர்மானித்தல், பேச்சுகள் தாயாரித்தல், ஒத்திகை வைத்தல் முதலான செயல்களால்தான் இம்முறையில் முழுப்பயனையும் எய்த முடியும். இறுதியாக, இந்தக் கற்றல் முறையின் மூலம்,மாணவர்கள் தம் எண்ணங்களையும் உணர்வுகளையும் தன்னம்பிக்கையுடன் வெளிப்படுத்த முடிகிறது.

4. வெளியுலக அனுபவத்தின் மூலம் கற்றல் (Learning through Experiencing)

மாணவர்களின் கற்றல் என்பது ஆர்வத்தையும் விருப்பத்தையும் சார்ந்துள்ளது. எனவே, கற்பித்தலின் போது இவற்றை நிலைக்கச் செய்தல் அவசியமாகும். இதற்கு வெளியுலக அனுபவத்தின் மூலம் கற்றல் முறை துணைபுரிகிறது. வெளியுலக அனுபவத்தின் மூலம் கற்றல்நிகழும்போது, மாணவர்கள் வெளியுலகத்தோடு இணைக்கப்படுகின்றனர். இங்கு மாணவர்களின் கற்றல் அனுபவங்கள் விரிவடையவும் செய்கின்றன.இந்தக் கற்றல் முறையில் மாணவர்கள் நேரடியாகப் பெறும் பல்வேறு அனுபவங்களின் அடிப்படையில் சில வளர்ச்சி நிலைகளை அடையமுடிகிறது.

உளவியலார் ஜீன் பியாஜே (Jean Piaget) ஒரு மாணவனின் கற்றல் திறன் வளர்வதற்கு அவர் கற்கும் சூழல் மிக முக்கியப் பங்கு வகிக்கிறது என்கிறார். இத்தகைய சூழலை ஏற்படுத்துவதற்கு ஏற்றவாறு இந்தக் கற்பித்தல் முறை அமையப்பெறுகிறது. இங்குக் கற்பவர் மனதளவில் எண்ணியவற்றை நடைமுறையில் செய்து பார்க்கும் பொழுது, அவரால் ஆக்கப்பூர்வமாகச் செயல்பட முடிகிறது. உதாரணத்திற்கு, வகுப்பறையில் ஒரு பொருளை விற்பனை செய்யவேண்டும் என்பதை மாணவர்களுக்குள் ஒத்திகை செய்து பேசிப்பார்க்கக் கற்றுத் தர வேண்டும். இதன் மூலம் நடைமுறையில் பலதரப்பட்ட மனிதர்களுடன் எப்படிப் பழகுவது, சவால்களை எப்படிச் சமாளிப்பது என்பது குறித்துக் கலந்துரையாடலை அமைக்கும் போது அது மாணவர்களுக்குப் பயனுள்ளதாக அமையும்.

வெளியுலக அனுபவத்தின் மூலம் கற்றலுக்குரிய மாதிரி நடவடிக்கை

நடவடிக்கை1

மாணவர்களைக் குழுக்களாகப் பிரிக்கவும். இந்தப் பாடத்தின் முன் நடவடிக்கையாக, ஒவ்வொரு குழுவுக்கும் ஆசிரியர் ஐந்து வெள்ளி கொடுக்கவும். கொடுக்கப்பட்டுள்ள ஐந்து வெள்ளியை வைத்துக்கொண்டு, ஒவ்வொரு குழுவும் பள்ளி அருகே உள்ள பேரங்காடிக்குச் சென்று ஆரோக்கிய உணவு தயாரிப்பதற்கான உணவுப்பொருள்களை வாங்குவர். அடுத்தநாள் பாடவேளையின்போது, குழுவினர்கள் தாம் வாங்கிய பொருள்களைப் பயன்படுத்தி ஓர் ஆரோக்கிய உணவைத் தயாரிப்பர். பிறகு, தயாரித்த உணவைப் பற்றிய தகவல்களை வகுப்பில் பகிர்ந்துக்கொள்ளவர்.

இங்குக் கொடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கை மாணவர்களை வெளியுலகத்தோடு தொடர்புப் படுத்துகின்றன. வகுப்பறைக்கு அப்பால் அவர்கள் எவற்றைக் கற்றுக் கொள்கின்றனர், பெற்றகற்றல் அனுபவங்கள், எதிர்நோக்கும் சிரமங்கள், படிப்பினைகள் போன்றவற்றைப் பற்றி மாணவர்களைப் பகிர்ந்து கொள்ளச் சொல்லலாம். இந்நடவடிக்கையின் மூலம் அவர்கள் வெளியுலகத்தில் கண்டவற்றைத் தம் கற்றலோடு இணைக்கவும் கற்றுக் கொள்கின்றனர். பேரங்காடியில் பொருட்களை வாங்க வாய்ப்புக் கொடுத்தபோது, மாணவர்களால் என்னென்ன பொருள்கள் தமக்குத் தேவை என்பதைச்சுயமாகச் சிந்தித்துப் பகுத்தாராய்ந்து முடிவெடுக்க முடிந்தது.

எனவே, வெளியுலக அனுபவத்தின் மூலம் கற்றல் முறை மாணவர்களைச் சமூகத்தோடு தொடர்பு படுத்துகிறது. அத்துடன் இக்கற்றல் முறை மாணவர்களிடம் சமூகப் பண்புகள் மற்றும் அறநெறிப் பண்புகளை வளர்க்க வழிவகுக்கிறது. இக்கற்றல், வாழ்க்கை அனுபவங்களைக் கற்றுத் தருவதோடு அவர்களை வெளியுலகத்தின் புதிய மாற்றங்களுக்கும் தேவைகளுக்கும் தாயார் செய்கிறது என்பது திண்ணம்.

5. சுய பிரதிபலிப்பின் மூலம் கற்றல் (Learning through Self - Reflection)

இன்று கற்றலை மதிப்பிடுவதைவிடக் (Assessment of Learning), கற்றலுக்கான மதிப்பிடுதல் (Assessment for Learning) மாணவர்களின் கற்றலைப் பற்றிய உடனடி தகவலை அளிக்கிறது. இக்கருத்தினைக் கவனத்தில் கொண்டு சுய பிரதிபலிப்பின் மூலம் கற்றல் வகுப்பறையில் அறிமுகம் செய்யப்பட்டது. இம்முறை ஒவ்வொரு மாணவரின் வளர்ச்சிக்கு அவரே பொறுப்பேற்க வழிவகுக்கிறது. இதன் மூலம் மாணவர்கள் தம் வளர்ச்சி நிலையைக் கண்டறிந்து அவற்றை மேம்படுத்திச்சுயக்கற்றலில் ஈடுபடுகின்றனர். கற்றலில் எதிர்நோக்கிய இடர்பாடுகளைக் கண்டறிந்து அவற்றை அவ்வப்போது மேம்படுத்தி கற்றலில் முன்னோக்கிச் செல்லவும் இம்முறை மாணவர்களுக்கு உதவுகிறது.

"To improve student learning by providing a structure for students to reflect systematically over time on the learning process and to develop the aptitudes, skillsandhabits that come from critical reflection." *- JohnZubizaretta; 2004*

சுய பிரதிபலிப்பின் மூலம் கற்றல் மாதிரி நடவடிக்கை

வகுப்பறையில் மாணவர்களுக்கு 'Gibbs' சுய பிரதிபலிப்பின் கோட்பாடு மற்றும் 'Peter Pappas' சுய பிரதிபலிப்பின் கோட்பாடு அடிப்படையில் அமைந்த மதிப்பீடுகளை அறிமுகம் செய்தல். மாணவர்கள் தாம் வகுப்பறையில் கற்றலில் அடைய வேண்டிய இலக்கு யாது?, தாம் கற்றலில் எந்நிலையில் இருக்கிறார்கள்?, கற்றலின்போது ஏற்பட்ட இடைவெளியை எவ்வாறு தவிர்க்கலாம்? போன்றவற்றைப் பிரதிபலிப்புச் செய்யும் நோக்கத்தில் 'Gibbs' மற்றும் 'Peter Pappas' கோட்பாடுகள் அடிப்படையில் அமைந்த சுய பிரதிபலிப்புப் படிவங்களை மாணவர்களுக்கு வழங்கி அவர்களை ஊக்குவிக்கவும். ஒவ்வொருபாட வேளைக்குப் பிறகு மாணவர்கள் இந்தக் கோட்பாடுகளைப் பயன்படுத்தித் தம் சொந்த கற்றலை மீள் நோக்குதல் செய்யும்போது, அவர்களுக்குத் தம் கற்றலுக்குரிய நோக்கங்கள் நிறைவேறியுள்ளதா என்பதைக் கண்டறிய வாய்ப்பு ஏற்படுகிறது. மாணவர்களுக்குத் தம் கற்றலை மீள்நோக்குவதற்கு அவர்களுக்கு விளக்கக் குறிப்புகளும் (Rubrics) கொடுக்கவும். இவ்வாறு மாணவர்கள் தம்மை மதிப்பிடும்போது, அவர்களால் தாம் செய்த முயற்சிகளையும் பெற்ற பலன்களையும் சுயமாக ஒப்பு நோக்க இயல்கிறது. இந்த மதிப்பீட்டுக் கோட்பாடுகள், மாணவர்களுக்குக் கற்றலில் முன்னோக்கிச் செல்லவும் கற்றலை மேம்படுத்தவும் தம் தேவைகளை அறிந்துகொள்ளவும் உதவுகின்றன.

வகுப்பறையில் ஒவ்வொரு பாடவேளையின் போதும் அல்லது அவ்வப்போது சுய பிரதிபலிப்பின் மூலம் கற்றல் நிகழ்த்தப்படலாம். ஒவ்வொரு பாடத்தின் போது எல்லாவற்றையும் மீள்நோக்குதல் செய்யாவிட்டாலும், தரநிலைக்கான கூறுகளுள் ஒன்றில் மட்டும் கவனம் செலுத்தவும். வகுப்பறையில் கற்பித்தலுக்கு முன்பும், கற்பித்தலின் போதும், கற்பித்தலுக்குப் பின்பும் சுய பிரதிபலிப்பு நிகழும்போது, மாணவர்கள் தம் கற்றல் குறிக்கோள்களை வகுக்கவும் கண்காணிக்கவும் கற்றுக்கொள்கின்றனர். இங்குச் சுய பிரதிபலிப்பின் மூலம் கற்றல், மாணவரின் சுயமதிப்பீட்டையும் சகமாணவர் மதிப்பீட்டையும் உள்ளடக்கும்.

Gibbs Model of Reflection



Peter Pappas' Taxonomy of Reflection



We do not learn from experience… we learn from reflecting on experience."
- David Kolb, 2001

என்று டேவிட் குலோப் கூறுவதுபோல ஆசிரியர்களும் மாணவர்களும் கற்றல் சான்றுகளைத் திரட்டுவதோடு தொடர் மேம்பாட்டுக்கும் சுய பிரதிபலிப்பு பயன்படுகிறது. இறுதியாகக் கற்றல்

விளைவுகள் எந்த அளவுக்கு நிறைவேறியுள்ளன என்பதை மதிப்பீட்டுத் தரவுகளைக்கொண்டு கற்பித்தல் முறைகளை ஆசிரியர்கள் மாற்றியமைத்துக் கொள்ளவும் ஆசிரியர்களுக்கு இந்தச் சுயபிரதிபலிப்பின் மூலம் கற்றல்முறை வழிவகுக்கிறது.

முடிவுரை

இவ்வாய்வுக் கட்டுரையில் விளக்கப்பட்ட ஈடுபாடுமிக்க கற்றலுக்கு - ஆர்வமூட்டும் கற்பித்தல் முறைகள் யாவும் தமிழ்மொழிப் பாடத்தின் போது வகுப்பறையில் கற்றல் நடவடிக்கைகளின் மூலம் அறிமுகம் செய்யப்பட்டன. இந்தக் கற்றல் நடவடிக்கைகள் மாணவர்களை முதன்மையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட முறைகளாகும். இக்கட்டுரையில் அறிமுகபடுத்தப்பட்ட அணுகுமுறைகள் யாவும், ஆழமானவை, பரந்துபட்டவை, விரிவானவை, சிக்கல்களை எதிர்கொள்ளத் தகுந்தவை.

கற்றல் அணுகுமுறையானது கற்கும் சூழல், பாடப்பொருள், கற்பித்தல் உத்திகள், மாணவரின் கற்றல் முறைகள் போன்றவற்றைப் பொறுத்துள்ளது. இதற்கு ஆசிரியர்கள் முதலில் தாம் கற்பிக்கும் பாடத்தின் மேல் ஆர்வமுடையவர்களாக இருப்பதோடு வாழ்வியலோடு அப்பாடங்களுக்குள்ள தொடர்பினை மாணவர்களுக்கு எடுத்துரைக்கவும் வேண்டும்.

> *To be a great teacher, 'you must love your subject, love your students and be utterly determined thatthey shall learn'* *-Williams, 2002*

என்று வில்லியம்ஸ் கூறுவது போல கற்பித்தல் 'விழலுக்கு இறைத்த நீராகாமல்' இருப்பது பெரும்பகுதி ஆசிரியரைச் சார்ந்ததே என்பதில் ஐயமில்லை.

இக்காலச் சூழலில் ஆசிரியர்கள் மாணவர்களின் தேவை அறிந்து தம் கற்பித்தலை மேம்படுத்தும் போதே மாணவரின் கற்றல் முழுமையடைகிறது. ஓர் ஆசிரியர் மாணவர்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்பளிப்பவராகவும் ஊக்குவிப்பவராகவும் அவர்களுக்கு உகந்த பலதரப்பட்ட பயிற்சிகளை வகுப்பறையில் அளிப்பவராகவும் இருக்கவேண்டும். இவ்வாறு திகழும் ஆசிரியராலேயே, மாணவரின் படைப்பாக்கத்திற்கும் அறிவு மேம்பாட்டிற்கும் வித்திட்டு ஈடுபாடுமிக்க கற்றலுக்கு வழிவகுக்கமுடியும்.

******

துணைநூல்பட்டியல்

- சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு(2010). தாய் மொழிகள் மறு ஆய்வுக் குழு அறிக்கை.
- தமிழ்மொழிப் பாடத் திட்டம் கற்பித்தல் முறை மறுஆய்வுக் குழு அறிக்கை (2005).
- டாக்டர். ந. சுப்புரெட்டியார் (திருத்தியபதிப்பு2000) - தமிழ் பயிற்றும் முறை
- டாக்டர் கா இராமையா, டாக்டர் சீதாலட்சுமி (தொகுப்பாசிரியர்கள்) - சிங்கப்பூரில் தமிழ் கற்றல் கற்பித்தலை இனிமையும் எளிமையும் மிக்கதாக்குவோம்
- மதிப்பீட்டு வழிகாட்டி (தமிழ்மொழி (உயர்நிலை) 2012,தமிழ்மொழிப் பகுதி, தாய்மொழிகள் துறை,பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு, கல்வி அமைச்சு
- கணபதி,வி.(திருத்தியபதிப்பு 2005). தமிழ்: ஐவகைப்பாடங்களும் கற்பித்தலும். சென்னை,
- பேராசிரியர்எஸ்சந்தானம் (இரண்டாம்பதிப்பு 2006). கல்விக் கோட்பாடுகளும் தத்துவங்களும்.
- Richard Paul, author of Critical Thinking: The taxonomy of Socratic questions, 2008
- Richard Paul(Author), Linda ElderPublication, The Thinker's Guide to The Art of Socratic Questioning [Paperback], 2007
- HYPERLINK "http://www.amazon.com/Richard-Paul/e/B001ILFOQ0/ref=ntt_athr_dp_pel_pop_1"HYPERLINK "http://www.amazon.com/-/e/B001ILFOQ0/ref=ntt_athr_dp_sr_pop_1?_encoding=UTF8&field-author=Richard%20Paul&search-alias=books&sort=relevancerank"HYPERLINK "http://authorcentral.amazon.com/gp/landing/ref=ntt_atc_dp_pel_1"Roger C. Schank, Institute for the Learning Sciences Northwestern University, Technical Report No. 60 (1995), What We Learn When We Learn by Doing
- David and Roger Johnson and Karl Smith, (2006, 8th Edition),An Overview Of Cooperative Learning
- Gardner, R.C &MacIntrye, P.D (1993). A student's contribution to second language learning. Part III: Affective Variable. *Language Teaching*, 26, 1-11.

அகன்ற படிப்பு: மாணவர் பின்புலப் பதிவும் ஆசிரியரின் புத்துணர்ச்சியூட்டும் முன்மாதிரிப் படைப்பும்

காளியம்மாள் (செயிண்ட் மார்கரெட்ஸ் உயர்நிலைப்பள்ளி) &
சகுந்தலா (சோங் பூன் உயர்நிலைப்பள்ளி)

அறிமுகம்

மாணவர்களின் அகன்ற படிப்பின் மேம்பாட்டிற்கு ஆசிரியர்களின் பங்களிப்பும் திட்டமிட்ட செயற்பாடும் விரும்பத்தக்க விளைவுகளைஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. இரண்டாம் மொழிச் சூழலில் தமிழைப் படிக்கும் சிங்கப்பூர் மாணவர்கள் அகன்ற படிப்பில் காட்டிவரும் ஆர்வநிலை சற்றுக் குறைவாகவே உள்ளது. அவர்களுக்கு ஆழ்ந்த படிப்பிலும் அகன்ற படிப்பிலும் புத்துணர்ச்சி அனுபவத்தை ஏற்படுத்தித் தரும் பொறுப்புத் தமிழாசிரியர்களுக்கு உள்ளது.

செயலாய்வின் பின்னணி

மாணவர்கள் தமிழ்ப் புத்தகங்களை எவ்வித வற்புறுத்தலுமின்றி மகிழ்ச்சியுடனும் ஆர்வத்துடனும் படிக்க வேண்டுமென்றால் அதற்கு ஆசிரியர்களின் வழிகாட்டுதலும் தூண்டுதலும் தேவைப்படுகிறது. இதைச் செயலாய்வை மேற்கொண்ட நான்கு பள்ளிகளையும் சேர்ந்த தமிழாசிரியர்களான நாங்கள் உணர்ந்திருந்தோம். எங்கள் பள்ளிகளில் மாணவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பும் இதனையே உறுதிப்படுத்தியது. அகன்ற படிப்புக்கு ஆசிரியரின் புத்துணர்ச்சியூட்டும் நடவடிக்கை உதவும் என மாணவர்களும் நம்பிக்கை தெரிவித்தனர்.

சிங்கப்பூர்க் கல்வி அமைச்சும் தமிழ்மொழி கற்பித்தலில் அகன்ற படிப்புக்கு முக்கியத்துவம் கொடுத்துவருகிறது. புதிய பயிற்றுக்கருவிகளுடன் அகன்ற படிப்புக்கான வளங்களையும் அமைச்சு ஒருங்கிணைத்துக் கொடுத்திருப்பது இதை உறுதிப்படுத்துகிறது. கடந்த 2012-இல், முதன்மை ஆசிரியர்களால் **மகிழ்ச்சியும் பயனும் தரும் படித்தல் அனுபவத்தைப் பெறுவதற்கான வழிமுறைகள்** என்னும் தலைப்பில் உயர்நிலைப்பள்ளி மூத்த தமிழாசிரியர்களுக்கான பயிலரங்கு நடத்தப்பட்டது. இப்பயிலரங்கு அகன்ற படிப்பை ஆர்வமூட்டும் வகையில் கற்பிக்கும் வழிமுறைகள்பற்றி ஆசிரியர்களுக்கு விளக்கியது.இதுவே, ஆசிரியர்களின் புத்துணர்ச்சியூட்டும் முன்மாதிரிப் படைப்பு மாணவர்களைஎந்த அளவுக்கு அகன்ற படிப்பில் ஈடுபடுத்த உதவும் என்பதைக் கண்டறிய இச்செயலாய்வை மேற்கொள்ளத் தூண்டியது.

செயலாய்வு வினாவும் கருதுகோளும்

வினா

நூல் வாசிப்பின் மூலம் ஆசிரியர் தான் பெற்ற புத்துணர்ச்சிமிக்க வாசிப்பு அனுபவத்தை எந்த அளவிற்குத் தம் மாணவர்களிடமும்ஏற்படுத்த முடியும்?

கருதுகோள்

ஆசிரியர் மாணவருக்கு அகன்ற படிப்பின்போது புத்துணர்ச்சியூட்டுவதன் மூலம் அவர்களை ஆர்வத்துடன் படிக்கத் தூண்ட முடியும்.

செயலாய்வின் நோக்கம்

பின்வரும் நோக்கங்களின் அடிப்படையில் இச்செயலாய்வு மேற்கொள்ளப்பட்டது:

1. வாசிப்பில் மாணவர்களின் பின்புலத்தைத் தெரிந்துகொள்ளுதல்
2. மாணவர்களுக்கேற்ற வாசிப்புப் பனுவல்களை அவர்களுக்கு அறிமுகம் செய்தல்
3. ஆசிரியர் இடையீட்டுத் திட்டத்தின் மூலம் மாணவர்களுக்கு அகன்ற படிப்பில் ஆர்வமூட்டுதல்

செயலாய்வுக்கு உட்பட்டோர்

செயலாய்வில் நான்கு உயர்நிலைப்பள்ளிகள் கலந்துகொண்டன. உயர்நிலை இரண்டு *விரைவு, வழக்கம், உயர்தமிழ்* ஆகிய பிரிவுகளில் பயிலும் எண்பது மாணவர்கள் (14வயது) இச்செயலாய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். நான்கு பள்ளிகளில் உயர்நிலை இரண்டில் பயிலும் அனைத்து மாணவர்களும் செயலாய்வில் ஈடுபடுத்தப்பட்டனர். சிங்கப்பூர் மாணவர்களுள் பெரும்பாலோர் ஆங்கிலத்தை இல்ல மொழியாகப் புழங்குகின்றனர். பள்ளிகளில் தமிழ்ப் பாடத்தை வாரத்தில் சுமார் மூன்று மணி நேரம் மட்டுமே பயில்கிறார்கள். ஆகவே, மாணவர்களுக்குத் தமிழ்மொழிப் புழக்கம் மிகக் குறைவு என்று கருதுவதற்கு இடமுண்டு.

இந்நான்கு பள்ளிகளையும்சேர்ந்த மூத்த ஆசிரியர்களான நாங்கள் சராசரியாக இருபத்து இரண்டு ஆண்டுக்காலக் கற்பித்தல் அனுபவத்தைப் பெற்றிருக்கிறோம். முதன்மை ஆசிரியர்களின் வழிகாட்டுதலின் பேரில் 2012-இல் மூன்றாம் தவணை ஜூலை மாதம்முதல் செப்டம்பர் மாதம்வரை இச்செயலாய்வு மேற்கொள்ளப்பட்டது. நான்கு பள்ளி ஆசிரியர்களும் ஒரே மாதிரியான அணுகுமுறையையே பின்பற்றினோம்.

செயலாய்வின் வடிவமைப்பு

குவிநோக்குக் கலந்துரையாடலும் கருத்துக் கணிப்பும்

மாணவர்களின் அகன்ற படிப்பின் பின்னணியை அறிவதை நோக்கமாகக்கொண்டு குவிநோக்குக் கலந்துரையாடலும் கருத்துக் கணிப்பும் முதல் கட்ட நடவடிக்கையாக நடத்தப்பட்டன. கருத்துக் கணிப்பிலிருந்து பெறப்படும் தகவல்கள் சரியானதாகவும் பொருத்தமானதாகவும் இருக்க

வேண்டும் என்பதற்காக மாணவர்களிடம் குவிநோக்குக் கலந்துரையாடல் ஒன்று நடத்தி, அதில் கிடைக்கப்பெற்ற தரவுகளின் அடிப்படையில் கருத்துக் கணிப்புக்கான கேள்விகள் தயாரிக்கப்பட்டன. மாணவர்களின் *வாசிப்புப் பழக்கத்தை* அறிய ஐந்து கேள்விகளும், *வாசிப்புத் திறனை* அறிய இரண்டு கேள்விகளும், வாசிப்பில் அவர்களுடைய *மனப்போக்கை* அறிய ஒரு கேள்வியும் மாணவர்களின் *எதிர்பார்ப்பை* அறிய மூன்று கேள்விகளும் அடங்கிய பத்து கேள்விகள் கொண்ட கருத்துக் கணிப்புப் படிவம் உருவானது.

கருத்துக் கணிப்பின் வழி மாணவர்களுள் 32 விழுக்காட்டினர் கதைப் புத்தகம் படிப்பதில் ஆர்வம் காட்டுவதும் 10 விழுக்காட்டு மாணவர்கள் செய்தித்தாள் படிக்க விரும்புவதும் கண்டறியப்பட்டன. தமிழ் நூல்கள் படிக்கும்போது கருத்தைப் புரிந்துகொள்வதில் 42 விழுக்காட்டினர் சிரமத்தை எதிர்நோக்குவதாகத் தெரிவித்திருந்தனர். மாணவர்களின் மொழித் திறனுக்கேற்பவும் விருப்பத்திற்கேற்பவும் பொருத்தமான பனுவல்களைத் தேர்ந்தெடுக்கவும், மாணவர்களின் அகன்ற படிப்புக்கான ஆர்வநிலையைத் தூண்டும் இடையீட்டு நடைவடிக்கைகளைத் திட்டமிடவும் கருத்துக் கணிப்பு பேருதவி அளித்தது.

முன்னிலைத் தேர்வு

முதலில், மூன்று முன்னிலைத் தேர்வுகள் வழங்கப்பட்டன. இதற்குச் செய்தித்தாள் பனுவல்கள், கதைகள், முன்னைய பாடப்புத்தகங்களில் இடம்பெற்ற பலதரப்பட்ட பனுவல்கள் பயன்படுத்தப்பட்டன. **வழக்கமான முறையில்** பனுவலைப் பற்றிய சிறிய அறிமுக நடவடிக்கையுடன் அகன்ற படிப்புக்கான பனுவலை மாணவர்கள் படித்தனர். அறிமுக நடவடிக்கைக்கு முன்பும் அறிமுக நடவடிக்கைக்குப் பின்பும் மாணவர்களின் உணர்வு நிலையைக் கண்டறிய உதவும் 'பானாஸ்' என்னும் சோதனைக் கருவியை (PANAS:PositiveandNegativeAffectSchedule) மாணவர்கள் பூர்த்தி செய்தனர் (காண்க பின்னிணைப்பு). இதில் உடன்பாட்டு உணர்வு நிலையைக் குறிக்கும் 10 தனிச் சொற்களும் எதிர்மறை உணர்வு நிலையைக் குறிக்கும் 10 தனிச் சொற்களும் இடம்பெற்றிருந்தன. மாணவர்கள் கொடுக்கப்பட்ட 1முதல் (மிகக் குறைவு அல்லது வெளிப்படவில்லை) 5வரையிலான (அதிகளவில் வெளிப்பட்டது) எண்களையும் அவற்றுக்குரிய விளக்கங்களையும் கருத்திற்கொண்டு தங்கள் உணர்வு நிலையை குறிப்பிட வேண்டும் என்பது எதிர்பார்ப்பு. மாணவர்களின் உணர்வு நிலையில் ஏற்பட்ட மாற்றத்தைக் கண்டறிவதே இதன் நோக்கமாகும்.

இடையீட்டுத் திட்டமும் பின்னிலைத் தேர்வும்

இடையீட்டுத் திட்டங்களும் மூன்று பின்னிலைத் தேர்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. அகன்ற படிப்புக்கான பனுவலை அறிமுகப்படுத்தும் நடவடிக்கையைப் **புதிய முறையில்** ஆசிரியர் நிகழ்த்திக் காட்டினார். அதாவது, மாணவர்களுக்கு அகன்ற படிப்பில் புத்துணர்ச்சியூட்டும் வகையில் ஆசிரியர் தம் வாசிப்பு அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டதே இடையீட்டுத் திட்டமாகும். ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட கருப்பொருளையொட்டிய பனுவல் ஒன்றைப் படித்தபோது தாம்

பெற்ற அனுபவம், அதன் மூலம் தாம் பெற்ற புதிய அறிவு, மனதில் ஏற்பட்ட தேடல் போன்றவற்றை மாணவர்களிடம் உணர்ச்சிபூர்வமாகப் பகிர்ந்துகொண்டனர். இதன் மூலம் மாணவர்களின் உணர்வு நிலையில் ஆக்கபூர்வமான மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என நம்பப்பட்டது.

முன்னிலைத் தேர்வில் செய்ததுபோல் 'பானாஸ்' சோதனைக் கருவி மாணவர்களின் உணர்வு நிலையில் ஏற்பட்ட மாற்றத்தைக் கண்டறியப் பயன்படுத்தப்பட்டது. இடையீட்டு (அறிமுக) நடவடிக்கைக்கு முன்பும் இடையீட்டு நடவடிக்கைக்குப் பின்பும் மாணவர்கள் 'பானாஸ்' சோதனைக் கருவியைப் பூர்த்திசெய்தனர். பனுவல் பற்றிய ஆசிரியர்களின் பகிர்வு மாணவர்களிடம் எந்த அளவு பனுவலைப் படித்துப் புதிய அறிவைப் பெறுவதிலும் புதியன தேடும் ஆர்வத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதைக் கண்டறிவதே பின்னிலைத் தேர்வாகும்.

செயலாய்வுக் கருவிகள்

செயலாய்வுக்குப் பயன்படுத்தப்பட்ட கருவிகள் பின்வருமாறு:

- குவிநோக்குக் கலந்துரையாடல் கேள்விகள்
- கருத்துக் கணிப்புப் படிவம்
- மூன்று முன்னிலைத் தேர்வுகளும், இடையீட்டுத் திட்ட வளங்களும், மூன்று பின்னிலைத் தேர்வுகளும்
- பானாஸ் (PANAS)என்னும் மாணவர்களின் உணர்வுநிலையைச் சோதிக்கும் கருவி

'பானாஸ்'என்னும் கருவிவழித் திரட்டப்பட்ட தரவுகளும் அவற்றின் பகுப்பாய்வும்

மூன்று முன்னிலைத் தேர்வு, மூன்று பின்னிலைத் தேர்வு ஆகிய நடவடிக்கைகளின்போதும் 'பானாஸ்' என்னும் சோதனைக் கருவியில் மாணவர்கள் பதிவுசெய்த தகவல்களின் (உடன்பாடு, எதிர்மறை மனவுணர்வுகள்) அடிப்படையில் தரவுகள் திரட்டப்பட்டதோடு ஒப்பீடும் பகுப்பாய்வும் செய்யப்பட்டன.

முன்னிலைத் தேர்வு(Pre-test)- ஒப்பீடு 1

உடன்பாடு மற்றும் எதிர்மறை உணர்வுநிலையில் ஏற்பட்ட மாற்றங்கள்

முன்னிலைத் தேர்வில்(Pre-test) அறிமுக நடவடிக்கைக்கு முன்பும் பின்பும் மாணவர்களின் உணர்வுநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் ஒப்பிடப்பட்டன. 'பானாஸ்' சோதனைக் கருவியில் உள்ள நிலை 4, 5 (Quite a bit & Extreme) ஆகியன மட்டும் ஒப்பிடப்பட்டன.

	உடன்பாட்டு உணர்வுநிலை (Quite a bit & Extreme)	**எதிர்மறை உணர்வுநிலை (Quite a bit & Extreme)**
அறிமுக நடவடிக்கைக்கு முன்பு (மொத்தப் புள்ளிகள்)	307	319
அறிமுக நடவடிக்கைக்குப் பின்பு (மொத்தப் புள்ளிகள்)	427	176
வேறுபாடு (%)	(120) 39%	(143) 45%

அறிமுக நடவடிக்கையின் பின்பு மாணவர்களின் உடன்பாட்டு உணர்வுநிலை 39 விழுக்காடு கூடியிருப்பதையும் எதிர்மறையான உணர்வுகள் 45 விழுக்காடு குறைந்திருப்பதையும் மேற்குறிப்பிட்டுள்ள பட்டியல் காட்டுகிறது.

பின்னிலைத் தேர்வு (Post-test)- ஒப்பீடு 2

உடன்பாடுமற்றும் எதிர்மறை உணர்வுநிலையில் ஏற்பட்ட மாற்றங்கள்

பின்னிலைத் தேர்வில்(Post-test) இடையீட்டு நடவடிக்கைக்கு (புத்துணர்ச்சியூட்டும் அறிமுக நடவடிக்கைக்கு) முன்பும் அந்நடவடிக்கைக்குப் பின்பும் மாணவர்களின் உணர்வுநிலையில் ஏற்பட்டுள்ள உடன்பாடு மற்றும் எதிர்மறை மாற்றங்கள் ஒப்பிடப்பட்டன. 'பானாஸ்' சோதனைக் கருவியில் உள்ள நிலை 4, 5 (Quite a bit & Extreme) ஆகியன மட்டும் ஒப்பிடப்பட்டன.

	உடன்பாட்டு உணர்வுநிலை (Quite a bit & Extreme)	**எதிர்மறை உணர்வுநிலை (Quite a bit & Extreme)**
இடையீட்டு நடவடிக்கைக்கு முன் (மொத்தப் புள்ளிகள்)	316	197
இடையீட்டு நடவடிக்கைக்குப் பின் (மொத்தப் புள்ளிகள்)	492	107
வேறுபாடு (%)	(176) 55%	(90) 46%

இடையீட்டு (அறிமுக) நடவடிக்கையின் பின்பு மாணவர்களின் உடன்பாட்டு உணர்வுநிலை 55 விழுக்காடு கூடியிருப்பதையும் எதிர்மறையான உணர்வுநிலை 46 விழுக்காடு குறைந்திருப்பதையும் மேற்கண்ட பட்டியல் காட்டுகின்றது. முன்னிலைத் தேர்வில் மாணவர்களின் உணர்வு நிலையில் ஏற்பட்ட உடன்பாடான மாற்றத்தை விடப் பின்னிலைத் தேர்வில் மாணவர்களின் உடன்பாட்டு உணர்வுநிலையில் ஏற்பட்ட மாற்றம் 16 விழுக்காடு (55% - 39%) அதிகரித்திருப்பதைச் செயலாய்வு முடிவுகள் காட்டுகின்றன. எதிர்மறை உணர்வுநிலை ஒரு விழுக்காடு மட்டுமே குறைந்துள்ளதும் கவனத்திற்கொள்ளத்தக்க ஒன்று. 'பானாஸ்' சோதனைக் கருவிகள் மூலம் கண்டறியப்பட்ட தரவுகளின் ஒப்பீடுகளிலிருந்து அகன்ற படிப்பிற்கு இடையீட்டு நடவடிக்கைகள் மூலம் மாணவர்களின் மனநிலையில் **கணிசமான அளவு உடன்பாடான உணர்வுநிலை மாற்றத்தை ஏற்படுத்த முடியும்** என்பது நிரூபனமாகியுள்ளது.

கட்டுப்படுத்திய கூறுகள்

இச்செயலாய்வு குறுகிய காலத்திற்கு மேற்கொள்ளப்பட்டதாலும் வகுப்புத் தேர்வு, ஆண்டுத் தேர்வு போன்றவை இருந்ததாலும் கால அவகாசம் கிடைப்பது ஆசிரியர்களுக்குச் சவாலாக அமைந்தது. நான்கு பள்ளிகளிலும் பல்வேறு வகையான பள்ளி நடவடிக்கைகள் இருந்ததால் அனைத்துப் பள்ளிகளிலும் குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் செயலாய்வை மேற்கொண்டு முடிப்பதில் ஆசிரியர்கள் சிரமத்தை எதிர்நோக்கினர். நேரக் கட்டுப்பாட்டின் காரணமாக மாணவர்களின் திறன் மேம்பாட்டைக் கருத்திற்கொள்வதற்கு இயலவில்லை.

பரிந்துரைகள்

இச்செயலாய்வு பத்து வாரங்களுக்கு மட்டுமே மேற்கொள்ளப்பட்டதால் மாணவர்களிடையே பெரும் மாற்றத்தைக் காண முடியவில்லை. குறைந்தது ஓராண்டு மேற்கொள்ளப்பட்டால் மாணவர்களிடம் அகன்ற படிப்பில் தொடர் முன்னேற்றத்தைக் காணலாம். தொடர்ந்து அகன்ற படிப்பில் மாணவர்களை ஈடுபடுத்துவதன்மூலம் அவர்களின் கற்றல் பயணத்தை அர்த்தமுள்ளதாக்க முடியும்.

முடிவுரை

அகன்ற படிப்பில் மேற்குறிப்பிட்ட முறையைப் பயன்படுத்திக் கற்பித்தபோது ஆசிரியர்களால் ஆர்வத்துடன் கற்பிக்க முடிந்தது. மாணவர்கள் விரும்பிப் படிப்பதைப் பார்த்தபோது மனநிறைவு ஏற்பட்டது. தேர்ந்தெடுக்கப்படும் பனுவல்கள் பலதரப்பட்டதாகவும் மாணவர்களின் அனுபவத்திற்கும் விருப்பத்திற்கும் உட்பட்டவையாகவும் அமையும்போது மாணவர்களின் அகன்ற படிப்பில் விரும்பத்தக்க மாற்றங்களை ஏற்படுத்த முடியும். ஆசிரியர்களின் உணர்வு பூர்வமான அனுபவப் பகிர்வின் மூலம் மாணவர்களிடம் அகன்ற படிப்பில் ஈடுபட்டை வளர்க்க முடியும்.அகன்ற படிப்பை ஒரு சுகமான அனுபவமாக மாணவர்கள் கருதிவிட்டால்

ஆசிரியரின் வழிகாட்டுதலின்றியே மாணவர்கள் புத்தகங்களைப் படிக்க ஆரம்பித்துவிடுவர் என்பது திண்ணம்.

நன்றி நவில்கிறோம்:

முதன்மை தமிழாசிரியர்கள்: திரு சுப்பிரமணியம், திருமதி தமிழரசி

மூத்த ஆசிரியர்கள்: திருமதி சின்னம்மாள் (யூ ஹூவா உயர்நிலைப் பள்ளி).

திருமதி விமல் தேவி (உட்லண்ட்ஸ் உயர்நிலைப் பள்ளி)

செயலாய்வை மேற்கொண்டு தரவுகளை நல்கியதோடு அறிக்கையைத் தயாரிக்கவும் உதவினர்.

சிங்கப்பூர்த் தமிழாசிரியர்களின் கற்பித்தல் முறைமைகளிலும் பணிசார் நம்பிக்கைகளிலும் நிலைமாற்றத்தை (Transformation) ஏற்படுத்தும் பணிமேம்பாட்டுச் செயற்பாடுகள்

சுப்பிரமணியம் நடேசன் & தமிழரசி சுப்பிரமணியம்
முதன்மை ஆசிரியர்கள், உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம்
கல்வி அமைச்சு, சிங்கப்பூர்

முன்னுரை

சிங்கப்பூரில் உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம், சிங்கப்பூர்க் கல்வி அமைச்சின் பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவின் கீழ் இயங்கிவருகிறது. இது 2010-ஆம் ஆண்டுமுதல் சிங்கப்பூர்த் தமிழாசிரியர்களுக்கான பணிமேம்பாட்டகமாகவும் செயற்பட்டுவருகிறது. இதன் செயலிலக்கு, 'தமிழாசிரியர்களின் நிலைமாற்றத்திற்குரிய பணித்திறன் மேம்பாட்டின்வழிப் பள்ளிகளில் தமிழ்மொழி கற்றல் கற்பித்தல் தரத்தை மேம்படுத்துதல்' ஆகும். செயலிலக்கின் அடிப்படையில் தமிழாசிரியர்களின் பணிமேம்பாட்டிற்காக நான்கு கோட்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன. அவை பின்வருவன:

1. பணித்திறன் கற்றலில் நிலைமாற்றத்தை அடைய வழிநடத்துதல்
2. கற்பித்தலில் கொள்கையையும் செயலையும் தொடர்புபடுத்துதல்
3. தரமான கற்றலுக்கு அடிப்படை தரமான கற்பித்தல்
4. பணித்திறனில் உன்னத்தை அடைய உடனிணைந்த பரிமாற்றத்தைச் செயலாற்றுதல்

பல்லடுக்குப் பயிற்சித் திட்டங்கள்

தமிழாசிரியர்களின் பணிமேம்பாட்டிற்கான கோட்பாடுகளின் அடிப்படையில் அவர்களுக்கான பயிற்சிகள் திட்டமிடப்பட்டுள்ளன. குறிப்பாக, தமிழாசிரியர்களின் கற்பித்தல் முறைமைகளிலும் பணிசார் நம்பிக்கைகளிலும் நிலைமாற்றத்தை ஏற்படுத்துவதை நோக்கமாகக்கொண்டு *பல்லடுக்குப் பயிற்சிகள்* (Multi-tiered Training) நடத்தப்பட்டுவருகின்றன. இப்பயிற்சித் திட்டத்தில் தமிழாசிரியர்கள் ஓராண்டுக் காலத்திற்கு எட்டுப் படிநிலைகளைக் கொண்ட பணிமேம்பாட்டுப் பயணத்தை மேற்கொள்வர். அப்படிநிலைகள் பின்வருமாறு:

படிநிலை 1: கற்பித்தலியலின் முக்கியக் கூறுகளுள் ஒன்றில் அறிமுகப் பயிற்சி வழங்குதல்

படிநிலை 2: பயிற்சியில் பங்குபெற்றவர்களை ஆற்றல்வாய்ந்த பணித்திறனாளராக உருவாக்க அவர்களின் அறிவையும் திறனையும் மேலும் வலுப்படுத்தும் செயற்பாடுகளுக்கும் பள்ளிசார் செயலாய்வு (Action Research) அல்லது பாடப்படிப்பு (Lesson Study) மேற்கொள்வதற்கும் அவர்களுக்கு அழைப்புவிடுத்தல்

படிநிலை 3: இத்திட்டத்தில் பங்கேற்க முன்வரும் ஆசிரியர்களுடன் தொடர்பிணைப்புக் கற்றல் சமூகக் கூட்டங்களை (Network Learning Communities)நிகழ்த்துதல்

படிநிலை 4: முதன்மை ஆசிரியர்களின் வழிகாட்டுதலுடன் உருவாக்கப்பட்ட கற்பித்தலியல் பணிச்சட்டத்தின் ஏற்புடைமையை உறுதிப்படுத்துவதற்காக ஆசிரியர்கள் பள்ளிசார்ந்த செயலாய்வு/பாடப்படிப்பு மேற்கொள்ளுதல்

படிநிலை 5: மேற்கொள்ளப்பட்ட செயலாய்வின்/பாடப்படிப்பின் அடிப்படையில் பொருத்தமான சான்றுகளைக்கொண்டு பயிற்றுவளங்கள் தயாரித்தல்

படிநிலை 6: கற்பித்தலியல் பணிச்சட்டத்தையும் பள்ளிசார்ந்த செயலாய்வில்/பாடப் படிப்பில் கண்டறியப்பட்டவற்றையும் தொகுத்து நூலாகப் பதிப்பித்தலும் தமிழாசிரியர் சமூகத்துடன் பகிர்ந்துகொள்ளுதலும்

படிநிலை 7: செயலாய்வுக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் ஏனைய தமிழாசிரியர்களுக்கு மேம்படுத்தப்பட்ட பணியிடைப் பயிற்சி வழங்குதல்

படிநிலை 8: இத்திட்டத்தில் பங்குபெற்றோர் உள்நாட்டு, வெளிநாட்டுக் கருத்தரங்குகளிலும் மாநாடுகளிலும் கட்டுரைகள் படைத்தல்

இந்த எட்டுப் படிநிலைகளைக்கொண்ட பல்லடுக்குப் பயிற்சிகளின் இரு திட்டங்களை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

செயலாய்வுப் பயணம்

தமிழாசிரியர்கள் ஆசிரியப் பணியில் உன்னதநிலையை நோக்கிச் செயற்படுவதும் தொடர்ந்து கற்றுவருவதைக் கடப்பாடாகக்கொள்வதும் அவர்தம் பணிமேம்பாட்டிற்கான வழிகளாகும். மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதற்கும் அவர்களது வளர்ச்சிக்கான வாய்ப்புகளை வளப்படுத்துவதற்கும் ஆசிரியர்கள் பணிசார்ந்த கற்பித்தல் முறைமைகளைத் தொடர்ந்து மேம்படுத்திக்கொள்ள வேண்டும். மாணவர்களின் மொழித்திறன் வளர்ச்சியில் காணப்படும் கற்றல் இடைவெளிகளைக் கண்டறிந்து அவற்றிற்குத் தீர்வு காண்பதற்குப் பள்ளிசார்நிலையில் செயலாய்வும் பாடப்படிப்பும் மேற்கொள்ளுதல் துணைபுரியும். தமிழாசிரியர்கள் பள்ளிசார்நிலையில் இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபட்டுவந்தாலும் அவற்றை மேற்கொள்வதில் அவர்களை ஆற்றல்வாய்ந்த பணித்திறனாளர்களாக உருவாக்கும் பொறுப்பினை உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தின் பணிமேம்பாட்டகம் ஏற்றது.

அதன்படி, 20 ஆகஸ்டு 2011-இல் 'தமிழாசிரியர்களுக்கான செயலாய்வுக் கருத்தரங்கு' ஒன்று நடத்தப்பட்டது. ஜொகூர்பாரு தெமெங்கோங் இப்ராஹிம் ஆசிரியர் கல்விக் கழகத்தின் தமிழ்மொழித் துறைத் தலைவர் திரு இரா சேதுபதி அவர்கள் அக்கருத்தரங்கில் செயலாய்வுபற்றிச் சிறப்புரை ஆற்றினார். கருத்தரங்கில் கலந்துகொண்ட 90% தமிழாசிரியர்கள், செயலாய்வுபற்றிய வளமான அறிவைப் பெற்றதாகக் கருத்துத் தெரிவித்திருந்தனர். அச்செயலாய்வுக் கருத்தரங்கினைத் தொடர்ந்து திரு இரா சேதுபதி அவர்கள் 22-24 ஆகஸ்டு 2011-இல் வழிநடத்திய மூன்று நாள்

செயலாய்வுப் பயிலரங்கு *பல்லடுக்குப் பயிற்சியின்* முதல் திட்டமாக அமைந்தது. தொடக்கப்பள்ளியையும் உயர்நிலைப்பள்ளியையும் சேர்ந்த தமிழாசிரியர்கள் 20 பேர் அப்பயிலரங்கில் பங்கேற்றனர். அவர்கள் தெரிவித்த உடன்பாடான கருத்துகள் பின்வருமாறு: முறையான செயலாய்வு ஒன்றினை மேற்கொள்ளும் மேம்பட்ட திறன்களைப்பெற்றோம் (95%); பெற்ற அறிவையும் திறனையும் செவ்வனே செயற்படுத்தும் தன்னம்பிக்கை மேலும் வலுப்பெற்றது (95%). பயிலரங்கினைத் தொடர்ந்து அவர்கள் தனிநிலையிலும் இணைநிலையிலும் குழுநிலையிலும் பள்ளிசார்ந்த செயலாய்வில் ஈடுபட்டனர். அவர்கள் மேற்கொண்ட செயலாய்வுகள் பின்வருமாறு:

செயலாய்வு 1 : கசடற எழுதுவோம் வாரீர்!

செயலாய்வு 2 : மாணவர்கள் கட்டுரையில் செய்யும் எழுத்துப் பிழைகளைக் களைதல்

செயலாய்வு 3 : சுயதிருத்தமும் இணைத்திருத்தமும் செய்வதன்வழி மாணவர்கள் செய்யும் எழுத்துப் பிழைகளைக் குறைக்க இயலுமா?

செயலாய்வு 4 : மாணவர்கள் கட்டுரையில் ஏன் இனிய தொடர்களைப் பொருத்தமான வகையில் பயன்படுத்துவதில்லை?

செயலாய்வு 5 : 'உயர்தமிழ்' மாணவர்களின் எழுத்துப் படைப்பில் கருத்துரைக்கும் திறனை மேம்படுத்துதல்

செயலாய்வு 6 : சொல்வளத்தைப் பெருக்கும் உத்திகளின் வழி எழுத்தாற்றலை மேம்படுத்துதல்

செயலாய்வு 7 : தொடக்கநிலை 6-ஆம் வகுப்பு மாணவர்கள் கட்டுரையில் செய்யும் குறில்-நெடில் பிழைகளைச் சொல்வதெழுதுதலின்வழிக் குறைத்தல்

'கசடற எழுதுவோம் வாரீர்' என்னும் தலைப்பிலான செயலாய்வு சொல்வதெழுதுதலை உத்தியாகக்கொண்டு எழுத்துப்பிழைகளைக் களைய வழிகோலியது. அடுத்த செயலாய்வு, வரிவடிவத்திற்கும் ஒலிப்பு முறைக்கும் இடையே ஏற்படக்கூடிய மயக்க நிலையால் மாணவர் செய்யும் பிழைகளை ஆராய்ந்து அவற்றைக் களைவதற்கான இடையீட்டுத் திட்டங்களை வடிவமைத்தது. சுயதிருத்தமும் இணைத்திருத்தமும் செய்வதன்வழிப் பிழைகளைக் களைந்து வளமான மொழியை எழுத்தில் கையாளும் வழிவகைகளை விளக்கியது மற்றொரு கட்டுரை. தொடர்ந்து வரும் கட்டுரை, இன்றைய இளைய தலைமுறையின் ரசனைக்கேற்பத் திரைப்பட விமர்சனங்களையும் தொலைக்காட்சி விவாதங்களையும் ஓர் உத்தியாகப் பயன்படுத்திக் கருத்துரைக்கும் திறன்களை மேம்படுத்தும் வழிவகைகளை ஆராய்ந்தது. செறிவுமிக்க படைப்புகள் இனிய தொடர்களை உள்ளடக்கிய அதே வேளையில் பொருத்தமான முறையில் பயன்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் வழிவகைகளையும் ஆராய்ந்தது இன்னுமொரு கட்டுரை. எழுத்தாற்றலை மேம்படுத்தச் சொல்வளத்தைப் பெருக்குவதன் அவசியத்தை வலியுறுத்தியது பிறிதொரு கட்டுரை. கட்டுரையில் மாணவர்கள் செய்யும் தவறுகளைக் களைய அடிப்படையான குறில்-நெடில் வேறுபாடுகுறித்த அறிவினை மாணவர்பால் விதைப்பதன் அவசியத்தை ஆராய்ந்தது இறுதிக் கட்டுரை.

மேற்கண்ட செயலாய்வுகளை 2012-ஆம் ஆண்டின் முதல் பருவத்தில் தத்தம் பள்ளிகளில் மேற்கொண்ட தமிழாசிரியர்கள், அவற்றின் முடிவுகளையும் பயன்விளைவுகளையும் கற்றல் கற்பித்தலின்போது கண்ட அனுபவங்களையும் சக தமிழாசிரியர்களுடன் பகிர்ந்துகொள்வதற்காக 8 நவம்பர் 2012-இல் 'கருத்தாடல் நோக்கில் செயலாய்வு' என்னும் தலைப்பில் கருத்தரங்கு ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அன்று தமிழாசிரியர்கள் படைத்த செயலாய்வுக் கட்டுரைகள் கருத்தரங்குத் தொகுப்பாக வெளியிடப்பட்டன. இக்கருத்தரங்கு, கலந்துகொண்ட தமிழாசிரியர்கள் செயலாய்வுபற்றிய தங்களது புரிந்துணர்வைத் தெளிவுபடுத்திக்கொள்ளவும் ஆழப்படுத்திக்கொள்ளவும் வாய்ப்பளித்தது. அத்துடன் 'ஒவ்வோர் ஆசிரியரும் ஓர் ஆய்வாளர்' என்பதற்கிணங்க, செயலாய்வுக் கண்ணோட்டத்தில் மாணவர்களின் கற்றல் இடைவெளிகளைக் குறைக்க இக்கருத்தரங்கு உந்துதலாக அமைந்ததாக அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். குறிப்பாக, கருத்தாடல் அங்கங்கள் வாயிலாகச் செயலாய்வுபற்றிய சரியான புரிந்துணர்வைப் பெற்றதாகவும், செயலாய்வுபற்றிய மாறுபட்ட பார்வையும் சிந்தனையும் எழுந்ததாகவும் 85% தமிழாசிரியர்கள் கூறியுள்ளனர். படைக்கப்பட்ட *செயலாய்வுக் கட்டுரைகள் அனைத்தும்* தமிழாசிரியர்கள் கண்ட நிலைமாற்றத்தின் பயனால் மாணவர்கள் கற்றலில் விரும்பத்தக்க மாற்றங்களை அடைய முடிந்தது என்பதைப் பறைசாற்றுகின்றன.

அகன்ற படிப்புத் திட்ட அமலாக்கம்

மேற்கண்ட செயலாய்வுப் பயிற்சித் திட்டத்தைத் தொடர்ந்து, அடுத்து நடத்தப்பட்ட பல்லடுக்குப் பயிற்சி 'மகிழ்ச்சியும் பயனும் தரும் படித்தல் அனுபவத்தைப் பெறுவதற்கான வழிமுறைகள்' என்பதாகும். கடந்த 24-25 ஏப்ரல் 2012-இல் நடத்தப்பட்ட இப்பயிலரங்கில் உயர்நிலைப்பள்ளிகளைச் சேர்ந்த 17 மூத்த தமிழாசிரியர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர். முதன்மை ஆசிரியர்களின் வழிகாட்டுதலுடன் இவர்கள் அகன்ற படிப்புப்பற்றிய புரிந்துணர்வையும், கற்பித்தல் முறைமைகள்பற்றிய அறிவையும், தமிழ் வாசகர் மன்ற உருவாக்கம்பற்றிய வழிகாட்டுதலையும் பெற்றனர். பயிலரங்கைத் தொடர்ந்து, அவர்கள் குழுநிலையில் அகன்ற படிப்புத் தொடர்பான செயலாய்வுகளையும் மேற்கொண்டனர். இனி, அவர்கள் மேற்கொண்ட ஓராண்டுக் காலக் கற்றல் பயணத் திட்டம்பற்றியும் கண்ட பயன்கள்பற்றியும் பார்ப்போம்.

ஒவ்வொரு மாணவரையும் வாழ்நாள் வாசகராக உருவாக்குவதில் பெற்றோர்க்கும், ஆசிரியர்களுக்கும், பெரியவர்களுக்கும், சமூகத்திற்கும் முக்கியப் பொறுப்புள்ளது. குறிப்பாக, பள்ளிப் பருவத்தின்போது முறையான வாசிப்புப் பழக்கத்திற்கு அடித்தளம் அமைத்துத் தருவது அவசியம். இக்காரணத்தால் சிங்கப்பூர்த் தமிழ்மொழிப் பாடக்கலைத்திட்டம் படித்தல் திறன் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளித்துவருகிறது. படித்தல் திறனை மற்ற மொழித்திறன்களோடு ஒருங்கிணைத்துக் கற்பித்தால் மாணவர்கள் மொழியை ஈடுபாட்டுடன் பயில்வர். ஒருவரின் வழிகாட்டுதலுடன் தொடங்கும் வாசிப்புப் பயிற்சி, காலப்போக்கில் மாணவர்களைச் சுயமாகப் படிக்கத் தூண்ட வேண்டும். ஆழ்ந்த படிப்பின்வழி மாணவர்கள் பல்வேறு படித்தல் திறன்களை

முறையாகக் கைவரப்பெற்றுவிட்டால் அத்திறன்கள் அகன்ற படிப்பின்போது அவர்களுக்குக் கைகொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

அகன்ற படிப்பினை ஊக்குவிக்கும் பொருட்டு, சிங்கப்பூர்ச் சூழலுக்கு ஏற்புடைய வகையில் 12 படிநிலைகளை உள்ளடக்கிய பணிச்சட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது (பின்னிணைப்பைக் காண்க). இப்பணிச்சட்டம்பற்றிப் பயிலரங்கின்போது ஆசிரியர்களுக்கு விரிவாக விளக்கப்பட்டது. அதோடு, பின்வரும் அகன்ற படிப்புக்கான கோட்பாடுகளும் வலியுறுத்தப்பட்டன:

(1) பனுவல் மாணவரின் வயதிற்கும் அனுபவத்திற்கும் உட்பட்டிருத்தல்
(2) பலதரப்பட்ட தலைப்புகளில் நூல்கள் கிடைத்தல்
(3) மாணவர்கள் தாங்கள் படிக்க விரும்பும் நூல்களைத் தாங்களே தெரிவுசெய்தல்
(4) பனுவல்கள் விரைவு வாசிப்புச் செய்ய இடமளித்தல்
(5) மகிழ்ச்சிக்காகவும், தகவல்களைப் பெறுவதற்காகவும், பொதுவான புரிந்துணர்வுக்காகவும், மனநிறைவுக்காகவும் படித்தல்
(6) வாசிப்பின்போது தனிமையும் அமைதியும் வாய்க்கப் பெறுதல்
(7) பனுவலில் உள்ள 95% சொற்களின் பொருளை மாணவர்கள் அறிந்திருத்தல்
(8) ஆசிரியர் முன்மாதிரி வாசகராக இருத்தல்

மேலும், முறைப்படுத்தப்பட்ட அகன்ற படிப்புத் திட்டத்தைப் பள்ளியில் அமல்படுத்துவதற்கான வழிமுறைகள்பற்றியும் பயிலரங்கில் விளக்கப்பட்டன. மாணவ வாசகர்களை நான்கு வகைப்படுத்தலாம்: (1) *ஆரம்பநிலை வாசகர்,* (2) *இடைநிலை வாசகர்,* (3) *வளர்நிலை வாசகர்,* (4) *முன்மாதிரிநிலை வாசகர்.* ஆசிரியர்கள் இத்தகைய வாசகர்களின் வளர்ச்சிப்போக்குக்குரிய சான்றுகளைத் திரட்டிக் கண்காணித்து வருவது முக்கியம். அதற்காக, ஆசிரியர்கள் குழுநிலையில் ஆழ்ந்த படிப்பு, அகன்ற படிப்பு, 21-ஆம் நூற்றாண்டுத் திறன்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்துச் செயல்திறன் பணிகளை உருவாக்கினர்; வாசிப்புக் கோப்புமுறை பற்றிய (Reading Portfolio) தகவல்களையும் பெற்றனர்; அகன்ற படிப்பிற்குப் பின்னர், மாணவர்கள் செய்த சிறந்த படைப்புகளைக் கற்றல் சான்றுகளாகத் தொகுத்து வைக்கும் முறை பற்றியும் மாணவர்கள் தங்கள் கற்றல் அனுபவங்கள் குறித்த எண்ணப் பிரதிபலிப்புகளைக் கோப்பில் வைக்கும்முறைபற்றியும் விளக்கப்பட்டன. வாசிப்புக் கோப்பின் உள்ளடக்கக்கூறுகளில் பின்வருவன இடம்பெறலாம்: *என்னைப்பற்றி, நான் படித்தவை, என் படைப்புகள், என் முன்னேற்றம், ஆசிரியர் சொன்னவை, பெற்றோர் சொன்னவை, என் எண்ணங்கள்.*

இப்பயிலரங்கைத் தொடர்ந்து, மூத்த தமிழாசிரியர்கள் குழுநிலையில் அவரவர் பள்ளிகளில் செயலாய்வுகளை மேற்கொண்டனர். பின்வரும் தலைப்புகளில் அவர்கள் நடத்திய செயலாய்வுகள் அகன்ற படிப்புக்கான பணிச்சட்டத்தின் ஏற்புடைமையை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்தன. அவை பின்வருவன:

(1) வாசகர் பின்புலப்பதிவும் ஊக்குவிப்புமுறைகளும்

(2) நூல் வாசிப்புக்கு வாசகர்களைத் தயார்படுத்தும் முறைகளும் அவற்றின் பயன்களும்

(3) வாசிப்பிற்கான செயல்திறன் மதிப்பீடும் வாசிப்புக் கோப்பும்

(4) நூல் வாசிப்பும் மின்னூல் வாசிப்பும்: ஓர் ஒப்பீடு

இவ்வாசிரியர்கள் முறைப்படுத்தப்பட்ட அகன்ற படிப்புக்கான திட்டத்தைத் தத்தம் பள்ளிகளில் அமல்படுத்தியதோடு செயலாய்வுக்கான வளங்களையும் கருவிகளையும் உருவாக்கினர். இவர்களது செயலாய்வுப் படைப்புகள் கட்டுரைகளாக நூல்வடிவில் தொகுக்கப்பட்டுள்ளன. அவை தமிழாசிரியர்கள் அனைவருக்கும் பயனளிக்கும் ஆவணமாகும் என்பதில் ஐயமில்லை.

அகன்ற படிப்புச்சார்ந்த பயிலரங்கில் பங்கேற்ற மூத்த தமிழாசிரியர்களிடம் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பின்வழிச் சில தரவுகள் திரட்டப்பட்டன. அவர்கள் தங்கள் உடன்பாடான கருத்துகளை இவ்வாறு தெரிவித்தனர்: *அகன்ற படிப்புத் தொடர்பான பாடப்பொருள் அறிவைச் சிறப்பாகப் பெற்றோம்* (90.8%); *கற்றதை வகுப்பில் பயன்படுத்த முடியும்* (92%); *எங்கள் தன்முனைப்பும் தன்னம்பிக்கையும் அதிகரித்தன* (90%). செயலாய்வுப் பயணத்தில் பங்கேற்ற மூத்த தமிழாசிரியர்கள் ஓராண்டிற்குள் சுமார் 12-15 தொடர்பிணைப்புக் கற்றல் சமூகக் கூட்டங்களில் கலந்துகொண்டனர். இதன்வழி இவ்வாசிரியர்கள் அகன்ற படிப்புப்பற்றிய தங்கள் புரிந்துணர்வை ஆழப்படுத்திக்கொண்டனர். பயிலரங்கின்போது பெற்ற அறிவையும் அனுபவத்தையும் வகுப்பறையில் செயல்படுத்தியதன் பயனால் அவர்களது கற்பித்தல் முறைமைகளும் பணிசார் நம்பிக்கைகளும் நிலைமாற்றம் கண்டன என்று பங்குபெற்ற 100% மூத்த தமிழாசிரியர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

முடிவுரை

முறையான பயிற்சியும் நீடித்த மேம்பாட்டுக்கான ஆதரவும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டால் அவர்களது பணித்திறன், தரம்நோக்கிய நிலைமாற்றமும் மேம்பாடும் காணும் என்பது புலனாகிறது. ஆசிரியர்களிடம் விரும்பத்தக்க நிலைமாற்றம் ஏற்படக் கூடுதல் காலம் தேவைப்படலாம். அதற்குரிய கால அவகாசத்தை வழங்கி, அவர்களுக்கு ஆதரவுக்கரம் நீட்டுவதால் அவர்கள் கற்றுக்கொண்ட புதியனவற்றைச் சோதித்துப் பார்த்துப் பயனடைவர் என்பது நிச்சயம். இதன் அடிப்படையில், உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தின் பணிமேம்பாட்டகம் இவ்வகைப் பல்லடுக்குப் பயிற்சிகளைத் திட்டமிட்டு வெற்றிகரமாகச் செயற்படுத்தி வருகிறது. *தரமான கற்றலுக்கு அடிப்படை தரமான கற்பித்தல்* என்பதைத் தாரக மந்திரமாகக்கொண்டு செயற்படுவோம்; பயனடைவோம்.

பின்னிணைப்பு

அகன்ற படிப்புத் திட்ட அமலாக்கத்திற்கான பணிச்சட்டம்

கட்டம்		வாசகர்	படி	விளக்கங்கள்
(அ) பின்புலப் பதிவு (Profiling)		வாசகர்பற்றி அறிதல் (Knowing a Reader)	1	வாசகர்பற்றிய கணிப்பும் பேட்டியும்
				வாசகர் குறை இயல்பறி மதிப்பீடு (Diagnostic Assessment)
(ஆ) அறிமுகம் (Orientation)	நிலை 1	வாசகர்க்குப் புத்துணர்ச்சியூட்டுதல் (Inspiring a Reader)	2	ஆசிரியரின் வாசிப்பு அனுபவப் பகிர்வு: வாசிப்புக்குப்பின் தாம் உருவாக்கிய புதிய சிந்தனைபற்றிக் கூறுதல்
			3	ஆசிரியரிடம் துலங்கும் நல்ல வாசகர்க்குரிய பண்புநலன்களை மாணவர்கள் கண்டுணர்தல்
			4	ஆசிரியரைப் போலத் தாங்களும் எதையும் அறிந்துகொள்ளும் ஆர்வத்தையும், விருப்பத்தையும், பயனையும் அடைய மாணவர்கள் விரும்புதல்
	நிலை 2	வாசகரைத் தயார்படுத்துதல் (Preparing a Reader)	5	ஆழ்ந்த படிப்புக்குரிய திறன்களை மாணவர்கள் பெற்றிருத்தல்
			6	மாணவர் முன்னறிவு, வயது, அனுபவம் ஆகியவற்றைக் கருத்திற்கொள்ளுதல்
				நூல் அறிமுகத்தின்போது ஆசிரியர் ஒருசில பக்கங்களை உற்சாகத்துடனும் உணர்ச்சியுடனும் வாய்விட்டுப் படித்துக் காட்டுதல்
			7	நூல்களை மாணவர்கள் தெரிவுசெய்தல்
				கற்றவற்றை முன்னறிவுடனும் அனுபவத்துடனும் தொடர்புபடுத்துவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருதல்
				முன்மாதிரிப் படைப்புகளைக் காட்டுதல்
(இ) செயல்திறன் (Performance)		வாசகர் பங்களிப்பைப் பாராட்டுதல் (Appreciating a Reader)	8	வாசகர்க்கான கையேட்டைத் (Reader's Toolkit) தயாரித்துக் கொடுத்தல்
				21-ஆம் நூற்றாண்டுத் திறன்கள் ஒருங்கிணைக்கப்பட்ட செயல்திறன்

			பணிகளை உருவாக்குதல்
		9	அகன்ற படிப்புக்கான ஒருங்கிணைக்கப்பட்ட செயல்திறன் பணிகளைச் செயற்படுத்துதல்
		10	வாசிப்புக் கோப்புமுறையை அறிமுகப்படுத்துதல் (வாசிப்புப் படைப்புகளின் தொகுப்பு)
(ஈ) கொண்டாட்டம் (Celebration)	வாசகரை அங்கீகரித்தல் (Acknowledging a Reader)	11	பள்ளிநிலை சார்ந்த அங்கீகரிப்பு
		12	பள்ளிநிலை சாரா அங்கீகரிப்பு

அறிவார்ந்த கவிதை கட்டமைப்பு அணுகுமுறையில் திருக்குறளும் பல்வகைச் செய்யுள்களும் ஓர் ஆய்வு.

(செல்வஜோதி இராமலிங்கம்) *எselvajothi29@gmail.com* **மலாயாப் பல்கலைக்கழகம்**

முன்னுரை

கல்வி உளவியலாளர்கள் மனிதனின் கற்றலும் கற்றல் விளைவுகளையும் மூன்று நிலைகளில் பிரித்துள்ளனர். அவை அறிவாற்றல், (*cognitive domain*) உணர்ச்சி (*affective domain*) மற்றும் உடல் (*psychomotor domain*) ஆகியவையாகும். இந்த மூன்று நிலைகளின் கலவையே விளைபயன்மிக்க கற்றலை உருவாக்குகிறது (Bloom:1956, Krathwohl:1964, Simpson:1972).



கற்றலுக்கு உகந்த இந்த மூன்று நிலைகளைப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே நம் முன்னோர்கள் முத்தமிழ் (இயல், இசை, நாடகம்) என்று அழைத்து வந்தனர். இது அவர்களின் அறிவுத்திறத்தின் முதிர்ச்சியைக் காட்டுகின்றது. அவ்வாறு பார்க்கப்போனால் கற்றல் நடவடிக்கைகளுக்கும் மொழிக்கும் நெருங்கியத் தொடர்பு உண்டு என்பது புலப்படுகிறது. குறிப்பாக நம் தமிழ்மொழியில் வகைப்படுத்தப்பட்டுள்ள இந்த மூன்று நிலைகள் இயல்பாகவே நமது கற்றல் நடவடிக்கைகளை மேம்படுத்தும் ஆற்றல் பெற்றிருப்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

மொழி ஒருவனுடைய சிந்தனை, கருத்து, உணர்வு, எண்ணங்கள் ஆகியவற்றின் வெளிப்பாடு. மொழியின் தோற்றமும் வளர்ச்சியும் மனிதனின் சிந்தனையுடன் நெருங்கிய தொடர்பு உண்டு (Lev Vygotsky:1986) என்பதை வைகோட்ஸ்கி அவர்களின் கூற்றுப் புலப்படுத்துகின்றது. ஒருவனின் சிந்திக்கும் திறனை மேம்படுத்தும் ஆற்றல் மொழிக்கு உண்டு என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இந்த மொழியின் வாயிலாக படைக்கப்படும் இலக்கியங்களும் மனிதனின் சிந்தனை வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைகிறது (Sapir and Whorf:1955). ஒவ்வொரு இலக்கியப் படைப்பும் ஏதோ ஒரு வகையில் மனிதனின் சிந்திக்கும் முறையை மாற்றுகின்ற திறனைக் கொண்டுள்ளது.

பண்டைக் காலம் தொட்டு இலக்கியங்கள் பல்வேறு பரிணாமங்களைக் கடந்து வருகிறது. செய்யுள் வடிவில் இருந்த இலக்கியங்கள் பின்பு உரைநடைக்கு மாறியது. இருந்தபோதிலும் இன்றளவும் செய்யுளகளையும் கவிதைகளையும் உய்த்துணரும் போக்கை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். அவ்வாறு உய்த்துணரும் கவிதைகள் மலேசியக் கல்வி அமைச்சின் கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவின் இடைநிலைப்பள்ளிகளின் தமிழ்மொழி பாடத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இவ்வாய்வின் நோக்கம் இந்தக் கவிதைகளில் எவ்வாறு அறிவார்ந்த கட்டமைப்பு இடம்பெற்றுள்ளது மற்றும் எவ்வாறு மாணவர்களிடையே கற்றல் திறனை (சிந்தனைத் திறன்) மேம்படுத்துகின்ற ஆற்றல் கொண்டுள்ளது என்பதை ஆராய்வதே ஆகும்.

கவிதை தொடர்பான ஆய்வுகள் பல அடிப்படைகளில் இருந்தாலும் மனிதனின் அறிவாற்றலோடு தொடர்புடையதுதான் அறிவார்ந்த கட்டமைப்புடைய கவிதைகள் என்று கூறுவர் (*cognitive poetics*) (Tsur, Reuven:1992). ஒரு மாணவன் ஒரு கவிதையை வாசிக்கும் போது இரண்டு நிலைகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. ஒன்று அவனுடைய மனநிலை (*emotional*) மற்றொன்று அறிவுநிலை *(intellectual*) (Abdul Rahman:2003). மனநிலை என்பது அவனது உணர்வு தொடர்பானது. ஒரு கவிதையை வாசித்தவுடனேயே மகிழ்ச்சி அடைகிறான், வேதனைபடுகிறான், ஆத்திரம் அடைகிறான். இதுபோன்ற உணர்வுகளைத் தட்டி எழுப்பும் வல்லமை பொதுவாகக் கவிதைகளுக்கு உள்ளன. இன்றைய காலக்கட்டத்தில் மனவுணர்வுகளுக்கு அப்பாற்பட்டு அறிவுநிலையிலும் தாக்கம் ஏற்பட வேண்டும். அந்த அடிப்படையில் அறிவாற்றலை ஊக்கப்படுத்தும் திறன் பாடத்திட்டத்தில் உள்ள கவிதைகளுக்கு எவ்வாறு அமைந்துள்ளன என்பதைத் தொடர்ந்து காண்போம்.

1. **கவிதையில் குறியீடு** (Semiotic)

ஒரு கவிதையில் பயன்படுத்தப்படுகின்ற சொல்லோ சொற்றொடரோ ஒரு குறியீடாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்தக் குறியீடுகள் பயன்படுத்துகின்ற மொழிகளைக் கடந்து நிற்கும் சூழலை இங்குக் காண இயலும். இவ்வாறு பயன்படுத்தப்பட்ட சொல்லின் பொருளைக் கடந்து சென்று அதன் பொருளை அறிய முற்படும்போது மாணவர்களிடையே அறிவாற்றலை மேலோங்கத் துணைசெய்கிறது (Frawley Willium:1997).

அருகூட்டும் பைங்கிளியும் ஆடற்பருந்தும்
ஒருகூட்டில் வாழ உலகு

(நளனது நல்லாட்சி)

இக்கவிதையில் கிளி, பருந்து மற்றும் கூடு ஆகிய சொற்கள் குறியீடுகளாகப் பயன்படுத்தப்படுகின்றது. இச்சொற்களின் பொருளை அகராதியின் துணைக்கொண்டு பார்த்தால் கவிதையின் பொருள் நமக்குப் புலப்படாது. ஆக இங்கே பயன்படுத்திய சொற்கள் பொருள் மறைந்து கவிதைக்கேற்ற வேறு ஒரு விளக்கத்தைக் கொடுக்கிறது. இங்கே கிளி, பருந்து மற்றும் கூடு ஆகிய சொற்கள் தரும் விளக்கத்தைக் கீழே காணவும்

கிளி - மென்மையான குணமுடைய மனிதர்கள்

பருந்து - போராட்ட குணமுடைய மனிதர்கள்

கூடு - உலகம்

ஆக, கவிதையில் காணப்படும் சொற்களின் பொருள் கவிதையின் கருத்துக்கு ஏற்றவாறு மாணவர்கள் புரிந்து கொள்வது அவர்களின் அறிவாற்றல் அல்லது சிந்தனை நிலையை மேலும் விரிவடையச் செய்கிறது. மேலும் இலக்கியப் படைப்புகளின் தாக்கம் (*literature responses)* ஒரு மாணவன் ஒர் இலக்கியப் படைப்பைப் படிக்கும் போது எழுத்துகளால் கோர்த்து பொறிக்கப்பட்ட சொல்லின் பொருளைக் வெகுதூரம் கடந்துச் சென்று சிந்திக்கவேண்டியுள்ளது. இவ்வாறு கவிதையை வாசிக்கும் போது ஏற்படுகின்ற உருமாற்றம் பொருண்மை அடிப்படையிலும் குறிப்பிட்ட பொருள் (*thematic*) சார்ந்த ஆய்வுகளையும் ஆராய முற்படுகின்ற நிலையை ஏற்படுத்துகின்றது. அல்லது மாணவர்களிடையே அவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்த ஆசிரியர்கள் வழிகாட்டவும் தூண்டுதல் கொடுக்கவும் வேண்டும். இது மாணவர்களின் அறிவு நிலை மேம்பாட்டிற்கு வழிவகுக்கும்.

2. **கருத்தாழமிக்க வழிமுறைகள்** (ambivalence and sharpening)

பொருத்தமான சொற்பயன்பாடு, சொல்லமைப்பு அறிவார்ந்த கவிதைகளைப் படைக்க துணைநிற்கும். கவிஞர் கூறவரும் கருத்து சமூகத் தொடர்புடைய, சமூகத்தின் வலியை எடுத்துக் கூறும் கருத்துகளாயின் மாணவர்களிடையே ஆழமான தாக்கத்தையும் அது ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை (Fador Jerry:1979). குறிப்பாகக் கவிஞர் கூறவரும் கருத்து என்னவென்று விளங்கிக்கொள்ளவும் அதனை உய்த்துணரும் நிலையும் ஏற்படும்போது மாணவன் தனது

அறிவாற்றலைப் பயன்படுத்துகின்றான். இந்த அறிவாற்றலைப் பயன்படுத்தி கவிஞர் கூறவரும் கருத்தினை விளங்கிக்கொள்கிறான்.

ஆற்றுநர்க்களிப்போர் ***அறவிலை பகர்வோர்***
ஆற்றாமாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்நெறி வாழ்க்கை

(மணிமேகலை: பசிப்பிணி)

எனும் செய்யுளில் ஒர் ஆழமான கருத்தைக் கவிஞர் முன்வைக்கின்றார். அதாவது எது அறம் என்று கூறும் போது பிறருக்குக் கொடுப்பது அறம் என்பது பொதுவான கருத்து. இந்தப் பொதுவான கருத்திலிருந்து சற்று விலகி நின்று; ஒரு படி மேலேச் சென்று புலவர் கைம்மாறு செய்யும் சத்தி உடையவர்களுக்கு ஒரு பொருளைக் கொடுப்பவர் அறம் செய்பவர் ஆகார் என்ற மாறுபட்ட கருத்தை ஆழமாக வலியுறுத்துகின்றார். மாறாக அவர் அறத்தை விற்பவராவார் என்று கடுமையாகச் சாடுகின்றார். ஆனால் கைம்மாறு செய்ய இயலாத ஏழை மக்களின் பெரும் பசியைப் போக்குபவரே உண்மையான அறம் செய்பவர்கள் என புலவர் கூறவருகிறார். மேலும் ***அறவிலை பகர்வோர்*** என்று புலவர் பயன்படுத்திய சொல்லாட்சி தான் வலியுறுத்த வந்த ஒட்டுமொத்தக் கருத்தையும் விளக்கக்கூடிய ஆளுமையைக் கொண்டிருப்பதை நாம் இங்கு அறிய முடிகிறது. இவ்வாறான சிந்தனை மாணவர்களிடையே பெரும் சிந்தனைப் புரட்சியை ஏற்படுத்தவும் மாறுபட்ட சிந்தனையை உருவாக்கவும் வழி செய்யும்.

3. கற்றல் கற்பித்தலில் சிந்தனைத் திறன்

இன்றைய கல்வி உலகில் பல்வேறு மாற்றங்கள் நடந்து கொண்டிருக்கிருக்கின்றன. அதில் மிக முக்கியமாகக் கருதப்படுவது மாணவர்களின் சிந்தனைத் திறன் வளர்ச்சி. இந்தத் திறனைக் கையாளும் ஒரு மாணவன் தனது அன்றாட வாழ்வில் ஏற்படும் சிக்கல்களுக்கு எளிதில் தீர்வு காணும் திறனைப் பெறுகிறான். இவ்வாறான சிந்தனைத் திறனை வெளிக்கொணருவதற்கு இலக்கியப் படைப்புகள் குறிப்பாக கவிதைகள் மிக முக்கியப் பங்காற்றுகின்றன (Rajendran,N:2000). ஆகவே இந்தச் சிந்தனைத் திறன் இலக்கியப் படைப்புகளிலிருந்து எவ்வாறு வெளிக்கொணரப்படுகிறது என்று பார்ப்போம். மேலும் இவ்வாறான சிந்தனைத் திறன் கூறுகளை உள்ளடக்கிய கவிதைகள் அறிவார்ந்த கவிதைகளாகக் கருதப்படுகிறது. சிந்தனைத் திறன் பல வகைகள் இருந்தாலும் இரண்டு பெரும் பிரிவுகளை மட்டும் காண்போம். அவை ஆக்கச் சிந்தனை (*creative thinking*) மற்றும் ஆய்வுச் சிந்தனை (*critical thinking*).

அ) ஆக்கச் சிந்தனை

உவமை *(simile)* அல்லது உருவகம் (*metaphoric*)

ஒரு மாணவன் கவிதையை வாசித்து அதில் அடங்கியுள்ள உருவகத்தின் பொருளை அறியும் திறன் சற்று சிரமமான ஒன்று. காரணம் ஒரு மாணவனுக்கு அதில் அடங்கியுள்ள

பொருண்மையையும் உலக அறிவையும் ஒப்பிட்டுப் பிரித்தறியும் ஆற்றல் ஒரு சவாலாகவே அமைகிறது (Dusenbery Kathleen:2011). ஒரு கவிதையைப் படைக்கும் வகைக்கேற்பவே அதில் பயன்படுத்தப்படும் உருவகத்தின் பொருள் அமையும். பல வேளைகளில் இவை ஒன்றையொன்று எதிர்மாறான பொருளைக் கொடுக்கவல்லது. அதாவது சொல்லின் பொருள் ஒன்று கவிதையின் பாடுபொருளுக்கேற்ப அதன் பொருள் வேறொன்றாக மாறிநிற்கும். இந்தநிலையிலிருந்து மீண்டு சரியான பொருளைக் கண்டறியும் முயற்சிதான் மாணவனின் சிந்திக்கும் முறையைத் தூண்டுவதற்கு அடிப்படையாக அமைகிறது. இவ்வாறான பொருள் வேறுபாடு அவரவர் அனுபவத்திற்கேற்பவும் மாறுபடுகிறது.

இந்த உருவகமும் உவமையும் ஆக்கச் சிந்தனை வளர்ச்சிக்குத் துணைபுரிகின்றன (Selvajothi,R:2009). பாடத்திட்டத்தில் உள்ள திருக்குறள் மற்றும் பல்வகைச் செய்யுள்கள் பகுதியில் பல இடங்களில் உவமை மற்றும் உருவக அணிகள் காணப்படுகின்றன . ஒரு கருத்தையோ அல்லது பொருளையோ எளிமையாக விளக்கி புரிய வைப்பதற்கு அந்தக் கருத்தோ அல்லது பொருளோ தொடர்பான பொருள் அன்றி அதே தன்மைகளுடைய வேறொரு பொருளைக் கொண்டு விளக்கும்பொழுது மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ள விழைகிறது. அவர்களுடையே சிந்தனையையும் தட்டி எழுப்புகிறது.

உவமை/உருவக ஒப்பீட்டை மூன்று அடிப்படைகளில் காணலாம்

முதலாவது : இரண்டு பொருளையும் ஒப்பு நோக்குதல்.

இரண்டாவது : இரண்டு பொருள்களிலும் உள்ள ஒத்த தன்மையை அடையாளம் காணுதல்.

மூன்றாவது : இரண்டு பொருளையும் தொடர்புபடுத்துதல்.

அதாவது இரண்டு பொருள்களை ஒப்பிட்டு தொடர்புபடுத்துதல் *(analogy)* என்பது ஆக்கச் சிந்தனை வகைகளில் ஒரு பகுதியாகும் (Kemahiran Berfikir:2001). மேற்காணும் அடிப்படைகளில் எவ்வாறு ஒப்புமையை அடையாளம் கண்டு சிந்தனைத் திறனை வளப்படுத்துகின்றது என்று பார்ப்போம்.

திருக்குறள்

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். (குறள்:393)

பொருள்	உவமை	ஒத்ததன்மை	தொடர்புபடுத்துதல்
கற்றவர்கள்	கண்ணுடையவர்	பயன் உள்ளது	பிரச்சனைகளை எதிர்கொள்ளும் ஆற்றல் உண்டு
கல்லாதவர்கள்	முகத்தில் புண்ணுடையவர்கள்	பயன் இல்லை	எந்தவொரு பயனும் இல்லை; தொடர்ப் பிரச்சனை ஏற்படக்கூடிய வாய்ப்பு உள்ளது

மேற்காணும் திருக்குறளில் காணப்படும் உவமையின் வாயிலாக எவ்வாறு சிந்தனைத் திறன் வெளிப்படுகிறது என்று பார்த்தோம். மேலும் சில குறள்களில் காணப்படும் உவமைகளைக் கீழ்க்காணும் அட்டவணையில் காண்போம்.

குறள்	பொருள்	உவமை	ஒத்ததன்மை	தொடர்புபடுத்துதல்
தீயினாற் சுட்டப்புண் (குறள்:129)	புண்படும்படி பேசும் பேச்சு	தீ	இரண்டும் எதிர்விளைவுகளை ஏற்படுத்துகின்றன	நெருப்பினால் சுட்ட புண் வெளியில் தழும்பு - ருந்தாலும் உள்ளே ஆறிவிடும். ஆனால் உள்ளம் புண்படும்படி பேசுகின்ற பேச்சால் ஏற்படுகின்ற பாதிப்பு என்றும் மறையாது.
- முக்கல் உடையுழி (குறள்:415)	பெரியோர் அறிவுரைகள்	வழுக்கல் பகுதியைக் கடக்க தேவைப்படும் ஊன்றுகோல்	இரண்டும் தக்க நேரத்தில் உதவி செய்யும்	வழுக்கும் சேற்று நிலத்தில் நடப்பார்க்கு ஊன்றுகோல் உதவுவது போல வாழ்க்கையில் வழுக்கல் நேரும்போது ஒழுக்கமுடையவரின் அறிவுரையானது துணை நிற்கும்
ஒழுக்கம் விழுப்பம் (குறள்:131)	ஒழுக்கம்	உயிர்	இரண்டும் மிக உயர்வாகவும் முக்கியமாகவும் போற்றப்பட வேண்டும்	ஒழுக்கம் ஒரு மனிதனுக்குப் பெருஞ் சிறப்பைத் தரவல்லது. - வ்வொழுக்கத்தை உயிரினும் மேலாகக் கருதிக் காக்க வேண்டும்.
உடையர் எளப்படுவது (குறள்:591)	ஊக்கம்	உடையவர்	செல்வம் மென்மேலும் பெருகும்	ஊக்கம் உடையவர்கள் தாம் செல்வம் உடையவர்களாகக் கருதப்படுவார்கள். ஊக்கம் - ல்லாதவர்கள் எவ்வகைச் செல்வங்களைக் கொண்டிருந்தாலும் உடையவர்களாக ஆகமாட்டார்கள்.
நவில்தொறும் ஆ்தயம் (குறள்:783)	நட்பு	ஆ்ல்	மேலும் மேலும் ஆர்வம் ஏற்படும்	படிக்கப் படிக்க ஒரு நயமான ஆ்லின் சிறப்பு அதிகரிப்பதுபோல, நல்ல குணமுடையவர்களின் நட்பு பழகப் பழக - ன்பத்தை அதிகரிக்கும்.

பல்வகைச் செய்யுள்

பாலோடு அளாயநீர் பாலாகும் அல்லது
நீராய் நிறந்தெரிந்து தோன்றாதாம் - தேரின்
சிறியார் சிறுமையும் தோன்றாதாம் நல்ல
பெரியார் பெருமையைச் சார்ந்து.

(நாலடியார்)

பொருள்	உவமை	ஒத்ததன்மை	தொடர்புபடுத்துதல்
பெரியோர்	பால்	புனிதமானது/சுத்தமானது	நல்ல குணம்
சிறியோர்	நீர்	குறையுடையது	நீரும் பாலைப்போன்றே - ருக்கும்.நல்ல குணங்களையுடைய பெரியோருடன் சேர்ந்திருப்பதன்வழி நம்மிடமுள்ள குறைகளும் சிறுமைத் தன்மைகளும் வெளிப்படாது.

4. காட்சிப்படுத்துதல் - கற்பனைத்திறன் *(imagery)*

சிந்தனைத் திறனில் அடுத்ததொரு பரிணாமம் காட்சிப்படுத்துதல் ஆகும். அதாவது ஒரு சூழலையோ அல்லது கருத்தையோ விளங்கிக் கொள்வதற்கு ஒரு காட்சியாகக் கொண்டுவருதல் (Line Brandt:2005). நடைமுறை வாழ்க்கையில் எந்த நிலையில் உள்ள மக்களும் படித்துக் கூறவருகின்ற கருத்தை விளங்கிக் கொள்ளவேண்டும் என்பதற்காக இது பயன்படுத்தப்படுகிறது. இதனை ஆய்வுக்கு எடுத்துப் பார்க்கும் பொழுது மிக நுட்பமான முறையில் கவிதைகள் படைக்கப்பட்டிருப்பதை அறியமுடிகின்றது. இதனைக் கீழ்க்காணும் செய்யுள்வழி அறிய முடிகிறது.

குயிலினம் வதுவை செய்ய,
கொம்பிடைக் குனிக்கும் மஞ்ஞை
அயில்விழி மகளிர் ஆடும்
அரங்கினுக்கு அழகு செய்ய,
பயில்சிறை அரச அன்னம்
பன்மலர் பள்ளி நின்றும்
துயிலெழு, தும்பி காலைச்
செவ்வழி முரல்வ சோலை.

(கம்பராமாயணம்)

மேலே காணப்படும் செய்யுள் எதைக் காட்சிப்படுத்துகின்றது என்றால் குயிற்கூட்டம் - ணைந்திருக்கவும் வேல் போன்ற கூர்விழியுடைய நாட்டியப் பெண்கள் ஆடலரங்கத்திற்கு அழகு செய்ய ஆடுவதைப் போன்று மயில்கள் நாட்டியமாடவும் அரச அன்னப்பறவையானது தாமரை

மலர்களினின்றும் துயில் எழவும் அக்காலை வேளையில் வண்டுகள் உதயராகம் பாடகின்றது போலவும் ஒரு காட்சி படமாக்கப்பட்டிருக்கின்றது.

இங்கு புலவர் ஒரு சூழலை, மிகுந்த கற்பனைத் திறத்தோடு படைத்திருக்கின்றார். இந்த கற்பனைத் திறன் என்பது ஆக்கச் சிந்தனையின் ஒரு பகுதியாகும். மேலும் இந்தக் காட்சியில் உவமை அணியையும் பயன்படுத்தியிருக்கின்றார். அதுவும் அவர் பயன்படுத்திய உவமை வழக்கத்திற்கு மாறான ஒரு செய்தியாகவும் அமைகிறது. அதாவது பொதுவாகப் பெண்களின் சிறப்பைக் கூறவரும்போது அவர்களை மயில்களோடு ஒப்பிடுவர். ஆனால் இக்கவிதையில் மயில்களின் சிறப்பைக் கூறவந்த புலவர் பெண்களை உவமையாகக் குறிப்பிடுகின்றார். இது ஒரு மாறுபட்ட சிந்தனையாகவும் திகழ்கிறது.

ஆக்கச் சிந்தனையானது சிந்திக்கும் ஆற்றலே தவிர அறிவாற்றல் என்பது கிடையாது. ஆகையால் யாவரிடமும் சிந்திக்கும் திறன் புதைந்து கிடக்கிறது. புதுப் புது கருத்துகள் உருவாகுவதற்கும் புதிய கோணத்தில் மாணவர்கள் சிந்தித்துச் செயல்படுவதற்கும் இந்தச் சிந்தனைத் திறன் இன்றியமையாததாக அமைகிறது.

5. **மிகவும் சுருக்கமான கதை வடிவம்.** (*Flash fiction*)

புத்திமான் பலவா னாவான் பலமுளான் புத்தி யற்றால்
எத்தனை விதத்தி னாலு மிடரது வந்தேதீரும்
மற்றொரு சிங்கந் தன்னை வருமுயல் கூட்டிச் சென்றே
உற்றதோர் கிணற்றில் சாயல் காட்டிய வுவமை போல.

(விவேக சிந்தாமணி)

கதையை அடிப்படையாகக் கொண்ட இலக்கியத்தின் மிகவும் சுருங்கிய நடையியல் வடிவம் இது. அதன் நீளத்தைக் குறிக்க சரியான விளக்கம் இல்லாத போதிலும் முந்நூறு சொற்களிலிருந்து இரண்டாயிரம் சொற்கள்வரை செல்ல வாய்ப்புகள் உள்ளன என்று பொதுவாகக் குறிப்பிடுகின்றனர். இவ்வாறான கதைகளை மைக்ரோ பிக்சன் (*micro fiction*) அல்லது மைக்ரோ நர்ரதிவ் (*micro narrative*) என்று அழைப்பர்.

இவ்வாறான நடையைக் கவிதைகளில் பயன்படுத்தும் போது ஒரே கவிதையில் இரண்டு வகையான ஓட்டம் இருப்பதை உணர்வோம். ஒன்று, கவிதையின் பாடுபொருளை ஓட்டிய அம்சம் மற்றொன்று ஏதோ ஒரு சூழல்/ கதையைக் காட்சிப்படுத்தும் அம்சம். படைப்பாளி தான் கூறவரும் கருத்தைத் தெளிவுபடுத்துவதற்கும்; இன்னும் அழுத்தமாகக் கூறுவதற்கும் சுருங்கிய வடிவத்திலான கதையைக் கவிதையில் இணைக்கின்றார். மாணவர்கள் இவ்வாறான கவிதையைப் படிக்கும்போது கருத்தின் சாரத்தை எடுத்துக் கொண்டு கதையை அப்படியே நகர்த்திவிடவேண்டும். மேலும் கதையையும் கூறவந்த கருத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும் நிலையும் இங்கு ஏற்படுகின்றது. இங்குக் கூறப்பட்ட சிங்கமும் முயலும் கதை அறிவுநிலையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது (Cohen:2000). அதாவது நேர் எதிர்ப் பொருள் (*irony*) கொடுக்கக்கூடியதாக அமைகிறது. அதாவது கூற வந்த

கருத்தின் நேரடி பொருளாக கதை அமையும் சூழல் அமையாது. ஆனால் நேர் எதிராக இருந்த நிலையிலும் அதனைப் படித்துத் தொடர்புபடுத்துவதற்குத் அறிவாற்றல் வேண்டும். இவ்வாறான கதைகள் சில வேளைகளில் வேடிக்கையாகவும் கூட பொருள்கொள்ளப்படுகிறது. எது எப்படி இருப்பினும் கூறவந்த கதையினுடைய தத்துவத்தின் ஆழத்தை அறிந்து கொள்ள சிந்தனை நிலையில் மாற்றம் ஏற்படுகின்றது. இது அறிவார்ந்த கவிதை அமைப்பிற்கு மேலும் வலு சேர்க்கின்றது. அதோடுமட்டுமல்லாமல் இந்தக் கதையின் சுருக்கத்தை இங்குக் கொண்டு வந்து சேர்க்கும் முயற்சி எதைக் குறிக்கின்றது என்றால் நாம் வாழும் இந்தச் சமுதாயத்தில் கதையில் காணப்படுவது போல பலமற்றவர்கள் தன் அறிவுக்கூர்மையால் பலமுள்ளவர்களையும் வெல்லலாம் அதே போன்று பலம்பொருந்தியவர்களாக இருந்தாலும் மதிநுட்பம் இல்லாததால் துன்பங்களை எதிர்க்கொள்கின்றனர் என்ற கருத்தும் இக்கவிதையில் ஆழமாகப் பதிந்துள்ளது. ஆக இவ்வாறு மாணவர்கள் இவ்வாறான செய்யுள்களைப் படிக்கும்போது அவர்களின் சிந்தை வளப்படுத்தப்படுகின்றாது என்பதில் ஐயமில்லை.

ஆ) ஆய்வுச் சிந்தனை

1. **ஆராய்தலும் முடிவெடுத்தலும்**

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல். (குறள்:504)

ஒருவனுடைய குணங்களை **ஆராய்ந்து**, பிறகு குற்றங்களையும் ஆராய்ந்து, அவற்றுள் மிகுதியானவை எவையென அறிந்து, மிகுந்திருப்பவற்றால் அவனைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். கருத்து: ஒருவரின் குணநலன்களை ஆராய்ந்து அவர் எத்தகையோர் எனத் **தீர்மானம்** செய்யலாம்.

இந்தக் குறளைப் படிக்கும் ஒரு மாணவன் முதலில் ஒருவனுடைய குணநலன்களை ஆராய முற்படுகின்றான். இங்கு ஆய்ந்தறியும் தன்மை புலப்படுகிறது. அதோடு நில்லாமல் மேலும் தான் ஒரு முடிவுக்கும் வருகிறான் (தீர்மானம் செய்கிறான்). ஆக இவ்வாறான செயல்பாடுகள்தான் ஒருவனுடைய சிந்தனையைத் தூண்டுவதாக அமைகிறது. குறிப்பாக ஆய்வுச் சிந்தனையின் வகைகளில் அடங்கியுள்ள ஆராய்தல் *(analysis)* மற்றும் முடிவு செய்தல் *(conclusion)* என்பவையும் ஆகும். மேலும் ஒருவனுடைய குணங்களை ஆராயும் நிலை ஏற்படுகின்ற போது, அவனிடம் காணப்படுகின்ற குணங்களை பட்டியலிட வேண்டும். இது ஆய்வுச் சிந்தனையின் **சேகரித்து வகைப்படுத்துதல்** *(collect and categorize)* என்ற பிரிவில் அடங்கும். ஆகவே இவ்வாறான ஆராயும் மனப்பாங்கு, சிந்தனை வளப்பத்திற்கு முக்கியப் பங்காற்றுகின்றது.

2. உயர்நிலை/கீழ்நிலை சிந்தனைக்கான வினா.

- தனை - தனால் - வன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல். (குறள்:517)

- ந்தத் தொழிலை - ன்னின்ன காரணத்தால் - வன் செய்து முடிக்கத்தக்கவன் என்பதை ஆராய்ந்தறிந்து அத்தொழிலை அவனிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்பது இந்தக் குறளின் பொருள். தொடுக்கப்படும் வினாக்கள் வாயிலாகவும் ஒருவருடைய சிந்தனையைத் தூண்ட இயலும். குறிப்பாகக் கேட்கப்படும் வினாக்களின் வகைகளுக்கேற்றவாறு ஒருவருடைய சிந்தனை துலங்குகிறது (Supramani,S:2006). அதாவது கீழ்நிலைச் சிந்தனைக்கான வினாக்கள் (*Low Order Thinking Skills*) மற்றும் உயர்நிலைச் சிந்தனைக்கான வினாக்கள் (*High Order Thinking Skills*)(Bloom:1956) இதில் அடங்கும்.

மேற்காணும் குறளில் மூன்று வகையான வினாக்கள் புதைந்து கிடக்கிறன. எது?, ஏன்?, யார்? இதில் எது, யார் எனும் இரண்டு வினாக்கள் கீழ்நிலைச் சிந்தனையைச் சார்ந்தது. மேலும் ஏன் என்ற வினா உயர்நிலைச் சிந்தனையைச் சார்ந்தது. குறிப்பாக ஏன் என்ற வினா, காரணத்தை ஆராயவும் கண்டறியவும் பயன்படுத்தப்படுகிறது. இது உயர்நிலைச் சிந்தனையில் பகுத்தல் (*analysis*) வகையைச் சார்ந்ததாக அமைகிறது. எடுத்துக்காட்டு:

எந்தத் தொழில்?	- இதனை
யாரிடம் கொடுப்பது?	- இவன்
ஏன் கொடுக்கவேண்டும் (எக்காரணத்திற்காக)?	- இதனால்

இந்த மூன்று வினாக்களும் மேற்காணும் ஒரே குறளில் இடம்பெற்றுள்ளது. இவ்வாறான வினாக்கள் புளூமின் சிந்தனைப் படிநிலைகளோடு தொடர்புடையதாக உள்ளது. இவற்றிற்கு விடைகாணும் போது மாணவர்களின் அறிவாற்றலும் வளப்படுத்தப்படுகிறது.

முடிவு

மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதற்கு ஆசிரியர்கள் பல்வேறு அணுகுமுறைகளைப் பயன்படுத்தி வந்தாலும் அவர்களின் சிந்தனைத் திறன் வளார்ச்சிக்குப் பாடத்திட்டத்தில் உள்ள அறிவார்ந்த கவிதைளைத் துணைக்கொண்டு தகுந்த உத்திகளைப் பயன்படுத்தி கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். இதன்வழி மாணவர்களின் சிந்தனைத் திறன் மேலோங்கும் என்பது திண்ணம்.

மேற்கோள் நூல்கள்/ Bibliography

Abd.Rahman Hj Abd.Aziz (2003) Pantun Sebagai Bahan Pendidikan dan Aplikasinya Dalam Pengajaran KOMSAS melalui Kemahiran Berfikir Kritis dan Kreatif, Seminar Pengajaran dan Pembelajaran KOMSAS 7-9 Februari 2003, Universiti Sains Malaysia, Pulau Pinang.

Bloom (1956) Taxanomy of Educational Objectives: The Classification of Educational Goals. Handbook 1: Cognitive Domain. New York: David Mckay

Cohen, Elizabeth. *Flash fiction strives for big impact with few words*. Press & Sun-Bulletin. Aug 13, 2000, Living p. 1, Routledge, London

Dusenbery, Kathleen E (2011), *How Cognitive Reveals Metaphor's Transmotive Power*, Proquest Dissertations and Theses, PQDT, Routledge, London

Frawley Willium (1997). *Vygotsky and Cognitive Science*. Harvard University Press.

Gorys Keraf (2000) *Diksi dan Gaya Bahasa*. Jakarta: PT Gramedia Pustaka Utama.

Kemahiran Berfikir dalam Pengajaran dan pembeljaran. (2001). Kuala Lumpur: Pusat Perkembangan Kurikulum, Kementerian Pendidikan Malaysia.

Krathwohl, D.R., Bloom, B.S., and Masia, B.B. (1964). *Taxonomy of educational objectives: Handbook II: Affective domain*. New York: David McKay Co

Line Brandt and Aage Brandt, *Cognitive Poetics and Imagery*. European Journal of English Studies, (9:2- 117-130), Routledge, London

Rajendran, Nagappan. (2002) *Kesusasteraan sebagai wahana mengajar Kemahiran Berfikir Aras Tinggi*. Prosiding Seminar Kebangsaan Penyelidikan dan Pembangunan Dalam Pendidikan 2000, Bahagian Pend²idikan Guru, Kementerian Pendidikan Malaysia.

Sapir, E. (1929): 'The Status of Linguistics as a Science'. In E. Sapir (1958): *Culture, Language and Personality* (ed. D. G. Mandelbaum). Berkeley, CA: University of California Press

Selvajothi Ramalingam (2009). *Penggunaan Bahasa Kiasan dalam Karya Thirukkural: Satu Analisis*.(Disertasi Sarjana Bahasa Moden) Fakulti Bahasa dan Linguistik. Universiti Malaya.

Simpson, Elizabeth J., *The classification of educational objectives, psychomotor domain*. Urbane, Illinois: Illinois University, 1966.

Supramani.S. (2006). *Penyoalan Guru : Pemangkin Pemikiran Aras Tinggi Murid* dalam *Jurnal Pendidikan Fakulti Pendidikan Universiti Malaya,* Kuala Lumpur. Universiti Malaya.

Tsur, Reuven (1992): *Toward a Theory of Cognitive Poetics*: Netherlands, North Holland.

Vygotsky,L.S (1986) *Thought and Language (Revised edition)* Massachusetts, Massachusetts Institute of Technology Cambridge.

எழுத்துப் படிவத்தில் ஒன்றிருக்க வாசிக்கும்பொழுது வேறாக வாசிக்கும் குறைபாட்டினைக் களைய வழிமுறைகள்

இரா. சிவநேசன்

ஆசிரியக் கல்விக் கழகம், ஈப்போ வளாகம், உளுகிந்தா, பேரா

வாசிப்பின் இறுதி இலக்குகளுள் ஒன்று ஒவ்வொரு மாணவரும் சரளமாக வாசித்தலே ஆகும். அதுவும் வாசிக்க வேண்டியதை எவ்விதப் பிழைகளும் இன்றி உள்ளதை உள்ளவாறு வாசித்தல் வேண்டும் . எழுத்துப் படிவத்தில் ஒன்றிருக்க எழுத்தாலும் சொல்லாலும் அச்சொல்லைப் போன்றே இருக்கும் வேறொன்றாக வாசித்துவிட்டுப் போவதல்ல நல்ல சரளமான வாசிப்பிற்கு அழகு. ஐந்தாம் படிவம் வரை தமிழ் கற்றவர்கள் கூட இத்தகைய பிழைகள் செய்வதை அண்மைய காலமாகக் காணமுடிகின்றது.

பயிற்றுப் பணி ஆசிரியர்களை நான் மேற்பார்வை இடச்சென்றபொழுது மேற்குறிப்பிட்ட கூற்றை உறுதி செய்வது போல் மாணவர்களின் வாசிப்பு அமைந்துள்ளதைக் காண முடிந்தது. தொடக்கப்பள்ளி மாணவர்களும் அதே தவறுகளைத் தான் செய்கின்றனர். "அணிந்திருக்கின்றனர்" என்று ஒரு சொல் இருக்கின்றது என்று வைத்துக் கொள்ளுங்கள் அதை " அணிந்திருக்கிறார்" என வாசிக்கின்றனர். "வந்திருந்தனர்" என்பதை "வந்தார்கள்" என்றும் வாசிக்கின்றனர். இவ்வாறு பல சொற்கள் வாசிக்கப்படுவதைக் காணமுடிகின்றது. இதே நிலை ஆசிரியக்கல்வி நிலையங்களில் பயிலும் ஒரு சில பயிற்சி ஆசிரியர்களிடமும் காணமுடிகின்றது. குறிப்பாக, ஆசிரியர் பட்டப்படிப்பு அணிய நிலை மாணவர்களை வாசிக்க வைத்துப் பார்த்ததிலும் ஏறக்குறைய இதே மாதிரியான வாசிப்புத் தவறுகள் நிகழ்வதைக் காண முடிந்தது.

"நல்வாழ்த்துகள்" என்றிருப்பதை "நல்வாழ்த்துக்கள்" என்றும்
"பெரிதாக்கியிருக்கிறோம்" என்றிருப்பதை "பெரிக்கியிருக்கிறோம்"/
"பெரியதாக்கியிருக்கிறோம்" என்றும்
"நாடியவருக்கெல்லாம்" என்பதை "நாடியருக்கெல்லாம்" என்றும்
"மாநிலங்களிடையே" என்பதை "மாநிலங்களுக்கிடையே" என்றும்
"கொண்டாடப்படவுள்ளது" என்பதை "கொண்டாடப்பட்டுள்ளது" என்றும் ஒரு சில மாணவர்கள் வாசிக்கக் காண முடிந்தது

மேற்குறிப்பிட்ட வாசிப்புக் குறைபாட்டிற்கான காரணங்களை ஆராய முற்பட்டபோது மாணவர்கள் கடந்து வந்த பாதையைச் சற்றுப் பின்னோக்கிப் பார்த்ததில் "கே.பி.எசு.ஆர்." பாடத்திட்ட அமலாக்கத்தின்போது வலியுறுத்தப்பட்டு வந்த "சொல்"

முறை வாசிப்பு அறிமுகத்திற்கும் இதற்கும் தொடர்பு இருப்பது போல் தெரிகிறது. "கே.பி.எசு. ஆர்." அறிமுகப்படுத்தப்பட்ட காலக்கட்டத்தில் எழுத்து முறைக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. ஆங்கிலம் வாசிக்கக் கற்பிப்பது போல் முழுச்சொல் முறையில் தமிழையும் கற்பிக்கலாம் என்ற எண்ணம் மேலோங்கி இருந்தது. இதன் காரணமாகக் காலங்காலமாக தமிழ் ஆசிரியர்களால் பின்பற்றப் பட்டு வந்த எழுத்து முறைக்கு கொடுக்கப்பட்டிருந்த முக்கியத்துவம் குறைந்து எழுத்து முறை வாசிப்பு அறிமுகம் அதிகம் வலியுறுத்தப் படாததால் இந்த நிலை ஏற்பட்டிருக்கலாமா எனவும் எண்ணத் தோன்றுகின்றது.

மேற்குறிப்பிட்ட வாசிப்புக் குறைபாட்டினைக் களைய ஒரு சொல்லை மாணவன் தவறாக வாசித்தால் அச்சொல்லை ஆசிரியர் சரியாக வாசித்துக் காட்டி அப்பிழையைக் களைந்து விடலாம் என்கின்ற முயற்சியில் ஆசிரியர்கள் சிலர் ஈடுபடுவதைப் பள்ளியில் காணமுடிகிறது; இந்த அணுகுமுறை மிகுந்த பயனை ஏற்படுத்திவிடுவதாகத் தெரியவில்லை. அக்கணம் மாணவர்கள் ஆசிரியர் கூறியதையே சரியாகத் திரும்பக் கூறி பிழையைச் சரி செய்து விடுகின்றனர். ஆசிரியரும் அம்மாணவன் இனிமேல் பிழையில்லாமல் வாசிப்பான் என்ற எண்ணத்தோடு அமைதி அடைகின்றார். ஆனால், அதே மாணவன் வேறொரு சூழலில் அதே பிழையைச் செய்வதைக் காண முடிகின்றது.

மேற்குறிப்பிட்ட குறைபாட்டினைக் களைய நம்முடைய பாரம்பரிய வாசிப்புக்கற்பித்தல் முறையாகிய ஒவ்வொரு எழுத்தாகக் கூட்டி வாசிக்கும் "எழுத்துக்கூட்டி வாசிக்கும் முறையை" மீண்டும் நாம் நமது மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தி வலியுறுத்த வேண்டியுள்ளது.

எடுத்துக்காட்டாக "வந்திருக்கின்றனர்" எனும் சொல்லை ஒரு மாணவன் பிழையாக வாசிக்கின்றான் என்று வைத்துக்கொள்வோம். அதைச் சரிப்படுத்தப் பின் வரும் முறையைப் பின்பற்றலாம்.

"வந்திருக்கின்றனர்"

முதல் எழுத்தைக் காட்டி இது என்ன? "வ"

அடுத்தது என்ன? "ந்"

இவ்விரு எழுத்துகளையும் சேர்த்தால் "வந்" சேர்த்து வாசி.

மூன்றாவது எழுத்து என்ன? "தி"

இப்பொழுது மூன்று எழுத்துகளையும் சேர்த்து வாசித்தால் எப்படி வாசிப்பது? . "வந்தி" . சேர்த்து வாசி. வந்தி

அடுத்த எழுத்து "ரு" இப்பொழுது சேர்த்து வாசித்தால் "வந்திரு"

அடுத்த எழுத்து என்ன? "ந்" இப்பொழுது "வந்திருந்"

என ஒவ்வொரு எழுத்தாகக் கூட்டி மாணவர்களை சுயமாக வாசிக்க வைக்க வேண்டும். அல்லது

முதல் எழுத்தைக் காட்டி இது என்ன "வ"
அடுத்தது என்ன? "ந்"
சேர்த்தால் வந்
என்று இரண்டு எழுத்துகளையும் சேர்த்து உச்சரிக்கக் கற்றுக்கொடுத்துவிட்டு

அடுத்து
இது என்ன? "தி"
அடுத்த எழுத்து "ரு"
இப்பொழுது
"திரு"

அடுத்து
"வந்" + "திரு" சேர்த்தால் என்ன ஆகும்?
அவர்களாகவே தானாக இணைத்துச் சேர்த்து வாசிக்கத் தொடங்கி விடுவார்கள்.
வந்திரு என வாசித்து முடித்துவிட்ட பின் அடுத்த நிலைக்குச் செல்ல வேண்டும்
அடுத்த எழுத்து என்ன? ந்
இப்பொழுது "வந்திருந்"

சரி, அடுத்த எழுத்து என்ன?
த
கால் வந்தால் என்னவாகும்? தா என்ன சொல்லு "தா"
அடுத்த எழுத்து ன்
இப்பொழுது சேர்த்தால் என்னவாகும்? "தான்" என்று மாணவர்கள் தானாகவே கூறுவர்.
அடுத்து இவ்விரண்டு சொற்கூட்டங்களையும் சேர்த்தால் என்னவாகும்?
"வந்திருந்" + "தான்"

இப்பொழுது இரண்டையும் சேர்த்தால் என்ன ஆகின்றது?
வந்திருந்தான்

இவ்வாறு மாணவர்கள் வாசிக்கத் தடுமாறுகின்ற அல்லது தவறாக வாசித்துச் செல்லும் சொற்களை இவ்வாறு ஒவ்வொரு எழுத்தாகக் கூட்டி வாசிக்க வைத்தால் நல்ல பலனைக் காணலாம். நீண்ட சொற்களாக இருந்தால் அவற்றை இரண்டாகவோ மூன்றாகவோ அல்லது பொருள் உள்ள பகுதிகளாகவோ பிரித்து எழுத்துக்கூட்டி வாசிக்கக் கற்பித்தால் பிழையாகக் வாசிக்கும் மாணவர்கள் மிக விரைவில் தங்கள் குறைபாட்டினை உணர்ந்து சரியாக வாசிக்க முற்படுவார்கள் என்பது திண்ணம். தமிழ் இலக்கணத்தில் உள்ள பகுபத உறுப்பிலக்கணத்தையும் சொற்களை பிரித்து வாசிக்கப் பயன்படுத்திக்கொள்ளலாம். சொல்லின் பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை ஆகியவற்றை சொற்பிரிப்புக்கு ஏற்றவாறு பயன்படுத்திகொள்ளலாம்.

எனவே எழுத்துப் படிவத்தில் ஒன்றிருக்க எழுத்தாலும் சொல்லாலும் அச்சொல்லைப் போன்றே உள்ள வேறு ஒரு சொல்லாக வாசித்துச் செல்லும் மாணவர்களை சொற்களைப் பிரித்து வாசிக்கப் பயிற்சி வழங்கலாம். சொற்களில் உள்ள எழுத்துகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் சொல்லின் அமைப்பு முறையின் அடிப்படையிலும் சொற்களைப் பிரித்துக் கூறுபோட்டுக் வாசிக்கக் கற்பிக்கலாம். சொல்லின் முதல் இரு எழுத்துகளைச் சேர்த்து வாசிக்க வைக்கலாம். பின்பு அதனோடு மூன்றாவது எழுத்தையும் சேர்த்து வாசிக்க வைக்கலாம். அல்லாவிட்டால், சொல்லை இரண்டு கூறாகப் பிரித்து எழுத்துக் கூட்டி வாசிக்க வைத்துப் பின்பு நான்கு எழுத்துகளையும் ஒரு சேரவாசிக்க வைக்கலாம். தேவைக்கேற்பத் தமிழ் இலக்கணத்தில் உள்ள பகுபத உறுப்பிலக்கணத்தையும் சொற்களை பிரித்து வாசிக்கப் பயன்படுத்திக்கொள்ளலாம். சுருங்கக் கூறின் நமது மரபு வழி வாசிப்புக் கற்பிக்கும் முறையாகிய எழுத்தொலிகளை இணத்துக் கற்பிக்கும் முறையாகிய எழுத்துக்கூட்டி வாசிக்கும் முறையைப் பயன்படுத்தி வாசிப்பின் தரத்தை மேம்படுத்தலாம் என உறுதியாக நம்பலாம்.

துணைநூல்கள்

சுப்புரெட்டியார், ந. (2010). தமிழ் பயிற்றுமுறை. சென்னை: மெய்யப்பன் பதிப்பகம்

கணபதி,வி. (2011) நற்றமிழ் கற்பிக்கும் முறைகள். சென்னை: சாந்தா பப்ளிஷர்ஸ்

இரத்தினசபாபதி, பி. (2003). தரம் மிகு தமிழ்க்கல்வி. சென்னை: அம்சா பதிப்பகம்

இரத்தினசபாபதி, பி. (2007). செம்மொழிக் கல்வி "தமிழ்". சென்னை: சாந்தாபப்ளிஷர்ஸ்

‘தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் இருவழித் தொடர்புத்தளத்தின் பங்கு’

சி. சுப்புலெட்சுமி
தலைவர் 2 / தமிழ்மொழி
தாய்மொழிகள் துறை
பாடத்திட்ட வரைவு மற்றும்
மேம்பாட்டுப் பிரிவு
கல்வி அமைச்சு, சிங்கப்பூர்

சாந்தி காளிமுத்து
பாடத்திட்ட வரைவு அதிகாரி
தாய்மொழிகள் துறை
பாடத்திட்ட வரைவு மற்றும்
மேம்பாட்டுப் பிரிவு
கல்வி அமைச்சு, சிங்கப்பூர்

முன்னுரை

அன்றாட வாழ்க்கையில் தன்னம்பிக்கையுடன் கருத்துப்பரிமாறிக் கொள்ளும் மொழித்திறன் வாய்ந்த மாணவர்களை உருவாக்குவதே சிங்கப்பூர்த் தாய்மொழிக் கல்வித்திட்டத்தின் முக்கிய நோக்கங்களுள் ஒன்றாகும். ஆங்கிலத்தோடு தாய்மொழியிலும் திறம்படக் கருத்துப்பரிமாற்றம் செய்யும் திறம் பெறுவது போட்டித்தன்மை மிகுந்த உலகில் சாதகமான ஒரு நிலையை ஏற்படுத்திக்கொள்ளப் மாணவர்களுக்குப் பெரிதும் உதவும். தமிழ் பயிலும் மாணவர்களிடையே தமிழ் ஆர்வத்தை வளர்ப்பதும், அன்றாட வாழ்க்கையில் தமிழைக் கருத்துப்பரிமாற்றத்துக்குப் பயன்படுத்த ஊக்குவிப்பதும் சிங்கப்பூர்க் கல்வியாளர்கள் எதிர்கொள்ளும் முக்கியச் சவால்களாகும். அதனால், கருத்துப்பரிமாற்றத் திறன்களையும் தாய்மொழி கற்றலில் ஆர்வத்தையும் வளர்க்கப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றுள் முக்கிய இடம்பெறுவது தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் கூடுதல் பயன்பாடாகும். கண்மூடித் திறப்பதற்குள் பல புதிய பரிமாணங்களை எட்டிய வண்ணம் இருக்கும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் நாடுகளுக்கிடையே உள்ள இடைவெளியை வெகுவாகக் குறைத்துள்ளது. உலக அளவில் கற்றல் கற்பித்தலியலில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. அம்மாற்றங்களுக்கு ஏற்றவாறு தாய்மொழி கற்றலும் வளர்ச்சி கண்டு வருகிறது. ‘*மாணவர்களும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத் திறமை வாய்ந்தவர்களாக இருப்பதோடு, தாய்மொழி கற்பதற்குத் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதிலும் ஆர்வமுடையவர்களாக உள்ளனர்*’ என்பதை 2010-இல் சிங்கப்பூரில் நடத்தப்பட்ட தாய்மொழிகள் மறு ஆய்வுக்கான மதிப்பாய்வு காட்டியது. மாணவர்களின் இத்திறனைத் தாய்மொழிக் கல்விக்குப் பயன்படுத்திக்கொள்ளும் நோக்கில் சிங்கப்பூர்க் கல்வி அமைச்சுப் பல திட்டங்களை வரைந்துள்ளது. அவற்றுள் முக்கியமானது சிங்கப்பூரின் மூன்று தேசிய மொழிகளுக்கும் (சீனம், மலாய், தமிழ்) பொதுவான **இருவழித் தொடர்புத்தளத்தின்** உருவாக்கமாகும்.

தாய்மொழிகளுக்கான இருவழித் தொடர்புத்தளம்

'கற்றலில் ஆர்வம், பயன்பாட்டில் திறமை' என்பது 2010 தாய்மொழிகள் மறு ஆய்வின் முழக்க வரியாகும். தத்தம் தாய்மொழிகளைத் தங்கள் அன்றாட வாழ்வில் மாணவர்கள் திறம்படப் பயன்படுத்த வேண்டும்; சிங்கப்பூரில் தாய்மொழிகளை வாழும் மொழிகளாக்க வேண்டும் என்பது தாய்மொழிகளுக்கான இலக்காகும். இந்த இலக்கையடைய பள்ளிகளில் தாய்மொழி கற்றல் கற்பித்தல் என்பது மொழியின் மீது மாணவர்களின் ஆர்வத்தையும் பற்றுதலையும் வளர்க்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். அதற்காகச் சிங்கப்பூர்க் கல்வி அமைச்சுப் பல முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. அவற்றுள் ஒன்றுதான் தாய்மொழிகளுக்கான இருவழித் தொடர்புத்தளம். இது இணையம்வழிச் செயற்படும் கற்றல் கற்பித்தலுக்கான ஒரு தளமாகும். தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தில் மாணவர்கள் கொண்டுள்ள ஈடுபாட்டைப் பயன்படுத்தித் தாய்மொழிக் கல்வியில் மாணவர்களின் ஆர்வத்தை வளர்க்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு இந்த இருவழித் தொடர்புத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் கற்றலையும் ஆசிரியர்களின் கற்பித்தலையும் மேம்படுத்தத் தாய்மொழிகளுக்கான இந்த இருவழித் தொடர்புத்தளம் பெரிதும் உதவி வருகிறது. இத்தளம் ஒருங்கிணைந்த மொழி கற்றலுக்கான சூழலை வழங்குவதோடு மாணவர்கள் தம் தாய்மொழியில் கருத்துப்பரிமாற்றத் திறனை வளர்த்துக்கொள்வதற்கு ஏதுவான நடவடிக்கை சார்ந்த பல கற்றல் வளங்களையும் வழங்குகிறது. தொடக்கநிலை, உயர்நிலை, புகுமுக வகுப்புப் பாடக் கலைத்திட்டங்களையொட்டி அமைந்த பல்வேறு வளங்கள் இத்தளத்தின் பல்லூடக நூலகத்தில் ஏற்றம் செய்யப்பட்டுள்ளன. இவற்றை மாணவர்களும் ஆசிரியர்களும் ஆர்வத்தோடு பயன்படுத்திப் பயன்பெற்று வருகின்றனர்.

மாணவர்கள் இத்தளத்தின் வாயிலாக ஆசிரியர்கள் உருவாக்கும் பயிற்சிகளை/நடவடிக்கைகளைச் செய்யலாம்; தங்கள் கருத்துகளைப் பதிவு செய்யலாம்; பிற மாணவர்களின் படைப்புகளைப்பற்றிக் கருத்துகள் தெரிவிக்கலாம்; அவற்றை மதிப்பீடு செய்யலாம்; இன்னும் பற்பல நடவடிக்கைகளில் ஈடுபட்டுத் தங்கள் மொழியாற்றலைக் குறிப்பாக இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களை மேம்படுத்திக்கொள்ளலாம். ஆசிரியர்களுக்கும் இத்தொடர்புத்தளம் பேருதவியாக இருக்கிறது. மாணவர்களின் வேறுபட்ட திறன்களுக்கு ஏற்பப் பயிற்சிகளை/நடவடிக்கைகளை உருவாக்கவும், ஏற்றம் செய்யவும், அவற்றை மதிப்பீடு செய்யவும், மாணவர்களின் படைப்புகளைப்பற்றிக் கருத்துகள் தெரிவிக்கவும், பிற ஆசிரியர்களோடு தங்கள் படைப்புகளைப் பகிர்ந்துகொள்ளவும், மற்ற ஆசிரியர்களின் தயாரிப்பை அவர்களின் அனுமதியோடு தங்கள் மாணவர்களுக்கு ஏற்ப மாற்றி அமைத்துக்கொள்ளவும் இத்தளம் உதவுகிறது.

இருவழித் தொடர்புத்தளத்தின் முக்கிய அம்சங்களும் பயன்களும்

'21-ஆம் நூற்றாண்டில், கல்வி சார்ந்த திறன்களோடு ஏனைய செயல் திறன்களையும் வளர்க்க வேண்டிய தேவை பெருகியுள்ளது. இக்காலத்தில், மாணவர்களுக்கு அடிப்படையான பாட அறிவு, மொழித்திறன்கள் ஆகியவற்றில் போதிய அறிவும் பயிற்சியும் இருந்தால் மட்டும் போதாது. வாழ்க்கைச் சவால்களைச் சந்திக்கவும் எதிர்கொள்ளவும் அவர்களுக்குப் பாட அறிவு, மொழித்திறன்களோடு ஏனைய 21-ஆம் நூற்றாண்டுச் செயல் திறன்களும் மிகவும் அவசியமாகின்றன.' *என உயர்நிலை தமிழ்மொழிப் பாடத்திட்டம் 2011-இல் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல் மற்ற எல்லா நிலைகளுக்குமான பாடத்திட்டங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. 21-ஆம் நூற்றாண்டு திறன்களுள்* தகவல் தொடர்புத் தொழில்நுட்பத் திறனும் ஒரு முக்கியத் திறனாக வலியுறுத்தப்பட்டுள்ளது. இத்திறனை வளர்க்கும் கடப்பாட்டோடு இணையம் சார்ந்த இந்த இருவழித் தொடர்புத்தளம் சிங்கப்பூர்க் கல்வி அமைச்சால் உருவாக்கப்பட்டுள்ளது. உலகமயமாகி வரும் இக்காலக்கட்டத்தில் மாணவர்கள் பலவற்றை அறிந்துகொள்ளச் சிறந்த ஊடகமாக, சன்னலாக, பிறரோடு தொடர்பை வளர்த்துக்கொள்ள நல்ல பாலமாகத் திகழ்வன இணையத்தளங்களாகும். இணையத்தள வசதிகளைக் கற்றல் கற்பித்தலுக்கு நன்முறையில் பயன்படுத்திக்கொள்ளவும் இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறகளை வளர்க்கவும் இத்தொடர்புத்தளம் புதிய பல அம்சங்களுடன் உருவம் பெற்றுள்ளது.



இருவழித் தொடர்புத்தளத்தின் முக்கிய அம்சங்களும் பயன்களும்:

1. *நேரடி ஒலி/ஒளிப்பதிவுகள்* - ஒரு ஒளிக்காட்சியைப் பார்த்த பிறகு, அது குறித்த தம் கருத்துகளை மாணவர்கள் நேரடியாகத் தளத்திலேயே ஒலிப்பதிவு அல்லது ஒளிப்பதிவு செய்யலாம். தாங்கள் பதிவு செய்தவற்றை மீள்நோக்குவதற்கும் திருத்தி மீண்டும் பதிவேற்றம் செய்வதற்குமான வசதிகள் தளத்தில் இருக்கின்றன. இவை மாணவர்கள் தம் கற்றலுக்குப் பொறுப்பேற்கவும்

செயல்திறனை மேம்படுத்தவும் வாய்ப்பளிப்பதோடு அவர்களின் வாய்மொழித் திறனை வளர்த்துக்கொள்ளவும் உதவுகிறது.

2. *உரை உள்ளீடு* - மாணவர்களின் எழுத்தாற்றலை மேம்படுத்த வாய்ப்பளிக்கும் வகையில் தாய்மொழிகளில் தட்டச்சுச் செய்து ஏற்றம் செய்வதற்கான வசதிகள் தளத்தில் உள்ளன. இந்தக் கணினி யுகத்தில் ஆங்கிலத்தில் மட்டுமன்றித் தத்தம் தாய்மொழிகளிலும் தட்டச்சுச் செய்ய அறிந்திருப்பது கூடுதல் பலனளிக்கும்.

3. *கருத்துத்தெரிவிப்பு* - இது இத்தளத்தின் சிறப்பு அம்சமாகும். கற்றலுக்கான மதிப்பீட்டை ஊக்குவிக்கும் வகையில் இக்கருத்துத்தெரிவிப்பு வசதிகள் உள்ளன. ஆசிரியர், மாணவர் இருவருமே தங்கள் கருத்துகளை ஒலி/ஒளிப்பதிவுகள் வாயிலாகத் தெரிவிக்கவும் உரைவிளக்கங்கள் அளிக்கவும் முடியும். இந்தச் சிறப்பம்சம் பேச்சுவழி, எழுத்துவழிக் கருத்துப்பமாற்றம் நிகழ வாய்ப்பளிக்கிறது.

4. *சுய முனைப்புப் பணிகள் - 21-ஆம் நூற்றாண்டுக்குத் தேவையான திறன்களை வளர்க்க உதவும் வண்ணம்* சுய முனைப்புப் பணிகளில் மாணவர்கள் ஈடுபடுவதற்கான வசதிகள் தளத்தில் உள்ளன. இதில் மாணவர்கள் தாம் கேட்டவை படித்தவை அல்லது பார்த்தவை பற்றிய தம் கருத்துகளைப் பதிவு செய்யலாம். பதிவு செய்யப்பட்டவை ஆசிரியர் கணிப்புச் செய்த பிறகே மற்ற மாணவர்களின் பார்வைக்குச் செல்லும். இது மாணவர்களிடையே சுயமுனைப்பாற்றலை வளர்க்க உதவும்.

5. *பணி வங்கி* - ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேவைக்கும் திறனுக்கும் ஏற்ற பணிகளை உருவாக்கிச் சேமித்து வைக்கவும் பிறருடன் அவற்றைப் பகிர்ந்துகொள்ளவும் முடியும். இந்த வசதி ஆசிரியர்களுக்கிடையேயும் பள்ளிகளுக்கிடையேயும் தொழில்முறை சார்ந்த பகிர்வுணர்வை வளர்க்க உதவும்.

6. *சரளமான வாசிப்புக்கான பணிகள்* - மாணவர்களின் வாசிப்புத் திறனை வலுப்படுத்தும் நோக்கத்தோடு பல வாசிப்புப் பகுதிகள் ஏற்றம் செய்யப்பட்டுள்ளன. முன் பதிவு செய்யப்பட்ட மாதிரி வாசிப்புத் பதிவுகளைக் கேட்டு மாணவர்கள் தம் வாசிப்புத் திறனை மேம்படுத்திக்கொள்ளலாம். மேலும், வழங்கப்பட்டுள்ள பகுதியை வாசித்து ஆசிரியரின் கணிப்பிற்காகவும் சக மாணவர்களின் கருத்துகளை அறிவதற்காகவும் பதிவேற்றம் செய்யலாம். அவ்வாறு செய்வதற்கு முன்னர்த் தங்கள் பதிவைப் பலமுறை கேட்டுத் திருத்திக்கொள்ளத் தளத்தில் வசதிகள் உள்ளன.

மொழியை முனைப்போடும் ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும் கற்பிக்கும்போதுதான் கற்றல் மனங்கொள்ளக் கூடியதாகவும் சுகமானதாகவும் அமைகிறது. இந்தச் சுகமான கற்றல் அனுபவத்தை ஏற்படுத்தித் தர இருவழித் தொடர்புத்தளம் பெரிதும் உதவுகிறது. மேலே பட்டியலிடப்பட்டுள்ள அம்சங்கள் மாணவர்கள் தங்களுடைய கருத்துப்பரிமாற்றத் திறனை வளர்த்துக்கொள்வதற்கு உகந்தவையாகும். ஆசிரியர்கள் இருவழித் தொடர்புத்தளப் பாடத்திற்குத் தேவையான ஊக்கக்கூறுகளை உருவாக்க இணையத்தில் கிடைக்கப்பெறும் பலவகையான வளங்களைப் பயன்படுத்தலாம். அப்படி உருவாக்கும்போது மாணவர்களின் தேவைக்கும் திறனுக்கும் ஏற்ப வெவ்வேறு பயிற்சிகளைத் தயாரித்து ஏற்றம் செய்யவும் தளத்தில் வசதிகள் உள்ளன. மாணவர்களும் வழங்கப்படும் ஊக்கக்கூறுகளைப் பார்த்த பிறகு தங்களுக்கு ஏற்ற பயிற்சியைத் தெரிவு செய்யலாம்; சக மாணவர்களது பணிகளைப் பார்வையிடவும் அவர்களது மொழித்திறன்கள் மேம்படக் கருத்துகள் தெரிவிக்கவும் இத்தளம் வாய்ப்பளிக்கிறது. தங்கள் கருத்துகளைப் பகிர்ந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் அவற்றை வாய்மொழியாகப் பதிவுசெய்து தெரிவிக்கவும் எழுத்துவழித் தெரிவிக்கவும் இத்தளத்தில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. சக மாணவர்களின் கருத்துகளும் மதிப்பீடும் ஒருங்கிணைந்த கற்றலுக்கு வழிவகுக்கும். ஆசிரியர்களும் மாணவர்கள் சமர்ப்பிக்கும் பணிகளை இணையத்திலேயே மதிப்பிடுவதோடு மாணவர்களின் பணிகளுக்கு உரைவிளக்கமும் அளிக்க முடியும். மேலும், இத்தளத்தின் வாயிலாக ஆசிரியர்கள் மாணவர்களின் செயற்பாடு தொடர்பான வளரறி அறிக்கைகளையும் உருவாக்கலாம். இவை யாவும் மாணவர்களின் கற்றலை வலுப்படுத்தப் பெரிதும் உதவும்.

தளத்தைப் பற்றி ஆசிரியர் மாணவர் கருத்துகள்

இருவழித்தொடர்புத் தளம் 2011-ஆம் ஆண்டில் முதற்கட்டச் முன்னோட்டச் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. ஆகஸ்டு முதல் அக்டோபர் வரை நடத்தப்பட்ட இச்சோதனையில் 135 ஆசிரியர்களும் 2212 மாணவர்களும் பங்குபெற்றனர். சோதனையின் இறுதியில் சேகரித்த கருத்துக்கணிப்பில் 86.7 விழுக்காட்டு மாணவர்கள் இருவழித்தொடர்புத் தளத்தில் உள்ள பாடங்கள் தங்கள் தன்னம்பிக்கையை வளர்க்க உதவின என்று தெரிவித்தனர். தளத்தில் தங்கள் கருத்துகளை ஒளிப்பதிவு செய்து, ஒளியேற்றிப் பார்த்துப் பின்னர்த் தாங்கள் செய்த பிழைகளைத் திருத்தி மீண்டும் பதிவேற்றம் செய்யும்போது மாணவர்கள் தங்கள் கற்றலுக்கு அவர்களே பொறுப்பேற்கின்றனர்; அவர்களது தன்னம்பிக்கையும் வளர்கிறது. 92.7 விழுக்காட்டுத் தமிழாசிரியர்கள் தாங்கள் உருவாக்கும் பாடங்கள் வகுப்பினரிடையே கருத்துப்பரிமாற்றம் நிகழ்வதற்குப் பெரிதும் உதவியுள்ளன என்றும் குறிப்பிட்டிருந்தனர். இதுபோல் தளத்தின் மேம்பாட்டிற்கும் பல கருத்துகளைத் தெரிவித்திருந்தனர்.

2012-ஆம் ஆண்டில் இருவழித்தொடர்புத் தளம் ஆசிரியர்களின் கருத்துகளையும் மாணவர்களின் விருப்பங்களையும் கருத்திற்கொண்டு மேம்படுத்தப்பட்டு இரண்டாவது கட்டச் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இம்முறை 286 ஆசிரியர்களும் 8421 மாணவர்களும் இருவழித்தொடர்புத் தளத்தைப் பயன்படுத்தினர். இம்முறை நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில் 92.7

விழுக்காட்டு மாணவர்கள் தமிழ்மொழியை இத்தளத்தின்வழிக் கற்றுக்கொள்வது தமக்கு மிகவும் பிடித்திருக்கின்றது என்றும் 100 விழுக்காட்டுத் தமிழாசிரியர்கள் தங்கள் மாணவர்கள் தமிழியில் தன்னம்பிக்கையோடு கருத்துப்பரிமாற்றம் செய்தனர் என்றும் கூறினர்.

இருவழித்தொடர்புத் தளத்தின் முன்னோட்டச் சோதனையில் பங்குபெற்ற பள்ளிகளுள் ஒன்றான ஹுவாமின் தொடக்கப்பள்ளி மாணவர்களிடம் நேர்காணல் ஒன்று நடத்தப்பட்டது. நேர்காணலில் கலந்துகொண்ட மாணவர் ஒருவர் இந்தத் தளத்தில் தம் நண்பர்களின் ஒப்படைப்புகளுக்குக் கருத்துத்தெரிவிப்பு வழங்கும்போது தாம் வழக்கமாகச் செய்யும் பிழைகளை உணர்ந்து திருத்திக்கொள்ள முடிந்தது என்று கூறினார். மேலும் இத்தளத்தைப் பயன்படுத்தியதன் பயனாகத் தற்போது தம் ஆசிரியர் முன்பும் சக மாணவர்கள் முன்பும் தன்னம்பிக்கையுடன் பேச முடிவதாகவும் சொன்னார்.

ஆசிரியர், திருமதி ஹேமலதா விஷ்ணு இத்தளத்தின் பயன்பாடு குறித்துக் கூறுகையில், 'கூச்சப்படும் மாணவர்கள்கூட இப்போது தன்னம்பிக்கையுடன் சற்று உரக்கவே பேசுகிறார்கள்,' என்று கூறினார். அதோடு இத்தளத்தின் உதவியால் ஒவ்வொரு மாணவரின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும் அவர்களின் தேவைக்கேற்பப் பாடங்களை வடிவமைக்கவும் தன்னால் முடிகிறது என்றும் கூறினார். பல்லூடக நூலகத்தில் உள்ள வளங்கள் கற்பித்தல் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் உள்ளன என்றும் மற்ற ஆசிரியர்கள் பதிவேற்றம் செய்யும் பாடக்குறிப்புகள் புதிய உத்திமுறைகளைத் தெரிந்துகொள்ள வாய்ப்பளிப்பதாகக் கூறினார்.

தெக் வாய் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் எவ்வாறு இருவழித்தொடர்புத் தளத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்பதைப் பார்க்கச் சென்றிருந்தபோது அவ்வகுப்பு ஆசிரியர், திருமதி கங்கா கதிரவன், அன்றைய பாடம் குறித்து மாணவர்களுடன் ஒரு கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார். அதைத் தொடர்ந்து மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்துக் கலந்துரையாடல் தொடர்பாக மின்னஞ்சல் எழுதுதல், வாய்மொழியாகக் கருத்துத் தெரிவித்தல், வாசிப்புப் பணி என இருவழித் தொடர்புத்திறனுக்கான பணிகளை ஒவ்வொரு குழுவுக்கும் பிரித்துக் கொடுத்தார். மாணவர்கள் ஒவ்வொருவரும் ஆசிரியர் கொடுத்த பணியை மிகவும் ஆர்வத்தோடு செய்து முடித்தனர். மாணவர்களில் ஒருவரான மிதுலா, தம் நண்பர்கள், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பணிகளை எவ்வாறு செய்திருக்கின்றனர் என்பதைத் இருவழித் தொடர்புதளத்தின்வழித் தன்னால் பார்க்க முடிந்தது என்றும் அப்பணிகளை மேம்படுத்துவதற்குத் தன்னால் கருத்து வழங்க முடிந்தது என்றும் மிகவும் மகிழ்ச்சியுடன் கூறினார்.

இருவழித்தொடர்புத் தளம் நம் மாணவர்களின் மொழி ஆர்வத்தைத் தூண்டி அவர்களைத் தன்னம்பிக்கையோடு தாய்மொழியைப் பேசும் ஒருவராக உருவாக்கப் பயன்படும் ஒரு சிறந்த இணையத்தளமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. இத்தளம் இவ்வாண்டு மார்ச் மாதத்தில் பள்ளிகளுக்கு அமலாக்கம் செய்யப்பட்டுள்ளது. மாணவர்களும் ஆசிரியர்களும் ஆர்வத்தோடு இத்தளத்தைப் பள்ளிகளில் பயன்படுத்தி வருகின்றனர். மேலும் இத்தளத்தை மாணவர்கள் பள்ளி வேளைக்குப் பின்னரும் பயன்படுத்திச் சுயமான கற்றலை மேற்கொள்கின்றனர். ஆசிரியர்

ஒவ்வொருவரும் தம் மாணவர் அனைவரும் மேற்கொள்ளும் கற்றல் நடவடிக்கைகளை இத்தளத்தில் கண்காணித்து அவர்களின் மொழியாற்றல் மேம்படுவதற்கு உதவி வருகின்றனர்.

முடிவுரை

ஆசிரியர் நேரில் கற்பிப்பது மட்டுமன்றிக் கணினி, இணையம் போன்ற சாதனங்களையும் பயன்படுத்துவதால், ஆசிரியர்எமாணவர், மாணவர்எமாணவர் இடையே கருத்துப்பரிமாற்றம் நிகழும் வாய்ப்பு அதிகமாகிறது. சிங்கப்பூர்க் கல்வி அமைச்சால் உருவாக்கப்பட்டுள்ள இந்த இருவழித் தொடர்புத்தளம் மொழி கற்றலில் மாணவர்களுக்கு நம்பிக்கை வளர உதவுவதோடு மாணவர்களின் கற்றல் தேவைகளுக்கேற்பவும் அறிவுத்திறத்திற்கேற்பவும் நாட்டங்களுக்கேற்பவும் பாடங்களைத் திட்டமிட்டு நடத்த வாய்ப்பளிக்கிறது. மேலும், இது மாணவர்களுக்குப் பலதரப்பட்ட கற்றல் வாய்ப்புகளை வழங்குவதோடு மொழியைப் பயன்படுத்த ஊக்கமூட்டக்கூடிய வகையில் அமையும் நல்ல கற்கும் சூழலையும் ஏற்படுத்தித் தருகிறது. மாணவர்கள் சுயமாகச் சிந்திப்பவர்களாகவும் கற்பவர்களாகவும் உருவாக வழிவகுக்கக்கூடிய ஊடகமாக இத்தளம் விளங்குகிறது. எல்லா நிலைகளிலும் மாணவர்கள் தாம் கற்பதை அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்த வேண்டும். அதற்கு உதவும் வகையில் தாய்மொழிக் கல்வி அமைதல் அவசியமாகிறது. தாய்மொழி கற்றலில் ஆர்வமும் பயன்பாட்டில் திறமையும் கொண்ட மாணவர்களை உருவாக்குவதில் இருவழித் தொடர்புத்தளத்தின் பங்கு உன்னதமானது.

தொடர்புநூல்கள்

கல்வி அமைச்சு, (2010), *2010 தாய்மொழிகள் மறு ஆய்வுக்குழு அறிக்கை,* பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு, சிங்கப்பூர்

கல்வி அமைச்சு, (2011), *தமிழ்மொழிப் பாடத்திட்டம் 2011,* பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு, சிங்கப்பூர்

புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ்க் கல்வி

சொக்கன், பாலர் மலர் தமிழ்ப் பள்ளி, சிட்னி

அறிமுகம்

"கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஔவை மூதாட்டி நமக்கு அருளிய அறிவுரை. இன்று, தமிழர்களாகிய நாம், "தமிழ்ப் பள்ளிக்கூடம் இல்லாத நாட்டிற்கு புலம் பெயர வேண்டாம்" என்று சொல்லும் அளவுக்கு புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழ்ப் பள்ளிக்கூடங்களை அமைத்து, தமிழ் மொழியைக் கற்றுக் கொடுத்து வருகிறோம். இன்றைய காலகட்டத்தில், புலம் பெயர்ந்த நாடுகளில், தமிழர்களுக்கு தமிழ்க் கல்வியானது ஒரு முக்கிய அம்சமாக இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

இக்கட்டுரையில் ஆஸ்திரேலியாவை உதாரணமாக கொண்டு, புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ்க் கல்வியைப் பற்றி அலசி ஆராயப்படும். ஆஸ்திரேலியா ஒரு பல்லினக் கலாச்சார நாடு. உலகம் முழுவதிலுமிருந்து வந்து குடியேறிய மக்கள் தங்கள் தாய் மொழியை மறக்காமல் இருக்கவும், அடுத்த தலைமுறையினருக்கு சொல்லிக்கொடுக்கவும் ஆஸ்திரேலியா அரசாங்கம் வழி வகுக்கிறது. மேலும் 1987 ஆம் ஆண்டு, முதல் தேசிய மொழிக் கொள்கை அமலுக்கு வந்தது (1). இந்த கொள்கையின் முக்கியமான அம்சங்களில் ஒன்று ஆங்கிலம் அல்லாத மற்ற மொழிகளைக் காப்பாற்றி பேணி வளர்த்தல், மற்றொன்று இரண்டாவது மொழி கற்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்துதல் ஆகும்.

நோக்கம்

ஆஸ்திரேலியாவில் தமிழ்க் கல்வியின் அவசியத்தையும், ஆஸ்திரேலிய அரசாங்கம் தமிழ்க் கல்வியை எவ்வாறு ஊக்குவிக்கின்றது என்பதையும், தமிழ்க் கல்வியை கற்பிப்பதில் உள்ள சவால்களும் மற்றும் அந்த சவால்கள் எவ்வாறு எதிர்கொள்ளப்படுகிறது என்பதைப் பற்றியும் அலசி ஆராய்வதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

தமிழ் கல்வியின் அவசியம்

இங்கு ஆஸ்திரேலியாவில் ஆங்கிலம் தான் முதல் மொழி. நம் தமிழ்க் குழந்தைகள் வீட்டில் இருக்கும் நேரத்தை விட வெளியில் இருக்கும் நேரம் தான் அதிகம். அதனால் அவர்கள் படிப்படியாக நம் தாய் மொழியை விட்டு விலகி ஆங்கில மொழியை பின்பற்ற ஆரம்பித்தார்கள். அந்த மொழியின் தாக்கம் வீட்டிற்குள்ளும் வர ஆரம்பித்தது. அதாவது வீட்டில் பெற்றோர்கள் தமிழில் பேசினாலும், குழந்தைகள் ஆங்கிலத்தில் தான் பதிலுரைக்க ஆரம்பித்தார்கள். புலம் பெயர்ந்த நம் தமிழ் பெற்றோர்களுக்கு இது ஒரு பேரதிர்ச்சியாக இருந்தது. எங்கே அடுத்த தலைமுறையினர் தமிழையே மறந்து விடுவார்களோ என்று அஞ்சினார்கள். இதற்கு சரியான தீர்வு தமிழ் பள்ளி தான் என்று எண்ணி, தமிழ் பள்ளியை தோற்று வித்தார்கள். ஆஸ்திரேலியாவின் முதல் தமிழ் பள்ளியாக 1977ஆம் ஆண்டு "பாலர் மலர் தமிழ் பள்ளி" நியூ சௌத் வேல்ஸ்

மாநிலத்தின் சிட்னி நகரில் தொடங்கப்பட்டது(2). வார இறுதி நாட்களில் மட்டுமே தமிழ் வகுப்புகள் நடத்தப்பட்டன. இன்று பாலர்மலர் பள்ளி 5 கிளைகளாக விரிவடைந்திருக்கிறது. பின்னர் 1979ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்த தமிழர்கள் விக்டோரியா மாநிலத்தின் மெல்பெர்ன் நகரில் தமிழ் பள்ளியை தோற்றுவித்தார்கள்(3). இவ்வாறு ஆஸ்திரேலியாவின் மற்ற மாநிலங்களிலுள்ள பிரிஸ்பேன்,அடிலெய்ட்,கான்பரா,பெர்த் போன்ற நகரங்களிலும் தமிழ் பள்ளிகள் இயங்குகிறது. சிட்னியில் மட்டும் தற்சமயம் 11 தமிழ்ப்பள்ளிகள் தமிழை இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கச் சேவை செய்து வருகின்றன.

ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் ஊக்கம்

ஆஸ்திரேலிய அரசாங்கம் பல்வேறு ஒத்துழைப்புகளை தமிழ் மொழி வளர்ச்சிக்காக வழங்கி வருகிறது.

- அரசுப் பள்ளிகளில் இலவசமாக வார இறுதி நாட்களில் தமிழ் பள்ளிகளை நடத்துவதற்கு அனுமதி.
- தமிழ் மொழி கற்கும் மாணவர்களுக்கு குறிப்பிட்ட அளவு நிதி உதவி.
- ஆசிரியர் பயிற்சிக்காக கட்டணத்தில் சலுகை
- ஆசிரியர்களின் மேலதிகப் பயிற்சிக்காக பயிலரங்குகள் நடத்துதல்.

தமிழ் கல்வியை கற்பிப்பதில் உள்ள சவால்கள்

ஆங்கிலத்தை முதன்மையாக கொண்ட ஒரு நாட்டில், தமிழை கற்பிப்பது என்பது சாதாரணமான விடயம் கிடையாது. நாங்களும் இங்கு அந்த சவால்கள் சிலவற்றை சந்திக்கிறோம்.

- <u>பெற்றோர்கள் மற்றும் தன்னார்வலர்களே ஆசிரியர்களாக இருப்பது</u>

இங்கு தமிழ் பள்ளிகளில் தமிழாசிரியர்களாக இருப்பவர்களில் பலர் பெற்றோர்கள் மற்றும் தன்னார்வலர்கள் தான். அவர்கள் வார நாட்களில் வெவ்வேறு தொழில் புரிபவர்கள். மேலும் அவர்கள் இங்கு உள்ள பல்கலைக்கழகங்களால் (உ-ம்: சிட்னி பல்கலைக்கழகம் (4),நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகம் (5), உள்ளங்காங் பல்கலைக்கழகம் (6)) நடத்தப்படும் ஆசிரியர் பயிற்சிகளுக்கான சான்றிதழ் வகுப்புகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இந்த விதிமுறையின் காரணமாக, தமிழார்வம் உள்ள பெற்றோர்கள் ஆசிரியர்களாக வருவதற்கு தயங்குவதுண்டு. இதனால் ஆசிரியர் பற்றாக்குறையும் ஏற்படுகிறது.

- <u>மாணவர்களின் ஏனைய முன்னுரிமைகளோடு போட்டி போடுதல்</u>

இங்கு பள்ளிகளில் தமிழ் ஒரு கட்டாய பாடமாக இல்லாததால், பல மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் தமிழை கற்பதற்கு முக்கியத்துவம் தராமல் இருக்கிறார்கள். தமிழ் கற்பதோ வார இறுதி நாட்களில் மட்டும் தான். ஆனால் பல மாணவர்கள் வார இறுதி நாட்களில் தான் மற்ற வகுப்புகளுக்கு முன்னுரிமை அளிக்கிறார்கள் (உம்: பாட்டு, நடனம், விளையாட்டு,நீச்சல்

போன்றவை). இதனால் அவர்களுக்கு தமிழ் கற்பதற்கு நேரம் இல்லாமல் போய் விடுகிறது. மேலும் சில பெற்றோர்களுக்கு தங்கள் குழந்தைகள் தமிழை படித்து, பெரிய பண்டிதனாகவா போகிறார்கள் என்ற ஒரு எண்ணமும் இருக்கிறது.

- குறிக்கோளின்றி தமிழ் பள்ளிக்கு வருதல்

நிறைய மாணவர்கள் தமிழ் பள்ளிக்கு வருவதே, தங்கள் நண்பர்களை சந்திக்கவும், ஒரு பொழுது போக்கிற்காகவும் தான். இங்கு ஆஸ்திரேலியாவில் நியு சவுத் வேல்ஸ், விக்டோரியா மற்றும் தென்ஆஸ்திரேலியா மாநிலங்களில் பள்ளி மேல் நிலை வகுப்புகளில் (Higher Secondary எ Year 11 and 12) தமிழை ஒரு பாடமாக எடுத்துப்படிக்க அனுமதி உள்ளது (7). HSC (High School Certificate) வகுப்பில் அதாவது 12ஆம் வகுப்பில் தமிழில் எடுக்கும் மதிப்பெண்கள் பல்கலைக்கழகத்தில் நுழைவதற்கு முக்கிய பங்கு ஆற்றும் என்பது நிறைய பெற்றோர்களுக்கு தெரிவதில்லை. அதனால் தங்கள் குழந்தைகள் தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்தால் போதும் என்ற மனநிலை நிறைய பெற்றோர்களிடம் இருக்கிறது.

- பல்கலைக்கழகங்களில் தமிழை எடுத்து படிக்க முடியாத நிலை

பள்ளி மேல் நிலை வகுப்புகளில் தமிழை படித்து முடித்து விட்ட மாணவர்களுக்கு, மேற்கொண்டு தமிழை படிக்க பல்கலைக் கழகங்களில் வசதி இல்லாத ஒரு நிலைமை இங்கு இருக்கிறது.

சவால்கள் எவ்வாறு எதிர்கொள்ளப்படுகிறது

பொதுவாக தமிழர்களாகிய நாம் வாழ்கையில் சந்திக்கக்கூடிய சவால்களை எல்லாம் எதிர்கொண்டு அவைகளை சந்தர்ப்பமாக மாற்றுவோம். அதுபோல் ஆஸ்திரேலியாவில் தமிழ் கல்வி கற்பிப்பதினால் ஏற்படும் சவால்களையும் சந்தர்ப்பங்களாக மாற்றியுள்ளோம்.

- பாடத்திட்டங்கள் மற்றும் பாடப்புத்தங்கங்கள்

சிட்னி நகரில் உள்ள அனைத்து தமிழ் பள்ளிகளும் ஒருங்கிணைந்து "நியூ சவுத் வேல்ஸ் தமிழ் பாடசாலைகள் கூட்டமைப்பு" என்ற நிறுவனத்தை உருவாக்கி, அந்த நிறுவனத்தின் கீழ் பாடத்திட்டக்குழு ஒன்றும் புத்தகக்குழு ஒன்றும் உருவாக்கப்பட்டது. பாடத்திட்டக்குழுவானது, மழலையர் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை ஒரு பாடத்திட்டமும், 11ஆம் மற்றும் 12ஆம் வகுப்புக்களுக்கான ஒரு பாடத்திட்டமும் தயாரித்தது. இதனால், சரியான பாடத்திட்டம் பயன்பாட்டில் உள்ளது.

- 12ஆம் வகுப்புக்கான தமிழ் தேர்வு பற்றிய விழிப்புணர்வு

இங்கு மாணவர்கள் 10ஆம் வகுப்பு அல்லது 11ஆம் வகுப்பு படிக்கும்போதே 12ஆம் வகுப்புக்கான தமிழ்த் தேர்வை எழுத முடியும். இதனால் அவர்கள் 12ஆம் வகுப்பு சிறிது எளிதாக இருக்கும். அதேபோல், *தமிழ் மொழியில் அவர்கள் பெற்ற மதிப்பெண்களை பயன்படுத்தி பல்கலைக்கழகங்களில் எந்தவொரு பாடப் பிரிவிலும் சேரலாம்.* ஆஸ்திரேலியாவில் மொழி

பெயர்ப்பாளருக்கான தேர்வில் [8] எளிதில் வெற்றி பெற்று மொழிப்பெயர்ப்பாளராக ஆக முடியும் என்று மாணவர்களிடமும், பெற்றோரிடமும் 12ஆம் வகுப்புக்கான தமிழ் தேர்வை பற்றி விரிவாக எடுத்துரைத்து அவர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறோம்.

முடிவுரை

புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ் மொழியின் அவசியத்தை முதலில் பெற்றோர்கள் உணர்ந்து, கண்டிப்பாக வீட்டில் தமிழில் தான் உரையாடவேண்டும் என்றும், வார இறுதி நாட்களில் தங்கள் குழந்தைகளை தமிழ் பள்ளிகளுக்கு அனுப்ப வேண்டும் என்று சங்கல்பம் எடுத்து கொண்டால், நிச்சயமாக தமிழ் மொழி அடுத்தடுத்த தலைமுறையினரை சென்றடையும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

கற்றல் கற்பித்தலுக்கான புதிய அணுகுமுறைகள்
தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் புத்தாக்கச் சிந்தனைகள்

வீரமுத்துகணேசன் / தாசையா விக்டர் ஜான் - சிங்கப்பூர்.

முன்னுரை

சிங்கப்பூர் கல்வித்திட்டத்தில் தமிழ்மொழி பாடமும் மற்றப் பாடங்களுக்கு இணையாக சம முக்கியத்துவம் வாய்ந்த பாடமாக கற்பிக்கப்படுகிறது. தாய்மொழியைக் கற்கும் மாணவர்கள் தொடக்கநிலையிலிருந்துதொடக்கக் கல்லூரி வரை கட்டாயமாகப் படிக்க வேண்டிய ஒரு பாடமாக அமைகிறது. மாணவர்களின் ஆற்றலுக்கும் ஆர்வத்துக்கும் ஏற்ப தங்களுக்குப் பொருத்தமான வகையில் பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. அடிப்படை தமிழிலிருந்து இலக்கியம் வரையில் பல தரங்களில் தாய்மொழியில் பாடப்பிரிவுகள் அமைகின்றன, தாய்மொழிக் கல்வி என்பது ஒரு கட்டாயக் கல்வியாக இரண்டாம் மொழி என்ற நிலையிலேயே அமைகிறது.

சூழல்

சிங்கப்பூர் நான்கின மக்கள் வாழும் நாடு. சீனர், மலாயர், இந்தியர். மற்றவர்கள் என நான்கு இன மக்கள் ஒன்றாக இணைந்து வாழும் ஒரு தீவாக விளங்குகிறது. இத்தகைய பலதரப்பட்ட மக்கள் வாழும் சூழலைக் கொண்ட நாட்டில் ஆங்கில மொழி என்பது ஒரு ஆதிக்க மொழியாக திகழ்வதில் வியப்பேதும் இல்லை, அலுவலக மொழியாகவும் இன்றைய சூழலில் கருத்துப் பரிமாற்றத்துக்கு உகந்த ஒரு மொழியாகவும் அது தனக்கென ஒரு தனி இடத்தை பிடித்துவிட்டதைக் காண முடிகிறது.

இத்தகைய இக்கட்டான சூழலில் தாய்மொழி என்பது குடும்பங்களிலும், சமூக நிகழ்வுகளிலும், வழிபாட்டு இடங்களிலும், இணையம், வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களிலும் தன் தனித்தன்மையை இழக்காமல் இன்றும் ஆட்சி செய்துகொண்டுதான் இருக்கிறது. ஆனால், மாணவர்களது நாவில் ஆங்கிலம் தவழும் சூழல்தான் பரவலாக நிலவுகிறது.

இத்தகைய சூழலில் கல்வி பயிலும் மாணவர்களைத் தாய்மொழியின் பக்கம் ஈர்ப்பது சவால் மிக்க ஒரு பணியாகவே விளங்குகிறது. நமது முன்னோர்கள் நமக்கென வைத்துவிட்டுச் சென்ற, இன்று நம் வாழ்க்கையில் நாம் பின்பற்றி வருகின்ற நமது அடையாளமான பண்பாட்டுக் கூறுகளை நம்மோடு நிறுத்தி விடாமல் நமது சந்ததியினருக்கு எடுத்துச் செல்லுகின்ற ஒரு முக்கியப் பணி நம் கையில்தான் உள்ளது. இங்கு மொழி என்பது ஒரு முக்கிய அடையாளமாக விளங்குகிறது. மொழி என்று வருகையில், நாம் பாரம்பரியமாகப் பின்பற்றி வரும் நமது கற்பித்தல் அணுகுமுறைகள் எத்தகைய பயனை அளிக்கின்றது என்பதை ஆராய்ந்து பார்க்கும் பொழுது கட்டாயமாக, கற்றல் கற்பித்தலில் நாம் மாற்றங்களைச் செய்தே ஆக வேண்டும் என்பது தெள்ளத் தெளிவாக தெரிகின்றது.

கல்வி என்பது மாணவர்களின் மேல் திணிப்பதாக இருக்கக்கூடாது. திணிக்கப்படும் எதுவும் நிலைத்து நிற்பதில்லை. கல்விச்செல்வத்திற்கு இதுமிகவும் பொருந்தும்.இன்றைய சூழலில், ஆசிரியர்கள் வழக்கமான வகுப்பறைகளுக்கு விடைகொடுத்து விட்டு உயிரோட்டமுள்ள மாற்று வகுப்பறைகளை

உருவாக்கிட முன்வரவேண்டும். மாற்றுவகுப்பறை என்பது ஆசிரியர்களை மட்டுமே உள்ளடக்கியதாக இல்லாமல் மாணவர்களையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும். கல்வியில் கற்றல், கற்பித்தல் என்பது வகுப்பறையில் இருக்கின்ற அனைவரின் பங்கேற்பாகவும் அமைய வேண்டும் என்பதே இன்றைய புதிய அணுகுமுறை. பாடத்தை ஆசிரியர்கள்தான் நடத்த வேண்டும். அதில் எந்த ஒரு மாற்றமும் இல்லை. ஆனால் , நமக்குத் தெரிந்தவைகள் அனைத்தையும் வகுப்பறையில் கொட்டித் தீர்த்துவிட வேண்டும் என்ற முனைப்பில் நாம் சில வேளைகளில் செயல்பட்டு விடுகிறோம். நாம் சொல்வதைக் கேட்பதற்கு ஆள் இருக்கிறார்கள் என்ற மனநிலையில் விடாமல் பேசிக்கொண்டே செல்கிறோம். எதிரில் அமர்ந்திருக்கும் மாணவர்களின் புரிதிறன், உள்வாங்கும் திறன் ஆகியவற்றைப் பற்றிச் சற்றும் கவலைப்படாமல் நீண்ட சொற்பொழிவு நிகழ்த்தி முடிக்கிறோம். நமக்குத் தெரிந்தவற்றை எல்லாம் அருவிபோல் கொட்டிவிடுகிறோம். விளைவு மாணவர்கள்தான் வகுப்பறையில் இருப்பார்கள். அவர்களின் மனம் அங்கே இருக்காது.

பாடக்கலைத் திட்டம்

சிங்கப்பூர் தாய்மொழிப்பாடக் கலைத்திட்டம், தனது இலக்கைத் தெளிவாகக் கொண்டுள்ளது. "தாய்மொழியாம் தமிழ் என்றென்றும் வாழும் ஒரு மொழி" என்பதே அதன் இலக்கு. தாய்மொழியைக் கற்கின்ற மாணவர்கள் சரளமாகப் பேச வேண்டும், எழுத வேண்டும், கருத்துக்களை தங்கு தடையின்றிப் பரிமாற வேண்டும் என்கின்ற நிலைகளையும் தாண்டி குழுவாக சக மாணவர்களோடு பல்வேறு நடவடிக்கைகளில் பங்கு பெறுதல், கருத்துக்களை விரித்துரைத்தல், விவாதம் செய்தல், சிந்தித்தல், சமூகத்தோடு தொடர்புகொள்ளுதல் என்பன போன்ற பல்வேறு திறன்களையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதையும் பாடத்திட்டம் வலியுறுத்துவதாக அமைகிறது.

தாய்மொழி கற்க வகுப்பறைக்கு வருகின்ற மாணவர்கள் அனைவரும் ஒரே விதமான மொழி அறிவைப் பெற்றிருப்பர் என்று கூற இயலாது. அவர்களது பின்னணியும் ஒரே விதமாக அமைவதில்லை. இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில், மொழிப்பாடம் கற்க வரும் மாணவர்கள் அனைவருக்கும் ஏற்ற பொதுவான வகுப்பறை நடவடிக்கைகளை அமைப்பது என்பது அவ்வளவு சிறப்புடையதன்று. மாணவர்களின் பல்வேறு மொழிநிலைக்கேற்ப கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகளைத் திட்டமிடுவதே அதிகப்பயனைத் தரும். அப்பொழுதுதான் அனைத்து மாணவர்களையும் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் முழுமையாக ஈடுபடுத்த முடியும். கற்றல் என்பது அவர்களுக்கு சுமையாக அமையாமல் சுவையாக அமையும்.

தொடக்கத்தில் ஆசிரியர்பங்கேற்பு, போகப்போக மாணவர்கள் பங்கேற்பு என்பதுதான் **நகரும் வகுப்பறைக்கு, வளரும் வகுப்பறைக்கு** அழகு. புதிய மாற்று வகுப்பறைகளை உருவாக்கி மாணவர்களை விவாதம் செய்ய வைத்து அவர்களைச் சிந்திக்க தூண்டுதல் வேண்டும். மாணவர்களை மனப்பாடம் செய்யும் இயந்திரங்களாக மாற்றாமல், மாற்று வகுப்பறைகளில் மாணவர்களின் கற்பனைத்திறனையும் சுயமாகப் படைக்கும் திறனையும் வளர்ப்பதற்கு உதவ வேண்டும். **புதிய கற்றல் எ கற்பித்தல் அணுகுமுறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.** வகுப்பறையில் நிகழும் கற்றல்

நடவடிக்கையில் எல்லா மாணவர்களுக்கும் போதிய வாய்ப்பளித்து அவர்களை அந்நடவடிக்கைகளில் ஆர்வத்துடன் பங்கேற்க ஊக்குவிக்க வேண்டியது ஒவ்வொரு ஆசிரியரின் கடமையாகும். **ஆர்வத்துடன் நடைபெறும் செயல் வெற்றியில் முடியும்.** இப்படிப்பட்ட வகுப்பறையில் உருவாகும்மாணவர்கள் சமூகத்தில்நல்லதொரு மாறுதல்களை எதிர்காலத்தில் உருவாக்குவார்கள் என்பது நிச்சயம்.

தாய்மொழிக் கல்வியில் புதிய அணுகுமுறை

மாற்றம் ஒன்றே மாறாதது என்பது கற்றல் கற்பித்தலிலும் தவிர்க்க இயலாத ஒன்றாகிவிட்டது. உலகமயம் என்பது மொழியின்பால் ஏற்படுத்தி வரும் தாக்கம் மிகப்பெரிது. அதனடிப்படையில் நோக்குங்கால் ஆங்கிலம் என்பது ஒரு ஆதிக்க மொழியாகவும் அவசிய மொழியாகவும் ஆகிவிட்டச் சூழல் இன்று. இப்பின்னணியில் கல்வி பயிலும் நம் தமிழ் மாணவர்களுக்குத் தாய்மொழி என்பது இரண்டாம் மொழி. நான்கினச் சமூகச் சூழலில் வாழும் இவர்களிடம் தாய்மொழியாம் தமிழ் மொழியை வளர்ப்பதில் அக்கறை கொண்டுள்ள தமிழாசிரியர்கள் வழக்கமான வகுப்பறை நடவடிக்கைகளையும் தாண்டிப் புதுமைகளைப் புகுத்தி வருகிறோம். அத்தகைய புதுமைகள் சிலவற்றை அடுத்து வரும் பகுதிகளில் காண்போம்.

நாடக உத்திகள்

முத்தமிழில் ஒன்றான நாடகத்தமிழ் அனைத்துப் படைப்பாற்றலுக்கும் வேறாக அமைகிறது. ஆர்வத்துடன் கற்றலில் ஈடுபட நாடக உத்திகள் இன்று மிகவும் உதவியாக அமைகின்றன. பாடங்களைக் கற்பிக்கையில், நாடக உத்திகளான முதலா? முடிவா? (Head or Tail), முதன்மை இருக்கை (Hot Seat), நீதிமன்றம் (Moot Court), மனசாட்சிப்பாதை (Conscious Alley) முதலானவற்றைப் பயன்படுத்திக் கற்பிக்கும் பொழுது மாணவர்களது கற்றல் அனுபவம் ஓர் உயர்ந்த நிலையை அடைகிறது. இத்தகைய நடவடிக்கைகளில் மாணவர்கள் ஈடுபடும்பொழுது, கற்றலில் பெற்ற கருத்துகளைப் பகுப்பாய்வு செய்யவும், மதிப்பிடவும் முடிகிறது. இருக்கும் தகவல்களைக்கொண்டு புதிதாக ஒன்றைத் திட்டமிட்டு உருவாக்கிப் படைக்கவும் வாய்ப்பு அமைகிறது. இச்செயல்பாடுகள் யாவும் மாணவர்களிடம் உயர்நிலைச் சிந்தனைத் திறன்களான பகுத்தாய்தல், மதிப்பிடுதல், உருவாக்குதல் என்னும் திறன்கள் வளரவும் துணை புரிகின்றன. மேலும் அண்மைய ஆண்டுகளில் அதிக முக்கியத்துவம் பெற்று வருகின்ற 21 ஆம் நூற்றாண்டுத் திறன்களில் சிறந்து விளங்கவும் இவை வழி கோலுகின்றன.

திரைப்படங்கள்

கற்றல் கற்பித்தலில் திரைப்படங்களின் பங்கு மிகப் பெரிது. திரைப்படங்கள் என்று கூறினாலே இன்று நம்மில் பலருக்கு அவற்றால் ஏற்படும் தீய விளைவுகள் தான் கண்முன் வருகின்றன. "குணம்நாடி குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல்" என்ற குறளினை நாம் மறந்துவிடக் கூடாது. திரைப்படங்களினால் ஏற்படும் நன்மைகளோ அளப்பரிது. முழு நீள திரைப்படத்தை வகுப்பறையில் காட்ட வேண்டிய அவசியமில்லை. நாம் கற்பிக்கும் பாடக் கருப்பொருளுக்குப் பொருத்தமான திரைப்படக் காட்சிகளையோ, பாடல்களையோ நாம் பயன்படுத்தலாம். மற்றப் பல பாடவேளைகளை,நடவடிக்கைகளை முடித்துவிட்டு களைப்போடு தாய்மொழி வகுப்பறைக்கு வரும் மாணவர்களுக்குச் சோர்வை அகற்றி உற்சாகத்தை அளிக்கும் ஒரு ஊக்க மருந்தாக இந்த அணுகுமுறை அமையும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. இன்று பல கல்வி நிலையங்களில் தாய்மொழிப் பாடவேளைகள் மாலை நேரங்களிலேயே இடம் பெறுகின்றன. இந்நேரங்களில் தாய்மொழி பாடத்தைக் கற்றுக்கொடுப்பது என்பது சவாலான ஒன்று என்பது நாம் யாவரும் அறிந்த ஒன்றே. ஆதலால், திரைப்படங்கள் மாணவர்களுக்குச்சோதனையாக அமையாமல் கருத்துக்களை எளிதில் உள்வாங்க உதவுவதோடு பாட நடவடிக்கைகளில் ஒன்றிப்போகவும் வைத்து விடுகிறது.

குறும்படங்கள்

திரைப்படங்கள் நம் சிந்தைக்கு ஒவ்வாதனவாக அமைகின்ற நேரங்களில் அதற்கு மாற்றாக ஆசிரியர்களாகிய நாம் கையில் எடுக்க வேண்டிய சக்தி வாய்ந்த சாதனம் குறும்படங்களே. ஆயிரக்கணக்கில் குவிந்து கிடக்கும் குறும்படங்களைத் தேடி எடுத்து நம் வகுப்பறை பாடத்திற்குப் பொருத்தமான வகையில் இணைத்துக்கொள்வது நமது பொறுப்பு. அவசர நேரத்தில் நாம் கையில் கிடைத்ததை எடுத்துச் சென்று விடாமல் சரியான முறையில் பொருத்தமான ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதை நாம் அனைவரும் மனதில் கொள்ள வேண்டும். குறுகிய நேரத்தில் குறும்படங்கள் நிறைந்த பலனைத் தரும் என்பதே இதன் மிகப் பெரிய பலம்.

நீயா? நானா?

தொலைகாட்சியில் நம் அனைவரையும் கவர்ந்த பிரமாண்டமான ஒரு நிகழ்ச்சி நீயா நானா. குடும்பத்தோடு கண்டு குதூகலிப்பதோடு நின்று விடாமல் அதை அப்படியே வகுப்பறைக்கு இட்டுச் சென்று விடலாம். வாய் மூடி மௌனமாக அமர்ந்திருக்கும் மாணவனை வாய் திறந்து பேச வைக்க இது மிகச் சிறந்த வழியாக அமைகிறது. எப்படி பல்வேறு தரப்பட்ட மக்கள் தங்களது கருத்துக்களைக் கொட்டித் தீர்க்க, ஆதங்கத்தை வெளிபடுத்த இது ஒரு களமாக அமைகிறதோ அதுபோல மாணவர்கள் தங்கள் மனதிற்குள் புதைந்துள்ள கருத்துக்களை எளிதில் வெளிப்படுத்தவும் சக மாணவர்களின் கருத்துக்களை நயமாக மறுத்துப் பேசவும் ஒரு சிறந்த வாய்ப்பை இந்நடவடிக்கை அளிக்கும். மாணவர்களைப் பல்வேறு கோணங்களில் சிந்திக்க வைப்பதும், அரிய பல நல்ல கருத்துகளைப் புரிந்துகொள்ளச் செய்வதும், அவற்றை சரியான முறையில் வெளிப்படுத்த துணை புரிவதும் தான் இந்நடவடிக்கையின் முக்கிய இலக்காகும். இங்கு ஆசிரியரின் பங்கும் இன்றியமையாதது. மிகச் சிறந்த

ஒரு நிகழ்ச்சி நெறியாளராக இருப்பதோடு, நடவடிக்கை அதன் குறிக்கோளை விட்டு விலகிச் சென்று விடாதபடி பார்த்துக்கொள்வதும் அவர்களது கடமையாகும். அது மட்டுமல்ல தங்கள் அனுபவங்களையும் மற்றப் பிற நற்கருத்துக்களையும் ஆங்காங்கே பகிர்ந்து கொள்வதற்கும் அது ஒரு நல்ல வாய்ப்பாக அமைகிறது.

அடுத்து என்ன? (Whats App)

இன்றைய இளையர்களின் Whats App என்றே கூறலாம். தொழில் நுட்பத்தின் மிக அண்மை கால வரவு இது. கைத்தொலைபேசி மற்றும் கருத்துப் பரிமாற்ற சாதனங்கள் (ipad, ipod) மூலமாக இந்த செயலி இயங்கும். உலகின் எந்த மூலையிலிருந்தும் இலவசமாக WiFi என்னும் இணைய இணைப்பின் மூலம் இதை பயன்படுத்தலாம். நினைத்த மாத்திரத்தில் நாம் நினைப்பதை மற்றவர்களோடு, அதாவது ஒரே நேரத்தில் பலரோடு பகிர்ந்துகொள்ள உதவும் ஓர் உன்னத சாதனம் இது. புகைப்படங்கள், ஒளிக்காட்சிகள், குரல் பதிவுகள் என அனைத்தையும் இந்த செயலி மூலம் பகிர்ந்துகொள்ள இயலும். இயல்பான வகுப்பறை கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகையும் தாண்டி எந்த நேரத்திலும் ஆசிரியர்கள் மாணவர்களோடு தொடர்புகொண்டு தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும், மாணவர்களின் ஐயங்களுக்குப் பதில் அளிக்கவும், அனைவரும் ஒரே நேரத்தில் அவற்றைக் காணவும் இது பெருந்துணையாக அமைகிறது. மாணவர்களுக்கு ஆசிரியர்களின் மீதுள்ள அச்சத்தைப் போக்கி எந்நேரமும் அவர்களிடம் ஆலோசனைளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற மனநிலையை உருவாக்குகிறது. கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் இத்தகைய புதியவழிமுறைகளைச் செயல்படுத்தும் போது தாய்மொழி பாடம் கற்பது மிகவும் சுலபமாகிறது. சுவையாகிறது.

முடிவுரை

கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளுக்குப் பல்வேறு உத்திகள் உள்ளன. அவற்றை வலுப்படுத்துவதற்குப் பல செயலிகளும் இருக்கின்றன. எங்கள் அனுபவத்திலிருந்து சிலவற்றை இங்கு பகிர்ந்து கொண்டிருக்கின்றோம். அவற்றை அப்படியே அனைவரும் பின்பற்ற வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. தங்கள் சூழலுக்கும், மாணவர்கள் தரத்திற்கும், தேவைக்கும் ஏற்ப அவற்றை நாம் வடிவமைத்துக் கொள்ளலாம். கற்பித்தல் என்பது நமது கடமையாக இருந்துவிடாமல், கற்றல் என்பதனைப் பயன் வாய்ந்த, சுவை மிகுந்த ஒன்றாக மாற்ற அனைவரும் முயற்சி செய்வோம்.

மொழித்திறன் மேம்பாட்டில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் பயன்பாடு

விஜயராணி கோவிந்தசாமி,
துறைத் தலைவர்,
பள்ளி அதிகாரிகள் திறன் மேம்பாட்டாளர்
குவீன்ஸ்டவுன் உயர்நிலைப் பள்ளி
சிங்கப்பூர்

சிலம்பாயி முத்துசாமி,
பாடத்திட்ட வரைவு அதிகாரி,
தாய்மொழிகள் துறை
பாடத்திட்ட வரைவு மற்றும்மேம்பாட்டுப்பிரிவு
கல்வி அமைச்சு, சிங்கப்பூர்

முன்னுரை

ஒவ்வொரு நாட்டிலும் அந்தந்த நாட்டின் தேவைகளை மனத்தில் நிறுத்திச் சிறந்த அடுத்த தலைமுறையினரை உருவாக்குவதற்கான ஒரு பாடக்கலைத்திட்டம் உருவாக்கி நடைமுறைபடுத்தப்படும்.அப்பாடக்கலைத்திட்டம் ஒவ்வொரு மாணவரும் அதன்வழி பெறும் கல்வியறிவைக்கொண்டு தத்தம் விருப்பத்திற்கும் திறனுக்கும் ஏற்ற துறையில் பங்களிக்க வகை செய்யும்வண்ணம் அமைந்திருக்கும்.அப்படிப்பட்ட உன்னதமான சிந்தனையுடன் சிங்கப்பூரின்கல்விமுறைஉருவாக்கப்பட்டிருக்கிறது. இருமொழிக் கல்விக்கொள்கைக்கு (bilingualpolicy) முக்கியத்துவம் வழங்கப்படுகிற இந்தக் கொள்கையில் ஆங்கில மொழியுடன் ஒவ்வொரு மாணவரும் தம் தாய்மொழியையும் கற்றுத் தேர வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. இருப்பினும்,கடந்த கால் நூற்றாண்டாகவே சிங்கப்பூர்க் குடும்பங்களில் ஆங்கிலத்தின் புழக்கம் ஏறுமுகமாகவே இருந்து வருவதால்சீனம், மலாய், தமிழ் முதலிய தாய்மொழிப் புழக்கத்தின் அளவு வெகுவாகவே குறைந்துவருகிறது.இந்நிலையில்தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் அபரீத வளர்ச்சியைக் கண்டு வருகிறது.ஆங்கில மொழியின் ஆதிக்கமும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் அபரீத வளர்ச்சியும் தாய்மொழி கற்றல் கற்பித்தலில் புதிய பார்வை தேவை என்பதை உணர்த்துகின்றன.தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள புத்தாக்கத்தைப் பயன்படுத்திக் கொண்டு தாய்மொழிகற்றல் கற்பித்தலுக்கான வாய்ப்புகளை விரிவுபடுத்தும் வகையில் சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு புதிய பாடக் கலைத்திட்டத்தை உருவாக்கியிருக்கிறது.



மொழித்திறன்கள்

மொழிக்கல்வியில் அடிப்படை மொழித்திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய நான்கு திறன்களிலும் கவனம் செலுத்தப்பட்டு வந்தது. மேலும்,வாழ்க்கையில் பெரும்பாலான சூழ்நிலைகளில் இருவழித் தொடர்பே இயல்பான கருத்துப்பரிமாற்றமாக அமைவதால் பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன் வளர்ச்சிக்கும் எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன் வளர்ச்சிக்கும் இன்று அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. அதற்குத் தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் மிகச் சிறப்பாகவே பயன்படுகிறது.



வாழ்க்கையில் பெரும்பாலான சூழல்களில் நேரடிக் கருத்துப்பரிமாற்றமே (எ-டு: உரையாடல், மின்னஞ்சல், படித்துப் பதில் எழுதுதல்) அதிகம் தேவைப்படுவதால்புதிய தாய்மொழிப் பாடக்கலைத்திட்டம்கொள்திறன்கள், ஆக்கத்திறன்கள் ஆகியவற்றிற்கும் இருவழித் தொடர்புத்திறன்களுக்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. இருவழித் தொடர்புத் திறன்கள் என்று குறிப்பிடப்படுபவை பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்கள், எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்கள் என்பவையாகும். மற்றவர் கூறும் கருத்துகளைக் கேட்டு உள்வாங்கிக் கொண்டு அதற்குத் தம்முடைய கருத்துகளையும் சேர்த்து ஒருவர் பதில் கூறும்போது நிகழ்வதே இருவழிக் கருத்துப்பரிமாற்றமாகும். அது பேச்சுவழியாகவும் இருக்கலாம்; எழுத்துவழியாகவும் இருக்கலாம்.

தகவல் தொடர்புத் தொழில்நுட்பம்

அனைத்துத் துறைகளிலும் ஆதிக்கம் செலுத்தி வருகிறதகவல் தொடர்புத் தொழில்நுட்பம், கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளிலும் பெரும் மாற்றம் ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கிறது. ஆசிரியரை மையமாகக் கொண்டமைந்த கல்வி என்ற நிலை இன்று மாணவர்களை மையமாகக் கொண்டமைந்த கல்வி முறையாக மாறியிருப்பதற்குத் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் பங்கு அளப்பரியது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை, (Trucano, 2005).

குறுந்தகவல், மின்னஞ்சல், இணையத் தேடல்கள், இணைய உரையாடல்கள், வலைப்பூக்கள், ஃபேஸ்புக், கணினி விளையாட்டுகள், மின்நூல்கள் முதலியதகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தை இன்றைய மாணவர்கள் அதிகமாகவே பயன்படுத்துகின்றனர். நம் மாணவர்களுக்கு அதிகப்

பரிட்சயமான தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைத் தமிழ்மொழியின் நான்கு அடிப்படைத் திறன்களோடு, பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன் வளர்ச்சிக்கும், எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன் வளர்ச்சிக்கும், சிந்தனைத் திறன் வளர்ச்சிக்கும் தமிழாசிரியர்கள் அதிகமாகவே பயன்படுத்தி வருகின்றனர்.

தமிழ்மொழி கற்றல் கற்பித்தலுக்குத் தேவைப்படக்கூடிய பயிற்றுவளங்களைச் சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு உருவாக்கி வழங்கி வருகிறது.இவற்றைப் பயன்படுத்துவதோடு ஆசிரியர்கள் மாணவர்களை மையமாகக்கொண்ட ஈடுபாடுமிக்கக் பாடங்களை உருவாக்கத் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்துகின்றனர். அவ்வகையில், கட்டுரையாசிரியர் தம் பள்ளி மாணவர்களின் நிலையறிந்து, அவர்களுக்குப் பொருத்தமான உத்திகளைக் கையாண்டு, மொழித்திறன்களை மேம்படுத்தத் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைப் பல்வேறு வழிகளில் பயன்படுத்தி வெற்றியும் கண்டுள்ளார். அவற்றுள் பேசுதல் மற்றும் எழுதுதல் திறன்களை மேம்படுத்தத் தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் எவ்வாறு உதவியது என்பதைப் பகிர்ந்து கொண்டுள்ளார்.

தமிழ்மொழித்திறன் மேம்பாட்டில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பம்

பேசுதல் திறன்

அண்மைக் காலங்களில் தமிழ்மொழி மிகுபுழக்கமில்லாத இல்லங்களிலிருந்து வரும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இம்மாணவர்களுக்குத் தமிழில் சரளமாகப் பேசுவதற்கு அதிகப் பயிற்சிகள் வழங்கப்படுதல் அவசியமாகும். தேசிய நிலைத் தேர்வுகளிலும் வாய்மொழித் தேர்வுக்கு கூடுதல் மதிப்பெண்கள் ஒதுக்கப்பட்டு அதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டு வருவதால் வகுப்பறைகளில் இம்மாணவர்களின் பேசுதல் திறனை வளர்ப்பதும் பேச்சுத்தமிழில் பேசக்கூடிய வாய்ப்பை அவர்களுக்கு அளிப்பதும்மிக முக்கியம். எனினும்,ஒவ்வொரு வகுப்பிலும் எல்லா மாணவர்களுக்கும் போதுமான அளவு பயிற்சி அளிப்பதும் ஆக்கபூர்வமான கருத்துரைகளை வழங்குவதும் இயலாததாகும். அப்படிப்பட்ட இக்கட்டான நிலையில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பமே கைகொடுக்கிறது.

மாணவர் தம் கற்றலுக்குத் தாமே பொறுப்பேற்கவும், தம் பேசுதல் திறனைச் சுய மதிப்பீடு செய்யவும், அவருடைய திறனைச் சக மாணவர் மதிப்பீடு செய்து கருத்துரைக்கவும்,ஆசிரியர் ஆக்கபூர்வமாகக்கருத்துரைக்கவும் 'ஓடாசிட்டி' (Audacity) என்னும் மென்பொருள் கைகொடுக்கிறது. இதன் துணைகொண்டுமாணவர் இயல்பான சூழல்களில் அமைந்த படங்களையோ ஒளிக்காட்சிகளையோ பார்த்துத் தம் கருத்துகளைப் பேச்சுத்தமிழில் கணினியில் பதிவு செய்து சுயமாகச் சரிபார்க்க முடிகிறது. நேர்க்கு நேர் பேசத் தயங்கும் மாணவர்கூட இந்த மென்பொருளைப் பயன்படுத்திப் பயிற்சிகள் செய்யும்போது தம்பேசுதல் திறனை வளர்த்துக்கொள்ள முடிகிறது. மதிப்பிடுவதற்காக ஆசிரியரிடம் ஒப்படைக்க வேண்டிய பகுதியை ஒலிப்பதிவு செய்யும் மாணவர், தாம்பேசி ஒலிப்பதிவு செய்த பகுதி திருப்தியாக அமையவில்லையெனில், மீண்டும் மீண்டும் ஒலிப்பதிவு செய்யவும் இந்த மென்பொருள் உதவுகிறது. இவ்வாறு தம்திறன்

மேம்பாட்டுக்குத் தேவையான பயிற்சியைச் செய்கின்ற மாணவர் தமிழ் மொழியைக் கற்பதில் அதிக ஆர்வம் காட்டிப் புதிய அனுபவங்களைப் பெற்று மனநிறைவும் பெறுகின்றனர். கற்றலில் பின்தங்கிய மாணவர்கூடத் தயக்கமின்றிப் பேசிப் பயிற்சி செய்வதற்கும் கொடுக்கப்பட்டுள்ள பகுதிகளைச் சுயமாக வாசித்துப் பார்த்துப் பயிற்சி பெறுவதற்கும் இந்தத் தொழில்நுட்பம் பெரிதும் உதவுகின்றது.

அவ்வாறு ஒலிப்பதிவு செய்யப்பட்ட பகுதியைக் கேட்டு மதிப்பிடுவோரும் கருத்து, சரளம், உச்சரிப்பு, தொனி, சொல்லழுத்தம், தெளிவு என்று பல்வேறு கூறுகளையும் கவனமாகக் கேட்டுத் துல்லியமாகக் கருத்துரைக்கவும் இந்த மென்பொருள் உதவுகிறது. உயர்நிலை நான்காம் வகுப்பில் படிக்கும் மாணவர்களின் பேசுதல் திறனை வளர்ப்பதற்கு இந்த மென்பொருளைப் பயன்படுத்திப் பயன்பெற்ற கட்டுரையாசிரியர் பள்ளியில் தமிழ்மொழிப்புழக்கம் குறைவாக உள்ள மற்ற வகுப்பு மாணவர்களுக்கும் இதைப் பரிந்துரைத்துள்ளார்.

எழுதுதல் திறன்

தொடக்க நிலை முதலாம்,இரண்டாம் வகுப்புகளில் தமிழ் எழுத்துகளைப் படித்துவிட்டு அடுத்த நான்கு ஆண்டுகளில் சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்கள், பகுதிகள் என்று எழுதிப் பயிற்சி பெறும் மாணவர்கள் உயர்நிலைப் பள்ளிக்கு வந்த பின்னரும் குறிப்பிட்ட சிலவகைஎழுத்துப் பிழைகளை அதிக அளவில் தொடர்ந்து செய்தவண்ணம் இருக்கின்றனர். குறிப்பாக, இன எழுத்துகளையும் எகர, ஒகர, ஏகார, ஓகார எழுத்துகளுக்கிடையே உள்ள வேறுபாட்டையும் உணர்ந்துகொள்ளாது அவர்கள் செய்யும் பிழைகளைத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திக் களைய ஒரு முயற்சி எடுக்கப்பட்டது.

இன்று வேலையிடங்களிலும் சமூகநிலைத் தொடர்புகளிலும் (socialcommunications) ஒருவர் தமது கருத்துகளை வெளிப்படுத்துவதற்குக் கணினியை அதிகம் பயன்படுத்துவதால் கையால் எழுதுவதோடு பொருத்தமான நிலைகளில் எழுத்துவழிக் கருத்துப் பரிமாற்றத்திற்குக் கணினியைப் பயன்படுத்துதல் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதற்காகவே உருவாக்கப்பட்ட



முரசு அஞ்சல் (MOE-Singapore) மென்பொருளில் உள்ளவிசைப்பலகையின் (keyboard) துணைகொண்டு மாணவர்களுக்குத் தட்டச்சுப் பயிற்சி வழங்கப்படுகிறது. அந்த விசைப்பலகையில் தமிழிலிலுள்ள உயிரெழுத்துகளும் மெய்யெழுத்துகளும் வைக்கப்பட்டுள்ள முறையைச் சாதகமாகப் பயன்படுத்தி, மாணவர்கள் இன எழுத்துகள், எகர, ஒகர, ஏகார, ஓகார எழுத்துகள் ஆகியவற்றுக்கிடையே உள்ள வேறுபாட்டையும் உணர்ந்துகொள்ளாது செய்யும் பிழைகளைக் களையக் கட்டுரையாசிரியர் ஒரு முயற்சி எடுத்து வெற்றியும் கண்டார்.

தமிழ் வகுப்பறையிலேயே ஒவ்வொரு மாணவருக்கும் தனித்தனி மடிகணினியைப் பயன்படுத்த வசதிகள் இருப்பதால் சொல்வதெழுதுதல் பயிற்சிகள் யாவும் கணினிவழி வழங்கப்பட்டன. ஒவ்வொரு பயிற்சியும் தட்டச்சுப் பயிற்சியாகவும் இன எழுத்துகளை நன்கு அறிந்து கொள்ளக்கூடிய முறையில் வடிவமைக்கப்பட்ட பாடமாகவும் அமைந்ததால் மாணவர்கள் குறுகிய காலக்கட்டத்தில் பயிற்சியின் பயனைப் பெறத்தொடங்கினர்.

முரசு அஞ்சல் (MOE-Singapore) மென்பொருளில் உள்ள விசைப்பலகையில் எழுத்துகளின் அமைப்புமுறை எகர, ஒகர,ஏகார, ஓகார உயிர்மெய் எழுத்துகளின் வரிவடிவ வேறுபாட்டினை ஒலியுடன் இணைத்துப் புரிந்துகொள்ள உதவியதால் அவ்வகையான பிழைகளும் குறையக் காண முடிந்தது.

- ஒரு *மெய்யெழுத்துடன் ‘எ’ சேரும்போது உருவாகும் உயிர்மெய் எழுத்து, ஒற்றைச் சுழி கொம்பு மட்டுமே இணைந்து உருவாகும். எ-டு :ம் +எ=மெ

- ஒரு *மெய்யெழுத்துடன் ‘ஏ’ சேரும்போது உருவாகும் உயிர்மெய் எழுத்து, இரட்டைச் சுழி கொம்பு மட்டுமே இணைந்து உருவாகும். எ-டு :ச்+ஏ = சே

- ஒரு *மெய்யெழுத்துடன் ‘ஒ’ சேரும்போது உருவாகும் உயிர்மெய் எழுத்து, ஒற்றைச் சுழி கொம்புடன் துணை எழுத்தான காலும் இணைந்து உருவாகும். எ-டு :ல் + ஒ = லொ

- ஒரு *மெய்யெழுத்துடன் ‘ஓ’ சேரும்போது உருவாகும் உயிர்மெய் எழுத்து, இரட்டைச் சுழி கொம்புடன் துணை எழுத்தான காலும் இணைந்து உருவாகும். எ-டு :த் + ஓ = தோ

இவ்வாறு தொழில்நுட்பத்தின் துணையுடன் எழுத்துப்பிழைகளைக் களைந்திட கவனமாகத் தயாரிக்கப்பட்ட சொல்வதெழுதுதல் பயிற்சிகள் உதவின.

கேட்டல் திறன்

பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றத்திற்கு அடிப்படையாய் அமைவது கேட்டலும் பேசுதலும் ஆகும். சொற்களைச் சரியாகக் கேட்டுச் சரியாக உச்சரித்தால்தான் பேசுதல் திறன் வளரும். மாணவர்கள் போலச் செய்தலால்தான் (imitation) அதிகம் கற்கின்றனர் என்பது உளவியல் உணர்த்தி நிற்கும் உண்மையாகும், (சுப்புரெட்டியார், 1957: பக்கம் 194).

கற்றிலன் ஆயினும் கேட்கஅஃது ஒருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாம் துணை எ (குறள் 414)

என்றுகுறளும் உணர்த்தி நிற்கும் இக்கேட்டல் திறனை வளர்ப்பதற்கு ஓர் ஆசிரியருக்கு வானொலி, ஒலிப்பதிவுக் கருவி, ஒலி-ஒளிக் காட்சிகள் என எண்ணற்ற தகவல் தொழில்நுட்பச் சாதனங்கள் பயன்படுகின்றன. இவை யாவும் மாணவர்கள் தம் கற்றலுக்குத் தாமே பொறுப்பேற்க உதவுகின்றன.

படித்தல் திறன்

மாணவர்கள் தன்னம்பிக்கையுடன் படிக்கும் ஆற்றலை வளர்க்கவும் தகவல் தொழில்நுட்பம் கைகொடுக்கிறது. மாணவர்களுக்குச் சரியான வாசிப்பைக் கற்பிக்க ஆசிரியர்கள் மாதிரி வாசிப்பை ஒலிப்பதிவு செய்து, மாணவர்கள்கேட்டுப் படித்துப் பழக உதவலாம். ஆரம்ப நிலைமுதல் மாணவர்கள் தாமே ஆர்வ மிகுதியால் விரும்பி எங்கும் எப்போதும் வாசிக்க முனையும் நிலைவரை என்று எல்லா நிலைகளிலும் படித்தல் திறனை மேம்படுத்தத் தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் உதவுகிறது. நாளிதழ், வார, மாத சஞ்சிகைகள், வலைப்பூ செய்திகள் மட்டுமல்லாது இன்று நாவல்களைக்கூட மின் புத்தகமாகக் கையடக்கத் தொலைபேசியிலும் மடிகணினியிலும் கீழிறக்கம் செய்து எங்கும் எப்போதும் படிக்கும் வாய்ப்பினைத் தொழில்நுட்பம் நல்குகிறது.

இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்

அன்றாட வாழ்க்கையில் நம்பிக்கையுடனும், சரியாகவும், பயனுள்ள முறையிலும் கருத்தைப்பரிமாறிக்கொள்ளும் மொழித்திறன் வாய்ந்த மாணவர்களை நாம் உருவாக்க வேண்டும். ஆகவேதான், நம் மாணவர்களின் மொழித்திறன்களோடு கருத்துப்பரிமாற்றத் திறன்களை வளர்க்கும் நடவடிக்கைகளில் நாம் அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.

2010 தாய்மொழிகள் மறு ஆய்வுக்குழு அறிக்கை, மாணவர்கள் தாய்மொழியை இருவழிக் கருத்துப்பரிமாற்றத்திற்கு அதிகமாகப் பயன்படுத்த வேண்டும் என்று பரிந்துரைக்கிறது. அதனையொட்டித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திப்பள்ளி சார்ந்த மதிப்பீடுகளிலும் தேசிய நிலையிலானதேர்வுகளிலும் பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களைச் சோதிக்கும் வினா வகைகளுடன்எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களைச் சோதிக்கும் வினா வகைகளும் விரைவில் இடம்பெறவுள்ளன.

கற்றல், கற்பித்தலுக்குத் துணைபுரியும் இணையத் தளங்கள்

மாணவர்கள் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத் திறமை வாய்ந்தவர்களாக இருப்பதோடு, தாய்மொழியைக் கற்பதற்குத் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதிலும் ஆர்வமுடையவர்களாக உள்ளனர் என்பதை 2010தாய்மொழிகள் மறு ஆய்வுக்குழு அறிக்கை காட்டுகிறது.

சிங்கப்பூர்க் கல்வி அமைச்சும் கற்றல், கற்பித்தலுக்கான தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் சார்ந்த பயிற்றுவளங்களைச்சீனம், மலாய், தமிழ் ஆகிய மொழிகளுக்கு உருவாக்கி வருகிறது.எடியுமால்2.0, இருவழித் தொடர்புத்தளம் முதலியவை மும்மொழிகளுக்காகவும் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழுக்கென்று, 'எங்கும் தமிழோசை','நம் நாடி', 'சங்கமம்' என்னும் தலைப்புகளிலான பிரிவுகளில் எண்ணற்ற வளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஈ-மீடியா எனப்படும் தளத்தில் கற்பித்தலுக்கு உதவும் ஒலிப்பகுதிகளும், ஒளிக்காட்சிகளும் ஏற்றம் செய்யப்பட்டுள்ளன.

இருவழித் தொடர்புத்தளத்தில் மாணவர்கள் தங்கள் பேச்சைப் பதிவுசெய்து ஏற்றம் செய்யலாம். இதை ஆசிரியர்கள் கேட்டுமாணவர்களின் பேச்சுத்திறன்கள் குறித்த ஆக்கபூர்வமான கருத்துத் தெரிவிப்பை உரிய காலத்தில் அதே தளத்தில் வழங்க முடியும். அதோடு, மாணவர்களும் இத்தளத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகுதிநிலை விளக்கக் குறிப்புகளின் உதவியுடன் சக மாணவர்களுக்குக் கருத்துத் தெரிவிப்பை வழங்கலாம். இருவழித் தொடர்புத்தளம் தற்போது சில பள்ளிகளில் சோதனை செய்யப்பட்டு வருகிறது. கூடிய விரைவில் இத்தளம் எல்லா பள்ளிகளிலும் அமலாக்கம் காணவிருக்கிறது.

முடிவுரை

மாணவர்கள் தமிழ்மொழிக் கல்வியின் இன்றியமையாமையை உணர வேண்டும். அதற்காகத் தமிழாசிரியர்கள் மாணவர்களின் மொழித்திறன் மேம்பாடு தொடர்புடைய கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தை எவ்வாறு ஆக்ககரமாகப் பயன்படுத்தலாம் என்று நாளும் சிந்திக்க வேண்டும். மேலும், அவர் தம் மாணவர்களின் நிலைக்கு ஏற்பப் பாடங்களை வடிவமைத்து ஈடுபாடுமிக்கக் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் அவர்களை ஈடுபடுத்த வேண்டும். இத்தகைய மனப்போக்குடன்ஒவ்வோர் ஆசிரியரும் தமிழ்மொழி கற்பித்தலில் ஈடுபட்டுத் தமிழ்மொழி தொடர்ந்து வாழவும் வளரவும் நம் பங்கினை ஆற்றுவோமாக.

வாழ்க தமிழ்! வாழ்க வளமுடன்.

மேற்கோள் நூல்கள்:

Trucano, Michael. 2005. Knowledge Maps: ICTs in Education. Washington, DC: infoDev / World Bank.

சுப்புரெட்டியார், ந. 2000. *தமிழ் பயிற்றும் முறை*. மெய்யப்பன் தமிழாய்வகம்.

பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு, கல்வி அமைச்சு. 2010: தமிழ்மொழிகள் மறு ஆய்வுக் குழு அறிக்கை *எ ஆர்வத்துடன் கற்றுத் திறம்படப் பயன்படுத்துவோரை உருவாக்குதல்.*

பல்லூடகத் தகவல் தொடர்பு தொழில்நுட்பப் பயன்பாட்டின் வாயிலாக நான்காம் ஆண்டு மாணவர்களிடையே பழமொழி பயன்பாட்டினை மேம்படுத்துதல் - ஓர் ஆய்வு

சிவகுமாரி த/பெ சாமியப்பன்
ஆசிரியர் கல்விக் கழகம், ராஜா மெலேவார் வளாகம்
சிரம்பான், நெகிரி செம்பிலான்

இயல் 1

1.0 முன்னுரை

கல்வித் துறையில் கணினியின் வளர்ச்சி கல்வியாளர்களைப் பிரமிக்கவைக்கின்றது. கணினிவழி மொழி கற்பித்தல் கல்வித்துறையில் பல பரிமாணங்களைத் தாண்டிவிட்டது. கணினி மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பத் துறை சார்ந்த பல்லூடகத் துணைக்கருவிகளின் வருகை கல்வியுலகில் விவேகமான கற்றல் கற்பித்தல் சூழல்களுக்கு இட்டுச்சென்றுள்ளது. கல்வி என்றால் முதன்மைப் பொறுப்புடையவர்கள் ஆசிரியர்கள். தமிழ்மொழி கற்பித்தலிலும் துறை சார்ந்த தொழில்நுட்ப மாற்றங்களுக்கும் அவர்களே பொறுப்புடையர்கள் ஆவர். ஏனெனில், தொழில்நுட்பம் நாளுக்கு நாள் புத்தாக்கச் சிந்தனையின் அடிப்படையில் வளர்ச்சியடைந்து வருகிறது.

தொழில்நுட்ப மாற்றங்களுக்கு ஆசிரியர்கள் குறிப்பாகத் தமிழ்பள்ளி ஆசிரியர்கள் ஈடுபாடு காட்ட ஆரம்பித்துள்ளனர். தமிழ்மொழி ஆசிரியர்கள் மாணவர்களுக்குச் சொற்களஞ்சியத்தையும் சிந்தனையாற்றலையும் வளர்க்க வழி வகுக்கும் இலக்கியத் திறனை இளமையிலேயே வளர்த்து விட வேண்டும். இதன் வழி, தாய்மொழியாகிய தமிழ்மொழி உயிர்ப்பு மொழியாக, அனைத்து உள்ளங்களிலும் அழியா மொழியாக நிலைத்திருக்க வழியுண்டு.

1.1 பின்னணி

வாழ்க்கையைப் பண்படுத்தும் இலக்கியம் மாணவர்களுக்கு இன்றியமையாத முக்கியக் கூறாக அமைகிறது. இலக்கியக் கூறுகளுள் ஒன்றாகத் திகழும் பழமொழி அதனைக் கற்போரின் அறிவை வளர்ப்பது மட்டும் அல்லாமல், வாழ்க்கையையும் நெறிப்படுத்துகிறது. பல சிறப்புகள் வாய்ந்த பழமொழியைத் தொடக்கப் பள்ளியில் பயில மாணவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் அதிகமான மாணவர்கள் தேர்வுக்காக மட்டுமே மனனம் செய்கின்றனரே தவிர அதனின் முழு இலக்கியச் சுவையை உணராமலேயே இருக்கின்றனர். இதற்குக் காரணம் கற்றல் கற்பித்தலின்போது தமிழ் ஆசிரியர்கள் கையாளும் அணுகுமுறைகள் மாணவர்களை ஈர்க்கும் வகையில் அமைவதில்லை.

எல்லா மாணவர்களும் மொழித்திறனில் ஒரே விதமான ஆற்றல் கொண்டவர்களாக இருப்பார்கள் என்றும், மொழி கற்றல் அடைவுநிலைகள் எல்லா மாணவர்களுக்கும் ஒரேவிதமாக

இருக்கும் என்றும் எண்ணுவது என்பது த வறான அனுமானங்களாகும். இதைக் கருத்திற்கொண்டு ஆசிரியர்கள் தமிழ் மாணவர்கள் ஒவ்வொருவரின் தேவையறிந்து கற்பித்தல் முறைகளையும், மொழி நடவடிக்கைகளையும் மாற்றியமைத்துக் கொள்ள வேண்டுவது அவசியமாகும்.

தமிழ்மொழியை ஆர்வத்துடன், முறையாகக் கற்று தேர்வுகளில் சிறப்பானப் புள்ளிகளைப் பெறுவதோடு சிறந்தச் சமுதாயமாக எதிர்காலத்தில் நம் மாணவர்கள் திகழ வேண்டும். இதற்கு ஒரே வழி ஆய்வாளர், மாணவர்களை ஈர்க்கும் வகையில் புதியதொரு அணுகுமுறையைப் பயன்படுத்திக் கற்றல் கற்பித்தலில் நடவடிக்கையைச் செயலாக்க வேண்டும் என்பதை உணர்ந்தார். இதனைக் கருத்தில் கொண்டுதான் பல்லூடகக் கற்றலின் வழி நான்காம் ஆண்டு மாணவர்களிடையே பழமொழி பயன்பாட்டினை மேம்படுத்த முடியும் என்று இந்த ஆய்வினை மேற்கொண்டார். இந்த ஆய்வில் குறிப்பாக எழுத்து, இசை அல்லது குரல் பதிவு, திரைப்படக்காட்சிகள் மற்றும் இயங்குபடம் போன்ற ஊடகங்கள் மாணவர்களின் பழமொழி பயன்பாட்டினை வளப்படுத்தப் பயன்படுத்தப்பட்டன.

மாணவர்களின் அடைவுநிலைக்கேற்றவாறும், தரத்திற்கேற்றவாறும், மனமகிழ்வு ஊட்டும் வகையில் பல்லூடகத் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கற்றல் கற்பித்தல் முறையே நடைபெற்றால் மாணவர்களின் பழமொழி பயன்பாட்டினை வளப்படுத்தி வெற்றி காணலாம் என்பதே இந்த ஆய்வின் முடிவு.

1.2 ஆய்வுக்குரிய சிக்கல்

இந்த ஆய்வின் சிக்கலானது மாணவர்களிடையே பழமொழியின் பயன்பாடு மிகவும் குறைவாக உள்ளதே ஆகும். குறிப்பாக கட்டுரை எழுதும் வேளை சூழலுக்கு ஏற்றவாறு பொருளுணர்ந்து பயன்படுத்துவதில் சிரமத்தை எதிர்நோக்கினர். மேலும் அவர்களின் உரையாடல்கள் மற்றும் அன்றாட நடைமுறை வாழ்க்கையிலும் பழமொழி பயன்பாடு மிகவும் குறைவாகவே காணப்பட்டது. இதற்குக் காரணம் பழமொழியை மனனம் செய்வதைச் கடினமாகக் கருதுகின்றனர். இதனால் மாணவர்கள் தேர்வுக்காக மட்டுமே கற்பது போன்ற சூழ்நிலைக் காணப்படுகின்றது. பழமொழி கற்றல் கற்பித்தலின்போது ஆசிரியர்கள் மாணவர்களின் தரத்திற்கேற்றவாறும், மாணவர்களை ஈர்க்கும் வகையில் கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகளைப் பயன்படுத்தாத சூழ்நிலையும் மாணவர்களின் இந்நிலைக்குக் காரணமாக அமைகின்றன.

1.3 ஆய்வு நோக்கம்

- கற்றல் கற்பித்தல் நடவடிக்கையில் மாணவர்களின் பழமொழி பயன்பாட்டு அடைவுநிலையைக் கண்டறிதல்
- மாணவர்கள் பழமொழி கற்பதில் எதிர்கொள்ளும் சிக்கலின் காரணத்தைக் கண்டறிதல்
- பல்லூடகத் தகவல் தொடர்பு தொழில்நுட்பப் பயன்பாட்டின் வாயிலாக மாணவர்களிடையே பழமொழி பயன்பாட்டினை அதிகரித்தல்.

1.4 ஆய்வு வினா

- ஆசிரியரின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கையின்போது நான்காம் ஆண்டு மாணவர்களிடையே பழமொழியின் அடைவுநிலை எந்த அளவில் உள்ளது?
- மாணவர்கள் பழமொழியைக் கற்பதில் எத்தகையச் சிக்கல் மற்றும் அதற்கானக் காரணங்கள் யாவை?
- கற்றல் கற்பித்தலில் பல்லூடகத் தகவல் தொடர்பு அணுகுமுறை மாணவர்களின் பழமொழி பயன்பாட்டினை எவ்வாறு மேம்படுத்துகிறது?

1.5 ஆய்வு எல்லை

இந்த ஆய்வு சிரம்பான் வட்டாரத்தில் தோட்டப்புறச் சூழலில் அமைந்த தமிழ்ப்பள்ளியில் பயிலும் நான்காம் ஆண்டு மாணவர்களிடையே நடத்தப்பட்டது. கற்றல் கற்பித்தலின்போது மாணவர்களின் பழமொழி பயன்பாட்டினை எவ்வாறு வளப்படுத்த முடியும் என்பதே இவ்வாய்வின் நோக்கமாகும். வகுப்பில் மாணவர்கள் பழமொழியை முறையாக பயன்படுத்த முடியாத சூழ்நிலையில் காணப்பட்டனர். இவ்வாய்வின் முடிவானது இக்கட்டுரைகளின் மாதிரி தேர்ந்தெடுக்கப்பட்டப் பள்ளிக்கே உரித்தான ஒன்று. இவ்வாய்வின் மூலம் கிடைக்கும் முடிவுகளைப் பொதுமையாக்கிக் கொள்ள முடியாது.

இயல் 3

3.1 ஆய்வு வடிவமைப்பு

ஆய்வு நடத்துவதற்கு முன் கற்றல் கற்பித்தலின் போது நுண்ணோக்கல் வழி (*observation)* மாணவர்கள் பழமொழி பயன்பாட்டில் எத்தகைய அடைவுநிலையை அடைந்துள்ளனர் என்ற தகவல்கள் திரட்டப்பட்டன. மேலும் அன்றாடக் கற்றல் கற்பித்தலில் மாணவர்களின் பழமொழியின் பயன்பாடு சில கூறுகளின் அடிப்படையில் உற்று நோக்கலின் வழியும் தகவல்கள் திரட்டப்பட்டன. மேலும் மாணவர்களின் அன்றாட உரையாடல்களிலும், கட்டுரைகளிலும் பழமொழியின் பயன்பாடு பின்தங்கிய நிலையில் இருந்தது கண்டறியப்பட்டது.

3.2 ஆய்வுக்கு உட்படுவோர்

இந்த ஆய்விற்கு உட்பட்டவர்கள் 15 மாணவர்கள் ஆவர். இந்த வகுப்பில் மொத்தம் 8 ஆண் மாணவர்களும் 7 பெண் மாணவர்களும் உள்ளனர். எதிர்காலத்தில் பள்ளி ஆசிரியர்கள் இத்தகைய நவீன அணுகுமுறையை மாணவர்களின் தரத்திற்கு ஏற்றவாறு நடத்தினால் கற்றல் கற்பித்தல் நடவடிக்கை சிறப்புடையதாகவும் நம்பகமாகவும் திகழும் என்பது ஆய்வாளரின் எதிர்ப்பார்ப்பாகும்.

3.3 ஆய்வுக் கருவிகள்

இந்த ஆய்விற்கான தரவுகளைத் திரட்டுவதற்கு ஆய்வுக் கருவிகளாக நுண்ணோக்கல், வினா நிரல் பட்டியல், நேர்க்காணல் ஆகியவைகள் கையாளப்பட்டன. இந்த ஆய்வின் வழி, மாணவர்களின் சூழ்நிலை, தரம், மனமகிழ்வு நிலைகளுக்கு ஏற்றவாறு கற்றல் கற்பித்தல் நடைபெறுமாயின் நான்காம் ஆண்டு மாணவர்களிடையே பழமொழி பயன்பாட்டினை மேம்படுத்த முடியும் என்ற உண்மை கண்டறியப்பட்டது.

3.4 ஆய்வு அமைப்புமுறை

செயல்திட்டத்தின் அமலாக்கம்

அட்டவணை 1 : செயல்திட்ட நடவடிக்கைகள்

வாரம்	நடவடிக்கைகள்
1	-முன்னறித் தேர்வு ஒளிபரப்பப்படும் கதையில் கதைமாந்தர்கள் பயன்படுத்தும் பழமொழிகள் மற்றும் அதன் பொருளைக் கூறப் பணித்தல். - பழமொழியைப் பயன்படுத்தி கதை/சூழல் கூறப் பணித்தல்
2	தொடர்படங்களைப் பார்த்து பொருத்தமான பழமொழியினைக் கூறப் பணித்தல் (கணினியைப் பயன்படுத்தி எழுத்து - text))
3	மாணவர்களைச் செவிமடுத்த உரையாடல்களுக்கு ஏற்ற பழமொழிகளைப் பொருளுணர்ந்து கூறப் பணித்தல் - காணொளியில் பார்த்த உரையாடலுக்கு பொருத்தமானப் பழமொழியைக் கூறப் பணித்தல்
4	ஒளிபரப்பப்பட்ட சினிமா உரையாடலில் பயன்படுத்தியப் பழமொழிகளுக்கு ஏற்ற பொருளைக் கூறப்பணித்தல்
5	ஒளிபரப்பப்பட்ட சிறுவர் கதையில் உள்ள பழமொழிகளைக் கலந்துரையாடித் தனியாள் முறையில் கருத்துகளைக் கூறப் பணித்தல்
6	கணினியில் ஒளிபரப்பப்பட்டச் சூழலைச் செவிமடுத்து, சூழலுக்குப் பொருத்தமானப் பழமொழியைக் கூறப் பணித்தல்
7	கணினியில் பதிவு செய்து ஒலிபரப்பப்பட்ட உரையாடலுக்கேற்ற பழமொழியைக் கூறப்பணித்தல்
8	குறுந்தட்டு உரையாடலைச் செவிமடுத்து, அதற்கேற்றப் பழமொழியைப் பயன்படுத்தி பேசி நடிக்கப் பணித்தல்
9	ஒளிபரப்பப்பட்ட சிறுவர் நாடகங்களில் செவிமடுத்தப் பழமொழிகளின் பொருளைத் தனியாள் முறையில் கூறப் பணித்தல்

10	- முன்னறித் தேர்வில் பார்த்த அதே கதை பின்னறித் தேர்விலும் ஒளிபரப்பப்பட்டது. - பழமொழியைப் பயன்படுத்தி கதை/சூழல் கூறப் பணித்தல்

இயல் 4

4.1 தரவுகள் பகுப்பாய்வு

இந்த ஆய்வில் நடத்தப்பட்ட முன்னறி மற்றும் பின்னறிச் சோதனைகள் பழமொழிகளின் பொருளை அடையாளம் காணுதல், சூழலுக்கேற்ற பழமொழியைத் தெரிவு செய்தல், சுயமாக உருவாக்கும் கதைகள்/ உரையாடல்களில் பழமொழிகளைப் பயன்படுத்துதல் போன்ற கூறுகளின் அடிப்படையில் அமையப்பெற்றன. முன்னறிச் சோதனை, பின்னறிச் சோதனை இவற்றின் முடிவுகளைக் கொண்டு அட்டவணைகள் உருவாக்கப்பட்டன.

அட்டவணை 2 மாணவர்களின் பழமொழி பயன்பாட்டின் அடைவுநிலை

மாணவர்கள்	முன்னறிச் சோதனை /100	பின்னறித் சோதனை /100	வேறுபாடு (ஏற்றம்)	சதவிகிதம்(%) (ஏற்றம்)
1	30	70	40	57.1
2	30	75	45	60
3	28	68	40	58.8
4	32	75	43	57.3
5	40	80	40	50
6	24	55	31	56.3
7	30	76	46	60.5
8	42	80	38	47.5
9	44	82	38	46.3
10	40	82	42	51.2
11	32	68	36	53
12	42	80	38	47.5
13	30	69	39	56.5
14	30	65	35	54
15	35	75	40	53.3
சராசரி	33.9	73.3	39.4	54

மேற்கண்ட முன்னறிச் சோதனை மற்றும் பின்னறிச் சோதனை முடிவினைக் கீழ்க்கண்டவாறு சராசரியின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுப் பகுப்பாயப்பட்டுள்ளது.

அட்டவணை 3 முன்னறி மற்றும் பின்னறிச் சோதனையின் பகுப்பாய்வு

புள்ளிகள்	முன்னறிச் சோதனை (மாணவர் எண்ணிக்கை)	பின்னறிச் சோதனை (மாணவர் எண்ணிக்கை)
0 - 39	10 (66.7%)	0 (0%)
40 - 60	5 (33.3%)	1 (6.7%)
61 - 79	0 (0%)	10 (66.7%)
80 - 100	0 (0%)	4 (26.6%)

மேற்கண்ட அட்டவணையைப் பகுப்பாய்வு செய்யும் பொழுது முன்னறிச் சோதனையில் மொத்தம் 10 அல்லது 66.7% மாணவர்கள் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர். மேலும் 5 அல்லது 33.3% மாணவர்கள் நடுத்தரமானப் புள்ளிகளையேப் பெற்றிருந்தனர். இம்முன்னறிச் சோதனை ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட 15 மாணவர்களில் எந்த ஒரு மாணவரும் சிறப்பு தேர்ச்சிப் பெறவில்லை. அதாவது கற்றல் கற்பித்தல் நடவடிக்கையின்போது மணவர்களிடையே பழமொழி பயன்பாடு மிகவும் குறைந்த நிலையில் காணப்பட்டது. இருப்பினும் பின்னறிச் சோதனையில் 66.7% மாணவர்கள் சிறப்பானத் தேர்வும் 26.6% விழுக்காடு மாணவர்கள் மிகவும் சிறப்பானத் தேர்ச்சியினையும் பெற்றுள்ளனர். அதாவது மாணவர்களின் முறையான பழமொழி பயன்பாடு அதிகமாக காணப்பட்டன. இப்பின்னறிச் சோதனையில் எந்த மாணவனும் குறைந்தப் புள்ளிகள் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. முன்னறிச் சோதனையில் சிறப்பு தேர்ச்சி நிலை இல்லாது, பின்னறிச் சோதனையின் போது சிறப்பு தேர்ச்சி விகிதம் 26.6% விழுக்காடாக உயர்ந்திருப்பது நல்ல முன்னேற்றத்தைக் காட்டுகிறது.

இயல் 5

ஆய்வு கண்டு பிடிப்புகளும் முடிவும்

பல்லூடகத் தகவல் தொடர்பு தொழில்நுட்பப் பயன்பாட்டின் வாயிலாக நான்காம் ஆண்டு மாணவர்களிடையேக் கற்றல் கற்பித்தல் நடவடிக்கையின்போது பழமொழி பயன்பட்டினை மேம்படுத்த இயலும் என்று ஆய்வாளர் இந்த ஆய்வின் மூலம் கண்டறிந்தார். இதனை மாணவர்களின் முன்னறித் தேர்வு மற்றும் பின்னறித் தேர்வை ஒப்பீடு செய்வதன் வழி கண்டறியலாம்.

கற்றல் கற்பித்தலில் பல்லூடகத் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் வழி மாணவர்கள் மிகவும் ஆர்வத்துடனும், மகிழ்வுடனும் காணப்படுகின்றனர். குழு நடவடிக்கைகளில் சலிப்பின்றி ஆர்வத்துடன் தங்களுடைய கருத்துகளைப் பரிமாறிக்கொள்கின்றனர். மாணவர்கள் இணையத்தின் வழி பழமொழிகள் அடங்கிய கதை, பாடல், உரையாடல், நாடகம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடும்பொழுது மாணவர்களின் சுயகற்றல் ஆர்வமும் காணப்படுகிறது. ஆய்வுக்கு முன் கட்டுரை, உரையாடல், சூழல் போன்ற நடவடிக்கைகளில் பழமொழி பயன்பாடு மிகவும் குறைவாக, ஆர்வம் குன்றிய வகையில் காணப்பட்டது. இருப்பினும் ஆய்வுக்குப் பின் மாணவர்களிடையே பழமொழி பயன்பாடு மிகவும் அதிகமாகவும், ஆர்வத்துடனும் காணப்பட்டது. மேலும் பள்ளிகளில் நடத்தப்படும் கதைக்கூறும் போட்டி, பேச்சுப் போட்டிகளில் பொருத்தமானப் பழமொழிகளைப் பயன்படுத்தினர். கற்றல் கற்பித்தல் நடவடிக்கையின்போது பல்லூடகத் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் வழி மாணவர்களிடையே பழமொழி பயன்பாட்டினை மிகவும் சிறப்பாக வளப்படுத்த முடியும் என்பதே இந்த ஆய்வின் கண்டு பிடிப்பாகும்.

பரிந்துரைகள்

1 மாணவர்களிடையே பழமொழி பயன்பாட்டினைப் பல்வேறு உத்திகளில் பல்லூடகத் தகவல் தொடர்பு தொழில் நுட்பத்தின் வழி கற்றல் மிகுந்த பலனை அளிப்பதால் இம்முறையை ஆசிரியர்கள் முறையாகப் பயன்படுத்துவது சிறப்பை அளிக்கும்.

2 மாணவர்களின் அடைவு நிலைக்கு ஏற்றவாறும், சிந்தனையை வளப்படுத்தும் வகையிலும் பல்லூடகத் தகவல் தொடர்பு தொழில் நுட்பத்தைக் கற்றல் கற்பித்தலில் பயன்படுத்தி பயிற்சிகள் அளித்து மாணவர்களின் ஆர்வத்தை வளர்க்க வேண்டும்.

3 மாணவர்களின் மற்ற மொழிப் பாட கற்றல் கற்பித்தலின்போது ஆசிரியர் கணினியைப் பயன்படுத்தி எழுத்து, வரைகலை, இசை, வீடியோ மற்றும் இயங்குபடம், திரைப்படக் காட்சிகள் ஒளிப்பதிவு வழி மாணவர்களின் மொழி வளத்தை வளப்படுத்துவதோடு கற்பனை வளத்தையும் தூண்டலாம்.

4 ஆரம்பப் பள்ளி மாணவர்களின் இலக்கண, இலக்கியக் கற்பித்தலின்போது ஆசிரியர்கள் கணினியைப் பயன்படுத்தி எழுத்து, வரைகலை, இசை, வீடியோ மற்றும் இயங்குபடம், திரைப்படக் காட்சிகள் ஒளிப்பதிவு வழி கற்றலை நடத்துவதற்குத் தமிழாசிரியர்கள் அடிப்படைத் தகவல் தொடர்பு தொழில்நுட்பத் திறன் பெற்றிருப்பவர்களாகத் திகழ வேண்டும்.

5 பள்ளி ஆசிரியர்கள் இணைந்து எளிய முறையில் பல்லூடகக் குறுந்தட்டு தயாரிப்பில் ஈடுபட வேண்டும். மாணவர்களுக்குக் கணினி மற்றும் இணையத்தின் வழி பயிற்சிகள் அளிக்கும் வகையினைத் தயார் செய்வதற்குத் தமிழாசிரியர்கள் அடிப்படைத் தகவல் தொடர்பு தொழில்நுட்பத் திறன் பெற்றிருப்பவர்களாகத் திகழ முயற்சி செய்யவேண்டும்.

6 மாணவர் நலனைக் கருத்தில் கொண்டு, தமிழாசிரியர்களுக்குப் பல்லூடகத் தொழில்நுட்பப் பயிலரங்குகளை மாவட்ட அல்லது மாநில அளவிலானத் தமிழ்மொழி பாடத்திட்ட மேம்பாட்டுக்குழு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

7 பள்ளி ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தலுக்கு உகந்த வலைதளங்களைப் பதிவிறக்கம் செய்து மாணவர்களை ஈர்க்கும் வகையில் பாடங்களைத் திட்டமிட்டு கற்பிக்கலாம்.

முடிவுரை

இந்த ஆய்வின் வழி, காலமாற்றத்திற்கு ஏற்பவும், வளர்ந்து வரும் நவீன பல்லூடத் தொழிநுட்ப வசதிகளுக்கேற்பவும் பள்ளி ஆசிரியர்கள் தங்கள் கற்றல் கற்பித்தல் நடவடிக்கையில் புதிய அணுகுமுறையைக் கையாண்டால் சிறந்த வருங்காலத் தலைமுறையினரை உருவாக்க இயலும் என்பது திண்ணம்.

துணை நூல் பட்டியல்

1. மா. கருணாநிதி (2008), கற்றல் கற்பித்தல் மேம்பாட்டுக்கான வழிமுறைகள், சேமமடு பதிப்பகம் கொழும்பு.

2. ந.சுப்புரெட்டியார் (2003), தமிழ் பயிற்றும் முறை, மெய்யப்பன் பதிப்பகம் சிதம்பரம்

3. வி. கணபதி, (2007), நற்றமிழ் கற்பிக்கும் முறைகள், சாந்தா பதிப்பகம் சென்னை

4 இரபிசிங், ம.செ : இணைய வழித் தமிழ் இலக்கியம் கற்பித்தல், 5வது உலகத் தமிழாசிரியர் மாநாடு, சிங்கப்பூர்

5 சு.திண்ணப்பன் (1987), கணினியும் தமிழ் கற்பித்தலும், ஆறாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு ஆய்வுக் கட்டுரைகள், மலாயாப் பல்கலைக்கழகம், கோலாலம்பூர்.

பண்பாட்டு விழுமியங்களைப் பேணுவதில் தமிழ்க்கல்வியின் பங்கும் பணியும்

சுப்பிரமணியம் இராசரத்தினம்
கனடா

அகிலம் முழுவதும் பரவி வாழும் தமிழ்ப்பிள்ளைகள் செம்மையான வாழ்வு வாழ தமிழ்மொழிக்கல்வி பெரும் பங்கினை ஆற்ற முடியும் கல்வியின் நோக்கம் மூளைக்குத் தகவல் கொடுப்பதல்ல. மனதைச் செம்மை ஆக்குவதே. மனதைச் செம்மையாக்கவும், தன் இனத்துடன் இசைந்து வாழவும், மற்றைய இனங்களை மதித்து வாழவும், கூடிய மனநிலையை உருவாக்கக் கூடியது பண்பாட்டு வழிக்கல்வியே அத்துடன் மற்றைய இனத்தோர் நம்மை மதித்துப் போற்றவும் வழிசமைக்கும்.

வணிக மயமான இன்றைய உலகில் தவறான வழிகளை உண்மைவழி என்று நினைத்திருக்கும் திரிபுணர்ச்சியே மாணவர்களின் மனங்களின் அமைதியைக் குலைந்து தடுமாற வைக்கிறது. வாழ்க்கையின் விருப்பு வெறுப்புகள் மனநிலையைப் பொறுத்தவை. உடல்வளர்ச்சிக்கு உணவு போன்று மனவளர்ச்சிக்குச் சிறந்த எண்ணங்கள் தகுந்தவாறு கொடுக்கப்படல் வேண்டும். அதுவே ஒரு மாணவனை நல்ல குறிக்கோள் உள்ளவனாக்கும். இத்தகைய பங்கினைத் தமிழ்க்கல்வி வகிக்க முடியும்.

கற்பித்தல் முறையிற் தெளிவு:-

தமிழ்மொழியைக் கற்பிக்கும் போது கற்கவருபவரின் மனநிலை, நோக்கம், சூழல் அடையக்கூடிய பயன் என்பவற்றை ஆசிரியர் நன்கு புரிந்து வைத்திருத்தல் அவசியமாகிறது.
இன்று எமது தேவைகளில் ஏற்பட்டிருக்கும் மாற்றமும், காலத்தின் கோலமும், ஆங்கிலமொழி எல்லாத்துறைகளிலும் ஆதிக்கம் செலுத்துவதாலும் தமிழ்மொழி கற்றலுக்கான தேவையும் நோக்கமும் மாறியுள்ளது.
ஆனால் அதேவேளை தமிழ் ஒரு செம்மொழி, பண்பாட்டை (மனிதவாழ்வியலை) அடிப்படையாகக் கொண்ட மொழி, பல்வகை விழுமியங்களை எடுத்துக்கூறும் இலக்கியங்களை, அறநூல்களைக் கொண்டுள்ள மொழி என்பதால் தமிழ்மொழி இன்றைய உலகின் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய ஒன்றாகத் திகழ்கிறது. மாணவர்களை *தெளிந்த நல்லறிவு, *ஆற்றல், *உயர்சிந்தனை, *நற்பண்புகள், *மனிதநேயம் உடையவர்களாக உருக்கக்கூடிய பலதரப்பட்ட நூல்களைக் கொண்டுள்ளது. எனவே இவற்றில் இருந்து பண்பாட்டு விழுமியங்களை பாடத்திட்டத்தில் இணைத்துக் கொள்ளல் இன்றி அமையாதது.

பண்பாட்டு விழுமியம்

பண்பாட்டு விழுமியங்களைத் தமிழ்மொழிக் கல்வியினூடாக எடுத்துச் செல்வதற்குப் பண்பாடு பற்றியும், விழுமியம் பற்றியும் ஆசிரியர்கள் தெளிந்த அறிவினைக் கொண்டிருத்தல் வேண்டும். பண்பாட்டின் கோலத்தினையும், கட்டமைப்பினையும் ஒரு பெருமரத்துடன் ஒப்பிடலாம். அப்பெருமரத்தினைத் தாங்கி நிற்கும் பூமியாக "மனதையும்" அம்மரத்தின் வேர்களாக "சிந்தனையும்" , அடிமரமாக "செயலும்" மரத்தின் பெரும் கிளைகளாகப் பண்பாட்டின் முக்கிய கூறுகளும்பெரும் கிளைகளில் உள்ள பல சிறுகிளைகள் போன்று ஒவ்வொரு முக்கிய பண்பாட்டுக்கூறுகளின் சிறுசிறு பிரிவுகளையும் குறிப்பிடலாம். அக்கிளைகளில் தொங்கும் இலைகள், பூக்கள், காய்கள், கனிகள்

போன்றே பொருளாக்கப் பண்பாடு உள்ளது. எவ்வாறு இலைகள், பூக்கள், காய்கள், கனிகள் நறுமணத்தையும், பயனையும் கொடுத்து மனித மனங்களில் இடம்பெறுகின்றனவோ அதேபோன்று மனிதர் மனங்களில் தோற்றத்தைக்கொடுத்து மணம்வீசி நிற்பது செயலால் விளையும் பொருளாக்கப் பண்பாடே (நாகரீகமே)

நெறியியல்

ஒருவர் எவ்வாறு வாழவேண்டும்? வாழ்வில் ஒருவர் எவற்றைச் செய்ய வேண்டும்? எவற்றைச் செய்யக்கூடாது? ஏன் செய்யக்கூடாது? போன்ற விதிமுறைகள் நெறியியல் என அழைக்கப்படும். இந்நெறியியல் விதிமுறைகள், விழுமியங்களாக, நம்பிக்கைகளாக, கொள்கைகளாக, கட்டங்களாக, பழக்கங்களாக, வழக்கங்களாக குடிவழக்குகளாக மற்றும் இன்னோரன்ன பல கூறுகளாக சமூகத்தில் நிலவி வருகின்றன.

நெறிமுறைகள்

மக்களின் நடத்தை முறைகளையும், செயற்பாடுகளையும் முறைப்படுத்தக்கூடிய விதிகளே "நெறிமுறைகள்". இவற்றின் முக்கிய கூறுகளாக மக்கள் கொண்டுள்ள கொள்கைகள், நம்பிக்கைகள், பழக்கங்கள், வழக்கங்கள் அமையும்.

நம்பிக்கை

உலகில் உள்ள ஒவ்வொரு பொருளும் மனித வாழ்வியலில் எத்தகைய தொடர்பை, தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது என்று சமூகமோ, மனிதனோ கொண்ட எண்ணத்தின் அடிப்படையில் மனதில் பதிந்துள்ள கருத்தே அவர்களின் நம்பிக்கை ஆகும்.

கொள்கைகள்

மனித வாழ்வோடு தொடர்புடைய அல்லது தொடர்பற்ற அகிலத்தில் உள்ள சகல உணர்வுகள், உறவுகள், அவற்றின் நன்மை, தீமைகள் பற்றியும், ஒவ்வொரு சமூகத்தின் வழிகாட்டிகளும், அறிஞர்களும் தாம் வாழ்ந்த சூழலில், அக்காலகட்டத்தில் கொண்டுள்ள முடிவான கோட்பாடுகளே அவர்களின் கொள்கைகள் ஆகும்.

பழக்கம் வழக்கம்

மனிதன் உண்பது, உடுப்பது, உறங்குவது, தொழில் செய்வது உட்பட தனது இயல்பான உந்து சக்திகளைப் போக்கிக்கொள்ள முயற்சிக்கும் எல்லா நடைமுறைகளும் பழக்கம் (habit), வழக்கம் (custom) எனப்படும்.

குடிவழக்கு

ஒரு சமூகத்தில் அனைவரிடமும் காணப்படும் பொதுவான நடத்தை முறைகள் "குடிவழக்கு" எனப்படும். இது மக்களிடம் இருந்து இயல்பாக சிந்திக்காது வெளிப்படும். இவை மரபு வழியாக ஒவ்வொரு மனிதனின் மனதிலும் படிந்திருக்கும். "கடமை" என்னும் பண்பால் மரபுவழியாக கடைப்பிடிக்கட்டு வரும். அத்தோடு குடிவழக்குகள் அந்தந்த இனத்துக்கே உரிய ஒழுக்கங்கள் ஆகின்றன. குடிவழக்கின் முக்கிய கூறுகளாக "வழக்கடிபாடு", "குறியீடு" "நடையுடை பாவனை" என்பவற்றைக் குறிப்பிடலாம்.

வழக்கடிபாடு

ஒரு மனிதரைப் பற்றிய கணிப்பீட்டை இன்னொருவருக்கு உடனே கொடுக்கக்கூடிய நடத்தைப் பண்புகள் "வழக்கடிப்பாடு" எனலாம். இங்கு நடத்தைப் பண்புகள் என்று குறிப்பிடும்போது அவை செயல், சொல் இரண்டையும் குறிக்கும்.

குறியீடு

எந்த ஒரு செயலையும், பொருளையும், நடந்தையையும், உணர்வையும் குறியீடு மூலம் வெளிப்படுத்தக் கூடியதே குறியீடு. சுருங்கக்கூறின் வாயால் பேசாது பேசி நிற்பவையே குறியீடுகள்.

நடை, உடை, பாவனை

ஒருவன் தன்னையும் தான் வாழும் சூழலையும் தான் பயன்படுத்தும் பொருட்களையும், அலங்கரித்துக் கொள்வது, வடிவமைத்துக் கொள்வது என்பவற்றினை; நடையுடை, பாவனை எனலாம்.

விழுமியம்

ஓர் இனம் கட்டுக்கோப்பாக மேம்பாட்டு நிலையை நோக்கி இயங்குவதற்கு, அடையவேண்டிய இலக்கினை அடைவதற்கு வழிகாட்டி நிற்பவை, ஒளியாக விளங்குபவை விழுமியங்களே, உலகில் உள்ள எல்லா இனங்களாலும் வரவேற்கப்படும் பண்பாட்டின் கூறு விழுமியம் ஆகும்.
ஒரு மனிதனோ, ஓர் இனமோ எவ்வளவு எண்ணிக்கையான விழுமியங்களை தனது வாழ்வியலில் கடைப்பிடிக்கின்றனரோ அத்தகைய மதிப்பனை அவ்வினமோ, மனிதனோ உலகில் மற்றைய இனங்களிடையே பெறுவர்.

சட்டம்

பண்பாட்டின் அகவெளிப்பாடுகளான குடிவழக்கு, நெறிமுறைகள், விழுமியம் என்பவற்றைச் சமூகம் கடைப்பிடித்து ஒழுகுவதை ஊக்கப்படுத்தும் நோக்கோடு ஆக்கப்பட்டதே "சட்டம்" ஆகும்.

தமிழ்க்கல்வியின் பங்கு

பண்பாடு பற்றியும் அவற்றின் கூறுகள் பற்றியும் புரிந்து கொண்ட நாம் உலக இனங்களால் போற்றப்படும் விழுமியங்களையும், தமிழர்களது தனித்துவத்தையும் உயர்வையும், மேம்பாட்டையும் சுட்டி நிற்கும் பண்பாட்டின் முக்கிய கூறுகளை பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தலாம்.

1. **மரபுத்தொடர்கள், பழமொழிகள்**

இவைகள் தமிழர்களது நம்பிக்கைகள், கொள்கைகள்
அடிப்படையில் அமைந்த, வாழ்வின் வழிகாட்டிச் சொற்றொடர்கள் அவற்றை நன்கு அறிமுகப்படுத்தல் வேண்டும்.

2. **விடுகதைகள்**

தமிழர்கள் தாம் வாழ்ந்த சூழலை வைத்துக்கொண்டு உருவாக்கப்பட்டவை.

3. **கலைகள்**
சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம், சிலம்பாட்டம் போன்ற இன்னோரன்னவற்றின் வரலாறு, வளர்ச்சி, சிறப்பு என்பவற்றை எடுத்துக்கூறல்

4. **தமிழர்தம் மருத்துவம், யோகக்கலை**
இவற்றின் சிறப்பியல்புகள் மருந்தே உணவாகக் கொண்ட இன்றைய உலகில் உணவே மருந்தாகக் கொண்ட தமிழர் வாழ்வியல்பு, உடலைச் சிறப்பாகப் பேணும் யோகக்கலையின் சிறப்பியல்புகள்

மேற்கூறப்பட்டவையை எடுத்துக்காட்டக்கூடிய இலக்கியங்கள், இலக்கணங்கள், கதைகள், காப்பியங்கள், வரலாறுகள் என்பவற்றை பல்வேறு வடிவங்களில் இன்றைய தொழில்நுட்ப உதவியோடு கற்பித்தலை முன்னெடுத்தல் பண்பாட்டுவழி தமிழ்மொழி கற்றல் கற்பித்தலுக்குச் சிறப்பாக அமையும். பண்பாடு பற்றியும், மானிடர் வாழ்வியல் பற்றியும் விரிவாகப் "பண்பாடு – வேரும் விழுதும்" என்னும் எனது நூலில்க் குறிப்பிட்டு உள்ளேன். (2008ம் ஆண்டு தமிழக மானிடவியல், சமூகவியல் என்னும் வகைப்பாட்டில் சிறந்த நூலாகத் தமிழக அரசாற் தேர்ந்தெடுக்கப்பட்டது)

"தமிழின் வாழ்வே தமிழரின் வாழ்வு"

Romanization of Tamil - a South African perspective

Govindasamy Kandasamy Moudley

Brief history of Tamils in South Africa

Of the total number of Indians who came to South Africa either as 'indentured labourers' or as so-called 'passengers Indians', the majority had Tamil as their main home language. Some of them were fully bilingual in the sense that they spoke either of two languages, used by them, with complete confidence. The majority, of those who were who were bilingual, spoke Tamil and Telugu while there was a significant number Tamils of who also spoke Malayaalam with good proficiency. A much smaller number of Tamils were trilingual in that spoke Telugu and Malayaalam or Telugu and Hindi in addition to Tamil. The type and standard of the spoken Tamil varied widely. Among the passenger Indians there were many Tamil scholars who spoke classical Tamil. Among those who learnt the language only by listening to their parents or members of the extended family, spoke the language according the traditions or styles entrenched in their clans.

Possible causes for the decline in the use of the Tamil language in South Africa

Tamil as home language is all but non-existent. In the 1991 population census, 8754 persons indicated that their home language is Tamil. There is no doubt that this number has gone down further. The possible causes for this decline may be due to the combined effect of two or more of the following factors:

1. The increase in the dominance of material wealth as the most important aim of life
2. The growing emphasis on western education as the means to the end of acquiring material wealth
3. Migration of families from the so called 'sugar estates'
4. Need for workers in a variety of industries which sprang up in and around major cities such as Durban, Pinetown, Pietermaritzburg, Newcastle and Richards Bay in the province of Natal; Johannesburg in the province of Gauteng; East London, Port Elizabeth and Cape Town in the Cape Province.
5. The system of government aided schools and platoon classes
6. No pay or very poor pay for Tamil teachers
7. No training facilities for Tamil teachers
8. Methods of teaching were not updated to match what was being used in the government controlled schools. Phonetic method versus the non-phonetic method
9. Emphasis on teaching to read and write.
10. Teaching learners to read and write but little or no attempt made to give the meanings of the words through pictures or using English.

11. Punishment for slow learners with bamboo cane or rap on the knuckles with a piece of wood or metal.

12. Forced resettlement of Indians through the application of the group Group Areas Act

13. The decline of the joint family system

14. Inter-linguistic marriages

15. The decline and demise of separate development or apartheid.

16. Lack of Tamil Education Centres in the suburbs where Tamils were re-settled through the application of the Group Areas Act.

17. Complete break of links with Tamil- most converts to Christianity are completely westernised persons of Tamil origin.

18. Unemployment is between 40 and 50 % and persons of Indian origin have greater difficulty in getting employment because of affirmative action policy requires employers to first preferences to 'Blacks'. It should be noted that most of families of Tamil origin are in the middle class or lower. Hence they are affected the most by unemployment. To compound matters the loving cost are rising very sharply. Learning of Tamil is thus a very low priority for such families.

Tenuous links between the Tamil language and persons of Tamil descent in South Africa

1. Use of relationship names such amma, appaa, akkaa, thaaththaa and paati.

2. Use of names of savouries such as kadalai, vadai and murukku.

3. Use of words for cultural functions such as nalangu,pandhal, thaali

4. Use of words in a religious context such as por-tri, kadavul and aathmaa

5. Words in popular songs such yeng-ger andha ven-nilaa, anner anner.

6. Vegetable market kaththrikaai, vandakaai and malakaa (corruption of milagaai)

7. Tamil priests from India and Sri Lanka speak mostly in Tamil, so the officials and some devotees are forced to use whatever Tamil they have retained.

How is Tamil language being kept alive

1. Through the work of Regional and National Tamil organizations through holding eisteddfod competitions for speech, song, plays /sketches and dancing.

2. Tamil schools operating in a few government run schools

3. Tamil schools run by community organizations

4. Prayer services run as thiru-kootams for families run by community organizations

Need for Romanization

The majority of members of thiru-kootams cannot read Tamil. To enable members who cannot read the song copies in Tamil. Thus the songs need to be written in Roman scripts.

Sources of materials for Romanization:

1. Document/s in Tamil scripts
2. CDs or DVDs
3. Listening to the song being sung (usually by the leader of the group)
4. Listening to a recording made by a good singer in the group.

What are the pitfalls in using pronunciation of words in English as a guide to Romanise Tamil words:

1. In the English word 'bad' the 'a' is pronounced as a long sound (நெடில்) compared to 'bat' in which the 'a' is short sound (குறில்).
2. The words 'boy' and me 'buoy' are pronounced as if they are the same.
3. The letter 'c' in the beginning of a word is sounded as 'k' as in the word 'cat' (பூனை). In the word 'rancid' the 'c' is said as if it is an 's'. that is, 'ransid'
4. The 'd' can be used for Tamil ட but 'dha' is needed for த as in தர்மம்
5. There is no aspirant ('h') nor an 'f' sound in Tamil.
6. All the consonants (மெய் எழுத்துக்கள்) in do not have equivalent Roman scripts.
7. 'Bough' and 'bow' have different meanings but are pronounced in the same way look as they should pronounced the same way but they are not.

The above few examples are enough to show that there is no consistency in the way words in English are pronounced.

One way to overcome the problem is give the Romanised words for well-known Tamil words as shown in the table below.

Romanised word	English meaning	Tamil word
Am-maa	Mother	அம்மா
Ap-paa	Father	அப்பா
Maa-maa	Uncle (mother's brother)	மாமா
An-naa	Elder brother	அண்ணா
Tham-bi	Younger brother	தம்பி
Ak-kaa	Elder sister	அக்கா
Thang-gai	Younger sister	தங்கை
Ath-thai	Aunt (father's sister)	அத்தை
Thaath-thaa	Grand-father	தாத்தா
Paat-ti	Grand-mother	பாட்டி
Vee-du	Home	வீடு
Paal	Milk	பால்
Rot-ti	Bread	ரொட்டி
Meen	Fish	மீன்
Wun-di	Money collecting receptacle in temple	உண்டி
Wor-m	Primal sound	ஓம்
Woodhu-vath-thi	Incence stick	ஊதுவத்தி
Mou-nam	Silence	மௌனம்
Wot-tu	Stick	ஒட்டு
Than-neer	Cold water	தண்ணீர்
Kath-thi	Knife	கத்தி
Inj-ji	Ginger	இஞ்சி
Ne-y	Ghee	நெய்
Naa-y	Dog	நாய்
Poo-nai	Cat	பூனை
Won-dru	One	ஒன்று
Iran-du	Two	இரண்டு
Moon-dru	Three	மூன்று
Naan-gu	Four	நான்கு
Ain-dhu	Five	ஐந்து
Aa-ru	Six	ஆறு
Yer-zhu	Yer-zhu	ஏழு
Yet-tu	Yet-tu	எட்டு
Won-badhu	Won-badhu	ஒன்பது
Path-thu	Path-thu	பத்து

From the key list above the words which begin with vowels are repeated with additional help to get the pronunciation of vowels correct. This is done by adding the Tamil scripts in the hope the

reader will know a person who can read the Tamil scripts with correct time measure (as one beat and two sounds)

அ= a as in am-maa; ஆ= aa as in aaroo; இ = i as in inj-ji; ஈ = ee as in eesal; உ =wu as in wundi; ஊ= woo as in woodhu-vath-thi; எ= ye as in yet-tu; ஏ=yer as in yer-zhu; ஐ= ai as in ai-ndhu; ஒ=wo as in wot-tu; ஓ = wor as in wor-m (also written as om) ; ஔ = ou as in mou-nam.

Comments on the keys given above:

1. Use of extra letters to show long sounds, for example , ammaa takes more space and needs more typing time. The alternative is to write it as ammâ. However this may not suit persons who do not like symbols or those who do not like to remember the meaning of the symbols.
2. The given key does not cater for differences in sounds of the three sets of letters: (ல, ள); (ர, ற); (ந, ன, ண).

To address the above it is suggested that ந, ன be represented by one Roman letter, n. The ண is shown as an italicised *n*. Similarly, we should use l for ல and *l* for ள as shown in the full table below

Table for Romanization of similar sounds

Tamil Letter	Suggested Roman equivalent
ந	n
ன	n
ண	*n*
ல	l
ள	*l*
ர	r
ற	*r*

Table for selected words with consonants

Romanised word	Tamil word	Meaning
Ak-kaa	அக்கா	Elder sister
Sang-gam	சங்கம்	An assembly
Pach-chai	பச்சை	Green
Panj-ju	பஞ்சு	Cotton
Pat-tu	பட்டு	Silk
Kan-dam	கண்டம்	Throat
Path-thu	பத்து	Ten
Than-dhai	தந்தை	Father
Nan-du	நண்டு	Crab
Ap-paa	அப்பா	Father
Am-maa	அம்மா	Mother
Pat-tru	பற்று	Attachment
Kan-nam	கன்னம்	Cheek

Me-y	மெய்	truth
Dharr-mam	தர்மம்	Justice
Kal-vi	கல்வி	Education
Av-vai	அவ்வை	An old woman
Mag-izh	மகிழ்	To rejoice
Kal-lan	கள்ளன்	Thief

Romanization of short and long compound letters (உயிர்மெய் எழுத்துக்கள்).

This is illustrated for one set of compound letters

க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ
ka	kaa	ki	kee	ku	koo	ke	ker	kai	ko	kor	kou

மின்மனன அட்டை (மென்பொருள்) செயலிகளால் சொல்வளத்தைக் கூட்டுதல்

செந்தில்

வாசிப்பு என்பது வெறும் எழுத்துகளைக் கண்களால் வாசிப்பதுமட்டும் அல்ல. அது அதற்கும் அப்பாற்பட்ட பல செயல்களை ஒன்றிணைக்கும் அற்புதத் திறனாக அமைகிறது.எழுத்தறிவு என்பது வாசிப்புக்கு இன்றியமையாதது. அவ்வகையில், ஓர் எழுத்தை வாசிக்கும்போது, அந்த எழுத்தின் வடிவம், அந்த வடிவத்துக்கு ஒலி தருதல், அந்த ஒலி தனியாக அல்லது பிற எழுத்துகளுடன் வரும்போது பெறும் ஒரே மாதிரியான அல்லது வேறுபட்ட பொருள், வாசிப்பவரின் வாழ்வில் அந்த எழுத்து இடம்பெறும் பாங்கு ஆகிய அனைத்தையும் இணைக்கக்கூடிய படிநிலைகள் இடம்பெறுகின்றன.

அதுபோன்று ஒரு சொல்லைக் கற்கும்போது பல படிநிலைகள் அங்கு இடம்பெறுகின்றன.அதாவது அச்சில் இடம்பெற்ற சொல்லின் வடிவம் கண்ணிற்குத் தரும் செய்தி, பேச்சுமொழியில் அதன் ஒலி தரும் செய்தி, எழுத்துமொழியில் அதன் ஒலி தரும் செய்தி, பேச்சுமொழியில் அந்தச் சொல்லின் வரிவடிவம் தரும் செய்தி, எழுத்துமொழியில் குறிப்பிட்ட சொல்லின் எழுத்துத்தமிழ் வடிவம், குறிப்பிட்ட சொல்லின் பொருள், அதன் இலக்கண அமைப்பு முறை, அதன் ஆங்கிலப்பெயர் எனப் பல கூறுகள் முழுமொழி கற்பித்தலில் (whole Language Approach) இடம்பெறும் எழுத்தறிவுப் பயிற்சியாகும். மேலும் மேற்கூறப்பட்ட பலவகைச்செய்திகளையும் மாணவரின் வாழ்வில் பயன்படுத்துவதை வகுப்பறையும் நோக்கமாகக் கொண்டு அவரது மொழியறிவை மேம்படுத்தவேண்டும். எடுத்துக்காட்டுக்கு ஆப்பிள் என்ற சொல்லை எழுதும்வடிவம் சிலருக்குப் படிக்கத்தெரியாமலிருக்கலாம். சிலருக்கு ஆங்கிலத்தில் Decoding-Code breaker(Luke A & Freebody P.,1999) என்றமுறையில் எழுத்துவடிவத்துக்கு ஒலிவடிவம் தரத்தெரியும். ஆனால் பின்தங்கிய நாடுகளில் கிராமப்பகுதியில் உள்ள குழந்தைக்கு, ஆப்பிள் என்றவரிவடிவம், ஒலிவடிவம் ஆகியன தெரிந்தாலும் ஆப்பிள் என்ற பழத்தைப் பார்த்திராததால் ஆப்பிள் என்றால் ஒரு பழம் என்று அவர்களுக்குப் புலனாகாது. இந்த நிலையை மாற்றும் வைகயில், grapho-phonics என்ற உத்திமுறை எழுத்தறிவுக் கற்பித்தலில் முக்கிய இடம்பெறுகிறது. இங்கு அத்தகையதொரு நிலையை மனன அட்டை (மென்பொருள்) செயலிகள்வழியே

சொல்வளத்தைக் கூட்டும் அணுகுமுறையிலும் இருப்பதை அறிய முடிகிறது. அதைப் பற்றி விரிவாக இக்கட்டுரையில் பார்ப்போம். வாசிப்பு என்பது வெறும் எழுத்துகளைக் கண்களால் வாசிப்பது மட்டும் அல்ல. அது அதற்கும் அப்பாற்பட்ட பல செயல்களை ஒன்றிணைக்கும் அற்புதத் திறனாக அமைகிறது.எழுத்தறிவு என்பது வாசிப்புக்கு இன்றியமையாதது.

வாசிப்பில் ஓர் எழுத்தை வாசிக்கும்போது, அந்த எழுத்தின் வடிவம், அந்த வடிவத்துக்கு ஒலி தருதல், அந்த ஒலி தனியாக அல்லது பிற எழுத்துகளுடன் வரும்போது பெறும் ஒரே மாதிரியான அல்லது வேறுபட்ட பொருள், வாசிப்பவரின் வாழ்வில் அந்த எழுத்து இடம்பெறும் பாங்கு ஆகிய அனைத்தையும் இணைக்கக்கூடிய படிநிலைகள் இடம்பெறுகின்றன. அதுபோன்று ஒரு சொல்லைக் கற்கும்போது பல படிநிலைகள் அங்கு இடம்பெறுகின்றன.அதாவது அச்சில் இடம்பெற்ற சொல்லின் வடிவம் கண்ணிற்குத் தரும் செய்தி, பேச்சுமொழியில் அதன் ஒலி தரும் செய்தி, எழுத்துமொழியில் அதன் ஒலி தரும் செய்தி, பேச்சுமொழியில் அந்தச் சொல்லின் வரிவடிவம் தரும் செய்தி, எழுத்துமொழியில் குறிப்பிட்ட சொல்லின் எழுத்துத்தமிழ் வடிவம், குறிப்பிட்ட சொல்லின் பொருள், அதன் இலக்கண அமைப்பு முறை, அதன் ஆங்கிலப்பெயர் எனப் பல கூறுகள் முழுமொழி கற்பித்தலில் (whole Language Approach) இடம்பெறும் எழுத்தறிவுப் பயிற்சியாகும்(McNally, Carol(1994)). மேலும் மேற்கூறப்பட்ட பலவகைச்செய்திகளையும் மாணவரின் வாழ்வில் பயன்படுத்துவதை வகுப்பறையும் நோக்கமாகக் கொண்டு அவரது மொழியறிவை மேம்படுத்தவேண்டும். எடுத்துக்காட்டுக்கு ஆப்பிள் என்ற சொல்லை எழுதும்வடிவம் சிலருக்குப் படிக்கத்தெரியாமலிருக்கலாம். சிலருக்கு ஆங்கிலத்தில் decoding-Code breaker(Luke A & Freebody P.,1999) என்றமுறையில் எழுத்துவடிவத்துக்கு ஒலிவடிவம் தரத்தெரியும். ஆனால் பின்தங்கிய நாடுகளில் கிராமப்பகுதியில் உள்ள குழந்தைக்கு, ஆப்பிள் என்றவரிவடிவம், ஒலிவடிவம் ஆகியன தெரிந்தாலும் ஆப்பிள் என்ற பழத்தைப் பார்த்திராததால் ஆப்பிள் என்றால் ஒரு பழம் என்று அவர்களுக்குப் புலனாகாது. இந்த நிலையை மாற்றும் வைகயில், grapho-phonics என்ற உத்திமுறை எழுத்தறிவுக் கற்பித்தலில் முக்கிய இடம்பெறுகிறது. இங்கு அத்தகையதொரு நிலையை மனன அட்டை (மென்பொருள்) செயலிகள்வழியே சொல்வளத்தைக் கூட்டும் அணுகுமுறையிலும் இருப்பதை அறிய முடிகிறது. அதைப் பற்றி விரிவாக இக்கட்டுரையில் பார்ப்போம்.

எந்த மொழியையும் கற்கும்பொழுது அதை மாணவர்கள் மாணவருக்கு அறிந்த சொற்களின் எண்ணிக்கை நாளடைவில் கூட வேண்டும் அதாவது அதிகரிக்க வேண்டும். புதிய

சொற்களை விரைவாகப் பழகுவதற்காகச் சொற்களைத் தொகுத்து மனப்பாடம் செய்யலாம். இங்கு புரிந்துகொண்டு மனனம் செய்தல் இன்றியமையாதது மனப்பாடமாக்கும் நேரத்தைக் குறைப்பதற்காக Flash Cards எனப்படும் மனன அட்டை முறை பெரிதும் உதவுகிறது. மனன அட்டைகளில், ஒரு பக்கம் தெரிந்த சொல்லும், மறு பக்கம் அதன் தெரியாத பொருளையும் எழுதி அவ்வப்போது பார்வையிடுவதன் மூலம், அறியாத தகவல்களை விரைவில் நினைவிலேற்றிக் கொள்ளமுடியும். பின்வரும் கூறுகள் அதைப் பட்டியலிடும்

- கையடக்கவடிவில் அட்டைகள்
- ஒரு பக்கம் வினா, மறு பக்கம் விடை
- ஒரு பக்கம் தெரிந்த மொழிச்சொல், மறு பக்கம் புதியமொழியில் அதற்கு நிகரான சொல்
- எங்கு வேண்டுமானாலும், அதாவது சட்டைப்பையில் எடுத்துச்சென்று எப்போது வேண்டுமானாலும் இலகுவாக அட்டைகளைப் பார்வையிட்டு மனனம் செய்வது போன்ற சிறப்புகள் கொண்ட மனன அட்டைகள் முறை சென்றநூற்றாண்டுக்குச் சொந்தமானது. மாறிவரும் புதிய நூற்றாண்டில், கையடக்கச் செல்பேசிகளும், பலகைக்கருவிகளும் பயன்பாட்டில் உள்ள நிலையில், அரிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திக் கொள்ள மின்மனன அட்டைச் செயலிகள் (Flash Card Apps) வெளிவருகின்றன.

கையடக்கக்கருவிகளுக்கென *ஆண்ட்ராய்டு, ஐஓஎஸ்* போன்ற இயக்கத்தளங்கள் புழக்கத்தில் உள்ளன.இவை *ஸ்மார்ட்::போன்* மற்றும் *டேப்லெட்* வகைக் கணினிகளின் செயல்பாடுகளுக்கும் மென்பொருள் இயக்குதலுக்கும் உதவுகின்றன.அவ்வகையில், மின்மனன அட்டைகள் Apps எனப்படும் விலை குறைந்த மென்பொருள் செயலிகள் மேற்குறிப்பிட்ட இயக்குத்தளங்களில் செயல்படுவனவாகத் தோன்றியிருக்கின்றன. முந்தைய நூற்றாண்டின் மனன அட்டைகளின் சிறப்புகளும், அதைவிட அதிகப் பயன்படுகூறுகளையும் இந்த மின்மனன அட்டைகள் பெற்றுள்ளன. இந்த மென்பொருள் வாயிலாக மனனம் செய்வதற்கான நேரம் குறைவதோடு, பழகிய சொற்கள் நிறைய நாள் இடம்பெறக்கூடியதால், பேச்சுத்தமிழுக்கும் எழுத்துக்குமான வேறுபாட்டினை எளிதாகப் பல்வேறு எடுத்துக்காட்டுகளால் விளக்கி உணர்த்தலாம். தொடக்கநிலை முதல் இலக்கியம் வரை அனைத்து நிலை தமிழ் மாணவர்களுக்கும் மின்மனன அட்டைச் செயலிகள் சிறந்த கருவிகளாகும்.

மின்மனன அட்டைகள்/செயலியின்இயக்கமுறை

பழைய மனன அட்டையில் இரண்டு பக்கங்கள் மட்டுமே. ஆனால் அவற்றை மின்மனன அட்டையில் நாலைந்தாக அமைத்துக்கொள்ளமுடியும். ஒவ்வொரு பக்கத்திலும் மாணவர் தம் விருப்பத்திற்கேற்ப எழுத்து, ஒலி, படம் முதலிய தரவுகளைத் தனித்தனியாகவோ சேர்த்தோ உள்ளிட முடியும். மென்பொருள் என்பதால் உருவாக்கம், பகிர்வு, செப்பனிடுதல் ஆகியவை எளிதாகி விட்டன.

கையடக்கக் கணினிகள், மடிக்கணினிகள் போன்ற சிறு கணினிகளில் தோன்றுவதால் பாடமாக்குவதை மாணவருக்கு ஒருவிதமான கேளிக்கையாக்கலாம்; கற்றலில் சுவாரசியத்தை உருவாக்கலாம். இதற்காக நாங்கள் பயன்படுத்திய மென்பொருளின் பெயர்: Flashcards Deluxe (http://orangeorapple.com), விலை $3.99 (அமெரிக்கவெள்ளி). சில மென்பொருள்கள் இணையத்திலிருந்து இலவசமாகப் பெற்றுக் கொள்ளமுடியும். இந்த மின்மனன அட்டைச் செயலியைக் கொண்டு அனைத்து நிலை மாணவர்களுக்கும் அவர்தம் பாடத்துக்குத் தேவையான மின் மனன அட்டைகளை உருவாக்கிக் கற்றலை எளிதாக்கலாம்.

அடிப்படை நிலை: மாணவர்களுக்கு எழுத்துக்கூட்டிப் படித்தல், புதுச்சொற்கள்/ தொடர்கள், எழுத்துத்தமிழ்-பேச்சுத்தமிழ் இரண்டுக்கும் இடையேயான ஒற்றுமை, வேற்றுமை ஆகியவற்றை ஒரே அட்டையின் வெவ்வேறு பக்கங்களில் எழுத்து, படம், ஒலி, காணொளி ஆகியவற்றைத் தொகுத்துக் கற்பிக்கலாம்.

எ.டு. அம்மா, அணில், ஆடு, போன்ற தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கெனத் தயாரிக்கும் மின்மனன அட்டைகளில் அம்மா என்ற 'எழுத்து' 1-ஆம் பக்கத்திலும்
அம்மா என 'ஒலி'க்கும் பதிவை 2-ஆம் பக்கத்திலும் அம்மாவின் 'வரைபடத்தை' 3-ஆம் பக்கத்திலும் 'Mother' என்ற அதன் ஆங்கில நிகர்சொல்லை 4-ஆம் பக்கத்திலும்
அமைத்துப் பிறமொழி பேசும் பிள்ளைகள் நோக்கிலும் தமிழைக் கற்றுக்கொடுக்கலாம்.

எ.டு	எழுத்தில் 'அம்மா'	ஒலியாய் 'அம்மா'	படமாய் அம்மா	பிறமொழி* 'mother'
அ	பக்கம் 1	பக்கம் 2	பக்கம் 3	பக்கம் 4
ஆ	பக்கம் 1	பக்கம் 1	பக்கம் 2	பக்கம் 2
இ	பக்கம் 3	பக்கம் 2	பக்கம் 1	பக்கம் 1
ஈ	பக்கம் 2	பக்கம் 3	பக்கம் 1	பக்கம் 1

* எழுத்தாகவோ ஒலியாகவோ இரண்டும் சேர்ந்தோ பிறமொழியில் இடம்பெறலாம்.

அ) இந்த எடுத்துக்காட்டு முறையில் பயிலும் மாணவர் சொல்லை எழுத்துக்கூட்டிப் படிக்கவேண்டும் (அதன் விடையை

அடுத்த பக்கமான 2இல் காணலாம்). சொல்லின் பொருள் சொல்லவேண்டும் (அதன் விடையை அடுத்த பக்கமான 3இல் காணலாம்). நிகரான பிறமொழிச் சொல் சொல்லவேண்டும் (அதன் விடையை அடுத்த பக்கமான 4இல் காணலாம்).

ஆ) இந்த எடுத்துக்காட்டு முறையில் பயிலும் மாணவர் தமிழ்ச்சொல்லுக்கு நிகரான பிறமொழிச் சொல் சொல்லவேண்டும்.

இ) இந்த எடுத்துக்காட்டு முறையில் பயிலும் மாணவர் தாம் அறிந்த பிறமொழிச் சொல்லுக்கு நிகரான தமிழ்ச் சொல்லை வாயால் சொல்லவேண்டும் (அதன் விடையை அடுத்த பக்கமான 2இல் காணலாம்). அச்சொல்லைத் தமிழில் எழுதவேண்டும் (அதன் விடையை அடுத்த பக்கமான 3இல் காணலாம்).

ஈ) இந்த எடுத்துக்காட்டு முறையில் பயிலும் மாணவர் தான் அறிந்த பிறமொழிச் சொல்லுக்கு நிகரான தமிழ்ச் சொல் எழுதவேண்டும் (அதன் விடையை அடுத்த பக்கமான 2இல் காணலாம்). பிறகு அச்சொல்லைச் திருத்தமாக உசரித்துச் சொல்லவேண்டும் (அதன் விடையை அடுத்த பக்கமான 3இல் காணலாம்).

இடைநிலை: மாணவர்களுக்கு, புதுச்சொற்கள், தொடர்கள், எழுத்துத்தமிழ்-பேச்சுத்தமிழ் ஒற்றுமை வேற்றுமை ஆகியவற்றை மின்மனன அட்டைகள் மூலமாகச் சொல்லித்தரலாம்.

எடு. "உன்னுடைய வயது என்ன?" என்ற எழுத்துத்தமிழ்ப் பகுதியை முதற் பக்கத்தில் வைத்துக்கொண்டு, தொடர்பானவற்றை அடுத்தடுத்த பக்கங்ளில் பின்வருமாறு அமைக்கலாம்.

2-ஆம் பக்கம்: பேச்சுத்தமிழ்: "உன்னோட வயசு என்ன?" என்று எழுத்துகளாகவும்*

3-ஆம் பக்கம்: எழுத்துத்தமிழ்/பேச்சுத்தமிழில் சொல்லும் ஒலிகளாகவும்

4-ஆம் பக்கம்: ஆங்கில ஆக்கம்: "What is your age?"

குறிப்பு: இவ்வாய்வறிக்கையின் எழுத்தாளர்களில் ஒருவர் உட்பட பேச்சுத் தமிழை எழுதக் கூடாது என்று எண்ணுபவர்கள் அட்டையை அமைக்கும் பொழுது இரண்டாம் பக்கத்தில் எழுத்தைத் தவிர்த்து மாற்றாக உரிய ஒலியைச் சேர்க்கலாம்

உயர்நிலை: தமிழை உயர்நிலையில் எடுத்துப்படிக்கும் மாணவர்களுக்கும் ஏற்றவாறு மின் மனன அட்டைகளை அமைக்கமுடியும். குறட்பாக்கள் உள்ளிட்ட தமிழ் இலக்கியங்களில் உரிய அரிய சொற்கள்குறித்து, மின்மனன அட்டைகளில் தொடர்புடைய கருத்துகளை வெவ்வேறு அட்டைகளில் பதிவு செய்து எளிதாக நினைவில் இருத்தலாம்.

எடு. வரை=மலை; ஒல்வது=இயல்வது; கேண்மை=நட்பு போன்ற அரிய சொற்களின் எழுத்துவடிவம், சொல்லும் ஒலி, சொற்றொடரில் பயன்படுத்துவது, நிகரான பொருள் ஆகியவற்றை மின்மனன அட்டைகளின் வெவ்வேறு பக்கங்களில் அமைத்துப் பயன் பெறலாம். திருக்குறளில் குறிப்பிட்ட அதிகாரம் வகுப்பறையில் படிக்கும் முன்பே அதற்கு உரிய அருஞ்சொற்களைத் தொகுத்து மாணவர்களுக்கு வழங்கலாம்.

மென்பொருள் செயலியில் தரவு அமைத்தல்

மின் மனன அட்டைச் செயலியில், அட்டைகளுக்கான தகவல்களை உரைக்கோப்பில் (.txt) (உரை ∴பைலில்) பதிவு செய்துமின்செயலிக்கு உள்ளீடு செய்யலாம். *எக்சல்ஸ்ப்ரெட்ஷீட்* மூலமாகவும் தரவுகளை வழங்க முடியும். உரை *∴பைல்* என்றால், ஒரு வரியின் அடுத்தடுத்த பக்கத்தில் செய்திகள் டேப் விசை அழுத்தல் மூலம்பிரித்துச் சேமிக்கப்படும். *ஸ்ப்ரெட்ஷீட்* என்றால், ஒரு வரியிலுள்ள ஒவ்வொரு செல்லிலும், மனன அட்டையின் வெவ்வேறு பக்கத்தகவல்களைப் பதிவு செய்து கொள்ளலாம். இம்மாதிரி பல வரிகள்(மின் மனன அட்டைகள்) கொண்ட ஒரு தொகுப்பு, *டெக்* (Deck) என்று அழைக்கப்படுகிறது. தலைப்புக்கேற்றவாறு பல டெக்குகளை அமைத்துப் பயன்படுத்திக்கொள்ளலாம். மின்மனன அட்டைகளின் தரவு உள்ளீட்டின்போது, ஒலி மற்றும் ஒளித்தொகுப்புகளை இணைக்க, குறிப்பிட்ட ∴பைல்களின் பெயர்களைப் பயன்படுத்தவேண்டும். பின் மின்மனன அட்டைக்கான, அதே *∴போல்டரில்* (folder) சேமித்து வைத்தால் போதுமானது. அட்டை இயக்கத்தின்போது ஒலி/ஒளி இணைப்புகள் தாமாகத் தொடர்புபடுத்தப்பட்டுவிடும். மேலும், எம்மொழியிலும் மின்மனன அட்டைகளைத் தடையின்றி அமைக்க யூனிகோடு முறையில் உரை மற்றும் *ஸ்ப்ரெட்ஷீட் ∴பைல்*களை சேமிக்க முடியும். இவ்வாறு செய்த மின் மனன அட்டைகளை, அதனுடைய செயலிக்கு எளிதாகப் பதிவேற்றம் செய்து பயன்படுத்தலாம்.

மின்மனன அட்டைத் தொகுப்புகள் - பகிர்தல்

ஆசிரியர்கள் தொகுப்புகளை மாணவர்களுக்கு மின்னஞ்சல் மூலமாகவும் இணையத்தினூடாகவும் வழங்கலாம். சொந்த இணையத்தளங்களிலும், Dropbox அல்லது Google Drive (Spreadsheets) மூலமும், மின் மனன அட்டைகளுக்கென்றே உருவான இணையத்தளங்களான FlashcardExchange.com அல்லது Quizlet.com முதலிய இணையத்தளங்களிலும் பகிர்ந்து கொடுக்கலாம்.

ஆசிரியர் ஒருவர் தன்னிடம் படிக்கும் குறிப்பிட்ட மாணவர்களுக்காக மின்மனன அட்டைகள் அமைத்துக் கொடுக்கலாம். ஒரு பள்ளியில் ஒரே வகுப்பில் படிக்கும் அனைத்து மாணவர்களுக்குக் கொடுக்கலாம். ஒரு நாட்டின் கல்வியமைச்சு இறுதித்தேர்வுப் பயிற்சியாக அந்நாட்டில் படிக்கும் அனைத்து மாணவர்களுக்காக அமைத்துக் கொடுக்கலாம். அல்லது உலகெங்கும் வாழும் தமிழ் மாணவர்களுக்காக இலவசமாக ஏற்றலாம்.

உரைக்கோப்பு அல்லது ஸ்ப்ரெட்ஷீட் மூலக் கோப்புகளை எளிதாகப் பகிர்ந்து எளிதாக மாற்றிடலாம்.

மின்மனன அட்டை - பயன்படுத்தும் முறைகள்

வெறுமனே மனன அட்டைகளைச் சட்டைப்பைக்குள் வைத்து, அவ்வப்போது பார்த்துக்கொள்வதற்கு மாறாக, எந்த முறையில் அட்டைகளைப் பார்க்கும்போது, அவை விரைவாக மனனம் ஆகும் என்ற இலக்குடன் செயல்படுகின்றன, இந்த மின்செயலிகள். ஆக, நான்கு முறைகளில் ஏற்கெனவே உள்ளீடு செய்யப்பட்ட தரவுகளைத் திரையில் கொண்டுவரலாம்.

வரிசைப்படுத்தியது: இது எந்த வரிசையில் உள்ளீடு செய்தோமோ, அதே வரிசையில் ஒவ்வோர் அட்டையாகப் பார்வையிட வழி செய்யும் முறை.

2. **வரிசையில்லாமுறை** (Random method): எந்தவித வரிசையுமின்றி, எந்த அட்டை வேண்டுமானாலும் திரையில் வந்து செல்லும் முறை..

3.**குறுகிய கால இலக்கு**: இது மாணவர் நன்கு படித்துத் தேறாத அட்டைகளை, அடிக்கடி முன்னுக்குக் கொண்டுவந்து மனனம் செய்ய உதவும் முறை.

4.**இடைவெளிவிட்டுக் கணித்து வழங்குதல்** (Spaced Repetition): ஆழ் மனதில் நீண்ட நாள் நிலைக்கும் நினைவுகளை உண்டாக்கும் முறை இது. ஒரு தொகுப்பில் உள்ள அட்டைகள்

அனைத்தையும் பார்வையிடும்பொழுது ஒவ்வோர் அட்டைக்கும், "நன்கு தெரியும்" அல்லது "தெரியும்" அல்லது "தெரியாது" என்று குறிப்பிடவேண்டும். அடுத்தடுத்த தடவை இந்தத் தொகுப்பைப் பார்க்கும்பொழுது தெரியாத அட்டைகளைத் திரையில் அடிக்கடி கொண்டுவந்து, தெரிந்த அட்டைகளை அவ்வப்போது திரையில் கொண்டு வந்து, நன்கு தெரிந்த அட்டைகளை அரிதாகத் திரையில் கொண்டு வந்து மாணவருக்கு உதவும் முறையாகும். இவற்றில் எந்த முறை வேண்டும் என்பதை மின்செயலியில் தேர்வு செய்து கொள்ளலாம்.

ஸ்மார்ட் செல்பேசிகளுக்கென வடிவமைக்கப்பட்டிருக்கும் முறைகளான குறுகிய கால இலக்குமுறை இடைவெளிவிட்டுத் திரும்பி வழங்குதல் முறைகளைச் சற்று விரிவாகப் பார்ப்போம்.

குறுகிய கால இலக்கு முறை

மாணவர் விரைந்து பதில் தரும் அட்டைகளுக்குத் தனியாக 'ஸ்ட்ரீக்' என்ற மதிப்பெண் வழங்கப்படும். சரியாக இருக்கும் பட்சத்தில் 1-ஆம், தவறாக இருந்தால் 0-வும் வழங்கப்படும். 1 என்பது ஒரு சுழற்சி கழித்து, குறிப்பிட்ட அட்டையைக் காட்டவேண்டும் என்பதாகும். 0-ஆனது, மாணவர் சரியாக மனனம் செய்யவில்லை என்பதைக் குறித்து, அடுத்த சுழற்சியிலேயே அட்டையை மீண்டும் காட்டுவது வாயிலாகத் தெரியாத அட்டைகளை அடிக்கடி திரையில் காட்டிட உதவுகிறது.

மாணவருக்கு நன்கு தெரிந்த தகவல் அட்டை எனில், அவர்தம் பதிலைப் பொறுத்து, 'ஸ்ட்ரீக்' (Streak) எண் 2-ஆம் வழங்கப்படும். இதனால் குறிப்பிட்ட அட்டை, 2 சுழற்சிகளுக்குப் பிறகு திரையில் ஒளிரும். இதனால் தெரியாத அட்டைகளுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது.

இந்தக் குறுகிய கால முறை, லெய்ட்னர் அல்காரிதம் பின்பற்றி அமைக்கப்படுள்ளதலால், 'லெய்ட்னர் முறை' (Leitner Method) எனவும் அழைக்கப்படுகிறது.

இடைவெளி விட்டுக் கணித்து வழங்குதல்

ஸ்பேஸ்டு *ரெப்படிஷன்* (Spaced Repetition) என அழைக்கப்படும். இம்முறையில், நீணட கால நினைவகப்பயிற்சிக்கு அடிக்கோலிடப்படுகின்றது. மொழி சார்ந்துபடிக்கும் மாணவர்களுக்கு, இது ஏற்றதாக, அவரவர் வேகத்துக்கு ஏற்ப, மின்செயலியின் போக்கை அமைத்துக்கொள்ள உதவுகிறது. அன்றன்று, எந்த அட்டைகளைப் பயிற்சி செய்ய வேண்டும்

எனக குறிப்பிட்டு நீண்டநாள் மனனப்பயிற்சியை மேற்கொள்ளலாம். அவ்வகையில் மனன அட்டைகள், நான்கு விதமாகப் பிரிக்கப்படுகினறன.

1. புதிய அட்டைகள்: இது புதிதாகத் தகவல்களைக் கொண்டு உள்ளீடு செய்யப்பட்டவை.
2. துடிப்புடன் செயல்பட வைக்கும் ஆக்டிவ் அட்டைகள் (Active) - இவை, மாணவர் மூன்றுக்கு மேற்பட்ட கணக்கில், சரியாக பதில் தந்து, புதியவற்றிலிருந்து, ஆக்டிவ் நிலைக்கு மாற்றப்பட்டவை.
3. காத்திருப்பு அட்டைகள் (Pending)- புதிய அட்டை நிலைக்குவரும் முந்தைய நிலை
4. தவிர்ப்பு அட்டைகள் (Exclude)- ஒரு தகவல் குறித்து, மாணவர் நன்கு அறிந்து கொண்ட பின், அதற்கான அட்டையைத் தவிர்க்க எக்ஸ்க்ளூட் வகை பயன்படுகிறது.

புகழ்வாய்ந்த இலவச மென்பொருளான Anki (http://ankisrs.net/) என்னும் செயலி தானாக இடைவெளிகளை நாள்கணக்காகக் கணித்து அட்டைகளை வழங்குகின்றது. அ.·.தாவது, இந்த மென்பொருளைப் பயன்படுத்தும் மாணவர் ஒவ்வொரு நாளும் ஒரு முறை பார்த்தால் போதும். தெரியாத அட்டைகள் அன்றாடம் திரையில் தோன்றும். தெரிந்த அட்டைகள் வாரத்தில் சில முறை தோன்றும். நன்கு தெரிந்த அட்டைகள் மாதம் ஒரு சில முறை தோன்றும்.

ஆக, ஒரு குறிப்பிட்ட இடைவெளியில் திரும்பத் திரும்ப, அதே அட்டைகள் திரையில் தோன்றி மாணவருக்கு நன்கு மனனம் ஆக, மாணவர் கூடுதல் திறனைப் பெறுகிறார். அட்டையைக் காட்டும்போது அதற்கான பதிலை மாணவர் விரைந்து தயக்கமின்றிச் சரியாகத் தருகிறாரா (Strongly Correct), சிறிது தாமதித்தோ ஐயுற்றோ சரியான விடை தருகிறாரா (Correct), தவறான விடை தருகிறாரா (Wrong) என மூன்று வகை பதிலிறுத்தலைக் கொண்ட அட்டைகளைக் காட்டும் இடைவெளி நேரத்தை, மின்செயலிகள் அமைதத்துத்தரும்.

இதனால் கிடைக்கும் கூடுதல் நன்மை, மாணவர் தெரிந்த தகவல் அட்டையில் அதிக நேரம் செலவிடுவது, திரையில் இடைவெளி கூட்டப்படுவது மூலம் தவிர்க்கப்படும். தவறாக அல்லது குறைவான அளவு விடை தெரிந்த மின் அட்டைகளை, அடிக்கடி காண்பித்தும் மின்செயலி உதவுகிறது. இது மாணவருடைய விடையளிப்பைத் தவிர்த்து வேறு எந்த விதக் குறிப்பும் அல்லாமல் சரியான பயனுள்ள கற்றலுக்கு மின்செயலி வழிவகுக்கிறது. அவ்வகையில் தமிழ் கற்றல் கற்பித்தலில் இந்த **மின்மனன அட்டை (மென்பொருள்)**

செயலி, ஒரு வரப்பிரசாதம்தான்! ஆம் எழுத்துகளும் சொற்களும் வாசிப்பிலும் மொழி அறிவு மேம்பாட்டிலும் முக்கியப்பங்கு பெறும் கூறுகள் ஆகும்

மேற்கோள் நூல்கள்:

McNally, Carol(1994). Learning Phonics in a Whole Language Classroom. Website http://www.eric.ed.gov/PDFS/ED376440.pdf accessed on 15 April 2013.

Luke A &Freebody P., 1999.inEmmitt Marie, Pollock John and Komesaroff Linda, (2003).Language and Learning: An Introduction for Teaching (3rd Edition), Oxford Press.

இணையதளங்கள்:

FlashcardExchange.com

Quizlet.com

http://ankisrs.net/

கற்றல் கற்பித்தலில் நாடகத்தின் பங்கு

முனைவர் முரசு நெடுமாறன்

முன்னுரை

மாணவரைக் கற்கச் செய்வதற்கும் தக்க முறையில் கற்பிப்பதற்கும் எத்தனையோ பழைய, புதிய முறைகள் உள; கதை, கட்டுரை, கவிதை என்பன போன்ற வடிவங்களும் பல உள. அவற்றுள் நாடகமும் ஒன்று. அவ் வடிவம் கற்றல் கற்பித்தலுக்கு எந்த அளவு துணைபுரிகின்றது என்பதனை ஆய்வுரைகள் மூலமும் சொந்தப் பட்டறிவின் மூலமும் விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கமாகும். மேலும், பள்ளி விழாக்களில், பொது அரங்குகளில் நாடகம் நடத்துதலின் முதன்மை குறித்தும் விளக்குவதாகும்.

நுண்கலைகளும் வாழ்வும்

மாந்த வாழ்வு வனப்பு மிக்கதாக நுண்கலைகள் பெரும்பங்கு வகிக்கின்றன. ஓவியம், சிற்பம், இசை போன்ற நுண்கலைகளுள் நாடகம் முதன்மை இடம் வகிக்கின்றது. "இந்தக் கலை மனிதப் பண்பாட்டுத் தளநிலைகளையும் அதே வேளையில் அவர்களது (உலகப் பொதுவான) மானுடச் சிக்கல்களையும் காட்டுவது. கலை என்னும் வகையில் இது தனிக்கலையாக மாத்திரமல்லாது சகல கலைகளின் சங்கமமாகவும் அமைகிறது" (கா. சிவத்தம்பி, 1996, Viii). இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றன் ஒருங்கிணைவு மட்டுமல்லாமல் பல்வேறு கலைகளின் கூட்டகமாகவும் இது மிளிர்கிறது. "உலகமே ஒரு நாடகமேடை" என்னும் மொழியும் ஈண்டு எண்ணத்தக்கதாகும்.

நாடகத்தின் பழமை

நாடகம் மிகவும் பழமை வாய்ந்த ஒரு கலையாகும். தொடக்ககால மனிதன் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ள உதவியது சைகை மொழி அன்றோ? அஃது ஊமை நாடகம் தானே? பழந்தமிழ் இலக்கியத்துள்ளும் நாடகம் எடுத்துக் காட்டப் பெறுகிறது; நாடகக் காப்பியமும் மலர்ந்துள்ளது.

"கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று" (332)

என்னும் குறட்பாவில், நாடகம் ஓர் உவமையாகப் பயன்படுத்தப் பெற்றுள்ளது. 1800 ஆண்டுகளுக்கு முற்பட்டது சிலப்பதிகாரம். இளங்கோவடிகளால் பாடப்பெற்ற அஃது, ஒரு நாடகக் காப்பியமாகும். அதன் மங்கல வாழ்த்துப் பாடல் தொடக்கத்தில் நாடகக் குழுவினர் இணைந்து பாடும் குழுப்பாடலாகும். அப்பாடலில் ஒரு சிந்தியல் வெண்பா இது:

“திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண்குடை போன்றுஇவ்
அம்கண் உலகுஅளித்த லான்”.
விளையாட்டும் நாடகமும்

பள்ளிக்கு வருமுன்னரே குழந்தைகள் விளையாட்டின் வாயிலாய் நடிப்புப் பயிற்சியை ஓரளவு பெற்றுள்ளனர். பெரியவர்கள் செய்யும் செயல்களைப் பார்த்துத் தாங்களும் அங்கனமே செய்ய முற்படுவர்; மரக்கட்டையைக் குழந்தையாகப் பாவித்துத் தாலாட்டுவர்; பொம்மைகளைக் கொண்டு திருமணச் சடங்குகள் வரையில் செய்து முடிப்பர்; வீட்டில் வளரும் விலங்குகள் போல் ஒலி எழுப்புவர்; ஓடுவர்; பாய்வர்; பறவைகளைப் போல் பறக்க முயல்வர். இவையெல்லாம் நாடகப் பாங்கினைக் கொண்ட நடவடிக்கைகள் ஆகும். இன்று தொலைக்காட்சி, கணினிப் படையல்கள் மாணவர்களின் இத் திறன் மேம்பட உதவுபவையாகும். இது குறித்துச் செ. சுந்தரம்பிள்ளை இப்படிக் கூறுகிறார்:

“பாடசாலைக்கு வரும் குழந்தைகள் விளையாட்டுப் பருவத்தினர். இவர்கள் விளையாட்டைத்தான் மிகவும் விரும்புவர். கல்விச் சூழ்நிலையானது குடும்பச் சூழ்நிலையினின்றும் பெரிதும் மாறுபட்டதாகும். புதிய சூழ்நிலை கடுமையாகவும் கொடுமையாகவும் இருக்குமானால் பிள்ளைகள் அஞ்சிக் கல்வியை வெறுக்கத் தொடங்கி விடுவர். ஆகவே பள்ளி வாழ்க்கை மென்மையும் இனிமையும் வாய்ந்ததாய் அமைதல் வேண்டும். அதற்கு நாடகம் வாயிலாக விளையாட்டு முறையில் கல்வி போதித்தல் பெரும் பயனுடையதாக அமையும்” (செ. சுந்தரம்பிள்ளை, 1996, 21).

தொடக்க நிலையில் மழலைப் பாடல்களை அறிமுகப்படுத்தும் பொழுதே நாடகம் தொடங்கி விடுகிறது. மாணவர்கள் பாடலின் மெய்ப்பாடு தோன்ற அபிநயம் காட்டிப் பாடுவது நாடகம்தானே? இதற்குப் பொருத்தமான - நாடகப் பாங்கிலான பாடல்களைத் தெரிவு செய்யவேண்டும். இதனில் பொருள் முதன்மையே அன்று. ஓசை நயமும் நாடகப் பாங்குமே முதன்மையாகும். குழந்தைப் பாடல்கள் என்ற தலைப்பில் வரும் சில மணற்சோற்றுச் சொற்கட்டுகளைத் தெரிவு செய்தால் நோக்கம் பாழ்பட்டுவிடும். அபிநயம் காட்டிப் பாடப்பொருத்தமான பாடலுக்கு ஓர் எடுத்துக்காட்டு:

நில், நில், நில்.

நில்லா விட்டால் உடனே ஓடிச்

செல், செல், செல்.

கல், கல், கல்.

கல்லடி பட்ட நாயின் சத்தம்

லொள், லொள், லொள்.

--- ---- ---- ---- ---- ----- ----

சொல், சொல், சொல்.

சொல்லித் தந்த பாட்டிக் கெங்கே

பல், பல், பல்?

(அழ. வள்ளியப்பா, 1954, 19)

இது போன்ற - இன்னும்கூட எளிமையான பாடல்களை வெறுமனே வாசித்தோ, இசையுடன் பாடியோ சொல்லிக் கொடுத்தால், முழுப்பயனும் விளையாது. நாடகப் பாங்குடன் பாடி நடிக்கச் செய்யும் போதுதான் நிறைவாயப் பயனைப் பெறமுடியும்.

மாணவர்களுக்கு உயிரெழுத்தைக் கற்பிக்கும் பொழுதும் இம் முறை பயனளிக்கும். சொற்களைக் கொண்டு எழுத்தை அடையாளம் காணவைப்பதே முறை. அவ்வேளையில் கீழ்க்காணும் வகையிலான பாடல் நற்பயனை ஏற்படுத்தும்.

"அஆ... அஆ...

அம்மா மீது ஆசை

இஈ... இஈ...

இனிப்பைத் தேடும் ஈக்கள்

உஊ... உஊ...

உனக்கு வேண்டும் ஊதல்

எஏ... எஏ...

எழுத்தைக் கற்றால் ஏற்றம்

ஐஐ... ஐஐ...

ஐயம் வேண்டாம் என்றும்

ஒஓ... ஒஓ...

ஒட்டகம் பாலையில் ஓடும்

ஒளஒள... ஒளஒள...

ஒளவைப் பாடல் இன்பம்"

(செல்ல கணபதி, 1987).

மேலே கூறியது போல், இப் பாடலை விளையாட்டு முறையிலான நாடகப் பாங்கொடு கற்பித்தால் மாணவர்கள் மிக எளிதில் எழுத்துகளை அடையாளம் காண்பர்; தனிமையில் இருக்கும் பொழுதும் இப் பாடலை இசையொடு பாடிப்பாடி மகிழ்வர்.

நடனக் கூறுகள் கொண்ட பாடல்களுக்கு மாணவர்களை நடனமாடச் சொல்லலாம். நடன வகுப்பிற்குச் செல்லும் மாணவர்களை முன்மாதிரியாக ஆடச்சொல்லலாம். நடனம் பழங்காலத்தில் நாடகமாகவே வழங்கப்பெற்றது. இது குறித்துத் தி. சு. சண்முகம் இங்ஙனம் கூறுகிறார்:

"முன்பெல்லாம் நாட்டியத்தையும் நாடகத்தையும் வேறாகக் கருதவில்லை எனத் தெரிகிறது. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் நடனமாடும் மாதவியை "நாடகமேத்தும் நாடகக் கணிகை" என்றுதான் குறிப்பிடுகிறார். தனிப்பாடல்களுக்கு அபிநயம் பிடித்து ஆடுவதை நாட்டியம் என்றும் ஏதேனும் ஒரு கதையைத் தழுவி வேடம் புனைந்து ஆடுவதை நாடகம் என்றும் சொல்லயிருக்கிறார்கள். இரண்டிற்கும் பொதுப்பெயர் "கூத்து" என்றே வழங்கப்பெற்று வந்திருக்கிறது(தி. சு. சண்முகம், 1981, 20).

பொது நிலையில் நடனம், நாடகம்

தொடக்க நிலையில் மழலையர் பாடல்களுக்கு அபிநயம் பிடிக்கும் நிலை வளர வளர விரிவாகலாம். கற்றல் கற்பித்தலின் பங்கு வகுப்பறையில் மாணவர்களொடு நிறைவுபெற்று விடுவதில்லை. பொது நிகழ்வுகளில் அது இசைப்பாடலாக, நாடகமாக, நடனமாக வெளிப்பட்டுப் பெற்றோரை, பொதுமக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்த வேண்டும்; கற்கும் பள்ளிக்கும் கற்பிக்கும் ஆசிரியர்க்கும் சிறப்புச் சேர்க்கவேண்டும்.தொடக்க நிலையிலிருந்தே நாடகப் பாங்குடன் கற்பித்து வந்தால், விழாக்கால உருவாக்கங்கள் எளிமையாய் - இயல்பாய் அமையும்.

இக் கட்டுரை ஆசிரியர் தாம் பணியாற்றிய பள்ளிகளின் பெற்றோர்தின விழாக்கள் (இப்போது நேர்த்திநிறை விழா – பரிசிளிப்பு விழா) நடத்தும் தலைமைப் பொறுப்பேற்ற காலத்தில் இலக்கிய, குமுகாய, வரலாற்று, நகைச்சுவை நாடகங்கள் எழுதி மாணவர்களை நடிக்கவைத்துப் பெரும் வெற்றிகள் கண்டுள்ளார்.

பாட்டிற்கு உயிர் கொடுத்த நடனம்

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் பாடலொன்றனை வகுப்பில் நாடகப்பாங்குடன் கற்பித்த பொழுது, அது மாணவரைப் பெரிதும் கவர்ந்தது. அதனை அவ் வாண்டு நடந்த பள்ளி விழாவில் அரங்கேற்ற முயன்றார்; தக்காரைக் கொண்டு பாடலுக்கு இசை கூட்டிப் பதிவு செய்தார்; நடனம் கற்ற ஒருவரைக் கொண்டு மாணவர்க்குப் பயிற்சியளித்து நல்ல முறையில் உருவாக்கினார். பன்னிரெண்டு மாணவியர் பங்கேற்ற அந் நடனம் அரங்கேறி, எல்லாரையும் கவர்ந்தது; விழாவிற்கே பெரும் பொலிவைச் சேர்த்தது. அப் பாடலின் சில அடிகள் இவை:

"நட்டுவனார் இல்லாமலே ஆடும் மயில்இது - என்றும்

நடனமேடை ஏறிடாமல் ஆடும் மயில்இது

கொட்டு முழக்கம் இல்லாமலே ஆடும் மயில்இது - நன்கு

குலுக்கி மினுக்கித் தளுக்கியுமே ஆடும் மயில்இது"

இங்ஙனம் பல எடுத்துக் காட்டுகளைக் கூறலாம்.

மாணவரை நல்வழிப்படுத்திய நாடகங்கள்

மிகக் கடுமையான குறும்புத்தன்மை கொண்டு கல்வியில் நாட்டம் குறைந்திருந்த மாணவன் ஒருவனைப் பற்றி ஒரு நாடகம் எழுதி, அவனையே கதைத்தலைவனாக நடிக்க வைத்து, அவன் நல்வழிப்படச் செய்ததும் உண்டு. இன்னொரு மாணவனைப் பற்றியும் குறிப்பிட வேண்டும். "இவன் தேறவே மாட்டான்" என்று பெற்றோரே கருதி, அவனை அவன் போக்கிலேயே விட்டுவிட்டனர். நான்காம் வகுப்பில் அவன் இவரிடம் வந்தான். அவனுக்கும் அவன் நிலையிலிருந்த சிலருக்கும் மூன்றாம் நிலையினர் புதிய பாடங்கள் எழுதி நடத்தினார். அவனிடம் வளர்ச்சி தென்பட்டது. அதே ஆண்டு நடந்த விழாவில் ஓர் இலக்கிய நாடகம் எழுதி அவனைக் கதைத் தலைவனாக்கிப் பயிற்சி அளித்தார். நாடகம் வெற்றிகரமாக அரங்கேறியது. நாடகத்தைக் கண்ட பெற்றோர் ஆசிரியரிடம் வந்து, "இவன் உருப்படியாக மாட்டான்" என்றிருந்தோம். அவனை அரசனாக்கி விட்டீர்களே" என்று வியந்தனர். பின்னர் அம் மாணவன் பள்ளியின் மாணவர் தலைவனானான்; பல வெற்றிகள் கண்டான்; தரமான மாணவனாக இடைநிலைப் பள்ளிக்குச் சென்றான்.

இவை ஓரிரு எடுத்துக்காட்டுகளே. நாடகப்பாங்குடன் கற்பித்ததன் மூலமும் நாடகங்களில் மாணவரைப் பங்கேற்கச் செய்ததன் மூலமும் எத்தனையோ நல்விளைவுகள் ஏற்பட்டன. அவை ஒரு தனி நூலுக்குரிய செய்திகளாகும்.

நாடகத்தின் மொழி

நாடகம் என்பது மாந்தரின் உணர்வுகளை வெளிப்படுத்தும் படைப்பாகும். உணர்வுகள் சொற்களின் மூலமே வெளிப்படுகின்றன. ஆகவே நாடகத்தின் மொழி எளிமையும் இனிமையும் கருத்துகளைப் புரிந்து கொள்ளும் தன்மையுடையதாயும் அமைதல் வேண்டும். "நாடகத்தின் மொழி - வெறுமனே அச்சடித்த வடிவிலிருந்து வாசகரால் கட்புலனூடாகக் கிரகிக்கப்படும் ஒன்றல்ல. அதன் வார்த்தைகள் அனைத்தும் பேசப்படும் வார்த்தைகளாகும். மேடைக்கான நாடகத்தைப் பொறுத்த வரையில் பேச்சு என்பது, நடிகனது உடல் சார்ந்த பௌதிக வெளிப்பாடுகளோடு இணைந்து, கருத்தினையும் வெளிப்படுத்துவதாக அமையும் (குழந்தை ம. சணமுகலிங்கம், 1996, 32). ஆகவே நாடகத்தின் மொழி என்பது கருத்தோடு எழுதப் பெற வேண்டிய ஒன்றாகும்.

கேட்டல், பேச்சுத்திறன்கள்

மாணவர்கள் நாடகங்களைப் பார்ப்பதன் மூலமும் பங்கேற்று நடிப்பதன் மூலமும் கேட்டல், பேச்சுத்திறன்களை மேம்படுத்திக் கொள்ளமுடியும். இங்கே பேச்சுத்திறன் என்பது, கூச்சமனப்பான்மை இன்றியும் ஏற்றத்தாழ்வோடும் உச்சரிப்புப்பிழை இன்றியும் உணர்ச்சிப் பாங்குடனும் சரளமாகவும்

பேசுவதாகும். கீழ்த்தொடக்கப் பள்ளிகளில் மாணவர்கள் முறையான பேச்சுத்திறனை வளர்த்துக்கொண்டால் மேல் தொடக்கப் பள்ளிகளில் கதை, கட்டுரை, கவிதை, நாடகங்களை வாசிக்கும் திறனில் மேம்பட முடியும், நாடகம் எழுதும் திறனையும் பெறமுடியும். இடைநிலைப் பள்ளிகளில் கதையை, உரைநடைப் படைப்புகளை நாடக வடிவமாக்கும் திறனிலும் துலங்க முடியும்.

வாசித்தலில் நாடகம்

பாடநூலிலோ, பொதுநூல்களிலோ ஒரு கதையை வாசிக்கும் மாணவர்களை, அதனைப் புரிந்து கொண்டு நாடகமாக (சொந்த உரையாடல்கள் மூலம்) உடனடியாக நடித்துக் காட்டச் செய்வதன் மூலம் நாடகத்திறனை வளர்க்கலாம். இங்கே ஒன்றனைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். எல்லாக் கதைகளையும் நாடகமாக நடிக்க முடியாது. நடிப்பதற்குப் பொருத்தமான கதையைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

படிக்கும் நாடகமும் நடிக்கும் நாடகமும்

நாடகம் பல வகைப்படும். பொதுவாகப் படிக்கும் நாடகம், நடிக்கும் நாடகம் என இரண்டாகப் பகுக்கலாம். படிக்கும் நோக்கத்திற்காக எழுதப்பெறும் நாடகங்கள் பெரும்பாலும் நடிப்பதற்குப் பொருந்தா. அவை வாசிக்கும்திறனை மேம்படுத்திக்கொள்ளவும் கதைமாந்தர் தன்மைக்கேற்ப உரையாடும் திறன் பெறவும் உதவும். மேடையேற்றப்பெறும் நாடகம் வெற்றிகாண

வேண்டுமானால், அதனில் பல கூறுகளைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். பங்கேற்கும் மாணவர் தரத்திற்கேற்ற கதை, காட்சி அமைப்பு, ஒப்பனை, விரைந்து காட்சி மாற்றத்திற்கேற்ற கதைப்பின்னல், பின்னணி இசை என்பன போன்ற பல கூறுகளைக் கருத்தில் கொண்டால்தான் நாடகம் வெற்றி காணும். ஒருவரே பல கதை மாந்தராக மாறிமாறி நடிக்கும் தனிமாந்த நடிப்பிலும் மாணவர்களை ஈடுபடுத்தலாம்.

நாடகத்தின் போக்கு

"அறிவூட்டலும் மகிழ்வித்தலும் நாடகத்தின் அடிப்படை நோக்கங்களாய் உள்ளன. இரண்டினதும் அளவு வீதத்தின் சமநிலை சரியாகப் பேணப்படாதவிடத்து, கலைப்படைப்பு என்ற வகையில் நாடகம் பாதிப்படையும். நாடகம் ஒரு கலை வடிவம் என்பதனை மறத்தல் கூடாது(குழந்தை ம. சணமுகலிங்கம், 1996, 31). வெற்று அறிவுரை, கலைவடிவமற்ற முறையில் நாடகத்தில் இடம்பெறுமானால் எதிர்பார்க்கும் விளைவைத் தராது. நாடகத்தில் நேரடியாக அறிவுரை கூறுதல் பொருத்தமற்றது. கதை நிகழ்வுகள் மூலமே கருத்தை மறைமுகமாக உயர்த்துதலே சிறப்பாகும், அதுவே ஏற்புடையதுமாகும்.

முடிவுரை

கற்றல் கற்பித்தலில் நாடகத்தின் பங்கு, என்னும் இக் கட்டுரை, நாடகப்பாங்குடன் கற்பித்தால் ஏற்படும் நன்மைகளை எடுத்துரைக்கிறது. பள்ளி விழாக்களில் நாடகங்களைப் படைக்கும் வழிமுறைகளையும் விளக்குகிறது. நிறைவாக,

1. நாடகம் ஒரு பொழுதுபோக்குக்கானது எனக் கொண்டு, கல்வித்துறையிலிருந்து அதனை ஒதுக்கக்கூடாது; முடியாது.
2. நாடகம் வாழ்வொடு தொடர்புடையது என்பதனை நினைவில் கொள்ளுதல் வேண்டும்.
3. படிக்கப் பயன்படும் நாடகமெல்லாம் மேடையேற்றத்திற்கு உதவுமென்று எண்ணுதல் கூடாது.
4. நாடகப்பாங்குடன் கற்பித்தால் மாணவன் மனத்துள் இயல்பாய்ப் பதியும்.
5. தமிழ் கற்கவரும் மாணவர் இயலோடு இசை(ஓரளவாவது), நாடகத்திறன்களும் பெற்றிருத்தல் வேண்டும்.
6. வகுப்பறை நாடகங்களொடு நாடகத்தின் பயன் நிறைவடைந்துவிட்டதாய் எண்ணுதல் கூடாது. மாணவர்கள் பள்ளி, பொது விழாக்களில் தரமான நாடகங்களைப் படைக்கும் திறம் பெறச் செய்தல் வேண்டும்.
7. கவிதைகளை வெறுமனே வாசிக்கச் செய்வதும், பொருள் புரியவைப்பதும் போதா. உணர்ச்சிப் பாங்குடன் வாசிக்கவும் பாடவும் மெய்ப்பாடு தோன்ற அபிநயம் பிடிக்கவும் மாணவர் திறன் பெறுதல் வேண்டும்.
8. படிக்கத்தக்க, நடிக்கத்தக்க நாடக நூல்கள் பெருகவேண்டும். அவை பள்ளி நூலகங்களில் இடம்பெறல்வேண்டும்.

9. கதைக்கேற்ற உரையாடல் எழுதவும் நாடகத்தைப் புரிந்து அதனைக் கதையாக எழுதவும் மாணவர் பயிற்சி பெறச் செய்தல் அவர்தம் திறன் பெருக வழிகோலும்.

துணைபுரிந்த நூல்கள்

1. திருக்குறள்
2. சிலப்பதிகாரம்
3. அழ. வள்ளியப்பா, 1954, மலரும் உள்ளம், பாரி நிலையம், சென்னை
4. கார்த்திகேசு சிவத்தம்பி, 1996, கற்கை நெறியாக அரங்கு, நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.
5. செல்ல கணபதி, 2009, பாப்பா! பாட்டுப் பாடுவோம், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை

பார்வை நூல்கள்

1. மலேசியப் புதிய கலைத்திட்டம் (KBSR)
2. தேசியப் பள்ளிக்கான தமிழ் மொழித்தர ஆவணம், (KBSK),
3. என்.எஸ். இராஜேந்திரன், ஆசிரியம் - மலேசியாவில் தமிழ்க் கல்வியும் கற்றல் கற்பித்தலும், 2009, உமா பதிப்பகம், கோலாலம்பூர்.

மாணவர்களின் பார்வையில் மொழியாசிரியரின் தன்மைகள்

முனியாண்டி வரதன்
இராஜா மேலேவார் ஆசிரியர் கல்விக் கழகம்
சிரம்பான், மலேசியா

1.0 முன்னுரை

ஒரு நாட்டின் வளப்பத்திற்கும் மேம்பாட்டிற்கும் கல்வியே முதுகெலும்பாக அமைகிறது. அந்நாடு எந்த அளவு கல்விக்கு முக்கியத்துவம் வழங்குகிறதோ அந்த அளவு மக்கள் முன்னேற்றம் காணமுடியும். அதைவிட முக்கியமானதாகக் கருதப்படுபவர் அக்கல்வியினைச் செயல்பாட்டிற்குக் கொண்டு செல்லும் ஆசிரியர்களே.

ஆசிரியர்கள் ஒரு சமுதாயத்தை வடிவமைக்கும் சக்தி பெற்றவர்கள். நம் நாட்டின் கல்விக் கொள்கைகளையும் தேசியக் கல்வித் தத்துவத்தின் நோக்கத்தை அடைவதற்குப் பெரும் பங்காற்றுபவர்கள் ஆசிரியர்களே. மலேசியாவைப் பொருத்தவரையில் மலேசியக் கல்வித் தத்துவத்தின் மூலம் அறிவாற்றல், ஆன்மீகம், உள்ளம், உடல் ஆகியவை சமமாகப் பொருந்திய, நற்பண்புகள் கொண்ட மாந்தனை உருவாக்குவதோடல்லாமல் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஒருமைப்பாட்டையும் செழிப்பையும் நல்கும் மலேசியரை உருவாக்குவதே ஆசிரியரின் நோக்கமாகும். தேசியக் கல்வித் தத்துவம் நிறைவேற, மற்றப் பாடங்களைவிட அனைத்துக் கூறுகளையும் ஒருங்கே அமையப்பெற்ற மொழிப்பாடம் துணை நிற்கின்றது. ஏட்டில் வரையப்பெற்றிருக்கும் அக்குறியிலக்கு செயல்வடிவம் பெறச் செய்யும் பொறுப்பு ஆசிரியர்களைச் சாரும். அந்த வகையில் ஆசிரியரின் பங்கு அளப்பரியது என்றால் அது மிகையாகாது. ஆசிரியர்கள், 'உடன்புறந்தாரைப்போல் உறவாடியும் தலைவனைப்போல் வழிகாட்டியும் நண்பரைப்போல் கலந்து வாழ்ந்தும் பணியாற்றவேண்டியுள்ளது', என்கிறார் கணபதி (கணபதி, 2002).

2.1 ஆய்வுப் பின்புலம்

காலங்கள் மாறுகின்றன; கருத்துகளும் மாறுகின்றன. பண்டையக்காலக் கல்வி முறையிலிருந்து தற்காலக் கல்வி முறை வெகுவாக மாறுபட்டுள்ளது. பாட மையமாக இருந்த கல்வி முறை தற்போது மாணவர் மையமாக விளங்குகிறது. ஆசிரியர் பாடம் நிகழ்த்தும்போது ஒருவழித் தொடர்பு மறைந்து ஆசிரியர்-மாணவர் என இருவழித்

தொடர்பாக மாறியுள்ளது. ஆசிரியரின் பங்கும் வகுப்பறையில் நடவடிக்கைக்கு ஏற்பவும் படிக்கு ஏற்பவும் மாறி வருவதை நாம் உணரலாம்.(Harmer J, 2006). அதோடு மட்டுமின்றி, மாணவர்களின் ஆர்வத்தை ஈர்க்கும் வண்ணம் ஆசிரியரின் பாடம் அமையவேண்டும் எனும் எதிர்பார்ப்பு மாணவரிடத்தில் தலைதூக்கி நிற்கின்றது. கல்வியுலகத்திலும் ஆசிரியர் என்கின்ற நிலை மாறி 'ஒருங்கிணைப்பாளர்'(facilitator), வழிகாட்டி, தூண்டுபவர், நிர்வாகி, திட்டமிடுபவர், மதிப்பீட்டாளர், பாதுகாவளர் என்ற நிலையும் உருவாகியுள்ளது. அதோடு மட்டுமின்றி, ஆசிரியர் அன்னையாகவும் தந்தையாகவும் தோழனாகவும் ஆலோசகராகவும் மாணவர்க்கு நலப்பேறு அதிகாரியாகவும் பணியாற்றவேண்டியுள்ளது(Chai Loon Guan, 1998). அடுத்தவரின் வெற்றிக்காக சந்தோஷம் அடைபவர்களில் ஆசிரியர்களே முதலிடத்தில் இருக்கிறார்கள். கல்வியும் மருத்துவமும் ஒருபோதும் வேலையாகக் கருதப்படக்கூடாது. இரண்டும் மனிதனை மேம்படுத்தும் உயர்ந்த சேவைகள் என்கிறர் தமிழறிஞர் எஸ். ராமகிருஷ்ணன்(எஸ்.ராமகிருஷ்ணன், 2012). வாழ்க்கையின் ஒளிச்சுடராக இருப்பவர்கள் ஆசிரியர்கள் என்கிறார், சாகித்திய அகாதமி விருது பெற்ற பிரபஞ்சன், 'ஆசிரியர்கள் என்பவர்கள் மூடிய கதவைத் தட்டித் திறப்பவர்கள். எங்கள் இருட்டை அவர்கள் திறந்து எங்களுக்குக்கு ஒளி தந்தவர்கள். அவர்கள் கைகளில் விளக்குகள் இல்லை. அவர்களே தீபங்களாக இருக்கிறார்கள், எரிகிறார்கள்' (பிரபஞ்சன், 2012). மனித வாழ்க்கையைப் பொற்கொல்லனாக இருந்து தங்கத்திலிருக்கும் மாசுகளை நீக்கி நல்ல நகைகளை வடிவமைப்பவன்போல் மனித வழ்க்கையை வடிவமைப்பவர் ஆசிரியர் (ரெங்க லெ. வள்ளியப்பன், 2012). ஆக, பல்வேறு பரிணாமங்களை எதிர்க்கொள்ளும் ஆசிரியர்கள், மாணவர்கள் எவ்வகையான பண்புநலன்களை அல்லது தன்மைகளை எதிர்ப்பார்க்கின்றனர் என்பதை அறிந்து செயல்படுவது சாலச் சிறந்ததாகும்.

3.0 ஆய்வின் இலக்கு

இந்த ஆய்வானது மொழியாசிரியரின் தன்மைகள் யாவை என்பதை அடையாளம் காணவும் இத்தன்மைகளில் எது மாணவர்களின் முதன்மைத் தேர்வாக இருக்கிறது என்பதையும் ஆராய்வதாகும். இந்த ஆய்வு தமிழ் பயிலும் வகுப்பறையிலும் பல்லின மாணவர்கள் பயிலும் வகுப்பறையிலும் மேற்கல்வி பயிலும் ஆசிரிய மாணவர்களிடத்திலும் மேற்கொள்ளப்பட்டது. இத்தன்மைகள், மொழியாசிரியர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் வகுப்பறையில் கற்றல் கற்பித்தலின்போது மாணவர்கள் எத்தகையத் தன்மைகளை

ஆசிரியர்களிடத்தில் எதிர்பார்க்கிறார்கள் என்பதை ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாக இருக்கின்றது.

4.0 ஆய்வு முறைமை

இந்த ஆய்வு, 21 ஆசிரியர் தன்மைகள் கொண்ட வினாநிரலைக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வு, வினாநிரல் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. இந்த வினாநிரலில் மூன்று தொகுதிகள் கொண்ட 21 ஆசிரியர் தன்மைகள் இடம்பெற்றுள்ளன. அட்டவணை 3, இதனைப் பிரதிபலிக்கின்றது.

4.1 ஆய்வு செயல்முறை

மாணவர்களுக்கும் ஆசிரிய மாணவர்களுக்கும் 21 ஆசிரியரின் பண்புக் கூறுகள் வினாநிரல்வழி கொடுக்கப்பட்டது. தரவுகள் யாவும் எண்ணிக்கை, சராசரி மற்றும் விழுக்காடு அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

4.2 ஆய்வின் நோக்கம்

4.2.1. மொழியாசிரியர்களின் தன்மைகள் தொடர்பான ஆய்வு.

I. மாணவர்களின் பார்வையில் மொழியாசிரியருக்குரிய 10 முக்கியப் பண்புநலன்களை அடையாளங்காணல்

II. முக்கியத்துவத்தின் அடிப்படையில் மொழியாசிரியர்களின் முகாமைப் பண்புநலன்களைப் பட்டியலிடுதல்

4.2.2. மொழியாசிரியர்களின் வகைமை தொடர்பான ஆய்வு.

I. மாணவர்களின் பார்வையில் மொழியாசிரியருக்குரிய 3 வகைமைகளில் எதற்கு அதிகமான முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது என்பதை ஆராய்தல்.

II. ஒவ்வொரு வகைமைக்கும் முக்கிய 3 தன்மைகளைப் பட்டியலிடுதல்.

4.3 ஆய்வுக் கருவிகள்

மாணவர்களின் பார்வையில் மொழியாசிரியரிடம் அவசியம் இருக்க வேண்டிய பண்புநலன்களைக் கண்டறியவும் எந்த வகைமைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்

என்பதைக் கண்டறியவும் வினாநிரல் பயன்படுத்தப்பட்டது. இந்த வினாநிரல் Chai Loon Guan (1998) பயன்படுத்திய வினாநிரலை மொழிபெயர்ப்புசெய்து ஏற்புடைய மாற்றம் செய்து ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்டது. இதில் 21 ஆசிரியரின் தன்மைகள் 3 வகையாகப் பகுத்து, ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கீழ்க்காணும் அட்டவணை 1 இதனை விளக்குகின்றது.

அட்டவணை 1 : மூன்று வகையாக வகுக்கப்பட்ட வினாக்கள்

வகை	கேள்வி எண்கள்
பயிற்றியல்	1, 4, 6, 8, 11, 13, 16, 19, 21
பாடம்	2, 7, 17, 20
ஆளுமை	3, 5, 9, 10, 12, 14, 15, 18

4.4 ஆய்வுக்குட்பட்டோர்

அட்டவணை 2 ஆய்வுக்குட்பட்டோரையும் எண்ணிக்கையும் காட்டிகின்றது. இந்த ஆய்வு வெவ்வேறு குழுக்களாக 5 குழு கொண்ட மொத்தம் 126 மாணவர்களிடம் வினாநிரல் கொடுக்கப்பட்டு ஆய்வுக் கணிப்பு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வுக்குட்பட்டோர் எ தமிழ் கற்கும் தமிழ் இடைநிலைப்பள்ளி மாணவர்கள்(படிவம் 5), மொழி கற்கும் பல்லின மாணவர்கள் (படிவம் 5), இளங்கலைக் கல்வி கற்கும் ஆசிரிய மணவர்கள் மற்றும் கல்விக் கழக மாணவர்கள்.

அட்டவணை 2 : ஆய்வுக்குட்பட்டோர்

குழு	மாணவர்கள்	சுருக்கம்	எண்ணிக்கை
I	ஆசிரிய மாணவர் – PGSR KOH 1	PGSR	26
II	ஆசிரிய மாணவர் – PPG KOH 1	PPG	27
III	கல்விக் கழக மாணவர் – PISMP S5	PISMP	25
IV	தமிழ் கற்கும் இடைநிலைப் பள்ளி மாணவர்	SMKT	20
V	மொழி கற்கும் பல்லின இடைநிலைப் பள்ளி மாணவர்	SMK	30
	மொத்தம்		128

5.0 ஆய்வின் கண்டுபிடிப்பு

5.1 மாணவர்களைக் கவர்ந்த மொழியாசிரியர்களின் தன்மைகள்

ஆய்வு மாதிரிகளாக உட்படுத்தப்பட்டவர்கள் கொடுக்கப்பட்ட 21 பண்புநலன்களில் 5-ஐ மட்டும் அந்தப் பண்பு நலன்களை முதன்மைக்கு ஏற்ப வரிசைப்படுத்தவேண்டும். அட்டவணை 2-இல் காணப்படும் 5 குழுக்களிடம் ஆசிரியர் பண்புநலன் தொடர்பான வினாநிரல் கொடுக்கப்பட்டு தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. கிடைக்கப்பெற்ற தரவுகள் அட்டவணை 3-இல் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அட்டவணை 3, 5 குழுக்களிடம் பெற்ற தரவுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அனைத்துக் குழுக்களிடமும் பெற்ற தரவுகளின்படி, 21 மொழியாசிரியர்களின் பண்புகளில் முதன்மையாகத் தெரிவு செய்த 10 தன்மைகள் பட்டியலிடப்பட்டுள்ளன(அட்டவணை 4).

5.2 வரிசையாக்கம் செய்யப்பட்ட மொழியாசிரியருக்குரிய தன்மைகள் அட்டவணை 4, கிடைக்கப்பெற்ற தரவுகள் அடிப்படையில் மொழியாசிரியர்களின் தன்மைகள் முக்கியத்துவத்திற்கு ஏற்ப வரிசைப்படுத்தப்பட்டன. மொழியாசிரியர் பாடத்தை ஈர்ப்புத் தன்மையோடு நிகழ்த்தவேண்டும் என அதிகமானோர் 60.2% (77 பேர்) குறிப்பிட்டுள்ளனர். இதுவே மொழியாசிரியருக்குரிய முதன்மையான தன்மையென தங்கள் கருத்துக் கணிப்பில் முன்வைத்தனர். தொடர்ந்து 2-வது 57.0% முக்கியப் பண்பாக கற்பிக்கப்படும் மொழியில் புலமை பெற்றவராகவும் அமைதல் அவசியம் எண்ணுகின்றனர். அதனையடுத்து முறையே 53.1% புரியும்படியான, விளக்கமான கற்பித்தலும் பாடத்திட்டம் தொடர்பான கூடுதல் அறிவும் 47.7% வகுப்பறைக்குச் செல்லுமுன் ஆசிரியர் தயார் நிலையில் செல்லவேண்டும் என 39.8% கருதுகின்றனர். அடுத்து, தேர்ந்தெடுத்துள்ள தன்மைகள், மொழியாசிரியர்கள் மாணவரிடத்தில் வேறுபாடு காட்டாமல் மாணவருக்கு கற்கும் ஆவலைத் தூண்டி நகைச்சுவைத் தன்மையோடு வகுப்பைக் கலகலப்பாக நடத்துவதோடுமட்டுமின்றி எப்பொழுதும் வகுப்பறையில் கட்டொழுங்கைப் பேணவேண்டும் என்று 20% முதல் 30% வரை கருதுகின்றனர்.

	அட்டவணை 3 – மாணவர்களின் கணிப்பின்படி மொழியாசிரியர்களின் தன்மைகள்								
எண்	பண்புக்கூறுகள்	குழு					மொத்தம்	விழுக்காடு (%)	வரிசையாக்கம்
		I	II	III	IV	V			
1	பாடத்தை ஈர்ப்புத் தன்மையோடு நிகழ்த்துதல்	17	20	18	8	14	77	60.2	1
2	மொழிவளம் கொண்டவர் (புலமை)	17	19	16	6	15	73	57.0	2
3	விரிவான / புரியும்படியான கற்பித்தல்	17	15	15	13	8	68	53.1	3
4	பாடத்திட்டம் / கலைத்திட்டம் தொடர்பான அறிவு	20	14	16	3	8	61	47.7	4
5	பாடத்தைத் தயாரித்து நடத்துபவர்	15	11	8	4	13	51	39.8	5
6	மாணவரிடத்தில் வேறுபாடு காண்பதில்லை	4	2	6	10	15	37	28.9	6
7	மொழி கற்க தன்முனைப்பு தூண்டுதல்	4	6	8	4	13	35	27.3	7
8	நகைச்சுவைத் தன்மைகொண்டவர்	2	1	3	12	13	31	24.2	8
9	வகுப்பறையில் கட்டொழுங்கு பேணுதல்	4	4	6	4	11	29	22.7	9
10	மாணவர்களின் சிக்கல்களுக்கு முதலிடம் கொடுத்தல்	1	7	5	6	9	28	21.9	10
11	மொழி இலக்கை நோக்கி பாடத்தை நிகழ்த்துதல்	11	9	3	3	1	27	21.1	11
12	மாணவர்களுடன் நெகிழ்வுத்தன்மை (flexible)	6	2	3	4	5	20	15.6	12
13	மாணவர் பண்பில் அக்கறை கொண்டவர்	2	5	4	7	2	20	15.6	12
14	தொழில் நுட்பம் கொண்டு பாடம் நடத்துதல்	1	9	5	0	1	16	12.5	14
15	வகுப்பு முடிந்த பின்னர் மாணவர்க்கு உதவி செய்தல்	1	0	0	5	7	13	10.2	15
16	மாணவரைத் தூண்டுதல்	2	2	5	3	1	13	10.2	15
17	ஆசிரியரின் முகத்தோற்றம்	4	1	0	4	3	12	9.4	17
18	வெற்றியின் அனுபவத்தை மாணவர்க்குக் கொடுத்தல்	1	4	2	1	4	12	9.4	17
19	ஆய்வு நிகழ்த்துவதில் ஆர்வம்	0	4	2	1	2	9	7.0	19
20	ஆசிரியர் - ஆண்பால்/பெண்பால்	0	0	0	2	4	6	4.7	20
21	உடன்பாட்டுத் தன்மை கொண்டவர்	1	0	0	0	1	2	1.6	21

மாணவர்களின் பாடம் சார்ந்த சிக்கல்கலையும் அவ்வப்போது களைவதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்பது 21.9% மாணவர்களின் சிந்தனையாகும்.

அட்டவனை 4 – வரிசையாக்கம் செய்யப்பட்ட மொழியாசிரியருக்குரிய முக்கிய 10 தன்மைகள்

தன்மைகள்	விழுக்காடு(%)	வரிசையாக்கம்
பாடத்தை ஈர்ப்புத் தன்மையோடு நிகழ்த்துதல்	60.2	1
மொழிவளம் கொண்டவர் (புலமை)	57.0	2
விரிவான / புரியும்படியான கற்பித்தல்	53.1	3
பாடத்திட்டம் / கலைத்திட்டம் தொடர்பான அறிவு	47.7	4
பாடத்தைத் தயாரித்து நடத்துபவர்	39.8	5
மாணவரிடத்தில் வேறுபாடு காண்பதில்லை	28.9	6
மொழி கற்க தன்முணைப்பு தூண்டுதல்	27.3	7
நகைச்சுவைத் தன்மைகொண்டவர்	24.2	8
வகுப்பறையில் கட்டொழுங்கு பேணுதல்	22.7	9
மாணவர்களின் சிக்கல்களுக்கு முதலிடம் கொடுத்தல்	21.9	10

மேற்கொண்ட ஆய்வில் ஏறக்குறைய ஒரே மாதிரியான கருத்துகள் கிடைத்தாலும் பள்ளியைச் சார்ந்த மாணவர்கள், மொழியாசிரியர்கள் மாணவரிடத்தில் வேறுபாடு கொள்ளாமல் நகச்சுவைத் தன்மையோடு பாடத்தை நிகழ்த்தவேண்டும் என 50 இடைநிலைப் பள்ளி மாணவர்களில் 25 பேர் அதாவது 50% எதிர்பார்க்கின்றனர் என்கின்ற செய்தியும் நமக்குக் கிடைக்கின்றது.

5.3 மொழியாசிரியர்களின் ஈடுபாட்டு வகைமை

திருமகள் தமிழ்ப் பாடம் கற்றுக் கொடுக்கிறார்.

மேல் காணும் கூற்றில் எது முக்கியம்?

திருமகளா? (ஆளுமை), தமிழ்ப் பாடமா? (பாடம்), கற்றுக் கொடுக்கிறார்? (பயிற்றியல்)

மாணவர்களிடம் கொடுத்துப் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் அவர்கள் தேர்ந்தெடுத்த தன்மைகள் எத்தகைய வகைமையைப் பிரதிபலிக்கின்றது என்பதை ஆராய்வதே ஆய்வின் இரண்டாவது நோக்கமாகும். மாணவர்கள் தேர்வு செய்த (அட்டவணை 3) முக்கியமான மொழியாசிரியர்களின் தன்மைகள் எத்தகைய வகைமையைப் (category) பிரதிபலிக்கிறது எனபதை ஆராய்வோம்.

தெரிவு செய்யப்பட்ட மொழியாசிரியர்களின் தன்மைகள் பயிற்றியல், பாடம் மற்றும் ஆளுமை வகைமையில் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வகைமைக்கும் சராசரி எத்தனை பேர்அல்லது சதவிகிதம் தெரிவு செய்துள்ளனர் என்பதை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அட்டவணை 5 – மொழியாசிரியர்களின் ஈடுபாட்டு வகைமை

கேள்வி எண்	பண்புக்கூறுகள்	மொத்தம்	சராசரி (%)	நிலை
பயிற்றியல்	பாடத்திட்டம் / கலைத்திட்டம் தொடர்பான அறிவு	61	39 (30%)	1
	மொழிவளம் கொண்டவர் (புலமை)	73		
	வெற்றியின் அனுபவத்தை மாணவர்க்குக் கொடுத்தல்	12		
	ஆய்வு நிகழ்த்துவதில் ஆர்வம்	9		
பாடம்	பாடத்தைத் தயாரித்து நடத்துபவர்	51	37 (28.9%)	2
	மாணவர்களுடன் நெகிழ்வுத்தன்மை (flexible)	20		
	மாணவரைத் தூண்டுதல்	13		
	பாடத்தை ஈர்ப்புத் தன்மையோடு நிகழ்த்துதல்	77		
	மொழி கற்க தன்முணைப்பு தூண்டுதல்	35		
	விரிவான / புரியும்படியான கற்பித்தல்	68		
	வகுப்பறையில் கட்டொழுங்கு பேணுதல்	29		
	மொழி இலக்கை நோக்கி பாடத்தை நிகழ்த்துதல்	27		
	தொழில் நுட்பம் கொண்டு பாடம் நடத்துதல்	16		

	வகுப்பு முடிந்த பின்னர் மாணவர்க்கு உதவி செய்தல்	13		
	ஆசிரியரின் முகத்தோற்றம்	12		
	உடன்பாட்டுத் தன்மை கொண்டவர்	2		
ஆளுமை	நகைச்சுவைத் தன்மைகொண்டவர்	31	19 (14.8%)	3
	மாணவர்களின் சிக்கல்களுக்கு முதலிடம் கொடுத்தல்	28		
	ஆசிரியர் - ஆண்பால்/பெண்பால்	6		
	மாணவர் பண்பில் அக்கறை கொண்டவர்	20		
	மாணவரிடத்தில் வேறுபாடு காண்பதில்லை	37		

அட்டவணை 5-இன்படி, முதல் நிலையில் மொழியாசிரியர் என்பவர் பாடம் தொடர்பான பண்புநலனைப் பெற்றிருக்கவேண்டும் என்பது மாதிரிகளின் துணிபாகும். அதாவது சராசரி 39 மாணவர்கள் அல்லது 30% கருத்தின்படி மொழியாசிரியர்கள் **பாடம்** தொடர்பான கூடுதல் அறிவு பெற்றிருத்தல் அவசியம் எண்கின்றனர். அதிலும், தான் கற்பிக்கும் பாடத்தில் மொழி வளம் பெற்றவராகவும் பாடத்திட்டம் தொடர்பான தெளிவான சிந்தனையும் இருக்க வேண்டும் என வரையறுக்கின்றனர். அடுத்த நிலையை நோக்குவோமெனில், **பயிற்றியல்** சிந்தையும் மொழியாசிரியரிடம் ஆய்வில் தெளிவாகின்றது. பயிற்றியல் என்பது மாணவர்களிடம் சொல்ல வேண்டிய செய்திகள் பல்வகை உத்திமுறைகள், அணுகுமுறைகள் வழி கொண்டுசெல்வதாகும். சராசரி 37 பேர் அல்லது 28.9% இந்த வகைமைக்கு தங்கள் கருத்துகளைப் பதிவு செய்துள்ளனர். இறுதியாக, மொழியாசிரியரின் **ஆளுமை** இறுதி நிலையிலேயே உள்ளது. அதாவது, மொழியாசிரியருக்கு ஆளுமைத் தன்மை மற்றத் தன்மைகளைக் காட்டிலும் மிக அவசியம் எனக் கருதவில்லை. அதனால் சராசரி 19 பேர் மட்டும் அதாவது 14.8% இந்த வகைமையைத் தெரிவு செய்துள்ளனர். ஆக, சுருங்கக் கூறின், **'திருமகள் தமிழ்ப் பாடம் கற்றுக் கொடுக்கிறார்** ', என்ற செய்தியில் **'தமிழ்ப் பாடம்'** மிக முக்கியம் என்றும்(என்ன? பாடம்), **'கற்றுக் கொடுக்கிறார்,** என்கின்ற வினை அடுத்த நிலையில் அவசியமானதாகவும் (எதை? பயிற்றியல்) இறுதியாக, **'திருமகள்'** (யார்? ஆளுமை) எப்படிப்பட்டவராக இருந்தாலும் பரவாயில்லை; அவரின் வெளித்தோற்றம் அவசியமானதொன்றுல்ல எனும் கருத்து வெளிப்படுகிறது. சவால் நிறைந்த இந்த கல்வியுலகத்தில் தமிழ் மாணவர்களின் முன்னேற்றத்திற்கு தமிழாசிரியர்களின் பங்கு அளப்பரியது. தமிழ் மொழியின் வளர்ச்சி அதன் தொன்மையில் இல்லை; அதன்

பயன்பாட்டில் உள்ளது என்கின்றனர் தமிழ் அறிஞர்கள். தமிழ்க் கல்வி தரமான கல்வி. அக்கல்வியைத் தமிழ்ப் பள்ளிகள்தான் தரமுடியும். அதனால் தம் குழந்தைகளைத் தமிழ்ப் பள்ளிக்கு அனுப்பி வைக்கிறோம் என்ற சிந்தனை ஒவ்வொரு பெற்றோருக்கும் உதிக்கவேண்டும் என்கின்றார் மாலேசியக் கல்வி அறவாரியத்தின் தலைவர் திரு சி. பசுபதி (சி. பசுபதி 2012)அவர்கள்.

5.4 மொழியாசிரியருக்குரிய வகைமையில் தெரிவு செய்யப்பட்ட 3 முக்கியக் கூறுகள்

அட்டவணை 6 - 3 முக்கியமான மொழியாசிரியர்களின் பண்புநலன் (பயிற்றியல்)

பண்புக்கூறுகள்	மொத்தம்	விழுக்காடு (%)	நிலை
பாடத்தை ஈர்ப்புத் தன்மையோடு நிகழ்த்துதல்	77	60.0	1
விரிவான / புரியும்படியான கற்பித்தல்	68	53.1	2
பாடத்தைத் தயாரித்து நடத்துபவர்	51	39.8	3

அட்டவணை 6, பயிற்றியல் வகைமையில் 3 முக்கியத் தன்மைகளை மாணவர்கள் பட்டியலிட்டுள்ளனர். முதலாவதாக, பாடத்தை ஈர்ப்புத் தன்மையோடு நிகழ்த்தவேண்டும் என்று 60% அதாவது 77 பேர் என்கின்றனர். கற்றல் கற்பித்தலில் ஈர்ப்புத் தன்மை மேலிட ஒருவழிக் கற்பித்தலை தவிர்க்கவேண்டும். நடவடிக்கைகள் அடிக்கடி மாற்றவேண்டும். அதாவது, மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டவேண்டும். மாணவர்களை ஒரே இடத்தில் அமர்ந்து வெகு நேரம் செவிமடுக்காமல் மாணவர்களை நடவடிக்கைகளில் ஈடுபட வைக்கவேண்டும் (Harmer Jeremy, 2006). அடுத்து, மொழித் திறன்களான, கேட்டல், பேசுதல் வாசித்தல் எழுதுதல் ஆகிய கற்றல் செயற்பாடுகள் வகுப்பறையில் மேற்கொண்டால் பாடத்தை ஈர்க்கும் வண்ணம் நிகழ்த்தலாம் என்கிறார்கள் கல்வியாளர்கள்.

அடுத்து, மொழியாசிரியர்கள் புரியும்படியான கற்பித்தல் மேற்கொள்ளவேண்டும் என் 68 பேர் அதாவது 53.9% எதிர்ப்பார்க்கிறார்கள். இதற்கு, கத்லேன் ∴பிஷெர் (Kathleen Fisher, 2010) சில நடவடிக்ககளைப் பரிந்துரைக்கின்றார்.

அட்டவணை 7 மற்றும் 8, மாணவர்களின் கருத்துப்படி முறையே பாடத்தின் அடிப்படையிலும் ஆளுமை அடிப்படையிலும் 3 முக்கிய பண்புக் கூறுகள் பட்டியலிடப்பட்டுள்ளன.

.

அட்டவணை 7 - 3 முக்கியமான மொழியாசிரியர்களின் பண்புநலன்(பாடம்)

பண்புக்கூறுகள்	மொத்தம்	நிலை
மொழிவளம் கொண்டவர் (புலமை)	73	1
பாடத்திட்டம் / கலைத்திட்டம் தொடர்பான அறிவு	61	2
வெற்றியின் அனுபவத்தை மாணவர்க்குக் கொடுத்தல்	12	3

அட்டவணை 8 - 3 முக்கியமான மொழியாசிரியர்களின் பண்புநலன் (ஆளுமை)

பண்புக்கூறுகள்	மொத்தம்	நிலை
மாணவரிடத்தில் வேறுபாடு காண்பதில்லை	37	1
நகைச்சுவைத் தன்மைகொண்டவர்	31	2
மாணவர்களின் சிக்கல்களுக்கு முதலிடம் கொடுத்தல்	28	3

6.0 முடிவுரை

மேற்காணும் சிறிய ஆய்வு, கல்விக் கழகத்திலும் இடைநிலைப் பள்ளியிலும் மாணவர்களின் கருத்தின்படி மொழியாசிரியரின் முக்கியமான தன்மைகள் அடையாளங்காணப்பட்டுள்ளன. ஆய்வு, இடைநிலைப் பள்ளியில் மேற்கொண்டாலும் தொடக்கப்பள்ளி தமிழ் மொழியாசிரியருக்கும் பொருந்துவதாக இருக்கின்றது. எனவே, மொழியாசிரியர்கள், தமிழ் மொழி மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றுகின்றனர் என்பது வெள்ளிடைமலை. 'தமிழ் மொழி அறிவு மொழி' என்ற அடைமொழியை நிலை நட்டச் செய்பவர்கள் ஆசிரியர்களே.

மேற்கோள் நூல்கள்

1. இராஜேந்திரன், என்,எஸ்.(2008).*ஆசிரியம்*. கோலாலம்பூர்:உமா பதிப்பகம்.
2. பிரபஞ்சன்.(2012). 'ஐயா நான் தங்களுக்குக் கடன் பட்டவன்'. *கனவு ஆசிரியர்*. பாரதி புத்தகாலயம்: சென்னை.

3. ராமகிருஷ்ணன், எஸ்.(2012). 'உலகம் ஒரு மிகப்பெரிய வகுப்பறை'. *கனவு ஆசிரியர்.* பாரதி புத்தகாலயம்: சென்னை.

4. கணபதி , வி.(2002). *நற்றமிழ் கற்பிக்கும் முறைகள்.* சென்னை: சாந்தா பப்ளிஷர்ஸ்.

5. விஜயராணி மூர்த்தி, மைதிலி எழில்மணி.(2006). *7வது உலகத் தமிழாசிரியர் மாநாடு,* 4-7 June 2006.

6. அரங்க இராமலிங்கம்.(2001). தமிழ் கற்பித்தலில் ஆசிரியரின் பங்கு. *5-ஆவது உலகத் தமிழாசிரியர் மாநாடு.* 6-8 September 2001.

7. சி. பசுபதி. திசைகள். July எ Dec 2012.

8. Harmer, J.(2006). *The Practice of English Language Teaching*, London: Longman.

9. Chai Loon Guan. (Mei 1998).Ciri-ciri Guru Bahasa Melayu. *Jurnal Dewan Bahasa.* Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka

தலைப்பு: கவிதை கற்றல் கற்பித்தலில் பண்பாட்டுக் கூறுகள்.

கோவி.மணிமாறன் எம்.ஏ, மலேசியா.

முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் கவிதை என்பது தொன்மையானது என்பர் தமிழாய்வளர். நமது மலேசிய திருநாட்டில் கவிதையின் வளர்ச்சி 19 ம் நூற்றாண்டில் தொடங்கி இன்றுவரை ஒரு நூற்றாண்டு காலமாய்ப் பீடு நடைப் போட்டு வருவதைக் காணமுடிகிறது. பல்வேறு பாடுபொருள்களைக் கொண்டு சமுதாயத்தின் அவலங்களைப் படம் பிடித்துக் காட்டுவதோடு, தமிழரின் உயரிய பண்பாட்டுக் கூறுகளையும் எடுத்தியம்பும் கருவியாக கவிதைகள் விளங்குகின்றன என்பது மறுப்பதற்கில்லை. மரபுக் கவிதை, புதுக் கவிதை, ஹைகூ என்ற பல்வெறு வடிவங்களில் நம் நாட்டின் கவிதை வளர்ச்சியை நாம் நுகரமுடிகிறது. இதன் மூலம் மலேசிய தமிழர்களின் உயரிய பண்பாட்டுக் கூறுகள் படம் பிடித்துக் காட்டப்படுவதை அவற்றை வாசிப்பதன் வழி நாம் அறிய முடிகிறது.

இடைநிலைப் பள்ளியின் தமிழ்மொழிப் பாடத்திட்டம்.

மலேசிய கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட கே.பி.எஸ்.எம் தமிழ்மொழிப் பாடத்திட்டம் மாணவரின் அறிவாற்றல், ஆன்மீகம், உடல், உள்ளம் ஆகிய கூறுகளின் சமன்நிலை வளர்ச்சியை வலியுறுத்துகின்றது. இப்பாடத்திட்டத்தின் வழி மாணவர்கள் பரந்த அறிவைப் பெறுவதோடு நூலறிவு, நன்னெறியுணர்வு, சிந்தனைத் திறன், தகவல் தொழில் நுட்பத் தொடர்பு ஆகியவற்றைப் பெறுவதையும் வலியுறுத்தப்படுகிறது. அதன் அடிப்படையில் முத்திறன்களாய் பாடத்திட்டம் பகுக்கப்பட்டுள்ளது. அவை கேட்டல் - பேச்சு, வாசிப்பு மற்றும் எழுத்தாகும். இம்முத்திறன்களில் அடிப்படையிலேயே கற்றல் பேறுகளும் அமைக்கப்பட்டுள்ளன. அவை மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவையாவன:

1. பிறரிடைத் தொடர்புத்துறைக்கான கற்றல் பேறு.
2. தகவல் துறைக்கான கற்றல் பேறு.
3. இலக்கியத்துறைக்கான கற்றல் பேறு.

இக்கட்டுரை இலக்கியத் துறைக்கான கற்றல் பேறோடு தொடர்புடையதால் மேலும் அதனைப் பற்றிய விரிவான விளக்கத்தைக் காண்போம்.

இலக்கியத் துறைக்கான கற்றல் பேறு.

இக்கற்றல் பேற்றின் வழி மாணவர்கள் கவிதைகளை நயத்தோடு வாசிப்பர் : கவிதைகளின் மொழிச்சிறப்பை உய்த்துணர்வர் : சுயமாய்க் கவிதைகளைப் படைப்பர் : சுய

கருத்தை வெளியிடுவர் மற்றும் இலக்கியங்களின் நலனையும் பாராட்டுவர். இச்சிந்தனையோடு பாடத்திட்டத்தில் 5 திறன்கள் இணைக்கப்பட்டுள்ளன. அவை:

8.1 பல்வேறு இலக்கிய வகைகளைப் பொருளுணர்வர்; உய்த்துணர்வர்; போற்றுவர்; அவற்றையொட்டி சொந்தக் கருத்தை வெளியிடுவர்.

8.2 செய்யுளையும் கவிதையையும் உரைநடையில் எழுதுவது.

9.1 பொருத்தமான மொழியில் கருத்துச் செறிவு நற்சிந்தனை ஆகியவற்றை உள்ளடக்கிய எழுத்துப் படிவங்களைப் படைப்பர்.

9.2 பிறருடைய படைப்புகளைக் கருத்துப் பிழையின்றி ஒரு வடிவத்திலிருந்து வேறு வடிவத்திற்கு மாற்றியமைப்பர்.

9.3 கவிதைகளை நயத்துடன் வாசிப்பர்.

இத்திறன்களின் வழி மாணவர்கள் வாசித்த கவிதைகளின் பொருளுனர்ந்து அதன் சிறப்புகளைப் பட்டியலிடுவர். கவிதைகளை உரைநடையில் எழுதுவர் அல்லது அதன் கருத்துகளைத் தொகுத்து எழுதுவர். மேலும் அடிப்படை கவிதை இலக்கண கூறான தொடையின் வழி எதுகை, மோனை, சந்தம் ஆகிய கூறுகளை அடையாளம் கண்டு எழுதுவர். மேலும் வகுப்பறையில் கவிதையை நயத்தோடு வாசித்து மகிழ்வர். இந்த அளவிலேயே வகுப்பறையில் கவிதை கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் அமைகின்றன. இந்நடவடிக்கைகள் எவ்வகையில் மாணவரிடையே ஆக்கச் சிந்தனையயும் ஆய்வுச் சிந்தனையையும் தூண்டும் என்பது கேள்விக்குறியே. மேலும் இத்திறன்களின் வழி மாணவர்கள் கவிதையை உய்த்துணர்ந்து அதில் மலிந்து கிடக்கும் பண்பாட்டுக் கூறுகளை ஆராய்ந்து அவற்றைப் போற்றி உணர்வதற்கு வாய்ப்பில்லாமல் போகிறது. அதனால் தமிழாசிரியர்கள் கவிதை கற்றல் கற்பித்தலில் மேற்காணும் திறன்களை அடைவதோடு திருப்தியடையாமல் சமுதாய கடப்பாட்டுணர்ச்சியின் ஒரு படி மேலே சென்று கவிதையில் காணப்படும் பண்பாட்டுக் கூறுகளை ஆய்வதற்கு மாணவர்களைத் தூண்டி துலங்கச் செய்ய வேண்டும். அதற்கு முதலில் ஆசிரியர்கள் பண்பாட்டைப் பற்றி ஓரளவு தெளிவு பெற்றிருக்க வேண்டும்.

பண்பாடு ஓர் அறிமுகம்.

பண்பாடு என்ற சொல்லுக்கு திருந்துதல், செம்மைப்படுதல், தகுதியாதல் ஆகியவை பொருளாகும். ஒரு மனிதன் தன் அறிவு, பண்பு, ஒழுக்கம், வாழ்க்கை ஆகியவற்றின் படிப்படியாகத் திருத்தம் பெற்று வரும் நிலையே பண்பாடு ஆகும். அது தனி மனிதனையும் அவன் சார்ந்துள்ள சமுதாயத்தையும் படிப்படியாக செம்மை பெறச் செய்கிறது. ஈ.பி.டெய்லர்

என்ற நவீன மானுட பாண்பாட்டியல் சிந்தனையாளர், பண்பாடு என்பது மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினன் என்ற நிலைமையில் அறிவு, நம்பிக்கை, கலை, சட்டம், நீதிகள், பழக்க வழக்கங்கள், ஆற்றல்கள் முதலியவை பற்றிப் பெற்ற ஒரு வித வாழ்க்கை முறையாகும் என்பர். அவ்வடிப்படையில் பண்பாட்டின் பண்புகளை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. பொருள்சார் கூறுகள் (Material components)
2. அறிதல்சார் கூறுகள் (Cognitive components)
3. நெறியியல் கூறுகள் (Normative components)

பண்பாட்டின் நெறியியல் கூறுகள் மக்களின் வாழ்வை நெறிப்படுத்தும் கூறுகளாகும். அவை விழுமியங்கள்(values), நெறிமுறைகள்(norms), விதிகள்(laws), குடிவழக்குகள்(folkways), வழக்கடிபாடுகள்(mores), மரபாண்மைகள்(ethos), அளிப்புகள்(sanctions), வழக்கங்கள்(customs), பழக்கங்கள்(habits). மக்கள் அவர்களின் தேவைகளுக்காகச் செய்து கொள்ளும் அனைத்து வகையான பொருள்களும் பொருள்சார் பண்பாட்டில் அமையும். இயந்திரங்கள், கருவிகள், மரச்சாமான்கள், வீட்டுப் பொருள்கள், உடைகள், அணிகலன்கள் போன்ற எண்ணற்றவை. அறிதல்சார் கூறுகள் என்பவை அப்பண்பாட்டைச் சேர்ந்தவர்களின் 'அறிதிறன்'(cognition) கூறுகளைக் குறிக்கும். உலகியல் பார்வை, நல்லது கெட்டது, வகைப்படுத்துதல், இயற்கையை மதிப்பிடுதல், நம்பிக்கைகள், கருத்துகள், வழக்காறுகள் ஆகியவை அறிதல்சார் கூறுகளாகும். ஆகவே பண்பாட்டைப் பற்றிய தெளிவு கவிதை கற்றல் கற்பித்தலில் மாணவர்களிடையே பண்பாட்டுத் தெளிவை ஏற்படுத்தும் என்பது தெளிவானது.

கவிதைகளில் பண்பாட்டுக் கூறுகள்.

கவிதைகளில் காணப்படும் பண்பாட்டுக் கூறுகளை எவ்வாறு ஆராயலாம் என்பதை சில உதாரணங்களோடு காண்போம்.

1. விழாக்களைக் கொண்டாடுவது தமிழர்களின் நெறியியல் பண்பாடாகும்.

'...வாழ்வுயர்த்தும் பொங்கல்விழா மண்ணகத்தோர் போற்றும் விழா
சூழ்கநலம் எங்குமென்றும்
சொல்லிடுவோம் பொங்கள் விழா வாழ்க! தையில்
தோன்றும் விழா பொங்கல் விழா வாழ்க.' (க.முனியாண்டி)

மேற்காணும் கவிதையில் பொங்கல் திருநாளைப் பற்றிய விளக்கமும்,தத்துவமும் இடம்பெற்றால் அது பண்பாட்டுச் சிந்தனையாகும். சித்திரை, தீபாவளி போன்ற

திருநாள்களின் கொண்டாட்டம் பற்றிய கவிதைகளும் மாணவர்களுக்குப் பண்பாட்டுத் தெளிவை ஏற்படுத்தும்.

2. மக்களின் நடத்தை முறைகளையும் செயற்பாடுகளையும் முறைபடுத்தக் கூடிய விதிகளே நெறிமுறைகள். இவை சரி, இவை தவறு, இவை நல்லவை, இவை கெட்டவை என உறுதிப்படக் கூறுவது. இவற்றைக் கவிதைகளின் வழி மாணவர்களை அடையாளம் காணச் செய்து தமிழரின் உயரிய பண்பு நெறிகளை உணரச் செய்யலாம்.

'அன்பினில் இன்பம் காண்போம்
அறத்திலே நேர்மை காண்போம்
துன்புறும் உயிர்கள் கண்டால்
துரிசறு கனிவு காண்போம்...' (புலவர் அ. முத்தையனார்)

3. சமய நம்பிக்கை மனித வாழ்வை மாண்புறச் செய்கின்ற பாண்பாட்டுக் கூறாகும். பேராற்றல் ஒன்றைப் பற்றிய நம்பிக்கையும் செயல் முறையும் அடங்கிய ஓர் ஒழுங்கமைந்த முறையாகும். ஆகவே சமய வரளாறு, ஆலய வழிபாடு, இல்ல வழிபாடு, கிரியைகள், இறை இலக்கணம், இறை தத்துவம், சித்தாந்தம், வேதாந்தம் ஆகியவற்றை கவிதைகளின் வழி அடையாளம் கண்டு தமிழர்களின் உயரிய இறை பண்பாட்டை மாணவர்களை உணரச் செய்யலாம்.

'...இறைவன் துணையும் இருந்திடுமானால்
எளிதில் எல்லாம் இனிதுற நிகழும்
முறையாய் அவனை முழுவதும் நம்பி
முயன்றே செய்வாய் முடிவுகள் நன்றே' (சி.அன்பானந்தன்)

4. பல்வகை கலைகளைப் போற்றுவது என்பது தமிழரின் உயரிய பண்பாடாகும். தொன்மை நாகரிகம் தொட்டு இன்றுவரை உயரிய கலைகளைப் போற்றிக் காத்து வருவது தமிழரின் பண்பாகும். கவிதைகளில் காணப்படும் தமிழரின் உன்னத கலைகளை மாணவர்களை அடையாளம் காணச் செய்து அவற்றின் வரலாறு, முறைமை, தத்துவம் போன்றவற்றை அறிந்து கொள்வதன் வழி மாணவர்களுக்கு தமிழர்களின் உயரிய பண்பாட்டு நெறிகளைப் புகட்டலாம்.

'...இனியேனும் இசையரங்கில் தமிழ்வ ளர்ப்போம்
இனும் புதிதாய் இசைப்பாக்கள் தோன்றச் செய்வோம்
புனித்முறு தமிழ்மொழிக்குப் புகழைச் சேர்ப்போம்
புதுமைமிகு பண்ணமைத்துப் பெருகச் செய்வோம்...'
(ரெ.சண்முகம்)

முடிவுரை

கவிதைகள் பண்பாட்டின் பெட்டகமாய் விளங்குகின்றன. பண்பாட்டின் கூறுகளைப் படம் பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடிகளாய் அவை விளங்குகின்றன. கவிதைகளில் நிரம்பி வழியும் பண்பாட்டுக் கூறுகளை அவசியம் மாணவர்களுக்கு உணர்த்த வேண்டும். கவிதை வாசிப்பு, உரை நடைப் படுத்துதல், அணிச் சிறப்புகளை ஆய்தல் என்பதோடு கற்றல் கற்பித்தல் நின்று விடாமல் கவிதைகளில் காணும் பண்பாட்டுக் கூறுகளையும் உணர்த்த வேண்டும். மாணவ சமுதாயத்திடம் தமிழரின் உயரிய பண்பாட்டினைப் பற்றிய பெருமித உணர்வை ஏற்படுத்த வேண்டும். பண்பாட்டுக் கூறுகளை அடையாளம் காண்பதோடு அவற்றின் தத்துவங்களையும் அறியச் செய்ய வேண்டும். பண்பட்ட நாகரிக சமுதாயத்தில் பண்பாடு கட்டிக் காக்கப்படுவதன் அவசியத்தை உணர்த்த வேண்டும். பண்பாட்டுச் சீரழிவில் சிதைந்து வரும் இளைய சமுதாயத்தைத் தூக்கி நிறுத்தி, இந்நாட்டில் தமிழர் பண்பாடு ஓங்கி வளரவும், பண்பட்ட தமிழர் சமுதாயம் உருவெடுப்பதற்கும் ஆவனச் செய்ய வேண்டும்.

துணை நூல்கள்.

1. கலிய பெருமாள்,கா, 1997. உலகத் தமிழ் பண்பாட்டுக் களஞ்சியம். சென்னை: எமரல் பிரிண்டிங்.21.

2. மலேசிய கல்வி அமைச்சு, 2005, இடைநிலைப் பள்ளி தமிழ்மொழி பாடத்திட்டம், கோலாலம்பூர்: கலைத்திட்ட மேம்பாட்டுக் கழகம்.

3. மணிமாறன்,கோ, 2008. மலேசியத் தமிழ்க் கவிதைகளில் பண்பாட்டுக் கூறுகள். முதுகலை ஆய்வு கட்டுரை. கோலாலம்பூர்: மலாயாப் பல்கலைக் கழகம்.

4. முரசு நெடுமாறன், 1997. மலேசியத் தமிழ் கவிதைக் களஞ்சியம். கிள்ளான்: அருள் மதியம் பதிப்பகம்.

5. பக்தவட்சல பாரதி, சி, 1990. பண்பாட்டு மானிடவியல். அண்ணாமலை நகர்: கே.பி.டி நிறுவனம்.

6. பரமசிவானந்தம், எ.எம், 1962. சமுதாயமும் பண்பாடும். சென்னை: தமிழ்க் கலைப் பதிப்பகம்.

7. இராமையா, ம, 1996. மலேசியத் தமிழ் வரலாற்றுக் களஞ்சியம். சேலம்: புரட்சிப் பண்ணை.

8. சபாபதி, வி, 1999. மலேசியத் தமிழ்க் கவிதை வளம். மதுரை: விஜயா அச்சகம்.

தமிழ்மொழியில் காணப்படும் புணரியல் இயல்புகள்/ அமைப்புகள் எண்ணிக்கை எத்தனை?

முனைவர் மோகனதாஸ் ராமசாமி, இந்திய ஆய்வியல்துறை, மலாயாப் பல்கலைக்கழகம்
rmohana_dass@um.edu.my

முன்னுரை

எழுத்துத் தனித்து நின்றோ தொடர்ந்து நின்றோ பொருள் தரும்போது, பதம் அல்லது சொல் எனும் தகுதியினைப் பெறுகின்றது. அவ்வேளையில் இரு சொற்களுக்கிடையே ஏற்படும் தொடர்பின் காரணமாகச் சில மாற்றங்கள் ஏற்படலாம். இதனைத் தமிழ்மொழியில் சந்தி, புணரியல் என அழைக்கின்றோம். சில வேர்ச்சொல்லாடும் அடிச்சொற்களோடும் ஏனைய சொற்களையோ இலக்கணப் பொருள் வழங்கும் உருபுகளையோ இணைக்கும் போது பல்வேறு மாற்றங்கள் புதுச்சொல்லினூடே இடம்பெறலாம். அம்மாற்றங்களே புணரியல் மாற்றங்கள் எனப் பெயரிட்டு அழைக்கப் படுகின்றன என்பது நாம் அறிந்த செய்தியே.

தமிழ்மொழியைப் போன்றதொரு ஒட்டுவகை மொழியில் பல்வகைப் புணரியல் இயல்புகள்/ அமைப்புகளைக் காண்பது ஒரு வியப்பளிக்கும் செய்தியல்ல. குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வேர்ச்சொற்களையும் அடிச்சொற்களையும் மூலாதாரமாகக் கொண்டு, எண், பால், திணை, இடவேறுபாட்டினை வழங்கும் இலக்கணவி குதிகளோடு, ஏனைய சில இடையுருபுகளையும் ஏற்றுப் புதுப்புது சொற்களை உருவாக்கிக் கொள்ளும் தன்மை இவ்வகை மொழிகளுக்கு உண்டு. அவ்வாறு தேவைக்கேற்க உருபுகளையும் விகுதிகளையும் இணைக்கும் பட்சத்தில் பல புதிய சொற்கள் உருவாக்கம் காண்பதனை நாம் காணலாம். கீழ்க்காணும் எடுத்துக்காட்டுகள் இதற்குச் சான்றாக அமைகின்றன.

எ.டு.	படபட	பண்டுபொன்னன்	சாலச்சிறந்தது
	மாவிலை	சேவடி/சேயடி	வேகமாகச்சென்றான்
	கல்வியதிகாரி	தாய்சேய்	அழகியபெண்
	மலைத்தோள்	நண்டுக்கால்	செய்ந்நன்றி
	இந்நாடு	சிற்றுண்டிச்சாலை	கோவிலுக்குச்சொன்றாள்
	பட்டுப்பூச்சி	கண்ணாவா	மரக்கிளை
	பார்க்கிறான்	பற்றினான்	கொண்டிருக்கின்றது

மேற்படி எடுத்துக்காட்டுகளில் தென்படுவது போல், பல்வேறு புணர்ச்சி மாற்றங்கள் தோன்றுவதும், அதற்கேற்ப சில பொருள் மாற்றங்கள் நிகழ்வதும் தமிழ்மொழியில் நாம் காணும் இயல்புகளுள் ஒன்று. இம்மொழியினைப் பயிலும் எவரும் இவ்வகை அறிவினை முழுமையாகப் பெறாமல், இம்மொழியினை நன்முறையில் கையாள்வது கடினம்.
இவ்வாறு தமிழ்மொழியில் விரவிக்கிடக்கும் புணரியல் விதிகளின் எண்ணிக்கை எத்தனை எனவினவினால், இவ்வினாவிற்குப் பல்வகைப் பதில்கள் கிடைக்கலாம். ஓர் இலக்கண

ஆசிரியர் தமிழ்மொழியில் இயல்பு, தோன்றல், திரிதல், கெடுதல் என நால்வகைப் புணரியல் அமைப்புகளோ/ மாற்றங்களோ உண்டென்பார். ஒரு மொழியியல் ஆய்வாளனோ இந்தக் கேள்விக்கு மாறுபட்ட பதிலினை வழங்கக்கூடும். மொழியியல் ஆய்வில் ஈடுபட்டுள்ள ஓர் ஒலியியலாளன், உருபனியலாளன், தொடரியலாளன் என மாறுபட்ட துறைகளைச் சார்ந்தவர் வழங்கும் பதில்களில் கூடமாறுபாடுகள் இருக்கலாம்.

அவரவர் பார்க்கும் நோக்கத்திற்கேற்ப தமிழ்மொழியில் காணப்படும் புணரியல் செய்திகளைச் சொல்லிச் சென்ற காரணத்தினால், இன்று இம்மொழியில் சில நூறு புணரியல் வடிவமைப்புகள் உள்ளன எனச் செய்திகள் கிடைக்கப் பெறுகின்றன. எனினும், இந்தச் செய்திகள் பொதுவாக அமையாமல், குறிப்பிட்ட துறைச்சாராருக்கு மட்டும் உறுதுணை செய்வனவாக அமைந்துள்ளன. தமிழ்மொழியில் காணப்படும் புணரியல் வகைகளை, பள்ளிகளில் தமிழ்மொழியைப் போதிக்கும் ஆசிரியர்கள் இலகுவாக உணர்ந்து கொள்ளும் வண்ணம் அனைத்துச் செய்திகளையும் முறைப்படுத்தி, காரணக்காரியங்களோடு விளக்கித் தெளிவுவழங்க வேண்டிய காட்டாயம் தற்போது ஏற்பட்டுள்ளது. இந்த ஆய்வுக்கட்டுரை மேற்குறிப்பிட்ட சிக்கல்களைக் களைந்து, தெளிவு வழங்கும் நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

முன்னோடிகளின் பார்வை

தமிழில் காணப்படும் முன்னோடிகளின் வேலைப்பாடுகள் புணரியல் பற்றிய பல்வேறு தகவல்களை நமக்கு வழங்குகின்றன. தொல்காப்பியம், வீரச்சோழியம், முத்துவீரியம், நன்னூல் என மரபிலக்கணக் குழுச்சார் வேலைபாடுகள் யாவற்றையும் ஒரு குழுவினில் வைக்கலாம். அடுத்தநிலையில், சேனாவரையர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியனார் போன்ற உரையாசிரியர்களின் விளக்கமுறை வேலைப்பாடுகளை அடையாளம் காட்டலாம். இவர்களை அடுத்து, புதிய முயற்சிகளோடு தமிழ் இலக்கணத்தினை எளிமைப்படுத்தும் முயற்சியில், மரபிலிருந்து முழுமையாக மாறாத நிலையில், எளிய தமிழில் இலக்கணம் எழுதமுற்பட்டோர், மரபிலக்கண ஆசிரியர்கள் தொகுதிவாரியாகவும், குழுமவாரியாகவும் இலக்கணத்திற்கு விளக்கம் கொடுத்தசூழலைத் தவிர்த்து, தனித்தனி எடுத்துக்காட்டுகளுக்கு முன்னுரிமை வழங்கி விளக்கம் கொடுக்கமுற்பட்ட சூழலைப் பார்க்கின்றோம்.

செய்யுள் வகைகளுக்குள்ளும் அதன்தளைக் கட்டுப்பாட்டுத் தேவைகளுக்குள்ளும் கட்டுண்டிருந்த தமிழ்புணரியல் விதிகள், அக்கட்டுகளை அவிழ்த்துக் கொண்டு புதிய பரிணாமம் கண்டதனை இக்காலக்கட்டத்தில் தான்காண்கின்றோம். இம்முயற்சிக்குத் தொடக்க வேலைப்பாடுகளை வழங்கிய பெருமை ஆறுமுக நாவலருக்கு உண்டு. இவரோடு கைகோர்த்து, இத்துறையினில் தமிழுக்குப் புதிய உத்வேகத்தினை வழங்கியவர்களுள், போப், வீரமாமுனிவர் போன்ற ஐரோப்பிய அறிஞர்களும் அடங்குவர். இவர்களது கைவண்ணத்தில் புணரியல் செய்திகள் மேலும் விரிவாக்கம் கண்டன.

தமிழ்ப்புணரியல் விதிகளை மொழியியல் பார்வையினைக் கொண்டு விளக்க முற்பட்டோர், இத்துறையினுள் மறைந்து கிடக்கும் ஆழ்நிலைச் செய்திகளை வெளிக்கொணரும் பொருட்டு, பல்வகை விளக்கங்களை வழங்கினர். ஒலியியல் பார்வை, ஒலியனியல் பார்வை, உருபனியல் பார்வை, தொடரியல் பார்வை என இவர்களது பார்வையும், அவர்கள் தெரிவு செய்த துறையில் பிரசித்துப் பெற்ற கோட்பாடுகளின் அடிப்படையில் விளக்கமுற்பட்டதன் விளைவால், கட்டுக்கடங்காத எண்ணிக்கையிலான விதிகள் வெளிப்படலாயின. வசந்தகுமாரி (1980), இராசாராம் (1986), ப்ரதிமா (1990), கோதண்டராமன் (1999), மோகனதாஸ் (2010) ஆகியோர் இவ்வரிசையில் அடங்குவர்.

இதனைத் தவிர்த்து, பள்ளி ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் உதவும் பொருட்டு உருவாக்கம் கண்டசில பயன்பாட்டு இலக்கண விளக்க நூல்களும் உள்ளன. முன்னைய வேலைப்பாடுகளில் எவ்வகைப் புணரியல் மாற்றங்கள் எங்குத் தோன்றும் என்பதற்கு மட்டும் விளக்கம் வழங்கிய மரபு போக, எவ்வெவ்விடங்களில் வலிமிகா என்பதற்கான விளக்கங்களும் இடம் பெறலாயின. அ.கி. பரந்தாமனார் (1980), சின்னசாமி (2000) போன்றோரது எழுத்துகளோடு எண்ணிலடங்கா எழுத்துப் படைப்புகளும் தோன்றின. இவை மற்றொருவகை இலக்கண நூல்களாகத் திகழ்கின்றன.

ஒட்டு மொத்தமாகக் காண்போமானால், மரபிலக்கணங்களில் நால்வகை குழும அடிப்படியில் கூறப்பட்ட பல்வேறு விதிகளுக்கு விளக்கமுறை விவரங்கள் கொடுக்கமுற்பட்டோர், இதன் எண்ணிக்கையினை உச்சவரம்பாக 144 என உயர்த்தியும் காட்டியுள்ளனர். இவ்வாறாக பல சிக்கல்களுக்குள் சிக்குண்டு இருக்கும் புணரியல் செய்திகளுக்கு விளக்கம் வழங்கும் ஆழ்நிலை ஆய்வுகள் காலத்தின் கட்டாயத் தேவைகளுள் ஒன்றாகி விட்டது.

புணர்ச்சியின் நோக்கம்தான்என்ன?

புணர்ச்சி என்பது இரு உருபுகளோ, ஒலியன்களோ, சொற்களோ தொடர்களோ இணைந்து வெறுமனே புதியதொரு வடிவினை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையினில் புணர்வது அல்ல. நுணுக்கமாகக் கூற வேண்டின், தனித்தன்மை வாய்ந்த இரு உருபுகளோ, ஒலியன்களோ, சொற்களோ தொடர்களோ, முறையே நிலை மொழியாகவும் வருமொழியாகவும் ஒருங்கே இணையும் சூழலில், அவ்விரு அமைப்பு மொழிகளுக்கும் இடையே உருவாகியிருக்கும் 'இடைவெளியினை' களைந்து, இரு சொற்களும் ஒருமித்த உச்சரிப்பு வெளிப்பாட்டோடு வெளிப்பாடு காண உறுதுணை செய்வதுவே புணர் நிகழ்வின் முக்கிய நோக்கமாகும்.

தரவுகள்

இதனைத் தொடர்ந்து வழங்கப்பட்டிருக்கும் எடுத்துக்காட்டுகளை ஆழ்ந்து நோக்குவோமானால் தமிழ் மொழியில் இத்துணை வகை புணர்ச்சி அமைப்புகள் உள்ளனவா என வியப்பினை ஏற்படுத்தலாம். ஆயினும், மேற்காணும் எடுத்துக்காட்டுகளில் ஓரிடத்தில் ஏற்பட்டுள்ள மாற்றமானது, மற்றொரு இடத்தில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்தினை விளக்கிட

உறுதுணை செய்வதில்லை. இக்காரணத்தினால் இம்மொழியில் இடம் பெற்றுள்ள புணரியல் விதிகளின் எண்ணிக்கை சில நூறுகளைக் கடந்து உள்ளன. பின்வரும் எடுத்துக்காட்டுகள் இதற்கு ஆதாரமாக விளங்குகின்றன.

தரவு			வெளிப்பாடு	
கல்வி(இ)	+	அதிகாரி	>	கல்வியதிகாரி
தீ (ஈ)	+	அணைந்தது	>	தீயணைந்தது
தலைமை(ஐ)	+	ஆசிரியர்	>	தலைமையாசிரியர்
மா	+	இலை	>	மாவிலை
விள	+	அழகு	>	விளவழகு
சே	+	அடி	>	சேவடி
கோ	+	இல்	>	கோவில்
பொன்	+	காசு	>	பொற்காசு
மரம்	+	நிழம்	>	மரநிழல்
பட்டு	+	பூச்சி	>	பட்டுப்பூச்சி
அ	+	உலகம்	>	அவ்வுலகம்
இ	+	நாடு	>	இந்நாடு
எ	+	மதம்	>	எம்மதம்
அ	+	உலகம்	>	அவ்வுலகம்
அ	+	ஞானம்	>	அஞ்ஞானம்
தெரு	+	புழுதி	>	தெருப்புழுதி
மெய்	+	ஞாலம்	>	மெய்ஞ்ஞாலம்
செய்	+	நன்றி	>	செய்ந்நன்றி
மெய்	+	மயக்கம்	>	மெய்ம்மயக்கம்
ஆறு	+	கரை	>	ஆற்றங்கரை
நண்டு	+	கால்	>	நண்டுக்கால்
பற்று	+	கோடு	>	பற்றுக்கோடு
சால்பு	+	உடையது	>	சால்புடைது
கிணறு	+	தவளை	>	கிணற்றுத்தவளை
எஃகு	+	யாது	>	எஃகியாது
புது	+	ஊர்	>	புத்தூர்
கதவு	+	யாது	>	கதவியாது

அறிவு	+	யாது	>	அறிவியாது
ஊறு	+	காய்	>	ஊறுகாய்
காட்டு	+	கோழி	>	காட்டுக்கோழி
மலை	+	தோள்	>	மலைத்தோள்
தாய்	+	சேய்	>	தாய்சேய்
வீட்டை	+	கட்டினான்	>	வீட்டைக்கட்டினான்
சிற்றுண்டி	+	சாலை	>	சிற்றுண்டிச்சாலை
நரி	+	பல்	>	நரிப்பல்
கொக்கு	+	பறந்தது	>	கொக்குப்பறந்தது
ராமா	+	வா	>	ராமா! வா
வந்தான்	+	அவன்	>	வந்தான்அவன்
சால	+	சிறந்தது	>	சாலச்சிறந்தது
மடக்கி	+	பிடித்தான்	>	மடக்கிப்பிடித்தான்
வந்த	+	பையன்	>	வந்தபையன்
கண்ணா	+	வா	>	கண்ணாவா!

மேற்படி விளக்கங்கள் தமிழ்மொழியில் பிரிந்து கிடக்கும் 8 வகைமுக்கியப் புணரியல் அமைப்புகளை விளக்கும் பாங்கினில் அமைந்துள்ளன. அவைமுறையே

அ. ஒலியியல் அடிப்படையிலான புணரியல்
ஆ. ஒலியனியல் அடிப்படையிலான புணரியல்
இ. ஓரெழுத்தொருசொல் அடிப்படையிலான புணரியல்
ஈ. ஈரெழுத்தொருசொல் அடிப்படையிலான புணரியல்
உ. தொடர்ச்சொல் அடிப்படையிலான புணரியல்
ஊ. தொகைச்சொல் அடிப்படையிலான புணரியல்
எ. வேற்றுமை அடிப்படையிலான புணரியல்
ஏ. தொடரியல் அடிப்படையிலான புணரியல்
என அடையாளம் காணலாம். இவற்றோடு.
ஐ. பொருண்மை அடிப்படையிலான புணரியல்

எனும் அமைப்பினையும் இணைத்துக் கொள்ளவேண்டும். எனினும், இவ்வகை குழும அடிப்படையிலான விளக்கம், இவற்றை அன்றாட மொழியில் பயன்படுத்த நாம் எதிர்பார்க்கும் நம்பிக்கையினை வழங்காது.

புணரியலின் எல்லை...

இவ்வாறு காணப்படும் அனைத்துப் புணரியல் விதிகளையும் பள்ளி அளவிலான போதனாமுறையில் ஈடுபடுத்துவது இயலாக் காரியம். எனவே, இன்றைய பயன்பாட்டுத் தமிழில் நாம் தினந்தினம் பயன்படுத்தும் சொற்களில் இடம்பெறும் புணரியல் இயல்புகளை சற்றுக் கவனமாகப் புரிந்துகொள்ளும் அளவில் விளக்கங்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

புணரியல் தொடர்பான முழுமையான செய்திகளை அறிந்து கொள்ள வேண்டின் இதனோடு தொடர்புடைய பல்வேறு செய்திகளை நாம் பார்த்தாக வேண்டும். சொற்கள் அமைப்பு முறையில் மாறுபடுவது இயல்பு; அதுபோலவே, அவ்வமைப்பு முறைக்கு ஏற்பவும், உருவாக்கப்படும் சொற்களின் தன்மைக்கேற்பவும், தொடர்களின் வடிங்களுக்கு ஏற்பவும் சொற்களும் ஒலியன்களும் புணரும் இயல்புகளும் மாறுபடுகின்றன. எனவே, மேற்படிச் செய்திகளின் துல்லிய விளக்கங்களை முறையாக அறியாது தமிழ்மொழியில் காணப்படும் புணரியல் செயல்நெறிகளை முறையாக உணர்ந்துகொள்வது கடினமாகும். புணரியல் சார்ந்த முழுமையான செய்திகளைக் காண்பது நமது நோக்கமில்லை என்பதனால் இத்துறையினைச் சார்ந்த அடிப்படைச் செய்திகளோடு முக்கியமான எடுத்துக்காட்டுகளை மட்டும் இங்கே பார்க்க இருக்கின்றோம்.

சொற்களின் பிணைப்பு நெகிழ்ச்சியினை நிருணயிப்பதற்கு இருவகை விளக்கங்களைப் பரிசீலிக்க வேண்டியது முக்கியம்; ஒன்று புணர்ச்சி நிகழ்வினில் ஈடுபடும் சொற்கூறுகளின் பிணைப்புப்பண்பு; மற்றொன்று புணர்ச்சி நிகழ்வினில் ஈடுபடும் சொற்கூறுகளின் அமைப்பு இயல்பு. இந்தச்சிந்தனையோடு தற்காலத் தமிழினைப் பிழைகளையும் தவறுகளையும் குறைத்துக் கொள்ள கீழ்க்காணும் தகவல்களை நன்கறிந்து கொள்வது அவசியமாகும்.

சொற்கூறுகளின் பிணைப்புப் பண்பு, புணர்வில் ஈடுபடும் சொற்கள் இருவகை பண்பில் இணைவது இயல்பு. அவையாவன,

I. வேற்றுமைவழிப்புணர்ச்சி
II. அல்வழிப் புணர்ச்சி

I.) வேற்றுமைவழிப்புணர்ச்சி

இரண்டாம் வேற்றுமை உருபு, ஐ, முதற்கொண்டு, ஏழாம்வேற்றுமை உருபுகள் வரையிலும், வெளிப்பட்டோ, மறைந்து தொகையாகவோ, உருபும்பயனும் உடன்தொக்கத் தொகையாகவோ அமைபவை வேற்றுமைவழிப் புணர்ச்சிகள். முதலாம், எட்டாம் வேற்றுமைகளின் அடிப்படையிலும் ,வேற்றுமைகளின் தொடர்பில்லாச் சூழல்களிலும் ஏற்படும் புணர்ச்சிகள் அல்வழிப் புணர்ச்சிகளாகும்.

அ. வேற்றுமைவிரி

இரண்டாம் வேற்றுமைவிரி – வீட்டை + கட்டினான் > வீட்டைக்கட்டினான்

நான்காம் வேற்றுமைவிரி - கோவிலுக்கு + சென்றாள் > கோவிலுக்குச் சென்றாள்

ஆ. வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கும் தொகை

இரண்டாம் வேற்றுமைத் தொகை - சிற்றுண்டி + சாலை > சிற்றுண்டிச்சாலை

(சிற்றுண்டியை விற்கும் சாலை)

மூன்றாம் வேற்றுமைத் தொகை – பருத்தி + சட்டை > பருத்திச்சட்டை

(பருத்தியினால் செய்யப்பட்ட சட்டை)

நான்காம் வேற்றுமைத் தொகை - தமிழ் +பள்ளி > தமிழ்ப்பள்ளி

(தமிழுக்காக இயற்றப்பட்ட பள்ளி)

இத்தொகையில் நிலைமொழி உயர்த்திணையாக அமையுமானால் வலி அல்லது ஒற்றுமிகாது-

எ.டு.

கண்ணகி + கோவில் > கண்ணகிகோவில்

(கண்ணகிக்கான தோற்றுவிக்கப்பட்ட கோவில்)

ஐந்தாம் வேற்றுமைத் தொகை – இரும்பு + பாதை > இரும்புப்பாதை

(இரும்பினால் உருவாக்கப்பட்ட பாதை)

ஆறாம்வேற்றுமைத்தொகை – நரி +பல் > நரிப்பல் (நரியின் பல்)

இத்தொகையில் நிலைமொழி உயர்த்திணையாக அமையுமானால் வலி அல்லது ஒற்றுமிகாது.

எ.டு.

மாணவர் + கழகம் > மாணவர்கழகம் (மாணவர்களினது கழகம்)

ஏழாம் வேற்றுமைத் தொகை - அண்ணாமலை + பள்ளி > அண்ணாமலைப்பள்ளி

(அண்ணாமலை நகரில் உருவாக்கப்பட்ட பள்ளி)

இத்தொகையில் நிலைமொழி உயர்திணையாக அமையுமானால் வலி அல்லது ஒற்றுமிகாது. – அண்ணாமலை + பள்ளி > அண்ணாமலைபள்ளி

(அண்ணாமலை என்பவரால் உருவாக்கப்பட்ட பள்ளி)

ஆ. சொற்கூறுகளின் அமைப்பு இயல்பு

புணர்ச்சியில் ஈடுபடும் நிலைமொழிகளின் அமைப்புமுறையினை அறிந்துகொள்வதும் முக்கியம். புணர்நிகழ்வினில் நிலைமொழிக்கும் வருமொழியின் முதலெழுத்துக்கும் இருக்கும் தொடர்பின் காரணத்தின் அடிப்படையிலேயே பல புணரியல் மாற்றங்கள் நிருணயிக்கப் படுகின்றன. நிலைமொழியின் அமைப்புகள் பின்வரும் வடிவங்களில் ஏதேனும் ஒன்றாக அமைந்திருந்தாலும் தொகைச்சொல்லாக அமைந்திருந்தாலும் புணர்ப்புப் பண்பு மாறுபட்டு அமைந்து வரலாம்.

தொடரும் செய்திகளைப் பின் வரும் தலைப்புகளின் அடிப்படையில் காண்போம்.

i. ஒரெழுத்து ஒருமொழி புணர்ச்சி
ii. ஈரெழுத்து ஒருமொழி புணர்ச்சி
iii. தொடர்மொழி (மூவெழுத்து அதற்கும் மேற்பட்ட புணர்ச்சி)
iv. தொகைச்சொற்கள் புணர்ச்சி
v. தொடர்ச்சொற்களின் புணர்ச்சி
vi. உடம்படுமெய்கள்

i. ஒரெழுத்து ஒருமொழியின் புணர்ச்சி

ஒரெழுத்து ஒருமொழியைத் தொடர்ந்துவரும் முதல்மெய் இரட்டிக்கும்.

அ	+	உலகம்	>	அவ்வுலகம்
இ	+	நாடு	>	இந்நாடு
எ	+	மதம்	>	எம்மதம்
அ	+	உலகம்	>	அவ்வுலகம்
அ	+	ஞானம்	>	அஞ்ஞானம்

ii. ஈரெழுத்து மொழியின்பு ணர்ச்சி

இரண்டு எழுத்துகளைக் கொண்டு உருவாக்கப்படும் சொற்களின் பின்வரும் வல்லெழுத்துகள் மிகும். அதுவே, ஞ், ந், ம் ஆகிய மெய்யெழுத்துகளாக வருமானால் அவையும் இரட்டிக்கும்.

தெரு	+	புழுதி	>	தெருப்புழுதி
மெய்	+	ஞாலம்	>	மெய்ஞ்ஞாலம்
செய்	+	நன்றி	>	செய்ந்நன்றி
மெய்	+	மயக்கம்	>	மெய்ம்மயக்கம்

iii. தொடர்மொழி (மூவெழுத்து அதற்கும் மேற்பட்ட புணர்ச்சி)

தொடர்மொழி என்பது நெடிற்றொடர், மென்றொடர், வன்றொடர், இடைத்தொடர், உயிர்த்தொடர், ஆய்தத்தொடர் ஆகியவற்றின் புணர்ச்சி இயல்புகளைப் குறிப்பதாகும்.

அ) குற்றியலுகரப் புணர்ச்சித் தனிச்சிறப்புடையது.

ஆறு	+	கரை	>	ஆற்றங்கரை
நண்டு	+	கால்	>	நண்டுக்கால்
பற்று	+	கோடு	>	பற்றுக்கோடு
சால்பு	+	உடையது	>	சால்புடைது
கிணறு	+	தவளை	>	கிணற்றுத்தவளை
எஃகு	+	யாது	>	எஃகியாது

ஆ)குற்றியலுகரப் புணர்ச்சியில் வன்றொடர்க் குற்றியலுகரத்தில் மட்டுமே வலிமிகும். ஏனைய வற்றில் வலிமிகாது. முற்றியலுகரம் இயல்பாகப் புணரும்:

கதவு	+	அழகு	>	கதவழகு
அறிவு	+	அழகன்	>	அறிவழகன்
புது	+	ஊர்	>	புத்தூர்
கதவு	+	யாது	>	கதவியாது
அறிவு	+	யாது	>	அறிவியாது

iv. தொகைச்சொற்களின்புணர்ச்சி

தமிழ்மொழியில் காணப்படும் தொகைகள் தொடர்பான பொதுவான புணரியல் பண்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவையாவன,

அ. வினைத்தொகை	- ஊறுகாய்	-	வலிமிகாது
ஆ. பண்புத்தொகை	- காட்டுக்கோழி	-	வலிமிகும்
இ. உவமைத்தொகை	- மலைத்தோள்	-	வலிமிகும்
ஈ. உம்மைத்தொகை	- தாய்சேய்	-	வலிமிகாது
உ. வேற்றுமைத்தொகை	- மீன்பிடி	-	வலிமிகாது

(ஆறாம்வேற்றுமைத் தொகையிலும் வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகையிலும் வலிமிகும்)

ஊ. அன்மொழித்தொகை - மேற்படித் தொகைகளின் புணரியல் இயல்புகளே அன்மொழித் தொகைக்கும் பொருந்தும்

II) அல்வழிப்புணர்ச்சி

v. தொடரியல் அடிப்படையிலான புணர்ச்சி

தமிழ்மொழியில் காணப்படும் தொகைகள் தொடர்பான பொதுவான புணரியல் பண்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவையாவன,

அ. எழுவாய்த்தொடர் - தருமர்தந்தார். - வலிமிகாது

(எழுவாய் வன்றொடர்க் குற்றியலுகரமாக இருப்பின் வலிமிகும்.

எ.டு. கொக்குப்பறந்தது.)

ஆ. விளித்தொடர் - ராமா! வா. - வலிமிகாது

இ. பெயரெச்சத் தொடர்கள்

i. தெரிநிலைப் பெயரெச்சத்தொடர்	- வந்தபையன	-	வலிமிகாது
ii. குறிப்புப்பெயரெச்சத்தொடர்	- அழகியபெண்	-	வலிமிகாது

ஈ. வினையெச்சத்தொடர்

i. தெரிநிலை வினையெச்சத் தொடர் – மடக்கிப்பிடித்தான் - வலிமிகும்

(அகர, இகர, யகர வினையெச்சங்களின் பின் ஒற்றுமிகும்)

ii. குறிப்பு வினையெச்சத் தொடர் – வேகமாகச்சென்றான் - வலிமிகும்

உ. தெரிநிலை வினைமுற்றுத் தொடர் - வந்தான்அவன் - வலிமிகாது

ஊ. குறிப்பு வினைமுற்றுத் தொடர் - பண்டுபொன்னன் - வலிமிகாது

எ. இடைச்சொற்றொடர் - மற்றுஒன்று - வலிமிகாது

ஏ. உரிச்சொற்றொடர் - சாலச்சிறந்தது - வலிமிகும்

ஐ. அடுக்குச்சொற்றொடர் - படபட - வலிமிகாது

vi. ஒலியியல் அடிப்படையிலான புணர்ச்சி (உடம்படு மெய்கள்)

இரண்டு உயிர் எழுத்துகளைச் சந்திக்கும் போது, அவற்றை உடம்படுத்துவதற்குத் தோன்றும் மெய்யெழுத்திற்கு உடம்படுமெய் என்று பெயர். இதனியே ஒலியியலாளர்கள், ஒலியியல் தேவை என்பார்கள். நிலைமொழி ஈற்றிலும் வருமொழி முதலிலும் உயிரெழுத்து வந்துபுணருமாயின் அவற்றை உடம்படுத்துவதற்கு யகர அல்லது வகர உடம்படுமெய்கள் தோன்றும். இவ்விரு எழுத்துகள் மட்டுமே தமிழில் உடம்படு மெய்களாகச் செயல்படுகின்றன.

அ. இ, ஈ, ஐ ஆகிய உயிரொலிகள் நிலைமொழி ஈற்றில் நிற்க, வருமொழியின் முதலெழுத்து உயிராக அமையுமானால் யகர உடம்படுமெய் தோன்றும்.

கல்வி(இ) + அதிகாரி > கல்வியதிகாரி - ய்

தீ (ஈ) + அணைந்தது > தீயணைந்தது - ய்

தலைமை(ஐ) + ஆசிரியர் > தலைமையாசிரியர் - ய்

ஆ. அ, ஆ, உ, ஊ, ஒ ஆகிய உயிரொலிகள் நிலைமொழி ஈற்றில் நிற்க, வருமொழியின் முதெழுத்து உயிராக அமையுமானால் வகர உடம்படுமெய் தோன்றும்.

மா + இலை > மாவிலை - வ்

விள + அழகு > விளவழகு - வ்

சே + அடி > சேவடி - வ்

கோ + இல் > கோவில் - வ்

இ. ஏகார உயிரொலி நிலைமொழி ஈற்றில் நிற்க, வருமொழியின் முதலெழுத்து உயிராக அமையுமானால் யகர அல்லது வகர உடம்படுமெய் தோன்றும்.

சே + அடி > சேவடி/சேயடி - வ் அல்லது ய்

முடிவுரை

இந்த ஆய்வுக் கட்டுரையில் பயன்பாட்டு அடிப்படையிலான அடிப்படைப் புணரியல் செய்திகளை மட்டுமே தொகுத்து வழங்கியுள்ளது. புணரியல் மாற்றங்களின் பயன்பாடு காரணக் காரியங்களின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. குழப்பங்கள் நிறைந்த இப்பிரிவினை முழுமையாக ஆய்வுசெய்து, பயன்பாட்டிற்குத் தேவையான செய்திகளை மட்டும் வழங்க வேண்டுமானால், ஓர் ஆழ்ந்த ஆய்வு, இக்கட்டுரையில் வரையறுக்கப்பட்டுள்ள செய்திகளை உள்ளடக்கி, ஆராயப்பட வேண்டியது காலத்தின் கட்டாயம்.

துணைநூற்பட்டியல்

ஆறுமுக நாவலர். 1997. தமிழ் இலக்கணம். யாழ்ப்பாணம்: முல்லைப்பதிப்பகம்.

திலகவதி, க. 1995. எழுத்தியலும் சொல்லியலும் (மாறிவரும் இலக்கணம்) கோலாலம்பூர்: உமாபதிப்பகம்.

பரமசிவம், சொ. 1995. நற்றமிழ் இலக்கணம். சென்னை: பட்டுப்பதிப்பகம்.

மோகனதாஸ் ராமசாமி. 2005. அடிப்படைத் தமிழ் இலக்கணம். கோலாலம்பூர்: மலாயாப் பல்கலைக்கழக வெளியீடு.

வேங்கடராமன், கா,கோ,. 2001. இலக்கண வழிகாட்டி. சென்னை: கலையக வெளியீடு.

Caldwell, Robert, 1814-1891. 1987. A comparative grammar of the Dravidian or South Indian family of languages New Delhi: Asian Educational Services, 1987. (Reprint. Originally published: 3rd ed.) London : Kegan Paul, Trench, Trubner, 1913.

Cinnasamy, T.P. 1996. Nannu:l telivuraiyum pilaiyinri tamil elututalum Chennai: Sarasu Publication.

Christdas, Prathima. 1988. The Phonology and Morphology of Tamil. USA: Routledge.

Dass, Ramasamy Mohana. 2010. Topics in Morphophonology of Standard Spoken Tamil. UK: Newcastle University. Unpublished PhD Thesis.

Kothandaraman. 1999. Grammar of the Contemporary Literary Tamil Chennai: IATS.

Vasanthakumari, T. 1989. Generative phonology of Tamil Delhi: India: Mittal.

தமிழ் மொழி கற்பித்தலில் ஊடகங்களின் பங்கு

முனைவர் போ.சத்தியமூர்த்தி
உதவிப் பேராசிரியர்
தமிழியல்துறை, தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை – 21.

தற்காலத்தில் ஊடகங்களின் பயன்பாடு என்பது அதிகரித்துவிட்டது. தகவல் தொழில் நுட்பத்தின் உயர் நிலைக் காலமாக இக்காலம் விளங்குவதால் அதனைச் சார்ந்து அத்தனை துறைகளும் முன்னேற வேண்டியுள்ளது. கல்வி என்ற துறையும் நவீன கால தகவல் தொழில் நுட்ப வளர்ச்சிக்க ஏற்பத் தன்னை வளர்த்தெடுத்துக் கொண்டால் மட்டுமே இக்கால இளைய தலைமுறையைக் கவர்ந்திழுக்க முடிகின்றது. ஆசிரியர் கற்பித்தல் என்ற ஒரு வழி நிலையில் இருந்து கல்வியான பல்லூடக வெளிப்பாட்டு நிலைக்குத் தற்காலத்திற்கு வரவேண்டியது இன்றியமையாத தேவையாகின்றது. குறிப்பாக தாய்மொழியாக விளங்கும் தமிழ் மொழி தன் இருப்பைத் தற்கால மாணவர்களிடத்தில் நிலைநிறுத்திக் கொள்ள வேண்டுமானல் அது பல்லூடகத் தன்மையுடன் கற்பிக்கப் பட வேண்டியதாக உள்ளது. இப்பலலூடகத் தன்மையைத் தமிழ்க்கல்வியில் கொண்டுவர தமிழாசிரியர் முக்கியமாகச் செயலாற்ற வேண்டியுள்ளது. அவர்கள் மரபு சார்ந்து கற்றிருந்தாலும், புதுமையை இணைக்கும் புதுப்போக்கும் ஆர்வமும் செயல் ஊக்கமும் மிக்கவர்களாக விளங்கவேண்டியுள்ளது. இவவகையில் தமிழ்க் கற்பித்தில் ஊடகங்களின் பங்கு பற்றிய சிந்தனைக்ளை இக்கட்டுரை முன் வைக்கின்றது.

ஊடகம் என்பதன் வரையறை

"தகவல் மூலங்களில் இருந்துச் செய்திகளைச் சுமந்து சென்று பெறுபவரிடத்தில் சேர்ப்பித்திடும் சாதனங்களே ஊடகங்கள் அல்லது வாயில்கள் (Media) என்று பெயர்"[1] என்று ஊடகம் என்பதை வரையறை செய்யலாம். ஊடக நடைமுறையில் தகவல் மூலங்களைத் தேடுதல் என்பதும், அதனைக் கொண்டு சேர்த்தல் என்பதும் இரு பெரும் பணிகள் ஆகும். இவை இரண்டின் அதிவேக கவர்ச்சி மிக்க செயல்பாடு கற்பித்தல் திறனை வலுவுள்ளதாக ஆக்கும்.

ஊடக வகைகள்

தற்கால நிலையில்

1. அச்சு ஊடகம்,

2. மின் ஊடகம்

என்ற இரு நிலைகளில் ஊடகங்களைப் பிரித்துக் கொள்ள முடிகின்றது. அச்சு ஊடகம் என்பது சென்ற இருபதாம் நூற்றாண்டில் பெருமளவில் ஆதிக்கம் பெற்றிருந்தது. தற்காலத்தில் மின் ஊடகங்கள் பரவலாகி விட்டன. குறிப்பாக மின்னணு ஊடகங்கள் பெருத்த மாற்றத்தைக்

கல்வித்துறையில் ஆற்றி வருகின்றன. இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால் தமிழ்க்கற்பித்தலில் மேல்நிலைப் பகுதியில் அதாவது கல்லூரிப் புகுதியில் அச்சுஊடகத்தின் ஆதிக்கம் இன்னும் குறையவில்லை. ஆனால் அடிப்படைநிலை எனக் கருதப்படும் தொடக்கக்கல்வி முறைகளில் தமிழ்க் கற்பித்தலில் மின், மின்னணு சாதனங்களின் பயன்பாடு அதிக அளவில் உள்ளது.

தொடக்கக் கல்வி என்ற நிலையைப் போதிக்கும் ஆசிரியர்கள் தற்காலத்தில் ஆசிரியப் பயிற்சி முடித்தவர்களாக வரும் காரணத்தால் அவர்கள் கல்வியைத் தொழில் நுட்பம் சார்ந்து, துணைக் கருவிகளை அதிகம் பயன்படுத்த வற்புறுத்தப் பெறுவதால் இம்மாற்றம் தோன்றியுள்ளது என்றால் அது மிகையில்லை. மேலும் எஸ்.எஸ்.ஐ, கற்றலில் இனிமைப் பள்ளி போன்றவற்றின் வருகையும் அடிப்படைத் தமிழ்ப்பாடங்களை மின், மின்னனு சார்ந்த ஊடகங்களைப் பயன்படுத்தும் போக்கிற்கு வழிவகுத்தன.

தற்காலத்தில் வந்துள்ள செல்லிடப்பேசி குறிக்கத்தக்க இடத்தை மனித வாழ்வில் தகவல் பரிமாற்ற நிலையில் பெற்றுள்ளது. இதன்வழி அடிப்படைக் கல்வியைக் கற்பிக்கும் போக்கு எதிர்காலத்தில் வரலாம் என்ற எதிர்பார்ப்பும் உள்ளது.

இவ்வகையில் தமிழ்க்கல்வியில் மின் மின்னணு சாதனங்களின் வருகை தவிர்க்க முடியாத இடத்தைப் பெற்றுள்ளது என்பதை உணரமுடிகின்றது.

தமிழ்க் கற்பித்தலில் பல்லூடக நிலை

அடிப்படை நிலையான தமிழ்க் கற்பித்தலில் பல்லூடக நிலைக்கான பல தகவல்தளங்கள தற்போது ஏற்படுத்தப் பெற்று உள்ளன. தகவல் தொழில் நுட்பத்தில் கணினியின் நுழைவு என்பதும் இணையத்தின் தொடர்பு என்பதும் பெருத்த மாற்றத்தை விளைவிக்கின்றன. கணினியும், இணையமும் தமிழ்ப் பாடங்களைக் கற்பிக்கின்ற ஆசிரியருக்குப் பல்லூடக வசதியை அளிக்கின்றன.

குறிப்பாக ஒலிப்புடன் கூடிய எழுத்துக் கற்பிக்கும் முறைக்குப் பல்லூடகம் சிறந்த வழிகாட்டியாகின்றது. பல இணைய தளங்கள் இவ்வழிக்கு உதவியாக உள்ளன. குறிப்பாக தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் இணைய தளம் தமிழ் எழுத்துக்களைக் கற்பித்தலில் பல்லூடக வசதியைப் பயன்படுத்தி முன்னோடியாக விளங்குகின்றது. [2] எழுத்து கற்பித்தலில் தொடங்கும் இப்பாடப்பகதி

1. மழலைக்கல்வி
2. அடிப்படை சான்றிதழ்
3. உயர்நிலைச் சான்றிதழ்
4. மேல்நிலைச் சான்றிதழ்

என்ற நான்குநிலைகளில் தமிழ்க் கற்பித்தலுக்கான பல்லூடக் முயற்சியை வழங்கி வருகின்றது. தமிழ் கற்கும் தமிழகம சார்ந்த தமிழக அல்லாத மாணவர்களுக்கு அவர்களின் கல்வி முறைக்குத் துணைசெய்யும் கூடுதல் பாடமாக இதனை ஏற்றுக் கொள்ள முடிகின்றது. இதில் உள்ள பாடங்கள்

அனைத்தும் பல்லூடக நிலை சார்ந்தவை என்பதால் மாணவர்களின் பெருத்த விருப்பத்திற்கு இவை களமாக அமைகின்றன.

இதுபோன்று யு டியுப் சார்ந்த பல காணொளிகள் தமிழ்க்கற்பித்தலுக்கும், கதை சொல்லல், கதை காணல், கதைப்பாடல் அறிதல் போன்ற கல்விக்குத் துணைசெய்யும் கூடுதல் நிலைப் படிப்பிற்றும் உதவி வருகின்றன. இத்தளத்தில் உள்ள காணொலிகளை இருவகையாகப் பிரிக்கலாம்.

1. திட்டமிடப்பட்டு பதிவேற்றப்படும் காணொளிகள்

2. திட்டமிடப்படாமல் பதிவேற்றப்படும் சொந்த காணொளிகள்

என்பன அவை இரண்டுமாகும்.

திட்டமிட்ட பதிவேற்றத்திற்கு உள்ளாகும் காணொளிகள் இசை ஒழுங்கு, காட்சி ஒழுங்கு நிரம்பியவையாக உள்ளன. இவை காணும் நிலையில் அதிக நேரத்தையும், பதிவிறக்க நேரத்தையும் அதிக நேரம் எடுத்துக் கொள்கின்றன. இந்திய நிலையில் ஓரளவிற்கு இணைய வசதி பெற்றவர்கள் இக்காணொளிகளைப் பயன்படுத்தும் போது இணையவலிமை காரணமாகச் சலிப்பு தோன்ற வாய்ப்பு உண்டு.

திட்டமில்லாமல் தன் சொந்தக் குழந்தைகளின் ஆடல் பாடல்களை பதிவுசெய்து வெளியிடும் காணொளிகளில் இசை ஒழுங்கு, காட்சி ஒழுங்கு இருப்பதில்லை. அவை சரியாக படக்கலவையும் கொண்டிருக்காது. எனினும் இவற்றைக் காண்பதில் ஒருவித உள்ள நிறைவு ஏற்படுகிறது. இதனைக் காணும் பெற்றோர்கள் இதுபோன்றுத் தன்குழந்தைகளின் தமிழ்ப்பாடல்களை, தமிழ்ஆடல்களைப் பதிவேற்றும நிலைக்கு நகருகின்றனர். மேலும் இக்காணொளிகளைப் பதிவிறக்கம் செய்வதில் காண்பதில் நேர விரயம் ஆவதில்லை என்பதால் இவை மிகுந்த தாக்கத்தைக் குழந்தைகள் மனதில் ஏற்படுத்த வாய்ப்புகள் உண்டு.

இவற்றோடு தற்போது குறுவட்டுகளின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. அரசு சாரா தனியார் நிறுவனங்கள் பல கல்வி சார் குறுவட்டுகளை வெளியிட்டு வருகின்றது. அனைத்து வீடுகளிலும் ஏதேனும் ஒரு கல்வி சார் குறுவட்டு இடம்பெற்றிருக்கும் என்ற அளவிற்கு இவற்றின் பயன்பாடு அமைந்துள்ளது. ஆனால் மற்ற துறைசார் பாடங்களுக்கு வந்துள்ள குறுவட்டுகளைக் காட்டிலும் குறைவான அளவே தமிழ்ப் பாடப்பகுதிகளுக்கு வந்துள்ளன. மழலையர்களுக்கான பாடல்கள், மொழியாக்கம் செய்யப் பெற்ற கேலிச்சித்திரப்படங்கள் போன்றனவே தமிழுக்கு வந்துள்ளன. இவற்றின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும். குறிக்கத்தக்க நிலையில் ஆங்கிலப் பாடத்திற்கு வந்துள்ளது போன்ற கலைக்களஞ்சியங்கள், அகராதிகள் போன்றன தமிழில் வரவேண்டும்.

இவ்வகையில் தற்காலத்தில் தாய்மொழிக்கல்வியின் முகம் நவீனப்படுத்தப்பட்டு அதன் வாயிலாக பெருத்த ஈடுபாடுடன் கற்கும் நிலை மாணவர்களிடம் தோற்றுவிக்கப் பெற்றுள்ளது.

தமிழ்ப்பாடப்புத்தகங்கள்

தமிழ்ப்பாடப்புத்தகங்கள் தற்போது இணைய மயமாக்கப்பட்டுள்ளன. பள்ளிக் கல்வித்துறை அனைத்துப் பாடப்புத்தகங்களையும் இணையத்தில் தந்துள்ளது. குறிப்பாக சமச்சீர் கல்விப் பாடப்புத்தகங்கள் இணைய வழி கிடைப்பதால் உலகு சார்ந்த அளவில் தமிழ்ப்பயிலும் மாணவர்கள்

இப்பாடப்புத்தகங்களை வாசிக்கும் வாய்ப்பு உள்ளது. இவற்றிலுள்ள பயிற்சிகள் பாடம் படிப்பவருக்குப் பயிற்சியளிப்பனவாக உள்ளன.

இணைய வகுப்பறை

எந்த நேரத்திலும் கற்கும் முறைமையை அளிப்பது இணைய வகுப்பறை ஆகும். கல்வி நிறுவனம் என்றால் அதற்கான ஒரு இடம், நாற்காலி போன்ற கட்டமைப்புகள் அவசியம் தேவை என்பது ஒரு காலம். ஆனால் இருந்த இடத்தில் இருந்து கொண்டு எந்த நேரத்திலும் இணைய இணைப்பினைத் தேர்ந்துக் கற்பது என்பது இந்தக்காலம். இவ்வாறு படிப்பது இணைய வகுப்பறை எனப் படுகின்றது. அறிஞர் சித்தலிங்கையா அவர்கள் தமிழ் எழுத்துகள் அறிமுகம் குறித்து தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தில் இணைய வகுப்பறைப் பாடங்களை நடத்தி வருகிறார் இவை யுடியப் தளத்திம் கிடைக்கின்றன. இதுவும் ஒரு மிகச் சிறந்த முன்னோடி கற்றல் அனுபவமாகும்.

கல்வித்துறையுடன் இணைந்த பிற துறைகள்

கல்வித்துறை என்பது தனித்துறை. அதனுடன் நூலகத்துறை, ஆய்வகத்துறை, கணினித்துறை போன்ற பலவும் தற்காலத்தில் இணைந்துச் செயலாற்ற வேண்டியுள்ளது. தற்காலத்தில் இணைய நூலகப்பயன்பாடு என்பது மிக எளிதாகிவிட்டது.

தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் நூலகப்பிரிவ எவ்விதக் கட்டணமும் இன்றிப் பயன்படுத்தத்தக்கதாக உள்ளது. இதுபோன்று மதுரைத்திட்டம், நூலகம் போன்ற தளங்களும் இணைய நூலகப் பயன்பாட்டிற்கு உதவி வருகின்றன. குறிப்பாக குழந்தைகளுக்கு உரிய நிலையில் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களின் பாடல்கள் நூலக அளவில் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தில கிடைக்கின்றது. இதுதவிர அம்புலிமாமா என்ற தளம் குழந்தைகளின் கதை உணர் திறனை அதிகரிக்கச் செய்கின்றது.

தமிழ் மக்கள் சார்ந்த விளையாட்டு, பண்பாட்டு நிகழ்வுகள் போன்றவற்றை அறியவும் காணொளிகள் கிடைக்கின்றன. கோயில்கள் பற்றிய காணொளிகளைத் தருவதற்கு பல தளங்கள் உள்ளன. தமிழ் இணையப் பல்கலைக்கழகத் தளம், சைவம். ஆர்க் போன்ற தளங்களில் உள்ள காணொளிகள் கோயில்களை நேரடியாகக் காணும் அனுபவத்தைத் தருவன. தினமலர் இணையதளமும் இவ்வகையில் குறிக்கத்தக்க இணையதளம் ஆகும.

தமிழ் மரபு அறக்கட்டளை என்ற அமைப்பு தற்போது தமிழ் பண்பாட்டுச் சூழல்களைப் பெரிதும் பதிவாக்கி வெளியிட்டு வருகின்றது. அதில் இடம்பெறும் பல தகவல்கள் ஆசிரியர்களுக்கான தகவல்கள் பலவற்றைத் தருவனவாக உள்ளன.

விக்கிப்பீடியா கட்டற்ற கலைக்களஞ்சியம் என்ற தகவல் தளமும் அடிப்படைத் தகவல்களை அறிந்து கொள்ள உதவியாக உள்ளது.

இவைதவிர விவாதங்களை நடத்திக் கொள்ள இணைய இதழ்கள் பயன்பட்டுவருகின்றன. திண்ணை. காம். பதிவுகள் .காம், வல்லமை போன்ற பல இணைய இதழ்கள் தற்காலத்தில் தமிழ்ச்சூழலை உலகுக்கு அறிவிப்பனவாக உள்ளன.

இதுபோன்ற பல தகவல் தளங்களைப் பயன்படுத்தி ஒரு தமிழாசிரியர் தன்னையும் வளர்த்து. தன் பாடத்தையும் வளர்த்து,தன் மாணவர்களையும் வளர்க்க வேண்டிய போட்டிமிக்க காலத்தில் பயணிக்கிறார் என்பது கவனிக்கத்தக்கது.

பல்லூடக முறைக் கற்பித்தலில் உள்ள சவால்கள்

இந்திய அளவில் பல சவால்கள் பல்லூடகக் கற்பித்தலில் விளங்குகின்றன. முதலில் ஆர்வமின்மை என்ற ஒன்றும், செய்ததையே திருப்பிச் செய்ய எத்தனித்தல் என்ற ஒன்றும் தமிழாசிரியர்களைப் புதியன புகுத்தவிடுவதில்லை.

தாழ்வு மனப்பான்மை என்ற ஒன்றும் தமிழாசிரியர்களிடத்தில் ஏற்பட்டு அவர்கள் தனித்தீவாக இயங்குகின்ற நிலை தற்போது உள்ளது. கணினித் துறையோடு அனைத்துத் துறையும் இணைந்துக் களத்தில் நீந்திக்கொண்டிருக்கின்ற இக்காலத்தில் தமிழ் என்ற மரபுத்துறைக்கும், கணினி என்ற தகவல் தொழில் நுட்பத்தின் உச்சத்துறைக்கும் உள்ள இடைவெளி மிகப் பெரிதாக உள்ளது,

பொருளாதாரம் என்ற ஒன்றும் பெருத்த கேள்விக்குறியாக விளங்குகின்றது. கல்விக்கூடங்களில் தரப்பெற்றுள்ள பல்லூடக சாதனங்களைப் பராமரித்தல் என்பது மிகப் பெரிய சவால். அச்சடிப்புக் கருவி, படியெடுக்கும் கருவி ஆகியனவற்றைப் பெருத்தவிலைக்கு வாங்கிவிட்டு அவற்றில் மை தீர்ந்த பின் மாற்றமுடியாமல் அறவே கைவிடப்படுகிற பொருளாதார தாழ்வு இந்தியக்கல்விக் கூடங்களை வாட்டி வதைக்கின்றது. இதிலிருந்து மேம்பாடு அடைகையில் கல்வி மிகுந்த விளைவை ஏற்படுத்தும்.

மின்னணு இயந்திரங்களைக் கையாளுதலில் உள்ள தடுமாற்றம் அடுத்த சவால் நிறைந்த பகுதியாகும். இதற்காக தனி வகுப்புகள் நடத்தப் பெறாமலும், ஏனோ தானோ என்று இயந்திரங்களைக் கையாளுதலும் ஆன செயல்கள் பல்லூடகக் கருவிகளை நீடித்து உழைக்கச் செய்யவிடுவதில்லை.

தனித்த முயற்சி, புதியன உருவாக்கல், அவற்றை வெளிப்படுத்தல், பலருக்குக் கொண்டு செல்லுதல் என்ற முறை ஆசிரியர்களிடததில் அதிகரிக்கவேண்டும். புதியன கொண்டுவருபவரைத் தடைசெய்யாது அவருக்கு பெருத்த வரவேற்பை அளிக்கவேண்டும்.

மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குகின்ற நிலை வந்தபின் ஆசிரியர் கணினி பற்றிய அறியாதவராக இருந்தால் ஏற்படும் தொல்லைக்கு யார் பொறுப்பாக இயலும்.. தனிப்பட்ட நிலையில் தங்களின் தரத்தை ஆசிரியர்கள் உயர்த்திக் கொள்பவர்களாக இருக்க வேண்டும்.

ஆசிரியருக்கு நடத்தப்படும் பயிற்சிகளில் தொடர்கண்காணிப்பு முறை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இதுபோன்ற பல சவால்கள் எதிர்கொள்ளப்பெற்று ஏற்றம்பெற்றால் தமிழ்க்கல்வி தரமான கல்வியாக ஈர்ப்பு மிக்க கல்வியாக மிளிரும்.

மேனிலைச் சிந்தினைத் திறன்களைப் பயன்படுத்தி உரையாடல் திறன்களை வளர்த்தல்

திரு. சுப. நல்லுராஜ் (பாடத் தலைவர், ஊடக வளமையகம்)
முனைவர் பி. பானுமதி (ஆசிரியர்)
தெம்பனிஸ் தொடக்கக் கல்லூரி, சிங்கப்பூர்

முன்னுரை

உலகமயமாதல் அனைத்துத் துறைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. ஆகவே, நாம் நம் மாணவர்களின் நான்கு அடிப்படை மொழித் திறன்களான கேட்டல், வாசித்தல், பேசுதல், எழுதுதல் ஆகியவற்றை வளர்ப்பதோடு 21-ஆம் நூற்றாண்டுத் திறன்களான நுண்ணாய்வுத் திறன், புத்தாக்கப் புனைவுத் திறன் ஆகியவற்றையும் வளர்க்க வேண்டியது அவசியமாகிறது. ஒருவர் தம் கருத்துகளைப் பேச்சின் மூலமாகவோ எழுத்தின் மூலமாகவோ பகிர்ந்து கொள்ளும் போது இவ்விருத் திறன்களையும் பயன்படுத்தினால் கருத்துப் பரிமாற்றம் சிறப்பாக அமையும்.

மேனிலைச் சிந்தனைத் திறன்களையொட்டிப் பல ஆய்வுகளைச் செய்திருக்கும் Dr. ரிச்சர்ட் பவுல் அவர்களின் 'ஆய்வறிவு நியமங்கள்' (Dr Richard Paul - Intellectual Standards) 9 நியமங்களைக் கொண்டதாக வரையறுக்கப் பட்டிருக்கிறது. இவற்றுள், 6 நியமங்களைப் பயன்படுத்தி உரையாடல் திறனை மேம்படுத்தலாம் என்னும் கருதுகோளின் அடிப்படையில் ஓர் ஆய்வை நாங்கள் மேற்கொண்டோம். நாங்கள் பயன்படுத்திய 6 நியமங்கள் பினவருமாறு :

1. தெளிவு (Clarity)
2. துல்லியம் (Accuracy)
3. பொருத்தம்(Relevance)
4. ஆழம் (Depth)
5. அகலம் (Breadth)
6. முக்கியத்துவம் (Significance)

நாங்கள் தயாரித்த தகுதிநிலை விளக்கக் குறிப்புகளையும்/ Rubrics (பின்னிணைப்பு 2), படங்கள், தூண்டுதல் வினாக்கள் ஆகிய வளமைகளையும் பயன்படுத்திக் கற்றல் நடவடிக்கைகளை நடத்தினோம். சுமார் 10 வாரங்களில் மாணவர்களின் தகுதி நிலையில் நம்பிக்கையூட்டும் அளவு முன்னேற்றத்தையும் கண்டோம். இந்த அணுகுமுறையைப் பயன்படுத்தி எவ்வாறு மாணவர்களின் உரையாடல் திறனை வளர்க்கலாம் என்பதை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

ஆய்வின் நோக்கம்

2012 முதல், மேனிலைத் தமிழ்மொழித் தேர்வின் ஒரு கூறான வாய்மொழித் தேர்வில், கொடுக்கப் பட்டிருக்கும் ஒரு படத்தையொட்டி கேட்கப்படும் வினாக்களுக்கு ஏற்ப மாணவர் உரையாடுதல் வேண்டும். இத்தேர்வில், கேட்பவர் புரிந்துகொள்ளும் வகையில் கருத்துகளை விவரிக்கும் திறன், உரையாடலின் சரளம், பயன்படுத்தும் மொழியின் பொருத்தம் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

இந்த வாய்மொழித் தேர்வைச் சந்திக்கவிருந்த எங்கள் மாணவர்களின் உரையாடல் திறன் மேம்பட எவ்வாறு உதவலாம் என்பதைச் சோதித்து அறியவே நாங்கள் இந்த ஆய்வை மேற்கொண்டோம். மேனிலைச் சிந்தனைத் திறன்களைப் (**மே.சி.தி.**) பயன்படுத்துவதன் மூலம் மாணவர்கள் பட உரையாடலுக்கான தேர்ச்சி நிலையில் ஓரளவு முன்னேற்றம் அடைந்தனர்.

பின்வரும் கருப்பொருள்களையொட்டி இந்த உரையாடல்கள் அமைந்திருந்தன.

1. சுற்றுச்சூழல்
2. வளர்பருவம்
3. பண்பாடும் பொழுதுபோக்கும்
4. சமூகமும் நாடும்

ஆய்வின் படிநிலைகள்

12 மாணவர்கள் பங்குபெற்ற இந்த 10 வார கால ஆய்வின் படிநிலை வளர்ச்சியை இப்போது காண்போம்.

வாரம் 1 *:* மேனிலைச் சிந்தனைத் திறன் பயன்பாட்டிற்கான அளவைகள், தகுதிநிலை விளக்கம் ஆகியவற்றை உள்ளடக்கிய விரிவான தேர்ச்சிநிலை விளக்கக் குறிப்புகளை உருவாக்குதல் (*பின்னிணைப்பு 2*).
முன்னோட்டத் தேர்வு – படம்,தூண்டுதல் வினாக்கள் (கருப்பொருள்: சமூகமும் நாடும்) ஆகியவற்றைப் பயன்படுத்தி உரையாடல் நடத்துதல். இந்நிலையில், மாணவர்கள் பெரும்பாலோர் தெரிவித்த கருத்துகள் மேலோட்டமாகவும் தெளிவு குன்றியும் இருந்தன

வாரம் 2 *:* தேர்ச்சிநிலை விளக்கக் குறிப்புகளை மாணவர்களிடம் தந்து அவற்றை விளக்கப்படுத்துதல். மே.சி.தி. பயன்படுத்திப் பயற்சிப் படம் 1 (கருப்பொருள்: சுற்றுச்சூழல்) (*பின்னிணைப்பு 1*) பற்றி ஆசிரியர் துணையோடு மாணவர்கள் கருத்துதிர்ப்புச் செய்தல்.

வாரம் 3 *:* தேர்வு 1 (கருப்பொருள்: சுற்றுச்சூழல்) மாணவரின் தேர்ச்சிநிலை குறித்து விளக்கி அவரது மேம்பாட்டிற்கான ஆலோசனையும் வழங்குதல்.

வாரம் 4 *:* மே.சி.தி. பயன்படுத்திப் பயற்சிப் படம் 2 (கருப்பொருள்: வளர்பருவம்) – கூடிக் கற்றல் நடவடிக்கைகள் - சக மாணவர் மதிப்பீடு - ஆசிரியர் வழிகாட்டுதலோடு மாணவர்கள் கருத்துதிர்ப்புச் செய்தல்.

வாரம் 5 *:* தேர்வு 2 (கருப்பொருள்: வளர்பருவம்). மாணவரின் தேர்ச்சிநிலை குறித்து விளக்கி அவரது மேம்பாட்டிற்கான ஆலோசனையும் வழங்குதல்.

வாரம் 6 *:* பயிற்சியும் இடைநிலைத் தேர்வும் (கருப்பொருள்: சமூகமும் நாடும்).

வாரம் 7 9 *:* பயற்சி 3 & 4 > தேர்வு 3 & 4 >மாணவரின் தேர்ச்சிநிலை குறித்து விளக்கி அவரது மேம்பாட்டிற்கான ஆலோசனையும் வழங்குதல்.

வாரம் 10 *:* பின்னிலைத் தேர்வு

மாணவர்களிடம் எதிர்பார்க்கப்பட்ட 6 ஆய்வறிவு நியமங்கள்

தெளிவான துல்லியமான பேச்சு	தெளிவாகப் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் கருப்பொருளுக்கு (படம், வினாக்கள்) பொருத்தமான எடுத்துக்காட்டுகளுடனும் விளக்கங்களுடனும் இருத்தல்.
பொருத்தம், முக்கியத்துவம்	கருத்துகள் கருப்பொருளுக்குத் தொடர்புடையதாகவும் முக்கியமானதாகவும் இருத்தல்.
ஆழம்	கருப்பொருளுக்குத் தொடர்புடைய சிக்கல்கள் ஆழமாகச் சிந்திக்கப்பட்டு ஆராயப்படுதல்.
அகலம்	ஒன்றுக்கும் மேற்பட்ட பார்வையில் கருத்துகள் அமைதல்.

மாணவர் முன்னேற்றம்

பத்து வாரங்களில் 9 மாணவர்களும் தங்கள் தேரச்சிநிலையில் அடைந்த முன்னேற்றத்ததைப் பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

மாணவர் எண்	முன்னோட்டத் தேர்வு	பின்னிலைத்தேர்வு	தேர்வு
1	25/30	26/30	27/30
2	20/30	21/30	22/30
3	22/30	23/30	24/30
4	24/30	25/30	25/30
5	24/30	24/30	26/30
6	21/30	22/30	24/30
7	21/30	21/30	23/30
8	20/30	21/30	24/30
9	20/30	21/30	21/30
சராசரி	**21.8/30**		**24/30**

முடிவுரை

எங்கள் மாணவர்களிடம் சராசரியாக 8% முன்னேற்றம் காண வேண்டும் என்ற இலக்கோடு நாங்கள் இந்த ஆய்வைத் தொடங்கினோம். ஆய்வின் முடிவில் மாணவர்கள் சராசரியாக 10.1% முன்னேற்றம் அடைந்திருந்தது எங்களுக்கு மனநிறைவை அளித்தது.
ஆய்வின்போது நாங்கள் எதிர்நோக்கிய சவால்கள் பின்வருமாறு:

- குறுகிய கால அளவு (10 வாரங்கள்).
- மாணவர்களுக்கு மேனிலைச் சிந்தனைத் திறன்களைக் கற்பித்தல்.
- தலைப்புக்குப் பொருத்தமான, அனைத்து சமயத்தாருக்கும் ஏற்புடைய படங்களைத் தெரிவு செய்தல்.

- உரையாடலுக்கான சிறந்த தூண்டுதல் வினாக்களைத் தயாரித்தல்.

மேற்குறிப்பிடப்பட்ட சவால்களைச் சமாளிக்க ஆய்வில் பங்குகொண்ட ஆசிரியர்கள் வாரம் ஒருமுறை சந்தித்துக் கலந்துரையாடினோம். உரையாடலுக்காகப் பரிந்துரைக்கப்படும் படங்களிலிருந்து மிகப் பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுத்து அவற்றுக்கான தூண்டுதல் வினாக்களைச் செம்மைப்படுத்தினோம். மின்னஞ்சல் மூலமும் கருத்துப்பரிமாற்றம் செய்துகொண்டோம். இந்த ஆய்வில் பயன்படுத்தப்பட்ட அணுகுமுறைகளை செம்மைப்படுத்தி மாணவர்களின் கட்டுரை எழுதும் திறனை மேம்படுத்தும் முயற்சியில் நாங்கள் தற்போது ஈடுபட்டிருக்கிறோம்.

மேற்கோள் நூல்கள் :

1. Guide to Critical Thinking, Dr. Linda Elder and Dr. Richard Paul, 2009.
2. Intellectual Standards, Dr. Linda Elder and Dr. Richard Paul, 2009.

பின்னிணைப்பு 1

வாரம் 1



உரையாடல் வினாக்கள் (தேர்வாளர் பயன்பாட்டுக்கு மட்டும்) :

1) இந்தப் படத்திலுள்ள மாணவர்களில் நீயும் ஒருவராக இருந்தால் உன் மனநிலை எவ்வாறு இருக்கும்?

2) பள்ளிகள் ஏன் மாணவர்களை இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுத்துகின்றன?

3) பொதுவாகச் சிங்கப்பூரர்கள் சுற்றுச்சூழல் தூய்மையில் அக்கறை உடையவர்களாக இருக்கிறார்கள் என நீ கருதுகிறாயா? ஏன்?

வாய்மொழித் திறன் (உரையாடல்) **தேர்ச்சிநிலை** *பின்னிணைப்பு2*
விளக்கக் குறிப்புகள்

தலைப்பு : _____ **பெயர்** : _____

தேதி : _____ **வகுப்பு**: _____

அளவை	தகுதிநிலை விளக்கம்	4	3	2	1	மதிப்பெண்கள்
தெளிவான துல்லியமான பேச்சு	*தெளிவாகப் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் கருப்பொருளுக்கு (படம், வினாக்கள்) பொருத்தமான எடுத்துக்காட்டுகளுடனும் விளக்கங்களுடனும் இருத்தல்.*	எல்லா கருத்துகளும் எடுத்துக்காட்டுகளுடனும் விளக்கங்களுடனும் தெளிவாக இருத்தல்.	பெரும்பாலான கருத்துகள் எடுத்துக்காட்டுகளுடனும் விளக்கங்களுடனும் தெளிவாக இருத்தல்.	ஒருசிலகருத்துகள் எடுத்துக்காட்டுகளுடனும் விளக்கங்களுடனும் தெளிவாக இருத்தல்.	எடுத்துக்காட்டுகளுடனும் விளக்கங்களுடனும் ஒருசில கருத்துகளைத் தெரிவிப்பதற்குக்கூட தேர்வாளரின் உதவி தேவைப்படுதல்.	
பொருத்தம், முக்கியத்துவம்	*கருத்துகள் கருப்பொருளுக்குத் தொடர்புடையதாகவும்முக்கியமானதாகவும் இருத்தல்.*	எல்லா கருத்துகளும் கருப்பொருளுக்குத் தொடர்புடையதாகவும் முக்கியமானதாகவும் இருத்தல்.	பெரும்பாலான கருத்துகள் கருப்பொருளுக்குத் தொடர்புடையதாகவும் முக்கியமானதாகவும் இருத்தல்.	ஒருசில கருத்துகள் மட்டுமே கருப்பொருளுக்குத் தொடர்புடையதாகவும் முக்கியமானதாகவும் இருத்தல்.	கருப்பொருளுக்குத் தொடர்புடையஒருசில கருத்துகளைத் தெரிவிப்பதற்குக்கூட தேர்வாளரின் உதவி தேவைப்படுதல்.	
ஆழம்	*கருப்பொருளுக்குத் தொடர்புடைய சிக்கல்கள்ஆழமாகச் சிந்திக்கப்பட்டு ஆராயப்படுதல்.*	எல்லா சிக்கல்களும் ஆழமாகச் சிந்திக்கப்பட்டு ஆராயப்படுதல்.	பெரும்பாலான சிக்கல்கள்ஆழமாகச் சிந்திக்கப்பட்டு ஆராயப்படுதல்.	ஒருசில சிக்கல்கள் மட்டுமே ஆழமாகச் சிந்திக்கப்பட்டு ஆராயப்படுதல்.	ஒருசில சிக்கல்களைஆழமாகச் சிந்தித்து ஆராய்வதற்குக்கூட தேர்வாளரின் உதவி தேவைப்படுதல்.	

அகலம்	*ஒன்றுக்கும் மேற்பட்ட பார்வையில் கருத்துகள்அமைதல்.*	எல்லா கருத்துகளும் ஒன்றுக்கும் மேற்பட்டபார்வையில்அமைதல்.	பெரும்பாலான கருத்துகள் ஒன்றுக்கும் மேற்பட்ட பார்வையில் அமைதல்.	ஒருசில கருத்துகள் மட்டுமே ஒன்றுக்கும் மேற்பட்ட பார்வையில் அமைதல்.	ஒன்றுக்கும் மேற்பட்ட பார்வையில் ஒருசில கருத்துகளைத் தெரிவிப்பதற்குக்கூட தேர்வாளரின் உதவி தேவைப்படுதல்.	
மொழி		7-8	5-6	3-4	1-2	
		மிகப் பொருத்தமான சொல்வளமும் தொடர்களும் கொண்ட மொழியைப் பயன்படுத்துதல்.	பொருத்தமான சொல்வளமும் தொடர்களும் கொண்ட மொழியைப் பயன்படுத்துதல்.	ஓரளவு பொருத்தமான சொல்வளமும் எளிய தொடர்களும் கொண்ட மொழியைப் பயன்படுத்துதல்.	மிகக் குறைந்த சொல்வளத்தையும் பொருத்தமற்ற தொடர்களையும் பயன்படுத்துதல்.	
		6	4-5	2-3	1	
உரையாடலில் ஈடுபாடு		தலைப்பை ஒட்டி உரையாடலைத் தொடங்கித் தொடர்ந்து பேசுதல்.	பெரும்பாலான நேரங்களில் தலைப்பை ஒட்டி உரையாடலைத் தொடங்கித் தொடர்ந்து பேசுதல்	சிறு தூண்டுதலுக்குப் பின்னர்த் தலைப்பை ஒட்டித் தொடர்ந்து பேசுதல்.	தொடர்ச்சியான தூண்டுதலுக்குப் பின்னரும் தலைப்பை ஒட்டிப் பேச முடியாத நிலை.	
மொத்த மதிப்பெண்கள்						/30
பொதுவான கருத்துகள்						

தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும் சூழலில் பேச்சுத்தமிழ் இலக்கண நுணுக்கங்கள் கற்பித்தல்-ஒரு புதிய அணுகுமுறை

டாக்டர் இரா வேல்முருகன்
முதுநிலை விரிவுரையாளர்
ஆசிய மொழிகள் மற்றும் பண்பாட்டுத் துறை
தேசியக் கல்விக் கழகம்
நன்யாங்தொழில் நுட்பப் பல்கலைக் கழகம்
சிங்கப்பூர்

தொன்மையும், இடையறா வளர்ச்சியும் கொண்டு வாழும் மொழியாக - செம்மொழியாக விளங்கிக் கொண்டிருக்கும் மொழி நம் தமிழ்மொழி. தனக்கெனத் தனித்த இலக்கண, இலக்கியப் பாரம்பரியத்தைக் கொண்டு தமிழகத்தில் மட்டுமின்றி இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, பர்மா, தென்னாப்பிரிக்கா, மொரீசியஸ், அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் பீடுநடை போட்டுக் கொண்டிருக்கிறது. இது பழமைக்குப் பழமையாய்ப் புதுமைக்குப் புதுமையாய்த் தனக்கே உரிய சிறப்புப் பண்புக்கூறுகளைப் பெற்று விளங்குகின்றது.

பொதுவாக அனைத்து மொழிகளும் பேசுவதற்குப் பயன்படுத்தப்பட்டாலும் வளர்ச்சி பெற்ற மொழிகளே பேசுவதற்கும் எழுதுவதற்கும் பயன்படத்தக்க வகையில் அமைந்திருக்கின்றன. அந்த வகையில், தமிழ்மொழி பேச்சு வழக்கிலும், எழுத்து வழக்கிலும் மிளிர்ந்து நிற்கின்றது. தமிழ்மொழி பல்வேறு மக்களால் பல்வேறு பகுதிகளில் பயன்படுத்தப்படுவதால் பல வழக்குகளை உள்ளடக்கி நிற்கின்றது. அதாவது வட்டார வழக்குகளாகவும், சமூக வழக்குகளாகவும் பல்வேறு வழக்குகளைப் பெற்றுத் திகழ்கின்றது. இவ்வாறு பல்வேறு வழக்குகளின் தொகுதியே தமிழ்மொழியாக வலம் வருகின்றது. இதில் தொன்மை வாய்ந்த பழைய வழக்காறுகளும், அண்மையில் உருவாகிப் புழக்கத்தில் இருக்கும் புதுமையான வழக்காறுகளும் இடம் பெற்றிருக்கக் காண்கின்றோம்.

தமிழ் மொழியை அதன் பயன்பாட்டு அடிப்படையில் இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். 1.எழுத்து வழக்கு 2. பேச்சு வழக்கு. தமிழ்மொழியை எழுதுவதுபோல் பேசுவதில்லை. பேசுவது போல் எழுதுவதுமில்லை. எனவே தான் இதனை இருநிலை வழக்கு நிலை மொழி என அழைக்கின்றனர் மொழியியலார்.

மொழிக்கூறுகள் பல பேச்சுத் தமிழுக்கே உரியனவாகவும், வேறு பல மொழிக்கூறுகள் எழுத்துத் தமிழுக்கே உரியனவாகவும் அமைந்திருக்கும். தமிழ் போன்ற ஒரு மொழியைக் கற்கும் பொழுது பேசுவதற்கு மட்டும் கற்றுக் கொண்டால் அதனை முழுமையாக எழுத முடியாது அல்லது எழுதுவதற்கு மட்டும் கற்றுக் கொண்டால் மட்டும் சிறப்பாகப் பேசிவிடவும் முடியாது. தமிழில் பேசுவதற்கும் எழுதுவதற்கும் சில சிறப்புக் கூறுகளைத் தனித்தனியே கற்க வேண்டும். அதாவது பேச்சுத் தமிழின் அறிவு எழுத்துத் தமிழைப் பயன்படுத்தக் குறைந்த அளவே உதவியாக இருக்கும். அதேபோன்று எழுத்துத் தமிழ் அறிவு பேச்சுத் தமிழைப் பயன்படுத்தக் குறைந்த அளவே உதவியாக இருக்கும்.

சான்றாகத் தமிழை எழுதப் பயன்படுத்த வேண்டுமெனில் எழுதும் நுட்பத்தையும் (Mechanics of Writing) எழுதும் பண்பாட்டையும் (Ethnography of Writing) எழுத்துமொழிப் பயன்பாட்டையும் (Pragmatics of Writing) கற்க வேண்டும். அப்பொழுதுதான் ஒருவர் தமிழைத்

திறம்பட எழுதத் தெரிந்து கொள்ள முடியும். அதே போல் தமிழைப் பேசக் கற்றுக் கொள்ள வேண்டுமெனில் பேச்சுத் தமிழுக்கே உரிய சில சிறப்புப் பண்புக்கூறுகளைக் கற்றறிய வேண்டும். பேசும் பொழுது பின்பற்றப்படும் தமிழ்க்கூறுகள், அதே தமிழை எழுதும் பொழுது இடம் பெறாது. வேறு சில சிறப்புக்கூறுகள் எழுதும்பொழுது பயன்படுத்தப்படும் ஆனால் அவை பேசும் பொழுது இடம் பெறுவதில்லை. பேச்சுத்தமிழுக்கும், எழுத்துத்தமிழுக்கும் இடையே பல பொதுமைக்கூறுகள் உள்ளன. அவையே பேச்சுத் தமிழும், எழுத்துத் தமிழும் ஒரே மொழி என்னும் உண்மையை எடுத்துக்கூறுகின்றது.

தமிழ்மொழி கற்றல்/ கற்பித்தல்

தமிழ்மொழி பல்வேறு மக்களால் பல்வேறு முறைகளில் கற்கப்படுகின்றது; கற்பிக்கப்படுகின்றது. புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழைத் திறன்களின் அடிப்படையில் கற்கின்றனர். அதாவது தமிழை முதன் மொழியாகவும், இரண்டாம் மொழியாகவும், அந்நிய மொழியாகவும் கற்கின்றனர். கற்றுப் பயன்படுத்தியும் வருகின்றனர்.

தமிழை இரண்டாம் மொழியாக கற்பிக்கும் பொழுது மூன்று முக்கிய கூறுகளைக் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியம். அவையாவன, தெரிந்தெடுத்தல் (Selection), வரிசைப்படுத்துதல் (Gradation), அளித்தல் (Presentation).

மேற்கூறிய மூன்று முக்கியக் கூறுகளின் அடிப்படையில் மொழி கற்றலுக்கான கருத்தையும் (Content) மொழிக்கூறுகளையும் (Linguistic elements) தெரிந்தெடுத்தல் அவசியமாகின்றது. அதாவது தமிழின் மொழிக்கூறுகளை மொழி கற்போரின் பயன்பாட்டுத் தேவைக்கு ஏற்பத் தெரிந்தெடுத்து அவற்றைக் கற்றலுக்கு ஏற்ப வரிசைப்படுத்திக் கற்பிக்க வேண்டும். தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும் பொழுது, எழுத்துத் தமிழுக்குத்தான் மிகுதியான முக்கியத்துவம் வழங்குவது வழக்கம். பேச்சுத் தமிழுக்கு அவ்வளவு முக்கியத்துவம் அளிப்பதில்லை. சமூகத்தில் பயன்படுத்துவதன் மூலம் அதாவது முயற்சித்தல் மற்றும் தவறு செய்தல் (Trail and error) முறையில் தான் மொழியைக் கற்றுக் கொள்வர்.

புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழைக் கற்றுக் கொடுக்கும் பொழுது அல்லது கற்கும் பொழுது பேச்சுத் தமிழுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டியது மிக அவசியம். ஏனெனில் தமிழை வகுப்பறையில் கற்றாலும் தமிழ்மொழியைப் பயன்படுத்தும் சூழல்கள் சமூகத்தில் அரிதாகவே உள்ளது. அதாவது பேச்சுத் தமிழைப் பயன்படுத்தும் சூழல்கள் மிகக்குறைவே. இத்தகு சூழலில் வகுப்பறைதான் மிகுதியாகப் பேச்சுத்தமிழின் திறனை வழங்கக்கூடிய சூழலாக அமைந்துள்ளது. மாணவர்கள் கருத்துப்பரிமாற்ற அணுகுமுறையில் (Communicative approach) வகுப்பறையில் மாதிரிச் சூழல்களை (Role Model) உருவாக்கித் தமிழ்மொழியை எவ்வாறு பயன்படுத்தலாம் என்னும் அறிவை பெறுகின்றனர்.

அவ்வாறு உருவாக்கும் வேளையில், பேச்சுத் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுத்து பேச்சுத் தமிழ்க்கூறுகளை மாணவர்களுக்கு அறிமுகம் செய்யலாம். பொதுவாக மொழியின் அனைத்துக் கூறுகளையும் வகுப்பறையில் பெறுவதும் கற்றல் சூழலில் கொணர்வதும் இயலாத செயல். மொழியில் அடிக்கடி பயன்படுத்தக் கூடிய கூறுகளை மாணவர்களுக்கு அறிமுகம் செய்தல் வேண்டும்.

பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்கும் இடையே நிலவும் வேறுபாடு என்பது ஒரு முக்கியமான கூறு. தமிழைப் பொறுத்தவரை, இருநிலை வழக்கு நிலையைக் கொண்டுள்ளதால், பேச்சுத்தமிழுக்கும் எழுத்துத்தமிழுக்கும் இடையே நிலவும் வேறுபாட்டை மாணவர்களின் மனத்தில் பதிய வைப்பது மிக அவசியமான ஒன்றாகும். பொதுவாக மொழி கற்றலில்

கீழ்க்காணும் வரிசை முறையில் மொழித்திறன்களைக் கற்பது சிறந்த மொழி கற்றல் முறை என்பர் மொழியியலாளர்.

1. கேட்டல் திறனைப் பெற்ற பின் பேசக்கற்றல்
2. பேசக்கற்ற பின் வாசிக்கக்கற்றல்
3. வாசித்தலைக் கற்ற பின் எழுதக்கற்றல்

பெரும்பாலும் மேற்கூறிய வரிசை முறையிலேயே மொழியைக் கற்பர். சிற்சில சூழல்களில் இம்முறை மாறியும் அமையலாம். பொதுவாகத் தமிழை இரண்டாம் மொழியாக கற்பிக்கும் பொழுது, எழுத்துத் தமிழை முதலில் அறிமுகம் செய்துவிட்டுப் பின்னர் பேச்சுத் தமிழை அறிமுகம் செய்வர். குறிப்பாகச் சொல்ல வேண்டுமெனில் எழுத்துத் தமிழைக் கற்பித்த பிறகு இவ்விரண்டுக்கும் இடையே நிலவும் வேறுபாட்டைக் கற்பித்துப் பேச்சுத் தமிழை அறிமுகம் செய்வது தான் வழக்கம். சில சூழல்களில், பேச்சுத் தமிழை முதலில் அறிமுகம் செய்து பின்னர் எழுத்துத் தமிழைக் கற்பிக்கும் முறையும் பின்பற்றப்படுகின்றது.

எனவே, பேச்சுத் தமிழ் வேறு, எழுத்துத் தமிழ் வேறு என்னும் கருத்தைக் கற்போர் மனத்தில் ஆழமாகப் பதிய வைக்கும் முறையே காலம் காலமாகப் பின்பற்றப்பட்டு வருகின்றது. அவ்வாறு வேறுபாட்டைக் கற்பிக்கும் பொழுது சொல் வேறுபாடுகளுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. பேச்சுத் தமிழுக்கும், எழுத்துத் தமிழுக்கும் இடையே நிலவும் வேறுபாடு சொல் நிலையில் மட்டும் அமைவதில்லை. மொழியின் எல்லா நிலைகளிலும் உள்ளன. இதனை மனத்தில் கொண்டு, இந்த ஆய்வுக் கட்டுரை பேச்சுத் தமிழுக்கும் எழுத்துத் தமிழுக்கும் இடையே நிலவும் இலக்கணக் கூறுகளின் ஒற்றுமை வேற்றுமைகளை இனம் கண்டு அவற்றை எவ்வாறு தமிழை இரண்டாம் மொழியாகக் கற்கும் மாணவர்களுக்குக் கற்பித்து, அவர்களின் பேச்சுத்திறனை வளர்க்கலாம் என விளக்க முயற்சிக்கின்றது.

ஒரு மொழியில் சொல்நிலை எளிதில் மாற்றத்திற்கு உட்படக்கூடியது என்பது யாவரும் அறிந்த உண்மை. இலக்கணக்கூறுகளில் மாற்றம் நிகழ்வது அறிதே. பேச்சுத் தமிழுக்கும் எழுத்துத் தமிழுக்கும் இடையே நிலவும் இலக்கணக்கூறுகளின் வேறுபாடு வெளிப்படையாகத் தெரியாது. அவற்றை நுணுகி ஆராய்ந்தால் மட்டுமே புலப்படும். இதனாலேயே மாணவர்கள் தமிழை எளிதாகப் பேச முடியாமல் தவிக்கின்றனர். சொல் வேறுபாடுகளுக்கு முக்கியத்துவம் அளிப்பது போல் இலக்கணக் கூறுகளுக்கும் முக்கியத்துவம் அளித்துக் கற்றல் கற்பித்தல் சாதனங்களில் இவ்வகை இலக்கண வேறுபாடுகளைப் பாடப்பகுதிகளாக அறிமுகம் செய்தால் கற்றல் என்பது எளிதாகும். மாணவர்கள் தமிழை எழுதுவது போல் எளிதாகப் பேசவும் முடியும். இவ்வகை இலக்கணக்கூறுகளைக் கற்பதன் மூலம் மாணவர்களின் கருத்துப் பரிமாற்றத்திறன் (Communicative competence) மேம்படும்.

பேச்சுத் தமிழக்கும் எழுத்துத் தமிழுக்கும் இடையே நிலவும் இலக்கணக்கூறுகளின் ஒற்றுமை வேற்றுமையை நுணுகிப் பார்க்கும்பொழுது கீழ்க்காணும் உண்மைகள் தெளிவாகின்றன. அவையாவன.

1.எழுத்துத்தமிழில் இடம் பெறும் இலக்கணக்கூறுகள், எந்தவித மாற்றமும் இல்லாமல் அப்படியே பேச்சுத்தமிழில் இடம் பெறும் இலக்கணக்கூறுகளாக வரலாம். சான்றாக போனானா? (வினாப்பெயர்), கூடாது (எதிர்மறை), செய்ய (எச்சம்), எனக்காக (வேற்றுமை உருபு) போன்றவைகள். இது போன்ற கூறுகள் அனைத்தையும் சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

இதனைப் பேச்சுத் தமிழுக்கும் எழுத்துத் தமிழுக்கும் இடையே நிலவும் ஒற்றுமை எனலாம். இத்தகைய கூறுகளால் மொழி கற்கும் மணவர்களுக்கு எவ்விதச் சிக்கலும் தோன்றாது. எழுத்துத் தமிழுக்குப் பயன்படுத்தப்படும் இத்தகைய இலக்கணக்கூறுகளை அப்படியே பேச்சுத் தமிழில் பயன்படுத்தலாம் என்னும் செய்தியை மட்டும் அவர்கள் தெரிந்திருந்தால் கற்றல் என்பது எளிதானதாக அமையும்; மொழிப் பயன்பாடும் எளிதாக நடைபெறும்.

2) எழுத்துத்தமிழில் இடம் பெறும் இலக்கணக்கூறுகளில் ஒலி மாற்றம் ஏற்பட்டுத் திரிந்த நிலையில் பேச்சுத்தமிழில் இடம் பெறுவதுண்டு.

சான்றாக

இல்லை – இல்லெ; அவளுடைய – அவளோட; வந்துவிட்டான் –வந்துட்டா(ன்); என் – ஏ(ன்); நெற்றி – நெத்தி; பாய்ந்தது - பாஞ்சது

இதுபோன்ற இலக்கணக்கூறுகளே பெரும்பாலும் பேச்சுத் தமிழுக்கும் எழுத்துத் தமிழுக்கும் இடையே நிலவும் வேறுபாட்டை உறுதி செய்கின்றன. இவையே தமிழை இரண்டாம் மொழிச்சூழலில் பேச்சுத்தமிழைக் கற்கும் பொழுது சிக்கல்களை உருவாக்குகின்றன. இவற்றை மாணவர்கள் நன்குணர வேண்டும். சில சூழல்களில் ஒன்றுக்கு மேற்பட்ட ஒலி மாற்றங்கள் நிகழும் பொழுது அவற்றை விளக்குவதற்கு விதி வரிசைப்படுத்துதல் (Rule ordering) மிகவும் சிக்கலாக இருக்கும். அவ்வகை ஒலிமாற்றங்களைத் தெளிவாக மாணவர்கள் மனத்தில் பதியச் செய்தல் வேண்டும்.

3) எழுத்துத் தமிழில் இல்லாத, பேச்சுத் தமிழில் மட்டும் இடம்பெறும் இலக்கணக்கூறுகள் சான்றாக,

ஓட – ராமனோட; ஆட்டி – சொல்லாட்டி, வராட்டி; கிட்டு – வந்துகிட்டு, போய்கிட்டு;

னா – அப்படினா; புட்டு - எம்புட்டு

இதுபோன்ற கூறுகளை மாணவர்கள் புதிதாகக் கற்க வேண்டும். இவ்வகைக் கூறுகளும், பேச்சுத் தமிழுக்கும் எழுத்துத் தமிழுக்கும் இடையே நிலவும் வேறுபாட்டைத் தீர்மானிக்கின்றன. இவ்வகை இலக்கணக்கூறுகளைத் தெரிந்து கொள்வதற்கு மாணவர்கள் அதிக முயற்சி எடுத்துக் கொள்வது அவசியம்.

தமிழ்மொழியில் உள்ள எல்லா இலக்கணக் கூறுகளையும் வரிசைப்படுத்தி அவை எழுத்து, பேச்சுத் தமிழில் ஏற்படும் மாற்றங்களை மாணவர்களுக்குப் பாடப்பகுதியாக அமைத்துக் கற்பிக்கும் போது பேச்சுத்தமிழ் கற்றல் எளிதாகும்.

வேற்றுமை உருபுகள்

ராமனை	ராமனெ
ராமனால்	ராமனாலெ
ராமனுக்கு	ராமனுக்(கு)
ராமனுடைய	ராமனோட
வீட்டில்	வீட்டுலெ

பன்மை விகுதிகள்

மனிதர்கள்	மனுசங்க
குருவிகள்	குருவிக
அவன்கள்	அவங்கெ
அண்ணன்மார்	அண்ணெமாரு

எண்

ஒன்று	ஒன்னு
இரண்டு	ரெண்டு
ஐந்து	அஞ்சு

முதலாவது	மொதலாவது

மூவிடப் பெயர் விகுதி

அவர்கள்	அவுங்க
நான்	நா(ன்)
என்னுடையது	என்னது/ என்னோடது
அவனது	அவெ(ன்)து
உங்களுடையது	ஒங்கது
நம்முடையது	நம்மது
என்னை	என்னெ

வினாப்பெயர்

யார்	யாரு
ஏன்	ஏ(ன்)

காலம்

வருகிறான்	வர்றா(ன்)
வந்தான்	வந்தா(ன்)
வருவான்	வருவா(ன்)
வந்து கொண்டிருக்கிறான்	வந்துக்கிட்டுருக்கா(ன்)
வந்துவிட்டான்	வந்துட்டா(ன்)
வரமாட்டான்	வரமாட்டா(ன்)

எதிர்மறை

வரவில்லை	வரலெ
வரக்கூடாது	வரக்கூடாது
வரமாட்டான்	வரமாட்டா(ன்)
செய்ய வில்லை	செய்யலெ

முடிவுரை

தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும் பொழுது, பேச்சுத் தமிழுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும். பேச்சுத் தமிழ்ச் சொற்களுக்கு முக்கியத்துவம் அளிப்பது போல், பேச்சுத் தமிழில் உள்ள இலக்கணக் கூறுகளுக்கும் முக்கியத்துவம் அளித்தல் வேண்டும். மேலும், எழுத்துத் தமிழில் இடம் பெறும் இலக்கணக் கூறுகளில் எவை எவை அப்படியே பேச்சுத் தமிழிலும் இடம் பெறுகின்றன என மாணவர்களுக்கு விளக்கலாம். அதே போன்று, எழுத்துத் தமிழில் இடம் பெறும் இலக்கணக் கூறுகளில் எவை எவை ஒலி மாற்றம், ஒலிப் பதிலீடு, ஒலிக் குறைப்பு போன்றவற்றிற்கு உள்ளாகின்றது எனக் கண்டறிந்தும், எவ்வகை இலக்கணக்கூறுகளில் ஒன்றிற்கு மேற்பட்ட ஒலி மாற்றங்கள், ஒலிப் பதிலீடுகள், ஒலிக் குறைப்புகள் நிகழ்கின்றன எனக் கண்டறிந்தும் அவற்றின் விதிகளை வரிசைப்படுத்தியும் மாணவர்களுக்கு அறிமுகம் செய்யலாம். அதே போன்று, எழுத்துத்தமிழில் இல்லாத அதே நேரத்தில் பேச்சுத்தமிழில் மட்டும் இடம் பெற்றிருக்கும் இலக்கணக் கூறுகளையும் இனம் கண்டு விளக்குதல் வேண்டும். தமிழ்மொழி பேசும்பொழுதும் எழுதும் பொழுதும் வெவ்வேறு நுணுக்கங்களைப் பெற்றுத் திகழ்கின்றன. அவற்றைக் கற்போர் நன்குணர்ந்தால் தான் தமிழைப் பேசவும் எழுதவும் திறம்படப் பயன்படுத்த முடியும். எனவே, பேச்சுத் தமிழ் தொடர்பான இலக்கணக்கூறுகளை மாணவர்களின் பாடநூல்களின் வழி அறிமுகம் செய்து கற்பிக்கும் பொழுது தமிழ் மொழியைச் சுமையாகக் கருதாமல் சுவையாகக் கருதிச் சரளமாகப் பேச விழைவார்கள் என்பது திண்ணம்.

கற்றல் கற்பித்தலில் புதிய அணுகுமுறைகளில் தகவல் தொழில்நுட்பப் பயன்பாடு

முனைவர்.செள.பா.சாலாவாணிஸ்ரீ
உதவிப்பேராசிரியர்
அன்னை வேளாங்கண்ணி கல்லூரி,
சைதாப்பேட்டை,சென்னை-15.

"பிச்சை புகினும் கற்கை நன்றே" - ஔவையார்
"கற்க கசடற" - வள்ளுவர்

இத்தொடர்கள், பழந்தமிழர்கள் கல்வியைப் போற்றிய திறத்தினை விளக்கிநிற்கிறது. மரபு வழி சார்ந்த கட்டமைப்புக்குள் இருந்த கற்றல் கற்பித்தல் அணுகுமுறையானது இன்று நவீனத்து அணுகுமுறைகளுக்குள் சமூகத்தினை இட்டுச் செல்கிறது. இன்றைய மாணவர் சமூகமும் கற்றலில் புதிய பரிணாமங்களை உள்ளடக்கிய கற்பித்தலை வரவேற்கின்றனர். அவ்வகையில் தமிழ் நவீன தொழில்நுட்பக் கற்றல் கற்பித்தலானது,

- Digital Board - ஒளி ஒலிப்படப் பலகை
- e- Book - மின்புத்தகம்
- e- Dictionary - மின்னகராதி
- e- Library - மின் நூலகம்
- e - Translation - மின் மொழிபெயர்ப்பு
- e - Learning - மின் வழி கற்றல்
- Video Conference - நிகழ்ப்பட கருத்தரங்கு
- Language Lab - மொழி ஆய்வு கூடம்

போன்ற கருவிகள் எளிமை, விரைவு, விரிவு, விளைபயன், ஈர்ப்பு, மனமகிழ்ச்சியினைப் பல்லூடகம் கொண்டு சேர்க்கின்றன.இதற்கு துணையாக இணையம் வழி கற்பித்தல் web based instruction - WBI, Educational Wed Sites - EWS போன்ற கல்வி தொடர்புடைய இணைய தளங்கள் பயன்படுகின்றன.நவீன தொழில் நுட்பம் கற்றல் கற்பித்தலை உலகத்தரத்திற்கு நெறிப்படுத்துகிறது.

கால வளர்ச்சிக்கு தகுந்தவாறு எந்த ஒரு மொழி தன்னைப் புதுமைக்குள் உட்படுத்திக் கொள்கின்றதோ அந்த மொழிக்கு அழிவு என்பது கிடையாது. அவ்வகையில் வளர்ச்சிப் பாதையில்

பயணித்துக் கொண்டிருக்கும் மொழியாக தமிழ் மொழி திகழ்கின்றது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

ஓலைச்சுவடிகளாகவும், கல்வெட்டு, செப்புப் பட்டையங்களாகவும் வளர்ந்த தமிழ் மொழியினை இன்றைய இளைய தலைமுறையினர் இணையத்தின் ஊடாக தமிழை உலகம் போற்றும் படிச்செய்துவருகின்றனர். சங்கத் தமிழை உலகத்தமிழாக்க உலகத் தமிழர்கள் இணையத்தையே கருவியாகக் கொண்டுள்ளனர். இன்றைய சூழலில் உலக வலைப் பின்னலில் (www. World wide web) தம்மை பிணைத்துக் கொள்ளாதவர் எவரும் இல்லை எனலாம். உலகத்தின் எந்த மூலைக்கும் மின்னஞ்சல் (e.mail) மூலம் தொடர்பு கொள்ள முடியும்.

தமிழ் மொழியை உலகத் தமிழர்களிடம் கொண்டு சேர்த்த பெருமை , புலம் பெயர்ந்த தமிழராம் சிங்கப்பூரை சேர்ந்த திரு.நா.கோவிந்தசாமி அவர்களையே சாரும். இவர் தான் தமிழ் மொழியினை உலக வலைப் பின்னலில் முதலில் அறிமுகப்படுத்தியவர். இவரைப் பின் தொடர்ந்து அதே நாட்டைச் சேர்ந்த க.நந்தகுமார்,வை.பழனிவேலு, முகமது இஸ்மாயில் ஆகியோர் கணினியில் தமிழைக் கொண்டு வருவதற்குப் பெரும் முயற்சிகள் மேற்கொண்டனர்.

1983 முதல் 1987 ஆம் ஆண்டு வரையிலும் இவர்கள் செய்த அரும்பெரும் முயற்சிகளாலும் கணினிக்குள் தமிழ் எழுத்துக்களைக் கொண்டுவர முடிந்தது. இந்திய மொழிகளில் முதலில் இணையத்தில் நுழைந்த மொழியாக தமிழ் சிறந்து நிற்கின்றது. இவ்வாறு இவ்வறிஞர் பெருமக்களின் சீரியப் பணியால் உலக மக்களையே தன்னுள் கட்டுப்படுத்திக் (அடக்கி) கொண்டிருக்கும் தகவல் தொழில் நுட்பத் துறைக்குள் தமிழ் மொழியும் நுழைவதற்கு அது வாய்ப்பாய் அமைந்தது.

தகவல் தொழில் நுட்பத்தினைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளும் எந்தத் துறையும் தனது முன்னேற்றத்தினை உறுதி செய்து கொள்கிறது எனலாம். அதே போல் தமிழ் இலக்கியத்திலும் தகவல் தொழில் நுட்பத்தின் தாக்கம் வலுவாகவே உள்ளது.

கடல் கடந்து வாழும் தமிழ்ச் சமூகத்தினர் தம் சந்ததியினருக்கு மொழியால், இனத்தால், பண்பாட்டால், தனிமைப்படுத்தப்படுவதைத் தவிர்க்கத், தங்கள் பிள்ளைகளுக்குத் தமிழ் மொழி அறிவை வழங்க வேண்டிய சூழலில் இணையம் ஊடான தகவல் தொழில் நுட்பம் அத்தகைய காரியத்தினைச் செய்து வருகிறது.

தற்போது ஏற்பட்டுள்ள தகவல் தொழில் நுட்ப வளர்ச்சி (புரட்சி) கல்வி துறையில் மிகப் பெரிய ஒரு மாற்றத்தினைக் கொண்டு வந்திருக்கிறது. உலக தமிழர்களை அவர்கள் தாய் மொழி படிப்பினை எளிமையாக படிக்க இது வழி வகை செய்துள்ளது. தகவல் தொழில் நுட்ப வளர்ச்சி உலக தமிழர்களை இணைக்கும் ஒரு பாலமாகச் செயல்படுகின்றது. இத்தகைய தகவல் தொழில் நுட்பத்தின் ஆணி வேராக செயல்படுவது இணையம். இணையம் என்பதற்குக் கணினிகளுக்கு இடையிலான தகவல் பரிமாற்றம் என்று பொருள் கூறுகிறது பால்ஸ் தமிழ் மின் அகராதி.

உலக செம்மொழிகளில் இணையத்தினை அதிகமாக பயன்படுத்தி, தரவுகளை பெற்றுவரும் முதல் மொழியாக தமிழ் திகழ்கிறது. சுவர்களுக்குள் கட்டுப்பட்டிருந்த வகுப்பறைகளை மாற்றிய பெருமை இணையத்திற்கு உண்டு. நவீன அறிவியல் தொழில் நுட்ப புரட்சி ஆழம் தழுவிய விசாலப் பார்வையும் கொண்டவர்களாகப் புதிய அவதாரம் எடுத்துள்ளது கற்றல் கற்பித்தல். கல்விச் சூழலில் மாணவர் சமூகம் செயல் வழி கற்பித்தலை விரும்புவதாலும்,வரவேற்பதினாலும், எளிமைப்படுத்தப்பட்ட படைப்பாற்றல் கல்வியை இணையம் தருவதாலும், செயல் கற்றல் முறையினைச் கொடுத்து, உயிரோட்டமுள்ள வகுப்பறைகளை

உருவாக்குகின்றது தகவல் தொழில் நுட்பம். இதனையும் இணைய ஏந்துகளையும் முறைப்படுத்தித் திட்டமிட்டுச் சரியாகப் பயன்படுத்தினால் நன்மை விளையும், இதில் எவ்வித ஐயமில்லை!

இத்தன்மையிலான வளர்ச்சிப் பாதையில் தமிழக அரசுத் துறை நிறுவனங்களான தமிழ் வளர்ச்சித்துறை,உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,தமிழ்ப் பல்கலைக்கழகம், தமிழ் இணையப் பல்கலைக்கழகம்,மற்றும் செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம் மிக சிறப்பான பணியினை மேற்கொண்டு வருகின்றன.

மின் நூலகம் (e-library)

அமெரிக்காவில் டெக்ஸாஸ் மாநிலத்தில் உள்ள சான் அண்ட்டோனியோ நகரில் நூல்களே இல்லாத நூலகம் ஒன்றை நென்சில் உல்ஃப் என்பவரால் திறக்கப்பட்டது. இது தான் உலகின் முதல் மின் நூலகமாகும்.

அதனை தொடர்ந்து இணையத்தின் மின்னூலகங்கள் பல்கி பெருகி வந்துவிட்டன. பழைய நூல்களோடு, கிடைப்பதற்கு அரிய தமிழ் நூல்களும், புதிய தமிழ் நூல்களும் மின்வடிவில் மின்நூலாகப் படிப்பதற்குரிய வாய்ப்பினை இந்த மின் நூலகங்கள் ஏற்படுத்திக் கொடுத்துள்ளன. இதன் வழி உலகச் தமிழருக்கு ஆயிரக்கணக்கில் தமிழ் நூல்கள் காணக்கிடைக்கின்றன. மேலும் தமிழரின் முதல் எழுத்து ஆவணமாக செயல்பட்ட ஓலைச்சுவடிகளையும் இணையத்தில் படிப்பதற்குரிய வாய்ப்புகளை இது சாத்தியமாகியுள்ளன.

அறிவியல் அறிஞர் பேராசாரியர் என்.பாலகிருஷ்ணன் அவர்களின் அரும்பெரும் முயற்சியினால் உருவாக்கப்பட்ட தமிழ் ஹெரிடேஜ் பவுண்டேசன் என்னும் அமைப்பு பழந்தமிழ் இலக்கியங்கள், ஓலைச் சுவடிகளைப் பாதுகாத்து அவற்றுக்கு நூல் வடிவம் கொடுப்பதுடன்அவற்றை மின் நூலகமாகவும் செய்துவருகிறது. நூலகத்திற்கு வராமலேயே மாணவர்கள் இருக்கும் இடம் தேடி சென்று நூல்களைக் கற்கும் வசதியினையும், வாய்ப்பினையும் இம்மின் நூலகம் வழங்குகின்றது. இம்மின் நூலகம் உலக மக்களை உலகத் தரத்திற்கு உயர்த்துகிறது எனலாம்.

இவ்வசதிக்கு துணை நிற்கும் மின் முகவரிகள்

www.mycii.org/library

www.dpl.gov.in

www.ichrindia.org

www.digitallibraryofindia.com

www.tamilelibrary.org

www.chennailibrary.com

www.tamilvu.org/library

www.worldlibrary.net

www.tamil10.com/library

www.studyvillage.com

வலைப்பூக்கள் (Blog)

இணையத்தில் எண்ணிலடங்கா இலக்கிய வகைகளைப் பெற்று வளர்ந்து வரும் தமிழ் மொழிக்கு வலைப்பூக்கள் என்ற புதிய இலக்கிய வகை தோன்றி பெரும் பங்காற்றிவருகிறது. வலைப்பூ என்பதை ஆங்கிலத்தில் பிளாக் (blog) என்கிறார்கள். இது வெப்பிளாக் (web blog) என்பதாகும். தமிழில் வலைப்பூ என்ற பெயரே பயன்பாட்டில் இருந்து வருகிறது.

வலைப்பூ வசதிக்கான சேவையை முதன்முதலாக 1996-ஆம் ஆண்டில் எக்ஸாண்யா (xanya) எனும் நிறுவனம் வழங்கத் தொடங்கியது. கார்த்திகேயன் இராமசாமி எனும் வலைப்பதிவர் தமிழில் செய்த முதல் வலைப்பூ ஆகும். தமிழ் விக்கிப்பீடியாவிலும் கார்த்திகேயன் இராமசாமி வலைப்பூ தான் முதல் தமிழ் வலைப்பூ என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இன்று தமிழ் வலைப்பூக்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து 13000-த்தையும் தாண்டிவிட்டது. அச்சு இதழ்கள் போல தமிழ் மின்னிதழ்கள் எண்ணற்றவை தோன்றின. தமிழ்ப் படைப்புகளையும், படைப்பாளிகளையும் உலக அரங்கில் அறிமுகப்படுத்துவதில் இவ்வலைப் பூக்கிள் பெரும் பங்காற்றுகின்றன. இத்தகைய வலைப்பூக்கள் கற்றல் கற்பித்தலிலும் துணை நிற்கின்றன. மாணவர்களுக்கு தற்கால புதிய படைப்பாளர்களையும், கல்வியாளர்களையும், கைதேர்ந்த (experts) வல்லுனர்களையும், இலக்கிய திறனாய்வாளர்களையும், விமர்சகர்களையும், நவீனத்துவ இலக்கியங்களையும் அறிய வழிவகைச் செய்கின்றன மேலும் ஆரம்ப பள்ளிக் கல்வி முதல் முதுமுனைவர் கல்வி வரையிலான புதுப்பிக்கப்பட்ட (updated) செய்திகளைக் கொண்டுச் சேர்த்து மாணவச் சமூகத்தினை நெறிப்படுத்தும் பான்மையில் இவை தடமாக அமைகின்றன.

www.thinnai.com

www.dr.mu.elangovon.blog.com

www.manivanathiblog.com

மின்புத்தகம் (e-book)

மின் புத்தகங்கள் கற்றல் கற்பித்தலில் ஆசிரியர் மற்றும் மாணவர்களின் கல்வி தரத்தினை உயர்த்த ஒரு மகத்தான பணியினைச் (சேவையினை) செய்து வருகின்றன. அச்சு நூல்களின் மின்னனுப்பதிப்பே

மின் புத்தகமாகும். முதல் மின் புத்தகம் 1949 ஆம் ஆண்டு ஏஞ்சலியா ரூயிஸ் ரோபல்ஸ் (Angela ruiz robles)என்பவரால் அறிமுகம் செய்யப்பட்டது.

இணையத்தில் கிடைக்கும் மின் புத்தகங்களை நம் கணினியின் நூலகத்தில் இருப்பது போலவே வரிசையாக அடுக்கி வைக்கலாம். நினைத்த நேரத்தில் நினைத்த புத்தகங்களைப் படிக்க பல இலவச மென்பொருள்கள் வந்து கொண்டிருக்கும் நிலையில் அதனை நூலகம் போல மாற்றுவதற்கும் மென்பொருள்கள் வந்துள்ளன.

இந்த மென்பொருள் கருவியினை (Application) இயக்கி நூலகத்தில் இருப்பது போல் ஒரு உணர்வுடன் புத்தகங்களைப் படிக்க உதவுகிறது. மின் புத்தகம் சேமித்து வைத்திருக்கும் நவீன பாடசாலைகளுக்கு இப்பதிவு பயனுள்ளதாக இருக்கும். PDF,EPUB,XML,HTML,KBJ போன்ற அனைத்து வடிவம் (Format) மின் புத்தகங்களையும் வைக்க துணைபுரியும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ளது. மின் புத்தக Reader, ஒரு புத்தகம் எடுத்துச் செல்லும் வசதியில் பல நூறு புத்தகங்களைக் கையாளும் வசதியினை இது ஏற்படுத்தி தருகின்றது. இக்கருவியில் பாடத்திட்ட குறிப்புகளையும் இது தொடர்பான நூல்களையும் பதிவிறக்கம் செய்தும் கற்கும் வாய்ப்பினைக் கொடுக்கின்றது.இதனால் மாணவர்களுக்கு விரிவான மற்றும் ஆழமான ஞானத்தினை மின்புத்தகம் உருவாக்கின்றது. வளமான சமூகத்தினைப் பதியம் செய்யும் பணியில் தமக்கான பங்களிப்பை அளித்து வருகிறது.

இத்தகைய மின் புத்திகத்திற்கு சிறந்த உதாரணமாக Etymological and comparative lexicon of the tamil language என்னும் சொற்பிறப்பு - ஒப்பியல் தமிழ் அகராதி 1941 இலங்கையில் பதிப்பு செய்யப்பட்ட புத்தகம் தற்போது இடைப்பதற்கு அரிய இந்நூல் நமக்கு மின் புத்தகமாக கிடைப்பது மின் புத்தகத்தில் வளர்ச்சி பாதையில் உள்ள முன்னேற்றம் வெளிப்படுகின்றது.

www.otakootham.blogspot.in

www.noolulagam.com

www.scribd.com

www.books.tamilcube.com

www.sangapalagai.com

www.geetham.net

www.alslam.org

www.thetamil.net

www.kalachuvadu.com

www.tamilagaasiriyar.com

www.gaanam.net

www.tamilebooksdownload.blogspot.in

www.getfreeebooks.com

மின் வழிக்கற்றல் (e - Learing)

மின் வழி கற்றல் வகுப்புகள் வெளிநாடு வாழ் தமிழ் குழந்தைகள் மற்றும் தமிழ் ஆர்வ முள்ள குழந்தைகளுக்குத் தமிழ் கற்றுக்கொடுக்கும் நோக்குடன் நடத்தப்படுகின்றது. இக்கற்றல் முறையில் ஒரு குழந்தைகளுக்கு ஒரு ஆசிரியர் என்ற முறையில் மேற்கொள்ளப்படுகிறது.

இத்தகைய கற்பிக்கும் முறை 50 நிமிடங்கள் முதல் ஒரு மணி நேரம் வரை பயிற்றுவிக்கப்படுகிறது. இந்த காலநேரத்தில் முதல் 10 நிமிடங்களில் பொதுவான வழக்க தமிழில் உரையாடல் மேற்கொள்ளபடும் அடுத்த 35 நிமிடங்கள் வரை செம்மையான தமிழ் கற்றுக் கொடுக்கப்படும். இறுதி 10 நிமிடங்கள் கதைகள் பாடல்கள் ஆகியவை கற்றுக் கொடுக்கப்படும்.

நேரடி இணையவழி வகுப்புகள் ஸ்கைபி (skpe) என்ற மென்பொருள் வழியாக நடத்தப்படுகின்றது. இது இலவச மென்பொருளாகும். ஸ்கைபி (skpe)மென்பொருள்கள் செயல்படாத நாடுகளில் மாற்று வழிகளாக அடோபி அக்ரோபட் (Adobe acrobat) வெபெக்ஸ் (webex) உள்ளிட்ட மென்பொருள்கள் வாயிலாக கற்றல் நடத்தப்படுகின்றன. மின்வழிக்கற்றல் இரண்டு வகையில் செயல்படுகின்றன.

- இணையம் வழி கற்பித்தல் - web based instruction-WBI
- கல்வி வலைத்தளங்கள் வழி கற்றல் - Educational websites - EWS

இந்த வசதி தமிழிலும் மிக இலகுவாகச் செயல்படுத்தமுடிகின்றது.

மின் வழிக் கற்பித்தலின் மூலங்களாக மின்னஞ்சல் (email), இணைய உரையாடல் (chat) நிகழ்ப்பட கருத்தரங்கு(Video Conference) , மடற்குழு(news groups), கோப்பு பரிமாற்று நெறிமுறை(File transfer protocol, FTP) , சமூக வலைத்தளம்(Social network) , முதலான இணைய ஏந்துக்கள் மிகவும் உறுதுணையாக உள்ளன. மேலும் தகவல் மற்றும் இது தொடர்பான தொழில் நுட்பங்கள் ICT, Multi channel learning போன்ற நவீன காலத்தின் மின் கல்வி (e - education) கற்றல் கற்பித்தலை விரைவினையும், பயனையும் தருகின்றது. இவ்வகையான மின் வழிக்கற்றல் முறையினை அரசுகள், பல்கலைக்கழகங்கள், கல்வி நிறுவனங்கள், தன்னார்வ அமைப்புகள் செயல்படுத்த உறுதுணையாக உள்ளன. மின் வழி கற்றலின் பயன்கள் பின்வருமாறு

- உயர் தரமான உள்ளடக்க வளர்ச்சி.
- நம்பகமான மற்றும் உயர் தரமான பயிற்சி பொருட்கள்.
- அளவிடக்கூடிய மிகவும் நம்பகமான சேவைகள்.
- சமீபத்திய மென்பொருள் கருவிகள்.
- பாதுகாப்பு, தேர்வுகள் போன்ற முறையான நிர்வாகம்.
- உலக தரம் , உலக ஏற்பு.
- கணினி ஒரு அறிவார்ந்த முறையில் ஊடகமாக இருக்கிறது.
- பாரம்பரியம் மற்றும் விரிவான வழிகாட்டியாக கல்வி

மென்பொருள்கள் செயல்படுகின்றன.

- பல்லூடகம் சார்ந்த கல்வி பல நன்மைகளை வழங்குகிறது.
- மாணவர்களுக்கு பாரம்பரியத்துடன் , புதிய ஆய்வுகளையும் செய்ய வழிவகுக்கின்றது.
- சுய முன்னேற்றம் மற்றும் சுய மதிப்பீட்டு தறம் உயருகின்றது.

மேலும் அயல்நாட்டுத் தமிழர்களின் தமிழ்க் கல்விக்கான பாடப் பொருட்கள் இணையத்தின் வழி வழங்கப்படுகிறது. உலகில் உள்ள அனைத்து தமிழியற்புலங்கள் பல்கலைக்கழக நூலகங்களும் இணையம் வழியே தொடர்இணைவு செய்யப்பட்டால் மின்னனு நூலகம் உருவாக்கப்பட்டு ஆய்விகள் மிக சிறப்பாக நடைபெற வாய்ப்புள்ளது. இச்செயல் வழி அனைத்துப் பல்கலைக்கழக ஆய்வு நூலடைவுகளையும் இணையத்தில் இடம்பெற செய்வதன் மூலம் திரும்பத் திரும்ப ஒரே துறையில் நடைபெறும் தமிழ் ஆய்வுகள் தவிர்க்கப்படும். ஆய்வு எல்லை விரிவடையும் என்பது உண்மை. இச்செயலின் மின் விழி கற்றல் அமைப்பு செயில்படுத்த முயற்சி மேற்கொண்டால் நலம்.

www.tamilheritage.org

www.thirutamil.blogspot.com

www.tamil.net

www.hongkongtamil.blogspot.com

www.learingtamilonline.com

www.centralinstituteofindianlanguages.com

www.southasia.sas.upenn.edu

மின்னகராதி (e - dictionary)

புதிய கற்றல் கற்பித்தலுக்கு துணையாக செயல்படும் மற்றுமொரு கருவியாக அமைவது மின்னகராதி ஆகும். இது வெளிநாடு வாழ் தமிழர், புலம் பெயர்ந்த தமிழர்களின் குழந்தைகளுக்கு கிடைத்திருக்கும் ஒரு மிகப் பெரிய வரப்பிரசாதமாகும். தங்களுக்கு நன்கு பரிச்சையமான மொழியில் இருக்கும் சொற்களின் பொருளினைத் தமிழ் மொழியில் அறியும் வாய்ப்பினை இது ஏற்படுத்திக் கொடுக்கின்றது. ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் தங்கள் கற்பித்தலையும் கற்றலையும் பொருளுள்ளதாகவும் பயனுள்ளதாகவும் ஆக்கிக் கொள்ள இக்கருவி பயன்படுகின்றது.

www.agarathi.com

www.ta.wikipedia.org/tamil

www.tamildict.com

www.thozhilnutpam.com

www.ta.wiktionary.org

ஒளிஒலிப்படப் பலகை (Digital Board)

ஒளிஒலிப்படப் பலகை பல்லூடகமாக செயல்படும். இணையத்தில் உள்ளவைகளை சேமித்து வைத்தோ, அல்லது தேவைக்கு ஏற்ப பதிவிறக்கம் செய்யத் தேவையான நேரத்தில் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பினைதருகின்றது. பல்லூடகக் கருவியாக பரிணமித்து இருக்கும் இப்பலகையில் மணவச் சமூகத்தினை ஈர்த்து அவர்களது கவனம் சிதரவிடாமல் ஒரு ஒழுங்கமைப்புக்குள் இவை கொண்டுவருகின்றன. இதில் எழுத்துரு, படங்கள், அசைவுப்படங்கள், நிகழ்ப்படங்கள், ஒலிஒளி சேர்க்கைகள், இணைய உரையாடல், நிகழ்ப்படக் கருத்தரங்கு, வானொலி, தொலைக்காட்சி எனப் பன்முகப் பயன்பாடுகளைக் கொண்டதாக விளங்குகின்றது.

மேலும் இப்பலகை வழியாக வகுப்பறைகள் செயல்படும் பொது குறைந்த நேரத்தில் அதிக தரவுகளை மாணவர்களிடம் கொண்டு சேர்க்க வழிவகுக்கின்றது. உடனுக்கு உடன் பல்வேறு நூல்களின் செய்திகளையும் பார்வை நூல் (Reference Book) கொடுக்குப்பட்டுள்ள விளக்கங்களையும் ஊற்று நோக்க உதவுகின்றது. கற்றல் கற்பித்தலில் ஒரு மாபெரும் புரட்சியினை இப்பலகைச் செய்கிறது எனலாம்.

www.tamilvu.org <http://www.tamilvu.org>
www.tamil.org
www.tamil.net
www.tamildigest.com

மின் மொழிபெயர்ப்பு (e - translation)

இன்றைய கல்விச் சூழலில் கற்பித்தலைச் சக்தி நிரம்பிய வகுப்பறைகளாக மாற்றுவதற்கும் புலம் பெயர்ந்த தமிழர்களின் குழந்தைகளுக்கு மொழி பாடத்தினைக் கற்றுக்கொடுக்க கற்பித்தலில் பன்மொழி அறிவு தேவைப்படுகின்றது. இப்பிரச்சினையினைச் சுமுகமாக மேற்கொள்ள மின் மொழிபெயர்ப்பு அவசியமான தேவையாகக் கருதப்படுகின்றது. இதனை இணையம் வழியாக பல இணையத்தளங்களுடன் தொடர்பு வைத்துக்கொண்டு இலவசமாக பதிவிறக்கம் செய்யலாம். அல்லது பல மென்பொருள் வட்டுக்கள் மின்மொழிபெயர்ப்புக்கு காணக்கிடைக்கின்றன.

www.translatorscafe.com
www.google.com/translate
www.e-translation.com

தொகுப்புரை

தகவல் தொழில் நுட்பத்தின் துணையுடன் இணையம் வழி கற்றல் என்பது பல்வேறு நன்மைகளையும் மேன்மையினையும் இக்காலச் சூழலுக்கு ஏற்ப ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

1. ஆசிரியர்களுக்கு வழிகாட்டுதலின் மூலம் தனியாகக் கற்பதற்குரிய (Individealise learning)வாய்ப்பு கிடைக்கின்றது.

2.கற்றலில் மாணவர்கள் எண்ண இலக்கை அடைய வழிவகுகின்றது.

3 மாணவச் சமூகம் விரும்பும் ஒலி ஒளிக் காட்சிகளுடன் கற்றல் நடைபெறுவதால் இவர்கள் மனமகிழ்ச்சியுடன் கற்கும் சூழலை உருவாக்கித்தருகின்றது.

4 மாணவர்களின் ஆய்வு சிந்தனையினையும் ஆற்றலையும் வளர்த்துக் கொள்ள உதவுகின்றது.

5 கற்றல், கற்பித்தல் இணையத்தின் வழி இருவழித் தொடர்பு (interactive), காட்சி (visiual) , அசைவுப்படம் (graphics), எழுத்து (text) , ஒலி (sound) என பல வாய்ப்பினை வழங்குகின்றது.

5. சில கற்றல் கற்பித்தல் இணையத் தொடர்பை மாணவச் சமூகமே கையாளும் வாய்ப்பு இருப்பதால் அவர்களுக்கு கூடுதல் தன்னம்பிக்கை கிடைக்கின்றது.

6 தேடும் தகவல்களை விரைவாகவும் விரிவாகவும் பெற முடிகின்றது.

7 விலைமதிப்பில்லாத் தகவல்களைக் குறைந்த செலவில் நொடிக் பொழுதில் உடனடியாகப் பெற வாய்ப்பளிக்கின்றது.

8 கற்றல் பாட அனுபவம் பெற்ற அறிஞர்களுடன் நேரடியாகவும் தெளிவாகவும் விளக்கங்களைப் பெற துணை நிற்கின்றது.

9 கற்றலில் புதிய உத்திமுறைகள் உடனுக்குடன் கிடைக்கின்றது.

10 எளிதாக பாடங்களைப் புரிந்து கொள்ளும் தன்மை.

11 ஒரு குறிப்பிட்ட பாடப் பகுதியில் அதிக மற்றும் அதனுடன் தொடர்புள்ள தகவலை அறிந்து கொள்ளம் தன்மை.

12 மாணவர்களின் ஆற்றல் திறனுக்கு ஏற்ப (fast and slow learmes) தாங்கள் விரும்பிய வகையில் படித்தல்.

13 நேரம் , இடக் கட்டுப்பாடு இல்லாமல் மாணவர்கள் விரும்பும் நேரத்தில் கற்க முடிகின்றது.

14. சக்திவாய்ந்த , விணையூக்கியாக கற்பிக்கும் கலை (Pedagogy) இட்டுச் சேர்க்கின்றது.

ஆக கற்றல் கற்பித்தலில் தகவல் தொழில் நுட்பம் இன்றைய தலைமுறையினரே புதியதொரு விதியினைச் செய்ய வித்திடும் என்பது திண்ணம்.

துணைநின்ற நூல்கள் மற்றும் இணையம்

1. வே. இளம்செழியன் மற்றும் சி.ம.இளந்தமிழ், தமிழில் தகவல் தொழில்நுட்பத்தைக் கற்பித்தல் வாய்ப்புகளும் சிக்கல்களும், தமிழ் இணைய மாநாட்டு மலர். 2011 (பென்சில்வேனியா)

2. சு.குழந்தைவேல் பன்னிர் செல்வம், இணையம் வழி மொழிக் கற்றல் கற்பித்தலில் புதிய அணுகுமுறைகள், தமிழ் இணைய மாநாட்டு மலர் -2009, (செருமானியம்).

3. ரபி சிங்.எம்.ஜே, மின்னு வழியில் தமிழ்மொழி கற்பித்தல் மற்றும் கற்றல், தமிழ் இணைய மாநாட்டு மலர் - 2012 (கோவை)

4. மேலும் கூகுள் www.google.com <http://www.google.com> தேடலின் போதும் பல தரவுகள் பெறப்பட்டன.

உலகத் தமிழாசிரியர்களின் பத்தாம் மாநாடு

வெற்றிபெற வாழ்த்துகிறோம்

தரமான உங்கள் குடும்ப இதழ்; முழு வண்ண ஏடு

மயில்

தமிழில் வெளிவரும் மிகச் சிறந்த குடும்ப இதழ் எனத்
தமிழ்நாடு, இலங்கை, சிங்கை போன்ற நாடுகளில் போற்றப்படும் இதழ்.



மலேசியாவில்
வள்ளுவனுக்கொரு மணிமகுடம்

இது உமாவின் பெருமைமிகு வெளியீடு

திருக்குறள் - ஒலிபெயர்ப்பு - தெளிவுரை
- மலாய் - ஆங்கிலம் மொழிகளில் ஆக்கம்
ஆகியவை அடங்கிய உலகின் முதல்
செம்பதிப்பு வெளிவந்துவிட்டது.

மாணவர் சாதாரண பதிப்பு RM 20

மாணவர் பரிசுப் பதிப்பு RM 25

திருக்குறள் சாதாரண பதிப்பு RM 25

திருக்குறள் பரிசுப் பதிப்பு RM 30



ISBN 978-967-434-026-1

UMA PUBLICATIONS
85, Jalan Perhentian, Sentul, 51100 Kuala Lumpur, Malaysia.
Tel : 03-4041 1617 / 03-4041 5757 Fax : 03-4044 0441
umapublications@gmail.com